T.11586

உ

குமரன் றுணை.

வீரவநல்லூர் ஸ்ரீ குமாரசுவாமிதேசிகர்

திருவாய்மலர்ந்தருளிய

# குமாரசுவாமியம்

மூலமும் உரையும்.

இஃது

திருநெல்வேலி புதூர் ஸ்ரீ இராமசாமிப்பிள்ளையவர்கள் குமாரரும்
ஸ்ரீ சாலிவாடீச்வர ஓதுவாமூர்த்திகள் மாணாக்கருமாகிய

ஸ்ரீவெள்ளிநாயகம்பிள்ளை அவர்களால்

பலபிரதிரூபங்களைக்கொண்டு பரிசோதித்ததை

---

திருநெல்வேலி

முத்தமிழ்ரத்நாகர அச்சியந்திரசாலையில் பதிப்பித்த
ஸ்ரீ அம்பலவாண கவிராஜரவர்கள் அருமைக்குமாரரும்
சுவாமி நெல்லையப்பர்கோவில் ஜேஷ்டபரம்பரை
வித்துவசிரோமணியும்
திருநெல்வேலி முனிசிபல் கவுன்சிலருமான ஸ்ரீமான்

கவிராஜ முத்துக்குமாரசுவாமிபிள்ளை

யவர்கள் உத்தரப்படி,

மு. கிருஷ்ணப்பிள்ளை அவர்களால்

---

சென்னை

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1923. [ரூபா 1—8.

Rigistered CoPy Right.

வி.கூ594
1995

சிவமயம்.

# அகராதி.


| காண்ட அகராதி. | பக்கம். | பாட்டு. |
|---|---|---|
| காப்பு | 1 | 1 |
| பாயிரம் | 1 | 6 |
| மூலகாண்டம் | 5 | 63 |
| சாதககாண்டம் | 86 | 243 |
| மூகூர்த்தகாண்டம் | 218 | 41 |
| சிந்தனைகாண்டம் | 245 | 48 |

| எண்ணம். | படல அகராதி. | பக்கம். | பாட்டு. |
|---|---|---|---|
| 1 | காவியவியற்படலம் | 5 | 1 |
| 2 | தினதிநாமோதயப்படலம் | 6 | 6 |
| 3 | நக்ஷத்திரசரித்திரப்படலம் | 10 | 21 |
| 4 | வாரசரித்திரப்படலம் | 28 | 11 |
| 5 | இராசிசரித்திரப்படலம் | 44 | 14 |
| 6 | திதிசரித்திரப்படலம் | 55 | 4 |
| 7 | யோககரணசரித்திரப்படலம் | 58 | 1 |
| 8 | கிரகாதிபர்சரித்திரப்படலம் | 59 | 17 |
| 9 | அட்டவர்க்கப்படலம் | 69 | 7 |
| 10 | நரசக்கரப்படலம் | 74 | 1 |
| 11 | காலசக்கரப்படலம் | 75 | 5 |
| 12 | மகாதிசைப்படலம் | 80 | 1 |
| 13 | பாசகாலவர்க்கப்படலம் | 82 | 2 |
| 14 | நாழிகையியற்படலம் | 83 | 2 |
| 15 | இலக்கினோதயப்படலம் | 86 | 33 |
| 16 | இரண்டாம்பாவகப்படலம் | 105 | 8 |
| 17 | மூன்றாம்பாவகப்படலம் | 109 | 3 |
| 18 | நான்காம்பாவகப்படலம் | 111 | 8 |
| 19 | ஐந்தாம்பாவகப்படலம் | 115 | 7 |
| 20 | ஆறாம்பாவகப்படலம் | 119 | 10 |
| 21 | ஏழாம்பாவகப்படலம் | 124 | 7 |
| 22 | எட்டாம்பாவகப்படலம் | 128 | 24 |
| 23 | ஒன்பதாம்பாவகப்படலம் | 140 | 3 |
| 24 | பத்தாம்பாவகப்படலம் | 142 | 19 |
| 25 | பதினோராம்பாவகப்படலம் | 152 | 1 |
| 26 | பன்னிரண்டாம்பாவகப்படலம் | 153 | 1 |
| 27 | கிரகசேகரப்படலம் | 153 | 16 |

| | | | |
|---|---|---|---|
| 28 | யோகாதிசயப்படலம் | 162 | 50 |
| 29 | மகாதிசைப்படலம் | 189 | 6 |
| எண்ணம். | படல அகராதி. | பக்கம். | பாட்டு. |
| 30 | கோசரபலப்படலம் | 193 | 3 |
| 31 | வருஷபலப்படலம் | 195 | 1 |
| 32 | மாதபலப்படலம் | 195 | 1 |
| 33 | தினபலப்படலம் | 196 | 1 |
| 34 | காலசக்கரநரசக்கரபலப்படலம் | 197 | 3 |
| 35 | அட்டவர்க்கபலப்படலம் | 199 | 3 |
| 36 | சமுதாயபலப்படலம் | 201 | 16 |
| 37 | மாதர்சாதகப்படலம் | 209 | 18 |
| 38 | திருதிசுபாசுபப்படலம் | 218 | 7 |
| 39 | மணுகிப்பொருத்தப்படலம் | 222 | 18 |
| 40 | யாத்திரைப்படலம் | 233 | 6 |
| 41 | கிரகவியற்படலம் | 237 | 3 |
| 42 | குளங்கூவற்படலம் | 238 | 3 |
| 43 | சதாமுகூர்த்தப்படலம் | 242 | 4 |
| 44 | பலஞாபகப்படலம் | 245 | 3 |
| 45 | சோரபலப்படலம் | 247 | 5 |
| 46 | முஷ்டிபலப்படலம் | 250 | 3 |
| 47 | சிந்தனுபலப்படலம் | 252 | 3 |
| 48 | உலகியற்படலம் | 254 | 13 |
| 49 | சொற்பனபலப்படலம் | 261 | 4 |
| 50 | காலமறிதற்படலம் | 263 | 3 |
| 51 | திரிமலசம்பிரதாயப்படலம் | 265 | 3 |
| 52 | தெரிசனுபலப்படலம் | 267 | 6 |
| 53 | காதற்பலப்படலம் | 268 | 6 |
| 54 | பதனபலப்படலம் | 272 | 3 |


அகராதி முற்றிற்று.

உ

குமரன்றுணை.

திருநெல்வேலி

---

ம-ா-ா-ஸ்ரீ

புதூர். இராமசுவாமியாபிள்ளையவர்கள்

குமாரரும்

சாலிவாடீசுரஓதுவாமூர்த்திகள்

மாணாக்கருமாகிய

# புதூர். வள்ளிநாயகம்பிள்ளையவர்கள்

இயற்றிய

## சிறப்புப்பாயிரம்.

---

வான்கிளர்மருமப்பூந்துழாய்முகிலும்புலமகள்பொருந்துநாவினனுந்
தேன்கிளர்நறியயெழுந்தருநீழற்றிகழ்வுறுதேவனுமிறைஞ்சு
மின்கிளர்விதுஞ்செஞ்சடையினன்றனதுவிமலமெய்யடியவர்விளங்க
மன்கிளர்சைவப்பயிர்தழைத்தோங்கும்வளங்கெழுபாண்டிநன்னாடு. ( )

துன்னியமலபூம்பொழில்களுமெகினத்தொகுதியார்தூயநற்றடமுங்
கன்னியகதலிக்கானமுஞ்செந்நெற்கழனியுங்கன்னலங்காடு
மன்னியகருவிமறைமுகிறவழுமணிதிகழ்மாடமும்பொலிந்து
மின்னியதரளப்பொருநைவண்டுறைசூழ்வீரைமாநகரதில்விளங்கும்.

அன்னதின்மாறியாடியபெருமாளென்றொருவருந்தவக்குறிசின்
மன்னியவணிகர்மரபெலாம்வயங்கவாழ்ந்தனன்மற்றவன்றன்பான்
மின்னியவேற்கைவிமலனதருளால்விரிதிரையுலகெலாம்வியப்ப
வுன்னரும்புகழ்சேரறிவெலாநிறைந்தவொருமகனுதித்தனன்வந்து. ( )

நற்றவமுயன்றுபெற்றவம்மகற்குநலந்தருசாதகமெழுதி
முற்றுநற்பலனேமொழிந்தவந்தணற்குமுறைமுறையிருநிதிவழங்கி
மற்றையவினையமரபினுக்கேற்பமகிழ்வுறவியற்றுபுவணிக
னுற்றகுமாரசுவாமியென்றுரைக்குமொப்பிலாநாமமும்புனைந்தான். ( )

பொருவடிவேற்கைப்பூரணனழியாப்போதவானந்தமெய்ப்பரமன்
திருவடியவர்தாஞ்செய்தவம்போன்று சிறுவனுமகவையைந்துற்றான்
கருவடிவெடுத்துக்கதியிலாதுழலுங்கசடனேர்க்கருள்செயும்பரம
குருவடிவழுத்திக்கலையெலாங்குரவன் கொளுத்தினன்குமரனுக்கொருங்கே. (ரு)

மைந்தநற்றிரமுமாக்கமுநோக்கிமாறியாடியபெருமாளுஞ்
சந்ததமானுமகிழ்ச்சியுட்டிளைத்துச்சாருநாண்முன்னையூழ்வலியா
லந்தமில்குலமுமருமைநன்மகனுமணிமனைக்கிழத்தியுமிரங்கிச்
சிந்தைநொந்தரற்றியயர்வொடும்புலம்பத்தென்புலஞ்சேர்ந்தனனன்றே.

இறந்ததன்றாதைக்கிற்றுறுகடன்களியம்பியவிதிவழியியற்றிச்
சிறந்தநல்லறிஞர்தேற்றிடத்தெளிந்துசெல்வமுங்கல்வியும்பழுக்க
நிறந்திகழ்பூணணிகழுமந்நாளினிகரிறன்குலத்தினுக்கிசைய
வறந்தருகற்பிலருந்ததியெனுமோரணங்கினையருங்கடிமுடித்தான். ( )

அலர்நெடும்பகழிக்காமனுமழகாரணிமுலையிரதியும்போன்று
சிலபகலின்பத்துறையினிற்பொருந்திச்செய்யவாய்க்குழவியைபயந்து
குலவியமஞ்ஞைக்குமரவேள்வனசகுரைகழல்குறைவறத்தொழுது
பலபலதருமதானமுமியற்றிப்பல்வளம்பழுக்கவாழ்ந்திருந்தான். (அ)

இன்னணமொழுகுநாட்களிலொருநாளீன்றநல்லன்னைதன்முகத்திற்
றுன்னியவாட்டந்தோன்றிடவிருந்தாளமைந்தனுமஃதறிந்து
பொன்னடிக்கமலந்தொழுதுநின்றன்னுப்புலர்ந்துயிருப்பதுதகுமோ
வென்னைகோனிகழ்ந்ததிசையெனவோடுமிவ்வணமிசைத்தனன்மாதோ. (

நன்றுமங்கலநாணறும்பொழுதிறந்தனுபகனிறத்தவப்பொழுதே
பொனறுதலலதோராண்டினிற்பொன்றல்பொற்றொடிமகளிருக்கழகா
மென்றசொலுணர்ந்துமிற்றைநாள்வரையுமிருந்தனனிணையிலாக்கொடியேன்
கன்றினனதனுற்கதியிலேனென்றாள்கண்கணீர்கலுழ்தரச்சோர்ந்தே. (௰)

அன்னைதன்மொழிகளனைத்தையுங்கேளாவகங்கரைந்தறிஞனுமறைவான்
பொனனுலகதனிற்புலவர்களேனும்புனிதமெய்ஞ்ஞானிகளேனு
மன்னியகற்பின்மகளிர்களேனுமாதவமுனிவர்களேனு
முன்னுமூழ்வினைதுய்யுறுதலேயன்றியொழித்திடப்பாலரேவுரையாய்
உலகெலாமீன்றவுமையவடனையுமொப்பிலாமகளெனப்பெற்ற
திலகவானுதற்பொன்மாலையுங்கொழுநன்சேணகரடைந்தபின்சிலவாண்
டிலகுபூமியினிலிருக்கவுமில்லையாயிருங்கதியெய்தவுமில்லையோ
வலகிலாப்புகழ்சேரரிவையரிவ்வாறளப்பிலாயந்திடப்புகினே. (௧௨)

என்றிதிகாசம்பலபலவியம்பாவீன்றிடுமன்னையைத்தேற்றிப்
பொன்றுகாலமுமற்றவள்புகுங்கதியும்புந்தியிற்றெளிந்திடநினையா
சென்றுதேசிகனைச்சீரடிபணிந்துசெப்பினன்கருத்தெலாம்வினவி
நன்றுநீகொண்டகருத்தெனநகையாநவையறுகாட்சியாநவில்வான். ( )

வேறு.

புள்ளிமானீன்றகாதற்பூவையைப்புனிதமான
வள்ளிநாயகியைவேட்டுமணந்திடும்வடிவேற்கந்தன்

வெள்ளிமால்வரையின்மேனாண்மேவிமாலயனுங்காணத்
தெள்ளுவார்புனல்கொள்வேணிச்சிவனடிபணிந்துநின்றான். (௧௪)

பொருகெனவெழுந்துமுக்கட்புனிதனும்புதல்வர்புல்லி
யிருக்கெனப்பாங்கர்வைத்தேயெழிலுறுமுதுகுதைவந்
தருட்கணாலினிதுநோக்கியையநீவந்ததென்கொல்
விருப்புறமொழிதியென்றான்வேலனும்விளம்பலுற்றான். (௧௫)

இருதிணையுயிர்களுக்குமிவையலாதவைகளுக்கு
மொருதனிகடவுளர்க்குமுறுவனபலவுஞ்சொல்வான்
கருதியிங்கொருநானன்குபழறினனனையநூலைப்
பொருதிறல்விடையாயென்றும்புகழுதவருடியென்றான். (௧௬)

இனையனவினவியீசனெமக்கினிவருவதொன்று
னினைவுறனிகழ்த்துகென்றானிமலனுமப்போதுற்ற
வினையுறுகோள்கணோக்கிமேவுசின்னாளிலேகற்
பனையதுகடந்தபாதாபலியெடுத்துழலவையென்றான். (௧௭)

மாதிடமருவுநாதன்மைந்தனைநோக்கியிந்தச்
சோதிடவலியாலன்றோதூயவெந்நிலையுஞ்சொற்றாய்
கோதிடரொழிவிலாதகுவலயத்தாருமிங்ங
னோதிடவல்லராயினுறகமுற்றழியுமன்றே. (௧௮)

ஆதலாலினையநூறாணவனியிலைந்துநாளு
பேதமாயுழல்கவென்றுபேசினன்பெரியசாபம்
வேதன்மால்பதவியெல்லாம்விரும்பினார்க்கினிதுநல்கு
நாதனுக்குமரவேளுநகையறுமுகத்தனானான். (௧௯)

அன்னதையரனுநோக்கியையநீகவலல்வேண்டா
வின்னல்செய்கொலைகள்காமமிருங்குரவனுக்குத்தீங்கு
முன்னல்பொய்மொழிதல்சைவமுறையினையிகழ்ந்துபேச
லுன்னுமிக்குணங்களெல்லாமொழிந்துமெய்பறிஞராகி. (௨௰)

சந்தமாருனதுபாதசரோருகமிறைஞ்சுவார்க்கே
யிந்தநூல்பலிப்பதாகவென்றனுமிறைவற்போற்றிக்
கந்தமார்குழலாள்வள்ளிகணவனுங்கயிலைநீங்கி
வந்தமாமயின்மீதேறிவளங்கொள்செந்தூரைச்சார்ந்தான். (௨௧)

அனந்தனும்வியந்துகூறுமறிவுடைவணிகாநல்ல
மனந்தனில்விழைந்தவெல்லாம்வழங்குவன்கருணைவள்ளல்
சினந்தவிர்நீயுமன்னான்சேவடிக்கமலம்போற்றிற்
கனந்தருமனையநூலைக்கசடறப்பயிற்றுமன்றே. (௨௨)

அந்தநூன்முறைமையாலேயனைத்தையுந்தெளியலாகு
மைந்தநீபோதியென்றான்வணிகனுங்குரவற்போற்றிச்
சந்தமாமணியிலேகித்தாயிடைவிடையும்பெற்றுச்
சிந்துபூம்பொழில்களாருஞ்செந்திலம்பதியைச்சேர்ந்தான். (௨௩)

அரம்பையர்நடிக்குமோசையணிகெழுமுழவினோசை
சுரம்பயில்யாழினோசைசுருதிகண்முழங்குமோசை
வரம்பெறுகவிகள்கூறுமங்கலப்பாட்டினோசை
நிரம்பிவிண்ணளவுமோங்குநெடுமதிற்கோயில்புக்கான். (௨௪)

அண்டருமயனுமாலுமாயிரஞ்செங்கணானுந்
தொண்டருமிடைந்துநிற்குந்தூயசன்னிதியைச்சார்ந்து
பண்டருமொழியாள்வள்ளிபாகனைப்பரமனெற்றிக்
கண்டருமமலவேளைக்கண்ணிணைகளிப்பக்கண்டான். (௨௫)

கரமலர்சிரமேற்கூப்பிக்கண்கணீர்பொழியநின்று
புரமதுபுளகம்போர்ப்பப்பொய்யிலன்புருவமாகி
விரவியவழல்சேர்வுற்றவெண்ணெய்போலுருகிநெஞ்சம்
பரவுநாத்தழுதழுப்பப்பணிந்தனன்பழிச்சலுற்றான். (௨௬)

ஆதியேபோற்றிபோற்றியனகனேபோற்றிபோற்றி
நீதியேபோற்றிபோற்றிநிமலனேபோற்றிபோற்றி
சோதியேபோற்றிபோற்றிதூயனேபோற்றிபோற்றி
பூதியேயிலகுமெண்டோட்புனிதனற்புதல்வாபோற்றி. (௨௭)

ஆரணாபோற்றிபோற்றியாறுமாமுகனேபோற்றி
காரணாபோற்றிபோற்றிகருணையங்கடலேபோற்றி
வாரணாபோற்றிபோற்றிவள்ளிநாயகனேபோற்றி
பூரணாபோற்றிபோற்றிபூங்கடம்பணிவாய்போற்றி. (௨௮)

வேலனேபோற்றிபோற்றிவிண்ணவர்க்கிறையேபோற்றி
கோலனேபோற்றிபோற்றிகுஞ்சரிகொழுநாபோற்றி
மூலனேபோற்றிபோற்றிமுருகனேபோற்றிபோற்றி
சீலனேபோற்றிபோற்றிசெந்தில்வாழ்குகனேபோற்றி. (௨௯)

வெருவருபிறவிக்கெல்லாம்வித்தெனுமவாவையுற்றே
யிருநிலமதனிலென்றுமிழிதொழில்பூண்டுளேற்குங்
குருமணியிமைக்குஞ்செந்திற்குழகனேகுமரவேளே
யருமறைச்சிரத்தின்வாழுமமலநின்னருளுமுண்டோ. (௩௰)

நீரிடைக்குமிழிபோனிலையிலாயாக்கைதன்னைப்
பாரிடைநிலையென்றுன்னுப்பழிதொழில்பூண்டுளேற்கும்

வாரிடைப்பொலியுங்கொங்கைவனக்குறமடந்தபாகா
ர்வாரிடையூறுமின்றியுயருநின்னருளுமுண்டோ. (௩௧)

வறியநுண்மருங்குலாரைமண்ணொடுநிதியைவேட்டுப்
பொறிவழியூடுசென்றுபுன்றொழில்பூண்டுளேற்கும்
வெறிகமழ்மலர்ப்பூஞ்சோலைவிளங்கியசெந்தினாதா
அறிவுறுமமலவேற்கையனகநின்னருளுமுண்டோ. (௩௨)

அடியனேன்புரியுங்குற்றமனைத்தையும்பொறுத்தல்செய்து
படியிலாதரங்களெல்லாம்பழுதறவொழித்தெந்நாளு
முடிவிலானந்தவீடுமூடனேற்கருள்செய்வாயோ
கடியுலாங்கடப்பங்கண்ணிக்கந்தனேகருணைவேளே. (௩௩)

இன்னவாறென்னையாளுமிறைவனைப்பழிச்சிநின்று
மன்னுசோதிடநூறன்னைவழுவறவுபதேசித்து
முன்னியான்விழைந்தவெல்லாமுனிந்திடாதருடியென்று
பன்னுமாதரத்தினோடும்பணிந்துதன்னிருக்கைபுக்கான். (௩௪)

மின்னியசுடர்வெய்யோனுமேலைவாரிதியிலாழ்ந்தான்
மன்னியகுமரவேளும்வணிகர்கோன்கனவிற்றோன்றி
யன்னவன்குறித்தவண்ணமருளியவ்வடிவங்காட்டி
யின்னகைசிறிதுதோன்றவினையனவியம்பலுற்றான். (௩௫)

மகத்துவம்பொருந்தநாமுன்வழங்கியசோதிடத்தை
யகத்தியமுனிவற்கன்றேயருளினமனையநூலைச்
செகத்திடைமுனிவார்சில்லோர்திரிபொடுமையநீக்கி
மிகுத்தநுண்ணறிவினாய்ந்துவிளம்பினரளவினாலே. (௩௬)

அந்தநூலெல்லாம்நீயேயாய்ந்திடுநாமுநின்றன்
சிந்தையேமேவிநின்றுதெருட்டுவநமக்கன்பாகு
மைந்தநீயவற்றையெல்லாம்வழுவறத்தெளிந்தபின்னர்
புந்தியானினைந்தவெல்லாம்புரையறநினக்கேதோன்றும். (௩௭)

ஆபகாரியங்களெல்லாமறிவினிற்றெளிந்தபின்னர்
தூயசோதிடநூலொன்றுசொல்லுதியுலகுக்கெல்லா
மாயமாமுலகவாழ்வைமறந்திருவினையுமற்று
மேயநாணினக்குமேலாம்வீடுநாமருள்வோமென்னா. (௩௮)

சாற்றினன்கருணைபூத்துச்சனனவெந்துயரமாற்று
நீற்றினையினிதுநல்கிநிறைந்தவன்மறைந்துபோனான்
சீற்றமில்வணிகரேறுந்திடீரெனவிழித்தான்வேலற்
போற்றினன்புகழ்ந்தான்கண்ணீர்பொழிந்தனன்புளகமுற்றான். ()

ஆடினானழல்சேர்வுற்றவரக்கெனவகங்குழைந்தான்
பாடினான்பரமானந்தப்பரவையிற்படிந்தானன்பி
னீடினானிமலன்கோயினிலவுசன்னிதியைச்சார்ந்து
சூடினான்கரங்கள்சென்னிதுதித்தனன்வாய்கொளாதே. (௪௰)
வேலவன்கருணையெல்லாம்விளக்கியசெய்யுண்மாலை
சாலநன்கினிதுசாத்தித்தலைமிசைப்பணிந்தெழுந்து
பாலனமொழியாள்வள்ளிபாகனல்விடையும்பெற்று
மேலவர்புகழாநிற்கும்வீரையம்பதியைச்சார்ந்தான். (௪௧)
உருதுமெய்யடியாருள்ளமுவந்தனவெல்லாநல்குங்
குருதிகொப்புளிக்கும்வைவேற்குமரனதருளைக்கொண்டு
முருகவிழ்முல்லைமார்பன்முந்துசோதிடங்களெல்லாங்
கருதியவயனமொன்றிற்கசடறப்பயின்றிட்டானால். (௪௨)
கான்றமின்மணிப்பூண்மார்பன்கற்பமுங்குணிக்கவல்ல
வான்றநல்லறிஞனாகியற்புதமெவர்க்குந்தோன்றச்
சான்றமெய்ப்பலன்களெல்லாந்தாணியோர்க்கிசையக்கூறி
யீன்றவட்கிறுதிநாளுமேய்ந்திடுகதியுந்தேர்ந்தான். (௪௩)
பெரியபன்மலைகளெல்லாம்பிறங்குகண்ணாடிதன்னுட்
டெரிவுறக்காட்டுமாபோற்சீவபல்கோடிகட்கு
முரியபல்குணமுமிங்ஙனோவறுதொழிலுமற்றும்
விரியுமுக்காலந்தன்னுள்விளைபொருள்பலவுந்தோன்ற. (௪௪)
உலகமுமலைவுறுமனுபர்ந்ததன்பெயராலென்று
மிலகுறவிந்தநூலையெம்மனோர்க்கியம்பினானால்
விலகிவில்லுமிழும்வேற்கைவிமலனேபரமென்றுற்றோ
னலகறுகலைகட்கெல்லாமாகரமாயினானே. (௪௫)
செல்லுறும்பொழில்கள்சூழுஞ்செந்திலம்பதியைச்சேர்ந்து
வெல்லருங்கதிர்கொள்வேலன்விளங்குசன்னிதியிலந்தச்
சொல்லரும்புகழ்க்குமாரசுவாமியமென்னுநூலை
யெல்லுறுங்கனகப்பூணானினிதரங்கேற்றினானே. (௪௬)
மனிதரும்வானுளாருமகிழ்ந்துகொண்டாடவப்போ
தினிதினிதெனனாவங்ஙனெழுந்ததோர்தெய்வவாக்குப்
புனிதவந்நூலினுள்ளபொருளெலாஞ்செவிகளாரக்
கனிதருகருணைவேலன்களித்தருள்புரிந்தான்மன்னோ. (௪௭)

சிறப்புப்பாயிரமுற்றிற்று.

உ

குமரகுருபரன்றுணை.

# குமாரசுவாமியம்

## மூலமும் உரையும்.

### காப்பு.

போதிடமாகியவேதியனாதபுராதனன்மான்முதலோர்
ஈதிடமாய்வருவாரெனில்யாவும்விடாதியல்பாகநவில்
சோதிடமேதிடமாகநடாவுகுமாரசுவாமியம்பான்
ஓதிடவேயெனதோரகம்வாழ்ப்வனைசகோதரனே.

(இதன்பொருள்.) செந்தாமரைமலரின் கண்வீற்றிருக்கும் பிரம தேவனும் சப்தாட்டமபரரூப அநாதியான உருத்திரமூர்த்தியும் மகா விஷ்டுணுவும் மகேஸ்வரனும் சதாசிவனும் இந்தப் பூமியின்கண்வந்து ஜெனிப்பார்களேயாகில் அவர்களுடைய ஆயுர்த்தாயம் கிரியாகெமன முதலாகிய யாவற்றையும் வழுவாது உள்ளவாறுசொல்லும் ஜோதி டத்தையே சத்தியமாகச் சொல்லாநின்ற குமாரசுவாமியமென்னும் நூலையான் சொல்லும் பொருட்டு எனது ஒப்பற்ற இருதயகமலத் தின்கண் நீங்காம லெழுந்தருளியிருப்பவன் விக்கினேஸ்வர சகோதர னான சுப்பிரமணியக் கடவுள் (என்றவாறு.) (க)

### பாயிரம்.

ஆதிமுதற்குபதேசற்குருதேசிகன்முன்
னகத்தியனுக்குரைத்தருள்சோதிடத்தியல்பங்நாளில்
ஓதினவராயிலினர்வசிட்டர்கற்கரெவுன
ரோமசர்பராசர்மநுநாரதர்வியாசர்
போதகரங்ராமரத்ரிமரீசிபுருகுச்சர்
புகர்சவுனர்சவுனகர்காசிபரிவர்புத்தியினால்
ஏதெனினுமிவர்கடங்கட்கியன்றதுமாத்திரங்கற்
றிவ்வுலகிலிவர்முதலோர்சொனதபரிமிதமே.

(இ-ள்.) ஆதிமுதலாகிய சிவனுக்கு உபதேச சற்குருதேசிகனுன சுப்பிரமணியக் கடவுள் முன் அகத்தியமகாமுனிக்காகத் திருவுளம் பற்றியருளிய சோதிடத்தியல்பை அந்நாளிற் படித்தவர்கள் இனர் வசிட்டர் கற்கர் எவுனர் ரோமசர் பராசர்மநு நாரதர் வியாசர் போதகர் அங்கிராமர் அத்திரிமரீசி புருகுச்சர்புகசவுனர் சவுனகர் காசிபர் என்னும் பதினெண்மர்கள் இவர்கள் தத்தம்புத்திக்கியன்ற மாத்திரங்கற்று இவ்வுலகில் இவர்கள் முதலானோர் செய்தநூல்கள் அளவில்லை. எ-று (க)

இவர்களுரைத்தனவோராசாரம்ரத்னகோச
மிந்துவணியோரைமெய்ஞ்ஞானப்ரிதிவியோக
வுவரிசதமஞ்சரிலீலாவதிசாதககற்
போதனமெண்வர்க்கமெம்சக்கரமெய்க்குதையம்
நவநிதியமரிட்டநவநீதம்வராமேரை
நயவல்கிஷடணேசித்தாந்தம்வாக்கியமின்னணவெஞ்
சவுரியபராக்கிரமங்கேரளிலம்பாகந்
தாற்காலத்தறிவதுப்ரகாசிச்சீபதியே.

(இ-ள்.) முன்சொன்ன பதினெண்மர் முதலானோர் செய்த சோதிடநூல்கள் ஓராசாரம் ரத்னகோசம் சந்ராபரண வோரை ஞானப்பிரிதிவி யோகாருணவம் யோகசதமஞ்சரி லீலாவதிஜாதகபாரிஜாதம் அட்டவர்க்கம் காலசக்கரம் நரசக்கரம் நவநிதியம் அரிட்டம் நவநீதம் வாராமேரை சாராவலி கிஷ்ணீயம் சித்தாந்தம் வாக்கியம் பரகிதம் சவுரியபராக்கிரமம் கேரளிலம்பாகம் காலமறிதல் காலப்ரகாசி ஸ்ரீபதி எ-று. (உ)

பதிபலசேகரம்புவனப்பிரிதிவிகற்பலதை
பராசரிருவாசரியமார்யபுடம்பலதா
விதப்ரபலமுகுர்த்தவிதானதுளமாதவியம்
விதிலபிதஞ்சாந்திபடாம்விகணிதங்குட்டுணவஞ்
சிதப்படத்தியல்புடவித்திறமைமபுட்சாமத்
திரிமலமனோமன்னர்தினமுகுர்த்தத்திரைய
மதுத்துளதுதெரிசனஞ்சொற்பனஞ்சகுனங்காதன்
மற்றவைமுன்னுளவிந்நாளினுமற்றுளவே.

(இ-ள்.) பாவகப்பலசேகரம் புவனப்பிரிதிவி கற்பலதை பூர்வபராசரியம் உத்தரபராசரியம் ஆரியபுடம் பலதா விதப்பிர பலம் முகூர்த்தமாதவியம் விதிலபிதம் சாந்திபடாம் அகணிதம் குட்டாகாரம் அண்டகோளப்பகுதி பூகோளகை பஞ்சபக்ஷி சரநூல் திரிமல

சம்பிரதாயம் மனோமாண்டவ்வியர்தினமுகூர்த்தத்திரைய மதத்துள்ளது தெரிசனை சொற்பனம் சகுனம் காதல் இவைமுதலானவைமுற்காலத்திலுண்டாகிய நூல்கள் இக்காலத்திலுண்டாகிய நூல்களுஞ்சிலவுண்டு. எ-று. (௩)

மற்றுளநீற்களத்தசன்சர்வார்த்தசிந்தாமணியிவ்
வகைப்பேர்பத்திரிகைசம்புவாஞ்சியிருநாதம்
உற்றபலகற்றெழில்சாதகத்துதைபம்வேம்பத்
தூரருள்ளமுடையான்கேசவிதனமெட்டிளதுங்
கற்றிவரிப்படிபலவாய்த்தங்கடங்கட்குடைய
கருத்துளதெவ்வளவுளதவ்வளவுகணிப்பதனாற்
சொற்றிடலெப்படியெனிலிப்பேர்ப்பலசேகரமாய்ச
சொல்வததிசயமுளகுமாரசுவாமியமே.

(இ-ள்.) இக்காலத்துள்ள நூல்களாவன நீலகண்டதாசியம் சர்வார்த்த சிந்தாமணிசர்வதோ பத்திரிகை சம்புநாதன்வியம்வரஞ்சிநாதவ்யம்சாதகபலரத்னம் சாதகசிவனம் சினேந்திரமாலை உள்ளமுடையான் கேசவியம் அட்டைஸ்வரியம் இவை முதலாகிய பல நூல்களையும் அவரவர் புத்திக்குத்தக்கபடி கணித்துச் சொல்லியிருப்பதனால் எவ்வாறு பலன் சொல்லுவதென்னில் மேற்கூறிய நூல்களிலுள்ள பலன்களனைத்தையு மொன்றாகத்திரட்டிச் சொல்லத்தக்க அதிசயமுடைய குமாரசுவாமியம் என்னுநூலினாற் சொல்வது. எ-று. (௪)

இயல்புளவிப்பலமுழுதுஞ் சேகரித்தொன்றாக
வியம்புமதிசயமுளகுமாரசுவாமியம்
புயனெழுதுமெழுத்துமமனெழுத்துமியல்பாகப்
புகல்வதுகண்டிதனியல்பிப்புவியிலுளோரறிய
வயமுளசந்தாசலச்செந்தூர்க்கதிபன்வீரை
வருமாறியாடுபெருமாள்புதல்வனான
செயமிகும்ப்ரபலசுமுககுமாரசுவாமிக்கோர்
தெய்வமவனுளத்திருந்துதிருவுளம்பற்றியதே.

(இ-ள்.) இயல்பாகிய இப்பலனனைத்தையும் ஒன்றாகத் திரட்டிச்சொல்லும் அதிசயமுள்ள குமாரசுவாமியம் என்னுநூல் பிரமன் எழுதுமெழுத்திற்கும் அவன்றலையிலெழுத்திற்கும் வகைவிபரமாகப் பலன் சொல்லுந்தன்மையை இப்புவியின்கண் யாவரும் அறியும் பொருட்டு வெற்றிபொருந்திய சந்தன சயிலத்தையுடைய திருச்செந்தூர்க்கு அதிபனும் வீரவநல்லூரில் வந்துறைபமான மாறியாடும் பெருமாள் புதல்வனாகிய ஜெயம்பொருந்திய பிரபலசுமுக குமார

சுவாமிக்கு ஒப்பற்ற தெய்வமுமாகிய சுப்பிரமணியக்கடவுள் அவன் இருதயத்திலிருந்து இந்தக்குமாரசுவாமியம் என்னுநூலைத் திருவுளம் பற்றியருளினன். எ-று. (ரு)

## நூற்பயன்.

அவ்வையவட்கிளையவனெண்ணெழுத்திருகண்டெய்வத்
தாலாகாதெனினுமெய்த்தொண்டதற்குளதெவ்வளவுண்
டிவ்வுலர்க்குரைத்ததுசத்தியமெனுமார்க்கண்டற்
கிறப்பிருப்பென்றைக்குமொன்றென்றிசைந்ததுகேட்டிருந்துங்
கவ்வையில்பாக்கியகாலத்தயர்த்தவனுகிலுந்துற்
காலமறிந்ததைக்கடத்தக்கடவுளர்க்குங்கடவாத்
தெவ்வடுவேலாயுததற்பாகுருதேசிகனைச்
சிந்தைசெயலவனெமனுந்தகன்ஜெகத்திந்திரனே.

(இ-ள்.) ஒளவையானவள் எண்ணுமெழுத்துங்கண்ணெனத்தகும் என்றும் திருவள்ளுவநாயனுர் எண்ணெனபவேனை யெழுத்தென்பவிவ்விரண்டுங் கண்ணெனபவாழுமுயிர்க்கு என்றும் தெய்வ. தாணுகாதெனினு முயற்சி தன் மெய்வருந்தக் கூலிதரும் என்றும் லோகோபகாரமாகச் சொல்லியிருப்பதனுள் தெய்வத்தா லாகாதெனினுமென்ற வாக்கியத்தைச் சத்தியமாகக்கொண்டு முயற்சி பண்ணின மார்க்கண்டருக்கு என்றும்பதினுறுவயசாக ஞானரூபமாகிய பரமசிவன் திருவுளம்பற்றியருளிய சரிதத்தைக்கேட்டிருந்தும் துன்பமே தெரியாத பாக்கியகாலத்தில் அவ்விதமுயற்சியை மறந்திருந்தாணுகிலும் ஆபத்காலத்தை இந்நூலாலறிந்து அதைக்கடக்கும் பொருட்டு சகல தேவர்களாலும் வெல்லுதற்கு அரியசத்துருசங்காரனை வேலாயுதக் கடவுளைத் தியானம் பண்ணுவானுகில் அவனே யமனுந்தனென்றும் பூலோகேந்திரனென்றுஞ் சொல்லப்படுவான். எ-று. (சு)

பாயிரமுற்றுற்று.

---

## மூலகாண்டம்.

# காவியவியற்படலம்.

பூங்கமலத்தேவனருள்பொற்கடத்துற்பவித்த
 பொதியவரைக்குறுமுனிசெந்தமிழ்ப்பொருள்கேட்பதற்கா
யோங்கியசந்தாசலச்செந்தூர்க்கிவனெத்தினமு
 முற்றிடுமெத்தினத்திலொருதினத்திலிவனுளத்திற்
றுங்கிடசோதிடத்தியல்சொல்குருநாததேவ
 சகாயதிருவுளமிரங்கத்தக்கதெனக்கெனுமுன்
றேங்கமழ்வாய்மலர்ந்துதினமுதற்பேர்சொற்றனனத்
 திரிதருபுத்திரியெனுமத்திரிபுரைபுத்திரனே.

(இ-ள்.) அழகியகமலாசனனான பிரமதேவன்தந்தருளிய பொன்போலும் பிரபையையுடைய கும்போதபனானபொதிய வரையின் கண்வீற்றிருக்கும் அங்குட்டப் பிரமாணவடிவாகிய அகத்தியனானவன் செவ்விதாகிய தமிழ் நூல்களின் பொருள்களைக்கேட்கும் பொருட்டு மிகுதியும் வளர்ந்தோங்கிய சந்தனசயிலத்தையுடைய திருச்செந்தூர்க்குச் சதாகாலமும் வந்துகொண்டிருப்பன் இப்படி வருந் தினங்கழி லொருநாள் சகலலோக சம்பிரதாயங்களையுஞ் சோதிடத்தினாலேயே தான் தெரியவேண்டு மென்று தன்னுடைய இருதயத்தி லுதையமான படியால் தனது குருசன்னிதானத்தில் வந்து என்குருநாத தேவசஹாய என்று அனேகமாகிய தோத்திரஞ்செய்து சோதிட நூலை அடியேனுக்குத் திருவுளமிரங்கி உபதேசித்தருளவேண்டுமென்று இவன் விண்ணப்பஞ் செய்யாமுன்னம் வாசங்கமமாநின்ற செவ்வாம்பலைப்போலும் அழகினையுடைய திருவாய்மலர்ந்து முதலில் நக்ஷத்திரமுதலானவைக்கெல்லாம் உரிச்சொல்லுரைத்தனன் பர்வத ராஜன்தந்த புத்திரியாகிய பராசத்திக்குப் புத்திரனான சுப்பிரமணியக்கடவுள். எ-று. (க)

காவியவியற்படலம் முற்றிற்று.

# திருதிநாமோதயப்படலம்.

## நக்ஷத்திரப்பரியாயநாமம்.

இரலைபரிப்பேரடுப்பின்பேரெரிப்பேர்பார்த்தே
 ரின்பேர்மான்றலைப்பேர்யாழிறைப்பேர்வேய்கடைப்பேர்
குருமதிதைப்பேர்யணிப்பேர் நுகப்போகுமைப்பேர்
 குளப்பேருத்தமன்பேர்வத்திரப்பேர்கோகனகங்
திரிசுடர்ப்பேர்முறப்பேர்புற்பேரளிப்பேர்திதிபுத்
 திரர்பேர்நீர்ப்பேர்முடிப்பேர்சீதரன்பேர்வீச்செக்
குருவினம்பேர்நாழிப்பேரரசுமுரசுப்பே
 ரோடப்பேரசுபதிதொட்டுரைப்பதுமிப்பேரே.

(இ-ள்.) அசுபதிக்கு இரலை * பரி கிள்ளை வாசிசொக்கு மா என்றும்பரணிக்கு அடுப்பு அட்டுதல் சுசிதலம் என்றும் கார்த்திகைக்கு எரி அங்கி ஆரல் என்றும் உரோகணிக்கு பார் தேர் உருள் வையம் சகடுசாகாடு என்றும் மிருகசிரத்துக்குமான்றலை மிருகவதனம் மான்முகம் என்றும் திருவாதிரைக்கு யாழ்வீணை உருத்திரன் சிவன் என்றும் புனர்பூசத்துக்கு வேய் மூங்கில்கண் திகிரி கடை என்றும் பூசத்துக்கு குரு மதி தை என்றும் ஆயிலியத்துக்கு பணி பாம்பு கட்செவி புயங்கம் என்றும்மகத்திற்கு நுகம் நாஞ்சில் கலப்பை என்றும் பூரத்துக்கு ஆகுபெருச்சாளி உமை சிவை என்றும் உத்திரத்துக்கு குளம் ஏரி தடாகம் வாவி என்றும் அத்தத்திற்கு உத்தமன் பிரபலன் ஆரோகி என்றும் சித்திரைக்கு வஸ்திரம் ஒலியல் ஆடை நீவி என்றும் சோதிக்கு கோகனகம் கமலம் சுடர் தீபம் என்றும் விசாகத்துக்கு முறம் முற்றில்சுளகு என்றும் அனுசத்துக்கு புல்பனை நீலம் தாழிபோந்தை பெண்ணை என்றும் கேட்டைக்கு அளிகீடம் அதம் என்றும் மூலத்துக்கு அசுரர் இராக்கதர் அவுணர் என்றும் பூராடத்துக்கு நீர் புனல்பயம் அறல் கோ என்றும் உத்திராடத்துக்கு முடிமுதம் மூர்த்தம் என்றும் திருவோணத்துக்கு சிதரம் இரக்ஷகன் மால்மாயன் மாதவன் என்றும் அவிட்டத்துக்கு புள்பறவை வீ என்றும் சதையத்துக்கு செக்கு காணம் ஆலை என்றும் பூரட்டாதிக்கு நாழி குஞ்சம் படி என்றும் உத்திரட்டாதிக்கு அரசு கோமன்னவன் முரசுபறை என்றும் இரேவதிக்கு ஓடம் நாவாய் தோணிபாதை என்றும் பெயராம். எ-று. (க)

* பரி முதலாயவற்றின் பரியாயநாமங்களை உரையில் முற்றக்கூறாது விரியுமென்றெண்ணிச்சில கூறினர் ஆகையால் கூறாதொழிந்தனவற்றையுந்திவாகரம்நிகண்டுமுதலாணவைகளா லாராய்ந்துகொள்க.

## கிரகாதிபர்பரியாய நாமமும். அவர் புதல்வர் நாமமும்.

பதுமனின்பருதிப்பேர்சசியாம்பலின்மான்
பம்மிறைப்பேர்சேய்பவுமன்பார்மகன்பாலகன்பேர்
விதுதனையன்மால்புதன்பேர்வேதியன்பொன்குருப்பேர்
வெள்ளிபுகர்பார்க்கவன்பேர்விசிதனெமனீலன்
கதிர்சுதன்பேர்பணிசிகிமற்றிருவர்கள்பேர்காலன்
கலைக்யா பாதகரேசன்பிரகன்பே
ரிதமிலெமண்டகப்பேர்விடகடிகைகுளிக
னின்னமிர்தமிருத்தவர்கள் புதல்வர்களிப்பேரே.

(இ-ள்.) ஆதித்தனுக்கு பதுமன் இனன் பருதி என்றும்சந்திரனுக்கு சசி ஆம்பலின்மான் பம்மிறை என்னும் செவ்வாய்க்கு சேய் பவுமன் பார்மகன் பாலகன் என்றும் புதனுக்கு விதுதனையன் மால் என்றும் வியாழனுக்கு வேதியன் பொன் குரு என்றும் சுக்கிரனுக்கு வெள்ளி புகர் பார்க்கவன் என்றும் சனிக்கு விசிதன் எமன் நீலன் சுகிரசுதன் என்றும் இராகுவுக்கு பணி என்றும் கேதுவுக்கு சிகி என்றும் பெயராம் ஆதித்தன் புதலவன் காலன் சந்திரன் புதல்வன் கலைக்யானபாதன் செவ்வாய் புதல்வன் கரேசன் புதன்புதல்வன் அர்த்தப்பிரகரன் வியாழன் புதல்வன் எமகண்டகன் சுக்கிரன்புதல்வன் விடகடிகை சனியின் புதல்வன் குளிகன் இராகுவின் புதல்வன் அமிர்தகடிகை கேதுவின்புதல்வன் அவமிருத்து. எ-று. (௨)

## இராசிகளின் பரியாயப்பேர். இராசிமுதலியவற்றின்பொதுப்பேர்.

வருடையினப்பேர்விடைப்பேர்யாழ்கதைதொந்துவமா
மைதுனராசிப்பேர்கார்கொண்டலலவன்பேர்
மிருகராசுப்பேர்மாதின்பேர் துலைப்பேர்தேட்பேர்
விற்பேர்மான் றலைகலைப்பேர்வெறுங்குடப்பேர்மீன்பேர்
ஒருமுதற்பேர்க்கீதிடம்பாவகம்பவனம்பொதுப்பேர்க்
குடுத்தினநாட்பேராம்வராங்கிழ்மைக்குளதா
முருகவிழ்தென்மலையதிதிப்பேர்க்கதுவாமென்ன
மொழிந்தனன்மும்முதற்குமொருமுதற்குமொருமுதலே.

(இ-ள்.) மேடத்துக்கு வருடைதகர்ஒரு என்றும் இடபத்துக்கு ஆன் விடை ஏறு என்றும் மிதுனத்துக்கு கதை யாழ் தொந்துவம்

மைதுனராசி என்றும் கடகத்துக்கு கார் கொண்டல் அலவன் என்றும் சிங்கத்துக்கு மிருகராசு சீயம் கண்டீரவம் என்றும் கன்னிக்கு மாது பெண் காந்தை என்றும் துலாத்துக்கு துலை தூங்கல் கோல என்றும் விருச்சிகத்துக்கு தேள்கீடம் துட்டன் என்றும் தனுசுக்கு வில் கார்முகம் சராசனமென்றும் மகரத்துக்கு மான்றலை கலை நக்கிரம் என்னும் கும்பத்துக்கு குடம் கடம் சால் என்றும் மீனத்துக்கு கயல் கெண்டை மிருது ரோமம் என்றும் இராசிக்கு இடம் பாவகம் பவனம் என்றும் நக்ஷத்திரத்துக்கு உடு தினம் நாளென்றும் வாரத்துக்குக் கிழமை என்றும் பெயராம் வாசங்கமழாநின்ற பொதியவரையினை யுடைய அகத்தியனே திதிப்பெயருக்கு அதுவே பெயராமென்று திருவாய் மலர்ந்தருளினவன் திரிமூர்த்திகட்கு முதன்மையாகிய பாமசிவனுக்கும் ஒப்பற்ற முதலாக நின்ற சுப்பிரமணியக் கடவுள். எ-று. (ரு)

## யோககரண நாமம்.

தலத்தியோகப்பேர்விஷ்கம்பம்பிரிதியாபு
சௌபாக்யசோபனதிகண்டகர்வந்திருதி
அலச்சூல்கண்டம்விருத்திதுருவம்வியாகாத
மரிஷணம்வக்கிரஞ்சித்திவிதிபாதம்வரியான்
பெலப்பரிகஞ்சிவஞ்சித்தஞ்சாத்யசுபசுப்ரம்
பிரமமயிந்திரவைதிரிப்பேர்பவம்பாலவங்க
வுலத்தைதுலங்கஜம்வணிஜம்பத்ரைசகுனக்கா
லுரககிருமிக்கரணம்பவமுதற்பேர்க்குளவே.

(இ-ள்.) விஷ்கம்பம் பிரீதி ஆயுஷ்மான் சௌபாக்கியம் சோபனம் அதிகண்டம் சுகர்மம் திருதி சூலம் கண்டம் விருத்தி துருவம் வியாகாதம் அரிஷ்ணம் வச்சிரம் சித்தி விதிபாதம் வரியான் பரிகம் சிவம் சித்தம் சாத்திசம் சுபம் சுப்ரம் பிராமியம் மாகேந்திரம் வைதிருதி ஆக உயஎம் யோகமாம் * பவம் பாலவம் கௌலவம் தைதுலம் கரஜி வணஜி பத்திரை அல்லது விஷடி சகுனி சதுர்ப்பாதம் நாகவம் கிமிஸ்த்துக்கினம் ஆக யகம் கரணமாம். எ-று. (சு)

## பாவக நாமம்.

முதலோரைகல்யமுடிலக்கினமெய்யாங்கோ
மூகங்குடும்பம்வித்தைபொன்னூண்மொழிதனில்புருவம்

* பவம் சிம்மம் பாலவம் புலி கௌலவம் பன்றி தைதுலம் கழுதை கரஜிபானை வணஜி காளை பத்திரை கோழி சகுனி பக்ஷி சதுர்ப்பாதம் நாய் நாகவம் பாம்பு கிமஸ்த்துக்கினம்புழு.

பதமீதன்முதலியரெக்ஷகநாசிபன்னுப்
பார்த்திரபாண்டமுமாகும்பணிவல்பராக்கிரமங்
கதைகேள்விச்செவிகனிட்டனுங்களமின்னீராய்
காலியுறவாள்சுகம்வாகனமனைகைகலையாஞ்
சுதனுருண்ணிறமிறையாஞ்சோரம்ரிணம்விரணஞ்
சுத்துதரம்ரிபுநோயீதுடன்முதலாறதற்கே.

(இ-ள்.) லக்கினத்துக்கு முதல் ஓரை கல்லியம் முடிமெய் என்றும், இரண்டாமிடத்துக்கு வலதுநேத்திரம் முகம் குடும்பம் வித்தை தனம் உணவு வாக்கு நெற்றி புருவம் அன்னதான முதலிய ஜனரெக்ஷகம் நாசி பல் நாக்கு பாத்திர பாண்டஸ்தானம் என்றும், மூன்றுமிடத்துக்கு ஆபரணம் பெலம் பராக்கிரமம் கதைகாவியக் கேள்வி வலது செவி இளையசகோதரஸ்தானம் என்றும், நாலாமிடத்துக்கு கண்டம் கிரகம் நீர் மாதுரு கன்றுகாலி மித்திரம் ஆளடிமை சுகம் வாகனம் மெத்தை தழுவணை முதலானவை வலக்கை வத்திர ஸ்தானம் என்றும், அஞ்சாமிடத்துக்கு புத்திரன் அன்பு இருதயம் மார்பு பிரபு ஸ்தானம் என்றும், ஆறுமிடத்துக்கு சோரம் ரிணம் விரணம் பசி வயிறு சத்துரு ரோக ஸ்தானம் என்றும் பெயராம். எ-று. (ரு)

இதுவுமது.

அதனுரைத்தாண்பெணலணைதல்படல்களமா
மவமானம்வறைதுயின்மாய்வாயுவுவபானம்
வதைபுரிதல்ரந்திரந்தத்தாம்பிதிர்பாக்கியந்தன்
மங்குருசிவார்ச்சனைமாதவஞ்சகனத்தலமாஞ்
சிதமிசையாக்கினைமானஞ்செய்தொழிலுன்னதம்யாத்
திரையிடக்கைகுறங்காமச்செவிமுழங்கால்சேட்டன்
இதமதிதம்பவமாயம்லாபமுமாம்வியந்தா
ளிடக்கணிவையேழ் முதலீறினித்தினமான்மியமே.

(இ-ள்.) ஏழாமிடத்துக்கு மன்மதன்வரத்து ஆண்பெண் லெக்ஷணங்கம் சையோகம் பாடு களத்திர ஸ்தானம் என்றும், எட்டாமிடத்துக்கு அவமானம் அபகீர்த்தி நித்திரை மாரணம் தீர்க்காயு அபானம் கொலைசெய்தல் ரந்திரம் தத்துஸ்தானம் என்றும், ஒன்பதரமிடத்துக்கு பிதுர்பாக்கியம் தர்மம் குரு சிவார்ச்சனை தபசு சகனஸ்தலம் என்றும், பத்தாமிடத்துக்கு ஆகாசம் கீர்த்தி ஆக்கினை வெகுமானம் செய்தொழில் உன்னதம் யாத்திரை இடக்கை துடைத்தானம் என்றும், பதினோராமிடத்துக்கு இடதுசெவி முழங்கால் மூத்த

சகோதரம் இதம் வர்த்தனே பவம் ஆயம் லாபஸ்தானம் என்றும், பன்னிரண்டாமிடத்துக்கு பாதம் இடக்கண் விரய ஸ்தானம் என்றும் பெயராம். இனி நக்ஷத்திரசரித்திரம் சொல்லுவோம். எ-று. ()

திறுதிநாமோதயப்படலமுற்றிற்று.

ஆகப்படலம் இரண்டுக்குக் கவி-எ.

---

## நக்ஷத்திரசரித்திரப்படலம்.

நாமநக்ஷத்திரம்.

---

அம்முதலோர்நான்கதும்வவ்விருநான்குள்ளதுங்குவ்
வாகவிரண்டிருமூன்றுமெம்முதலாய்மூன்று
மம்முதலாறல்லதும்பங்நான்கிரண்டல்லதுந்தவ்
வாகவிரண்டெழுநகரத்ததுவாயாறு
நெம்முதலோர்மூன்றுயுயூவுகரமுதலைந்து
நின்றதுமக்கவினன்குளும்முதலோர்மூன்றுந்
தொம்முதலோர்மூன்றதுநொம்முதன்மூன்றும்யாவுஞ்
சொல்சவினன்கைந்தொருமூன்றறுமீன்றெட்டுளதே,

(இ-ள்.) அ ஆ இ ஈ ச, ம் கார்த்திகை, வ வா வி வீ ௪, ம் ரோகிணி, வெ வே வை வை வெள ௪-ம் மிருகசிரம், கு கூ உ ம் திருவாதிரை, கெ கே கை ௩ம் புனர்பூசம், கொ கோ கௌ ௩ம் பூசம் மெ மே மை ௩-ம் ஆயிலியம், ம மா மி மீ மு மூ ௬-ம் மகம், மொ மோ மௌ ௩-ம் பூரம், ப பா பி பீ ௪-ம் உத்திரம், பு பூ உம் அத்தம், பெ பே பை பொ போ பௌ ௬-ம் சித்திரை, த தா உ-ம் சோதி தி தீ து தூ தெ தே தை எம் விசாகம், ந நா நி நீ நு நூ ௬ம் அனுடம், நெ நே நை ௩ம் கேட்டை, யு யூ உம் மூலம், உ ஊ எ ஏ ஐ ௫ம் பூராடம், ஒ ஓ ஔ ௩ம் உத்திராடம், க கா கி கீ ௪ம் திருவோணம், ஞ ஞா ஞி ௩ம் அவிட்டம் தொ தோ தௌ ௩ம் சதையம் நொ நோ நௌ ௩ம் பூரட்டாதி, யா க ம் உத்திரட்டாதி, ச சா சி சீ ௪ம்ரேவதி சு சூ செ சே சை௫ம் அசுபதி சொ சோ சௌ ௩ம் பரணி

நக்ஷத்திரமிருகம்.

நக்ஷத்திரபக்ஷி.

அறுமீனேராடரவுசாரைமுன்னுப்பூனை
யசம்வெருகாணெலியாகான்மேதிபுற்காண்பெண்மா

னுறுகலைநாய்முசுவாவம்முசுப்பெண்ணம்மாமகன்கோ
வுவாமாத்தோனுளமயிலாந்தையூர்ப்புள்என்றில்
குறுகனநீர்க்கொடிசிசிலிகழுகதுசிள்வீடு
* கோவிமரங்கொத்தீயற்செவ்வாற்புட்கோர
மறைவளம்போர்த்துப்பகண்டைகார்வீநாரைம்மர
வண்டமுள்ளான்கோட்டான்வல்லாளிசுண்வாகனமே.

(இ-ள்.) கார்த்திகைக்கு ஆடுமயில், ரோகணிக்கு பாம்பு ஆந்தை மிருகசிரத்துக்கு சாரைப்பாம்பு கோழி, திருவாதிரைக்கு ஆண்நாய் அன்றில், புனர் பூசத்துக்கு பெண்பூனை அன்னம், பூசத்துக்கு ஆட்டுக்கிடாய் நீர்க்காக்கை ஆயிலியத்துக்கு ஆண்பூனை கிச்சிலி, மகத்துக்கு ஆண் எலி கழுகு பூரத்துக்கு பெருச்சாளிபெண் கழுகு உத்திரத்துக்கு எருது சிள்வீடு உத்தரத்துக்கு எருமை பருந்துசித்திரைக்கு ஆண்புலிமரங்கொத்தி, சோதிக்கு எருமைக் கிடா ஈ விசாகத்துக்கு பெண்புலி செவ்வாற்குருவி அனுடத்துக்கு மான்சகோரம் கேட்டைக்கு கலைசக்ரவாளம் மூலத்துக்குபெண்நாய் செம்போத்து பூராடத்துக்கு ஆண் குரங்கு பகண்டை உத்திராடத்துக்கு மலட்டுப்பசு வலியான் திருவோணத்துக்கு பெண்குரங்கு நாரை அவிட்டத்துக்கு நாரிவண்டு சதையத்துக்கு பெட்டைக் குதிரை அண்டங்காக்கை பூரட்டாதிக்கு புருஷன் உள்ளான் உத்திரட்டாதிக்கு பாற்பசு கோட்டான், ரேவதிக்கு பெட்டையானை வல்லூறு அசுபதிக்கு குதிரை இராசாளி, பரணிக்கு யானை காக்கை, இவைமிருகமும் பக்ஷியுமாம். எ-று.

நக்ஷத்திரதரு நக்ஷத்திரகணம்.

கனனேரத்திசம்புகருங்காலிசெங்கால்கண்கோ
காப்புனையால் பலசலரியார்வில்மருங்கரிபூண்
வனகேசவிட்டின்மராவஞ்சிபலாவெருக்கு
வனீநீபந்தேமாவேம்பிலும்மைபரைமலக

---

* கோவீயை கோவி என்றும் மாங்கொத்தியை மரங்கொத்து என்றும் சகோதரத்தை கோரம் என்றும் சக்ரவாளத்தை வளம் என்றும் செம்போத்தை போத்துஎன்றும் அண்டங்காக்கையைஅண்டம் என்றும் வல்லூறை வல்என்றும் இராசாளியை ஆளி என்றும் கூறினமையும் பின்னிவ்வாறு வருவனவற்றையும் உரையினுற்றெளிந்துகொள்க.

† உத்திராடத்துக்குமிருகம்கீறியென்றும்.

‡ அவிட்டத்திற்குப்பெண்சிங்கமென்றும்.

¶ பூரட்டாதிக்குஆண்சிங்கமென்றும் கூறுவாருளர்.

மெனலாமுப்பூரமுமுக்குளம்பாணிபார்பா
ழிவைமனுடகணமோணமீறுதைமாவிதுவேய்
பனேசோதியத்தமிவைதேவகணமற்றப்
பம்மவுணகணமாங்கும்பம்வருமாமுனியே.

(இ-ள்.) கார்த்திகை அத்தி, ரோகணி நவ்வல், மிருகசிரம் கருங்காலி, திருவாதிரை செங்கருங்காலி, புனர்பூசம் மூங்கில் பூசம் அரசு, ஆயிலியம் புன்னே, மகம் ஆல், பூரம், பலாசு, உத்திரம் அலரி, அத்தம் ஆத்தி, சித்திரைவில்வம், சோதி மருது, விசாகம் விளா, அநுசம் மகிழ், கேட்டை பிராய், மூலம் மரா, பூராடம் வஞ்சி, உத்திராடம் பலா, திருவோணம் எருக்கு. அவிட்டம் வன்னி, சதையம் கடம்பு, பூரட்டாதி தேமா உத்திரட்டாதி வேம்பு, ரேவதி இலுப்பை, அசுபதி காஞ்சிரை, பரணி நெல்லி. இவைநக்ஷத்திரத்தருக்களாம், பூரம் பூராடம் பூரட்டாதி உத்திரம் உத்திராடம் உத்திரட்டாதி பரணி ரோகணி திருவாதிரை இவை கூம் மனுடகணம். திருவோணம் ரேவதி பூதம் பூசம் அசுபதி மிருகசிரம் புணர்பூசம் அனுடம் சோதி அத்தம் இவை கூம் தேவகணம் கார்த்திகை ஆயிலியம் மகம் சித்திரை விசாகம் கேட்டை மூலம் அவிட்டம் சதையம் இவை கூம் இராக்ஷதகணம் கும்போதயனுகிய அகத்தியமுனியே. எ-று.

நக்ஷத்திரதேவதை ஆண் பெண் அலிநக்ஷத்திரம்.

மாமூதனேர்வாணிதுர்க்கைவன்னியயன்மதிசே
மன்சுரர்பொன்பணிசிதன்ருயையன்மலர்கோவா
னேமகர்மாமாருகன்கானிருபனிசிசரர்நீர்
நெடும்புழைக்கையான்மாலிந்த்ராணியெமனிதிமான்
காமமுதலாலாவசிதனுமுறமீரேணங்
களிறுபுட்புல்வேய்முடியாழ்கவுரிகனற்கறவை
யாமிவைபெண்கெக்கிரவோனலியாண்மற்றென்ன
வகத்தியனுக்குரைத்தனனீரணிந்தனனந்தனனே.

(இ-ள்.) அசுபதி சரஸ்வதி, பரணி துர்க்கை, கார்த்திகை அக்கினி, ரோகணி பிரமா, மிருகசிரம் சந்திரன், திருவாதிரை உருத்திரன் புனர்பூசம் தேவர்கள், பூசம் வியாழன், ஆயிலியம் ஆதிசேடன், மகம் சுக்கிரன், பூரம் பார்வதி உத்திரம் சாத்தா, அத்தம் சூரியன் சித்திரை விஸ்வகர்மா, சோதி லக்ஷிமி, விசாகம் சுப்பிரமணியர், அனுடம் வாய்வு, கேட்டைதேவந்திரன், மூலம் அசுரர், பூராடம்வருண, உத்திராடம் விநாயகர், திருவோணம் விஷ்ணு, அவிட்டம்இந்திராணி, சதையம் எமன் பூரட்டாதி குபேரன், உத்திரட்டாதி காமதேனு,

ரேவதி சனி, இவை நக்ஷத்திரதேவதைகளாம் அசுபதி பரணி ரோகணி பூசம் ஆயிலியம் மகம் உத்திரம் சித்திரை சோதி கேட்டை மூலம் பூராடம் பூரட்டாதி இவை ௰௩-ம் ஆண் நக்ஷத்திரம் விசாகம் ரேவதி திருவோணம் அத்தம் அவிட்டம் அனுடம் புனர்பூசம் உத்திராடம் திருவாதிரை பூரம் கார்த்திகை உத்திரட்டாதி இவை ௰௨-ம் பெண் நக்ஷத்திரம் சதையம் மிருகசிரம் இவை ௨-ம் அலி நக்ஷத்திரம் என்று அகத்தியனுக்குத் திருவாய்மலர்ந்தருளியவன் கங்காதரனுக்குப் புத்திரனான சுப்பிரமணியக் கடவுள். எ-று. (௪)

நக்ஷத்திரவிடகடிகை.

நீர்பரணிமுரசிவைக்கெண்மூன்றிரலைக்கைம்மா
 னெடும்பணிகெண்ணான்குமைதார்நீவிமுடிக்கிருபான்
பார்பெறுநாற்பகுரவிக்கீர்பத்திரண்டாமிறைக்கோர்
 பதினொன்றேடெழுமூன்றப்புரட்டையிற்பற்றுவதெண்
ணீருளதுத்திரஞ்சையமீரொன்பான்குருகுக்
 கிருபதைம்பத்தாறெழில்வேயறுமீனீறுக்
கோரொருமுப்பதுவோணம்புட்புலொருபதுமற்
 றுவ்வளவைக்கீரேழிவைநஞ்சுறுங்கனனன்குயவே.

(இ-ள்.) பூராடம்பரணி உத்திரட்டாதியில் ௨௪ நாழிகைக்கு மேலும் அசுபதியில் ௫௰ க்குமேலும் ஆயிலியத்தில் ௩௨-க்கு மேலும் பூரம்பூசம் சித்திரை உத்திராடத்தில் ௨௰-க்குரோகிணியில் ௪௰-க்கு மேலும் அத்தத்தில் ௨௨-க்கு மேலும்திருவாதிரையில் ௰௧-க்கு மேலும் ௨௧-க்குமேலும் பூரட்டாதியில் ௰௯-க்கு மேலும் உத்திரம் சதையத்தில் ௰௮-க்கு மேலும் மூலத்தில் ௨௰-க்கு மேலும் ௫௯-க்கு மேலும் மகம் புனர் பூசம் கார்த்திகை ரேவதியில் ௩௰-க்குமேலும் திருவோணம் அவிட்டம் அனுடத்தில் ௰-க்கு மேலும் மிருகசிரம் சோதி விசாகம் கேட்டையில் ௰௪-க்கு மேலும் ௪ நாழிகை விட மிருக்கும் எ-று, (௫)

நக்ஷத்திரசத்துருவித்துரு பஞ்சபக்ஷி
கெண்டாந்தம் விதவைநக்ஷத்திரம்

நான்கெனுமீன்றுரூழ்பார்நாவாய்மாலரச
 னக்கனிவைநட்பிவைக்காமற்றதற்காம்வான்கோன்
மான்கணியீறிம்மூன்றுக்கொன்றினுக்கோர்நான்காய்
 வரலிடநேர்பரணிமுதன்மற்றவைக்குப்பகையா

* கனல் இடைக்குறை.

மான்கடவுணோராறைந்தாறைந்தீதாந்தை
யக்கமொன்றுயுதக்காரூரைகைவலியானகு
மூன்களுணவோர்கோணத்தாதியதற்கிறீ
றுறுங்காலகெண்டாந்தம்விண்ணோர்தார்விதவைக்குளவே.

(இ-ள்.) மூலம் பூசம் அத்தம் ரோகணி ரேவதி திருவோணம் உத்திரட்டாதி திருவாதி இவை அ-ம் தங்களுக்குள் ஒன்றுக்கொன்று மித்திராம் கேட்டைக்கும் பரணிக்கும், அனுடத்துக்குங் கார்த்திகைக்கும், விசாகத்துக்கும் ரோகணிக்கும், சோதிக்கு மிருகசிரத்துக்கும், அவிட்டத்துக்குந் திருவாதிரைக்கும், திருவோணத்துக்கும் புனர்பூசத்துக்கும், உத்திராடத்துக்கும் பூசத்துக்கும், பூராடத்துக்கு மாயிலியத்துக்கும், ரேவதிக்கு மகத்துக்கும், உத்திரட்டாதிக்கும் பூரத்துக்கும், பூரட்டாதிக்கும் உத்திரத்துக்கும் சதையத்துக்கும் அத்தத்துக்கும், பகையாம். அசுபதிக்கு சித்திரை மூலமும், சித்திரைக்கு அசுபதிமூலமும், மூலத்துக்கு அசுபதி சித்திரையும். பகையாம் திருவாதிரை புனர்பூசம் ஆயிலியம் மகரம் பூரம் இவை சு-ம் சிந்தை, உத்திரம் அத்தம்சித்திரைசோதிவிசாகம் இவை ரு-ம் காகம், அனுசம் கேட்டை மூலம் பூராடம் உத்திராடம் திருவோணம் சு-ம் கோழி, அவிட்டம் சதையம் பூரட்டாதி உத்திரட்டாதி ரேவதி இவை ரு-ம் மயில், அசுபதி பரணிகார்த்திகை ரோகணி மிருகசிரம் இவை ரு-ப்வல்லூறு, அசுபதி மகம் மூலத்தின் முதற்பாதமும். ஆயிலியம் கேட்டை ரேவதியின் நாலாம்பாதமும் கெண்டாந்தம். புனர்பூசமும் பூசமும் விதவை நக்ஷத்திரம். எ-று. (சு)

ஊர்த்தமுகநக்ஷத்திரம் அதோமுகநக்ஷத்திரம்
புறமுகநக்ஷத்திரம் அமிர்தகடிகை
சதாஜீவ நக்ஷத்திரம்.

தாரெமன்பெண்மூவருத்ரத்திரையமுமிப்பேர்முன்
றழலவுணோர்முறம்பரணிசர்ப்பமுமற்றதுமேல்
பாரொடுபின்பானமைமையொன்பதசுர்ப்பகன்மேற்
பணிரதவைந்தேழதிகம்பயம்பரியாழ்பரையீ
தேரொருமூன்றொருபதுபன்னென்றுகுரைந்ததுமற்
றுள்ளவைங்கெண்மூன்றுவிடத்துடனுயர்தலமிர்த
மீரண்டுநாழிகையுற்றிருப்பதரிதாரீ
திரவிபுற்றேர்முக்குளமெப்போதுமுயிரெனுமே.

(இ-ள்.) பூசம் சதையம் அவிட்டம் ரோகணி திருவாதிரை திருவோணம் உத்திரம் உத்திராடம் உத்திரட்டாதி இவை கூ-ம் ஊர்த்தமுகநக்ஷத்திரம் பூரம் பூராடம் பூரட்டாதி கார்த்திகை மூலம் மகம் விசாகம் பரணி ஆயிலியம் இவை கூ-ம் அதோமுகநக்ஷத்திரம் அசுபதி மிருகசிரம் புனர்பூசம் அஸ்தம் சித்திரை சோதி அனுடம் கேட்டை ரேவதி இவை கூ-ம் புறமுக நக்ஷத்திரம் மூலம் அத்தத்தில் சரு-நாழிகைக்குமேலும், ஆயிலியத்தில் ருய-க்குமேலும், ரோகணியில் ருஉ-க்குமேலும் பூராடத்தில் சச-க்குமேலும் அசுபதியில் சஉ-க்குமேலும், திருவாதிரையில் நரு-க்குமேலும், பூரத்தில் நச-க்குமேலும், பரணி உத்திரட்டாதியில் சஅ-க்குமேலும், கார்த்திகை புனர்பூசம் மகம் ரேவதியில் ருச-க்குமேலும், மிருகசிரம் சோதி விசாகம் கேட்டையில் நஅ-க்குமேலும், பூசம் சித்திரை உத்திராடத்தில் சச-க்குமேலும், உத்திரம் சதையத்தில் சஉ-க்குமேலும், அனுடம் திருவோணம் அவிட்டத்தில் நச-க்குமேலும், பூரட்டாதியில் சய-க்குமேலும் ச-நாழிகை அமிர்தமிருக்கும் திருவோணம் பூசம் ரேவதி அஸ்தம் அனுசம் ரோகணி உத்திரம் உத்திராடம் உத்திரட்டாதி இவை கூ-ம் சதா ஜீவநக்ஷத்திரம். எ-று. (எ)

கலக்யானபாதம் அவசித்துநக்ஷத்திரம்
அக்கினிநக்ஷத்திரம் வைநாசியம் நக்ஷத்திரத்தீது
பாடாவரிநக்ஷத்திரம் நக்ஷத்திரராசி.

முயலகன்சேருடுக்காற்குக் * கலக்யானம்பதமாய்
மொழியிவணமுடிகடைக்கான்முதன்மானுற்கடிகை
யயன்மருவுவிகடிகையுமவ்வளவுவவசித்
தாமடுப்பாமுதலெழுகாற்கனலருக்கற்குதையத்
துயர்வதெண்பத்தெண்கால்வைநாசியமற்பகறீண்
டுரகதினமுன்பின்னேடெழுந்தீதொன்றுபய
மியமன்புன்மூன்றீர்சுடாமாலிவைபாடாவரி
யிரலேமுதலிரண்டேகாற்றினமொருநேரெனுமே.

(இ-ள்.) ஜென்மநக்ஷத்திரக்காலுக்கு கூச-ம்கால், கலக்யானபாதம் உத்திராடத்தின் ச-ம் கால் நாழிகை யரு-ம் திருவோணத்தின் ஆதிநாழிகை ச-விகாடி ச-ம் அவசித்து, பரணி நஉ-ம்

---

* கலக்கியானம் தொகைக்குறிப்பாய் அறுபத்திறலை யுணர்த்திற்று இதுபோல்வருவனவற்றை உரையினுற் றெளிந்துகொள்க.

கால்முதல் ரோகணி முதற்கால்வரையும் * ஆதித்தன் நிற்குங்காலம், அக்கினி நக்ஷத்திரம் சென்ம நக்ஷத்திரத்துக்கு அஅ-ம் பாதம் வைநாசியம், கிரகண நக்ஷத்திரமும் அதற்குமுன் ௬-ம் பின் ௬-ம் ஆக எ-நக்ஷத்திரமும் தீது. அசுபதி பரணி சதையம் அனுசம் கேட்டை மூலம் சோதி விசாகம் திருவோணம் இவை கூ-ம் பாடாவாரி அசுபதி பரணி கார்த்திகை வ-மேடம். கார்த்திகைகளும் ரோகணி மிருகசிரம்முன் இ ரிஷபம், மிருகசிரம் பின் இ திருவாதிரை புனர்பூசம் ௩ மிதுனம், புனர்பூசம் வ பூசம் ஆயிலியம் கடகம், மகம் பூரம் உத்திரம் வ சிங்கம் உத்திரம் ௩ அத்தம் சித்திரை முன் இ கன்னி, சித்திரை பின் இ சோதி விசாகம் ௩ துலாம், விசாகம் வ அனுசம் கேட்டை விருச்சிகம் மூலம் பூராடம் உத்திராடம் வ தனுசு; உத்திராடம் ௩ திருவோணம் அவிட்டம் முன் இ மகரம், அவிட்டம் பின் இ சதையம் பூரட்டாதி ௩ கும்பம் பூரட்டாதி வ உத்திரட்டாதிரேவதி மீனம். எ-று. (அ)

கிரக உதைப்பு அல்லது லப்த்தை கிரகவேதை கிரகவேதை யின்தொகை கிரகவேதையின் பெயர்.

தினகரனேரேறரித்திவேய்பினர்பின்முன்முன்
றெகித்தலல்லின்மதிவேய்தார்சேலைபுள்ளேர்தீப
மன்னமுடிமாவீறும்வேயாடிசுடர்மகமா
மறவிமன்றூராமகிவேயும்மிதுவாமதியாழ்
புனலணையேருங்கணுமாமுதற்றூகைவைத்தினனேர்
போதன்மகித்துடிசூல்பூசல்வேல்சூன்பொய்கே
தனல்கதைமீதாஷமாஞ்சக்கரமெமன்கண்டஞ்சூ
லாநேர்வீக்கொடுமைகுறைபாசநிபமாமே.

(இ-ள்.) ஆதித்தன் நின்றநாளுக்கு ௰உ-ம் நாளும், சந்திரன் நின்ற நாளுக்கு உஉ-ம் நாளும், செவ்வாய்நின்ற நாளுக்கு ௬-ம் நாளும், புதன்நின்ற நாளுக்கு எம் நாளும், வியாழன் நின்ற நாளுக்கு சு-ம் நாளும், சுக்கிரன் நின்றநாளுக்கு ௫-ம் நாளும், சனிநின்ற நாளுக்கு அ-ம் நாளும் ராகுகேது நின்றநாளுக்கு கூ-ம் நாளும், உதைப்பாகும், சந்திரனீங்கலாக ரவிநின்ற நாளுக்கு ௫-எ--அ கச உ௬ ௰ க௫ கஅ உக உஉ உஎ ம் நாளும், சேய்நின்ற நாளுக்கு எ உக க௫ ௰-ம் நாளும், புதன் நின்றநாளுக்கு உச கஅ அ - ம் நாளும் வியாழன் நின்றநாளுக்கு கூ எ-ம் நாளும், வெள்ளி நின்ற நாளுக்கு கூ எ - ம் நாளும், சனி நின்றநாளுக்கு ௫ சு உ௰ கக

* ஆதித்தன் செவ்வாய் வியாழன் சனி இவர்களுக்கு பிரதக்ஷமாகவும் சந்திரன் புதன் சுக்கிரன் ராகு கேது இவர்களுக்கு அப்பிரக்ஷணமாகவும் எண்ணிக்காண்க,

ராகுகேது நின்றநாளுக்கு எ-ம், நாளும் வேதையாகும். ரவிவேதை கக-க்கும் பிரமம் பூகம்பம் சூலம் பூசல்படை சூனியம்பொய்கேது அனல்தண்டம் தோஷம் என்றும், செய்வேதை ௬-க்கும் சக்கரம் காலன் கண்டம், சூலம் என்றும் புதவேதை ௩-க்கு மாரணமென்றும், குரு வேதை ௨-க்குக் கொடுமைஎன்றும் வெள்ளிவேதை ௨-க்கு விரணம் என்றும், சனிவேதை ௫-க்கும் பாசபந்தனமென்றும், ராகுகேது வேதை க-க்கு நிபம் என்றும் பெயராம். எ-று. (௯)

நித்தியக்கிரகவேதை தாற்காலியக்கிரகவேதை சமுக
தெக்ஷண மாமவேதை சாங்காதியம் சமுதாயிகம்
ஆதானம் தேசம் மானதம் சாதி அபிஷேகம்.

பம்மனனுக்காவணங்தேர்மான்றலையாழ்தார்முப்
பணியனனேரீதுநித்யம்பானுவுக்குச்சுடர்கோன்
கம்மிருவான்கைமுனரத்திசைச்சிகிநேரிடமாய்க்
காண்பதவரவர்க்காயிற்றூற்கால்யங்கவுரி
சம்முகமன்றேர்வலமற்றிவையிடமப்பரிநேர்
தரல்வேதைதமுறமணவுண்சதையமுதற்சதுர்த்த
மிம்மகியோதயமாமேற்சாங்காதிசமுதா
யிகமாதானங்தேசமனமினம்ராச்சியமே.

(இ-ள்.) மதிநின்ற நாளுக்கு எ-ல் செவ்வாயும், செவ்வாய்க்கு ௬-ல் புதனும் புதனுக்கு ௫-ல் குருவும், குருவுக்கு ௬-ல் சுக்கிரனும் சுக்கிரனுக்கு அ-ல் சனியும் சனிக்கு ௯-ல் ரவியும், ரவிக்கு ௯-ல் ராகு கேதுவும், ராகுகேதுவுக்கு ௯-ல் மதியும் நிற்பது நித்திய கிரகவேதை, ரவிநின்ற நாளுக்கு க௫-ல் கேதுவும், கேதுவுக்கு கஅ-ல் புதனும், புதனுக்கு கஎ-ல் சனியும், சனிக்கு க௨-ல் குருவும், குருவுக்கு க௨-ல் ராகுவும், ராகுவுக்கு க௨-ல் செவ்வாயும், செவ்வாய்க்கு க௨-ல் மதியும், மதிக்கு க௨-ல் ரவியும் நிற்பது தாற்காலியக் கிரகவேதை.

| நக்ஷத்திரம் | சமுகவேதை | தெக்ஷணவேதை | வாமவேத |
|---|---|---|---|
| * அசுபதிக்கு | பூரம் | கேட்டை | ரோகணி |

* ஒவ்வொரு நக்ஷத்திரத்துக்கும் ௪-ம் நக்ஷத்திரம் வாமவேதையும் கக-ம் நக்ஷத்திரம் சமுகவேதையும் கஅ-ம் நக்ஷத்திரம்தெக்ஷணவேதையுமாகவரும்.

| நக்ஷத்திரம். | சமுகவேதை. | தெக்ஷணவேதை. | வாமவேதை. |
|---|---|---|---|
| பரணிக்கு | உத்திரம் | மூலம் | மிருகசிரம் |
| கார்த்திகைக்கு | அஸ்தம் | பூராடம் | திருவாதிரை |
| ரோகணிக்கு | சித்திரை | உத்திராடம் | புனர்பூசம் |
| மிருகசிரத்துக்கு | சுவாதீ | திருவோணம் | பூசம் |
| திருவாதிரைக்கு | விசாகம் | அவிட்டம் | ஆயிலியம் |
| புனர்பூசத்துக்கு | அனுஷம் | சதயம் | மகம் |
| பூசத்துக்கு | கேட்டை | பூரட்டாதி | பூரம் |
| ஆயிலியத்துக்கு | மூலம் | உத்திரட்டாதி | உத்திரம் |
| மகத்துக்கு | பூராடம் | ரேவதி | அஸ்தம் |
| பூரத்துக்கு | உத்திராடம் | அசுபதி | சித்திரை |
| உத்திரத்துக்கு | திருவோணம் | பரணி | சுவாதி |
| அஸ்தத்துக்கு | அவிட்டம் | கார்த்திகை | விசாகம் |
| சித்திரைக்கு | சதயம் | ரோகணி | அனுஷம் |
| சுவாதிக்கு | பூரட்டாதி | மிருகசிரம் | கேட்டை |
| விசாகத்துக்கு | உத்திரட்டாதி | திருவாதிரை | மூலம் |
| அனுஷத்துக்கு | ரேவதி | புனர்பூசம் | பூராடம் |
| கேட்டைக்கு | அசுபதி | பூசம் | உத்திராடம் |
| மூலத்துக்கு | பரணி | ஆயிலியம் | திருவோணம் |
| பூராடத்துக்கு | கார்த்திகை | மகம் | அவிட்டம் |
| உத்திராடத்துக்கு | ரோகணி | பூரம் | சதயம் |
| திருவோணத்துக்கு | மிருகசிரம் | உத்திரம் | பூரட்டாதி |
| அவிட்டத்துக்கு | திருவாதிரை | அஸ்தம் | உத்திரட்டாதி |
| சதையத்துக்கு | புனர்பூசம் | சித்திரை | ரேவதி |
| பூரட்டாதிக்கு | பூசம் | சுவாதி | அசுபதி |
| உத்திரட்டாதிக்கு | ஆயிலியம் | விசாகம் | பரணி |
| ரேவதிக்கு | மகம் | அனுஷம் | கார்த்திகை |

ஜென்மநக்ஷத்திரத்துக்கு ௧௬-ம் நக்ஷத்திரத்திரம் சாங்காதியம் ௧அ-சமுதாயிகம் ௧௯-ஆதானம் ௨௪-தேசம் ௨௫-மானதம் ௨௬-சாதி ௨எ-அபிஷேகம். எ-று. (௩0)

நக்ஷத்திரப்பார்வை தெக்ஷணவேதை வாமவேதை
கர்னவேதை நாற்கோணவேதை சமுகவேதை.

இயமுறந்தார்வேம்முடியாகினன் றினநோக்கயன்மு
றிறைசோதிமகமதிநாட்கெரிசுடர்கண்டார்சேய்க்

கயநடவிவிதுப்புதனேரசிதனளவுளநாட்
கவுண்டீபமவுணுகநோய்முகன்குருநாட்கதிக
முயலகனேர்தாரளவான்முதற்கலையும்பனைநேர்
மூன்றரியும்பரணிசுடர்முறமுமியமுடித்தீ
பயம்வலமற்றதுகவுணுற்கோணமற்றூனனமாய்ப்
பவுமனெமனுறல்பரிநேர்பகர்வதிதற்காமே.

(இ-ள்.) ரவிநின்றநக்ஷத்திரம் ௨௬-௧௯-௮-௭-௨௧-௧௧-ஆம் நக்ஷத்திரத்தையும், மதிநின்ற நக்ஷத்திரம் ௪-௮-௧௮-௧௫-௰-ஆம் நக்ஷத்திரத்தையும், செவ்வாய்நின்ற நக்ஷத்திரம் ௩-௧௫-௭-௮-ஆம் நக்ஷத்திரத்தையும், புதன் வியாழன் சுக்கிரன் சனிநின்ற நக்ஷத்திரங்கள் ௩-௫-ஆம் நக்ஷத்திரத்தையும் பார்க்கும் சனிநின்றநக்ஷத்துக்கு ௧௯-௧௫-ம் வியாழன் நினற நக்ஷத்திரத்துக்கு ௧௯-௰-ம் அதிகப்பார்வை. சனி சேய் நின்ற நக்ஷத்திரத்துக்கு ௫-௬-௭-௮-௧௨-௧௩-௧௪-வது நக்ஷத்திரம் தெக்ஷணவேதை ௧௭-௧௮-௧௯-௨௨-வது நக்ஷத்திரம் வாமவேதை ௨-௧௫-௧௬ வது கர்னவேதை ௨௬-௨௧-௩-௨௰-வது நாற்கோணவேதை ௪-௯-௰-௧௧-௨௩-௨௪-௨௫-௨௭-வது நக்ஷத்திரம் சமுகவேதை. எ-று. (௧௧)

நக்ஷத்திரங்களுக்கு இருப்பிடம் நக்ஷத்திர தேசம்.

பரிமுதலூர்தருவனங்காடிச்சால்கட்டிலின்கீழ்
பாகனிலாத்தேர்க்கீழ்நெற்குதிர்மனைகுப்பைநெல்
லரியலதுகதிர்வெறும்வீடயங்கரைசெய்பருத்தி
யங்கணம்பாழ்வனங்கடைலாயங்கூரையாடை
நிருமலஞ்செய்துறைகோவிலாலைசெக்குமறுகு
நெருப்பிடத்தில்பூஞ்சோலைநிகழ்த்துவதீறளவு
மருவுமிடப்பேர்க்கிதன்மேற்றேசமதற்கதன்பேர்
வைத்ததற்கக்ஷரப்பெயராய்வழுத்துகமாமுதற்கே.

(இ-ள்.) அசுபதிக்கு ஊர், பரணிக்கு தரு கார்த்திகைக்கு வனம், ரோகணிக்கு காடிச்சால், மிருகசிரத்துக்கு கட்டிலின்கீழ், திருவாதிரைக்கு நிற்குந்தேரின்கீழ், புனர்பூசத்துக்கு நெற்குதிர், பூசத்துக்கு மனை, ஆயிலியத்துக்கு குப்பை, மகத்துக்கு நெல்லரி அல்லது நெற்கதிர், பூரத்துக்கு வெறும்வீடு, உத்திரத்துக்கு ஜெலம், அத்தத்துக்கு ஜெலக்கரை, சித்திரைக்கு வயல், சோதிக்குப் பருத்தி, விசாகத்துக்கு முற்றம், அனுசத்துக்கு பாழ்வனம், கேட்டைக்கு கடை, மூலத்துக்கு குதிரைலாயம், பூராடத்துக்கு கூரை, உத்திராடத்துக்கு வண்ணான்துறை, திருவோணத்துக்கு கோவில், அவிட்டத்துக்கு ஆலை, சதையத்துக்கு செக்கு, பூரட்டாதிக்கு தெரு, உத்திரட்டாதிக்கு அக்

கினிமூலேக்கிரகம், ரேவதிக்கு பூஞ்சோலே இருப்பிடமாம். நக்ஷத்திர நாமங்களிற் சொல்லியபடி அந்தந்த அக்ஷரங்களே முதலில்வைத்து அசுபதிமுதலானவற்றிற்குத் தேசம் சொல்லுக. எ-று. (கஉ)

சுபநக்ஷத்திரம் அசுபநக்ஷத்திரம் மகாதிசை
நக்ஷத்திரம் அபுத்தமூலம் இருகண்
ணுள்ளநக்ஷத்திரம் ஒருகண்ணுள்
ள நக்ஷத்திரம் குருட்டு
நக்ஷததிரம்.

மாநீலந்தாரீறத்தேரிரவிமாலாய்
வருமனனேர்சுபமகபமாமுடிபுட்கேட்டை
கோநாவாய்துர்க்கைபயருகுமுன்போலனனேர்
குருகின்முதற்கனலிரண்டுக்குளதபுத்தமூல
மானேரென்றுமதிகனலரவுபொன்சுன்னருண
னனுவரவுசிதனளவத்திசைச்சொல்லரிப்பேர்
தானுர்நாட்கிடமுன்மூன்றிதன்மேனுன்கலதந்
தகமொருகண்ணிருகணெனச்சாற்றுதலவ்வியல்பே.

(இ-ள்.) செவ்வாய் அசுபதி, புதன் அனுடம், வியாழம் பூசம், வெள்ளிரேவதி, சனிரோகணி, நாயிறு அத்தம், திங்கள் திருவோணம், இவை சுபநக்ஷத்திரம் செவ்வாய் உத்திராடம், புதன்விட்டம், வியாழம் கேட்டை, வெள்ளி பூராடம், சனி ரேவதி, நாயிறு பரணி, திங்கள் சித்திரை, இவை அசுபநக்ஷத்திரம் மூலம் முதல் நாழிகை முதல் இரண்டுநாழிகைவரைக்கும் அபுத்தமூலம் என்றுசொல்லப்படும் ரவிக்கு உத்திரமும், மதிக்கு அத்தமும், சேய்க்கு சித்திரையும், இராகுவுக்கு சோதியும், குருவுக்கு விசாகமும், சனிக்கு அனுசமும், புதனுக்கு கேட்டையும், கேதுவுக்கு மூலமும், சுக்கிரனுக்கு பூராடமும் மகாதிசை நக்ஷத்திரமாம் ரவிநின்ற நக்ஷத்திரமும், அதற்கு முன் மூன்றும்பின் மூன்றும், ஆக ஏழுங் குருட்டுநக்ஷத்திரம். இதன்மேல் முன் நாலு, பின்நாலு நக்ஷத்திரமும் ஒருகண்ணுள்ள நக்ஷத்திரம். மற்றவையெல்லாம் இருகண்ணுள்ள நக்ஷத்திரம். எ-று. (கங)

நக்ஷத்திரரோகம் நக்ஷத்திர அவமிருத்து
அனற்சிகை குருதோஷம்.

அவ்வகிவாத்தியமுமடுப்பவுணருமால்குளமு
மற்கிறைதீபமுநேர்முன்னடிமுதலாய்ரோக

மிவ்வடிதொட்டுளமூன்றதவமிருத்தப்பரிநே
    ரேழரைக்கேழரையந்தத்தைந்திருபத்தொன்றேற்
கவ்வுவதொன்பானிவைநேர்சோதிவரைமுன்பின்
    காண்பதுவெட்டிருபதின்மேற்கதுவுதல்பத்திவைநேர்
வவ்விலனற்கிகையிதுவாப்பிரதமையிவ்விடையின்
    மருவும்விடகடிகையினுட்குகுமலையத்தவனே.

(இ-ள்.) ஆயிலியம் உத்திரட்டாதியின் முதற்பாதமும், பரணி மூலத்தின் உ-ம் பாதமும், திருவோணம் உத்திரத்தின் ௩-ம் பாதமும், மிருகசிரம் சோதியின் ௪-ம் பாதமும் ரோகம் ஆயிலியம் உத்திரட்டாதியின் ௩-ம் பாதமும், பரணி மூலத்தின் ௪-பாதமும், அவிட்டம் அத்தத்தின் முதற்பாதமும், திருவாதிரை விசாகத்தின் உ-ம் பாதமும் அவமிருத்து அசுபதிரோகணி புனர்பூசம் மகம்அத்தத்தில் ௭இ நாழிகைக்குமேல் ௭இ நாழிகையும், பரணி மிருகசிரம் பூசம் பூரம் சித்திரையில் ௫௰-க்குமேல் ௫-நாழிகையும், கார்த்திகை திருவாதிரை ஆயிலியம் உத்திரம் சோதியில் உக-க்குமேல் ௯-நாழிகையும், விசாகம் மூலம் திருவோணம் பூரட்டாதில் ஆதி அ-நாழிகையும், அனுசம் பூராடம் அவிட்டம் உத்திரட்டாதியில் இறுதி அ-நாழிகையும், கேட்டை உத்திராடம் சதையம் ரேவதியில் உ௰-க்குமேல் ௰-நாழிகையும், அனற்கிகை அமாவாசை அந்தியமும், பிரதமை ஆதியுமாக வரும் நக்ஷத்திரத்தில் விடகடிகை பொருந்தில் அது குகு தோஷம் பொதியவரையினையுடைய அகத்தியனே. ௭-று. (கச)

நக்ஷத்திரயோகம் ஏகார்க்களம் ஆகுலம்.

வனசுன்முதல்முறநீர்புள்ளீ பிரதம்பூசம்
    வாவியிவைதொட்டுதையமானதினத்தளவா
கினதையெழுவர்க்கீதல்யோகமிருத்தைதகே
    டிறலமிர்தசுபசித்தபரிகமிருவினைப்பேர்
தனதுறனஞ்சொருவரைநேர்நிறுத்தியதிற்குறுக்காய்ச்
    சாற்றும்வரைபதின்மூன்ருய்த்தரித்தல்சிரமாகக்
கனன்முதலூழ்க்கெதிர்நாளில்யாருறினுமேகார்க்
    களமிருநாழிகைநாளீருகுலமாதவனே.

(இ-ள்.) நாயிறில் விசாகம், திங்களில் பூராடம், செவ்வாயில் அவிட்டம், புதனில் ரேவதி, வியாழனில் ரோகணி, வெள்ளியில் பூசம், சனியில் உத்திரம், ஆகிய இந்த நக்ஷத்திரம் தொட்டு நாளதுநக்ஷத்திரம்வரை யெண்ணிக்கண்ட தொகையை ௭-க்குக்கொடுக்க வந்த

மிச்சம் ௧-ஆகில் இருத்தையோகம் ௨-ஆகில் நாசம் ௩-ஆகில் மரணம் ௪-ஆகில் அமிர்தம் ௫-ஆகில் சுபம் ௬-ஆகில் சித்தம் ௭-ஆகில் பரிகம், அசுப சுபங்கூடில் விஷயோகம் ஓர் வரையினை நேர்நிறுத்தி குறுக்காக ௧௩-வரைகீறி உச்சிவரையில், கார்த்திகைமுதலாக நக்ஷத்திரங்களை வைத்து ரவிநின்ற க்ஷேத்திரவரைக்கு, எதிர்வரை நக்ஷத்திரத்திற் கிரகங்கள் நிற்கில் அது ஏகார்க்களம் நக்ஷத்திர அந்தியம் ௨-நாழிகையும் ஆகுலம். எ-று. (௧௫)

### ஏகார்க்களசக்கரம்.



நக்ஷத்திர தாத்கால ஜீவாஜீவன்சூலம் மகாசூலம்
சலாவேதை பாலுள்ள நக்ஷத்திரம் மலடு அல்
லது வயிரமுள்ள நக்ஷத்திரம்-

தபனனுறுநாட்கிடமொன்றேழேகநான்காய்ச்
சாவதரைசாதலுயிர்சாற்றுவர்மற்றவைக்குஞ்
சுபர்விதுநேர்நாட்சூலம்பவர்க்குமகாசூற்பேர்
சுசிமுதனலேழ்வரைநான்முகத்திடமேற்றெடிலா
முபயவரைகோணுறமற்றைறவரைமுற்போல
வுறிலதுசலாவேதையிவர்களுநறிலுருட்டி
முபயமுதனுழிமுதன்மூன்றுதைநேராறு
மொழிவதிப்பாலப்பாற்பன்மூன்றுமற்ருகுவதே.

(இ-ள்.) ரவிநின்ற நக்ஷத்திரமும் அதற்கு இடம் வலம் ஒவ்வொன்றும் மாரணம். இதன்மேல் இடம் வலம் எவ்வேழு அர்த்தப்பிராணன் இதன்மேல் இடம் வலம் ஒவ்வொன்று மாரணம். இதன்மேல் இடம் வலம் நந்நான்கு முழுச்சீவன். கிழமேல் எ-வரையும் தென்வடல் எ-வரையுங்கீறி இடப்பாலுச்சவரையில் கார்த்திகை முதலாக நக்ஷத்திரங்களை வைத்து 'மதிநின்ற நக்ஷத்திர வரைக்கு எதிர்வரை நக்ஷத்திரத்தில் சுபர்நிற்கில் சூலம் பாபர்நிற்கில் மகாசூலம் கிழமேல் ரு-வரையும் தென்வடல் ரு-வரையுமாகக்கீறி கோண் நிலாவ இரண்டுவரைகீறி இடப்பா லுச்சவரையில் கார்த்திகைமுதலாக நக்ஷத்திரங்களைவைத்து மதிநின்ற நக்ஷத்திரவரைக்கு எதிர்வரைநக்ஷத்திரத்தில் கிரகங்கள் நிற்கில் சலாவேதை ரோகணி கார்த்திகை பூராடம் உத்திராடம் திருவோணம் பூரட்டாதி உத்திரட்டாதி ரேவதி பூசம் ஆயிலியம் மகம் பூரம் உத்திரம் அத்தம் இவை கச-ம் பாலுள்ள நக்ஷத்திரம். அசுபதி பரணி மிருகசிரம் திருவாதிரை புனர்பூசம் சித்திரை சோதி விசாகம் அனுசம் கேட்டை மூலம் அவிட்டம் சதையம் இவை கரு-ம் வயிரமுள்ள நக்ஷத்திரம். எ-று. (கசு)

சூலம் மகாசூலசக்கரம்.




சலாவேதைசக்கரம்.



கீழ் அல்லது பூமிநிலை நக்ஷத்திரம் உச்சநிலை நக்ஷத்திரம் இடைநிலை நக்ஷத்திரம் ஜெலசுஷ்க நக்ஷத்திரம் கும்பபூர்த்தி.

ஆகுவதின்பாற்கோணென்பதுமதிக்கோண்மூன்று
மல்லதுநேர்கீழ்மேன்மற்றதுவாமம்புலிமால்
வாகனன்கைமுதனுன்குமால்கணுக்கீர்மூன்று
மாகவிவையீராறுமறலெனன்மற்றதுவாங்
கோகனகனுற்றிசைநேர்குறித்தவரைக்கிடையிற்
குறுக்குயரமும்மூனருய்க்குறுகமுடிக்கனலீ
தேகமுதற்றிசை நான்குமிடையிலிருமூன்று
மிகழ்தலிதுசாற்பூர்த்திப்பெயரிதுவென்பர்களே.

(இ-ள்.) பரணி பூரம் பூராடம் அசுபதி மகம் மூலம் கார்த்திகை உத்திரம் உத்திராடம் இவை கூ-ம் கீழ்நிலை நக்ஷத்திரம். மிருகசிரம் சித்திரை அவிட்டம் இவை ௩-ம் உச்சநிலை நக்ஷத்திரம் ரோகணி அத்தம் திருவோணம் திருவாதிரை சோதி சதையம் புனர்பூசம் விசாகம் பூரட்டாதி பூசம் அனுசம் உத்திரட்டாதி ஆயிலியம் கேட்டை ரேவதி இவை கடு-ம் இடைநிலை நக்ஷத்திரம் மிருகசிரம் கேட்டை அத்தம் சித்திரை சோதி விசாகம் திருவோணம் அவிட்டம் சதையம் புனர்பூசம் பூசம் ஆயிலியம் இவை கஉ-ம் ஜெலநக்ஷத்திரம் அசுபதி பரணி கார்த்திகை ரோகணி திருவாதிரை மகம் பூரம் உத்திரம் அனுசம் மூலம் பூராடம் உத்திராடம், பூரட்டாதி உத்திரட்டாதி ரேவதி இவை கடு-ம் சுஷ்கநக்ஷத்திரம் கிழமேல் ஒருவரையும் தென்வடல் ஒருவரையுமாகக்கீறி கோண் நிலாவ கூ-வரைநேர் குறுக்காகக்கீறி உச்சிவரையில் கார்த்திகை முதலாக நக்ஷத்திரங்களை வைத்து ரவி நின்ற நக்ஷத்திரத்திசை வரை நக்ஷத்திரத்தில் கிரகமிருக்கில் நாற்றிசை நக்ஷத்திரமும் விலக்கப்படுவன கோண்வரை கூ-னுமுள்ள நக்ஷத்திரங்களில் ரவியும் கிரகங்களுநங் கலக்கில் அக்கோண்வரை நக்ஷத்திரம் கூ-ம் விலக்கப்படுவன இது கும்பபூர்த்தி. எ-று. (கள)

கும்பபூர்த்திச் சக்கரம்.



### வேதக்கயிறு சுமங்களாச்சு ஸ்திரீதீர்க்கப்பொருத்தம்.

பரைக்கோண்மாறிக்கீறிக்குறுக்கொருநான்காயப்
பாற்கோணுநந்நான்காய்ப்பற்றுவரைக்கிடப்பாற்
சிரப்பான்மாவைத்திருவர்தினமுமொருவரையிற்
சேருதலாகாதிதுவேதக்கயிறுசேஷ
னரிக்கோண்டார்நீர்க்கோண்டிப்படிக்கோண்மாழ்யாழ்க்கோ
ணடிமருங்குலகடுகளமம்புலிக்கோண்சிரசாய்ப்
பொருத்தாண்பெண்ணுளொருகோணுறிலவரச்சென்னப்
புகல்பதின்மூன்றிவணுண்மேற்புலலிவடீர்க்கமுமே.

(இ-ள்.) முக்கோணம் முனைமேலாகக்கீறி குறுக்காக நாலுவரை கீறி இருகோணங்களுங்குமேலாக நந்நான்கு வரைகீறி இடப்பாலுச் சவரையில் அசுபதிமுதல் நக்ஷத்திரங்களைவைத்து ஆண்பெண் நக்ஷத்திரம் ஒருவரையில் ஆகாது இது வேதக்கயிறு ஆயிலியம் கேட்டை ரேவதி அசுபதி மகம் மூலம் இவை பாதக்கயிறு. பூசம் அனுசம் உத்திரட்டாதி பரணி பூரம் பூராடம் இவை இடைக்கயிறு. கார்த்திகை உத்திரம் உத்திராடம் புணர்பூசம் விசாகம் பூரட்டாதிஇவை வயிற்றுக்கயிறு ரோகணி அத்தம் திருவோணம் திருவாதிரை சோதி சதையம் இவைகண்டக்கயிறு மிருகசிரம் சித்திரை அவிட்டம் முடிக்கயிறு ஆண் பெண் நக்ஷத்திரம் ஒருகயிற்றில்வரில் ஆகாது. பெண் நக்ஷத்திரந்தொட்டு ௧௩ நக்ஷத்திரத்துக்குமேல் புருஷன் நக்ஷத்திரம் வரில் ஸ்திரீதீர்க்கம். எ-று. (௧௮)

வேதக்கயிறு. சுமங்களாச்சு.



மாகேந்திர நட்சேத்திரம் நட்சேத்திரமண்டலம்

பாவதினம்.

மூம்மூன்றுயனுசெனனத்தைந்துதரமேறின்
மொழிவதுமாகேந்திரம்யாழ்மூலமெமன்முரசீ
றம்மான்கம்மும்மால்வேய்தேர்புலளியவசித்
தாடியுமாவகிபுள்வெயிலான்சுடராடையுநே
ரிம்மூன்றுமண்டலநீர்மாகேந்த்ரம்வாயு
வென்பதனன்மற்றதற்காமிதமிலருக்கிடைசேர்
பம்மாம்ஸவூணருறுந்தினமாதம்வருடம்
படுபொழுதீறுபயமைமூண்டுப்பவமாகுவதே.

(இ-ள்.) பெண் நட்சேத்திரத்துக்குமேல் ச-எ-ம-கஉ-கசு-கசு-உஉ-உடு புருடன் நாளாகில் அதுமாகேந்திரம். திருவாதிரை மூலம்சதையம் உத்திரட்டாதி ரேவதி பூராடம் மிருகசிரம் இவை எ-ம் வருணமண்டலம் திருவோணம் புனர்பூசம் ரோகணி அனுசம் கேட்டை அவசித்து உத்திராடம் இவை எ-ம் மாகேந்திர மண்டலம் அசுபதி ஆயிலியம் அவிட்டம் அத்தம் உத்திரம் சோதி சித்திரை இவை எ-ம் வாயுமண்டலம். பரணி கார்த்திகை பூசம் மகம் பூரம் விசாகம் பூரட்டாதி இவை எ-ம் அக்கினிமண்டலம் பாவர் மத்தியதினமும், பாவரிருக்கிற தினமு மதாந்தியம் உ-தினமும், வருடாந்தியம் கடு-தினமும் பாவதினம். (கசு)

நட்சேத்திரவடிவு நட்சேத்திரத்தொகை

நட்சேத்திரதிசைச்சூலம்.

மாச்சிரசவ்வடுப்புகற்றையூற்றுறேங்காய்க்கண்
மண்மணியாவணம்புடற்பூவம்மிநுகங்கைமான்
கோச்சுடரம்முறமுடப்புல்லீட்டிபொற்காளங்கோல்
குவித்ததவிட்டுக்கூட்டங்கொத்தோடத்துருவா
* மூச்சிவைமுக்குளநாற்கான்மற்றதுநேர்வேய்மா
முறந்தீயாறன்மதிமான்மூன்றீராறத்தேர்
தேச்சுடராடைக்கேகம்வீப்பன்மறைமற்றுந்
திசைச்சூற்புட்கோன்மாறேர்தையென்றுத்திரமே.

---

* மூச்சிவை எதுகைநோக்கிநீண்டது.

(இ-ள்.) அசுபதி ௬-ம் குதிரைத்தலைபோல், பரணி ௩-ம் அடுப்பு, கார்த்திகை ௬-ம் கற்றை, ரோகணி ௫௨-ம் ஊற்றால், மிருகசிரம் ௩-ம் தேங்காய்க்கண் திருவாதிரை ௧-ம் இராசமணி, புனர்பூசம் ௬-ம் கடைவீதி, பூசம் ௪-ம் புடலம்பூ, ஆயிலியம் ௪-ம் அம்மி, மகம் ௪-ம் நுகம், பூரம் உத்திரம் ௪-ம் கட்டிற்கால் அத்தம் ௫-ம் கைத்தலம், சித்திரை ௧-ம் புலிக்கண், சோதி ௧-ம் தீபம் விசாகம் ௬-ம் சுளகு, அனுசம் ௪-ம் முடப்பனை, கேட்டை ௪-ம் சட்டி மூலம் ௯-ம் கொற்காளம், பூராடம் உத்திராடம் ௪-ம் கட்டிற்கால், திருவோணம் ௩-ம் முழக்கோல், அவிட்டம்பலவுந் தவிட்டுக்கூட்டம், சதையம் ௪-ம் பூங்கொத்து, பூரட்டாதி உத்திரட்டாதி ௪-ம் கட்டிற்கால், ரேவதி ௪-ம் ஓடம் அவிட்டம் கேட்டை கீழ்த்திசைச்சூலம், அசுபதி திருவோணம் தென்றிசைச் சூலம் ரோகணி பூசம் மேற்றிசைச்சூலம் அத்தம் உத்திரம் வடதிசைச்சூலம். எ-று. (௨௦)

சென்மாதி நட்சேத்திரப்பெயர் அவற்றிற்கதிபர்

நட்சேத்திரகுலம்.

என்றருகன்பணிகுருக்கேதிந்தசிதன்சிதன்சேய்க்
கிகத்துதயமுதற்சென்மசம்பவிபச்சேமம்
பின்றருப்ரத்யாரமச்சாதகம்வதைமித்திரமிப்
பேர்ப்பரமமிவைநேர்க்காங்குலப்பேர்பேசிடிற்றீ
யொன்றுமைத்ரயமுந்தேர்புல்லோடநுகமும்முன்
னும்பரவசித்தினனுந்தாரொடுத்ரங்களுஞ்சே
மன்றினக்கோண்குருகுமதிக்கோண்மனுமற்றதுநால்
வரசுரர்வேடர்கீழ்மேல்வாரமதிப்பதுவே.

(இ-ள்.) ஜென்மநட்சேத்திரத்துக்குப்பெயர் ஜென்மம் அதற்கு அதிபதி ஆதித்தன், ௨-வதுக்கு சம்பத்து அதிபதி புதன். ௩-வதுக்கு விபத்து அதிபதி ராகு ௪-வதுக்கு க்ஷேமம் அதிபதி வியாழன். ௫-வதுக்குப்பிரத்யாரம் அதிபதி கேது. ௬-வதுக்குச் சாதகம். அதிபதி சந்திரன் எ-வதுக்கு வதை அதிபதி சனி. அ-வதுக்கு மயித்திரம் அதிபதி சுக்கிரன் ௯-வதுக்குப் பரமவயித்திரம் அதிபதி செவ்வாய். இவற்றை அனுதிரி ஜென்மங்களுக்கும் நேராகவைத்துக்கொள்க கார்த்திகை பூரத்திரையம் ௪-ம் பிரமகுலம். ரோகணி அனுசம் ரேவதி மகம் ௪-ம் க்ஷத்திரியகுலம் அசுபதி புனர்பூசம் அவசித்து அத்தம் ௪-ம் வைசியகுலம் பூசம் உத்திரத்திரையம் ௪-ம் சூத்திரகுலம் திருவாதி

ரை சோதி சதையம் மூலம் ௬-ம் இராட்சதகுலம் மிருகசிரம் சித்திரை அவிட்டம் கேட்டை ௬-ம் வேடர்குலம் பரணி ஆயிலியம் திருவோணம் விசாகம் ௬-ம் நீசகுலம். இதன்மேல் வாரசரித்திரம் சொல்லுவோம். எ-று. (உக)

நட்சேத்திரசரித்திரப்படலம்

முற்றிற்று.

ஆகப் படலம் மூன்றுக்குக் கவி உஅ.

---

## வார சரித்திரப் படலம்.

### விதிலபிதமுகூர்த்தம்.

---

மதிபொனுஞ்சுன்மாலினனும்புகர்யுதனுஞ்சிதனே
மன்னிலதுமேதைகுருவற்றதும்பெண்ணரிமா
னதிபெருமாதவனிலதும்பகற்கிரவுக்கான்மீ
னரிக்கரசருஞ்சிலைசாலசப்பதிப்பேரலது
முதுமகனும்வெயிறாதனிற்றதுங்கோல்விலரு
மூத்தவனில்லலரிச்சியும்மொழிதன்முடவோன்
விதுவுமதிசெயகாலமற்றதுநாயிறுநேர்
வேளையளவிவ்விபரம்விதிலபிதத்தியல்பே.

(இ-ள்.) ஆதிவாரம்-உ-௬-௫-௬-ம் சாமமும் திங்கள் க-௫-௬-எ-அ-ம் சாமமும் செவ்வாய் ௬-௫-எ-அ-ம் சாமமும் புதன் உ-௩-௪-௬-எ அ-ம் சாமமும் வியாழன் க-௪-எ-அ-ம் சாமமும் வெள்ளி ௩-௫-எ-அ-ம் சாமமும் சனி உ-௫-௬-எ-அ-ம் சாமமும் அதிசெயமுகூர்த்தம் மற்றச்சாமங்கள் அபசெயமுகூர்த்தம். இவைபகற்காலத்துக்காம் ஆதித்தவாரம க-உ-௬-ம் சாமமும் திங்கள் உ-௪-௬-அ-ம் சாமமும் செவ்வாய் ௪-௬-எ-ம் சாமமும் புதன். உ-௬-எ-சாமமும் வியாழன். க-௪-௫-௬-எ-ம் சாமமும், வெள்ளி க-உ-௪-௬-எ-ம் சாமமும் சனி ௩-௪-எ-அ-ம் சாமமும். அதிசெயமுகூர்த்தம் மற்றச்சாமங்கள் அபசெயமுகூர்த்தம் இவை இராத்திரிக்காம் இவற்றிற்கெல்லாம் ஒருசாமம் ௩௰ நாழிகையாகக்கொள்க. எ-று. (உஉ)

மாசத்துருவம் வருடத்துருவம்

தினத்துருவம் தன்னியநாள்.

பரணிகுருகுதையாடிகண்முடியாழ்மூலம்
பரன்பனைதாப்பார்பநழியடுசுரர்கம்ருபருகக்ன்

சுரர்படிராவாடைகலைதோகைபுற்புள்ளிவைநேர்
துரகமுதலாயிரண்டாய்ச்சொல்லொருமாசமுமாய்
வருடமுமைப்பசிமுதலாய்க்கெதநடப்போடுபய
மானதெழுவர்க்கியவரன்மாதத்துதையந்
தருதினநேரினனளவிம்முத்தொகைசொன்மிகிலேழ்
தள்ளிதுவென்மாதமிரண்டானதன்யநாட்கே.

(இ-ள்.) சித்திரைமாதத்துக்கு ௨-௧௯-வைகாசிக்கு ௨-௨௧-ஆனிக்கு எ-௨௧-ஆடிக்கு ௬-௧௯-ஆவணிக்கு ௬-௧௭-புரட்டாசிக்கு அ-௨௫-ஐப்பசிக்கு ௨-௧௯-கார்த்திகைக்கு எ-௧௩-மார்கழிக்கு எ-௨௫-தைக்கு ௨-௧௪-மாசிக்கு ௧௪-௨௩-பங்குனிக்கு ௧௭-௨௩-இவைமாசத்துருவம். ஐப்பசி வருடாதியாக நடப்புடனே கெதமுங்கூட்டி இதனுடன் ௨-ம் கூட்டி ஏழுக்குக்கொடுக்க வந்தசேடம் வருடத்துருவம் மாதம்பிறந்தவாரமுதல் நாயிறுவரை எண்ணிக்கண்டதொகை தினத்துருவம் இந்த ௩-துருவமுங்கூட்டிச் சொல்வது தன்னியநாள் இத்தொகை நாளதுமாதாந்தியத்தெய்திக்கு அதிகப்படில் எவ்வேழுதள்ளிச்சொல்லுக. இம்படித்தன்னியநாள் மாசம் இரண்டுதரம் வரும். இவைபகற்காம். எ-று. (௨௩)

வாரசூனியம் முகூர்த்தத்திரயம்
சுபவாரம் அசுபவாரம்.

நாளிறைநேர்முறங்கனலேர்நாழிபுனனமனு
நாரிமன்மாலந்தகனுநாவாய்தீபுண்மா
வேள்பிதிர்தேட்கடையிரவும்வேய்புனல்பாரோடம்
விதுவும்விதுபுள்புன்முறம்வெயில்குடந்தேரும்வேய்
கோளிறைதார்குளமீறுங்கோனேரன்முறமற்
கோன்பணியுமிவைவாரசூன்யமலர்க்கோமான்
வாளுதயத்திரயம்பிராதவிசினத்தூள்கவிபொன்
மான்மதிநன்கவமவரிற்சரோருகனல்லவனே.

(இ-ள்.) திங்களில் விசாகம் கார்த்திகை மகம் பூரட்டாதி பூராடம் சதையமும், செவ்வாயில் அவிட்டம் கேட்டை திருவோணம் சதையமும். புதனில் ரேவதி கார்த்திகை அவிட்டம் அசுபதி திருவோணம் மூலம் பரணியும் வியாழனில் புனர்பூசம் பூராடம் ரோகணி ரேவதி மிருகசிரமும், வெள்ளியில் மிருகசிரம் அவிட்டம் அனுசம் விசாகம் அத்தம் பூசம் ரோகணியும், சனியில் புனர்பூசம் அத்தம் பூசம் உத்திரம் ரேவதியும், நாயிறில் கேட்டை மகம் பரணி விசாகம் மிருகசிரம் அனுசமும் வரில் வாரசூனியமாம் சூரியோதயம் பிராதகாலமுகூ

ர்த்தம், மத்தியானம் அவிச்சின் முகூர்த்தம், அஸ்தமனம் கோதூளி முகூர்த்தம இவை முகூர்த்தத்திரயமாம் வெள்ளி வியாழன் புதன் திங்கள் இவை சுபவாரம் மற்றவை அசுபவாரம். இவற்றுள் நாயிறு உத்தமம். எ-று. (உச)

காலன் அர்த்தப்பிரகரன் எமகண்டன் குளிகன்.

இவர்கள் உதயமாகுங்காலம் ஓரை வேலை.

சரோருகன்மால்பொன்னசிதனுக்குளநாற்றனையர்
தாதையுதையத்திருநாழிகையுதையத்தவராய்
விரோதகெதியாய்க்கடிகைநான்காய்மேன்மேலு
மேற்கொளுவரற்கிவைபோன்மேயதொருநான்காம்
விரோதயமேல்வருவதுதொட்டுரைத்திடுவேரோரை
வாரமுதனேராறும்வாரம்நடத்துவராற்
சிரோதயநேர்தாமதசாத்திகமொடுராசதமாந்
தெசக்காலமுக்காலுற்றிடுங்கனல்சொற்றிடலே.

(இ-ள்.) நாயிற்றுக்கிழமை பகல் ௨-ம் நாழிகையிலும் சனி ௬-லும் வெள்ளி ௰-லும் வியாழம் ௧௪-லும் புதன் ௧௮-லும் செவ்வாய் ௨௨ லும் திங்கள் ௨௬ லும் காலன் உதையமாவன் புதன்கிழமைபகல் ௨ம் நாழிகையிலும் செவ்வாய் ௬ லும் திங்கள் ௰லும் நாயிறு ௧௪ லும் சனி ௧௮லும் வெள்ளி ௨௨ லும் வியாழன் ௨௬ லும் அர்த்தப்பிரகரன் உதையமாவன, வியாழக்கிழமை பகல் ௨ம் நாழிகையிலும் புதன் ௬ லும் செவ்வாய் ௰லும் திங்கள் ௧௪ லும் நாயிறு ௧௮லும் சனி ௨௨ லும் வெள்ளி ௨௬ லும் எமகண்டகன் உதையமாவன் சனிக்கிழமை பகல் ௨ம் நாழிகையிலும் வெள்ளி ௬ லும் வியாழன் ௰லும் புதன் ௧௪ லும் செவ்வாய் ௧௮லும் திங்கள் ௨௨ லும் நாயிறு ௨௬ லும் குளிகன் உதையமாவன் இவைபகலுக்காம் புதன்கிழமை ராத்திரி ௨ம் நாழிகையிலும் வெள்ளி ௨௨ லும் வியாழன் ௨௬ லும் காலன் உதையமாவன். சனிக்கிழமை ராத்திரி ௨ம் நாழிகையிலும் வெள்ளி ௬ லும் வியாழன் ௰லும் புதன் ௧௪ லும் செவ்வாய் ௧௮லும் திங்கள் ௨௨ லும் நாயிறு ௨௬ லும் அர்த்தப்பிரகரன் உதையமாவன். நாயிற்றுக்கிழமை ராத்திரி ௨ம்நாழிகையிலும் சனி ௬ லும் வெள்ளி ௰லும் வியாழன் ௧௪ லும் புதன் ௧௮லும் செவ்வாய் ௨௨ லும் திங்கள் ௨௬ லும் எமகண்டகன்உதையமாவன் செவ்வாய்க்கிழமை ராத்திரி ௨ம் நாழிகையிலும் திங்கள் ௬ லும் நாயிறு ௰லும் சனி ௧௪ லும் வெள்ளி ௧௮லும் வியாழன் ௨௨ லும் புதன் ௨௬ லும் குளிகன் உதையமாவன் இவைராத்திரிக்காம் நாயிற்

றுக்கிழமை உதையமுதல் க-வது சூரியஓரை, உ-வது சுக்கிரஓரை, ௩-வது புதஓரை, ௪-வது சந்திரஓரை, ௫-வது சனிஓரை, ௬-வது வியாழஓரை, ௭-வது செவ்வாய்ஓரை, ௮-வது சூரியஓரை, ௯-வது சுக்கிரஓரை, ௰வது புதஓரை, ௰கவது சந்திரஓரை, ௰உவது சனிஓரை, க௩வது வியாழஓரை, க௪-வது செவ்வாய்ஓரை க௫வது சூரியஓரை, க௬வது சுக்கிரஓரை, க௭-வது புதஓரை, க௮-வது சந்திரஓரை, க௯-வது சனிஓரை, உ௰-வது வியாழஓரை, உக-வது செவ்வாய்ஓரை, உஉ-வது சூரியஓரை, உ௩-வது சுக்கிரஓரை, உ௪-வது புதஓரை, திங்கட்கிழமை உதையம் க-வது சந்திரஓரை, உ-வது சனி ஓரை, ௩-வது வியாழஓரை, ௪-வது செவ்வாய் ஓரை, ௫-வது சூரியஓரை, ௬-வது சுக்கிரஓரை, ௭-வது புதஓரை, ௮-வது சந்திரஓரை, ௯-வது சனி ஓரை, ௰-வது வியாழ ஓரை, கக-வது செவ்வாய் ஓரை கஉ-வது சூரியஓரை, க௩-வது சுக்கிரஓரை, க௪-வது புதஓரை, க௫-வது சந்திரஓரை, க௬-வது சனிஓரை, க௭-வது விழாழஓரை, க௮-வது செவ்வாய்ஓரை, க௯-வது சூரியஓரை, உ௰-வது சுக்கிரஓரை, உக-வது புதஓரை, உஉ-வது சந்திரஓரை, உ௩-வது சனிஓரை, உ௪-வது வியாழஓரை, செவ்வாய்க்கிழமை உதையம் க-வது செவ்வாய்ஓரை, உ-வது சூரியஓரை, ௩-வது சுக்கிரஓரை, ௪-வது புதஓரை; ௫-வது சந்திரஓரை, ௬-வது சனிஓரை, ௭-வது வியாழஓரை, ௮-வது செவ்வாய்ஓரை, ௯-வது சூரியஓரை, ௰வது சுக்கிரஓரை, கக-வது புதஓரை, கஉ-வது சந்திரஓரை, க௩-வது சனிஓரை, க௪-வது வியாழஓரை, க௫-வது செவ்வாய்ஓரை, க௬-வது சூரியஓரை, க௭-வது சுக்கிரஓரை, க௮-வது புதஓரை, க௯-வது சந்திரஓரை, உ௰-வது சனிஓரை, உக-வது வியாழஓரை, உஉ-வதுசெவ்வாய்ஓரை, உ௩-வது சூரியஓரை, உ௪-வது சுக்கிரஓரை, புதன்கிழமைஉதையம் க-வது புதஓரை, உ-வது சந்திரஓரை, ௩-வது சனிஓரை, ௪-வது வியாழஓரை, ௫-வது செவ்வாய்ஓரை, ௬-வது சூரியஓரை, ௭-வது சுக்கிரஓரை ௮-வது புதஓரை, ௯-வது சந்திரஓரை ௰-வது சனிஓரை கக-வது வியாழஓரை, கஉ-வது செவ்வாய்ஓரை, க௩-வது சூரியஓரை க௪-வது சுக்கிரஓரை க௫-வது புதஓரை, க௬-வது சந்திரஓரை க௭-வது சனிஓரை, க௮-வது வியாழஓரை, க௯-வது செவ்வாய்ஓரை, உ௰-வது சூரியஓரை, உக-வது சுக்கிரஓரை, உஉ-வது புதஓரை, உ௩-வது சந்திரஓரை, உ௪-வது சனிஓரை வியாழக்கிழமை உதையம் க-வது வியாழஓரை, உ-வது செவ்வாய்ஓரை, ௩-வது சூரியஓரை, ௪-வது சுக்கிரஓரை, ௫-வது புதஓரை, ௬-வது சந்திரஓரை, ௭-வது சனிஓரை, ௮-வது வியாழஓரை, ௯-வது செவ்வாய்ஓரை ௰-வது சூரியஓரை, கக-வது சுக்கிரஓரை, கஉ-வது புதஓரை, க௩-வது சந்திரவோரை, க௪-வது சனிஓரை, க௫-வது வியாழஓரை, க௬-வது செஉவாய்ஓரை க௭-வது சூரியஓரை, க௮-வது சுக்கிரஓரை, க௯-வது புதஓரை, உ௰-வது சந்திரஓரை, உக-வது சனிஓரை, உஉ-வது வியாழஓரை, உ௩-வது செ

வ்வாய்ஓரை, ௨௪-வது சூரியஓரை, வெள்ளிக்கிழமை உதையம் க-வது சுக்கிரஓரை, ௨-வது புதஓரை, ௩-வது சந்திரஓரை, ௪-வது சனிஓரை, ௫-வது வியாழஓரை, ௬-வது செவ்வாய்ஓரை, ௭-வது சூரியஓரை, ௮-வது சுக்கிரஓரை, ௯-வது புதஓரை, ௰-வது சந்திரஓரை, கக-வது சனிஓரை, க௨-வது வியாழஓரை, க௩-செவ்வாய்ஓரை, க௪-வதுசூரியஓரை க௫-வது சுக்கிரஓரை, க௬-வது புதஓரை, க௭-வது சந்திரஓரை, க௮-வது சனிஓரை, க௯-வது வியாழஓரை, ௨௰-வது செவ்வாய்ஓரை, ௨க-வது சூரியஓரை, ௨௨-வது சுக்கிரஓரை, ௨௩-வது புதஓரை, ௨௪-வது சந்திரஓரை, சனிக்கிழமை உதையம் க-வது சனிஓரை, ௨-வது வியாழஓரை, ௩-வது செவ்வாய்ஓரை, ௪-வது சூரியஓரை, ௫-வது சுக்கிரஓரை, ௬-வது புதஓரை, ௭-வது சந்திரஓரை, ௮-வது சனிஓரை, ௯-வது வியாழஓரை, ௰-வது செவ்வாய்ஓரை, கக-வது சூரியஓரை, க௨-வது சுக்கிரஓரை, க௩-வது புதஓரை, க௪-வது சந்திரஓரை, க௫-வது சனி ஓரை, க௬ வது வியாழஓரை, க௭-வது செவ்வாய்ஓரை, க௮-வது சூரியஓரை, க௯-வது சுக்கிரஓரை ௨௰-வது புதஓரை, ௨க-வது சந்திரஓரை, ௨௨-வது சனிஓரை ௨௩-வது வியாழஓரை ௨௪-வது செவ்வாய் ஓரை இவற்றிற்கெல்லாம். ஓரை கக்கு ௨-இ நாழிகையாகக் கொள்க. நாயிற்றுக்கிழமை உதையம் க-வது தாமசவேளை ௨-வது சாத்திகம், ௩-வது ராசதம் ௪-வது தாமசம், ௫-வது சாப்திகம், ௬-வது ராசதம், ௭-வது தாமசம்-௮-வது சாப்திகம், ௯-வது ராசதம், ௰-வது தாமசம், கக-வது சாப்திகம், க௨-வது ராசதம் க௩-வது தாமசம், க௪-வது சாப்திகம், க௫-வது ராசதம், க௬-வது தாமசம் திங்கட்கிழமை உதையம் க-வது சாப்திகவேளை ௨-வது ராசதம், ௩-வது தாமசம், ௪-வது சாப்திகம், ௫-வது ராசதம், ௬-வது தாமசம், ௭-வது, சாப்திகம் ௮-வது ராசதம் ௯-வது தாமசம், ௰-வது சாப்திகம், கக-வது ராசதம், க௨-வது தாமசம் க௩-வது சாப்திகம், க௪-வது ராசதம், க௫-வது தாமசம் க௬-வது சாப்திகம் செவ்வாய்க்கிழமை உதையம் க-வது ராசதவேளை ௨-வது தாமசம், ௩-வது சாப்திகம் ௪-வது ராசதம் ௫-தாமசம் ௬-வது சாப்திகம் ௭-வது ராசதம் ௮-வது தாமசம், ௯-வது சாப்திகம்-௰-வது ராசதம் கக-வது தாமசம் க௨-வது சாப்திகம் க௩-வது ராசதம் க௪-வது தாமசம் க௫-வது சாப்திகம் க௬-வது ராசதம் புதன்கிழமைக்கு நாயிற்றுக்கிழமைக்குச் சொல்லியிருக்கிற கிரமம்போலவும் வியாழக்கிழமைக்கு திங்கட்கிழமைக்குச் சொல்லியிருக்கிற கிரமம் போலவும், வெள்ளிக்கிழமைக்கு செவ்வாய்க்கிழமைக்குச் சொல்லியிருக்கிற கிரமம்போலவும். கொள்க சனிக்கிழமை உதையம் க-வது தாமசம், ௨-வது சாப்திகம், ௩-வது ராசதம், ௪-வது தாமசம் ௫-வது சாப்திகம், ௬-வது ராசதம், ௭-வது தாமசம் ௮-வது சாப்திகம், ௯-வது ராசதம், ௰-வது தாமசம், கக-வது சாப்திகம், க௨-வது

ராசதம், ௧௩-வது தாமசம், ௧௪-வது சாப்திகம், ௧௫-வது ராசதம்வே ளை க-க்கு ௩ஃ-நாழிகையாகக்கொள்க * சனிக்கிழமைக்குமாத்திரம் வேளை க-க்கு ௪-நாழிகை ஆம். எ-று. (௪)

சரம் வாரஉண்.

இடத்தியங்குமான்மதிபார்க்கவன்பூர்வபக்ஷத்
தினிற்குருவின்மற்றதின்மற்றியங்குகனலேந்தாய்
நடத்துகலையிந்திரவிரண்டொடனற்கலையாய்
நாமமிடைபிங்கலையச்சுழிமுனைப்பேர்நவில்வார்
கடத்தலிவையொன்றினுக்கைம்பூதமுநேர்நடக்குங்
கால்வலமுமிடமுமறுகாற்கொருகால்கழிவாய்
விடந்தருமவ்வாரமுதற்பகலிரவுக்கிவர்கள்
வீடளவுநேரிடமாய்மேவுவதூணெனுமே.

(இ-ள்.) புதன் திங்கள் வெள்ளி பூர்வபக்ஷத்து வியாழன் இந்த வாரங்களில் இடதுபுறத்தில்சரம்ஓடும். நாயிறுசெவ்வாய் சனி அமர பக்ஷத்து வியாழன் இந்தவாரங்களில் வலதுபுறத்தில் சரம்ஓடும். இவை ஒவ்வொன்றுக்கும் ௫-நாழிகை நேர்நடக்கும். இடம் சந்திரகலை வலம் சூரியகலை, இவை இரண்டுங்கூடினது அக்கினிகலை, இவைமூன்றுக்குமுறையே இடை, பிங்கலை, சுழிமுனையென்றும் பெயராம். இடை, பிங்கலை ஒவ்வொன்றுக்கும் ஐம்பூதமுநேர்நடக்கும். இப்பூதங்கள் இடத்துக்குவலமும், வலத்துக்கு இடமுமாகநடக்கும், பிருதிவியின்கூறு ௧௨-நாழிகையும், அப்புவின்கூறு ௧௰-நாழிகையும், தேயுவின்கூறு ௧-நாழிகையும், வாயிலின்கூறு ௩-நாழிகையும், ஆகாயத்தின்கூறு ௨-நாழிகையுமாக நேர்நடக்கும். பகற்காலத்தில் நாயிறு சிம்மலக்கினத்திலும், புதன் கன்னியிலும், வெள்ளிதுலாத்திலும், செவ்வாய் விருச்சிகத்திலும், வியாழம் தனுசிலும், சனிமகரத்திலும் உண்ணும் இராத்திரியில் திங்கள் கடகத்திலும், புதன் மிதுனத்திலும், வெள்ளி இடபத்திலும், செவ்வாய் மேஷத்திலும், வியாழம் மீனத்திலும், சனி கும்பத்திலும்உண்ணும் இவைவாரவூண். எ-று. (௫)

---

* வேளை க-க்கு ௩ஃ-நாழிகையெனக் கவியிற்பொதுப்படக் கூறியிருக்க சனிக்கிழமைக்குமாத்திரம் நான்கெனவிசேடித்துக்கூறியது நூலாசிரியர்கூறிய முறைமைநோக்கியென்க. இஃது உய்த்துணர்வைப் பென்னும் உத்தி-

பஞ்சபக்ஷிக்குரியதொழில், அத்தொழிலுக்குரியநாழிகை
அத்தொழில்நடக்குங்காலம், அத்தொழில்ஸ்தூ
லத்திற் சூக்ஷமம், பஞ்சபக்ஷியின்பேர்,
அதற்கிற்குரிய அக்ஷரங்கள், வெற்
றுமேதோர்வை அறியும்வகை
அப்பக்ஷிகட்குப்பகை.

ஊணடையா திக்கமுறக்கம்மரணமைந்துக்
குமிரவும்பகலுமொருதொழிற்கறுநாழிகையாய்ப்
பூணுமறுகாலேக்காலெண்முக்காலிருகால்
பொசிப்புமுதலுட்கிரியைபுகல்வாரிக்கிரியை
காணுதல்வல்லூராந்தைகாகநங்கேதனம்வா
கனமாமீதகாரமுதற்கடையொகரம்வரையா
மாணலனுக்கோரெழுத்தேன்மூப்புயரமிளமை
யதிபெலம்பேரனுபுனர்நண்ணலரதற்காவதுவே.

(இ-ள்.) ஊண் நடை அரசு தூக்கம் சாவு இவை பக்ஷிபக்ஷிக்குரியதொழில் இத்தொழில்கள் ஒவ்வொன்றும் அவ்வாறு நாழிகையுமிரவும் பகலும் நடக்கும் ஊண் க-க்கு-நாழிகை நடை கவ-அரசு உ-தூக்கம் ஷ-சாவு இ-இவை ஸ்தூலத்திற் சூக்ஷமத்தொழிலாம். வல்லூறு ஆந்தை காகம் கோழி மயில் இவை மேற்கூரிய தொழிலுக்குடைய பஞ்சபக்ஷியாம், அ கரமும் ஆ காரமும் இவையேறிய உயிர்மெய்யும் ஆந்தை உ கரமும் ஊ காரமும் இவை ஏறிய உயிர்மெய்யும் காகம் எ கரமும் ஏ காரமும் இவையேறிய உயிர்மெய்யும் கோழி ஒ கரமும் ஓ காரமும் இவையேறிய உயிர்மெய்யும் மயிலாம் இருவர் அக்ஷரமும் ஒன்றாகில் ஊணில் மூப்புடையவனும், நடையில் வளர்ந்தவனும், அரசில் இளையவனும், தூக்கத்தில் அதிபெலவானும், சாவில் அதிகப்பேருடையவனும் வெற்றிகொள்வான் வல்லூறுக்கு ஆந்தையும், ஆந்தைக்கு காகமும், காகத்துக்கு கோழியும், கோழிக்கு மயிலும், மயிலுக்கு வல்லூறும் பகையாம். எ-று. (கூ)

பஞ்சபக்ஷி நடப்பு படுபட்சி.

ஆரன்முதற்சனிவரைநேராய்வலியான்காக
மவலமவ்வாரணங்கொடிதொட்டாதியந்தப்பொசிப்பாஞ்
சூரியனுக்கனலின்மதிக்கருணனசிதனைப்போற்
றெழிலதற்குத்தெற்குவடக்கிதற்கிடைவிட்டுணவாய்

மாரணநித்திரைநடைகோவைவியெவைக்கும்விளையாய்
வகுத்துரைப்பர்பொன்முதல்வல்லூராந்தைமாறு
யீரிருநாண்மற்றவைநேரிறப்பிவைபோன்மயில்வைத்
திடமாகப்புதன்முதனேரெய்துவதீதினுக்கே.

(இ-ள்.) செவ்வாய்முதற்சனிவரை பூர்வபக்ஷம்பகல் முதற்சாமம் வல்லூறு முதல்நேர்உண்ணும், இப்பக்ஷத்தில் இராத்திரி முதற்சாமம், காகம் முதல்நேர்உண்ணும், அமரபக்ஷத்துப்பகல் முதற்சாமம் கோழிமுதல் இடமாக நேர்உண்ணும். அமரபக்ஷம் இராத்திரி முதற்சாமம் காகமுதலிடமாக நேர்உண்ணும், நாயிறுக்கு செவ்வாயைப் போல் எப்போதுஞ்சொல்லுக. திங்களுக்கும் பூருவபக்ஷத்திற் புதனைப்போலவும், அமரபக்ஷத்திற் சனியைப்போலவுஞ் சொல்லுக. பூருவபக்ஷம்பகல் முதற்சாமம் மரணமானபக்ஷியை இரண்டாஞ்சாமத்துக்கு ஊண்பக்ஷியாகவைத்து வலமாக நேர்நடத்துக. இந்தப்படி மரணமானபக்ஷியை ஊண்பக்ஷியாகவைத்து மற்றச்சாமங்களுக்கும் நடத்துக. பூருவபக்ஷம் இராத்திரி முதற்சாமம் நித்திரைசெய்த பக்ஷியை இரண்டாஞ்சாமத்துக்கு ஊண்பக்ஷியாகவைத்து பக்ஷி இடமாக நேர்நடத்துக. இந்தப்படி நித்திரைசெய்தபக்ஷியை ஊண்பக்ஷியாக வைத்து மற்றசாமங்களுக்கும் நடத்துக. அமரபக்ஷம் பகல்முதற்சாமம் நடந்த பக்ஷியை இரண்டாஞ்சாமத்துக்கு ஊண்பக்ஷியாகவைத்து வலமாக ஒன்றுவிட்டு நேர்நடத்துக. இந்தப்படி நடந்தபக்ஷியை ஊண்பக்ஷியாகவைத்து மற்றசாமங்களுக்கும் நடத்துக. அமரபக்ஷம் இராத்திரிமுதற்சாமம் அரசுசெய்தபக்ஷியை இரண்டாஞ்சாமத்துக்கு ஊண்பக்ஷியாகவைத்து இடமாக ஒன்றுவிட்டு நேர்நடத்துக. இந்தப்படி அரசுசெய்தபக்ஷியை ஊண்பக்ஷியாகவைத்து மற்றசாமங்களிலும் நடத்துக பூருவபக்ஷம் வியாழக்கிழமை சனிக்கிழமையில் வல்லூறும் வெள்ளிஞாயிறில் ஆந்தையும், திங்களிற் காகமும், செவ்வாயிற்கோழியும், புதனில் மயிலும் மரிக்கும், அமரபக்ஷம் புதன்வெள்ளியில் மயிலும், வியாழன் சனியிற் கோழியும் நாயிறில் காகமும், திங்களில் ஆந்தையும், செவ்வாயில் வல்லூறும் மரிக்கும் இவைபடுபக்ஷியாம்.எ-று.

மேற்கூறிய பஞ்சபக்ஷிகளின் கிரியாக்கிரமங்களை விரித்
துணர்த்துகின்றோம்.

பஞ்சபக்ஷித்தொழின்முறை விபரம்.

பூருவபக்ஷம்பகல்.

நாயிறு-செவ்வாய் பகல், முதற்சாமம். வல்லூறு ஊண், ஆந்தை நடை, காகம் அரசு, கோழி தூக்கம், மயில் சாவு, உ-ம்-சாமம். மயில்

ஊண், வல்லூறு நடை, ஆந்தை அரசு, காகம் தூக்கம், கோழி சாவு, ௩-ம்-சாமம். கோழி ஊண், மயில் நடை, வல்லூறு அரசு, ஆந்தை தூக்கம், காகம் சாவு, ௪-ம்-சாமம். காகம் ஊண், கோழி நடை, மயில் அரசு, வல்லூரு தூக்கம், ஆந்தை சாவு, ௫-ம்-சாமம். ஆந்தை ஊண், காகம் நடை, கோழி அரசு, மயில் தூக்கம், வல்லூறு சாவு.

திங்கள்-புதன் பகல் முதற்சாமம். ஆந்தை ஊண், காகம் நடை, கோழி யரசு, மயில் தூக்கம், வல்லூறு சாவு, ௨-ம்-சாமம். வல்லூறு ஊண், ஆந்தை நடை, காகம் அரசு, கோழி தூக்கம், மயில் சாவு, ௩-ம்-சாமம். மயில் ஊண், வல்லூறு நடை, ஆந்தை அரசு, காகம் தூக்கம், கோழி சாவு, ௪-ம்-சாமம். கோழி ஊண், மயில் நடை, வல்லூறு அரசு, ஆந்தை தூக்கம், காகம் சாவு, ௫-ம்-சாமம். காகம் ஊண், கோழி நடை, மயில் அரசு, வல்லூறு தூக்கம், ஆந்தை சாவு.

வியாழன்-பகல் முதற்சாமம். காகம் ஊண், கோழி நடை, மயில் அரசு, வல்லூறு தூக்கம், ஆந்தை சாவு, ௨-ம்-சாமம். ஆந்தை ஊண், காகம் நடை, கோழி அரசு, மயில் தூக்கம், வல்லூறு சாவு, ௩-ம்-சாமம். வல்லூறு ஊண், ஆந்தை நடை, காகம் அரசு, கோழி தூக்கம், மயில் சாவு, ௪-ம்-சாமம். மயில் ஊண், வல்லூறு நடை, ஆந்தை அரசு, காகம் தூக்கம், கோழி சாவு, ௫-ம்-சாமம். கோழி ஊண், மயில் நடை, வல்லூறு அரசு, ஆந்தை தூக்கம், காகம் சாவு.

வெள்ளி-பகல் முதற்சாமம். கோழி ஊண், மயில் நடை, வல்லூறு அரசு, ஆந்தை தூக்கம், காகம் சாவு, ௨-ம்-சாமம். காகம் ஊண், கோழி நடை, மயில் அரசு, வல்லூறு தூக்கம், ஆந்தை சாவு, ௩-ம்-சாமம். ஆந்தை ஊண், காகம் நடை, கோழி அரசு, மயில் தூக்கம், வல்லூறு சாவு, ௪-ம்-சாமம். வல்லூறு ஊண், ஆந்தை நடை, காகம் அரசு, கோழி தூக்கம், மயில் சாவு. ௫-ம்-சாமம். மயில் ஊண், வல்லூறு நடை, ஆந்தை அரசு, காகம் தூக்கம், கோழி சாவு.

சனி-பகல் முதற்சாமம். மயில் ஊண், வல்லூறு நடை, ஆந்தை அரசு, காகம் தூக்கம், கோழி சாவு, ௨-ம்-சாமம். கோழி ஊண், மயில் நடை, வல்லூறு அரசு, ஆந்தை தூக்கம், காகம் சாவு, ௩-ம்-சாமம். காகம் ஊண், கோழி நடை, மயில் அரசு, வல்லூரு தூக்கம், ஆந்தை சாவு, ௪-ம்-சாமம். ஆந்தை ஊண், காகம் நடை, கோழி அரசு, மயில் தூக்கம், வல்லூறு சாவு, ௫-ம்-சாமம். வல்லூறு ஊண், ஆந்தை நடை, காகம் அரசு, கோழி தூக்கம், மயில் சாவு.

பூருவபக்ஷம் இராத்திரி.

ஞாயிறு-செவ்வாய் இராத்திரி முதற்சாமம். காகம் ஊண், ஆந்தை அரசு, வல்லூறு சாவு, மயில் நடை, கோழி தூக்கம், உ-ம்-சாமம். கோழி ஊண், காகம் அரசு, ஆந்தை சாவு, வல்லூறு நடை, மயில் தூக்கம், ௩-ம்-சாமம். மயில் ஊண், கோழி அரசு, காகம் சாவு, ஆந்தை நடை, வல்லூறு தூக்கம், ச-ம்-சாமம். வல்லூறு ஊண், மயில் அரசு, கோழி சாவு, காகம் நடை, ஆந்தை தூக்கம், ரு-ம்-சாமம். ஆந்தை ஊண், வல்லூறு-அரசு, மயில் சாவு, கோழி நடை, காகம் தூக்கம்.

திங்கள்-புதன இராத்திரி முதற்சாமம். கோழி ஊண், காகம் அரசு, ஆந்தை சாவு, வல்லூறு நடை, மயில் தூக்கம், உ-ம்-சாமம். மயில் ஊண், கோழி அரசு, காகம் சாவு, ஆந்தை நடை, வல்லூறு தூக்கம், ௩-ம்-சாமம். வல்லூறு ஊண், மயில் அரசு, கோழி சாவு, காகம் நடை, ஆந்தை தூக்கம், ச-ம்-சாமம். ஆந்தை ஊண், வல்லூறு அரசு, மயில் சாவு, கோழி நடை, காகம் தூக்கம், ரு-ம்-சாமம். காகம் ஊண், ஆந்தை அரசு, வல்லூறு சாவு, மயில் நடை, கோழி தூக்கம்.

வியாழன் இராத்திரி முதற்சாமம். மயில் ஊண், கோழி அரசு, காகம் சாவு, ஆந்தை நடை, வல்லூறு தூக்கம், உ-ம்-சாமம். வல்லூறு ஊண், மயில் அரசு, கோழி சாவு, காகம் நடை, ஆந்தை தூக்கம், ௩-ம்-சாமம். ஆந்தை ஊண், வல்லூறு அரசு, மயில் சாவு, கோழி நடை, காகம் தூக்கம், ச-ம்-சாமம். காகம் ஊண், ஆந்தை அரசு, வல்லூறு நடை, மயில் தூக்கம், ரு-ம்-சாமம். மயில் ஊண், கோழி அரசு, காகம் சாவு, ஆந்தை நடை, வல்லூறு தூக்கம்.

வெள்ளி-இராத்திரி முதற்சாமம். வல்லூறு ஊண், மயில் அரசு, கோழி சாவு, காகம் நடை, ஆந்தை தூக்கம், உ-ம்-சாமம். ஆந்தை ஊண், வல்லூறு, அரசு, மயில் சாவு, கோழி நடை, காகம் தூக்கம், ௩-ம் சாமம். காகம் ஊண், ஆந்தை அரசு, வல்லூறு சாவு, மயில் நடை, கோழி தூக்கம், ச-ம்-சாமம். கோழி ஊண், காகம் அரசு, ஆந்தை சாவு, வல்லூறு நடை, மயில் தூக்கம், ரு-ம்-சாமம். மயில் ஊண், கோழி அரசு, காகம் சாவு, ஆந்தை நடை, வல்லூறு தூக்கம்.

சனிக்கிழமை-இராத்திரி முதற்சாமம். ஆந்தை ஊண், வல்லூறு அரசு, மயில் சாவு, கோழி நடை, காகம் தூக்கம், உ-ம்-சாமம். காகம் ஊண், ஆந்தை அரசு, வல்லூறு சாவு, மயில் நடை, கோழி தூக்கம், ௩-ம்-சாமம். கோழி ஊண், காகம் அரசு, ஆந்தை சாவு, வல்லூறு நடை, மயில் தூக்கம், ச-ம்-சாமம். மயில் ஊண், கோழி அரசு, காகம் சாவு, ஆந்தை நடை, வல்லூறு தூக்கம், ரு-ம்-சாமம். வல்லூறு ஊண், மயில் அரசு, கோழி சாவு, காகம் நடை, ஆந்தை தூக்கம்.

அமரபக்ஷம்பகல்.

ஞாயிறு-செவ்வாய் பகற் முதற்சாமம். கோழி ஊண், வல்லூறு சாவு, காகம் தூக்கம், மயில் அரசு, ஆந்தை நடை, ௨-ம்-சாமம். ஆந்தை ஊண், கோழி சாவு, வல்லூறு தூக்கம், காகம் அரசு, மயில் நடை, ௩-ம்-சாமம். மயில் ஊண், ஆந்தை சாவு, கோழி தூக்கம், வல்லூறு அரசு, காகம் நடை, ௪-ம்-சாமம். காகம் ஊண், மயில் சாவு, ஆந்தை தூக்கம், கோழி அரசு, வல்லூறு நடை, ௫-ம்-சாமம். வல்லூறு ஊண், காகம் சாவு, மயில் தூக்கம், ஆந்தை அரசு, கோழி நடை.

புதன்-பகல் முதற்சாமம். காகம் ஊண், மயில் சாவு, ஆந்தை தூக்கம், கோழி அரசு, வல்லூறு நடை, ௨-ம்-சாமம். வல்லூறு ஊண், காகம் சாவு, மயில் தூக்கம், ஆந்தை அரசு, கோழி-நடை, ௩-ம்-சாமம். கோழி ஊண், வல்லூறு சாவு, காகம் தூக்கம், மயில் அரசு, ஆந்தை நடை, ௪-ம்-சாமம். ஆந்தை ஊண், கோழி சாவு, வல்லூறு தூக்கம், காகம் அரசு, மயில் நடை, ௫-ம்-சாமம். மயில் ஊண், ஆந்தை சாவு, கோழி தூக்கம், வல்லூறு அரசு, காகம் நடை.

வியாழன்-பகல் முதற்சாமம். ஆந்தை ஊண், கோழி சாவு, வல்லூறு தூக்கம், காகம் அரசு, மயில் நடை, ௨-ம்-சாமம். மயில் ஊண், ஆந்தை சாவு, கோழி தூக்கம், வல்லூறு அரசு, காகம் நடை, ௩-ம்-சாமம். காகம் ஊண், மயில் சாவு, ஆந்தை தூக்கம், கோழி அரசு, வல்லூறு நடை, ௪-ம்-சாமம். வல்லூறு ஊண், காகம் சாவு, மயில் தூக்கம், ஆந்தை அரசு, கோழி நடை, ௫-ம்-சாமம். கோழி ஊண், வல்லூறு சாவு, காகம் தூக்கம், மயில் அரசு, ஆந்தை நடை.

வெள்ளி-பகற் முதற்சாமம். வல்லூறு ஊண், காகம் சாவு, மயில் தூக்கம், ஆந்தை அரசு, கோழி நடை, ௨-ம்-சாமம். கோழி ஊண், வல்லூறு சாவு, காகம் தூக்கம், மயில் அரசு, ஆந்தை நடை, ௩-ம்-சாமம். ஆந்தை ஊண், கோழி சாவு, வல்லூறு தூக்கம், காகம் அரசு, மயில் நடை, ௪-ம்-சாமம். மயில் ஊண், ஆந்தை சாவு, கோழி தூக்கம், வல்லூறு அரசு, காகம் நடை, ௫-ம்-சாமம். காகம் ஊண், மயில் சாவு, ஆந்தை தூக்கம், கோழி அரசு, வல்லூறு நடை.

திங்கள்-சனி பகல் முதற்சாமம். மயில் ஊண், ஆந்தை சாவு, கோழி தூக்கம், வல்லூறு அரசு, காகம் நடை, ௨-ம்-சாமம். காகம் ஊண், மயில் சாவு, ஆந்தை தூக்கம், கோழி அரசு, வல்லூறு நடை, ௩-ம்-சாமம். வல்லூறு ஊண், காகம் சாவு, மயில் தூக்கம், ஆந்தை அரசு, கோழி நடை, ௪-ம்-சாமம். கோழி ஊண், வல்லூறு சாவு, காகம் தூக்கம், மயில் அரசு, ஆந்தை நடை, ௫-ம்-சாமம். ஆந்தை ஊண், கோழி சாவு, வல்லூறு தூக்கம், காகம் அரசு, மயில் நடை.

அமரபக்ஷம் இராத்திரி.

ஞாயிறு-செவ்வாய் இராத்திரி முதற்சாமம். காகம் ஊண், வல்லூறு தூக்கம், கோழி நடை, ஆந்தை சாவு, மயில் அரசு, ௨-ம்-சாமம். மயில் ஊண், காகம் தூக்கம், வல்லூறு நடை, கோழி சாவு, ஆந்தை அரசு, ௩-ம்-சாமம். ஆந்தை ஊண், மயில் தூக்கம், காகம் நடை, வல்லூறு சாவு, கோழி அரசு, ௪-ம்-சாமம். கோழி ஊண், ஆந்தை தூக்கம், மயில் நடை, காகம் சாவு, வல்லூறு அரசு, ௫-ம்-சாமம். வல்லூறு ஊண், கோழி தூக்கம், ஆந்தை நடை, மயில் சாவு, காகம் அரசு.

புதன்-இராத்திரி முதற்சாமம். ஆந்தை ஊண், மயில் தூக்கம், காகம் நடை, வல்லூறு சாவு, கோழி அரசு, ௨-ம்-சாமம். கோழி ஊண், ஆந்தை தூக்கம், மயில் நடை, காகம் சாவு, வல்லூறு அரசு, ௩-ம்-சாமம். வல்லூறு ஊண், கோழி தூக்கம், ஆந்தை நடை, மயில் சாவு, காகம் அரசு, ௪-ம்-சாமம். காகம் ஊண், வல்லூறு தூக்கம், கோழி நடை, ஆந்தை சாவு, மயில் அரசு, ௫-ம்-சாமம். மயில் ஊண், காகம் தூக்கம், வல்லூறு நடை, கோழி சாவு, ஆந்தை அரசு.

வியாழன்-இராத்திரி முதற்சாமம். வல்லூறு ஊண், கோழி தூக்கம், ஆந்தை நடை, மயில் சாவு, காகம் அரசு, ௨-ம்-சாமம். காகம் ஊண், வல்லூறு தூக்கம், கோழி நடை, ஆந்தை சாவு, மயில் அரசு, ௩-ம்-சாமம். மயில் ஊண், காகம் தூக்கம், வல்லூறு நடை, கோழி சாவு, ஆந்தை அரசு, ௪-ம்-சாமம். ஆந்தை ஊண், மயில் தூக்கம், காகம் நடை, வல்லூறு சாவு, கோழி அரசு, ௫-ம்-சாமம். கோழி ஊண், ஆந்தை தூக்கம், மயில் நடை, காகம் சாவு, வல்லூறு அரசு.

வெள்ளி-இராத்திரி முதற்சாமம். மயில் ஊண், காகம் தூக்கம், வல்லூறு நடை, கோழி சாவு, ஆந்தை அரசு, ௨-ம்-சாமம். ஆந்தை ஊண், மயில் தூக்கம், காகம் நடை, வல்லூறு சாவு, கோழி அரசு, ௩-ம்-சாமம். கோழி ஊண், ஆந்தை தூக்கம், மயில் நடை, காகம் சாவு, வல்லூறு அரசு, ௪-ம்-சாமம். வல்லூறு ஊண், கோழி தூக்கம், ஆந்தை நடை, மயில் சாவு, காகம் அரசு, ௫-ம்-சாமம். காகம் ஊண், வல்லூறு தூக்கம், கோழி நடை, ஆந்தை சாவு, மயில் அரசு.

திங்கள்-சனி இராத்திரி முதற்சாமம். கோழி ஊண், ஆந்தை தூக்கம், மயில் நடை, காகம் சாவு, வல்லூறு அரசு, ௨-ம்-சாமம். வல்லூறு ஊண், கோழி தூக்கம், ஆந்தை நடை, மயில் சாவு, காகம் அரசு, ௩-ம்-சாமம். காகம் ஊண், வல்லூறு தூக்கம், கோழி நடை, ஆந்தை சாவு, மயில் அரசு, ௪-ம்-சாமம். மயில் ஊண், காகம் தூக்கம், வல்லூறு நடை, கோழி சாவு, ஆந்தை அரசு, ௫-ம்-சாமம். ஆந்தை-ஊண், மயில் தூக்கம், காகம் நடை, வல்லூறு சாவு, கோழி அரசு.

## அக்ஷரங்களுக்குரிய பக்ஷிகள்.

| எழுத்து | அ. ஆ | இ. ஈ | உ. ஊ | எ. ஏ | ஒ. ஓ |
|---|---|---|---|---|---|
| பக்ஷி. | வல்லூறு. | ஆந்தை. | காகம். | கோழி. | மயில். |

பூர்வபக்ஷம் அமரபக்ஷம் வாரங்களேழில் இராப்பகல் பத்துச் சாமங்களிலும் பஞ்சபக்ஷிகளியற்றுந்தொழில்களையுணர்த்தும்.

### சூக்ஷமசக்கரம்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| பூருவ பக்கம். | பகல். | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | வாரம். | அபர பக்கம். |
| வாரம். | சூ | ஊண் ஞா | நடை தி | அரசு செ | தூக் பு | சாவு வி | | |
| செ-நா. | அரசு க | அ | இ | உ | எ | ஒ | [illegible] | [illegible] |
| வி. | சாவு ச | உ | எ | ஒ | அ | இ | [illegible] | [illegible] |
| சனி. | நடை உ | ஒ | அ | இ | உ | எ | [illegible] | [illegible] |
| தி-பு. | தூக்கம் கு | இ | உ | எ | ஒ | அ | [illegible] | [illegible] |
| வெ. | ஊண் நு | எ | ஒ | அ | இ | உ | [illegible] | [illegible] |
| இராத்திரி | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
| அபர பக்கம் | வாரம் | [illegible] | [illegible] | [illegible] | புதன் | [illegible] | [illegible] | [illegible] |

### படுபக்ஷி

| பக்ஷம். | நாயிறு | திங்கள் | செவ்வ | புதன் | வியாழ | வெள் | சனி |
|---|---|---|---|---|---|---|---|
| பூருவபக்ஷம். | இ | உ | எ | ஒ | அ | இ | அ |
| அமரபக்ஷம் | உ | இ | அ | ஒ | எ | ஒ | [illegible] |

ரவிப்பாய்ச்சல், நாற்றிசைச்சூலம், மூலைச்சூலம்,
இச்சூலத்துக்குநாழிகை.

எய்தும்ரவிப்பாய்ச்சறெற்காயெமனிசிநேரறுபா
னிதற்குமுப்பானேறலிருபானொருபானிளைத்த
லையிரண்டைநான்கேறல்பாதியுறலிவைநே
ரலர்களுமுற்றிடல்சோமனசிதனுமந்தணனும்
வெய்யவன்பார்க்கவனுமனல்மேதையுநாற்றிசைச்சூல்
விளம்புவரத்திசைமுதற்கோண்விட்டனுகோணமுமாய்
வைகுவதவ்வயதுளநாழிகையாகுமதிகம்
வரினுதையத்தேறுமிராவீறறன்மற்றதுவே.

(இ-ள்.) சனிக்கிழமைராத்திரி ௩௰ நாயிற்றுக்கிழமை பகல் ௩௰ ஆகநாழிகை சூ௰ம் தென்றிசையிலும், நாயிற்றுக்கிழமை ராத்திரி ௩௰ திங்கள் ராப்பகல் சூ௰ ஆகநாழிகை கூ௰ம் தென்மேற்றிசையிலும் செவ்வாய்பகல் ௩௰ ராத்திரி ௰ ஆகநாழிகை ௪௰ம் மேற்றிசையிலும், செவ்வாய்க்கிழமை ராத்திரி உ௰ புதன்கிழமை பகல் ௩௰ ஆகநாழிகை ௫௰ம் வடமேற்றிசையிலும், புதன்கிழமை ராத்திரி ௩௰வியாழக்கிழமைபகல் ௩௰ ராத்திரி ௰ ஆகநாழிகை எ௰ம் வடதிசையிலும் வியாழக்கிழமைராத்திரி உ௰ வெள்ளிக்கிழமை பகல் ராத்திரி சூ௰ ஆகநாழிகை அ௰ம் வடகிழக்கிலும் சனிக்கிழமைபகல் ௩௰ நாழிகை கீழ்திசையிலும், ரவிப்பாய்ச்சலாம். திங்கள்சனிகிழக்கும், வியாழன் தெற்கும், வெள்ளி நாயிறுமேற்கும், செவ்வாய் புதன்வடக்கும் நாற்றிசைச் சூலமாம் திங்கள் சனி தென்மேற்கும், வியாழன் வடமேற்கும், வெள்ளி-நாயிறு வடகிழக்கும், செவ்வாய் புதன் தென்கிழக்கும் மூலைச்சூலமாம் இச்சூலத்துக்கு அந்தந்தவாராதிபன் வயதை நாழிகையாகக்கொள்க ஆதலால் நாயிறுக்கு ௫௰ நாழிகை, திங்களுக்கு எ௰, செவ்வாய்க்கு கசு, புதனுக்கு உ௰, வியாழனுக்கு ௩௰, வெள்ளிக்கு எ; சனிக்கு ா, இவற்றுள் திங்கள் சனிக்கு இராப்பகல் சூ௰ நாழிகையல்லாமலும், திங்களுக்கு உதையந்தொட்டு ௰-நாழிகைவரையும், சனிக்கு உதையந்தொட்டு இராத்திரி ௰-நாழிகைவரையும் அதிகச்சூலமாம். எ-று. (அ)

வாரவர்க்கம் அல்லது அவஸ்தை, சுவாலாதிக்கிரகம்,
அவமாகதோஷம்.

ஈறிடமற்றிடையாதிக்கிந்துசிதனுஞ்சாற்
கிறைபுதனுமாகமற்றோர்க்கெய்துதலக்கடிகை

யாறுளதாய்வாலிபகுமாரதருணகிழ
மாமிருதமாகவரவவரவர்ப்பேர்வாரந்
தோறுமுளதாமினனேர்சுவாலைதுமஞ்சாயை
தூர்வயங்குபற்பமங்காரகமிதெண்சாமமுஞ்சுற்
றேறிவருந்தினந்திதியோகம்மிவைரண்டுறின்மூன்
றிவையிலொவ்வொன்றுறுங்கிழமையவமாகமெனுமே.

(இ-ள்.) திங்கள் வெள்ளியில் உதையந்தொட்டு அப்பிரதெட்சணமாகவும், சனி புதனில் அத்தமனந்தொட்டு நேராகவும், நாயிறு செவ்வாய் வியாழனில் உதையந்தொட்டு நேராகவும், வாலிப, குமார, தருண, விருத்த, மாரணமென்றுவைத்து, ஒவ்வொன்றுக்கும் அவ்வாறுநாழிகையாக நேர்நடத்துக. இவைவார அவஸ்தையாம். கீழ்திசையில் முதற்சாமஞ்சுவாலை, தென்கீழ்த்திசையில் உம் சாமம் தூமம், தென்றிசையில் ஙம் சாமம் சாயை, தென்மேற்றிசையில் சம் சாமம்சேறு, மேற்றிசையில் டும் சாமம் ஜெலம், வடமேற்றிசையில் சும் சாமம் பூமி, வடதிசையில் எம்சாமம் பற்பம், வடகீழ்த்திசையில் அம் சாமம் அங்காரகன் இவை சுவாலாதிக்கிரகமாம். இவற்றிற்கெல்லாம் சாமம் ஒன்றுக்கு எஇ நாழிகையாகக் கொள்க நக்ஷத்திர திதி போகம் இவைஙம் ஒருகிழமையில் இரண்டிரண்டாக வரினும் அல்லது இந்தமூன்றிலொன்று திரையமாகவரினும் அவமாகதோஷமாம். எ-று.

வாரலக்கினம், பஞ்சகதோஷம்.

மாகமுஞ்சாலலவனுமீன்வருடையும்பெண்சிலையு
மைதுனராசியுமரிதேளுமலதும்வாயசமாப்
பாகன்முதனேர்வாரலக்கினமிப்பெயர்நாட்
பக்கமுஞ்சேர்த்தெட்டொருநான்கினர்பதினொன்றொருபா
னுகவொவ்வொன்றுடனவத்துக்கீயிலிருமூன்றொன்
றடுத்ததெட்டோர்நான்குகரவவமிருத்திக்கினிநோய்
கோகடபஞ்சகம்பிணிமன்றீயினனேர்பிருகு
குருச்சோரமிக்கததாங்குற்றமின்மற்றதற்கே.

(இ-ள்.) சனிக்கு மகரமும், நாயிறுக்கு கும்ப கடகமும் திங்களுக்கு மீன மேடமும், செவ்வாய்க்கு கன்னி தனுசும், புதனுக்கு மிதுனமும் வியாழனுக்கு சிங்க விருச்சிகமும், வெள்ளிக்கு இடப துலாமும் லக்கினமாம் வாரம் லக்கினம் நக்ஷத்திரம் திதி இவை நாலுங் கூட்டி இதனுடனெட்டுங்கூட்டி, ஒன்பதிற் கழிக்க, ஆறுமிச்சங் காணில் சோரபஞ்சகம், நாலுகூட்டி ஒன்பதிற்கழிக்க ஒன்று மிச்சங் காணில் மிருத்து பஞ்சகம், பன்னிரண்டுகூட்டி ஒன்பதிற்கழிக்க இர

ண்டு மிச்சங்காணில் அக்கினி பஞ்சகம். பதினைந்துகூட்டி ஒன்பதிற் கழிக்க எட்டுமிச்சங் காணில்-ரோகபஞ்சகம், பத்துக்கூட்டி ஒன்பதிற் கழிக்க நாலுமிச்சங் காணில் ராசபஞ்சகம் இவற்றுள் நாயிறில் ரோக பஞ்சகமும், திங்களில் ராசபஞ்சகமும், செவ்வாயில் அக்கினிபஞ்சக மும், வெள்ளிவியாழத்தில் சோரபஞ்சகமும், சனி புதனில் மிருத்து பஞ்சகமும்வரில் பஞ்சகதோஷஞ் சொல்லுக. மற்றதுவரில் பஞ்சக தோஷமில்லையென்க. எ-று. ௧0

மரணயோகம், அமிர்தயோகம்.

அல்லளகங்கனலுமுன்னடியும்படிதேர்முறம்யா
மூதுமினனுநமன்றீபுல்லானரனுமயனேர்
வல்லவன்றன்ணையுமிதுநாழியுடைவிடையு
மரணம்ரவிநேர்மூவான்மாறைகுருகும்மூக்
கில்லவள்வேய்ரதமதியுமேறவுணுமுடிமுச்
சிவையெருதுமலர்மதமாவும்மிதுமூலமுமேர்
கொல்லெமன்றீசுடரமிர்தப்பால்ராசித்திறமுங்
கூறினன்றேவானையுடன்கூடியகோளரியே.

(இ-ள்.) நாயிறில் அவிட்டம் கார்த்திகையும், திங்களில்-அசு பதி உத்திராடமும் செவ்வாயில் பூரட்டாதி ரோகணி-விசாகம் திரு வாதிரையும், புதனில் அத்தமும், வியாழனில் சதையம் கார்த்திகை அனுசம் உத்திரம் திருவாதிரையும், வெள்ளியில் ரோகணி மகம் திரு வோணம் ஆயிலியமும் சனியில் ஆயிலியம் பூரட்டாதி சித்திரை உத் திரமும் வரில் மரணயோகமாம் நாயிறில் உத்திரத்திரையம் திரு வோணம் பூசம் மூலமும் திங்களில்சோதி புனர்பூசம் ரோகணி மிருக சிரமும் செவ்வாயில் உத்திரம் மூலமும் புதனில் உத்திராடம் பூரத் திரையம் உத்திரமும் வியாழனில் சோதி மகம் அசுபதியும் வெள்ளி யில் அசுபதி மகம் சோதி மூலமும் சனியில் மகம் சதையம் கார்த்தி கை சோதியும்வரில் அமிர்தயோகமாம் இதன்மே லிராசிசரித்திரம் அறியும்படி திருவாய் மலர்ந்தருளினவன் தெய்வ யானையுடன்கூடிய சிங்கேறுபோன்ற சுப்பிரமணியக்கடவுள். எ-று. (௧௧)

வாரசரித்திரப்படலம்முற்றிற்று.

ஆகப்படலம், ௬, க்கு கவி - ௩௬.

# இராசி சரித்திரப் படலம்.

ரவிமுதலானவர்களுக்கு ஆட்சி உச்சம் நீசம் பகைநட்புவீடு.

அரியலவனிரவிமதிக்கருணனிரசதஞ்சே
யமரர்குருசனியவர்கட்கவலம்வலமாக
விருபுறமுமொவ்வொரின்னேரிதிற்சனிசேய்க்கிடமற்
றெய்துதன்மற்றவர்க்காட்சியில்லனுமற்றிலமா
மொருவிடைபெண்கயல்கலைநண்டோர்துலைமுன்போனே
ருச்சமிவைக்கேழுவம்பாம்புக்குறவாடரியாந்
தெரிவையிலானலவனுச்சஞ்சிகிக்கிவைநேர்மிக்குத்
தீதிலவர்பகைநீசந்தீர்க்குமின்மித்திரமே.

(இ-ள். ரவிக்கு சிங்கம் ஆட்சிவீடு மதிக்கு கடகம் ஆட்சிவீடு, புதனுக்குக்கன்னி ஆட்சிவீடு; மிதுனம் விடுதிவீடு, சுக்கிரனுக்கு துலாம் ஆட்சிவீடு, ரிஷபம் விடுதிவீடு, வியாழனுக்கு தனுசு ஆட்சி வீடு, மீனம் விடுதிவீடு, செவ்வாய்க்கு மேடம் ஆட்சிவீடு, விருச்சிகம் விடுதிவீடு, சனிக்கு கும்பம் ஆட்சிவீடு, மகரம்விடுதிவீடாம் ரவிக்கு மேடமும், மதிக்கு இடபமும், புதனுக்குக் கன்னியும், சுக்கிரனுக்கு மீனமும், செவ்வாய்க்கு மகரமும், வியாழனுக்குகடகமும், சனிக்குத் துலாமும், உச்சவீடாம், உச்சத்துக்கு, எ, ம் வீடு நீசமாம் இராகு வுக்கு மேடம் சிங்கம் நட்புவீடு- கன்னி சொட்சேத்திரம் இடபகட கம் உச்சவீடு கேதுவுக்கு துலாமும் கும்பமும் நட்புவீடு மீனம் சொட்சேத்திரம் விருச்சிக மகரம் உச்சவீடு உச்சமும் நீசமும் ஒரு வீடாகில் இவர்களே தங்களிற் பகையாம் ஆதலால் ரவிக்கு மகரகும் பமும், சனிக்குச் சிங்கமும், புதனுக்கு ரிஷபதுலாமும், சுக்கிரனுக் குக் கன்னிமிதுனமும், வியாழனுக்கு மேஷவிருச்சிகமும், செவ்வாய் க்குத் தனுசுமீனமும், பகைவீடாம் மதிக்குப் பகைவீடில்லை நீசத் துக்கு அடுத்தவீடு நட்புவீடாம் ஆகையால் ரவிக்கு விருச்சிகமும், மதிக்கு தனுசும், செவ்வாய்க்குச் சிங்கமும் புதனுக்கு மேஷமும், வியாழனுக்கு கும்பமும் சுக்கிரனுக்குத் துலாமும் சனிக்கு ரிஷபமும் நட்புவீடாம். எ-று. (க)

பார்வை, கேந்திரம், பணபரம்.
ஆபோக்கிலீபம் திரிகோணம் உபஜெயம்
சரதிரஉபையம் ஆண்-பெண்-இராசி, ஜலராசி, சுஷ்காராசி.

திரசரமாறல்லதுவார்க்குமெதிர்விழிப்பாஞ்
சேய்க்கணேயெட்டசிதனுக்குத்திரிதெசந்தேசிகனுக்

சூரநவமீப்பார்வையுமாங்கேந்திரமொன்றறல்வே
ளொருபதிதற்கடுத்ததெலாம்பணபரமற்றிவைபோல்
வரலதுவாபோக்கிலிபமறைதலெட்டாறூடுக்க
மகவறங்கோணுபஜெயநோய்வல்லணன்மானமுமாஞ்
கரதிரமற்றுபயமுநேர்தகர்முதலாண்பெண்ணோர்
சாலலவக்கோண்கலைப்பின்சலப்பெயர்மற்றதுவே.

(இ-ள்.) திரமுஞ்சரமுமாறிப்பார்க்கும்-உபயம்.உபயத்தைப்பார்க்கும். சூரியாதிகேதுவரைசகலரும். எ. மிடத்தைப் பார்ப்பார்கள்-செவ்வாய்க்கு ச-அ ம், சனிக்கு ௩.௰-ம், குருவுக்கு ௫௯ம், அதிகப் பார்வை க ச எ. ௰. கேந்திரம் உ-௫-அ-கக-பணபரம் ௩-௬-௯-கஉ. ஆபோக்லீபம். ௬. அ. கஉ. மறைவு, ௫, ௯, திரிகோணம் ௩, ௬, ௰, கக, உபஜெயம் மேஷம் கடகம் துலாம் மகரம்சராசி, ரிஷபம் சிங்கம் விருச்சிகம் கும்பம் திரராசி, மிதுனம், கன்னி தனுசு மீனம் உபயராசி மேஷம் மிதுனம் சிங்கம் துலாம் தனுசு கும்பம் இவை ௬ ம், ஆண் அல்லது ஒஜராசி ரிஷபம் கடகம் கன்னி விருச்சிகம் மகரம் மீனம் இவை ௬ ம் பெண் அல்லது யுக்மராசி கும்பமும், கடகக்கோணும், மகரத்திற் பின்னரையும் ஜெலராசி மேடக்கோணும் ரிஷபகன்னியும் மிதுன துலாமும் மகரத்தில் முன்னரையும்சுஷ்கராசி. எ-று.()

இராசித்தானம், இராசிநிறம், இராசிநாழிகை

மாரகஸ்தானம்.

சலமலைகான்விளைபுனந்தண்டலையொடுவூர்வயல்கற்
சாரனகரோடமொடுமாவணப்பால்கூவல்
கொலைபுரிபோர்க்களமொடுவூர்க்கொல்லையலைக்கரையாங்
குடமுதற்றேள்சேல்பசைபெண்கோற்கோண்மான்கறுப்பா
மலவன்விடைப்பாண்டரிக்கோணரத்தவைமீனமுஞ்சா
லானுமடமான்றலையுய்யாழரிதேள்களையுஞ்
சிலையவணுலேகாற்கிருகால்கால்
செலள்வேள்கண்ணுயமிவைமாரகத்தினிடமே.

(இ-ள்.) கும்பத்துக்கு ஜலமும், மீனத்துக்கு சமுத்திரமும், மேஷத்துக்குக்காடும், ரிஷபத்துக்கு விளைவுனமும், மிதுனத்துக்கு சோலையும் பட்டணமும், கடகத்துக்குவயலும், சிங்கத்துக்குமலைச்சார்பும், கன்னிக்குநகரமும், துலாத்துக்கு ஆற்றோடமும் கடைவீதியும், விருச்சிகத்துக்கு கிணறும் தனுசுக்கு போர்க்களமும் ஊரடுத்த

கொல்லையும், மகரத்துக்கு சமுத்திரக் கரையுந்தானமாம்-விருச்சிக மீனம்பச்சை, கன்னி துலாக்கோண்மகரம் கறுப்பு, இடபகடகம் வெளுப்பு, சிங்கக்கோண் சிவப்பாம் மேடம் மீனம் ௪ வ நாழிகை, கும்பம் இடபம் ௪ ௫, கன்னிதுலாம் ௫, மிதுனம் சிங்கம் விருச்சிகம் மகரம் ௫ வ, தனுசுகடகம் ௫இ ௨ ௭ ௧௧ மாரகஸ்தானம் ௭-று. (௩)

இராசிவடிவம், இராசிக்கால்

ஒற்றைஇராசி, இரட்டைஇராசி.

இடபமரியாடலவன்றேட்கிவையாஞ்சால்கோ
லெடுத்துடையரொருமீன்வால்வவ்வுமொருமீன்சேன்
மடவரனெற்கதிரனற்கைவைத்தவண்மானிடமாய்
வரல்சிலையிற்கரமரைக்குக்கீழ்புரவியுருவங்
கடலினுடலமிழ்ந்திடக்கம்முறுப்பேறல்கலையாழ்
காரிகையோர்புருடனுடன்கலப்புறல்யாழ்கதையாய்
விடையரிக்கோணுற்கான்மீன்மான்பறவைகுளிர்தேள்
வெகுகான்மற்றுபையமைநேரொற்றைமற்றதெனுமே.

(இ-ள்.) இடபம் சிங்கம் மேடம் கடகம் விருச்சிகம்-இவைக்கிவையே வடிவம் கும்பம், கும்பஞ்சுமந்தபுருடன்துலாம், துலாக்கோல் பிடித்தபுருடன் மீனம் ஒருமீன்வாலை யொருமீன்கவ்விகொண்டு இரட்டை மீனாகச்சஞ்சரிப்பது, கன்னி கன்னிகையாகி கதிர்க்குலையும் அக்கினியுங்கையில் வைத்திருப்பவள்-தனுசு அரைக்குமேற் புருடனாகக் கையிற்பிடித்தவில்லுமாகி அரைக்குக்கீழ் குதிரையுருவமாக விருப்பது-மகரம், உடல்முழுவதுஞ் சமுத்திரத்திலமிழ்ந்திடக்கிடக்கச் சிரசேரூபமாகக் கடற்றீரத்திற் சஞ்சரிப்பது, மிதுனம், வீணை பிடித்த பெண்ணும் கதைபிடித்த புருஷனுமாகச் சதாமைதுன சம்மந்தமாகவிருப்பது. இவைஇராசி வடிவமாம்-இடபமுஞ் சிங்கக்கோணும் நாலுகாலுடையன, மீனமும் மகரமும் இறகேகாலாகச் சஞ்சரிக்கும், கடகம் விருச்சிகம் வெகுகாலையுடையன, மிதுனம் கன்னி துலாம் கும்பம் இவைசு ம் இரண்டுகாலையுடையன, மேஷம் மிதுனம் சிங்கம் துலாம் தனுசுகும்பம் இவை சுஂம் ஒற்றை இராசி, ரிஷபம்கடகம் கன்னிவிருச்சிகம் மகரம் மீனம் இவை சு ம் இரட்டை இராசி ௭-று.

(௪)

இராசியினதுஉருவிகிர்தி, இராசிக்குலம், இராசிவீதி, சத்திரம்தாது மூலஜீவராசி, இவற்றின்பார்வை, இராத்திரிராசி, பகல்ராசி, சந்திராசி இராசிஉதையம், இராசிகெண்டாந்தம், திரிகாலராசி.

ஒற்றையரியானலவன்றேளொருமற்றுபய
வுருமீன்விற்சால்விடைக்கோணுறங்குலநான்காகுஞ்
சிற்றிடைகோல்சேலாடுக்கான்முதற்றேண்முதலாய்ச்
சேவயம்யாழ்த்தெருகுடைத்தாதும்மூலஞ்சீவன்
சொற்றகர்நோநோக்கணன்றுதைதவேளற்பகன்மற்
றுஞ்சொனுவாரரிமுதனுன்குங்குடமுஞ்சுறமீன்
மற்றதுமுன்னிடைவெரிநாங்தேள்சிலைமுச்சந்தி
வரிலதுகெண்டாந்தமைநேர்கழிதல்செய்தல்வரவே.

(இ-ள்.) சிங்கம் இடபம் கடகம் விரிச்சிகம் மேடம் இவைஒற்றித்தவுருவாம், மிதுனம் கன்னி துலாம்தனுசு மகரம்கும்பம் மீனம் இவை இரட்டித்தவுருவாம், கடகக்கோண் பிராமணகுலம், மேடக்கோண் க்ஷத்திரியகுலம், மிதுனக்கோண் வைசியகுலம், இடபக்கோண் சூத்திரகுலம் கன்னிதுலாம் மீனம்மேடம் இவை இடபவீதி, இடபம் மிதுனம் கடகம் சிங்கம் இவைமேடவீதி, விருச்சிகம்தனுசு மகரம் கும்பம் இவை மிதுனவீதிஇவ்வீதியே சத்திரமுமாமென்ப. மேஷம் கடகம் துலாம் மகரம் இவைதாதுராசி ரிஷபம் சிங்கம் விருச்சிகம் கும்பம் இவை மூலராசி, மிதுனங் கன்னி தனுசுமீனம் இவை ஜீவராசி, தாதுவுக்கு ககம் மூலத்துக்கு, கூ ம், ஜீவனுக்கு, எ ம், பார்வையாம் மேஷம் கடகம் துலாம் மகரம் இவை இராத்திரிராசி, இடபம்சிங்கம்விரிச்சிகம் கும்பம் இவைபகல்ராசி-மிதுனம் கன்னி தனுசு மீனம் இவைசந்திராசி சிங்கங்கன்னி துலாம்விருச்சிகம் கும்பம்இவை சிரோதையம், மகரம் மீனம் குறுக்குதையம், மேஷம்ரிஷபம் மிதுனம் கடகம் தனுசு பிரிஷ்டோதையமாம். கடகக்கோ ணந்தியமும் சிங்கக் கோணுதியுங் கெண்டாந்தம் மேஷம் கடகம்துலாம் மகரம் இவைஇறந்த காலராசி, ரிஷபம் சிங்கம்விருச்சிகம் கும்பம்இவைநிகழ்காலராசி, மிதுனம் கன்னி தனுசு மீனம் இவைஎதிர்காலராசியாம் எ-று. (ரு)

தறிக்கால்அதோமுகராசி ஊர்த்தமுகராசி
புறமுகராசி

அல்லிறைநேர்சாலரைமுக்கால்கதையிருடா
மரிபெணந்தமுக்காலான்கான்மைவிற்றேள்யாழாம்

வில்லசங்கார்கோலரைசாலீருந்தேள்விற்கோன்
மீன்கடைசேல்பெண்மான்கால்விடையரையாமிரவி
யில்லொருமுக்கால்கால்சா றுலையீருன்குளிரா
மீறுமுக்கால்கான்மான்சேலிடபமரையரியாழ்
வல்லிகலைதேண்மீனுமற்றவருந்தறிக்கால்
வான்குபின்னேர்முகமின்னூர்மனைகடைமுன்பவைக்கே.

(இ-ள்.) சந்திரனுக்கு கும்பத்தில் உ ம் கால் மிதுனம் ரு ம்கால் மேடம் ச ம் காலும்; செவவாய்க்கு சிங்கம் கன்னி ச ம் கால் இடபம் ரு ம் கால் மேடம் தனுசுவிருச்சிகம் மிதுனம் முதற்காலும், புதனுக்கு, தனுசுமேடம் கடகம்துலாம் உ ம் கால் கும்பம் ச ம் காலும், வியாழனுக்கு விருச்சிகம் தனுசு துலாம் மீனம் ச ம் கால் மீனம் கன்னிமகரம் முகற்கால் இடபம் உ ம் காலும், சுக்கிரனுக்கு சிங்கம் மேடம் ரு ம் கால் கும்பதுலாம் முதற்கால்இடபகடகம் ச ம் காலும், சனிக்குமகரம் சம் கால் மீனம் ரு ம் கால் இடம் முதற்கால் சிங்கம் மிதுனம் கன்னிமகரம் விருச்சிகம் மீனம் உ ம் காலும், ரவிக்குகன்னி துலாம் விருச்சிகம் தனுசு மகரம் கும்பம் கடகம் ரு ம் கால் கடகம் சிங்கம் முதற்கால் மிதுனம் ச ம் காலும் தறிக்காலிடமாம் ரவிநின்ற ராசி அதோமுகராசி அதற்குபின்புள்ளராசி ஊர்த்தமுகராசி அதற்கு முன்புள்ளராசி புறமுகராசி அல்லது திரியங்முகராசி மற்றப்பின் வரும் ராசிகளையெல்லாம் முறையேஊர்த்தமுகராசி அதோமுகராசி புறமுகராசி அல்லது திரியம்முகராசி யென்றுவைத்து நேர்நடத்துக எ-று. (சு)

இராசி ஊண், இராசி விழிப்பு

இராசிக்கவிப்பு, சந்திரகெதி

இராசிக்குருடு வெளிராசி உள்ராசி இடைராசி.

கடைநான்கைமுதன்முதலுண்பதுராசிக்கானேர்க்
காம்விழிப்புக்குரைப்பதுமிப்படிகாற்பேர்க்குளதா
நடவாகியுதையமிரண்டரைநாழிகைநேர்
நடத்திநடப்பதைக்கவிப்பாநடப்பிருப்பூதெலோ
திடல்சேய்நோய்களிகேடுலெங்கனமைதுனகித்
திரையூண்மைநேரிவைசந்திரகெதிக்காமிருண்மற்
றடைமீன்சாலரிமுதனன்கும்மலவுங்குருடா
மசம்வெளியுள்ளிடையெனநேரறைகுவர்மாதவனே.

(இ-ள்.) மேடத்தின் முதற்கால் மீனத்தின் ச-ம் காலையுண்ணும் உ-ம் கால் ந-ம் காலையுண்ணும் ந-ம்கால் உ-ம்காலையுண்ணும் ச-ம் கால் முதற்காலையுண்ணும் இந்தப்படி இராசிதோறும் ஆதியந்தமாக நடத்துவது ராசியூணும் மேஷத்தின் முதற்கால் கும்பம்ச-ம் காலை வ-பார்வை பார்க்கும் உ-ம்கால் ந-காலை இ-பார்வைபார்க்கும் ந-ம் கால் இரண்டாங்காலை ஞ-பார்வைபார்க்கும் ச-ம்கால் முதற்காலை முழுப்பார்வைபார்க்கும் ரிஷபத்தின் முதற்கால் மகரத்து ச-ம்காலை வ-பார்வைபார்க்கும் உ-ம்கால் ந-ங்காலை இ பார்வை பார்க்கும் ந-ம் கால் ச-ம்காலை ஞ-பார்வைபார்க்கும் ச-ம் முதற்காலை முழுப்பார்வை பார்க்கும் மிதுனம்முதற்கால் தனுசு ச-காலை வ-பார்வைபார்க்கும் உ-ம் கால் ந-ம்காலை இ-பார்வைபார்க்கும் ந-ம்கால் உ-ம்காலை ஞ-பார்வைபார்க்கும் ச-ம்கால் முதற்காலை முழுப்பார்வைபார்க்கும் இந்தப் படி மற்றத்தாதுமூலராசிக்கும் சாதிர உபயங்களுக்கும் பார்வையறிந்துகொள்க. உதையராசிதொட்டு உஇ-நாழிகை நேராக நடப்புராசியைக்கவிப்பது இராசிக்கவிப்பாம் மேடத்தில் சந்திரன்நடை இடபத்தில் இருப்பு மிதுனத்தில் பூசம், கடகத்தில் வேதமோதல், சிங்கத்தில் புத்திரப்பேறு, கன்னியில் ரோகம், துலாத்தில் கெர்ச்சிதம், விருச்சிகத்தில் கேடு, தனுசில் லெங்கனம், மகரத்தில் மைதுனம் கும்பத்தில் நித்திரை மீனத்தில்பொசிப்பு இவைசந்திரகெதியாம். சிங்கம் கன்னி துலாம்விருச்சிகம் கும்பம் மீனம் இவை இராகுக்குருடு மேஷம் ரிஷபம் மிதுனம் கடகம் தனுசு மகரம் இவைபகற்குருடு. மேஷம் கடகம் துலாம் மகரம் இவைவெளிராசி, ரிஷபம் சிங்கம் விருச்சிகம் கும்பம் இவை உள்ராசி, மிதுனம் கன்னி தனுசு மீனம் இவை இடைராசி. (எ)

நவவர்க்கம்.

மாதுவிதுமற்றிரவிமாறுமிரண்டோரை
வருவததன்முக்கோணத்ரேக்காணமதமாம்
போதுபுருடன்னேர்மற்றதற்கேழாமொருவாய்
புரவிமுதற்கானேரொன்பதுநவம்பெண்புருடர்க்
கோதுதநேர்தசமதுதொட்டுரைத்தறுவாதசஞ்சே
யூழ்சுதன்பொன்மால்சுதனுக்குண்மகனெட்டேழைந்
தீதுமுதனேரிடமற்றெய்துதறீங்கிசமா
மிநுபோற்சட்டியாங்கிசத்துக்கோரறுபதியல்பே.

(இ-ள்.) ஒருராசியையிரண்டாகப்பகிர்வது ஓரை. ஸ்திரீராசிக்குச் சந்திரஓரை முன்னும், புருடராசிக்கு சூரியஓரை முன்னுமாம். ஒரு இராசியை மூன்றாய்ப்பகிர்வது திரேக்காணம், இதற்கெந்தராசியானாலும் முந்தினகூறு அந்த ராசிதிரேக்காணமாம், இரண்டாங்கூறு அஞ்சாம் இராசித்திரேக்காணமாம், மூன்றாங்கூறு ஒன்பதாம் இராசித்திரேக்காணமாம், ஒரு ராசியை ஏழாகப்பகிர்வதுசப்தமாம் சம்புருடராசிக்கு அதுமுதல்நேரும், ஸ்திரீராசிக்கு ஏழாம்ராசிதொட்டும் நேர்நடத்துக. ஒருராசியை ஒன்பதாகப்பகிர்வது நவாம்சம்இதற்கு அசுபதி முதற்கால்தொட்டு மேடமுதல்வைத்து நேர்நடத்துக. ஒரு ராசியைப்பத்தாகப்பகிர்வது தசாம்சம் புருடராசிக்கு அதுமுதல்நேரும் ஸ்திரீராசிக்கு ஒன்பதாம்ராசிதொட்டும் நேர்நடத்துக ஒருராசியைப் பன்னிரண்டாகப்பகிர்வது துவாதசாம்சம் இதற்கு இந்தராசிதொட்டுப் பண்ணிரண்டும் நேர்நடத்துக ஒருராசியை முப்பதாகப்பகிர்வது திரீம்சாம்சம் இதற்குசெவ்வாய்க்கு ருடம் சனிக்கு ரு-ம் வியாழனுக்கு அ-ம் புதனுக்கு எ-ம் சுக்கிரனுக்கு ரு-மாக நேர்நடத்துக இவைபுருடராசியாகில் நேராகவும் ஸ்திரீராசியாகில் விகிர்தியுமாகநடத்துக. ஒரு ராசியை அறுபதாகப்பகிர்வது சஷ்டியாம்சம் இது ஒற்றைக்குநேரும் இரட்டைக்கு விகிர்தியுமாகநடத்துக-எ-று. (அ)

சஷ்டியாம்சம்.

கோரமவுண்டேவரளகைக்குமன் றுற்கிரியை
  கோடையினசணக்கோபங்கொடுவிடந்தீகோதற்
றுர்தன்மயலாந்தகம்பிரேதபுரீபாவ
  மதிதேவங்கணநாதமெமரவ்ம்பிரத
மேர்மிருதுகோமளம்ப்ரபலம்வாசமீச
  மியம்பிறைதிகாம்பரம்வானிறைகவிதைநாசம்
பாரதிபமலர்சனிசேய்சுதமமிர்தபூரணம்பான்மதியே.

(இ-ள்.) முதலங்கிஷம்கோரம் உ-வது இராக்கதம் ரு-வது தேவம் ச-வது குபேரம் ரு-வது இராக்கதயேர்கம் சு-வதுகின்னரம்எ-வது இட்டகுலகோபம் அ-வது விடம் கூ-வது அக்கினி ம-வது அகளங்கம் கக-வது மாயாந்தகம் கஉ-வது பிரேதபுரிபாவம் கரு-வது அதிதேவம் கச-வது கணேசம் கரு-வது காலன் கசு-வது சர்ப்பம் கஎ-வது அமிர்தம் கஅ-வது அபிராமம் ககூ-வது மிருது உம-வது கோமளம் உக-வது பிரபலம் உஉ-வது சுவாசம் உரு-வது ஈசம் உச-வது வாகீசம் உரு-வது திகம்பரம் உசு-வது தேவேந்திரம் உஎ-வது கவிதை உஅ-வது நாசம் உகூ-வது பூபதி ரும-வது கமலம் ருக-வது சனீசுதம் ருஉ

வது பவர்த்தகம் ௩௩-வது அக்கினிகோரம் ௩௪-வது எமகணடகம் ௩௫-வது சுதம் ௩௬-வது அமிர்தபூரணம் ௩௭-வது சந்திரம். எ-று.

சஷ்டியாம்சப்பெயர்.

தேவசாம்சப்பெயர்.

மதிமயக்கம்பாக்கியங்கேணுசம்வெகுமானம்
வங்கிசக்கேடுற்பாதமறலியுருமகிழ்மாய்
வதிதளமற்பகடசுமுகந்தெக்ஷணகுரூர
மாதண்டமமலமதிசுபமலததீதந்
ததிமுனரோததிசுழ்ல்சந்த்ராங்கமறுதற்காஞ்
சாற்றுசுராங்கிஷம்பாரிசாதமொடுத்தமம்பின்
னுதிதருகோபுரமிருகாசனம்பாராவதம்வா
னுலகம்வைசேடிகமைராவதமிவைபேர்க்குளதே.

(இ-ள்.) சஷ்டியாம்சத்தில் ௩அ-வது அம்சம் மதிக்கம் ௩௯-வது சௌபாக்கியம் ௪0-வது குலநாசம் ௪க-வது முக்கியம் ௪உ-வங்கிச நாசம் ௪௩-வது உத்பாதம் ௪௪-வது காலரூபம் ௪௫-வது சௌமியம் ௪௬-வது மிருகம் ௪எ-வது சுசீதளம் ௪அ-வது திமிரம்௪௯-வது திவா ரு0-வது சந்திரமுகம் ருக-வது பிரதெக்ஷணம் ருஉவது காலாக்கினி ரு௩-வது தண்டம் ரு௪-வது நிருமலம் ரு௫-வது சுபம் ரு௬-வது அசுபம் ருஎ-வது அதிதம் ருஅ-வது பயோததி ரு௯-வது சுழல் ௬0-சந்திரதேகமாம் இவை ௬0-ம் சஷ்டியாம் சப்பெயராம் தேவதாம்சகத்தில் முதல் அம்சகம் பாரிசாதம் உ-வது உத்தமம் ௩-வது கோபுரம் ௪-வது சிங்காசனம் ரு-வது பாராவதம் ௬-வது தேவலோகம் எ-வது வைசேடிகம் அ-வது ஐராவதம் இவை அ-ம் தேவதாம்சப்போாம். எ-று. (௰)

தேவதாம்சஇயல்வு இராசித்துற்பொசிப்பு

கரேசம், இராசிக்கதிர், அசுபசுபஇராசி.

வைப்புதையமுதலறுபதங்கிஷமீறளவும்
வருஞ்சுபம்ரண்டாய்த்தேவராங்கிஷநேர்வருமா
லிப்பருதியிற்சாற்கோணடுமீன்கோண்மான்பின்
னிவைக்கெருவைகேழன்மற்றதரவூணீரிருபா

னப்புரமுக்கோணதுகரேசமெனலாமீ
ணத்தினம்பெண்விற்றமையனுன்கலைபாறரிவே
டப்பினவெட்டிவைகதிர்க்காமங்கதிர்நேரிவர்க
டப்மிலசுபஞ்சுபமிவ்வாதிபஞ்சாற்றுதலே.

(இ-ள்.) பூவோதையலக்கினமுதல் சஷ்டியாங்கிசம்வரைக்குமுள் ள கூ-வர்க்கத்தில், ங-சுபவர்க்கமேறில் பாரிசாதாம்சம் ங-சுபவர்க்க மேறில் உத்தமாம்சம் ச-சுபவர்க்கமேறில் கோபுராம்சம் ரு-சுபவர்க்க மேறில் சிங்காசனும்சம் சு-சுபவர்க்கமேறில் பாராவதாம்சம் எ-சுபவர் க்கமேறிய தேவலோகாம்சம் அ-சுபவர்க்கமேறில் வைசேடிகாம்சம் கூ-சுபவர்க்கமேறில் ஐராவதாம்சம் சிங்கம் மிதுனம் துலாம் இவற்றின் நடுக்கூறு, கழுகுண்ணும் மீனக்கோண்மகரம் இவற்றின் பிற்கூறு பன்றியுண்ணும், மேடம் தனுசு கன்னி இடபம் இவற்றின் முற்கூறு பாம்புஉண்ணும். இவை இராசித்துற்பொசிப்பாம். ஜென்மலக்கிண திரேக்காணத்துக்கு உஉ-ம் திரேக்காணம் கரேசமாம் மீனத்துக்குக் கதிர் உஎ, தனுசுகன்னிக்கு கக இடபம் மகரத்துக்கு சு, சிங்கத்துக் கு எ, மேடம் மிதுனம்கடகம் துலாம் விருச்சிகம் கும்பம்இவற்றிற்கு அ-ம் இராசியாதிபதியறிந்து இராசிக்கு அசுபசுபஞ்சொல்லுக. எ-று.

புதனோட்டம், இராசியாம்சம், தேசராசி,

புட்கராம்சம், அவமிருத்து, நிதனன், அனித்தியன்.

சாற்புதனேர்நங்நான்காய்த்தபனனுடன்முன்பின்
றரித்தல்சரமூதற்கதுவுந்தந்தைதனையருநெ
ராரபுகல்வதங்கிசமைநேர்பாடல்கர்ண
டகமூவர்கேரளங்கொன்மலையசிந்தாச்சால
மேற்பதெழில்கோசலமுன்னோர்முடிதூசெமன்க
ணெய்தல்புட்கராங்கிசமிப்பாகைசிகியிற்கோ
ணீற்புரமிருத்துபயவீறுளனிக்கானேர்
நிற்பனிவனில்லதிபனிதனனனித்தியனே.

(இ-ள்.) கும்பம்-மீனம்-மேடம்-ரிஷபம் இந்த ச-ராசியிலும் புதர வியுடன் கூடிநடப்பன் மிதுனம்-கடகம்-சிங்கம்-கன்னி இவைச-லும் புதன் ரவிக்கு முன்னடப்பன் துலாம்-விருச்சிகம்-தனுசு-மகரம்இவை ச-லும் புதன்ரவிக்குப் பின்னடப்பன் சரத்துக்கு அதுமுதல் நேரும் திரத்துக்கு கூ ம் ராசி முதல் நேரும். உபையத்துக்கு ரும் ராசிமுதல் நேருமாக நடத்துவது ராசியாம். சகமாம் மேடத்துக்குத் தேசம் பாடலம், இடபத்துக்குக் கர்னுடகம், மிதுனத்துக்குச் சேர

ளுடு, கடகத்துக்குச்சோழனுடு, சிங்கத்துக்குப் பாண்டிநாடு, கன்னிக்குக்கேரளம்; துலாத்துக்குக கொல்லம் விருச்சிகத்துக்கு மலையம், தனுசுக்குச் சிந்துதேசம், மகரத்துக்குப்பாஞ்சாலம், கும்பத்துக்கு யவனம், மீனத்துக்குக்கோசலமாம், மேஷம் சிங்கம் தனுசில் பாகை உக-ம் ரிஷபம் கன்னிமகரத்தில் பாகை ௰சு-ம் மிதுனம் துலாம்கும்பத்தில் பாகை உசும் கடகம் விருச்சிகம் மீனத்தில்பாகை எ-ம் ஆக நடத்துவது புட்கராம்சமாம் கேதுநின்ற ராசித்திரிகோண உபையாந்தம். அவமிருத்துவாம் இவன் இக்கால் நேர்நிற்பன் இவனின்ற இராசியாதிபதிக்குநிதனனென்றும் அனித்தியனென்றும்பேராம். எ-று. ()

சயனராகு, க்ஷணிகராகு, க்ஷணிகாதித்தன்,
க்ஷணிகசந்திரன், நிற்கும்ராசி, நடக்கும்ராசி,
இருக்கும்ராசி, கெர்ப்பத்துவாரவான்மிபாசி,
துற்பெலராசி, பெலராசி, அதிபெலராசி.

நித்திரைமாசுணமானேர்மூன் றிவைபெண்ணிடமாய்
நேர்கமுகங்களமகடுநிதமபமவ்வாலிவைநேர்
வைத்திவைபோல்வில்லவலமைவலமுமாக
வருத்தல்பகற்கிவைவிகிர்திப்பேர்வரன்மற்றதற்கா
மித்தலநேரோரையளவெய்து தலச்சணிக
மீதினனுக்கிடஞ்சிலைநேரிவற்கெதிரிந்துவுக்கா
மத்தனுநேர்நிற்றனடையிருத்தல்கெர்ப்பந்த்வார
மதுவாந்தகர்முதனேரதிபெலப்பேர்க்காமே.

(இ-ள்.) மகரத்தில்-சிரமும் கும்பத்தில்-முகமும் மீனத்தில்-கண்டமும் கன்னியில்-வயிறும் சிங்கத்தில்-யோனியும் கடகத்தில்-வாலுமாகவும், தனுசில்-சிரமும் விருச்சிகத்தில்-முகமும் துலாத்தில்-கண்டமும், மேடத்தில்-வயிறும் இடபத்தில்-யோனியும் மிதுனத்தில் வாலுமாகவும் பகற்காலத்தில் ராகுசயனித்திருப்பன் கடகத்தில்-சிரமும், சிங்கத்தில்-முகமும், கன்னியில்-கண்டமும், மீனத்தில்-வயிறும், கும்பத்தில்-யோனியும், மகரத்தில்-வாலுமாகவும், மிதுனத்தில்-சிரசும. இடபத்தில்-முகமும், மேடத்தில்-கண்டமும், துலாத்தில்-வயிறும் விருச்சிகத்தில்-யோனியும், தனுசில்-வாலுமாகவும் இராத்திரிகாலத்தில் ராகுசயனித்திருப்பன், மகரம்-கும்பம்-மீனம் கன்னி-சிங்கம்-கடகம்-தனுசு-விருச்சிகம்-துலாம்-மேடம் - இடபம்மிதுனம் - இவ்விராசிகனில் நேராய் உஇ நாழிகையாகவைத்து நடத்துவது க்ஷணிகராகு

தனுசு விருச்சிகம்-துலாம்-கன்னி - சிங்கம்-கடகம்-மிதுனம்-ரிஷபம்-மேஷம்-மீனம்-கும்பம்-மகரம்-இவ்விராசிகளில் நேராக ௨இ நாழிகை வைத்து நடத்துவதுக்ஷணிகாதித்தன்மிதுனம்-ரிஷபம்-மேஷம்-மீனம் கும்பம் - மகரம்-தனுசுவிருச்சிகம் துலாம்-கன்னி-சிங்கம்-கடகம்-இவ் விராசிகளில் நேராக ௨இ நாழிகைவைத்து நடத்துவது க்ஷணிகசந்திரன் தனுசு மீனம் மிதுனம் கன்னி இவைநிற்கும் ராசி, மகரம் மேஷம் கடகம் துலாம் இவைநடக்கும் ராசி, கும்பம் ரிஷபம்சிங்கம் விருச்சிகம் இவை இருக்கும் ராசி, தனுசு மீனம் மிதுனம் கன்னி இவை கெர்ப்பராசி, மகரம் மேஷம்-கடகம்-துலாம்-இவை துலாராசி, கும்பம்-ரிஷபம்-சிங்கம் விருச்சிகம-இவை வான்மியராசி, மேஷம்-கடகம்-துலாம் - மகரம்-இவைதுற்பெலராசி, ரிஷபம் - சிங்கம் - விருச்சிகம்-கும்பம் - இவைபெலராசிமிதுனம் - கன்னி-தனுசு-மீனம் இவைஅதிபெலராசி. எ-று. (௧௩)

ஏகாதிபத்தியம், சகடயோகம், சமசப்தமம்,

மாமககாலம், மலமாசம், பானுமத்தியம்.

அதிபதிப்பேர்க்கவரவருக்கமைத்தமனேக்கதுவா
மலவனுக்கேறந்தணனில்லரிக்கெனலற்கதிபன்
தனநிதிக்கெனிற்சகடயோகமெனலேழேழ்
பானுவிதுவல்லவர்கள்பற்றல்சமசத்த
நிதியரியுற்றிடுநாண்மாமகப்பேரிந்திரவி
நிற்பதொருராசியில்ரண்டுதரநெடுமாதம்
புதனிடபத்திறைநடுவெம்புபனுநிற்பேரிவைப்பேர்
புகல்வரிதன்மேற்றிதிப்பேர்க்குளவியல்போதுதலே.

(இ-ள்.) மேடவிருச்சிகமும் இடபதுலாமும், இடபதுலாமும், மிதுனகன்னியும், கடகஇடபமும், சிங்கதனுசும், தனுசுமீனமும், மகரகும்பமும், ஏகாதிபத்தியமாம் குருவுக்கு சு-அ-௰௨-ல் மதிநிற்கில் சகடயோகம்-ரவி மதி நீங்கலாக மற்றவர்கள் எ-க்கு எ-ஆக வரில் சமசப்தமம் சிங்கத்தில் குருவிருக்கும் நாள் மாமககாலம் ரவிநிற்கும் ராசியில் மதி இரண்டுதரம் வரில் மலமாசம் புதசுக்கிரனுக்கிடையில் ரவிநிற்கில் பானுமத்தியம்-இதன்மேற்றிதிசரித்திரம் சொல்லுவோம். எ-று. (௰௪)

இராசிசரித்திரப்படலம்முற்றிற்று.

ஆகப்படலம்-௫-க்கு கவி ௫௩.

# திதிசரித்திரப்படலம்.

திதிதேவதை காளகூடயோகம்.

திதிக்கதிபர் துர்க்கைவிசுவத்ததிபன்மதிமாச்
சிரசினன்றேவிறைகுகனூழ்செல்விசொற்ருய்சிற்றத்
துதித்தவனம்பிகைமால்கம்முருத்திரனீர்தனத
னூதைகனலவுணர்சுரருலகுதையன்முனிவோ
ரதித்தெருண்மனமன்பொன்னசிதன்சிதனந்தீச
னவரின்மற்றவர்பூர்வபக்ஷமுதற்கவைநோ
விதிப்பர்சுபதினத்தினனேர்பஞ்சமிதொட்டுடனே
மேவிலிதற்கோதல்கொடுவிடகூடப்பெயரே.

(இ-ள்.) பூர்வபக்ஷத்துப்பிரதமை துர்க்கை, துதியைவிசுவதேவன் திரிதியைசந்திரன், சதுர்த்திவிக்கினேஸ்வரன், பஞ்சமிதேவேந்திரன், ஷட்டிசுப்பிரமணியன், சத்தமிசூரியன், அட்டமிஇலக்குமி, நவமிசரசுவதி, தசமிவீரபத்திரன், ஏகாதசிபார்வதி, துவாதசிவிட்டுணுதிரையோதசிபிரமா, சதுர்த்தசிஉருத்திரன், பௌரணைவருணன், அமரபக்ஷத்துப்பிரதமைகுபேரன், துதியைவாயு, திரிதியை அக்கினி, சதுர்த்திஅசுரர், பஞ்சமிதேவர்கள், ஷட்டிஅங்காரகன், சத்தமி முனிவோர், அட்டமிசேஷன், நவமிநமன், தசமிவியாழன் ஏகாதசி சனி, துவாதசிசுக்கிரன்-திரையோதசி நந்தீஸ்வரன்-சதுர்த்தசிமகேஸ்வரன் அமாவாசிசதாசிவன்-இவை திதிதேவதையாம், பஞ்சமியில் நாயிறு அத்தமும் சஷ்டியில் திங்கள்திருவோணமும் சத்தமியில் செவ்வாய் அசுபதியும், அட்டமியில் புதன் அனுசமும் நவமியில் வியாழன் பூசமும்-தசமியில் வெள்ளிரேவதியும் ஏகாதசியில் சனிரோகணியும்வரில் காளகூடயோகமாம். எ-று. (க)

திதித்தீது.

ஒதிலேந்தேழும்மிரண்டெட்டும்மாறென்பானெட்
டும்மிதிலாறற்றெருபானுற்றதும்பத்தோடொன்
ருதிகமொன்பானேழுமாறிரண்டோர்நான்கு
மாறேகதசமுமல்லாதயனிறைவுமடுப்பே
மீதுமனுசம்பதின்மூன்றும்மிருமூன்றரியு
மிரேவதியெட்டைந்தனவிரண்டுடையுமிவைநேர்
பூதலநந்தனனேர்வாரத்துறிலித்திதியும்
பூரணைபேர்க்காதியுமீறும்புகலிலவமே.

(இ-ள்.) செவ்வாயில் பஞ்சமிசத்தமியும், புதனில் அட்டமி துதி யையும் வியாழனில் நவமி அட்டமி சஷ்டியும், வெள்ளியில்-தசமி அட்டமி நவமியும், சனியில்-நவமி சத்தமி ஏகாதசியும், நாயிறில்-சதுர்த்தி துவாதசியும், திங்களில் ஏகாத சஷ்டியும் வரில்தீதாம், இவையல்லாமலும் செவ்வாயில் ரோகணி பூரணையும், புதனில் பரணி சத்தமியும், வியாழனில்-அனுசம் திரையோதசியும், வெள்ளியில-திருவோணம் சஷ்டியும் சனியில்-ரேவதி அட்டமியும், நாயிறில் கார்த்திகை பஞ்சமியும், திங்களில் சித்திரை துதியையும் வரில்தீதாம். நந்தையும் இருத்தையும் ஆகாது. எ-று. (௨)

யோகினிநிலை, பூமிசுக்கிரனிலை,

திதிவிஷநிலை.

ஈறேழும்பத்திரண்டுமெட்டுமொன்றென்பானு
மெகதசமூன்றும்பதின்மூன்றேடைந்திவவீறு
மாறீரேழ்வாயுமுதல்வைத்ததுதொட்டுள்ள
தாந்திசைநேர்மற்றதொன்றென்றையிரண்டப்படிநேர்
மாறுசைவான்புவிபின்னுன்முனெட்டுபின்னேழ்
வளர்ந்ததந்நால்பின்றிரிமுன்னெகதசம்பின்றசநேர்
கூறுசைசாமமிவை விஷமதுயோகினிப்பேர்
கூச்சிதன்பின்வலமிடம்பின்கூட்டுதனற்றிதியே.

(இ-ள்) உவாசத்தமிவடமேற்கிலும், தசமிதுதியைவடக்கிலும், அட்டமிவடகிழக்கிலும், நவமிபிரதமைகிழக்கிலும், ஏகாதசிதிரிதிமை தென்கிழக்கிலும், திரையோதசி பஞ்சமிதெற்கிலும், துவாதசிசதுர்த்திதென்மேற்கிலும், சட்டிசதுர்த்தசிமேற்கிலும், யோகினிநிலையாம். பிரதமைகிழக்கில், துதியை தென்கிழக்கில், திரிதியைதெற்கில், சதுர்த்திதென்மேற்கில், பஞ்சமிமேற்கில், சட்டிவடமேற்கில், சத்தமிவடக்கில், அட்டமிவடகிழக்கில், நவமிஆகாசத்தில், தசமிபூமியில் பூமிசுக்கிரன்நிலையாம். இந்தப்படி மற்றிருப்பதும்நேர்நடத்துக அமரபக்ஷம் சதுர்த்தி முதற்சாமங்கிழக்கிலும், பூர்வபக்ஷம் அட்டமி ௨-ம் சாமம் தென்கிழக்கிலும், அமரபக்ஷம்சத்தமி ௩-ம் சாமம்-தெற்கிலும், பூரணை ௪-ம் சாமம் தென்மேற்கிலும், பூர்வபக்ஷம் சதுர்த்தி ௫-ம் சாமம் மேற்கிலும், அமரபக்ஷம் திரிதியை ௬-ம் சாமம்வடமேற்கிலும். பூர்வபக்ஷம் ஏகாதசி ௭-ம் சாமம் வடக்கிலும், அமரபக்ஷம்தசமி ௮-ம் சாமம் வடகிழக்கிலும், விஷநிலையாம். யோகினிக்குப் பின்னும் வலமும் பூமிசுக்கிரனுக்குப் பின்னும் இடமும் ஆதமென்ப மற்றவையாகாவென்ப. எ-று. (௩)

திதிகெண்டாந்தம், நந்தை பத்திரை,
சயை, இருத்தை, பூரணை, திதிநேத்திராந்தகம்,

திதிப்பெபரின்முன்னேரைந்தா றிதன்முக்கோண்சந்
திதிப்பெயர்கெண்டாந்தமொன்றுறேகதசமிவைசேர்ந்
துதிப்பது நேர்நந்தையும்பத்திரைசெயையிருத்தை
யும்பரிபூரணமுமெனவுஞ்சொலுவாரமாத்
ததிற்பதினென்றுய்நவமூன்றுறெருமூன்றறுமூன்
றந்தகமற்றென்றிரண்டாமக்கமுநேருளதா
மிதிற்பிரமற்கொருதனையயோககரணங்கட்
கியல்பதுங்கேளென்றனனென்னிதையசுகாதிதனே.

(இ-ள்.) பஞ்சமி சட்டி தசமி ஏகாதசி உவாபிரதமை இவைஅந்தமாதிசந்தி திதிகெண்டாந்தம் பிரதமை சட்டி ஏகாதசி இவை ௩-ம் நந்தை. துதியை சத்தமி துவாதசி இவை ௩-ம் பத்திரை. திரிதியை அட்டமி திரையோதசி இவை ௩-ம் சயை. சதுர்த்தி நவமி சதுர்த்தசி இவை ௩-ம் இருத்தை. பஞ்சமி தசமி உவா இவை௩-ம்பூரணை அமரபக்ஷத்து ஏகாதசி துவாதமி திரையோதசி சதுர்த்தசி அமாவாசி பூர்வபக்ஷத்துப்பிரதமை துதியை திரிதியை சதுர்த்தி. ஆக கூ-ம் குருடு. இதன்மேல் பூர்வபக்ஷம் பஞ்சமி சட்டி சத்தமி ஆக ௩-ம் ஒருகண். இதன்மேல் பூர்வபக்ஷம் அட்டமி நவமி தசமி ஏகாதசி துவாதசி திரையோதசி ஆக சு-ம் இருகண். இதன்மேல் பூர்வபக்ஷம் சதுர்த்தசி பூரணை அமரபக்ஷத்துபிரதமை ஆக ௩-ம் ஒருகண். இதன்மேல் அமரபக்ஷம் துதியை திரிதியை சதுர்த்தி பஞ்சமி சட்டி சத்தமி ஆக சு-இருகண், இதன்மேல் அமரபக்ஷம் அட்டமி நவமி தசமி ஆக ௩-ம் ஒருகண், இதன்மேல் பிரமனுக்கு ஒப்பற்ற புத்திரனை அகத்தியனே யோககரணசரித்திரம் கேட்பாயாகவென்று திருவாய்மலர்ந்தருளினவன் என்னிதைய சுகாதீதனை சுப்பிரமணியக் கடவுள். எ-று. (௪)

திதிசரித்திரப்படலம் முற்றிற்று.

ஆகப்படலம்-சு-க்கு கவி ருயஎ

# யோககரணசரித்திரப்படலம்

யோகதீது யோகதோஷம்

கரணதீது.

அதிகண்டம்வச்சிரஞ்சூல்கம்பம்விதிதாள்வி
யாகாதம்வைதிருதிபரிகெண்டமாகா
திதிஹுறல்புல்தார்விதுமாவகிவேய்நெய்மீனே
ரிராக்கதரித்தினத்திரவியெய்தியநாட்கெதிர்நாண்
மதிவரில்யோகத்தோஷமாசுணநாய்கூகை
வாரணம்வேசரிகோலம்புழுகரணத்தவமாம்
பதுமனுதவுந்தனேயவினிக்கிரகாதிவர்தம்
பண்பதுங்கேளென்றனன்றற்பரகுருதேசிகனே.

(இ-ள்.) அதிகண்டம் வச்சிரம் சூலம் விஷ்கம்பம் விதிபாதம் வியாகாதம் வைதிருதி பரிகம் கெண்டகம் ।இவையோகதீதாம். அதிகண்டமும் அனுகண்டமும் வச்சிரமும் பூசமும் சூலமும் மிருகசிரமும் விஷ்கம்பமும் அசுபதியும் விதிபாதமும் ஆயிலியமும் வியாகாதமும் புனர்பூசமும் வைதிரிதியும் சித்திரையும் பரிமகமும் மகமும், கெண்டமும் சூலமுமாகிய இந்தயோகமும் இந்தநட்சேத்திரமுங் கூடும்நாளில் ரவிவர இவனுக்குஎதிர்மதிவரில் யோகதோஷமாம். நாகவம் சதுர்ப்பாதம் சகுனி பத்திரை தைதுலம் கௌலவம் கிமிஸ்த்துக்கினம் இவைஏழும் கரணதீதாம் பிரமதேவனுக்குப் புத்திரனுனவா இதன்மேல் கிரகாதிபர்சரித்திரம் கேட்பாயாகவென்றனன் தானே தனக்குப் பரமாகநின்ற சிவனுக்குக் குருதேசிகனுன சுப்பிரமணியக் கடவுள். எ-று. (க)

யோககரணசரித்திரப்படலம்

முற்றிற்று.

ஆகப்படலம்-எ-க்கு கவி-ருஅ.

# கிரகாதிபர்சரித்திரப்படலம்.

---

தாதுமூலஜீவக்கிரகம், உச்சநிலைக்கிரகம்
இடைநிலைக்கிரகம், பூமிநிலைக்கிரகம்,
கிரகாதிபருக்குக்கதிர், கால், திக்கு.

குருமதிமா னுயிர்புகரும்மூலமதுமற்றோர்க்
குளசிதன்பொன் னுச்சம்விதுமானடுவவர்க்காம்
பருதிமுதன்முப்பதெழுநான்கிருநான்காறொன்
பதுமேழுமூன் றுமிரண்டுக்கவர்க்காம்பாம்பி
னுருவிருவோர்விதுப்பலகா லுத்தமருக்குபைய
மொருநான்காமற்றவர்கட்குள்ளதுமாத்தாண்டன்
வருடையன்பொன்மால்கவியெமன்மதிமாசுணமாய்
வளைத்திடலக்குணதிசைநேர்வகுப்பதுமெண்டிசைக்கே.

(இ-ள்.) வியாழன் சந்திரன் புதன் ஜீவக்கிரகம், சுக்கிரன்ரவிமூலக்கிரகம், மற்றுள்ளவர்கள் தாதுக்கிரகமாம். சுக்கிரன் வியாழன்உச்சநிலைக்கிரகம் மதிபுதன் இடைநிலைக்கிரகம், மற்றுள்ளவர்கள் பூமிநிலைக்கிரகமாம். ரவிக்குக்கதிர் ௩௰, மதிக்கு ௨௮, சேய்க்கு ௮ புதனுக்கு ௬ குருவுக்கு ௯ சுக்கிரனுக்கு ௭ சனிக்கு ௩ இராகுகேதுவுக்கு ௨ இராகுகேதுசந்திரன் இவர்கட்குவெகுகால், புதன்குருசுக்கிரன் இவர்கட்குஇரண்டுகால், மற்றவர்கட்கு நாலுகாலாம். ரவிக்குகீழ்திரை, சேய்க்குதென்கீழ்த்திசை, குருவுக்குதென்றிசை, புதனுக்குதென்மேற்றிசை, சுக்கிரனுக்குமேற்றிசை, சனிக்குவடமேற்றிசை, மதிக்குவடதிசை இராகுகேதுவுக்கு வடகீழ்த்திசையாம். எ-று. (௧)

கிரகாதிபர்வயது, குலம், நடக்குங்கிரகம்.
கிடக்குங்கிரகம், நிற்குங்கிரகம், இருக்குங்கிரகம்,
ஜெலசுஷ்கக்கிரகம், ஆண்பெண் அலிக்கிரகம்,
கிரகாதிபருக்குருசி,

எண்ணிரண்டாண்டிருபதையாறேழொருநூறரைநூ
ற்றமூபதனனேர்பொன்விதுவும்மிரவிசேயும்
பொன்னிறைபாற்கவனேர்நாற்குலப்பேர்மற்றதற்பேர்
பிருகொருவனேரிரண்டுபேர்நடத்தல்கிடத்த
னிண்ணலிருப்பாஞ்சிதனிந்தகிநீர்மற்றவர்மா
னிசிதனலிநீர்க்கதிபர்பெண்ணதுநிற்பவரா

மண்ணிறைநேர்விருவிருத்ததுவரினித்தல்புளித்தன்
மகாகசத்தலெரித்தலுப்பாய்வகுப்பருசியதற்கே

(இ-ள்.) சேய்க்குவயசு ௰௬, புதனுக்கு உ௰-குருவுக்கு ௩௰, சுக்கிரனுக்கு எ, சனிக்கு ௱, ரவிக்கு ௫௰, மதிக்கு எ௰, குருமதிபிராமணகுலம், ரவிசேய் க்ஷத்திரியகுலம், புதன்வைசியகுலம், சுக்கிரன்சூத்திரகுலம், சனிசங்கரசாதி, இராகுகேது நீசசாதியாம், சுக்கிரன்நடக்குங்கிரகம், சனிரவிகிடக்குங்கிரகம், மதிசேய் நிற்குங்கிரகம், புதன்குருஇருக்குங்கிரகம், சுக்கிரன்சந்திரன்இராகு ஜெலக்கிரகம், மற்றவர்கள் சுஷ்கக்கிரகமாம். புதன்சனி அலிக்கிரகம் சுக்கிரன் சந்திரன் இராகு பெண்கிரகம். மற்றவை ஆண்கிரகமாம். சேய்க்குருசிவிருவிருத்தல், புதனுக்குதுவர்த்தல், குருவுக்கு இனித்தல், சுக்கிரனுக்கு புளித்தல், சனிக்கு கசத்தல், ரவிக்குஎரித்தல் மதிக்குஉப்பு. எ-று. (உ)

கிரகஅவஸ்த்தை.

வகுப்பதுவாலிபமுதலாய்யைந்துவர்க்கத்துளதின்
மனுவில்கொடைசமைத்தல்விருந்தயன்மகிழ் வுண்டிருத்தல்
பகுத்தபலவூர்திபயமிடஞ்சுபம்வாகனமாம்
பார்குலமூர்குடும்பமொருபட்டணந்தேசமுமா
மகத்தவளூடுதலதிகதுயிலவள்சையோக
மசனதுயில்சயனமகிழ்வன்னியர்பாற்புல்ல
னிகர்த்தமரணங்கிடையாபத்தரசர்கோப
நெருப்புவிஷாயுதபயநோய்நேரிவையென்பதுவே.

(இ-ள்.) வாலிபகுமார தருண விருத்த மாரணவர்க்கத்துள் போசனகெமன ராச்சிய நித்திர மிருதக்கிரியையில் உட்கிரியையறியும்படி போசனகாலத்தில் நிர்ச்சனபோசனம். அன்னதானம், சுயம்பாகம், விருந்தோடுண்ணல், பாரான்னப்பொசிப்பு, சுகபோசனமென்ப கெமனுகாலத்தில் சஞ்சாரம், வெகுவாகனம், தீர்த்தயாத்திரை, தானப்புரட்டம், மங்களயாத்திரை, வாகனசஞ்சாரமென்ப இராச்சியபத்தியத்தில் மண்டலாதிபத்தியம், குலாதிபத்தியம், கிராமாதிபத்தியம், குடும்பாதிபத்தியம், நகராதிபத்தியம், தேசாதிபத்தியமென்ப, நித்திராகாலத்தில் களத்திரவிரோதம், தீர்க்கநித்திரை, களத்திரவிஷயம், நிர்ச்சனநித்திரை, சயனசந்தோஷம், பரதாரவிஷயமென்ப. மிருதகாலத்தில் ஆற்பனசமான சரீரபதனம், கெமனவற்சிதம், ஆபத்தானகாலம், இராசதண்டனை, விஷாக்கினிகருவிபயம், ரோககாலமென்ப.

கிரகாதிபர்தானம், வடிவம், வரு

ங்காலம், கிரகவெற்றி.

பதுமமனனேர்வனநீர்ப ருயரநகரம்
பயக்கரைமுன்னுசமுறம்பட்டணம்பட்சேரி
சதுரசம்வட்டந்துடிசட்கோணநெடும்பட்டஞ்
சாதுரட்டிக்கோண்டனுதார்முறந்தலமற்றுருவாங்
கதிரயணமுகுர்த்தமொர்நாள்ருதுமாதம்பட்சங்
காரியொராண்டெட்டொருமூன்ருய்வரநிங்களுக்கா
மதியிலிடமாயாறின்மற்றதின்பின்முன்பாய்
வருபவர்வெல்பவரிவையும்வக்கிரப்பேர்க்காமே.

(இ-ள்.) ரவிக்குஸ்தானம் காடு, மதிக்குஜெலம், சேய்க்குபூமி, புதனுக்கு உயர்ந்தஇடம், குருவுக்கு நகரம், சுக்கிரனுக்கு ஜெலதீரம், சனிக்குபோகுடியுற்ற புராதனநகரம், இராகுகேதுவுக்கு பட்சேரியாம் ரவிசதுரசம், மதிவட்டம், சேல்தமருகம், புதன் அறுகோணம், குருநெடும்பட்டம், சுக்கிரன் எண்கோணம், சனிவில், இராகுமாலை. கேதுமுறம், இவைகிரகாதிபர்வடிவாம். வருங்காலமறியும்படி ரவிக்கு மாசம் ௬-மதிக்கு ஒரு முகுர்த்தம் சேய்க்கு ஒருதினம், புதனுக்கு மாசம் ௨. குருவுக்குமாசம் ௧. சுக்கிரனுக்கு ௰௫-நாள். சனிக்கு வருடம் ௧. இராகுவுக்கு மாசம் ௮. கேதுவுக்கு மாசம் ௩. வெற்றியறியும்படி கடகமுதல் இடமாகக் கும்பம்வரைக்கும் இருந்தகிரகத்தை வருங்கிரகம் வெல்லும். மற்றவைகளில் வரும் கிரகத்தை யிருக்குங் கிரகம் வெல்லும் வக்கிரத்துக்கு இருப்பவனும் நடப்பவனும் வெல்லுவன். எ-று. (௪)

கிரகாதிபர்நிறம், கிரகாதிபர்மறு,

கிரகாதிபர்கொடுக்குங்காலம், கிரகாதிபர்உதையம்,

கிரகாதிபர்பார்வை.

வக்கிரனெல்சிகிசிவப்பாம்பொன்னதுமால்பச்சை
மதிசிதன்பான்மற்றசிதமறுவிடைகம்முதுகு
கைக்கொடுக்கந்தோண்முகங்கவான்கழலக்கதிர்நேர்
கனலிரவிமுன்பரவுகணக்கனெக்காலமும்பொன்
சுக்கிரன்மத்தியிற்கடையின்மற்றவராஞ்சம்பத்
துடையவர்தோற்றஞ்சுகனேர்துணையிணைமற்றவரா
யக்கிரமநடுச்சரமாமேன்முகம்பால்கீழ்நே
ராய்க்கவிழ்தல்குறுக்கிரவியாய்நவினேக்கதற்கே.

(இ-ள்.) சேய்ரவி கேதுசிவப்பு, வியாழன்பொன்னிறம், புதன்ப ச்சை, சந்திரன் சுக்கிரன்வெளுப்பு, சனிராகு கருப்பாம் - ரவிக்கு இடையிலும், மதிக்கு சிரசிலும், சேய்க்கு முதுகிலும், புதனுக்கு கைமூலத்திலும், வியாழனுக்கு தோளிலும், சுக்கிரனுக்கு முகத்தி லும் சனிக்கு தொடையிலும், ராகுகேதுவுக்கு காலிலும் மறுவாம், சேய்ரவிமுன்பும் ராகுபுதன் எந்தக்காலமும் குரு சுக்கிரன் நடுவிலும் சனிமதிகேது அந்தியத்திலும் பலன்கொடுப்பார்கள். சனிரவி பிரிட் டோதையம், மதிசேய்குறுக்கோதையம், புதன்குருசுக்கிரன் சிரோத யமாம். ரவிக்குமேற்பார்வை. மதிக்கு எதிர்ப்பார்வை சேய்க்கு பக்கப் பார்வை, புதனுக்குகீழ்ப்பார்வை, குருவுக்குநேர்பார்வை சுக்கிரனுக்கு கவிழ்தற்பார்வை சனிக்குகுறுக்குப்பார்வை. எ-று. (௫)

ஐயறிவுவிகற்பம், உருவளவிடை,

மாதுர்பிதிர்சகோதரகாரகன், மாதுர்காரகன் பிதுர்காரகன்,
மாதுர்பிதாகாரகன் பிதாபிதாகாரகன் நேத்திரரூபம்.

நவில்வதறிவொன்றுமுதலைந்தளவுமசித
ஞரிகன்சேய்பாற்கவன்பொன்னுமானேர்நடுக்கீழ்ச்
* செவியலதுபருத்துயர்தறெரிவையரிற்குறுக
றிடசதுரம்வளைந்துயர்தறிரடனெடில்குடில
மிவையிலுரைத்தனவலதுசமமெனலல்லிரவி
யீன்றவனுக்கருகனணைக்கெல்விதுவிப்பெயர்தான்
சவுரிசிதற்குளதிவர்கடந்தையகிசிகியாய்
சாற்றிவர்கணுற்காலோசனப்பேர்நோக்கதற்கே.

(இ-ள்.) சனிக்கு ஓரறிவு, புதனுக்குஈரறிவு,சேய்க்குமூவறிவு,வெள் ளிக்கு நான்கறிவு, வியாழத்துக்கு ஐயறிவாம். புதன் அரைக்குக் கீழ் அழகில்லது, குருபருத்துயர்தல், சுக்கிரன் அரிவையர்ரூபம், சனி குறுகினது,ரம்திடசதுரம்-மதிவளைந்துயர்தல்,சேய்திரளுதல், இராகு நெடில், கேதுகுடிலம், இவற்றுள் உயர்தல் குறுகல்சொல்லாத வைசம மமாம். இராக்கால சூரியன் பிதிர்சகோதரகாரகன், பகற்கால சந்தி ரன் மாதுருசகோத்ரகாரகன் இராக்கால சனிபிதிர்காரகன், பகற்கால சுக்கிரன் மாதுருகாரகன், இராகுபிதிர் பிதாகாரகன், கேதுமாதுரு பிதாகாரகனும், ரவிக்குயானைக்கண், மதிக்குகுதிரைக்கண், சேய்க்கு ஆட்டுக்கண், புதனுக்குசெங்கன்றுக்கண், குருவுக்கு ரிஷபக்கண், சுக் கிரனுக்குபசுக்கண், சனிக்குகிடாக்கண், இராகுவுக்கு வெள்ளாட்டுக் கண், கேதுவுக்குசெம்மறியாட்டுக்கண். எ-று. (௬)

---

* செவி இடைக்குறை.

சந்திரதிருட்டி, மூலத்திரிகோணப்பாகை,

மித்திரம்-ஆரோகம்-அவரோகம்.

நோக்கமதிக்கவ்வாரத்தடவும்ரவிமுதலாய்
துவல்வதைநான்கினிற்பெருக்கிநோக்கலநாள்வரைக்கும்
போக்கலொன்பானீராறேழொருகண்ணிருகண்ணில்
பூவிறைநேரிருபான்மூன்றதின்மேனுள்போத
ராக்குபக்ஷத்தின்மேலைந்தையிரண்டுபூத
மைநான்கவ்வாட்சியிலப்பாகையதிபெலமாம்
வாக்கணையுள்ளறமீறெட்டிதற்குறவுச்சமுமா
மத்தியிற்பின்னுரோர்கமற்றதிதற்கதுவே.

(இ-ள்.) சந்திரதிருட்டி அறியும்படி நாயிறுமுதல் அற்றைவாரம் வரையும் எண்ணியதொகையை ௪-ல் பெருக்கிக்கண்ட நாள்முதல் அற்றைநட்சேத்திரம்வரையும் எண்ணியவற்றுள் முதல் ௯-ம் ஒரு கண் மேல் ௧௨-ம் இருகண்மேல் ௭-ம் அந்தகமாம் ரவிக்கு * மூலத்திரிகோணத்தில் பாகை ௨௦ - வரையும் மதிக்கு ௩ - க்குமேல் ௩௦-வரை ௨௰௭-ம் சேய்க்கு ௧௨-வரையும் புதனுக்கு ௧௫-க்குமேல் ௫-வரையும், குருவுக்கு ௰ - வரையும், சுக்கிரனுக்கு ௫ - வரையும், சனிக்கு ௨௰ - வரையும், அதிகபெலமாம். இவன் அவன் மூலத்திரிகோணத்துக்கு ௨-௪-௫-௯-௧௨-௮-ம் உச்சவீடும் மித்திரமாம் எவனுக்கும் முற்பாதி ௧௫ - பாகையும் ஆரோகம், பிற்பாதி ௧௫ - ம் அவரோகமாம். எ-று. (௭)

அதிகபெலம்-மகாதிசைவருஷம்,

அதிக உச்சப்பாகை - கோசரகாலம்.

கதிரலலர்வக்கிரத்திற்றனிப்பதிகபெலத்துக்
காமாறீரைந்தேழீரொன்பதுவீர்களேத
விதிலொருமூன்றதிகமிரண்டிதிற்குறைதலனலி
லிருபதின்னேரிவைமாதிசைவருஷப்பெயர்க்கா
முதையவனேர்பத்தொருமூன்றெழுநான்கைமூன்றைந்
துடுவிருபானதிகவுச்சப்பாகையுமாமறுமூன்
றதிகமிராறிதுவறுகாலொன்றகிசுன்பொன்சே
யவர்மாதமதிக்கிரண்டேகாற்றினங்கோசரமே.

(இ-ள்.) ரவிமதி நீங்கலாக வற்றவர்கள் வக்கிரத்திற்றனித்தால் அதிகபெலமாம் ரவிக்குவருஷம் ௬. மதிக்கு ௰. சேய்க்கு ௭. இராகு

* மூலத்திரிகோணம் – ஆட்சிவீடு.

வுக்கு க௮. வியாழனுக்கு க௬. சனிக்கு க௬. புதனுக்கு க௭. கேது வுக்கு ௭. சுக்கிரனுக்கு உ௰-ம் மகாதிசைவருஷமாம். ரவிக்கு ௰-ம் மதிக்கு ௩-ம் சேய்க்கு உ௮-ம் புதனுக்கு க௫-ம் குருவுக்கு ௫-ம், சுக்கிரனுக்கு உ௭-ம் சனிக்கு உ௰-ம் அதிக உச்சப்பாகையாம். கோசரகாலம் அறியும்படி இராகுகேதுவுக்கு மாசம் க௮-சனிக்கு மாசம் ௩௦-வியாழனுக்குமாசம் கஉ-சேய்க்குமாசம் க௫-க்கு ரவிக்கு மாசம் க-புதனுக்கு மாசம்-க, சுக்கிரனுக்குமாசம்-க, மதிக்கு உவ டினம். எ-று. (௮)

கிரகாதிபரது உருவிகிர்தி-கிரகாதிபரிருக்குந்தூரம்,

சுபாசுபக்கிரகம்-திவாக்கிரகம்-நிசிக்கிரகம்,

கிரகாதிபர்குணம்.

சரத்திடபன்முக்கணெற்றைமற்றவர்போயிருப்ப
தள்களவோசனைபொனெண்பதிருபதரவஞ்சே
யிருத்தலொரேழிரசதமீரெட்டிருநான்கவர்பொ
னிளம்பிறைமால்புகர்தருமரிவர்களலத்தர்மர்
குருத்துலைமன்மாலிரவிபகற்பொழுதுக்குடையோர்
குறைந்தவர்மற்றதற்குடையர்கோகனகத்திறையோன்
விருத்தனருணன்னிவர்கடாமதமாஞ்சேயும்
வெள்ளியும்ராசதகுணமற்றவர்கள்விரும்புவதே.

(இ-ள்.) ரவிமதிசேய் இவர்கள் ஒற்றித்தரூபம், மற்றவர் இரட்டித்தரூபம் வியாழன் இருப்பது சு-யோசனைதூரம், இராகுகேது உ௦-சேய்-௭, சுக்கிரன் க௬, மற்றவர்கள் ௮-குருவளர்மதிபுதன் சுக்கிரன் இவர்கள் சுபக்கிரகம், மற்றவர்கள் பாவக்கிரகம், குருசுக்கிரன் புதன் ரவிதிவாக்காலக்கிரகம், மற்றவர் நிசிகாலக்கிரகம் ரவிசனிபுதன் தாமதகுணம், சேய்சுக்கிரன் இராட்சதகுணம் மற்றவர்கள் சாத்துவிதகுணம். எ-று. (௬)

சனிக்கும் ரவிக்கும் காரகம்.

விருத்தன்மரவேலைகளவாயுவுயிர்வேதை
மேதிசிறையற்றுதைவெட்கமின்னேய்வீண்சொல்
வருத்தமிரும்படிமையையன்வாயடிக்தல்கடுகு
வபற்கலநீலுழுந்தசுபஞ்சேவுகமெண்ணெயுமாம்
பருத்தசிரஞ்சிலும்பன்மயிர்பயித்தியசீரம்
பான்மிளகுரசவாதம்பண்டிதங்கோதும்பை
யொருத்தலைநோவானைசிவம்லோகம்வச்ரம்வலக்கோ
வுயிர்த்தவன்யாத்திரைபகலீதினற்குளகாரகமே.

(இ-ள்.) வரவேலை-களவு-தீர்க்காயு-ஆத்மஇச்சை - எருமைவர்க்கம் சிறைப்படல்-நிசிகாலத்துப்பிதா-வெட்கமில்லாதவை - ரோகம் - வீண் வார்த்தை-துன்பம்-இரும்பு-ஆளடிமை - சாஸ்தா - வாயடித்தல் - கடுகு, * வயற்கலம் - நீலரத்தினமுதலானவை, உளுந்து அசுபகர்மம் சேவுகாவிர்த்தி-எள்ளு - எண்ணை-இவை முதலானவைக் கெல்லாம் சனியேகாரகன் பருத்தசிரம்-சிலும்பினமயிர் - பைத்தியசரீரம் - பால் மிளகு-ரசவாதம்-வயித்தியம் - கோதும்பை - ஒருத்தலைநோவு - ஆனை சதாசிவம் - பஞ்சலோகம் - வச்சிரரத்னம்-வலதுநேத்திரம் - பிதா-யாத்திரை-பகற்பொழுது இவைகட்கெல்லாம் சூரியனேகாரகன்.

மதிக்கும் சேய்க்கும் காரகம்.

அகளங்கன்சிவையூண்மாவாய் துயில்வெண்கலமுப்
 பளவர்வண்ணார்வெண்ணைகுடையரிசிபணிப்பயறுப்
பிகழ்வரலங்கம்மிடக்கண்கயரோகமுழவன்
 யாபாரமச்சமுத்தம்வஸ்த்ரமிவைக்கெனலாங்
குகன்முனவன்றுவரைதுவர்கோவிகுலாலன்றீக்
 குளவினையர்துணைவரிகலகுருதிரிணஞ்சிவப்பித்
தகர்சுயம்பாகங்காயஞ்சாகசந்தாம்பிரம்பூ
 தனையர்விரணங்காளிதமுலிவர்காரகமே.

(இ-ள்.) பராசத்தி போசனம் - குதிரை-மாதுரு-நித்திரை-வெண்கலம்-உப்பளவர்-வண்ணார் - வெண்ணை - குடை-அரிசி - பணி-பயறு-உப்பு-சிறிதுநாட்பருத்துமிளைத்து மிருக்குஞ்சரீரம் - இடக்கண்-சயரோகம்-உழவன்-மச்சம் - முத்து - புடவை இவைகளின் யாபாரம். இவைகட்கெல்லாம் சந்திரனேகாரகன். சுப்பிரமணியர் - விக்கினேசுரர்-துவரை-பவளம்-கோபவான் - குலாலன் - அக்கினிமுகமாகச் செய்யுந்தொழிலினர் - சகோதரர்-யுத்தம்-இரத்தம்-கடன் - சிவந்தரத்ன முதலானவை-ஆட்டுவர்க்கம் - சுயம்பாகம் - காயம்-சாகசம் - செம்பு-பூபாலர்-விரணம் - பத்திரகாளி இவைகட்கெல்லாஞ் செய்வாயேகாரகன். எ-று. (கக)

புதனுக்கும் வியாழனுக்கும்,

காரகம்.

கார்வணன்றேர்ப்பாகனம்மான்கல்விமரகதஞ்செங்
 கன்றிலேவாணிபன்றாதன்கணக்கனபுங்கிஷகன்

* விபசாயஞ்செய்தற்குரிய-கருவிமுதலியதை.

றேர்கதைகாவியந்தாதன்சேண்டனமெழுத்துச்
சௌவிஷையன்முசிபரன்றிரவசனுதிக்கன்
பாரறிவன்பயறுதாராவெந்தையமால்பாலர்
பசும்பொன்மதுவான்கடலைபார்த்திபராண்ராகம்
பேரதிகன்சீரகஞ்சிவன்மணிமேதகம்விப்
பிரன்பிரமனுண்டிகுருப்பேரிவர்காரகமே.

(இ-ள்.) விஷ்டுணிபகவான்-தேர்ப்பாகன்-அம்மான் - கல்விமுதலானவை, பச்சைரத்ன முதலானவை, செங்கன்றுவர்க்கம், இலைமுதலானவை, வைசியன் - தானுதிபதி - தூதுவன்-கணக்கன்-அலி-தேர்கதைகாவியம்-தாதன் - அந்தரநாட்டியமுதலானவை, லிகிதம்விஷையசோரன் - தாசிபரன்-திரவசனுதிகன் - சகல பிரபஞ்சமுமறிந்தன்-பாசிப்பயறு-தாரா - வெந்தயம் - இவை முதலானவைக்கெல்லாம் புதனேகாரகன். புத்திரர் சொர்ன்னம்-தேன்-ரிஷபவர்க்கம் - கடலை-அரசர் - புருடராகரத்னம் - பட்டப்பேர்-சீரகம் - வைடூரியரத்னம் - கோமேதகரத்னம்-விப்பிரவர்க்கம்-பிரமா - ஆண்டிவர்க்கம் - இவை முதலானவைக்கெல்லாம் வியாழனேகாரகன். எ-று. (கஉ)

சுக்கிரனுக்கும் இராகுவுக்கும்,

கேதுவுக்கும், காரகம்.

பேரிலெற்காய்தாசர்பசுபெண்டிருறவூர்தி
பேரியைவாத்தியமுதற்சங்கீதநடப்பிரியந்
தார்கொடிடானுவிமுதலாயபரிமளவா
சணைசயனவணைமுதல்சாமரைசையோக
மேரிளமைமொச்சைபுளியீயமளைபயஞ்சோ
றெப்பொழுதும்பரியாசப்ரசங்கமிரக்ஷகன்மால்
சூர்மலர்ப்பெண்ணிரசதமாசுணஞ்சோரம்வெகுபேச்
சுவ்வேடத்தொழில்சுகிதுற்ருெழிலிவர்காரகமே.

(இ-ள்.) பட்டப்பெயர் - கிரகம்-பகற்காலமாதுரு-தாசி தாசன்முதலானவர், பசு-களத்திரம்-மித்திரம் - வாகனம்-பேரிகை முதலான வாத்தியம்-சங்கீதம் - நாட்டியமுதலானவைகளிற்பிரியம் - மாலைமுதலானவை கொடி-டால்முதலானவை. நாவிப்பிள்ளை முதலாகிய நானுவிதபரிமளவாசனுதிகள்-கட்டில்-மெத்தை - சப்பிரமஞ்ச முதலானவை-வெண்சாமரை-போகபோக்கியம் - அழகு - இளமை - மொச்சை-புளி-ஈயம்-தயிர் - பால்-அன்னம்-எப்போதும் விகடவினோத பரியாசப்பிரசங்கப்பிரியம்-சனரக்ஷகம்-ஆசை - தேவப்பெண்கள் - இலக்குமி

-தேவி-வெள்ளி-இவை முதலானவைக்கெல்லாஞ் சுக்கிரனேகாரகன் -களவு-வெகுபேச்சு-நானாவிதவேடத்தொழில் செப்பிடுவித்தை இவை முதலானவைக்கெல்லாம் இராகுவேகாரகன். கபடத்தொழில் முதலானவைக்கெல்லாம் கேதுவேகாரகன் இவைகாரகாதிபர்வர்க்கம். (கங)

கிரகாதிபருக்குவிருக்ஷம், பஞ்சபூதம்

ஐம்புலன், ருசிபாகப்பொசிப்பு.

இவர்களெழுவருமூலவர்க்கம்வரிக்பகனே
ரிரசவகைக்குளதுமுள்ளிலசுபர்சுபர்க்கெனவும்
பவுமன்முதற்பூவிலைபப்பழங்காய்வேர்தோபே
பாற்கிழங்காம்பொன்சிதன்சேய்பாகனெமன்பூத
மவர்சிரம்யார்நேர்சிதன்சுன்னனல்பொன்னருணன்னெ
ரைம்புலன்மற்றவரறிவுள்ளாமலரிமுதலா
முவாபொசித்தற்கத்திரியோததிசமைத்தல்பாகத்
துற்றதுவூரோதகங்கானுளவிடமற்றுளர்க்கே.

(இ-ள்.) ரவிமுதல்சனிவிரை எழுவரும் மூலவர்க்கமாகவரில் இவர்கட்குச் சொன்ன ருசிவர்க்கத்தருவாம் இவற்றுள் முள்ளுள்ளவை பாவருக்காம் முள்ளில்லாதவை சுபருக்காம் சேய்க்குபூவினாற் பிரபலதருவும், புதனுக்கு இலையினாற்பிரபலதருவும், வியாழனுக்கு கனியினாற்பிரபலதருவும், சுக்கிரனுக்கு காயினாற் பிரபலதருவும், சனிக்கு வேரினாற் பிரபலதருவும், ரவிக்குதோற்பட்டையினாற் பிரபலதருவும், மதிக்கு கிழங்கினாற்பிரபலதருவும் கண்டுசொல்லுக. வியாழன் பிருதிவி. சுக்கிரன் அப்பு, செவ்வாய்தேயு, புதன்வாயு. சனிஆகாயம்இவற்றிற்குமேல் சூரியனும் கீழ்சந்திரனும் சொல்லுக. சுக்கிரன் சத்தம், சனிபரிசம், சேய்ரூபம், வியாழன்ரசம், புதன்கந்தம், ரவி அறிவு, மதிமனதாம். ரவிக்குபர்வதவர்க்கத்தி லுண்டானபதாாத்தம், மதிக்கு சமுத்திரத்திலுண்டானபதார்த்தம், சேய்க்கு நெருப்பில் வெந்தது, புதனுக்கு நானாருசிவர்க்கசேகரம்,குருவுக்கு நாடுநகரங்களிலுள்ளவை சுக்கிரனுக்கு சுத்தஜெலவாக்கல், சனிக்குவனவர்க்கம், இராகுகேதுவுக்கு விஷவர்க்கம் இவைருசிபாகப்பொசிப்பாம். எ-று. (கச)

தூமாதி பஞ்சக்கிரகம்.

இவர்கட்கு ஆட்சி உச்சம்.

மற்றுளதூமாதியர்க்கம்மாதமுந்தெய்தியுநேர்
வைத்ததிலோர்நான்குமதிற்பத்தொடுமூன்றதுவா
யுற்றதிராசிப்பெயரும்பாகையும்நேர்கூடி
னுறுந்தூமமண்டலத்தீதொழிப்பதுற்பாதமுமா

மிற்றனின்மூவிருராசியேறல்பரிவேட
மிதைமுன்போற்களைதலிந்த்ரதனுப்பதினேழ்பாகை
பெற்றதுபகேதுவரிலுச்சமுற்போர்க்கிலதிற்
பேரலதுயாழ்முதனேர்பேசுதலிப்பெயர்க்கே.

(இ-ள்.) சென்றமாதமுந் தெய்தியும்வைத்து இதன்மேல் ௬-இராசியும் ௧௩-பாகையுங்கூட்டிக்காண்பது தூமம். இதை மண்டலத்திற் கழித்துக்காண்பது உற்பாதம், இதன்மேல் ௬-இராசிகூட்டில் பரிவேடம், இதை முன்போல மண்டலத்திற் கழித்துக்காண்பது இந்திரதனு, இதில் ௧௭-பாகைகூட்டில் உபகேதுவாம், தூமத்துக்கு மிதுனமும், உற்பாதத்துக்கு விருச்சிகமும், பரிவேடத்திற்கு மகரமும், இந்திரதனுவுக்கு மீனமும், உபகேதுவுக்கு இடபமும், ஆட்சிவீராம் தூமத்திற்குமிதுனமும், உற்பாதத்திற்கு சிங்கமும், பரிவேடத்திற்கு விருச்சிகமும், இந்திரதனுவுக்குதனுசும், உபகேதுவுக்கு கும்பமும் உச்சவீடாம். எ-று. (௧௫)

வக்கிரம், அதிகவக்கிரம், வக்கிரநிவர்த்தி,

அத்தமனம், கிரகயுத்தம், உச்சபங்கம்,

நீசபங்கம்.

பேசுதல்வக்கிரமிரவிபிள்ளைபெரிற்சுன்சேய்
பீதமிவாக்கேழதிகம்பிதுரறலத்தமனம்
வீசுகதிற்காரன்முதற்பதினேழ்பன்மூன்று
விடைக்குடையரெட்டொருபத்தஞ்சும்விதுவெங்முன்
னீசன்வலக்கண்ணிடைப்பாகைக்குளரேற்றீநே
ரெமன்வரையங்கிஷமுமொன்றுயென்றுடுக்கோவிலகிற்
பூசலிப்பேர்க்குச்சம்வரினடுத்தினமப்பங்கம்
புகல்வதுமற்றதற்குமுளபொற்குடத்துற்றவனே.

(இ-ள்.) சனிசேய்குருவுக்கு ௫-ல் ரவிவரில் வக்கிரம், எ-ல் ரவிவரிலதிகவக்கிரம், ௯-ல் வரில் வக்கிரநிவர்த்தியாம் ரவிப்பாகை ௧௭-க்குள் சேயும் ௧௩-க்குள் புதனும் ௧௧-க்குள் குருவும் அ-க்குள் சுக்கிரனும் ௧௫-க்குள் சனியும் வரில் சேய்முதற்சனிவரை அத்தமனமாம் ரவிக்கு முன்பின் ௧௨-பாகைக்குள் சந்திரன்வரில் சந்திராஸ்தமனம் ரவிமதி நீங்கலாகக் குசாதிசனிவரை அங்கிஷம் ஒன்றுய்க்கூடில் கிரகயுத்தம் உச்சராசிக்கு நடுத்தினம் உச்சபங்கம் நீசராசிக்கு நடுத்தினம் நீசபங்கமாம் கும்போதையனே. எ-று. (௧௬)

தாற்காலிய மித்திரம்,
தாற்காலியசத்துரு.

குடப்புதல்வகிக்கிரகர்தங்களிற்பத்தொருநான்
குக்காதியேற்றியதிற்குறைத்திடுமுத்தொகைக்கு
நடப்பிலிவர்மித்திரர்மற்றவரிவர்களெழுவர்
நாகவுருவினரிருவர்நந்தனரொபதின்ம
ரிடர்ப்படிறரைவரெழுமூன்றிருவரிவர்கட்
கியல்புளதின்மற்றுளதிலிதுவுமுளவிதன்மேற்
றிடம்படக்கேளட்டவர்க்கத்தியல்புகலவென்றான்
றிருச்செந்தூர்க்கரசசுரதிமிரதிவாகரனே.

(இ-ள்.) கும்போதயனாகிய அகத்தியமாமுனியே சூரியாதிகேது வரையுள்ளவர்கள்தங்களில் ௰-ம் ௪-மாகவும் ௰௧-ம் ௩-மாகவும், ௧௨-ம் ௨-மாகவும் நடப்பிலிருக்கில் இவர்கள் தாற்காலிய மித்திராம், மற்றுள்ளவையில் இருககில் தாற்காலியசத்துருவாம் ரவிமுதல் சனிவரை எழுவரும் இராகுகேதுவும் இவர்கள் புதல்வர் ௯-பேரும் தூமாதிபர் ரு-ம் ஆக-௨௩ பேர்க்குள்ள சரித்திரத்தில் இதுவும் சிலதென்ப இதன்மேல் அட்டவர்க்கத்தியல்பு நாம்சொல்லநீ திடப்படக்கேட்பாயாகவென்று திருவாய்மலர்ந்தருளினவன் திருச்செந்தூர்க்கு அரசனெனவும் ஆசுராதிபதி மிரத்துக்கு திவாகரனெனவும் உதையமாகிய சுப்பிரமணியக்கடவுள் எ-று. (௧௭)

கிரகாதிபர்சரித்திரப்படலம்-முற்றிற்று.

ஆகப்படலம் அ-க்கு கவி ௭௫.

---

# அட்டவர்க்கப் படலம்.

---

## ரவிமதி அட்டவர்க்கம்.

திவிமன்முன்கோவாய்வேணேரைந்துழுபசெயமுஞ்
சென்றதுமுன்புடனறந்தாள்சேயுமணன்ரிபுச்சேய்
நவமும்வியமாறேழுநளினனுரோந்த
நாட்கிறையுமாம்வேளொன்றைந்தணனேய்நடையுந்
தவமுளணனேப்பொனடைதம்பியுங்கட்கணியாய்த்
தருகேந்த்ரபணபரமுமிதிற்றணயரிலது

மவமுனின்மாலுடனகமுமாறுளணனவலு
மைந்திலதெட்டிதுவுமெட்டேழிந்துவுமற்கிறைக்கே.

(இ-ள்.) ரவியில்ரவி க, உ, ச,எ,அ,கூ,ய,கக,ஆகப்பரல், அ,ரவியில் மதி ஙு,சு,ய-கக,ஆகப்பரல் ச-ரவியிற்சேய் க, உ,ச, எ, அ, கூ,ய, கக, ஆகப்பரல், அ-ரவியிற்புதன் ஙு,ரு,சு,கூ, ய; யக, யஉ, ஆகப்பரல், எ-ரவியிற்குரு ரு-சு-கூ-யக-ஆகப்பரல் ச, ரவியிற்சுக்கிரன், சு, எ, யஉ, ஆகப்பரல் ஙு, ரவியிற்சனி க,உ,ச,எ,அ,கூ,ய,யக, ஆகப்பரல் அ - ரவியில்லக்கினம் ஙு,ச,சு,ய,கக,யஉ, ஆகப்பரல் சு-மதியில்மதி க, ரு, சு, எ, ய, யக, ஆகப்பரல் சு-மதியிற்சேய், உ,ஙு, ரு,சு, கூ, ய,யக, ஆகப்பரல் எ-மதியிற்புதன் க, ஙு, ச, ரு, எ, அ, ய, கக, ஆகப்பரல் அ-மதியிற்குரு க, உ, ச, எ, அ, ய, கக, ஆகப்பரல் எ, மதியிற்சுக்கிரன் ஙு, ச, ரு, எ, கூ, ய, யக, ஆகப்பரல் எ, மதியிற்சனி ஙு, ச. ரு, யக, ஆகப்பரல் ச, மதியில்லக்கினம் ஙு,சு, அ, யக, ஆகப்பரல் ச,மதியில்ரவி, ஙு, சு, எ, அ, ய, யக, ஆகப்பரல் சு, இவை ரவிமதி அட்டவர்க்கமாம். எ-று. (க)

சேய்புதன் அட்டவர்க்கம்.

அற்பகையிலறமிலதுமாறணன்சேயணியு
மதிகமருகாறுமதற்கவமுறப்பத்தலது
முற்பகலுணறவுளதுமுதலொடுபெசெயமு
முன்னறவைந்திதுவுமணன்முன்றினலுமாமு
னிற்புறகோயறநேருமீறணனேயவமு
மேழ்பிணிபத்திறிலதுமென்றுமறமிலதுஞ்
சற்பனையுள்ளறமணன்ருளுந்தனேயர்புறங்கண்
டாதையணனடையுமெற்போலுந்தமன்மாற்கெனுமே.

(இ-ள்.) சேயிற்சேய்,க,உ,ச,எ,அ,ய,யக,ஆகப்பரல் எ,சேயிற் புதன் ஙு, ரு, சு, யக, ஆகப்பரல் ச, சேயிற்குரு சு, ய, யக, யஉ, ஆகப்பரல் ச-சேயிற்சுக்கிரன், சு,அ,யக, யஉ, ஆகப்பரல் ச - சேயிற்சனி க - ச எ-அ-கூ-ய-யக ஆகப்பரல் எ-சேயில்லக்கினம், க-ஙு-சு - க௦-கக-ஆகப்பரல் ரு சேயில்ரவி ஙு-ரு-சு-க௦-கக ஆகப்பரல் ரு - சேயில்மதி ஙு-சு-கக-ஆகப்பரல் ஙு-புதனிற்புதன் க-ஙு-ரு-சு-கூ-க௦-கக - கஉ - ஆகப்பரல் அ-புதனிற்குரு சு-அ-கக-கஉ - ஆகப்பரல் ச-புதனிற் சுக்கிரன் க-உ-ஙு-ச-ரு-அ-கூ-யக - ஆகப்பரல் அ, புதனிற்சனி க-உ-ச-எ-அ-கூ-ய-யக ஆகப்பரல், அ-புதனில்லக்கினம் க-உ - ச- எ -அ - ய-யக-ஆகப்பரல் எ-புதனில்ரவி ரு-சு-கூ-யக - யஉ - ஆகப்பரல் ரு-புதனில்

மதி உ-சு-சு-கூ-கக-ஆகப்பரல் சு-புதனிற்சேய் க-உ-ச-எ-அ-கூ-க0-கக ஆகப்பரல் அ-இவைசேய்புதன் அட்டவர்க்கமாம்-எ-று. (உ)

குருசுக்கிரன் அட்டவர்க்கம்.

தழலணியுமுண்ணேப்பத்ததின்பால்வித்தையுஞ்சேய்
    தாணேப்பூணுந்தாளபூண்டத்திலதுந்தவுமூன்
றழலுமதன்பணபரமுமனலுமைந்தாறென்று
    யறங்கோபத்தணனுமெனலாறேழிலதும்
விழல்போக்காயிவ்விணேப்பாலுந்தாண்மேற்காறேழ்
    விடலுமெட்டீறணனும்விண்ணேப்வேளிலதும்பவமில்
கொழுவியபோக்கிலிபமுநோயிப்பாற்பூணணனுங்
    குழந்தைதுயில்பத்ததன்பால்குருசிதனுக்குளதே.

(இ-ள்.) குருவிற்குரு க-உ-ங-ச-எ-அ-ம-மக-ஆகப்பரல் அ-குருவிற் சுக்கிரன் உ-ரு-சு-கூ-ம-மக ஆகப்பரல் சு-குருவிற்சனி ங-ரு-சு-மஉ-ஆகப்பரல் ச-குருவில்லக்கினம் க-உ-ச-ரு-சு-எ-கூ-ம-மக-ஆகப்பரல்-கூ குருவில் ரவி க-உ-ங-ச-எ-அ-கூ-ம-மக-ஆகப்பரல் கூ, குருவில்மதி உ-ரு-எ-அ-மக-ஆகப்பரல் ரு, குருவிற்சேய் க-உ-ச-எ-அ-ம-மக ஆகப்பரல்-எ, குருவிற்புதன் க-உ-ச-ரு-சு-கூ-ம-மக, ஆகப்பரல் அ, சுக்கிரனிற் சுக்கிரன் க-உ-ங-ச-கூ-அ-கூ-ம-கக, ஆகப்பரல் கூ, சுக்கிரனிற் சனி ங-ச-ரு-அ-கூ-ம-கக, ஆகப்பரல் எ, சுக்கிரனில்லக்கினம் க-உ-ங-ச-ரு-அ-கூ-கக, ஆகப்பரல் அ, சுக்கிரனில் ரவி அ-கக-கஉ, ஆகப்பரல் ங, சுக்கிரனில்மதி க-உ-ங-ச-ரு-அ-கூ-கக-கஉ, ஆகப்பரல் கூ. சுக்கிரனிற்சேய் ங-ச-சு-கூ-கக-கஉ, ஆகப்பரல் கூ, சுக்கிரனிற்புதன் ங-ரு-சு-எ-கக, ஆகப்பரல் ரு, சுக்கிரனிற்குரு ரு-அ-கூ-ம-கக, ஆகப்பரல் ரு, இவை குருசுக்கிரன் அட்டவர்க்கமாம். (ங)

சனி அட்டவர்க்கம் ரவிமுதலானவரது பரற்றொகை.

சருவாட்டவர்க்கப் பரற்றொகை.

உளநோய்பூணயமுமாறென்றுய்பூணணன்போக்
    கும்மழலுமாறணன்பூணும்பவமப்பாலுள்
களவீடுமாறவநேருங்களவைந்தாயங்
    காலும்வியநோயணனுங்கரியவனுக்காமீ

தளவாறெட்டதின்மேலொன்றதிற்றசமிலதனோ
டைமூன்ருமுன்பினிரண்டனவிலருக்கன்னேர்
வளராறைம்பதிலாருறென்றதிகப்பாலாய்
வருமிதன்மேற்சோதனைசெய்வதுங்கேண்மாமுனியே.

(இ-ள்.) சனியிற்சனி ங-டு-சு-கக, ஆகப்பரல் ச, சனியில்லக்கினம் க-ங-ச-சு-ω-கக ஆகப்பரல் சு, சனியில்ரவி க-உ-ச-எ-அ-ω-கக, ஆகப்பரல் எ, சனியில்மதி ங-சு-கக, ஆகப்பரல் ங, சனியிற்சேய் ங-டு-சு-ω-கக-கஉ, ஆகப்பரல் சு,சனியிற்புதன் சு-அ-கூ-ω-கக-கஉ,ஆகப்பரல் சு, சனியிற்குரு டு-சு-கக-கஉ, ஆகப்பரல் ச, சனியிற் சுக்கிரன் சு-கக-கஉ, ஆகப்பரல் ங, ரவி அட்டவர்க்கப்பரல் சஅ, மதிஅட்டவர்க்கப்பரல் சகூ, சேய் அட்டவர்க்கப்பரல் ஙகூ, புதன் அட்டவர்க்கப்பரல் டுச, குருஅட்டவர்க்கப்பரல் டுசு, சுக்கிரன் அட்டவர்க்கப்பரல் டுஉ, சனி அட்டவர்க்கப்பரல் ஙகூ, சர்வாட்டவர்க்கப்பரல் ஙஙஎ இதன்மேல் சோதனைசெய்வதுங் கேட்பாயாக மகத்தான அகத்தியமாமுனியே. ο எ-று. (ச)

## திரிகோண சோதனை.

## ஏகாதிபத்திய சோதனை.

முன்னுளதின்மைக்கோணேர்மற்றுளமுக்கோண
மும்மசமஞ்சமஞ்சூன்யம்வரினிரத்தன்முழுது
மன்னிதம்வைத்திடறெட்லாகாதிவைமுக்கோண்சோ
தனையசநேரபிமுகராசிப்பெயர்க்குமவைபோற்
பின்னுளமாத்திரமழிதல்கிரகருறின்முற்போற்
பேசுவரோரிற்பெயரிலதற்குமுதற்பெயராய்ச்
சொன்னளினக்கோன்மதிவீடல்லதுமற்றவரில்,
சோதனையேகாதிபத்யசோதனைப்பேர்க்குளதே.

(இ-ள்.) அவரவருக்கு அமைத்த ஆதிப்பரலில் மேடசிங்க தனுசு என்றும் ரிஷபகன்னியா மகரமென்றும் மிதுனதுலா கும்பமென்றும் கடகவிருச்சிக மீனமென்றுஞ் சொல்லா நின்ற இத்திரிகோணங்களில் அந்தந்த கோண மூன்று வீட்டிலும் இருந்த பரல் ஒன்றுக்கொன்று அசமமாகில் (குறைந்தபடி) சரிபண்ணுக. சமமாகில் முழுவதும் வாங்

ο மதியில்மதி டு, க்கு ங என்றும் மதியில்லக்கினம் அ, க்கு கο, என்றும் புதனில்லக்கினம் எ க்கு சு, என்றும் புதனில்மதி கூ க்கு அ என்றும், குருவில் மதி சு-க்கு கூ-என்றும் சுக்கிரனிற்புதன் எ-க்கு கூ-என்றும் கூறுநூல்களுமுள இதனுண்மையைச் சான்றோரால் றெளிந்துகொள்க.

கிப்போடுக. மூன்றில் ஒன்று சூன்யமாகில் மற்ற இரண்டுவீட்டுப் பரலும் தொடாதிருக்க இவை திரிகோணசோதனையாம். மேடவிருச்சிகம், இடபதுலாம், மிதுனகன்னி, தனுசுமீனம், மகரகும்பம், இவற்றை முன்போலுஞ் சோதனைசெய்க. இவற்றில் இரண்டில்ஒன்றுசூன்யமாகில் மற்றதும் வாங்கிப்போடுக. இரண்டுவீட்டிலும் கிரகங்களிருக்கில் தொடாதிருக்க ஒருவீட்டில் கிரகமிருக்கில் மற்றதை முன்போலுஞ் சோதனைசெய்க. சிங்கம் கடகம் ஒவ்வொருவர் வீடாகையால் இவற்றிற்குச் சோதனையில்லை. இவை ஏகாதிபத்திய சோதனையாம். எ-று.

இராசிகுணகாரம், கிரககுணகாரம்.

குணசமுகம், சுத்தபிண்டம், ஏகசமுகம்.

சோதனையிரண்டுமிழைத்ததன்மேற்சேவரியுந்
தொந்துவமுமேடமும்பேண்சுறவுநடைதுயில்வேள்
பூதமொருமுதலாகமற்றவைக்கவ்வளவாய்ப்
பொலிப்பதிவைராசிகுணகாரநிதிபுகர்சேய்
சீதரன்றனவதாரம்வேடுயின்மற்றவர்க்காஞ்
சிசுவிவைப்பேர்க்கிரககுணகாரமுற்சோதனைசேர்த்
தோதல்குணசமுகமிருகாரஞ்சுத்தபிண்டத்
துக்கேகசமுகமுன்னோருற்றதைந்துக்குளதே.

(இ-ள்.) திரிகோணசோதனையும் ஏகாதிபத்தியசோதனையுஞ்செய்ததின்பேரில் இராசி குணகாரஞ்செய்யும்படி இடபத்துக்கு ய-மிதுனத்துக்கு அ-மேடத்துக்கு எ-கன்னி மகரத்துக்கு ரு-கடகத்துக்கு சு-துலாத்துக்கு எ-விருச்சிகத்துக்கு அ-தனுசுக்கு கூ-கும்பத்துக்கு-கக-மீனத்துக்கு கஉ-ம் ஆகிய இத்தொகையைவைத்துப் பெருக்குவது இராசிகுணகாரம். வியாழனுக்கு ய-சுக்கிரனுக்கு எ-சேய்க்கு அ-மற்றவர்கட்கு ரு-ம் வைத்துப் பெருக்குவது கிரககுணகாரமாம். திரிகோணமும் ஏகாதிபத்தியமுங் கூட்டுவது குணசமுகமாம். இராசிகுணகாரமும் கிரககுணகாரமுங்கூட்டுவது சுத்தபிண்டமாம். ஆதிப்பரல்முதல் கிரககுணகாரம்வரைக்கும் ரு-தொகையுங் கூட்டிச்சொல்வது ஏகசமுகமாம். எ-று. (சு)

தினகண்டம், வயதுகண்டம்.

உற்றிடுமிப்பெயரிருநான்குக்குளவத்தொகையை
யுயிர்த்தவன்றுய்பூணீர்சேயிருவிலியெட்டினனேர்
சொற்றிடுமிப்பெயர்க்குளதாற்பெருக்குவதத்தொகைநாட்
டொகைக்கீந்தவீவுவயதுத்தொகையீவன்றி

மற்றதுமாத்தொட்டுளவத்தினப்பேர்தேய்மதிநாள்
வத்திரந்தொட்டுரைப்பரிவையட்டவர்க்கமுமாய்ப்
பற்றுதலவ்வயதுதினகண்டமென்பரிதன்மேற்
பகர்தலரசக்கரத்துக்கியல்பதுரைப்பதுவே.

(இ-ள்.) முன்சொன்ன சோதனைப்படிக்குள்ள எட்டுவர்க்கமானவை ஆதிப்பரல், திரிகோணம், ஏகாதிபத்தியம், இராசிகுணகாரம், கிரகருணகாரம், குணசமுகம், சுத்தபிண்டம், ஏகசமுகம், இவை அட்டவர்க்கமாம். இவ்வகைப்படிக்குள்ள தொகையைத் தனித்தனியே வைத்து சூரியன் அட்டவர்க்கத்துக்கு சூரியனின்ற ராசிக்கு ௯-மிடத்திலிருந்த பரலைக்கொண்டு பெருக்கிக்காண்பது பிதாவுக்காம், சந்திரனுக்கு ௪-ம் செவ்வாய்க்கு ௩-ம் புதனுக்கு ௪-ம் குருவுக்கு ௫-ம் சுக்கிரனுக்கு ௭-ம் சனிக்கு ௮-மாக அந்தந்த அட்டவர்க்கத்திற் கண்டபரலை யினந்தோம்பெருக்கி ௨௭-ல் கழித்துக்கண்ட மிச்சம் பூர்வபக்ஷத்துக்கு அசுபதிமுதலும் அமரபக்ஷத்துக்கு சித்திரை முதலுமாக வைத்து எண்ணிக்கண்ட நட்சேத்திரம் தினகண்டமாம். இந்தஅவு வயதுகண்டமாம் இதன்மேல் நரசக்கரத்தியல்பு சொல்லுவோம். எ-று. (௭)

அட்டவர்க்கப்படலம்

முற்றிற்று.

ஆகப் படலம் ௯-க்கு கவி ௮௨.

---

## நரசக்கரப் படலம்.

### நரசக்கரம்.

உரைசெயுதையத்தினந்தொட்டிரவிசிரம்வாய்பூ
ணுதரமுளங்கைகாலெட்டுலகிறைவாய்பூண்கோ
விருகண்மிடறங்கையிரண்டணிபுடைகளுடல
மெச்சமகட்டிகளிரண்டெனலெமனுக்கிதன்மேற்
புரமிதழ்கைநீரடிநோயாயிடக்கைவயிறு
புத்திரரக்கம்மிடைவாக்குப்பூணச்சிரமாந்
தரமிடறங்கைகளணிதனையரகடிடைபொன்
றுடுயின்மாலிரசதமந்தணனரசக்கரமே.

(இ-ள்.) நரசக்கரமறியும்படி, சென்மநட்சேத்திரந்தொட்டுச் சூரியனுக்குசிரசில் ௩, வாயில் ௩, வயற்றில் ௫, கையில் ௮, காலில் ௮, ஆக ௨௭, சேய்க்குவாயில் ௩, வலக்கண்ணில் ௨, இடக்கண்ணில் ௨, கழுத்தி

ல் ௩, வலக்கையில் ௩, இடக்கையில் ௩, வலப்பக்கத்தில் க, இடப்ப க்கத்தில் க, வயிற்றில் ரு, வலக்காலில் உ, இடிக்காலில் உ, ஆக உஎ. சனிக்கு வாயில் க, வலக்கையில் ச, காலில் சு, இடக்கையில் ச, வயி ற்றில் ரு, கண்ணில் உ, அரையில் உ, சிரசில் ௩, ஆக உஎ. புத குரு சுக்கிரனுக்கு சிரசில் ௩, கழுத்தில் ௩, வலக்கையில் ௩, இடக்கையில் ௩, வயிற்றில் ரு; இடையில் உ, காலில் அ; ஆக உஎ. எ-று. (க)

நரசக்கரப்படலம்

முற்றிற்று.

ஆகப்படலம்-ய-க்கு கவி அ௩.

---

## காலசக்கரப் படலம்.

வலவொட்டு, இடவொட்டு,
வலவொட்டு ஆதியந்தநட்சேத்திரம்
நான்குகாலுக்கும் நடுநட்சேத்திரம் முதற்காலுக்கும்
நடத்துமுறைமை.

காகவெமசக்கரங்கேண்மாமுதன் மும்மூன்றாய்க்
கடத்துதனேர்வலவோட்டுக்கடுத்ததிடவொட்டாய்
வருமிதனேராதியந்தமாந்தினம்பத்ததற்கும்
வகுப்பர்முதற்காற்கொருநேரொன்பதுமற்றவைமயோ
டெரியனுனிலிடத்தான்மண்நீககதிக்காகு
மேறிடமாயாறிதன்மேற்றகர்முதலெய்துபுன
முரையலவனேருளதொன்பதுகடைக்காற்காமற்
றுள திின்முதற்காற்கிடமாய்த்தேண்முதலக்கதியே.

(இ-ள்.) கும்போதையனகிய அகத்தியமாமுனியே காலசக்கரம் கேட்பாயாக அசுபதி பரணி கார்த்திகை வலவொட்டு, ரோகணி மிரு கசிரம் திருவாதிரை இடவொட்டு, புனர்பூசம் பூசம் ஆயிலியம் வல வொட்டு, மகம் பூரம் உத்திரம் இடவொட்டு, அத்தம் சித்திரை ரேவ தி வலவொட்டு, விசாகம் அனுசம் கேட்டை இடவொட்டு, மூலம் பூ ராடம் உத்திராடம் வலவொட்டு, திருவோணம் அவிட்டம் சதையம் இடவொட்டு, பூரட்டாதி உத்திரட்டாதி ரேவதி வலவொட்டு, நட்சே த்திரமாம். இவற்றுள் வலவொட்டு ஆதியந்தநட்சேத்திரம் ம-ல் முத ற்காலுக்கு மேஷம் ரிஷபம் கடகம் சிங்கம் கன்னி துலாம் விருச்சிகம் தனுசு ஆக-கூ-ம் நேர்நடத்துக உ-ம் காலுக்கு மகரம் மீனம் விருச்சிக

ம் துலாம் கன்னி கடகம் சிங்கம் மிதுனம் ஆக கூ-ம். நேர்நடத்துக ௩-ம் காலுக்கு இடபம் மேடம் மீனம் கும்பம் மகரம் தனுசு மேடம் இடபம் மிதுனம் ஆக கூ-ம். நேர்நடத்துக ச-ம் காலுக்கு கடகம் சிங்கம் கன்னி துலாம் விருச்சிகம் தனுசு மகரம் கும்பம் மீனம் ஆக-அ-ம் நேர்நடத்துக இதன்மேல் வலவொட்டு நடுநட்சேத்திரம் ௫-ல் முதற் காலுக்கு விருச்சிகம் துலாம் கன்னி கடகம் சிங்கம் மிதுனம் ரிஷபம் மேஷம் மீனம் ஆக கூ-ம் நேர்நடத்துக. எ-று. (௧)

வலவொட்டு நடுநட்சேத்திரம் உ-ம் கால்முதல் ச-ம் கால்
வரைக்கும் இடவொட்டு ஆதிநட்சேத்திரம் முதற்கால்முதல்
௩-ம் கால்வரைக்கும் நடத்துமுறைமை.

முதற்கிடையிரண்டாங்கால்கும்பமுதற்றனுமேன்
மூவிரண்டுமொருநேராங்கோன்முதலாறுருமூன்
றதற்கரிலோகனமாகுமலவனரியாழ்தொட்
டவலமதாந்தனுவரைக்கீதாந்தியக்காற்காகு
மிதற்கிதனமேலிடவொட்டுக்காதிமுதற்காலுக்
கிடமாய்மீன்முதலாமேல்யாழிடமூன்றுறென்
பதற்கதுவின்னேராகுமிதுனமுதற்றேண்மேற்
பைஞ்சிலைதொட்டிடமூன்றிப்பதப்பெயருக்குளதே.

(இ-ள்.) வலவொட்டு நட்சேத்திரம் உ-ம் காலுக்கு கும்பம் மகரம் தனுசு மேடம் ரிடபம் மிதுனம் கடகம் சிங்கம் கன்னி ஆக கூ-ம் நேரநடத்துக. ௩-ம் காலுக்கு துலாம் விருச்சிகம் தனுசு மகரம் கும்பம் மீனம் விருச்சிகம் துலாம் கன்னி ஆக கூ-ம். நேர்நடத்துக ச-ம் காலுக்கு கடகம் சிங்கம் மிதுனம் ரிஷபம் மேஷம் மீனம் கும்பம் மகரம் தனுசு ஆக கூ-ம் நேர்நடத்துக. இதன்மேல் * இடவொட்டு நட்சேத்திரம் கஉ-ல் ஆதிநட்சேத்திரம் ச-க்கும் முதற்காலுக்கு மீனம் கும்பம் மகரம் தனுசு விருச்சிகம் துலாம் கன்னி சிங்கம் கடகம் ஆக கூ-ம் நேர்நடத்துக. உ-ம் காலுக்கு மிதுனம், இடபம், மேடம், தனுசு, மகரம், கும்பம், மீனம், மேஷம், ரிஷபம், ஆக கூ-ம் நேர் நடத்துக ௩-ம் காலுக்கு, மிதுனம், கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், மீனம், கும்பம், மகரம் ஆக கூ-ம் நேர்நடத்துக. எ-று. (உ)

---

* இடவொட்டு நக்ஷேத்திரக்காலுக்கு நடத்துமுறைமை பெரும்பான்மையும் ஏனையசிலநூல்களோடு பேதப்படுகின்றது இவற்றின் வேற்றுமைகளை யெல்லா முற்றக்கற்ற முனிவராற்றெளிந்துகொள்க.

இடவொட்டு ஆதிநட்சேத்திரம் ச-ம் காலுக்கும், இடவொட்டு
நட்சேத்திரம் முதற்கால் முதல் ச-ம் கால்வரைக்கும்
இடவொட்டு அந்தியநட்சேத்திரம் முதற்கால்
முதல். உ-ம் கால்வரைக்கும், நடத்து முறைமை.

பதமிடவொட்டாதியந்தத்தாஞ்சிலைநேராய்த்தப்
பனைக்கெதிக்காநடுமுதற்கால்பற்றுதலீதிடமா
மதுரமொழிமுதன்மூன்றமேலிருமூன்றிடமாய்
மச்சமுதலாகுமரிவைமுதலாறிடமக்
கதியொடுவின்னேர்மூன்றுங்கடைக்கான்மீன்முதலாக்
கதிநேராமந்தியமுற்காற்றனுநேர்நான்குந்
துதியையிடந்தேளாய்நேர்தொந்துவமூன்றுநேர்
தோகைமுதன்மூன்றுறுஞ்சொன்மீன்றெட்டிடமே.

(இ-ள்.) இடவொட்டு ஆதிநட்சேத்திரம் ச-ம் காலுக்கு, தனுசு, மகரம்-கும்பம்-மீனம்-மேஷம்-ரிஷபம்-மிதுனம்-சிங்கம்-கடகம்-ஆக கூ-ம் நேர்நடத்துக இதன்மேல் இடவொட்டு நடுநட்சேத்திரம் முதற்காலுக்கு, தனுசு-விருச்சிகம்-துலாம்-கன்னி-கடகம்-சிங்கம்-மிதுனம்-ரிஷபம்-மேஷம்-ஆக கூ-ம் நேர்நடத்துக உ-ம் காலுக்கு கன்னி-துலாம்-விருச்சிகம்-மீனம்-கும்பம்-மகரம்-தனுசு-விருச்சிகம் - துலாம் - ஆக கூ-ம் நேர்நடத்துக ங-ம் காலுக்கு, கன்னி-கடகம்-சிங்கம்-மிதுனம்-ரிஷபம்-மேஷம்-தனுசு-மகரம்-கும்பம்-ஆக-கூ-ம் நேர்நடத்துக ச-ம் காலுக்கு, மீனம்-மேஷம்-ரிஷபம்-மிதுனம்-கடகம்-சிங்கம்-கன்னி-துலாம்-விருச்சிகம்-ஆக கூ-ம் நேர்நடத்துக இதன்மேல் இடவொட்டு அந்திய நட்சேத்திர முதற்காலுக்கு, தனுசு-மகரம்-கும்பம்-மீனம்-விருச்சிகம்-துலாம் மிதுனம்-கடகம்-சிங்கம்-ஆக-கூ-ம் நேர்நடத்துக உ-ம் காலுக்கு கன்னி-துலாம்-விருச்சிகம்-மீனம்-கும்பம்-மகரம்-தனுசு-விருச்சிகம் - துலாம்-ஆக-கூ-ம் நேர்நடத்துக. எ-று. (ந)

இடவொட்டு அந்தியநட்சேத்திரம் ந-ச-ம் காலுக்கு
நடத்துமுறமை, காலசக்கரவருடம், துரககதி,
மிருகேந்திராவ லோகனம், மண்டுகேகதி.

இடமரிவைமுதலாறக்கதியாய்வின்னேரு
மெட்டசமுமீனேரீதிடவொட்டிறிதற்காஞ்
சுடர்முதலாண்டைந்திருபத்தொன்றேழொன்பதுபத்
தோரிரண்டெட்டோர்நான்கீதிவர்க்குளவிற்றெறுமாய்
நடவதுமாவரியவலோகனமிவைமுன்பின்பாய்
நடப்பதுமண்டுகேகதிவிகிர்திநடைக்குளதாங்

குடமுனியேயிதற்கபசாரத்தியல்கேளென்றான்
குறக்கொடிசேர்ந்திலகியபொற்குன்றெனநின்றவனே.

(இ-ள்.) இடவொட்டு அந்தியநட்சேத்திரம் ௩-ம்-காலுக்கு கன்னி-கடகம்-சிங்கம்-மிதுனம்-ரிஷபம்-மேஷம்-தனுசு-மகரம்-கும்பம்-ஆக ௯-ம் நேர்நடத்து ௪-ம் காலுக்கு மீனம்-மேஷம்-ரிஷபம்-மிதுனம்-கடகம்-சிங்கம்-கன்னி-துலாம்-மேஷம்-ஆக ௯-ம் நேர்நடத்துக காலசக்கர வருடம் அறியும்படி சிங்க ஆதித்தனுக்கு வருடம் ௫-கடகசந்திரனுக்கு வருடம் ௨௧. மேஷவிருச்சிக செவ்வாய்க்கு வருடம் ௭-மிதுனகன்னிபுதனுக்கு வருடம் ௯-மீனதனுசு வியாழனுக்கு வருடம் ௰-ரிஷபதுலாசுக்கிரனுக்கு வருடம் ௧௬ கும்ப மகரசனிக்கு வருடம் ௪-நேர்பாய்வது துரககதி மாறிப்பாய்வது மிருகேந்திராவலோகனம், இவைகலந்து பாய்வது மண்டுககதியாம் கும்போதயனாகிய அகத்தியமாமுனியே இதற்கு அபசாரத்தியல்பு கேட்பாயாகவென்று திருவாய்மலர்ந்தருளினவன் குறக்கொடியைச் சேர்ந்து இலகாநின்ற சாம்பூனதசைலம்போலும் நின்ற சுப்பிரமணியக்கடவுள். எ-று. (௪)

## வலவோட்டுசக்கரம்.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அசுபதி, கார்த்திகை, புனர்பூசம், ஆயிலியம், அத்தம், சோதி, மூலம், உத்திராடம், பூரட்டாதி, ரேவதி. | ௧-கால். | ௧ | ௨ | ௩ | ௪ | ௫ | ௬ | ௭ | ௮ | ௯ |
| | ௨-கால். | ௰ | ௰௧ | ௰௨ | ௮ | ௭ | ௬ | ௪ | ௫ | ௩ |
| | ௩-கால். | ௨ | ௧ | ௰௨ | ௰௧ | ௰ | ௯ | ௧ | ௨ | ௩ |
| | ௪-கால். | ௪ | ௫ | ௬ | ௭ | ௮ | ௯ | ௰ | ௰௧ | ௰௨ |
| பரணி, பூசம், சித்திரை, பூராடம், உத்திரட்டாதி. | ௧-கால். | ௮ | ௭ | ௬ | ௪ | ௫ | ௩ | ௨ | ௧ | ௰௨ |
| | ௨-கால். | ௰௧ | ௰ | ௯ | ௧ | ௨ | ௩ | ௪ | ௫ | ௬ |
| | ௩-கால். | ௭ | ௮ | ௯ | ௰ | ௰௧ | ௰௨ | ௮ | ௭ | ௬ |
| | ௪-கால். | ௪ | ௫ | ௩ | ௨ | ௧ | ௰௨ | ௰௧ | ௰ | ௯ |

## இடவொட்டுச்சக்கரம்.

ரோகணி, மகம், விசாகம், திருவோணம்,

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ௧-கால். | ௰௨ | ௰௧ | ௰ | ௯ | ௮ | ௭ | ௬ | ௫ | ௪ |
| ௨-கால். | ௩ | ௨ | ௧ | ௯ | ௰ | ௰௧ | ௰௨ | ௧ | ௨ |
| ௩-கால். | ௩ | ௪ | ௫ | ௬ | ௭ | ௮ | ௰௨ | ௰௧ | ௰ |
| ௪-கால். | ௯ | ௰ | ௰௧ | ௰௨ | ௧ | ௨ | ௩ | ௫ | ௪ |

மிருகசீரம்·பூரம், அனுஷம்·அவிட்டம்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ௧-கால். | ௯ | ௮ | ௭ | ௬ | ௪ | ௫ | ௩ | ௨ | ௧ |
| ௨-கால். | ௬ | ௭ | ௮ | ௰௨ | ௰௧ | ௰ | ௯ | ௮ | ௭ |
| ௩-கால். | ௬ | ௪ | ௫ | ௩ | ௨ | ௧ | ௯ | ௰ | ௰௧ |
| ௪-கால். | ௰௨ | ௧ | ௨ | ௩ | ௪ | ௫ | ௬ | ௭ | ௮ |

திருவாதிரை·உத்திரம், கேட்டை·சதயம்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ௧-கால். | ௯ | ௰ | ௰௧ | ௰௨ | ௮ | ௭ | ௩ | ௪ | ௫ |
| ௨-கால். | ௬ | ௭ | ௮ | ௰௨ | ௰௧ | ௰ | ௯ | ௮ | ௭ |
| ௩-கால். | ௬ | ௪ | ௫ | ௩ | ௨ | ௧ | ௯ | ௰ | ௰௧ |
| ௪-கால். | ௰௨ | ௧ | ௨ | ௩ | ௪ | ௫ | ௬ | ௭ | ௧ |

காலசக்கரதிசைக்கு அபசாரம், மண்டூககதி,
மிருகேந்திராவலோகனம், துரககதி,
இவற்றிற்குஸ்தானம்.

அவகாரத்தியல்பயநோரிவைவரைவலவொட்
டாதிமுதலனடுவிரண்டாங்காலளவுமாந்தொந்
துவகோராறுருமூன்றுமீனிடமாம்வின்னேர்
சொல்வதிடமாமொருநேர்மற்றுளதுக்குளதாந்

தவளைநடைக்கரிவைகுளிந்தபனனிலவீணையுமாங்
தகர்தலுமீன்விருச்சிகமுந்தனுதகர்தேள்கயலு
மிவையரிமாவென்னுமிருதுற்கதிநேர்க்குளதா
மிதன்மேன்மாதிசைக்குளதுமிசைப்பதகத்தியனே.

(இ-ள்.) காலசக்கரதிசைக்கு அபகாரமறியும்படி மேடதிரைமுதலாகக் கன்னிவரைதிசை சூ-க்கும் வலவொட்டு ஆதியந்த நட்சேத்திரத்தில் ச-நடுநட்சேத்திரம் முதற்கால் உ-ங்கால் ஆக சூ-கால்வரைக்கும் நடத்துவதுபோல் நடத்துக துலாதிசைக்கு மிதுனம் முதல் சூ-ம் மீனமுதல் இடமாக ந-ம் ஆக-கூ-ம் நடத்துக விருச்சிகதிசைக்குதனுமுதலிடமாக மேடம்வரை கூ-ம் நேர்நடத்துக் தனுதிசைமுதல் மீனதிசைவரைக்கும் மேடமுதல் கடகம்வரையும் நடத்துவதுபோல்நேர்நடத்துக † மண்டூககதிக்கு ஸ்தானம் கன்னி கடகம் சிங்கமிதுனம்‡ மிருகேந்திராவலோகனத்துக்கு ஸ்தானம் மேடதனுசு மீனவிருச்சிகம் $ துரககதிக்குஸ்தானம், தனுசுமேடம் விருச்சிகமீனம் இதன்மேல் மகாதிசையியல்புங் கேட்பாயாக அகத்தியமாமுனியே. எ-று. (ரு)

காலசக்கரப்படலம்
முற்றிற்று.
ஆகப் படலம் ய௧-க்கு கவி அஅ.

---

## மகாதிசைப்படலம்.

மகாதிசை, மகாதிசையபகாரம்.
பாவகதிசை, பாவகதிசை யபகாரம்.

திசைக்கிரவிமுதலவருற்றிடுந்தினந்தொட்டுரைப்பர்
சிரமுதற்றுயளவுமிவர்சேரிடமீருய்ச்சேர்த்
திசைப்பதொற்றைநேரிடமற்றதற்காமீதிரண்டா
யியம்புதனமூவேழுதிசைக்காமிதற்கித்திறமா

---

† கன்னியினின்று கடகம்பாய்வதும் கடகத்தினின்று கன்னியிற்பாய்வது சிங்கத்தினின்று மிதுனம்பாய்வதும் மிதுனத்தினின்று சிங்கம் பாய்வதும் மண்டூககதி.

‡ மேடத்தினின்று தனுசிற்பாய்வதும் மீனத்தினின்று விருச்சிகத்திற்பாய்வதும் மிருகேந்திராவலோகனம்.

$ தனுசினின்று மேடம்பாய்வதும் விருச்சிகத்தினின்று மீனம் பாய்வதும் துரககதி.

மூசைப்பதபகாரமவர்நேருளமற்றவரு
மவரவருக்கமைத்ததைமற்றவருமருந்துவராற்
றசத்துளமாதத்தொகைசம்வச்சரமாதிசைக்காங்
தகர்முதலக்கடிகையினேர்தற்பிரிவுக்குரையே.

(இ-ள்.) சூரியாதிகேதுவரை. கூ. பேருக்கும் ஜாதகர்பிறந்த நட்சேத்திரந்தொட்டு நடத்துவது மகாதிசையாம் இலக்கினமுதற் பன்னிரண்டாம் இடம்வரைக்கும் அந்தந்த இராசிக்குடையவர்களிருந்த இடமீறாக அந்தந்த இராசிமுதலாக வைத்து ஒற்றைக்கு நேரும் இரட்டைக்கு இடமுமாக நடத்துவது பாவகதிசையாம்- இவைதிசை. உ௰ங-க்குமென்ப இவற்றிற்கு அபகாரமறியும்படி. அவரவர்க்குள்ள திசைவருடத்தைவைத்து அத்திசைநாதன் முதல்நேர் மற்றவரும் அவரவர் திசைப்படி பொசிப்பார்கள். மகாதிசை கூ-க்கும் ௰ மாதப்படிவருடம் நடத்துக-இதன்மேல் பாவகதிசைக்கு அபகாரமறியும்படிமேடமுதல்அந்தந்தஇராசி நாழிகைப்படிநடத்துக. எ-று.

கிரகாதிபருடையமகாதிசையில்அபகாரம்,
சித்திரம், சூக்ஷமம், பிராணன் இவற்றை
யறியும்முறைமை கூறுகின்றோம்.

ஒவ்வொருவனுடைய மகாதிசை வருஷத்தையும் ௱உ௰-க்குக் கொடுத்துக்கண்டஈவு அபகாரத்துருவம் இந்தத்துருவத்தை ஒவ்வொருவனுடைய மகாதிசைவருஷத்திற் பெருக்கிக்கண்ட தொகை அபகாரகாலமாம்.

ஒவ்வொருவனுடைய அபகாரகாலத்தையும் ௱உ௰-க்குக்கொடுத்துக்கண்ட ஈவி சித்திரத்துருவம். இந்தத்துருவத்தை ஒவ்வொருவனுடைய மகாதிசைவருஷத்திற் பெருகிக்கண்ட தொகை சித்திரகாலமாம்.

ஒவ்வொருவனுடைய சுத்திரகாலத்தையும் ௱உ௰-க்குக் கொடுத்துக்கண்டஈவு சூக்ஷமதுருவம். இந்தத் துருவத்தை ஒவ்வொருவனுடைய பகாஓசைவருஷத்திற்பெருகிக்கண்ட தொகைசூக்ஷமகாலமாம்.

ஒவ்வொருவனுடைய சூக்ஷமகாலத்தையும், ௱உ௰-க்குக்கொடுத்துக்கண்ட ஈவுபிராணத்துருவம். இந்தத்துருவத்தை ஒவ்வொருவனுடைய மகாதிசைவருஷத்திற்பெருகிக்கண்டதொகைபிராணமாலமாம்

மகாதிசைப்படலம்

முற்றிற்று.

ஆகப்படலம் ௰உ-க்கு கவி-அகூ,

---

# பாசகாலவர்க்கப்படலம்.

## பாசகாதிபர், சத்துரு.

உரைத்திடுபாசம்போதுங்கார்வேதுமகப்பே
ருடனுதிப்பர்நால்வர்சுகனொருவனிதிபுதனு
மொருத்தனனல்சனியினனுமினஞ்மதிசுன்றனமு
மிக்குருகுருப்புகர்சேயுமெமனனவெற்றிவியுங்
கருத்தறிவனிரவிவிதுக்காரியும்பார்கவன்கற்
கடகம்விற்றேளினருமிவர்கதிரவனோர்க்குளராம்
விருத்தமொன்றீதன்றிருநான்மேல்கீழ்பிற்பாதி
மேலிதனுங்கொன்றுவிடன்மித்திர்மற்றதுவே.

(இ-ள்.) * பாசகன், போதகன், காரகன், வேதகன் இவர்கள் நால்வரும்பாசகாதிபாம் - ரவிதிசைக்குசனிபாசகன், சேய்போதகன், குருகாரகன், புதன்வேதகன். சந்திரன்திசைக்கு சுக்கிரன்பாசகன், சேய்போதகன், சனிகாரகன், ரவிவேதகன் செவ்வாய்திசைக்கு ரவி பாசகன். மதிபோதகன், சனிகாரகன், குருவேதகன். புதன்திசைக்கு மதிபாசகன், குருபோதகன் சுக்கிரன்காரகன், சேய்வேதகன், வியாழ திசைக்கு சனிபாசகன், சேய்போதகன், மதிகாரகன், ரவிவேதகன். சுக்கிரதிசைக்கு புதன்பாசகன், ரவிபோதகன், மதிகாரகன், சனிவே தகன். சனிதிசைக்குசுக்கிரன்பாசகன், மதிபோதகன், குருகாரகன், சேய்வேதகன். ரவிதிசைக்குப்பாசகன் சத்துரு, சந்திரதிசைக்குபோ தகன், காரக வேதகனும்சத்துரு-சேய்திசைக்கு வேதகன்சத்துரு- புதன்திசைக்கு வேதகன்சத்துரு-வியாழதிசைக்குபாசகன்வேதகனும் சத்துரு சனிதிசைக்குபாசகன காரகனும்சத்துரு-மற்றவர்கள் மித்திராம். எ-று. (க)

## பாசகாதிபருக்குத்தானம்.

## காலம், காலப்பகை.

மற்றிடகோய்வேளறம்வர்த்தனையாம்வாய்நவஸம்லா
வெம்மனியாம்வாக்கறமன்ணன்வியமாம்வாயி
னுற்றவர்பூணுமாறைந்துருவிலியிருடிம்வா
யுதாம்வியகீராம்பூணணஞேய்தாரமுமா

* பாசகன்-பலனைக்கூட்டுவிப்பவன், போதகன் பலனைக்கொடு வென்பவன், வேதகனபலனைத்தவிர்ப்பவன், காரகன்பலனைக்கொடுப்பவன்.

முற்றிறம்போலவரவருற்றிடுமிடமுன்னேர்க்கா
　　மூகமழமேனைய்மால்புகர்வேண்முற்றிசைபொற்காலூழ்க்
டுகேற்றனையணிவற்கங்கிக்கற்பாயுசனிராகு
　　விரவிமதிபுகர்சிகிமாலிவர்காலப்பகையே.

(இ-ள்.) ரவிதிசையில் பாசகனுக்கு. ௬. மிடமும், போதகனுக்கு. ௭. மிடமும் காரகனுக்கு. ௯. மிடமும், வேதகனுக்கு. ௰௧. மிடமும், தானமாம். சந்திரதிசையில் பாசகனுக்கு. ௨. மிடமும், போதகனுக்கு. ௯. மிடமும், காரகனுக்கு. ௰௧. மிடமும், வேதகனுக்கு. ௩. மிடமும், தானமாம்-சேய்திசையில் பாசகனுக்கு. ௨. மிடமும், போதனுக்கு. ௬. மிடமும், காரகனுக்கு ௰௧. மிடமும் வேதகனுக்கு. ௰௨. மிடமும், தானமாம்-புதன்திசையில்பாசகனுக்கு. ௨, மிடமும், போதகனுக்கு. ௪. மிடமும், காரகனுக்கு, ௫. மிடமும், வேதகனுக்கு, ௩. மிடமும், தானமாம்-வியாழதிசையில் பாசகனுக்கு ௬. மிடமும், போதகனுக்கு, ௫. மிடமும், காரகனுக்கு. ௭. மிடமும், வேதகனுக்கு, ௰௨ மிடமும் தானமாம்-சுக்கிரதிசையில் பாசகனுக்கு ௨. மிடமும், போதகனுக்கு. ௬. மிடமும், காரகனுக்கு ௰௨ மிடமும், வேதகனுக்கு ௪. மிடமும், தானமாம்-சனிதிசையில் பாசகனுக்கு ௩. மிடமும், போதகனுக்கு ௧௧. மிடமும், காரகனுக்கு ௬. மிடமும், வேதகனுக்கு ௭. மிடமும் தானமாம்-காலமறியும்படி, சொன்னமுதல் சேய்காலம் வருஷம் ௨. மேற்புதன். வருஷம். ௬. மேற்சுக்கிரன் வருஷம் ௭ மேல் வியாழன்வருஷம் ௰௬. மேல் ஆதித்தன்வருஷம் ௰௮. மேல்சனிவருஷம் ௰௬. மேல்ராகுவருஷம். ௩௧௨-இவற்றிற்குப்பகையறியும்படிசேய்காலம் சனிதிசைக்குப்பகை, புதன்காலம் ராகுதிசைக்குப்பகை, சுக்கிரன்காலம் ரவிதிசைக்குப்பகை, வியாழன்காலம் மதிதிசைக்குப்பகை, ஆதித்தன்காலம் சுக்கிர திசைக்குப்பகை-சனி காலம்கேது திசைககுப்பகை, இராகுகாலப்புதன்திசைக்குப்பகை இவைகாலப்பகையாம்

பாசகாலவர்க்கப்படலம்.

முற்றிற்று.

ஆகப்படலம் ௰௩-க்கு கவி ௬௧.

---

# நாழிகையியற்படலம்.

## பகல்நாழிகை.

## இராநாழிகை.

காலணவேழ்க்கொன்றசநேர்கன்னிவரைக்கணியாய்
　　கருத்திறைபிலண்டுலேநேர்க்கெற்கடிகைக்கரணை

வேலையிலேற்றினகழித்தல்பகற்கிரதனோநோய்
வியந்தருமமூன்னடுவீறுச்சமிம்மீன்வரையாய்
நீலரிமாதம்முதனோர்க்கிவைக்கோணோர்க்கிடாா
ணிரத்தலொன்பான்காலொண்டந்துநோர்இறத்தனிசிக்கரஞ்
சாலமையீதொழித்திடிற்செல்காலம்விட்டைங்கானோர்
தளலொருகால்கிறுவிரனோர்சாற்றுதனழிகைக்கே.

(இ-ள்.) பகல் நாழிகை யறியும்படி அளந்த அடியுடன் எ, கூட்டி சித்திரைமாசமுதல் புரட்டாதிவரைக்கு க ம் ஐப்பசிக்கு ௲ ம் கார்த்திகைக்கு ௬ ம், மார்கழிகைக்கு ௫ ம், மாசிக்கு ௬ ம், பைங்குனிக்கு உ ம், அவச்சாயைதள்ளிநின்ற அடிக்கு அந்தந்த * மாசப்பகல்நாழிகை பாதியை எ ல் பெருக்கிக்கொடுக்கக்கண்ட ஈவுபகல்நாழிகையாம் இராநாழிகையறியும்படி ரோகணி மிருகசிரம் திருவாதிரை புனர்பூசம்பூசம் ஆயிலியம் இவை ௬ ம் உச்சம்வருமுன் உச்சமாம் மகம்பூரம் உத்திரம் அத்தம் சித்திரை சோதிவிசாகம் அனுசம்கேட்டைமூலம் பூராடம் உத்திராடம் இவை கஉ ம் உச்சம் வந்துச்சமாம் திருவோணம் அவிட்டம் சதையம் பூரட்டாதி உத்திரட்டாதிரேவதி அசுபதிபரணிகார்த்திகை இவை ௬ ம் உச்சம்திரிந்துச்சமாம் ஆவணிமுதல்மாசம் ௬ க்கு அனுடமுதலாகவும், மார்கழிமுதல்மாதம் ௬ க்கு உத்திரட்டாதி முதலாகவும் சித்திரைமுதல்மாசம் ௬ க்கு பூசம் முதலாகவும் வைத்து உச்சமான நட்சேத்திரம்வரையும் எண்ணிக்கண்டதொகையை உவ வில் பெருக்கி முன்சொன்ன ஆவணி முதல்மாசம் ௬ க்கு ஐந்தாகத்தள்ளி நின்றதொகை இராநாழிகையாம்பகலும் இரவும்மேக சஞ்சாரமாகில் நாழிகையறியும்படி செல்காலம் ௩ ௮ விதம் தன்னிசிறுவரல்நேர், கவ, க, ௮, இ, வ, நாழிகையாகவைத்து தொட்டவிரல் அறிந்து கண்டநாழிகை கூட்டிச்சொல்லுக. எ-று. (க)

நாழிகையறியும்விதம், சர்ப்பமுகுர்த்தம்,

உருத்திரமுகுர்த்தம்.

சாற்றுதனழிகைப்பேருக்காறுவிதத்தைவீ
சரம்விரல்சாப்பகற்மைத்தல்சனத்துரைசேர்த்திசைத்தன்
மேற்றன்மனத்தாற்கணித்தற்குடையவன்றற்பரைக்கும்
விதிப்பவனுமற்றவரால்விளம்புகல்சற்றரிதாங்

* சித்திரை ஐப்பசிக்கு பகல்நாழிகை ௩௦ வைகாசி புரட்டாதிக்கு ௩௦ ௮ ஆனி ஆவணிக்கு ௩௦கவ ஆடிக்கு ௩௦கஇ கார்த்திகை பைங்குனிக்கு உ௦கவ மார்கழிமாசிக்கு உ௦அ௮ தைக்கு உ௦அஇ.

காற்றசனம்ருத்திரப்பேர்க்குதித்திரண்டீரிரண்டாங்
கடிகையதாமிவைமூலகாண்டவியற்குளதா
மேற்றிறைமற்றோர்க்கொருவனெனமலையத்துதித்தா
னிதன்மேலேதுரைப்பதென்றானென்னிதையத்தவனே.

(இ-ள்.) பஞ்சபட்சி, சரம், விரற்றொடல், இராப்பகல் நாழிகையறிவதற் கமைத்தவிதி, சனங்களுரை சேகரித்துரைத்தல்,மனோகணிதத் தறிதல், ஆகிய இந்த ௬ விதத்தினாலும் நாழிகையறியத்தக்கது இந்த ௬ வகையுங்கண் டுரைப்பவன் தற்பரை வரைக்கும் சொல்லுவன் மற் றவராற்கண்டுரைப்பது சற்று அரிதாகும்-உதித்து ௨ ம் நாழிகைசர்ப் பமுகூர்த்தம் ௪ ம் நாழிகை உருத்திரமுகூர்த்தமாகும் - இவ்வளவும் மூலகாண்டத்தியல்பாம்-ஈசன்முதலிய தேவர்களுக்கும் ஒருவனாகப் பொதியாசலத்தி லுதையமான அகத்தியமாமுனியே இதன்மேற் சொல்லவேண்டுவதேதென்று திருவாய்மலர்ந் தருளினவன் என்னி தைய சரோருகவாசனான சுப்பிரமணியக்கடவுள். (எ-று) (௨)

நாழிகையியற்படலம்

முற்றிற்று.

ஆகப்படலம். ௧௪க்கு. கவி ௬௫.

---

மூலகாண்டம்

முடிந்தது.

---

# சாதகாண்டம்.

## இலக்கிய ஞேதையப்படலம்.

என்னிதையத்துளதிலதுமுன்னுளத்கல்லாதொன்
றெனக்குளதோபலத்தியல்சொற்றிடற்கெனைக்கேட்பதுலே
துன்னுடையகாப்பாய்நாழிகைத்திறமீறளவு
முள்ளவெல்லாந்தெள்ளமிழ்திலூறியசெம்பாகக்
கன்னலிரசத்துளிபோற்சிறிதுசிறிதாய்நீ
கழறலும்யான்குழறலுங்கேட்டுன்னிதையங்களித்துப்
பின்னுமுரையென்றனையுன்னன்பருக்கன்புடையேன்
பெற்றதுபோலத்தவனைப்பெற்றவற்குமில்லையே.

(இ-ள்.) சுவாமி இதன்மேற் சொல்லவேண்டுவதே தென்று திருவுளம் பற்றுமுன்னம் அகத்தியமாமுனிசொல்லும் உத்தரம் அடியேனுள்ளத்தில் உள்ளதும் இல்லாததும் திருவுளக்கறியாத தொன்றில்லை அதனால் இதன்மேற்பலத்தியல்பு சொல்லவேண்டுவது திருவுளத்திலிருக்க அடியேனைக்கேட்பது எவ்வாறு தேவரீர் காப்பு முதலாக நாழிகைத்திறம்வரையும் நடத்திய சகலவிருத்தாந்தமும் தெளிவினையுடைய தேவாமிர்தத்திற் பதபாகமாக ஊறிய கரும்பினதுசுவை சுரந்து துளிதுளிப்பனபோற் சிறிது சிறிதாக அடியேனுக்கு அறியும்படி தேவரீர்திருவாய் மலர்ந்தருளிய அதிருசிவனத்தை அடியேனுக்குப் பயிற்றுவித்து அடியேன் புன்சொல்லாய்க் குழறியவசனத்தைத் திருச்செவியி லேற்றுச் சித்தங்களிகூர்ந்து இன்னம் சொல்லுவாயாகவென்று அடியேனை அடுத்தடுத்துக்கேட்பதால் சுவாமீ உன்னுடைய அன்பருக்கன்பனுகிய யான்பெற்றபேறு என்னைப்பெற்றவா உன்னைப் பெற்ற உருத்திரமூர்த்திக்குங் கிடைத்ததல்ல. (எ-று.) (க)

சென்மலக்கினம், ஆரூடலக்கினம், கடிகா
லக்கினம், ஓராலக்கினம், காமலக்கினம்
பாவகலக்கினம்.

பெற்றவனுக் கொருகுருவேசொற்றிடெனத்தாழ்ந்த
பிரமன்மகற்கவனுமுதையத்தியல்பேசினான்
மூற்றலநேர்புகுந்தோறுமிலிங்கவியல்கலித
மூர்த்தமுலகுதையமெனமொழிவததாமுதற்கோ

ணுற்றதுடற்குளதிவனோராரூடங்கடிகை
யுதையமுதலொன்றதிரண்டரையோரைக்குலகோர்
சொற்றிடுநாமத்துடையததற்காமவ்வாரத்
துடையவன்றொட்டைந்தாகத்தோன்றுதல்பாவகமே.

(இ-ள்.) தன்னைப்பெற்றபிதாவுக்கு ஒப்பற்ற குருவாகியவா இலக்கினோதயத்தியல்பு திருவுளம்பற்றவேண்டுவ தென்றுதெண்ட பண்ணுநின்ற அகத்தியமாமுனிக்கு சுவாமிதிருவாய் மலர்ந்தருளினது- கிரேதாயுகத்துக்கு நிஷேகமுகூர்த்தமே சென்மலக்கினம், திரேதாயுகத்துக்கு ஆதானமுகூர்த்தமே சென்மலக்கினம், துவாபரயுகத்துக்கு சிரோதயமே சென்மலக்கினம், கலியுகத்து பூர்வோதையமே சென்மலக்கினமாம் இலக்கினேசன் இருந்தராசி இலக்கினத்துக் கெவ்வளவோ அவ்வளவு இலக்கினேசனைத் தொட்டுச்சொல்லுவது ஆரூடலக்கினமாம். உதையாதிசெனனர் தம்தம் சென்ற நாழிகையை ஒவ்வொன்றாக உதையமுதல்நேர் நடத்துவது கடிகாலக்கினமாம் ௨½. நாழிகையாக நடத்துவது ஓராலக்கினமாம். தனது நாமநட்சேத்திர ராசியே நாமலக்கினமாம். அற்றைவாராதிபனைத்தொட்டு. ௫ நாழிகையாக நடத்துவது பாவகலக்கினமாம். (எ-று.) (௨)

காரகலக்கினம், அங்கிஷலக்கினம், திரேக்காண லக்கினம்,
கிரகலக்கினம், சீவலக்கினம், ஆதிபத்தியலக்கினம்,
தேகலக்கினம், பிரபலலக்கினம்.

பாவகப்பேர்க்குரைத்திடுகாரகப்பெயர்க்கத்தலமாம்
பாருதையத்தங்கிசமதாமதனைப்பகிர்ந்த
மூவகைக்காணுக்கதுபெண்ணுக்கேழ்நேராக
முதலறமைந்திவைசரநேர்மொழுதறிரேக்காண
மாவிறையாதிபன்முதலோர்க்கிருப்பிடமாதவற்கோண்
வருசரந்தொட்டுதையமுதற்காற்கனல்சீவனுமாஞ்
சேவிறைக்காதிபமதிக்கோணுவபையமுடற்கிறைக்கோண்
டிடமழியாப்புகழிவைலக்கினத்தியல்சொற்றிடிலே.

(இ-ள்.) இலக்கினமுதல் ௧௨ பாவகத்துக்கும் பேராகச்சொல்லிய அந்தக் காரகங்களுக்கு அந்தந்தத்தானமே காரகலக்கினமாம் இலக்கினாங்கிஷமே அங்கிஷலக்கினமாம் இலக்கினத்திரேக்காணம் ௩க்கும் புருடராசிக்கு அதுமுதல்நேரும் ஸ்திரீராசிக்கு ௭ மிடமுதல் நேருமாக நடத்துவதில் சரதிர உபையங்கண்டு ௧ ௯ ௫. தொட்டு நேர்சொல்வது திரேக்காண லக்கினமாம் - ரவிமுத லுள்ளவர்களுக்குத் தம்இருப்பிடமே கிரகலக்கினமாம் ரவித்திரிகோண சரராசிதொட்டு

உதையமுதற் காற்கடிகையாக நேர்நடத்துவது சீவலக்கினமாம். சுக்கிரனிருந்தராசியே ஆதிபத்திய லக்கினமாம் சந்திரத்திரிகோணஉபயராசியே தேகலக்கினமாம் இலக்கினேசத்திரிகோணத் திராசியே பிரபலலக்கினமாம். இவைலக்கினத்தியல்பு. (எ-று) (௬)

## தேவவின்போதயசெனனம்.

சொற்றிடுமிப்பெயர்ப்படிலக்கினப்பலமப்பலமாய்ச்
சொல்வரிதன்மேலுதையத்துளவியல்போதுங்கா
னற்றினமற்றதுஞ்சுபமாய்நாட்கிறையாதவனு
நட்புறவீறிதையரொன்றாய்நண்ணுமுதையத்தில்
பொற்றனதிலுறவினரபுருடவர்க்கத்தாகப்
புகாளைபத்தனல்கோண்கேந்திரமவர்கள்பொருந்த
வுற்றதிப்பேர்தேவதிராதாதுவர்க்கோத்தமமா
யுச்சமுச்சாங்கிசமாகிற்றேவவின்போதயமே.

(இ-ள்.) முன்சொல்லிய இலக்கின வகைக்கெல்லாம் அந்தந்தவர்க்கத்துக் குள்ளபலனை அந்தந்த இலக்கினந்தொட்டு நடத்துக. இதன்மேல் உதையபலன்சொல்லுங்கால், திதிவாரம் நட்சேத்திர முதலானவை சுபமாகவும், ரவிமதிதங்களில் நட்பாகவும் ௰௨, ௫க்குடையவர்கள்கூடி இலக்கினத்திலிருக்கவும் இந்தலக்கினம் குருவுக்குஆட்சி நட்புகர புருடராசியாகக் கூடவும் ௭ல் சுக்கிரனும் ௰ல் சேயும் கோணகேந்திரமுமாக மற்றவர்களிருக்கவும் இவர்கள்தேவதாதுதிரவர்க்கமேறிவர்க் கோத்தமமாகவும் உச்சமாகி உச்சாங்கிஷமேறவும் ஆகிய இவை முதலானவை சேகரமாகில் தேவவின்போதய செனனமாம்.

## அதிசயவின்போதயசெனனம், உருவியல்,

## ஈசன்முதல் இதரதெய்யமீறாகப் பொருந்தும்பெயர்கள்.

உதையமுதற்கேந்த்ரவுச்சங்குருப்புதனுஞ்சிதனோ
டுடுபதியுஞ்சனியுமனலுதையவனுமுறிற்பா
ரதிசயவின்போதயமாமதற்குளதாதாதி
யாகவுருப்பேரதற்காமாட்சியுச்சமனுவீ
டிதுமுதலுள்ளதற்கதுவாயீசன்முதலிதர
வீறமப்பெயர்க்கியல்பாமினிக்கொடிவேர்கிழங்கு
விதைதழைகொம்பிவையாலுண்டாமூலவர்க்க
விபரமுங்கேள்போதுதையவேதியன்புத்திரனே.

இலக்கினத்திற்குருவும்புதனும், கேந்திரத்தில் சுக்கிரனும் சந்திரனும், உச்சத்தில் சனியுஞ் செவ்வாயும் லக்கினேசனும்கூடியிருக்கில் அதிசயவின் போதயசெனனமாம் தாதுமூல சீவவர்க்கங்களி லேறுவதறிந்து உருவியல்சொல்லுக. கிரகபெலாபெலமறிந்து ஈசன்முதல் இதரதெய்வமீறாகப் பொருந்தும்பேர்சொல்லுக, இதன்மேல், கொடி வேர், கிழங்கு, விதை, தழை, கொம்பர், இந்தவர்க்கங்களினால் உதையமாகும் மூலவர்க்க செனனமுங்கேட்பாயாக செந்தாமரசபுஷ்போதயனாகிய பிரமதேவனுக்குப்புத்திரனான அகத்தியமாமுனியே. எ-று.

தருச்செனனம், மிருகவர்க்கசெனனம்.

இரவிமூதனேருதையத்தியல்பிவைமூலமுமா
யெமன்புகர்வர்க்கமுமாகியேகமிசைக்கிறைவன்
வரிலினனற்கிறைகாழ்ப்பின்மால்சிதனந்தணர்க்குண்
மற்றவாக்குப்புறங்காழ்ப்பாமவர்க்குரைத்தமரமுந்
தரையிடமும்ருசிவகையுந்தான்யமற்றுந்தெரிந்து
தருச்செனனஞ்சொல்வர்முதற்போலுதையத்தவர்கண்
மிருகவியல்பாகவரிலவரவருக்கிசைத்த
விபரமதாமிதன்மேலும்விளம்புதல்சற்றுளதே.

(இ-ள்.) ரவிமுதலான கிரகங்களும் லக்கினமும் மூலவர்க்கமும் சனிசுக்கிர வர்கமுமாகி ம-க்குடையவன் லக்கினதயமு மாகில்தருசெனனம் இவ்வர்க்கம் ரவிமதியாகில் வயிரமில்லாதவை புதகுருசுக்கிர வர்க்கமாகில், உள்வயிரம் மற்றவர்களாகில் புறவயிரம். இதன்மேலும் இவர்களுக்குச் சொன்னமரமும் இடமும் ருசிவகையுந்தானியவகையும், இலே, கனி வேர், தோல், கிழங்கு முதலானவாக்கங்களுக்கெல்லாம் முன்சொன்னவையு மறிந்து தருவர்க்கசெனனம் சொல்லுக முன்சொன்னபடி சூரியாதிகிரகங்களும் இலக்கினமும் மிருகவர்க்க மாகில அவரவருக் கமைத்த மிருகவர்க்கம் சொல்லுக. இதன்மேலும் சொல்லுதல் சிறிதுண்டு. எ-று. (சூ)

புலிமுதலாகிய மிருகசெனனம்.

விளம்புதையத்தில்விசையர்மிருகவர்த்தமாதன்
மேடாவிகமெனில்வேங்கைகரடிபுதன்விடைம்பொன்
களங்கன்மகனைக்கூடிற்கவி தருமாசேய்மான்
கனல்கதைபெண்ணரியலவனெட்டகைசிங்கத்தே

விளம்புலிமால்குரங்குசிதனுய்தனுப்பொன்கலையா
யெவ்விடத்துமிரவிமுதலினர்கருளதுமிசைப்பர்
பளிங்கதிபனீசமுறிற்பூனைசுறச்சனியேற்
பட்டிபன்றியாமிவைபோற்பகர்வதுமற்றுளதே.

(இ-ள்.) இலக்கினமும் ச டி க்குடையவர்களும் மிருகவர்க்கமாய்க் கூடில் மிருகசெனனம் - இவைமேடறவியாகில் புலி, புதனுகில் கரடி, இடபவியாழன் புதனைக்கூடில் குரங்கு, வியாழன் தனிககில் குதிரை, சேயாகில்மான், செவ்வாய்மிதுன கன்னியிலிருக்கில்கரி, கடகத்திலிருக்கில்ஒட்டகை, சிங்கத்திலிருக்கில் புலி, இந்தச்சிங்கத்திற் புதனுகில் குரங்கு, சுக்கிரனுகில் நாய், தனுகுருவாகில்கலை, இதன்மேலும்மேடாதிசூரியாதி கிரகங்களுக்குச் சொன்னமிருகங்களுங் கூட்டிச்சொல்க- இதல்லாமலும் நீசசுக்கிரனுக்குப்பூனையும்மகரச்சனிக்கு நாய். பன்றியுஞ்சொல்லுக இவைபோல் மற்றுள்ளமிருக செனனமுங் கண்டு சொல்லுக. (எ)

மயில்முதலாகியபட்சிசெனனம்,

கீடசெனனம்.

உளத்தினுக்காறுதையர்கலைவர்க்கமும்புள்வர்க்கத்
துறிவினனேர்மயிலனஞ்செம்போத்துடனுயுதக்கால்
கிளித்திருமன்னூர்திநரையான்காகங்கூகை
சித்துருமங்கபலாகிற்கிரிச்செனனமாந்தை
வளர்த்தமர்செய்வதுபூவைவல்லூரப்புறவு
வானெடியகரிக்குருவிதாராவீமமுமா
நளிர்ப்பவுன்புனரிலிவையூர்வனவுக்குளதாய்
நவில்வததற்கதுவாய்நேர்நளினன்முதற்குளதே.

(இ-ள்.) டி க்குடையவனும் லக்கினேசனனும் பறவைவர்க்கமாகி மகரத்திற் கூடில்பட்சிசெனனம் இப்படிக்கு ரவிகூடில் மயில், மதிகூடில் அன்னம் சேய்கூடில் செம்போத்துடனேகோழி புதன்கூடில் கிளி, வியாழன் கூடில்கருடன், சுக்கிரன்கூடில் நரையான், சனிகூடில் காகம். இராகுகூடில் கூகை, கேதுகூடில் கித்துருமப்பட்சி, இந்தப்படிக்கு மீனமாகி ரவிகூடில்கழுகு, மதிகூடில் ஆந்தை, சேய்கூடில் காடை, புதன்கூடில் நாகணவாய்ப்புள், வியாழன்கூடில் வல்லூறு, சுக்கிரன்கூடில்புறு, சனிகூடில் கரிக்குருவி. இராகுகூடில்தாரா, கேதுகூடில் ஈமப்புள்ளாம் கீடசெனனமறியும்படி கடகவிருச்சிக லக்கினமும் கீடவர்க்கமுங்கண்டுரவிமுதலுள்ள கிரகங்களுக்குக் கீடவகை சொல்லுக. (அ)

மிருகவர்க்கமுதலானவைக்கு
இனங்கண்டுசொல்லும்வகை.

இனன்முதல்வர்க்கிசைத்ததினுன்மேல்கீழ்மற்றிதனு
லிதற்குளதூர்தனநடப்பதிநிற்றவழ்தல்பாய்தல்
சனிமுதனேர்தருவுமலகிப்பிவளைமுதல
சயனரிபுப்பேனெறும்புந்தலைவிஷந்தேனுளது
மனுசர்சுரர்மற்றுளதுமைந்தறிவாய்ப்புனலூர்
வனவரைவானடவடிமற்றுளதும்வகுத்துரைத்த
லனநடவுக்கொருதனையவவரவருக்குளதா
யறிந்துரைப்பரிதன்மேன்மானிடசெனனோதையமே.

(இ-ள்.) சூரியாதிகிரகங்களுக் குரைத்த வர்க்கத்தினுலும், மேல் கீழ் இடைநிலைக்கிரக வர்க்கத்தினுலும், இவற்றுள் ஊர்வன நடப்பன பறப்பன, தவழ்வன, பாய்வனவாகிய இந்தவர்க்கங்களினுலும், ஐவகையறிவினுக்குள் ஓரறிவாகிய தருவர்க்கம் சனியாகவும், ஈரறிவாகிய அலகு இப்பி சங்கு முதலானவை புதனுகவும், மூவறிவாகிய முட்டைபேன் எறும்புமுதலானவை சேயாகவும். நாலறிவாகிய ஈ வண்டு முதலானவை சுக்கிரனுகவும், ஐயறிவாகிய மானிடர்தேவர் மிருகவர்க்கம் குருவாகவும், கண்டறிவதினுலும், ஜெலம், காடு, நகரம், மலை, அந்தரம், இவைகளிற் சஞ்சார வர்க்கங்களறிந்து மிருகவர்க்கமுதலானவைக்கு இனங்கண்டுசொல்லுக இதன்மேல் அன்னவாகனனுக்குப் புதல்வனுனவாமானிடசெனனங்கேட்பாயா. எ-று. (௯)

மானிடசெனனோதயம்.

மானிடர்வைம்புதையமெனிலிதுவுமிதற்கிறைபொன்
மதிரவியுமாணெனிலாண்மற்றெனின்மற்றுதையம்
பானுவிதுலக்கினமன்மாந்தியிப்பேர்க்குளகோண்
பன்னிரண்டுக்குளதாகிப்பார்ப்பான்பார்த்திடிற்சாற்
கோன்வயதுக்குடையவராங்குறையுமதிற்குறையிற்
கோகனகத்திறைமுதலோர்பதனமுறக்கோணின்
மீனமன்கட்கெய்தாமன்மிக்குடையத்தருணன்
மேவினடப்பின்னமிலாவிரட்டையுருவினரே.

(இ-ள்.) பூர்வோதையமாகுங்கால் சென்மலக்கினமும் லக்கினேசனும் குருரவிமதியும் புருடவர்க்கமாகில் புருடரூபம் ஸ்திரீவர்க்கமாகில் ஸ்திரீரூபம் சென்மலக்கினமானது, ரவிமதிலக்கினேசன்குளிகன் இவர்கள் வர்க்கமாகிய பன்னிரண்டு திரிகோணத்து முடையதாகி, வியாழவீட்சணமும் பெறில்நூறுவயதுக்குடையவராம் இதிற்குறை

யில் வயதுகுறையு மென்ப ரவிமுதலானவர்கள் ௯ அ ௰௨ லிருக்க ரு, ௯, கன்னியாகிப் புதனிருக்க வியாழன்பாராதிருக்கில் அரைக்குக் கீழ்சுபாவரூபமும் அரைக்குமேல்பின்னமில்லாத இரட்டைஉருவமுமாம். எ-று. (௰)

புருடஇரட்டை, பெண்இரட்டை, ஆண்பெண்ணிரட்டை
இரட்டையுரு, மூன்றுரு, நான்குரு, அலி.

இரட்டையுருவினரிவைப்பேரிடத்தவராங்கிசத்தர்
யாழிறைபார்த்திடுமுபையலக்கினகேந்திரமு
மருட்டலைவரணைதலல்லாதணையிலிரண்டுருவா
மாணெனிலாண்மற்றெனின்மற்றாண்பெண்ணெனிலதுவா
முருட்டிதையரிருவர்முதனுல்வருநேர்முதற்போன்
முதற்றலமாய்ச்சேரினுருமொழிவதுநேருருவா
மருட்டதர்மரலிக்கிரகவர்க்கமுமொன்றேழாய்
வரிலிவருமதுவாகினபுங்கிசர்மாதவனே.

(இ-ள்.) ரவிமுதலானவர்களில், இரட்டையுருவினரும், இரட்டைராசிக்குடையவரும், இவர்கள் அங்கிசரும் புதன்பார்த்தஉபையராசிலக்கினத்திலும், கேந்திரத்திலும், சுபவர்க்கமில்லாமலிருக்கில், இரட்டை யுருவமாம் இவைபுருட வர்க்கமாகில்புருட இரட்டையாம் ஸ்திரீவர்க்கமாகில் பெண்ணிரட்டையாம். இவையிரண்டு வர்க்கமுமாகில் ஆண்பெண் இரட்டையாம் இவ்வர்க்க, லக்கனத்தில்பாவர் இருவர் கூடில் இரண்டுருவமாம் மூன்றுபேர்கூடில் மூன்றுருவமாம் நான்குபேர் கூடில் நான்குருவமாம் பாவக்கிரகர் அலிவர்க்கமுமாகி க எ-ல் இருக்க இவற்றிற்குடையவரும் அலிவர்க்கமாகில் அலியென்ப மகத்தான தவசினையுடைய அகத்தியமாமுனியே. எ-று. (௧௧)

செனனவிகிர்தி, தற்சமையசூதகாதிபர்க்
கினஞ்சொல்லும்வகை.

அவனிசுதனசிதனென்றெட்டவருமொன்றாய்ப்பத்னத்
தரவுசிகிசகிதமுமாயமலமலாதிருக்கப்
பவனமலவககோணும்பாவமுநீசமுமாய்ப்
பற்றில்விகிர்திச்செனனம்பகர்வடிவப்படியாம்
புவியுதையத்தாதிசிரங்கைகான்மற்றிவையிற்
பூவிறைசேய்சனிமதியும்பொருந்திலதற்றுதிப்பார்
தவனனின்முன்னேரிடமாறுற்றவர்மற்றவர்மற்றவரச்
சமையமதிற்றனுநேரச்சந்திரற்குமாமே.

(இ-ள்.) சேய்சனி, கஅ க்குடையவர்களுங்கூடி, பதனதானத்திலிருந்து ராகுகேதுசகிதமாகிச்சுபவர்க்க மல்லாதிருக்கக் கடக்கோண லக்கினமுமாகிப், பாவநீசமுமாகில், செனனவிகிதியாம்-இதற்கு இவ் வர்க்கத்தில் பெலவானுக்குச் சொன்னரூபம்சொல்லுக - சமபெலமாகில் அந்தலக்கினரூபம் சொல்லுக-இச்செனன உதையத்திரேக்காண முதல் சிரம்கைகால் நேர்வைத்து இதில்ரவிசேய் சனிமதிகூடில் அந்தந்த உறுப்பு இல்லாமல் பிறக்கும் என்க-கன்னிமுதல் இடமாகமேடம்வரைக்குள்ள கிரகாதிபரைக்கொண்டு தற்சமையசூதகாதிபருக்கு இனஞ்சொல்லுக மற்றுள்ளவைக்கொண்டு மற்றவைசொல்லுக இதற்குலக்கினமுதல் சந்திரன்வரைக்கும் சூதகாதிபரும் மதிமுதல் லக்கினம்வரைக்கு மற்றவருமாக முன்சொன்னவகைக்குக் கூட்டியோசனை பண்ணிச்சொல்லுக. எ-று. (கஉ)

ஊமை, குறளுருவம்.

ஆமன்விதுவலவாந்தியக்கோண்பவரங்கிசமா
யக்கமவமானனுறிலேந்தறனேரவைவாக்
கேமன்முதலானபவரெய்தவதற்கிறைவ
ரெய்த்திடிலொன்றமரமதியெட்டினில்வாக்கிறைபொன்
னும்முறவசுபருறினுவசைக்கோனுகை
நாயகனுக்கெட்டுள்சிகிநண்ணிலிதற்கூமை
பூமகன்சுன்மதிகூடித்தேளுதையாந்தத்தாய்ப்
பொயர்விழிப்புறிற்குறளாம்பொதியரைமுனியே.

(இ-ள்) இடபத்தில்மதியிருக்கக் கோணுந்தியம் பாவரங்கிஷமேறஉமிடத்தில் அக்குடையவனிருக்கிலும் ௫ ௬ கக ௩ உல் சனிமுதலாகிய பாவரிருக்க இவற்றிற் குடையவர்கள் பெலஈனமாகிலும், லக்கினத்தில் அமரமதியிருக்க உக்குடையவன் அல் இருக்க உல்பாவரிருக்கிலும் அக்குடையவன் உல் இருக்க, லக்கினேசனுக்கு ௫ அல் கேதுஇருக்கிலும், ஊமையென்ப-சேய்சனிமதிகூடி விருச்சிகாந்தியம் லக்கினமாகப்பாவர்பார்க்க இருக்கில் குறளுருவமென்ப பொதியவரைமுனியே. எ-று. (கந)

முடம், செவிடு, கூன்.

முன்னிறைக்கைக்தெட்டசிதன்முற்றலவீறயமாய்
முற்றினவனலாகின்முதுசேய்சேய்மதியு
மன்னியலக்கினமீனமாகிலரவுதையம்
வந்ததுமச்சிகியாகில்வருவதுவுமுடமாம்

பொன்னருணன்கவிமதியுட்புகவிறைக்கெட்டிணைதயம்
புயங்கமுறிற்றேட்கோணப்பொய்யர்நவாங்கிஷமொன்
றன்னிருபனுறிற்பவமூன்றரவசிதனுறிலீ
தாஞ்செவிடொன்றுங்கலைசுன்னற்சேய்கூனதற்கே.

(இ-ள்.) லக்கினேசனுக்கு ௫ ௮ ல் சனிநிற்க, ௧௨ மிடம் ஜெலராசியாகிச் செவ்வாய்நிற்கிலும், லக்கினம்மீனமாகச் சனிசேய் சந்திரன் கூடிநிற்கிலும், ஆயிலிய நட்சேத்திரமாக லக்கினத்திற் கேது இருக்கிலும் மூடமென்பகுரு, புதன், சுக்கிரன்சந்திரன் கூடி ௫ல் இருக்க லக்கினேசனுக்கு ௫ ௮ ல் இராகுஇருக்கிலும் விருச்சிகக் கோணில் பாவரங்கிஷஞ்செய்ய லக்கினத்திற் சந்திரனிற்கிலும், ௩ ௧௧ல் ராகு சனிகூடிநிற்கிலும், செவிடென்பசென்மலக்கினம் மகரமாகிச் சனிசந்திரன் செவ்வாய்கூடில் கூனென்ப எ-று. (௧௪)

கூன், குறளுருவம், மூடம், குருடு.

கூனுதையவிதுவையனல்சனிகூடிப்பார்க்க
கோன்சனியாங்கிஷமேறிற்குறளுதையத்தொருவிற்
பானுசுதனீரணியிற்பர்கனுறிலுதையம்
பாற்குளமுங்கவியுமெனின்மூடத்துளபாலகரா
மானிறையைமதிகூடவொன்றினில்வாக்கதிப
னணையவனல்சனிபார்க்கிலாலரசுரக்கே
தூனடியீறடுப்பகிதாருடைசுடர்பாற்கவன்வே
யுருத்திரனீதாந்தகமித்தானமதுற்றிடிலே.

(இ-ள்.) சென்மலக்கினமதியைச், சேய்சனி கூடிப்பார்க்க, லக்கினேசன் சனியாங்கிஷமேறில் கூனென்ப-லக்கினம்மேடமாகிச் சனியிருக்க ௪ ௩ ல் புதனிருக்கில் குறளுருவென்ப. உத்திர நட்சேத்திரமாக லக்கினத்திற் சுக்கிரனிருக்கில் மூடமென்ப சுக்கிரனை மதிகூட; லக்கினத்தில் ௨க்குடையவனிற்கச்சேய் சனிபார்க்கிலும், கார்த்திகைமூலத்திற்கேதுவிருக்க, ரேவதி பரணி ஆயிலியம் பூசம் சித்திரை சோதியிற் சனியிருக்க, புனர்பூசம் திருவாதிரையிற் சுக்கிரனிருக்க இவைநேத்திராந்தகத்தானமாகிய ௨ ௬ ௮ ௧௨ ஆகவரினும் குருடு.()

வலக்கணகுருடு, இடக்கண்குருடு, இருகண்குருடு
குந்தம், மாலைக்கண், செம்படலைக்கண், கரும்படலைக்கண்,
பூப்படலைக்கண்.

அதன்மரிரண்டொன்றேழெட்டரிகுடமேறுகி
தியற்பருதியைச்சேரவேதற்கிறையார்மறையின்

மதமுதலீருறுமுன்போலாகவதிற்பவரு.
மதியிம்வரிலிடைக்கண்முணர்மற்றதற்காமிவைசேர்ந்
திதமிலுறிலிருகணுங்கேடென்பரிதிற்சுபர்நோக்
கெய்திலிது குந்தமிரண்டிறையேகத்தேகக்
கதிரரியுக்றிடப்பாவர்காண்பதுமாலைக்கண்
கரும்படல்செம்படல்பூவொன்றயமிவர்காண்பதற்கே.

(இ-ள்.) ௨ ௧ ௭ ௮ இவைசிங்கம் கும்பம் இடபமாகி. இதில் ரவி பாவருடன்கூட, இதற்குடையவர் மறையில்வலக்கண் ணுசமென்ப ௧ ௭ ௧௨ ௬ இவை சிங்கம் கும்பம் இடபமாகமதியும் பாவருங் கூட இவற்றிற்குடையவர்கள் மறையில் இடக்கண்ணுசமென்ப. இவை ௨ம் கூடில் இருகண்ணும் கேடென்ப இதிற்சுபர் நோக்கில் குந்தமென்ப ௨ க்குடையவன், ௧ ல் இருக்க, ரவிசிங்கத்திலிருக்கப் பாவர்பார்க்கில் மாலைக்கண்ணென்ப லக்கினம்மேடமாகி முன்போல ரவிமதி பாவர் கூடச் சேய்பார்க்கில் செம்படலைக்கண்ணென்ப சனிபார்க்கில் கரும் படலைக்கண்ணென்ப சுக்கிரன் பார்க்கில் பூப்படலைக்கண்ணென்ப. ()

கொடிசுற்றிப்பிறத்தல், சர்ப்பத்துடன்பிறத்தல்,
கைமுன்விட்டுப்பிறத்தல்; கால்முன்விட்டுப்பிறத்தல்,
பையோடுபிறத்தல்.

காணமிலொன்ருனரிமைகட்செவியூழ்மதிசேய்
காரியுறிற்கொடியுரககல்லியத்ரேக்காணம்
பூணுவதுமுற்பலமாய்லக்கினக்கோனைணிக்கிற்
புயங்கமுறுமன்னிளைக்கப்போக்கனையர்புரத்தி
ணுணிலவர்நோக்கமுறிற்கைமுனமாம்வியக்கோ
னண்ணிவடிமுனமாம்வேணளினனவன்மகனென்
றேனுளரோடுற்றிடிற்பையோடுதித்வல்செய்நோக்
கெய்திடிற்பார்பார்ப்பதுபொன்வர்க்கமில்லென்பதற்கே.

(இ-ள்.) சென்மலக்கினம்மேட சிங்கம்இடபமாக, குருவொழியர விமதிராகுசேய்சனிகலக்கில் கொடிசுற்றிப் பிறக்குமென்ப லக்கினம் சற்பத்திரேக்காணமாக இதிற்பெலமாக முன்சொன்னபாவ பெலமும் பெலக்க லக்கினேசன் பெலகீனமாகில் சத்பத்துடனே பிறக்குமென்ப லக்கினேசன்பெலகீனமா ய ௬ க்குடையவர்கள் லக்கினத்திற் பெலக் கப்பாவர்பார்க்கில் கைமுன்விட்டுப் பிறக்குமென்ப இந்தவர்க்கத்து டனே ௧௨ க்குடையவன் பெலக்கில் கால்முன்விட்டுப் பிறக்குமென்ப எல் ரவியும் ௧ ல் சனியுமாகப்பாவர் கூடப்பிறக்கில பைபோடுபிறக்கு

மென்ப - சேய்பார்க்கில் பூமிபார்த்துப் பிறக்குமென்ப - இவைகுரு வற்க மில்லாதாகிற்சொல்லுக. எ-று. (க[illegible])

## கைகாலில் அதிகவிரல், பல்லுடன்பிறத்தல், உறுப்புகளுக்குப் பங்கஞ்சொல்லும்வகை, அழகு.

பதனமுறமற்றவரொன்பதுதனையர்புதன்மேற்
படலுமிவன்றன்னில்வலிபற்றிலுங்கைகால்க
ளதிகவிரலிறையொடுபகேதுமுகமாக
வருணனில்லாககிசச்சனிசேய்க்கெயிறுதையத்தாகு
முதையமுதலீறளவுக்குரைத்தவுறுப்பதனுக்
குளதீதுமற்றதுங்கண்டுரைத்திடுவரிதன்மேன்
மதனெனவல்லோர்கோணகேந்திரமேலேறில்
வனசனையுற்றிடிற்கமலவுதையமதில்வரிலே.

(இ-ள்.) சகலரும்பதனத்திலிருக்க புதன் கூ றில் உச்சமாக அல்லதுதனது வீட்டிற்பெலக்கிலும் கைகாலில் அதிகவிரலென்ப லக்கினேசனும் உபகேதுவுங்கூடி உ ல் இருக்க மிதுனகன்னியிற் சனிசேய் அங்கிஷமாகில் பல்லுடனே பிறக்குமென்ப லக்கினமுதல் கஉ மிடம் வரைக்குஞ் சொன்ன உறுப்பறிந்து இதிற்பாவர்சேகரிக்கில் அந்தந்த உறுப்புக்குப் பங்கஞ்சொல்லுக இதன்மேல் அழகறியும்படி சுபக்கிரகங்கள் லக்கினகோண கேந்திரத்திலிருக்கினும், இவர்கள் ரவியுடன் கூடினும், ஜெலராசி உதையமாகப் பிறக்கினும், அழகென்ப. எ-று

## சத்தியோமரணம்.

வருமுதையத்தியல்புமிதாமிதன்மேலாயுவுங்கேண்
மலயமுனியேகோணில்வருங்குருக்கேந்திரத்திற்
குருதிவரவிவனிலொன்றுய்க்கொடியவர்களொளிக்கிற்
குறைமதியொன்றெட்டுறக்தார்கோவுதையத்தாகப்
பருதிமகன்போக்கீறிற்பற்றிலிவனென்றேன்
படப்பவர்பார்த்திடச்சுபர்கேந்திரமொழியப்பனையீ
றரசுமுதலிச்செனனமாகிலசுரப்பே
ரபுத்தமெனவிடமாகிலன்றவனுயுவுமே.

(இ-ள்.) இலக்கினோதைய இயல்பும் இதொரு பிரகாரஞ் சொன்னோம் இதன்மேல் அகத்தியமா முனியே ஆயுர்த்தாயம் கேட்டயாக நு கூ ல் வியாழனிருக்க இவனுக்குக் கேந்திரம் செவ்வாயிருக்க மேடவிருச்சிகம பிறக்கப்பாவர் மறையினும், க்ஷய மதி. க அ ல் இருக்க பூசம் பூராடம் பிறக்க ய கஉ ல்

சனியிருக்கினும் க எல் சனியிருக்கப்பாவர் பாவர்க்கச்சுபர் கேந்திரம் விட்டிருக்க அனுசம் ரேவதிகேட்கை இவைலக்கினோதயமாகப் பிறக்கினும், அபுத்தமூலம் விறக்கவி— கடிகையுதையமாகினும் சத்தியோ மரணமாங் எ-று. (கசு)

இரண்டுநாள் ஆயுள்.

ஆயுவுதேய்பிறைவேன்சேயண்ணல்பெலமற்றோன்
றங்கிசம்ரண்டுறத்தார்நீரதிலுதையமாகிற்
றேயுமதிகீடமுறச்சனியேமொன்றணையச்
செலமுதையமாகநல்லோர்தீதறக்கேந்திரிக்கி
னேயமனலாகவதுகடகமெணவமர
நிலவுப்தனம்பெறக்கோணிசிப்பகைபொன்னிலகின்
மாயும்விதுக்கேந்திரமுமாசுளரெட்டேற
மாதவர்கேந்திரமகலின்வயதிருநாளவற்கே.

(இ-ள்.) அல் அமரமதியிருக்க எல் சேய்நிற்கலக்கினேசன்பெலகீன மாகலக்கினங்கிசம் உல் இருக்கப் பூசம் பூராடம் பிறக்கினும், அமர பட்சத்துச் சந்திரன விருச்சிகத்திலிருக்க க எல் சனியிருக்க, செல ராசி உதையமாகச்சுபர் கேந்திரத்தி விருக்கினும் நு மிடம் கடகமாகிச் சேயிருக்க, அமரமதி சு அ கஉல் இருக்க நு கூல் ரவிகுருக் கூடினும், அமரமதி கேந்திரிக்கப்பாவர் அல் கூடச்சுபர்கேந்திரம் விட்டிருக்கினும், வயது உ நாளென்ப. (உ0)

மூன்றுநாள்முதல் எட்டுநாள்வரை ஆயுள்.

வயதுறநல்லோர்மூன்றுநாளிரவிமதியை
மருவவிவர்க்கேழரவுவரிலணியூழ்மதியுங்
கயலுதையமாகவனலங்கிசங்காரேறிற்
கதிரில்வகைமதிகோணிற்கள்வருமாய்க்கதுவி
லயமனரிமன்மதிக்கேழாகவிறைமறையி
லாயொருநேசாறிலதிலம்புலீக்கெட்டதர்ம
ரியைமின்மதிசெண்டாந்தத்தீனருமாய்ச்சர்பத்
தெய்திலிவைமூன்றுநாட்கெட்டாநாட்கெமனே.

(இ-ள்.) சுபர் அல் இருக்கச் சென்ம நட்சேத்திரத்திற்கு ங ம் நட்சேத்திரத்தில் ரவுமதிகூட இவர்க்கேழில் ராகு விருக்கில் ங ம் நாள் மரணம் லக்கினம் மீனமாமகரவிமதி ஙல் இருக்கச் சேய்கட காங்கிசமேறில் சம் நாள்மாணம் ரவி ச அல் இருக்க நு கூல் பாவருடன்

கூடிச்சந்திரன் இருக்கில் ௰ம் நாள் மரணம்-மதிக்கு எல் ரவிசேய் கூடலக்கினேசன் பதனமாகில் ௬ம் நாள் மரணம்-மேடமுதற் கன்னி வரையுள்ளராசி சென்மலக்கினத்துக்கு ௪ மிடமாகிப் பாவர்நிற்கினும் அல்லது துலாமுதல் மீனவரைக்குள்ளராசி மதிக்குஎட்டாகிப் பாவர் நிற்கினும் எ ம் நாள்மரணம் கெண்டாந்தப்பிறக்கப் பாவருடன் மதி கூடச்சென்மலக்கினம் சற்பமுகூர்த்தமாகில் அ ம் நாள்மரணம் (உக)

ஒன்பதுநாள்முதல் மூன்றுமாசம்வரை ஆயுள்.

நாளிறைதேய்ந்தொழியருத்ரனண்ணிடிலொன்பதுநா
 ணளினன்வசையிற்சேய்சுன்ணுட்டமுறநாதன்
ருளுறப்பத்தாளத்தத்துளமொன்றசிதன்
 றழல்சிகியுற்றிடிலிருபதாமிரவிசனியும்
வேளெதிரினுறப்பவுமன்விழிக்கிலனல்சனியூழ்
 வெள்ளியிலெட்டகவுறில்வெயிலிறைகிபார்மேவிக்
கோளிலபசெயமாகிக்கூடனுறிலொன்றுய்க்
 கூறுதனேர்மூன்றெனுந்திங்கட்குளதிவ்வயதே.

(இ-ள்.) அமாவாசிபிறக்கலக்னம் உருத்திர முகுர்த்தமாகில் ௯நாள் அல் ரவி ௪ல் சேய் உல் சனி கஉல் லக்கினேசனிருக்கில் ௰ நாள் அல் சனி ௰ல் சேய் கல் கேது இருக்கில் உ௰நாள்-ரவிசனி கூடிலக்கினத்தி லிருக்கச் சேய்பார்க்கில் மாதம் ஒன்று ரவிசனி சேய்கூடி இடபது லாம் எட்டாகிஇருக்கில் மாதம் உ ரவியும்லக்கினேசனும் யுத்தத்திற் கூடிக் கிரகங்களினற் அபசெயப்பட்டு, எல் இருக்கில் மாதம் ௩. ()

நான்குமாதமுகல் பதினொருமாதம்வரை ஆயுள்.

குளித்தலர்மனிற்பெறஙிவட்டரவிறையைச்சேரிற்
 சோவுதையச்சிகியுறில்வீதல்கொடைகோதுடையோ
ருளத்தபனனுகில்னலெட்டிறைசேர்ந்துதிக்க
 வொள்றிறைதுற்பெலமாகினுரகமிறையொளிக்கிற்
கழத்தழலெட்டரவுசனிகானுறிலொன்றசிதன்
 காமனனலினன்மதியைக்கதுவிலொன்றக்கயலாய்
விலத்தரவில்சேயுள்வெயில்வேளுறிநான்மதநேர்
 மேவியபன்னொன்றுவரைவிளிகுவர்வையகத்தே.

(இ-ள்.) ௬ல் ரவிநிற்க, அல் லகிகினேசனும் ராகுவும் இருக்கில் மாதம், ௬ - பூராடத்திற் கேது விருக்க அதுவே சென்ம லக்கி

ணமாகில் ௫ மாதம் ௨ ௬ அ ௧௨ ல் பாயரிருக்க ௫ ல் ரவிநிற்கில் ௬ க்குடையவனும் சேயுங்கூடி லக்கினத்திலிருக்க லக்கினேசன் பெலகீனமாகில், ௭ மாதம் ௬ அ ௧௨ ல் லக்கினேசனும் ராகுவுங் கூடியிருக்கில் அ மாதம் ௬ ல் சேய் அ ல் ராகு ௧௨ ல் சனியிருக்கில், ௬ மாதம் ௧ ல் சனியிருக்க ௭ ல் ரவி, மதிசேய்கூடில் ௰ மாதம் லக்கினம் மீனமாக, ௪ ல்கேது, ௫ ல் சேய் ௭ ல் ரவியுமஇருக்கில் மாதம் ௧௧. ௭-று.

## ஒருவருஷமுதல்ஏழுவருஷம்வரை ஆயுள்.

வையகச்சேம்சிதனிலெட்டாய்வரிலிவனில்லதுவாய்
வக்கிரநீலனைத்தமுல்பார்த்திடிலதிற்பொன்மருவ
மெய்குளிகனைப்பெறிற்றேய்விதுவிறைக்கெட்டாக
மேவுவதில்லாகவனல்விழிக்கில்விதுத்தனைய
னையனைப்பார்த்தலவனதுபதனமதாய்ச்சேர
வனனுதிக்கிலேந்தரவாயசுபர்பெலமாகக்
கைகனகமுறிற்பிறைசேய்காரியரவுதிக்கிற்
காலனிதொன்றுயேழுக்காம்வருஷக்கணக்கே.

(இ-ள்.) இடபதுலாம் எட்டாகிச் சேயிருக்கில்வருஷம் ௧. மேடவிருச்சிகம் எட்டாகிச் சனிவக்கிரிக்கச் சேய்பார்க்கில் வருஷம் ௨ மேடவிருக்சிகம் எட்டாகிக் குருவிருக்க லக்கினத்திற் குளிகனிருக்கில் வருஷம் ௩ ௪ ல் அமரமதியிருக்க இவனுக்கு, ௬ ல் லக்கினேசனிருக்கச் சேய்பார்க்கில் வருஷம் ௪ கடகம் ௬ அ ௧௨ ஆகப்புதனிருந்துசந்திரனைப் பார்க்கலக்கினத்திற் சேயிருக்கில் ௫ வருஷம் வருஷம் ௫ ல் ராகுவிருக்கப்பாவர்பெலக்க ௪ ல் குருவிருக்கில் வருஷம் ௬ லக்கினத்தில் மதிசேய் சனிராகு கூடில் வருஷம் ௭-௭-று. (௨௪)

## எட்டுவருஷமுதல்பதின்மூன்றுவருஷம்வரை ஆயுள்.

கணக்கனைப்பெற்றவன்சிசுங்காமமுறமெய்பூண்
கள்ளருநிலரவதிரேக்காணமொன்றுக்காரி
வணக்கமல்வாரைக்கூடின்மதிகதிர் வேண்மருவ
மாசுளர்பார்த்திடவிறையுமாசுணமுமருவி
லணற்கெதிரிற்சிகிவிதுவொன்றனையலரியாகி
லமரமதியிரசதவீடணைதலெனவணையப்
பிணக்கனல்சேரிற்சனியைப்பிறைரவிசேய்கூடிற்
பெறும்வபதெட்டாய்ப்பதின்மூன்றளவுமுளபெயர்க்கே

(இ-ள்.) மதிகேதுவைக்கூடி ௭ ல் இருக்க ௧ ௩ ல் பாவரிருக்கில் வரும் ௮ லக்கினம் சற்பத்திரேக்காணமாக இதிற் சனிபாவருடன் கூடியிருக்கில் வருஷம் ௯ ரவிமதி ௭ ல், கேதுவிருக்க, ௧ ல் மதியிருக்க, ௪ ல். ரவியிருக்கில் வருஷம் ௧௧ இடபதுலாம் ஏழாகி அமரமதியிருக்க, ௯ ல்சேயிருக்கில் வருஷம் ௧௨ ரவிமதிசனிசேய்கூடி ல்வருஷம்௧௩. எ-று. (௨௫)

பதினாலுவருஷல் இருபத்தொருவருஷம்வரை ஆயுள்.

அற்கனனன்மேதைமிலம்புலிக்கேழாய்வரிலைந்
தமரமதிரவிசேயுமணையின்மதிக்காந்த
முதம்கதிபனவமாகிலிவன்விதுவிட்டிருக்க
முன்பினசுபர்ச்சேரமுதுசேய்பரர்த்திடின்மா
லெற்கனற்சேரிற்சனிமரணங்கிசமாய்ப்பவரோ
டிருக்கிலிவன்றூதைபுதனெய்தில்விதுவரியிற்
பற்கெதிர்சுன்கனலாயப்பாற்கவன்பார்த்திருக்கிற்
பதினான்காய்மூவேழென்பனவயதென்பதற்கே.

(இ-ள்.) மிதுனகன்னி மதிக்கேழாக இதில்ரவி சேய்கூடில் வருஷம் ௧௪ அமரமதிரவிசேய்கூடி ௫ ல் இருக்கில் வருஷம் ௧௫ லக்கினேசன் பெலகீன மாகிமதிக்கு ௧௨ ல் இருக்கில் வருஷம் ௧௬ லக்கினேசன் சந்திரனைக்கூடாமற் பாவமத்தியமாகச் சனிபார்க்கில்வருஷம் ௧௭ புதன் ரவிசேய்கூடில் வருஷம் ௧௮ சனிமகராங்கிசமேறிப்பாவருடன் கூடில்வருஷம் ௧௯ ரவிபுதன்கூடில் வருஷம் ௨௦ மதிசிங்கத்திலிருக்கச்சேய்சனி ௮ ல் இருக்கச் சுக்கிரன் பார்க்கில் வருஷம் (௨௬)

இருபத்திரண்டுவருஷ முதல் முப்பத்திரண்டு,

வருஷம் வரை ஆயுள்.

பதலூனனங்கிசந்தேளாயிரவிபார்க்கிற்
பார்ப்பதில்பொன்றுலைமால்பெண்பணியரிகேதரிவை
முதலோன்யாழிதுமுதலாயச்சனியாங்கிசநேர்
மொழிவதிருபத்திரண்டாய்மூவொன்பான்றுயின்முன்
னிதிலோர்மாதிற்றேளாயிரவிகுருவதிக்க
வெட்டிறைவேளுறிலிறைபொன்னிருநான்குற்றிடிற்சே
மதனீலனிறைமருவின்மனன்பதனத்திருக்கில்
வயதெழுநான்காகவெண்ணான்காம்வயதுக்கெனுமே.

(இ-ள்) சனிவிருச்சி காங்கிசமேறரவிபார்க்கில் வருஷம் ௨௨ லக்கினம் துலாமாகச்சனி யாங்கிசமேறக் குருபார்க்கில் வருஷம் ௨௩-லக்கினம் கன்னியாகச் சனிபாங்கிசமேறப் புதன்பார்க்கில் வருஷம் ௨௪-லக்கினம் சிங்கமாகச் சனியாங்கிசமே ராகுபார்க்கில் வருஷம் ௨௫ லக்கினம் கன்னியாகச் சனியாங்கிசமேறக் கேதுபார்க்கில் வருஷம் ௨௬-லக்கினம்மிதுனமாகச் சனியாக்கிசமேறலக்கிசேன் பார்க்கில் ஷ ௨௭ ௧ ௮, க்குடையவர்கள் கிரகமாறில் ஷ ௨௮ லக்கினம் விருச்சிகமாகிரவிதரு விருக்க ௮ க்குடையவன் ௭ ல் இருக்கில் ஷ ௨௯ லக்கினேசனும் வியாழனும் ௮ல் இருக்கில் ஷ ௩௰-ஏழிற்சேயிருக்கச் சநி லக்கினேசனைக் கூடில் ஷ ௩௧-லக்கினேசன் ௬ ௮ ௰௨ல் இருக்கில் ஷ ௩௨. எ-று. (௨௭)

அற்பஆயுள், தீர்க்கஆயுள்,

மத்திம ஆயுள்.

துக்கமனனபெறத்திறைதுற்பெலமாகிற்பணியுட்
 டோன்றவத்தற்றரை திசையிற்றோன்றிலிறைசுடருக்
கொக்கலரிலசிதனளையொன்றுளமெட்டிவர்க
 ளூரனறசற்சனரொடுங்கத்துற்சனர்வந்துயரின்
மக்கடுயிலொன்றசுபர்வரிவிவையற்பாயு
 வாகுமிவைமற்றுளதுமற்றது தீர்க்காயு
வக்களரித்தருமரையுற்றிடிலிடைமுன்புளதுக்
 கரசனெட்டீரூறுறிலப்பலத்துடனுகுதற்கே.

(இ-ள்.) அக்குடையவன் பெலக்க லக்கினேசன் பெலகீன மாகிலும் ௫ ல் ராகுவிருக்க அதற்குடையவன் திசையிற்பிறக்கிலும் ரவிக்குலக்கினேசன் சத்துருவாகிலும். சனியும் ௧ ௫ ௮ ௰ க்குடையவர்களும் பெலகீனமாகவும் சுபர் பெலகீனமாகப் பாவர் பெலக்கிலும் ௧ ௫ ௮ல் பாவரிருக்கிலும், அற்பாயுவாம் இவையல்லாத வெல்லாம் தீர்க்காயுவாம். இவைஇரண்டுக் கூடிக்கலக்கில் மத்திமாயுவாம். சத்தியோமரணந்தொட்டு அற்பாயுவரையுஞ் சொன்னபலத்துக்கு லக்கினாதிபதி பதனமாகிற்பலன் சொல்லுக. எ-று. (௨௮)

வாலாரிட்டம், யோகாரிட்டம், அற்பாயு,

தீர்க்காயு, வாலாரிட்டதோஷம்,

யோகாரிட்டதோஷம், அறபாயுதோஷம்.

ஆறிறண்டைநான்கெண்ணுவகற்கிறைசுன்வயதுக்
 கர்ம்வாலயோகமிவையரிட்டமற்பநடுத்தீர்க்

கேறுமிம்மூன்றுயுவெனலின்மொழிதேள்விகற்கோ
லென்றுவின்மான்கடமைவிடைசேல்யாழ்கார்விதுவாய்க்
கூறிலொன்றுயாறிரண்டாம்பாகைமுதற்காமால்
கோச்செவிபாகவன்பொன்வெயில்குசன்சனியற்கோனேர்
பூறுவமொன்றிடல்புனர்க்கம்புலிமாத்தார்பணிவேய்
புகைபாரல்யாழகீழ்நேர்போதுறலஃம்மதற்கே.

(இ-ள்) ஒருவருஷமுதல் ௰௨ஹூ வரையும் வாலாரிட்டமாம் மேல் ௨௰ஹூ வரையும் யோகாரிட்டமாம் மேல் ௩௨ஹூ வரையும் அற்பாயுவாம். மேல் ௭௰ஹூ வரையும் மத்திமாயுவாம் மேல் ௱ஹூ வரையும் தீர்க்காயுவாம் கன்னியிற்பாகை, கல், மதியிருக்கில் - வாலாரிட்டதோஷம் ஹூ க விருச்சிகத்திற்பாகை உல், மதியிருக்கில் வருஷம் உ தனுசிற்பாகை ௩ல் மதியிருக்கில் வருஷம் ௩ துலாத்திற்பாகை சல் மதியிருக்கில் வருஷம் ௪ சிங்கத்திற்பாகை ௫ல் மதியிருக்கில் வருஷம் ௫ மகரத்திற்பாகை ௬ல் மதியிருக்கில் வருஷம் ௬ கும்பத்திற்பாகை எல் மதியிருக்கில் வருஷம் ௭ மேடத்திற் பாகை அல் மதியிருக்கில் வருஷம் ௮ இடபத்திற்பாகை ௯ல் மதியிருக்கில் வருஷம் ௯ மீனத்திற்பாகை ௰ல் மதியிருக்கில் ஹூ ௰ மிகுனத்திற்பாகை ௧௧ல் மதியிருக்கில் ஹூ ௧௧ கடகத்திற் பாகை ௧௨ல் மதியிருக்கில்ஹூ ௧௨, இவைவாலாரிட்ட தோஷமென்ப லக்கினத்திற் புதனுதையமாகில் யோகாரிட்டதோஷம் ௧௪ சுக்கிரன் உதையமாகில் ஹூ ௧௫, வியாழனுதையமாகில் ஹூ ௧௬ ரவிஉதையமாகில் ஹூ ௧௭ சேய் உதையமாகில்ஹூ ௧௮ சனிஉதையமாகில்ஹூ ௧௯ சந்திரனுதையமாகில் ஹூ ௨௰ இவையோரிட்டதோஷமென்ப செனனோதையம் மிருகசிரமாகில் அற்பாயுதோஷம் வருஷம் ௨௧ அசுபதியாகில் ஹூ ௨௨ பூசமாகில் வருஷம் ௨௩ ஆயிலியமாகில் ஹூ ௨௪ புனர்பூசமாகில் வருஷம் ௨௫ கார்த்திகையாகில் வருஷம் ௨௬ ரோகணியாகில்வருஷம்௨௭ பரணியாகில் வருஷம் ௨௮ திருவாதிரையாகில் வருஷம் ௨௯ அருணோதயகாலமாகில் வருஷம் ௩௰ மத்தியானகாலமாகில் வருஷம் ௩௧ அத்தமனகாலமாகில் வருஷம் ௩௨ இவை அற்பாயுதோஷமென்ப. ()

மத்திமாயுதோஷம், தீர்க்காயுதோஷம், வெகுஆயுள்.

கிம்பெயர்ப்பேறுயுவின்மேன்மத்தியவாயுவுக்குங்
கிடைத்ததுயோகங்கரணங்கீழ்நேரத்திதியா
யிம்பர்வரிற்றீர்க்காயுவென்பரிதன்மேலு
மிரசதம்பொன்றிரமாய்மற்றவருபையமேனூற்

றைம்பதுமரல் புகர்பொன் விதுதமதுவர்க்கோத்தமத்தி
லாகமற்றோர்திரமாகிலாண்டொரைஞூறருக
னும்புகர்பொன்வைசேடிகாங்கிசமாய்த்திரத்தி
லுற்றிடமற்றவருபையமுறில்யுகப்பேர்க்குளதே.

(இ-ள்.) மத்திமாயுதோஷத்துக்கு ௯௯ ஷூ முதல் ௭௰ஷூவரைக்கும்யோகம் ௨௭ கரணம் ௧௧ ஆக ௨அ ம் நேர்வைத்து மத்தியமாயுதோஷம் செல்லுக தீர்க்காயுதோஷத்துக்கு ௭௧ ஷூ முதல் ௰ ஷூ வரைக்கும் அமரபக்ஷத்துப் பிரதமைமுதல் பௌரணைவரைக்கும் நேர்வைத்து தீர்க்காயுதோஷம் சொலுக குருசுக்கிரன் திரராசியிலும் மற்றவர் உபையராசியிலும்இருக்கில்வயது ௱௫௰ புதன்சுக்கிரன்குரு மதி இவர்கள் தமது மூலத்திரிகோணவற்கோத்தமமாக மற்றவதிரத்திலிருக்கில் வயது ௫௱ புதன்சுக்கிரன்குரு இவர்கள்வைசேடிகாங்கிசமேறித்திரத்திலிருக்க மற்றவர்கள் உபையத்திலிருக்கில் வயதுஒருயுகமென்ப இவைவெகுஆயு, ௭-று. (௯௦)

### வெகுஆயுள்.

உறுந்திரத்தில்யாவரும்வந்தூழ்சுதனுங்கிசமா
யுற்றதுகேந்திரகோணத்தாங்கிசமுச்சமுமாய்ப்
பெறும்பொழுதுதெய்வகயத்தாங்கிசமுமாகிற்
பெற்றயுகமெண்ணிலதாம்பீடைமுதன்மூன்றுஞ்
செறிந்திடமானேரிருக்கிற்சிலைமீன்சேயசிதன்
சேரவிவைக்கிடையின்மற்றோர்சேரினுந்தேவிருவா
யறிந்பிறியார்போலுமுலகெங்குமதிசயிப்ப
ரவரினுமேன்மேலுளருண்டகத்தியமாமுனியே.

(இ-ள்.) திரராசியில் யாவருமிருந்து சனியாங்கிசமேற இவைகேந்திர கோணத்துச்சாங்கிசமுமாகி ஐராவதாங்கிசமேறில் வயது எண்ணிறந்த யுகமென்ப ௬ ல் புதனும், ௭ ல் குருவும், அ ல் சுக்கிரனும், தனித்தனியிருக்கிலும், தனுவிற்சேபிருக்க மீனத்திற் சனியிருக்க இவைக்கிடையில் மற்றவர்களிருக்கிலும் தேவதாரூபமாகிச்சிறிது பேரறிந்தும் சிறிதுபேரறியாமலுமிருக்கச் சகலலோகத்திலும் சிறிறிது அதிசயம் நடத்திக்கொண்டிருப்பார்கள் இதன்மேலும் வயதும்தெய்வீகமும் அதிசயமும் அநேகமாக நடத்திக்கொண்டிருக்கிறவர்களும் உண்டு அகத்தியமாமுனியே. ௭-று. (௯௧)

### இலக்கினபெலம்.

அகத்தியகேளிதன்மேலக்னெத்தியலவ்வுதைய
மற்பகன்மற்றுயிலசநோதிகபெலமா

மிகத்திதன்கோண்மதி குளிகனிரவியிறையிருக்க
விவர்கணவாங்கிசமுமதற்கிறைவருமுற்றிலகின்
மகத்துவமாமிலிங்கவுருமாறினும்பொன்வர்க்க
மல்லதுமத்திமமாமான்மாழையுறின்வலிதா
முகத்தலநேர்க்குளபவனர்முதற்கிறைக்கிப்பெலமாய்
முற்றிடிலப்பலமுழுதுமுழுதுமுளதெனுமே.

(இ-ள்.) இரவாகில்சரராசிலக்கினமேபெலமாம்பகலாகில்திரமே பெலமாம் சந்தியாகில் உபையமேபெலமாம் லக்கினத்திரிகோணங்க ளில்மதி, குளிகன், ரவி, லக்கினேசன் இவர்களிருக்கிலும், இவர்கள் அங்கிசமிருக்கினும், இதற்குடையவர்க ளிருக்கிலும் லக்கினம்மகத்து வபெலமாம் லக்கினம் ஆண்பெண்வற்க பிறக்கிலும், வியாழவற்கமில் லாதிருக்கிலும் மத்திமாய் லக்கினத்தில் புதகுருவிருக்கில் அதிகபெல மாம். உம்இடந்தொட்டு ௰௨ மிடம்வரைக்குமுடையவர்கள் லக்கினத் துக்கும் லக்கினேசனுக்கும் பெலமாகில் அந்தந்தவற்கங்களுக்குள்ள பெலம் ஆயுர்த்தாயம்வரைக்கும் நடக்கும், எ-று. (௯௨)

உள்ளதுரைத்திடவேண்டிலவரவருக்குரைத்த
வுதையமுதற்காரகமுமுடையவர்காரகமுங்
கள்ளருக்கீதில்லையெனநலவர்க்குண்டெனவுங்
கலிக்கிலிவையுளவெனவுங்கண்டுரைப்பரிதனுக்
கெள்ளளவுமனதைவிடாதியம்புவதவ்வுதையத்
திருந்தவன்பார்த்தவனிறைவ னிவர்க்குதையவியல்பாய்
விள்ளுவதிப்பலமாமேலிரண்டடதனுக்கியல்கேள்
வேதியனுக்கொருதனையவென்றனன்வேலவனே.

(இ-ள்.) லக்கினமுதலுள்ள பாவங்களில் இருந்த கிரகங்களுக்குள் ள காரகபெலமும் அவ்வவ்விடத்துக்குள்ள காரக பலமும் கூட்டிச் சொல்லுங்கால் பாவக்கிரகங்களாகில் நிற்பலமென்றும், சுபக்கிரகங்க ளாகில் பலம்முழுது முள்ளதென்றும், இவைகலக்கில் பலமும் கலப் பென்றும், பார்த்தவர் இருந்தவர்உடையவர்க்குள்ள இயல்புங்கண்டு ஏகாக்கிரச்சித்தமாக இருந்துகொண்டு சகலமும் சூட்சித்துப்பார்த் துச் சொல்லுக இவைலக்கின பலமென்ப இதன்மேல் உம் இடத் தியல்பு கேட்பாயாக பிரமாவுக்குப் புத்திரனைவாவென்றனன்வேலா யுதனாகிய சுப்பிரமணியக்கடவுஉ எ-று. (௯௯)

---

இலக்கினேதையப்படலம்.

முற்றிற்று.

ஆகப்படலம் கரு-க்கு கவி-௱௨௬.

# இரண்டாம்பாவகப்படலம்.

## தனபலன்.

அவமிலர்கேந்திரமுமற்றோருபசெயமுமாகி
லயக்கோணென்றாகவிரண்டுச்சமுறிலரசன்
றவமுறப்பொனனென்றறிக்ருய்தனிக்கவிபத்தினிற்சேய்
தபனனுறிற்கேந்திரநான்குங்கிரகர்தனிக்கி
னபமுதையம்பவம்வெகுபேர்நண்ணிலவைக்குடையோர்
நவையிலுதையத்தாகினளிர்மகரத்துச்சத்
திவர்கள்விற்கோண்மீனுதையத்திற்கூடியிருக்கி
லெப்பொழுதுந்தனவானெ றியம்புவதிப்புவியே.

(இ-ள்.) சுபர்கேந்திரமும், பாவர் உபசெயமுமாகிலும், மேடக்கோண் லக்கினமாக உ ல்உச்சக்கிரகம் இருக்கிலும், லக்கினேசன்கூல் இருக்க லக்கினத்திற் குருவிருக்கிலும் ச ல் சுக்கிரன் தனித்திருக்க ய ல் சேய்ரவியிருக்கினும் ச கேந்திரமும்கிரகமிருக்கிலும், கூ க கக ல் வெகுபேர்கூடிலும் இவைக்குடையோர் தீதறலக்கினத்திலிருக்கிலும், குருசேய்மேடக்கோணில், அல்லது மீனலக்கினத்திற்கூடியிருக்கிலும் எப்பொழுதும் தனவானென்று இப்புவியோர் சொல்வர், எ-று. (க)

### இதுவுமது.

என்றுமுதலுள்ளனரிலிரண்டதனுக்கிறையா
யெவன்வரினுமவன்றனவானென்பரவன்பெலமாய்ப்
பொன்றிறமாயொன்றிவர்களிற்குமறையாமற்
புரக்கோண்கேந்திரமாகப்புக்கிடமுஞ்சுபமாய்
க்ன்றிலகவிவர்கள்பதனத்தவர்கூடாம
நிறைந்தவனுற்றிடவிவர்களங்கிசமுநிறைவாய்
முன்றலைவனுக்குறவாயிவற்கொளியாதிருக்கின்
மொழிதலிவன்றனதனெனும்பெயர்முழுதுமுளதே.

(இ-ள்,) ரவிமுதலானவர்களில் தனாதிபதியாக வந்தவன்பெலமாகி, வியாழனும் அதிபெலமாகி, இவர்கள் லக்கினத்துக்கும் தங்களசோட்சேத்திரத்துக்கு மறையாமல் லக்கினகோண கேந்திரத்திலிருந்து சுப சகிதமாகி கூ அ கஉ க்குடையவர்களுடன் கூடாமல் கக க்குடைய வன்வற்மமேறி, லக்கினேசனுக்கு நட்டாகி இவனுக்கு மறையாதிருக்

கில், குபேரனென்று பேருடையவனுகி ஆயுர்த்தாயம்வரைக்கும் இப் பெயர் நடத்துவன். எ-று. (உ)

இதுவுமது.

உளத்தினுக்கொன்பானிசையர்கேந்திரமுற்றெதிர்க்கி
லொன்றருகனிதுவுமுறலுச்சமிரண்டுதிககில்
வளர்த்திடல்பத்தவர்கிரகமாறவிறைபெலக்க
மச்சமனன்பார்க்கிலிரண்டொன்றினர்கேந்திரமாய்க்
களத்தவிரவறமிலவர்கட்கதுவிலுதையங்
கனகமுறவதுவுமுறிற்கயலிறையொன்ருகக்
குளத்தனணனின்மாறிலொன்றிக்ண்டீதைந்தாய்க்
கூடல்ரட்டிமும்மடங்காயிரந்தனத்துக்குளதே.

(இ-ள்.) கஉ க்குடையவர்கள் எதிர்கேந்திரமாகில் ஆயிரம்பொன் னுடையவன் இப்பலத்துடனே புதன் லக்கினேதையமாகில் இரண் டாயிரம் பொன்னுடையவன் இப்பலத்தில் லக்கினத்தில் புதன் அல் லாமல் உ ல் உச்சகிரகம் இருக்கில் மூவாயிரம் பொன்னுடையவ கக ய க்குடையவர்கள் கிரகமாற லக்கினேசன்பெலக்கக் குருபார்க் ரு த பொன்னுடையவன் க உ க்குடையவா கேந்திரமாக ச கூக்கு டையவர் பாவசகிதம அல்லாமற்கூடி உ ல் இருக்கில் க்கத பொன்னு டையவன் இப்பலத்துடனேகுருஉதையமாகில் உஉத பொன்னுடை யவன் குருஉதையமாகி உ கக க்குடையவர் கிரகமாறில் ௩௩த, பொ ன்னுடையவன். எ-று. (௩)

இதுவுமது.

ஆயமிசையவர்கூடிவாக்குறக்கட்கோன்பத்
தாகவிற்பொன்னுதையமெனிலாரல்வைசேடிகமாய்
நாயகனுஞ்சேலுதையநணப்பவன்பார்த்திடத்தே
னடைமனங்ஷமுறிலணன்கண்ணுதரொன்ருய்ச்சேர
தாய்மனிறைதங்களிற்கேந்திரிக்கவுடலரவங்
தணணெதிர்க்கவிவர்களயிராபதத்தங்கிசமா
யேயிலறமொன்றறல்கண்பவர்நாற்கேந்திரத்து
மெனிலரையொன்றெருபதின்மேலெண்ணிலக்ஷந்தனமே.

(இ-ள்.) கக ய க்குடையவர்கள்கூடி உ ல் இருக்க இதற்குடைய வன் ய ல் இருக்கலக்கினம தனுவாகிக் குருவிருக்கில் ரு ய த பொன் னுடையவன் சேய்வைசேடி காங்கிசமேறி லக்கினேசனுடனே கூடி

லக்கினமாகிய மீனத்திலிருக்க கக க்குடையவன் பார்க்க ம குடைய வன் விருச்சிகாங்கிசமேறில் ாத பொன்னுடையவன் உ கக் க்குடை யவர்கள்கூட ச க க்குடையவர்கள் தங்களிற்கேந்திரமாக க எ ல்குரு அரவேதிர்க்க இவர்கள் அயிராபதாங்கிசமேறில் மாத பொன்னுடை யவன் கூ க ச உ கக க்குடையவர்கள் நாலுகேந்திரமும் சுபசகிதமாக இருக்கில் கோடிக்கு மேலுள்ள தனவான். எ-று. (ச)

இதுவுமது, போசனபலன்.

தனத்ததிபனுற்றசுபவற்கமதெத்தனையத்
தனைக்குமுளகதிர்த்தொகையத்தனத்தொகைவற்தளையாஞ்
சினத்தரிமன்முதல்வருறல்விழித்தலசுமெனுமுத்
திறத்தியல்புக்கமைத்தபடிவரத்தியல்செப்புவரா
லணத்துணவுக்கிவன்புகரபுலிக்குடையபெலமு
மபெலமுமுன்போலவிதற்கறியவுரைத்திடுவா
ரினித்தன்முதல்ருசித்தல்பொசித்தற்கிவர்கட்குரைத்த
வியற்குளதப்பொதியவரையிடத்தகுடத்தவனே.

(இ-ள்.) தனாதிபதி பெத்தனைசுபவற்கமேறினானோ அத்தனை சுப வர்க்கத்துக்கும் எத்தனைகதிருண்டோ அவற்றை அறிந்து ஆட்சிஉச் சம் பகை நீசம்கண்டு தனவற்தனை சொல்லுக இந்தத் தனாதிபன்கூடி னது இருந்தது பார்த்தது அறிந்துதனவரவுக்கு இனமுந்திசையும் வகைதொகையுஞ்சொல்லுக இதன்மேல் போசனபலம் அறியும்படி உ க்குடையவனும் சுக்கிரனும் சந்திரனும் முன்தனாதிபதிக்குச் சொ ன்ன பலன்போலும் பெலக்கில் எந்தக்காலமுஞ் சுகபோசனமென்ப இவைகளிற் பெலவான் அறிந்து அவனுக்குள்ள ருசிமுதலாகிய போ சனவற்கம் சொல்லுக பொதியவரை யினையுடையகும் போதையனே.

விதரணபலன், நேத்திரபலன், குடும்பபலன்

குடத்தகொடையவன்றாயம்மகற்குடையர்குருவுங்
கோற்கிறையும்பெலக்கிலிவர்கொடுத்திடுவரதனுக்
கடுத்தவர்பார்த்தவரிடத்தராகவிளர்முதல்வர்க்
கன்புடையராகிலவரளிப்பதுமப்படியாஞ்
சுடர்ச்சசிரண்டிறையுமெட்டாறீறிறையுஞ்சுபமாய்க்
தோன்றிலவரெப்பொழுதுஞ்சுபநசனமுடையோர்
விடைக்கிறைபொன்விழியின்மகன்வேளிறைவர்பெலக்கில்
வெகுகுடும்பவானெனவும்விளம்புவதிப்புவியே

(இ-ள்.) கும்போதையனே கேட்பாயாம உ ச நி க்குடையவர்க ளும் சுக்கிரன், குருவும் லக்கினத்துக்கும் இவர்கள் சொட்சேத்திரத் துக்கும் பெலமாகிச் சுபவற்கமேறிம் ஈகையுடையவர் இவர்களுடன் கூடினவர் பார்த்தவர் இருந்தராசிநாதன் இவர்கள் லக்கினேசனுக்கு அனுகூலமாகில் இவர்களிர் பெலத்தவனே யறிந்து அவன் காரகசரித் திரம்போலும் கொடுப்பதற்கு விபரஞ்சொல்லுக ரவிமதியும் உ சு அ கஉ க்குடையவர்களும் முன்போலும் சுபமாய்ப் பெலக்கில் எப்போ தும் சுபநயனத்தையுடையவர் குருசுக்கிரனும் உச நி எ க்குடைய வர்களும் முன்சொன்னபடி பெலக்கில்வெகு குடும்பவான். எ-று. ()

முகம், குணம், வித்தை

இவற்றின்பலன்.

விளம்பின்முகக்கோண்மதிபொன்வெள்ளியுமுன்போல
விளங்கிலிவன்சுமுகனிதின்மேயதற்குமதுவாங்
களங்கன்மகனும்மிவனுங்கருத்திறையும்பெலமாய்க்
கதுவில்வெகுவித்தையிவர்க்கன்புடையோர்க்கதுவாய்
வளர்ந்தருமழ்வித்தையுமாம்வசனமுமப்படியாம்
வாத்தியசங்கீதநடநாட்டியமற்றெவையுங்
குளங்கணயன்மான்முதல்வர்க்குள்ளதும்வித்தையதாய்க்
கூறுவதவ்வாக்குடையவனுக்குடையகுணமே.

(இ-ள்.) உ க்குடையவனும் மதிகுருசுக்கிரனும் முன்போலும் பெ லக்கில் எப்பொழுதுஞ் சுமுகடையவன் இதன்மேலும் இவர்களுட னே கூடினவர்க்கங்கண்டு முக்குணவற்கஞ் சொல்லுக புதனும் உ க் குடையவனும், நி க்குடையவனும் பெலக்கில் வித்தியாதிகன இவர்க ளுடன் கூடின்வர்கள் அறிந்தும் இவர்கள்காரகங்கொண்டும் வித்தி யாதிக வற்கம்சொல்லுக வாசாலக வசனுதிக, சபாவல்லவ, வசனப்பிர தாப, உத்தண்ட, கெம்பீர, வசனுதிக்கங்களுக்கும் வாத்தியசங்கீத நாட்டிய முதலானசகலவித்தியாதிக்கங்களுக்கும் இந்தவர்க்கங்கண்டு சொல்லுக, சிருட்டி திதி சங்காரமுதலானவைக்கும் இந்தவித்தியா திகப் பிரசங்கத்துடனே கூட்டிச் சொல்லுக, இவையும் உ க்குடைய வன் சரித்திரம். எ-று. (எ)

பாத்திரபலன்

வித்தியாபலன்.

வாக்கிறைபாத்திரபாண்டத்துக்குடையவனுக
வரிலிவனுஞ்சிதனும்வலிதாகவரில்வெகுவா

நீக்குளவரிவர்ச்சேரிற்பெலத்தவர்கட்குளதாய்
நிகழ்த்துவரித்தாதினமுமிவர்க்குளதுநிசமாம்
போக்குறும்வாக்கிறையையிறைநோக்கவிழியின்மால்
பொன்னுதையத்தாகமனே புகரிருக்கவிவனை
நோக்குவதம்மனைக்குடையனுகிலளவற்ற
நூற்கதிபாமிதன்மேனுவல்வதுமூன் றதற்கே.

(இ-ள்.) உ க்குடையவனும் சுக்கிரனும் முன்போலும் பெலக்கில் பாதிரபாண்டம் மிகுதியும் உண்டென்ப (ழ)தற்கு இவர்களுடன் கூடினவர்களேயும் அறிந்து பெலவானுக்குள்ள காரகப்படிக்குத் தாதின முதலானவற்கங்களுங்கண்டு சொல்லுக ய ல் உ க்குடையவ னிருக்க லக்கினேசன் பார்க்க இரண்டில் புதனும் க ல் குருவுமிருக்க ச ல் சுக்கிரனிருக்க இவனே ச க்குடையவன் பார்க்கில் அநேகபுராணகதை காவியசாத்திர முதலான பிரபந்தம் உண்டுபண்ணுவன் இதன்மேல் ௩ ம் இடப்பலன் சொல்லுவோம்.

இரண்டாம்பாவகப்படலம்.

முற்றிற்று.

ஆகப்படலம், கசு-க்கு கவி கஙௗ.

---

## மூன்றாம்பாவகப் படலம்.

சகோதரபலன்.

மூன் றதனுக்கிறைகனிட்டனுகவரிலிவனு
முன்புளராசிக்கிறையும்முதற்கிறையும்பெலமாய்த்
தோன் றுவதுமுன்போலாய்ச்சுபமதிகமாகிற்
றுணைவரதிகம்முளரித்தொகையுமுற்போற்றுகையா
மீன் றவளல்லாதனுவாயிடத்துளகட்கோனெட்
டேறவனல்பூண்மனபெலம்பெறிலீரசுபர்
மீன் றுவசனணிமனுறிலொன்றுமென் றணியின்
மேயதிவனேலிரண்டாம்ருபமுமவ்வியல்பே.

(இ-ள்.) ௩ க்குடையவனும், செவ்வாயும் லக்கினேசனும்முன்போலும் பெலமாகிச் சுபவற்கமேறில் இளேயசகோதரம் அதிகமுண்டென்ப இவர்கள்கதிர்ச் சங்கைகொண்டு சகோதரசங்கைசொல்லுக உ க்குடையவன் அ ல் இருக்க ௩ க்குடையவனும், செவ்வாயும்பாவவற்கமேறிப் பெலகீனமாகில் புனர்மாதாவினிடத்தில் சகோதர முண்

டென்ப ௨ ல் பாவரிருக்க ௩ க்குடையவன் எ ல் இருக்கில்ஏகசகோ தரமுண்டென்ப க ல் ௩ ல் க்குடைவனிற்கில் இரண்டுசகோதரமுண் டென்ப இவ்வற்கம்கண்டு ரூபமுஞ்சொல்லுக எ-று. (க)

பராக்கிரமபலன்.

மும்முதல்வன்குருபார்க்கவக்கிரனைக்கூடி
மூர்த்தமுறிற்பாவருபசெயமாகின்முதற்கோன்
பம்முதல்வனைத்தழுவிபணிபெறிற்கேந்திரத்திற்
பண்புடையரிருக்கில்வெயில்பணிசிகியைச்சேரிற்
கம்முதல்வன்பெலவானைக்கதுவின்மதிக்கனலே
கத்துறிற்பராக்கிரமமாங்கருமத்துடையோ
னம்முதல்வனணிமனினனனளிர்க்கோனனையி
லதிபெலவான்றயிரியவானமர்க்களவல்லவனே.

(இ-ள்.) ௩ க்குடையவன் செவ்வாயைக்கூடி லக்கினத்திலிருக்கக் குருபார்க்கிலும் பாவரூபசெயமேறிலும், லக்கினேசன் மதியைக்கூடி ௩ ல் இருக்கிலும் சுபர்கேந்திரமேறிலும், ரவி ராகுஅல்லதுகேதுவை கூடிலும் லக்கினேசன் பெலவானைக் கூடிலும், மதிசேய்கூடிலும் பரா க்கிரமவானென்ப ௰ ௬ ௩ க்குடையவர்கள் ரவி, சேய்,மதியைக்கூடில் அதிகபெலவான், தைரியவான், போர்வல்லவன். எ-று. (௨)

ஆபரணபலன் காவிய, கதை,

கேள்விப்பலன்.

வல்லதிபனணிக்கிறையாய்வரிலிவனும்பிருகு
மறையவனும்பெலமாகமருவிலணிவெகுவா
மெல்லதிபன்முதலிவர்கள்வற்கத்திலசி
லிவர்க்கிசைத்தாத்நவிதத்தியற்றியபூஷணமாம்
வில்லதிகப்பணிதியெதாமென்ணிலவர்க்குரைத்த
மெய்யுறுப்புக்காணதெனவிளம்புவரவ்வெயினோர்ச்
சொல்லதிகக்கேள்விகதைகாவியமற்றெவையுஞ்
சொற்றிடுவரிதன்மேனன்காமிடத்துக்குளதே.

(இ-ள்.) ௩ க்குடையவனும், சுக்கிரனும், வியாழனும் முன் போனும் பெலமாகில் ஆபரணதிமிகுதியு முண்டென்ப இவர்களு டன் கூடினகிரக வற்கமறிந்து இவர்களுக்குச் சொன்ன ரத்னங்க

ளாற்செய்த பூஷண வற்கம்சொல்லுக உறுப்பு அறிந்து ஆபரணப் பேர் சொல்லுக ரவிமுதலானவர்களுடன் கூடின தறிந்துகாவியகதை கேள்விமுதலானவையுஞ் சொல்லுக இதன்மேல் ச மிடப்பலன்சொல் லுவோம். எ-று. (ரு)

மூன்றும்பாவகப் படலம்
முற்றிற்று.
ஆகப்படலம், கஎ, க்கு கவி ாருஎ.

---

# நான்காம்பாவகப் படலம்.

மாதுர் பலன்.

மிடற்றிடந்தாய்ப்பதியாகமேவிலிதுவிவனு
மிதற்குளகாரகனுப்வெகுபெலமாய்மேன்மேலு
நடத்துவதுஞ்சுபமாகிநல்லவர்ப்பெற்றிலகி
நட்புளகேந்திரகோணினண்ணிமனைநாதற்
குடற்கதனுக்கெட்டுளஞ்சுத்தமுமாகியிதனுக்
கொளியாமற்றேவவற்கத்தாங்கிசத்துமுபரிற்
றிடத்துடையமாதுருதீர்க்காயுவுமரோக
திடகாதரபுத்ரபவுத்திரமுமுடையவளே.

(இ-ள்.) ச மிடமும் இதற்குடையவனும், மாதுருகாரகனும்வெகு பெலமாகி மேன்மேலும் சுபவற்கமேறிச் சுபவற்கங்களோடுங் கூடி மித்திரகேந்திர கோணிலிருந்து ச க்குடையவனுக்கும் லக்கினத்துக் கும், ரு அ சுத்தமாகி இதற்கு கூ அ கஉ ல் விழாமல் தேவதாங்கிசத் திலேயும் அதிக சுபராங்கிசமேறில் மாதுரு திடசரீரத்தோடுங் கூடி அரோகியாகிபுத்திர பௌத்திரர்களுடனே தீர்க்காயு உடையவளாக இருப்பாள். எ-று. (க)

இதுவுமது

வளர்மதியும்பாகவனுமளையுமனைக்கிறையு
மறையவனுதவனறமன்வற்கமுமாய்ப்பெலக்கி
லளவில்வெகுபாக்யவதிபதிவிரதைடநியு
மன்புசெய்குணதிகமனோரதமாதுருவாங்
களரிவர்களுடன்கூடிற்சுறைமதிதேளிருந்து
கான்முளையைப்பார்க்கிலனைக்கனல்விதுவாறிறையை
விளவரவுனடிபார்க்கமேவிலிவளுலகில்
லிபசாரியாகிவெகுபாபம்வினைப்பவளே.

(இ-ள்.) பூருவபக்ஷத்துச் சந்திரனும், சுக்கிரனும் ௭ ம் ௭ க்குடை யவனும் ஆகிய இவர்கள் குருரவி ௬ க்குடையவன் வற்கமேறி மூன் போனும் பெலமாகில் மிருதியும் பாக்கியவதியுமாகிப் பதிவிரதையு மாகி பதிக்கு அன்புடையவளுமாகி மனோரத முள்ளவளுமாகிய மா துருவாம் இவர்களுடன் பாவக்கிரகங்கள் கூடினும், சந்திரன் விருச் சிகத்தி லிருந்து புதனைப்பார்க்கினும், ௭ ல் சேய்மதி ௬ க்குடையவ னுங் கூடியிருக்க கேதுசனிபார்க்கினும் விபசாரத்துவமாகி வெகுபா வத்தையும் செய்வாள். எ-று. (உ)

இதுவுமது வாகனபலன்.

பவர்கூடக்காரகனுமனைப்பதியுங்கூடப்
  பங்கெதிர்பார்த்திடினுமிவன்பார்த்தவதிபதியை
யவமானன்மேவவனலருகனுங்காரகனு
  மணையினுமாதுருவேசையாமிதன்மேலறலிற்
றவர்சேரவிதற்கிறையுமிரசதமும்பெலமாய்த்
  தங்களின்மித்திரமாகித்தாட்கிறையைக்கூடி
யிவர்களிறைக்கொன்றனைக்கெட்டாறுவியமாகா
  திருக்கிலிவன்வாகனவானென்பதகத்தியனே.

(இ-ள்.) ௪ க்குடையவனும் காரகனும் பாவருடன்கூட இவர்களைச் சனி, ௭ல் இருந்துபார்க்கினும் ௭ அ க்குடையவர்கள் கூடமாதுரு காரகனும் சேயும் புதனுங்கூடினும், மாதுருவிபசாரி யென்ப ௪ல் சுப ரிருக்க ௪ க்குடையவனும் சுக்கிரனும் பெலமாகித் தங்களில் மித்துரு வுமாகி இவர்கள் கஉ க்குடையவனைக் கூடி க க்கும் ௪ க்கும், லக்கி னேசனுக்கும் மறையாமலிருக்கில் இவன் வாகனவான் அகத்தியமா முனியே எ-று. (௩)

வாகன பலன்.

அகத்திறையிலிரசதமுமதர்மர்நெருக்கில்லா
  தந்தணன்வற்கமுமாய்க்கேந்திரகோணத்தாகிச்
சுகத்தமராங்கிசத்தினிலுஞ்சுபமதிகமாகிற்
  சொர்ணதிரத்நசகிதத்துளவாகனமா
மிகத்துதையத்தவனிவர்கணட்பாகிப்பார்க்க
  வெய்திலிவர்க்குளவூர்தியும்மிசைப்பவரில்
தகுத்தொருவராகவரிற்றனித்தனிவாகனமாய்
  வகுப்பர்புகர்வற்கமிகல்வாத்தியவாகனமே.

(இ-ள்) ௪ம் ௪க்குடையவனும் சுக்கிரனும் பாவமத்தியம் இல்லாமற்குருவற்கமேறிக் கேந்திரகோணத்திலிருந்து தேவதாங்கிசத்திற் சுபவற்கம் அதிகமேறில் சொர்ணாநிகரத்நசசித வாகனமாம் சூரியாதி கிரகங்கள் இவர்களை நட்பாகிப்பார்ப்பதறிந்துவாகனத்துக்கு இனஞ் சொல்லுக-இவர்கள் தனித்திருக்கிறறனித்தனி வாகனஞ்சொல்லுக- இவர்கள் சுக்கிரன் வர்க்கத்தில் மிருதியுமேறினால் வாத்தியவாகனஞ் சொல்லுக எ-று. (௪)

கிரகபலன்.

வாகனமன்கிரகமனனாகவரிலிவனு
மனையுமனைக்காரகனுமறையவன்வற்கமுமா
யேகமனனுக்கதனுக்கில்லதனுக்கொளியா
தெய்துதல்கேந்திரகோணத்தாகிமுன்போலிருக்கி
னாகவினத்தொடுங்காரைக்கட்டுளமாளிகையு
நாகரிகவெயிலுமதினடுவிலரண்மனைக்கட்
டாகவருமனையிதென்றுயதிவல்புதிதனற்பா
டபரிமிதமானமலங்காரமநூதனமே.

(இ-ள்) ௪ம் ௪க்குடையவனும், சுக்கிரனும்குருவற்கமேறி ௧க்கும் ௧க்குடையவனும், ௪க்கும் ஒளியாமற் கேந்திரகோணமேறி முன் போலும் பெலமாக இருக்கில் கல்வரியோடுங்கூடிய காரைக்கட்டுள்ள மாளிகையும் கோட்டையும் ஈடுவில் அரண்மனைக் கட்டுள்ள கிரகமுண்டாமென்க-இதற்குரவிமுதலானகிரகபெலம் அறிந்து ரவி நேர் அதிகபெலமுள்ள கிரகம், புதிது அனற்பட்டது, அபரிமிதம், வெகுமானாதிகம், அலங்காம், புராதனகிரகமென்று சொல்லுக எ-று (௫)

இதுவுமது, சேத்திரபலன்.

தனத்தினுக்கோர்மூன்றுமிவனும்புகருமவமாய்ச்
சனிவிழிக்கப்பணிதழுவிற்பிரிந்ததுமற்றரவே
வித்திலொதுக்கின்மாந்தியேல்வழியிற்றுயில்மன்
னினனாகில்யாத்திரையிலிதற்கிறைசேர்ந்திருக்கிற்
சினத்தாசராக்கினைகெய்திடுங்கிரகமிவர்க
டிரசரமற்றேற்றிரம்பல்சிறிதுளவில்லிவர்க்காங்
கனற்றபனனின்மன்விதுகளிப்புறமுற்பெலமாய்க்
கதவுதலநேகமுளசேத்திரங்கட்காமே.

(இ ள்) சு ம் சு க்குடையவனும் சுக்கிரனும் பெலஹீனமாகி ராகு வுடன் கூடிச்சனிபார்க்க இருக்கிற்பிறந்த கிரமென்க-கேதுவாகில் தன்னினத்துக்குள் ஒதுக்குக் குடியென்ககுளிகனுகில் வழிக்கரைக் குடியிருப்பெண்க அ க்குடையவனுஞ் சூரியனுங்கூடில் ராசகோபாக் கினைக் கிரகமென்ன-இந்தவற்கம் திரவற்கமேறில் திரகிரகமென்க சரமாகில் வெகுகிரகமென்க உபையமாகிற்சிறிதுளகிரகமென்க-ரேசய் ரவி சு க்குடையவன் மதியிவர்கள் முன்போலும் பெலமாகில் வெகு சேத்திரம் உண்டாமென்க எ-று (சு)

மித்திரம் ஆளடிமை-வத்திரம் கன்றுகாலி,

மெத்தை தழுவணை முதலான வற்றிஃபலன்.

காமவிற்கீரைந்துமிவனுங்கவியும்பெலமாய்க்
கல்லியமன்னுக்குறவாய்க்கேந்திரகோண்கதுவச்
சோமனிதிமால்சேரில்வெளசனமித்திரமுந்
தொண்டடிமைகலேமுதலசுரபிமுதலவுந்தார்ப்
பூமுதலபரிமளமுங்குடைகொடிடால்சயனப்
புரத்துளதும்பந்துசனப்பூச்சியமுமுலகி
ஞமமதிகப்பெயரும்வாத்தியசங்கீத
நடனமுதலுளவுமெந்நாளுமுளவெனுமே.

(இ ள்) சு ம் சு க்குடையவனும் சுக்கிரனும்முன்போலபோலபெல மாகிலக்கினேசனுக்கு நட்புமாகிக்கேந்திரகோணிலிருந்து மதிகுரு புதனுடன்கூடில் சகலசனமித்திரமும் ஆளடிமை தாசிதாசவற்கமும் வத்திராதிக அலங்காரமும் கன்றுகாலியும் சுகந்தபரிமள நானுவித வாசனுதிகப் பரிசமும் குடைகொடி, டால்முதலானவையும், சப்பிர மஞ்ச முதலாகியசயன அலங்காரமும், பயந்து சனபூச்சியமும், பட் டப்பேரும், நடநாட்டிய சங்கீதவாத்தியப்பிரியமும் எந்தக்காலமு முண்டாம் எ-று (எ)

நீர், சுகம் இவற்றின்பலன்.

உளப்பதிநீறும்மிவனுமுதற்பதியுஞ்செலமா
யுதிப்பதுமங்கிசமுமிதாயுடபெதியுஞ்சிதனு
மளப்பிலதிபெலமாகிலவர்களைச்சேர்ந்திருக்கி
லாறுகுளங்கூவலுமுண்டாக்குவரொன்பதின்மான்
களப்பதிமானைக்கூடித்தனத்துறவந்தணனும்
கல்லியமுற்றிடிற்சிதனக்கமலமனைகதுவில்
வளர்ப்பரிவரதிகசுகமாமலையமுனியே
வகுப்பதினியைந்தெனும்பாவகப்பலமாமதற்கே.

(இ-ள்.) ச ம் ச க்குடையவனும் லக்கினேசனும் செல்வற்கமாகி லக்கினமும் லக்கினங்கிசமும் செல்வற்கமாகி மதிசுக்கிரன் அதிபெல மாகி முன்சொன்னவர்களைக்கூடில், ஆறு, குளம்கூவல் உண்டாக்குவ ரென்க கூ ச க்குடையவர்கள் எ க்குடையவனைக்கூடி தனத்தானத்தி லிருக்க க ல் குருவிருக்கும் ச மிடம் செலராசியாய்ச் சுக்கிரனிருக்கி லும் சுகாதிபனென்க-பொதியவரையினையுடைய அகத்தியமாமுனி யே இதன்மேல் ஐந்தாமிடப்பலன் சொல்லுவோம் எ-று (அ)

நான்காம்பாவகப்படலம்.

முற்றிற்று.

ஆகப்படலம்,கஅக்கு கவி-ஈசரு

---

# ஐந்தாம்பாவகப்படலம்.

புத்திரபலன்.

மதப்பதிக்காயத்திறைபுத்திரற்கதிபனுக
வறிலிவனுமந்தணனும்வாக்கிறைவேட்கிறையு
முதற்கிறையுமிம்மனையோர்நான்கினுக்கும்வலிதாய்
முடனருகன்வற்கமுமில்லாமன்முழுப்பெலமாய்ச்
சதத்தளமன்முதலவரினல்லவர்ப்பெற்றுதையத்
தாகியகேந்திரகோணத்தாங்கிசமுஞ்சுபமா
யிதத்ததிகமாயகிதமின்றிவரினுலக
மிவன்சுபுத்ரபவுத்ரவற்கமிலக்கிலையென்பதுவே.

(இ-ள்.) ரு க்குடையவன் புத்திராதிபனுக வருங்கால் குருவும், ரு உ. எ க க்குடையவர்களும் இந்தத்தானம் நாலுக்கும் பெலமாகிச் சனிபுதவற்கமுமில்லாமல் முழும்பெலமாகி ரவிமுதலான வரில்சுபரு டன்கூடி லக்கினகேந்திரகோணிலிருந்து சுபரங்கிசமு மேறி இதம் அதிகமாகி அகிதமில்லாமலிருக்கில் இவனுக்குச் சுபுத்திர பௌத்திர வற்கம் இலக்கில்லை எ-று (க)

இதுவுமது.

இற்பதிக்கானனம்பவர்வீடாகவிதற்கிறைவ
னெய்தியவங்கிசத்திறைவனேழ்க்கிறைவனுகின்
முற்பதிக்கீறிரசிதனும்விதுவுமுறக்கனக
மொளிக்கிலருகன்கவியுமுளரிமன்பின்னிருக்க

வற்பதியில்லான் மீனைந்தாகில்வசையசித
னரவுநடையிரவிபுரமணையினனல்புனரிற்
சொற்பதிக்கீறுகவிவன்தேன்றிலுண்மாணிதியுந்
துற்பெலமாயுற்றிடிலீதற்பசுதப்பெயரே.

(இ-ள்.) ௫ மிடம்பாவர்வீடாக இதற்குடையவன் பொருந்திய அங்கிசாதிபதி ௭ க்குடையவனாகிலும் ௰௨ ல் மதிசுக்கிரன்கூடி இருக்க வியாழன்மறையிலும், புதன்சுக்கிரன்ரவிக்கு ௧௨ ல் இருக்க இடபகடமீனம் ௫ மிடமாகிலும், சனி, ௰ ல் ராகு ௧ ல் ரவியுமிருக்கிலும் லக்கினம் விருச்சிகமாகிச் செவ்வாயிருக்கிலும், ௫ க்குடையவனும் வியாழனும் பெலகீனமாகிலும் அற்பபுத்திரரென்க எ-று (௨)

இதுவுமது.

சுதனவமானம்பவராய்க்கனன்கனையொன்றாகிற்
றுயில்பொனனலீறுளமான்றெழில்சனிமெய்யாகில்
வதையிரவியிற்சுபர்கம்மனலுறில்வில்லுளமாய்
மனன்பார்க்கிற்சனிசேயுண்மறையவனொன்றாகக்
கதுவிடிற்காலாந்தரநந்தனராமையலவன்
காண்முளையாய்ப்பவுமனுறக்களங்கனின்மான்பவரோ
டதிபெலமுற்றிடிலிரண்டாங்களத்திரத்தாற்றனைய
ரனேகமுளரென்றனன்சந்தாசலத்தாதிபனே.

(இ-ள்.) ௫ ௮ ல் பாவரிருக்கமேடவிருச்சிகம் லக்கின மாகிலும், ௮ ல் குரு ௰௨ ல் சேய் ௰ ல் ௫ க்குடையவன் இருக்க, ௧ ல் சனி யிருக்கிலும், ௮ ல் ரவி ௪ ல் சுபர் ௧ல் சேய், இருக்கிலும் ௫ மிடம் தனுவாகிரவிபார்க்கிலும் ௫ ல் சனிசேய் இருக்க ௧ ல் வியாழன் இருக்கிலும், காலாந்தரபுத்திரரென்க-மேடகடகம் ௫ மிடமாகிச்சே யிருக்க மதியிருந்தராசி நாதன் பாவருடன் கூடிப்பெலக்கில் இரண் டாங்களத்திரத்தினிடமாக அனேகபுத்திருண்டென்றவன் சந்தனா சலாதிபனான சுப்பிரமணியக்கடவுள் எ-று (௩)

இதுவுமது.

ஆதியுளத்திறைவரின்மாறிடவிவர்கள்பவரோ
டசிதனையுற்றிடிலிவன்றீயன்னிதர்நோக்காமற்
பாதியுடற்பற்றில்வெகுபாவருளதினமுன்
பாகவரிலைந்திறைபொன்பங்குவற்கத்தணையிற்
போதிறையுள்ளிறைமாலின்னர்கள்வற்கத்தாகப்
பூப்பதிநந்தனனிரட்டை பொருந்திலுலகத்தோ

ரோதுதெத்துபுத்திசராங்கடகமதிசனிபொன்
னுதிக்கவனல்வற்கமிலாதுறின்முடந்தைசுதனே.

(இ-ள்.) ௧-டு-க்குடையவர்கள் கிரகமாற இவர்கள் பாவவற்கமாகிச்சனியுடன் கூடினும், சனிசேய், ௭-ல்-இருக்க மற்றவர்கள் பாராதிருக்கினும், பாவரிருந்த நட்சேத்திரத்துக்கு இரண்டாம் நட்சேத்திரம் பிறக்கினும்-டு-க்குடையவனும் குருவும் சனிவற்கமேறச் சனி இரட்டையிலிருக்கினும் தெத்து புத்திரரென்க. கடகமதி குரு சனியுடன்கூட அதுவே லக்கினமாகச் செவ்வாய் வற்க மில்லாதிருக்கில் முடந்தைபுத்திரரென்க. எ-று. (௪)

(இதுவுமது) களத்திரமலடு, புருடமலடு.

முடனனலேந்துறையமற்றோர்விழிப்பறிற்கித்துருமா
முதலரிகற்கடகமெனவிம்முதலல்வர்முந்நான்
கிடபனுறக்கனல்பாராதிருக்கில்ரிதுவாமுன்
னெய்தினவரொன்றுளம்போக்கினர்மறையலாபம்
படருறிற்சீமந்தாதியற்றவர்வேள்சிதனும்
பங்கருகற்கிடை யுறிலக்களமலடப்பங்க
னுடனுறத்தேட்கோணுந்தயம்புகருரிலேந்தேழ்பத்
தொன்னலர்பாவகன்மதிபயன்மலடிவனுக்குளதே

(இ-ள்.) சனிசேய் கூடி-டு-ல் இருக்க மற்றவர் பாராதிருக்கில் கலியாணத்துக்கு முன்னுண்டான கெற்பமென்க-கடகம் சிங்கம் லக்கினமாகி-௧௨-ல் ரவி மதி சுக்கிரன் கூடச் சேய் பாராதிருக்கில், ரிதுவுக்கு முன்பிறந்த புத்திரரென்க-௧-டு-ம - க்குடையவர்கள் மறைப ௧௧-ம் - மிடம் பாவரிருக்கில் சீமந்தாதியில்லாத புத்திரரென்க-௭-ம்-இடமும் சுக்கிரனும் சனிபுத மத்தியமாகிற் களத்திரமலடென்க-௧-ல்-சனிவிருச்சிக கோணுந்தியம் சுக்கிரனிருக்கினும்-டு-ல்-சத்துருவும்-௭-ல் சுக்கிரனும்-ம-ல் மதியும் இருக்கினும் புருடமலடென்க. எ-று. (டு)

அன்னியபிதா புத்திரர்.

உளமிலவர்கூடியவமாகிலொன்றுறறமா
யுடையரிற்சேறிற்றேளானுடுபதிமானுறிற்றுய்க்
களாமருவவிதற்கிறைகாரகர்பாவமேவிற்
கட்கோணேழ்க்காறுருப்க்கதிர்சேய்சுன்கதுவில்

விளவரவர்ச்சேர்ந்தனையொன்றிவர்மாறிற்சோதி
 வெயிறுதியையெனிலீறேழ்விதுவெனிலவெள்ளியின்மால்
வளர்மதியும்பெலமாயைந்தறத்ததிபரவமாய்
 மறையிலவன்யபிதாச்சுதப்பேர்வழூத்துவதிம்புவியே.

(இ-ள்.) ரு-ஃ-க்குடையவர் கூடிப் பாவவற்கமேறிலும்-க-சு-கூ-ஃ-க்குடையவர்கள்கூடி-ஃ-ல்-இருக்கிலும், விருச்சிகத்திற் சந்திரனும்இடபத்தில் புதனுமாக இருக்கிலும் ஃ-ல்-பாவரிருக்க இதற்குடையவனும் மதிசுக்கிரனும் பாவவற்கமேறிலும், புனர்பூசம் சத்தமிநாயிறு கூடிலும் விசாகம் துவாதசி செவ்வாய்கூடிலும், புரட்டாதி துதியை சனி கூடிலும் ஃ-க-க்குடையவர்கள் கிரகமாற இவர்களை ராகு கேது கூடிலும், நாயிறு சோதி துதியை கூடிலும் திங்கள் ரேவதி சத்தமி கூடிலும், சுக்கிரனும் ஃ-க்குடையவனும் வளர்மதியும் அதிபெலமாக-ரு-கூ-க்குளையவர்கள் பாவநீசாத்தமனத்தை அடைந்து மறையிலும் அன்னியபிதா புத்திரரெனக.

புத்திரரியல்பு.

புவிமகன்கன்னிவன்மகன்பாம்பதுதனையரிதன்கோன்
 புரக்கோணந்தணனிவர்க்குளெட்டுறிற்புத்திரனோர்
நவினயனகீனமுடந்தொண்டுபடல்செவிடு
 நாக்கலதுபேயனெனனந்தனர்கோனருக
னிவர்சுபமாய்ப்பெலக்கினல்லபுத்தியுஞ்சற்குணமு
 மெய்துவரந்தணனுறவாயிவர்களுச்சத்தேறிற்
குவிலதிகயோகமுளராசவற்கத்திவனுங்
 கூடியவர்க்குளதொழிலுமிவர்க்குளதுக்குளதே.

(இ-ள்.) ரு-க்கும் ரு-க்குடையவனுக்கும் லக்கினேசனுக்கும் குருவுக்கும் ரு-ல்-அ-ல் சேயிருக்கில் நயனகீன புத்திரனென்க-சனியிருக்கில்முடமென்க-குளிகனிருக்கில் தாசனென்க-ராகுவிருக்கில் சேவிடென்க-கேதுவிருக்கில் ஊமையென்க-ரு-க்குடையவனும் புதனும்பெலக்கில் நல்லபுத்தியுங்குணமுமுடையவனென்கக-ரு-க்குடையவனும்புதனும் குருவும் தங்களில மித்திரமாகி அதிபெலமாகில் அதிக யோகமுள்ள ராசப்பிரபு சினேகனுகி ராசப்பிர வர்த்தகத்தில் ரவிமுதலாகிய கிரகத்துக்குள்ளபடி பிறவர்த்தகத்தில் ரவிமுதலாகியகிரகத்துக்குள்ளபடி பிறவர்த்தகம்பண்ணுவன். எ-று. (எ)

ஐந்தாம்பாவகப்படலம்.

முற்றிற்று.

ஆகப்படலம்-கரு-க்கு கவி-கறுஉ.

# ஆரும்பாவகப் படலம்.

---

## சத்துருபலன்.

தொழிற்கிருநான்குப்பலமீதிதன்மேற்சட்பவனத்
துக்குளதுங்கேண்முனியேசுடரிருமூன்றுதிக்க
விழிப்பதிக்கீறிறைபெலக்கில்வேதியனென்றுதிக்க
மேலவர்கோனொளிக்கிலிவன்விப்பிரனைச்சேர்ந்து
பழித்தொழிலர்ச்சேராமலொன்றுறிலப்பாவர
பற்றலுபசெயமாகிற்பற்றலரற்றவனு
மொழித்தலத்துக்கைந்திறையின்முற்கோன்றற்பெலமாய்
முன்பின்னசுபர்ச்சேரில்யுபுமுழுதமுளதே.

(இ-ள்.) ரு-ம்-இடப்பலனிவ்வண்ணஞ் சொன்னேம் இதன்மேல் சு-மிடப்பலன் அகத்தியமாமுனியே கேட்பாயாக சு-ல் - ரவியிருக்க லக்கினேசன் பெலக்கிலும், லக்கினத்திற் குருவிருக்க சு-க்குடையவன் மறையிலும் சு-க்குடையவனும் குருவும் கூடிப் பாவருடன் கூடாமல் லக்கினத்திலிருக்கிலும், பாவரூப செபத்திலிருக்கிலும், சத்துரு இல்லாதவனென்க சு-க்குடையவனுக்கு லக்னேசன் துற்பெலமாகிப் பாவமத்திபமாகில் எப்போதுஞ் சத்துருவுடையவன். எ-று. (க)

## கடன்படல்-பட்டினி. கலகம்-துன்பம். சோரம்-இனசன விரோதம்.

உட்பதிக்கானனம்பவமாயிவனுமவமாகி
யுதித்திடிற்கேந்திரகோணத்துச்சமுறிலிவனிற்
கட்பதிமனசெலமுறிற்கடன்படல்சுத்துணவுக்
களவிலவாவுடையரிவர்கனல்சனிகட்செவியை
நட்பதிகமாகவுறின்முற்படிபோற்கலக
நடுக்கல்களவினசனவிரோதநடத்துவரால்
விட்பதிக்கொன்பானிவன்கேமத்துருமகனுக
விளங்குவதுங்கேள்கமலவிப்பிரனந்தனனே.

(இ-ள்.) சு-மிடம்பாவவற்கமாகி அதற்குடையவனும் பாவவற்கமாகி லக்கினத்திலிருக்கிலும், கேந்திர கோணத் துச்சமேறிலும், இவனுக்கு இரண்டுக்குடையவன் துற்பெலமாகிலும், கடன்படுவன், பசி பட்டினி யுடையவன் பொசிப்புக்கு அளவில்லாதஅவாவுடையவனென்க சு-ம்-சு-க்குடையவனும் சேய்சனி ராகுவற்கமாகி நட்பாகிக்கூடி

ல், முன்சொன்னபலமல்லாமலும் கலகம் துன்பம் சோரம் இனசன விரோதம் இவையும் உடையவனென்க-இவன் கேமத்துருமனாக வ ருவதுங்கேட்பாயாக புஷ்போதையனுக்குப் புத்திரனான அகத்திய மாமுனியே. எ-று. (உ)

கேமத்துருமன்.

பிரசமலர்க்கிறையிலொன்றுப்பிருகுருசேய்
பிறையொடுங்கண்பூணடையுட்பெறிலமரப்பிறைதான்
சிரசிவன்பொன்னிவர்க்கொளிக்கிற்றீதுளரைச்சேரிற்
சேர்விடம்பின்முன்றனிக்கிற்சீவவற்கத்தகவி
லரசுவிடின்மற்றதுறிலிதற்குடையோரணையி
லசடர்கிரகத்தினிற்போயவர்பார்க்கவிருக்கிச்
பரசரமுற்றிடிற்கேமத்துருமனிவன்றினமும்
பயலொடும்பல்லக்கொடும்போயாசகம்பண்ணுவனே.

(இ-ள்.) லக்கினம் சிங்கமாக உ-ல் சுக்கிரன் ௩-ல்-ரவி-௰-ல் - குரு றி-ல்-சேய் இவை சந்திரனுடன் கூடிலும், அமரபக்ஷத்துச் சந்திரன் லக்கினத்துக்கும் லக்கினேசனுக்கும் குருவுக்கும் மறையிலும், அமர மதி பாவருடன் கூடிலும், இவன் மூன்பின் கிரகமில்லாமற் றனித்தி ருக்கிலும், இவன் விபாழவர்க்க மில்லாதிருக்கிலும் இவன் உச்சம்வி ட்டு நீசமேறிலும், நீசக்கிரகத்துடன் கூடிலும் இவன் பாவராசியி லி ருக்கப் பாவர்பார்க்கிலும், இவன் வற்கமெல்லாம் சரமேறிலும் தரித் திரத்திற் கேமத்துருமனென்க இவன் பயலும் பல்லக்குமாகச் சஞ் சாரத்தில் யாசக சீவனம் பண்ணுவன்.

ஆதுலன்.

நுவலிருமூன்றிறைபதிகப்பெலமாகவிவனை
நோக்கறமிலொன்றணன்பொன்னுடுபதிமால்சுதனும்
பவரொடெங்கூடிற்சிரங்கோன்மதிக்கிவர்களொளிக்கிற்
பவருயரச்சுபரொடுங்கிற்பதனமிவர்க்காகி
லவமதிகமாயிவர்நீசத்துறிலொன்றீரு
யவரவருக்கதுமறையிலசிதன்வற்கத்தேறிற்
றவமதனுக்கீறுநடைக்குடையவர்கள்சார்ந்து
சற்சனம்விட்டரவுசிகிசாரினுமாதுலனே.

(இ-ள்.) சு - க்குடையவன் அதி பெலமாக இவனை-உ-சு-ச-௧- கக-ல் குரு மதி புதன் சுக்கிரன் இவர்கள் பாவரைச் சேர்ந்து கூடி லும், லக்கினம் லக்கினேசன் சந்திரன் இவர்களுக்குச் சுபர் மறை

யிலும், பாவர்பெலமாகச்சுபர் துற்பெலமாகிலும், ரவிமுதலானகிரகங்கள், சு, அ, கஉ ல், இருக்கிலும், இவர்கள் பாவாதிகமாய் நீசத்திலிருக்கிலும். க. முதல், கஉ வரைக்கும் தத்தம் பாவகத்துக்கு மறையிலும், இவர்கள் சனிவற்கமேறிலும் சு அ ம க்குடையவர்கள் கூடிசுபவற்க மில்லாமல் இராகுகேதுவுடன் கூடிலும் தரித்திரத்தில் ஆதுலன் எ-று. (ச)

ஆதுலன்.

மா துசிதனுகிவற்கோத்தமமாகிற்சனியாய்
மதிரவியாய்க்கதிரமாலாய்த்துலையுதையமருவி
லீ துமுதற்கெட்டனற்பார்வைக்குடுக்கோளிருக்கி
லினன்மால்சுன்பார்வையுடன்யாழ்மீனென்றிலகிற்
போதிருவர்சுன்பார்க்கமெய்மையுறிற்பிறைசேய்
புருவையுறமுடன்பார்க்கிற்புறக்கடைமுன்னடுவாய்த்
தாதுமுதற்காலமுநேர்ச்சியுறிலாதுலனுஞ்
சலவையுடுத்திரப்பதிவன்றன்றொழில்சொற்றிடிலே.

(இ-ள்.) சுக்கிரன் கன்னியிற்வற் கோத்தமமாகிலும், லக்கினம் துலாமாகச் சனியிருக்கிலும், அல்லதுரவிமதி கூடியிருக்கிலும், ரவி புதன் இருக்கிலும், அல் மதியிருக்கச்சேய் பார்க்கிலும் லக்கினம் மிதுனம் மீனமாகி ரவிபுதன் சனிகூடிப்பார்க்கிலும் லக்கினம் மேடமாகி ரவிமதியிருக்கச் சனிபார்க்கிலும், மேடத்திற்சேய்மதி இருக்கச் சனிபார்க்கிலும், லக்கினுந்தியத்திரேக்காணம் தாதுவற்கமாகி நிசிகாலமதியிருக்கிலும், முதற்றிரேக்காணம் மூலவர்க்கமாகித்திவாமதிஇருக்கிலும், உ ம் திரேக்காணம் சீவவற்கமாகிச் சந்தியாகால மதியிருக்கிலும், ஆதுலனென்ப இவன் வெளுப்புவஸ்திரங் கட்டிக்கொண்டுஇரப்பன். எ-று. (ரு)

ரேகை.

சொற்றலமுன்னீர்பவமித்தலத்தவருத்தமரீ
சுரனுதற்கண்ணிவர்களத்தமனநீசமசுப
முற்றிடிற்போர்க்குள்ளாகியபசெயப்பட்டொடுங்கி
லொன்றினுக்கெட்டுடையவனேடுற்றொளிக்கிலுறவற்
றற்றலைவன்றேய்ந்தொழியவசிதன்வற்கத்தேறி
யவமானத்திறைபார்க்கவண்ணலுடனொளிக்கின்
முற்றலைவனசுபசுட்கமுறில்ரேகையிவன்பேர்
முழுதும்பிச்சாடனெனனவுமொருவதுமிப்புவியே.

(இ-ள்.) உ, க, ச, கக க்குடையவர்களுஞ் சுபக்கிரகங்களும் செவ்வாயும் அத்தமனம் நீசம்பாவம் இந்தவற்க மேறிலும், யுத்தத்தில் அபசெயப்பட்டு, சு, அ, கஉல் வீழிலும், இவர்கள், அ க்குடையவ

னைக்கூடி மறையிலும், அமரமதியும் லக்கினேசனும் சத்துருவைக்கூடிச் சனிவற்கத் தேறி, அ க்குடையவன் பார்க்க மறையிலும் லக்கினமும் லக்கினேசனும் பாவசுட்கவற்கமடையிலும் தரித்திரத்தில்ரேகையென்ப இவன்செனனமுதல் ஆயுர்த்தாயம் வரைக்கும் பிச்சாடனன். எ-று. (சு)

தாசவற்கம்.

வியந்துயில்போக்கிறைவரொன்ருய்வெகுபாவர்ச்சேம
வேதியனுமண்ணனுமெட்டேறில்வெகுமானம்
பயந்தவரொன்றிவர்களவமானமனைச்சேர்ந்து
பற்றலற்குந்துற்பெலாய்பங்குவற்கத்தேறி
னயந்தருசுபாதிபர்தூமாதிபராய்ப்பெலக்கி
னவில்வதிவன்ருசனினனுளிறைவேனண்ணக்
கயந்தவனீதங்கிசமுற்றிவர்ப்பார்க்கவனற்பூண்
கவிபெணுறிலிவனனையோடும்விலைக்காகுவனே.

(இ-ள்.) கஉ அ ம க்குடையவர்கள்கூடி அநேக பாவவற்கமேறி லக்கினேசனும் குருவும், அல் இருக்கிலும் ம ச கூ க க்குடையவர்கள்; அ க்குடையவனைக் கூடி சு க்குடையவனுக்கும் பெலகீனமாகிச் சனிவற்கமேறிலும் சுபக்கிரகமெல்லாம் தூமாதி பஞ்சக்கிரக வற்கமாகப் பெலக்கிலும், தாசனென்ப, எ ல், ரவிமதியிருக்க இதிற் சனியங்கிசமுஞ் செய்துபார்க்க, கூல், சேயும் கன்னியில் சுக்கிரனும் இருக்கில் இவனும் இவன்தாயும் தாசவற்க மென்ப. எ-று. (எ)

ரோக பலன்.

குவலையக்தெற்குயர்வதுகண்டிம்மலையத்துதித்த
குறுமுனியேரோகவியற்குள்ளதுங்கேள்கொடியூர்
பவன்முடங்காமாலைசன்னிபயித்தியகீற்குட்டம்
பசாசுபிடிகுருவாதம்படர்வனவுமிவர்க்காஞ்
சுவர்கருவிதீப்படுதல்சுரம்பிளவைமுதல
* தோடகஞ்செவ்வட்டைகடிசோரிதால்விரண
மிவைகனலுக்கரவுசிகிக்கிவைநேர்நஞ்சுடனு
மென்பரிவர்வற்கமிரணத்தனெடுற்றிடிலே.

(இ-ள்.) தெக்கண பூமிஉயர்வதுகண்டு இந்தப் பொதிகை வரையினிடமாகவந்த அங்குட்ட பிரமாணவடிவமான அகத்திய மாமுனியே

* தோடகம்-கொப்புளம்.

ரோக இயல்கேட்பாயா-சூ, க்குடையவன்வற்கமெல்லாம் சனிவற்கமா கில் முடம் காமாலே சன்னி பைத்தியம் கருங்குட்டம் பசாசு பிடி வசூரி வாதம் படர் தாமரை இவைமுதலாகிய ரோகமுண்டாமென் ப செவ்வாய் வற்கமாகிற் சுவர்வீழ்தல் நெருப்பு ஆயுதம்படல் சுரம் பிளவைமுதலாகிய தோடகம்செவ்வட்டைக்கடி இரத்தரோகம் விர ணமுதலானவையு முண்டாமென்ப இராகுவுக்குச் சனிபோலவும் கேதுவுக்குச் சேய்போலவும் சொல்லும் இதனுடனே விடபயமுங் கூட்டிச்சொல்லுக. எ-று. (அ)

இதுவுமது.

இருணமனனினனுகிற்சிரநோவுகாந்த
    லெரிவுகடுப்புட்சுரநேத்திரரோகமிரவுக்
கருசிகயமுயல்வலியரோசிகநீர்ப்பாடு
    வசனவிரோதம்மிருமலீழலிளைப்பருகற்
கொருநடவிக்கனுகூலியூதுதல்வீங்குதல்பொன்
    னுக்கதிசாரம்மரசரோகமிரசதமேற்
பிரமைமருத்தீடுவிஷையப்பிணிநீராமை
    பெருவயிறுமேகமகோதரமொடுமீனிசமே.

(இ-ள்.) ரோகாதிபன் வற்கம்ரவியாகில், சிரநோவு காந்தல் எரிவு கடுப்பு அத்திசுரம் நேத்திரரோகமென்ப - சந்திரனுகில் அருசி சய ரோகம் முயல்வலி அரோசிகம் நீர்ப்பாடு போசனவிரோதம் இருமல் ஈழல் இளைப்பு என்ப-புதனுகில் வாய்வு ஊதுதல் வீங்குதல் என்ப-வியாழனுகில் அதிசாரம் ராசரோகமென்ப சுக்கிரனுகில் பிரமை மரு த்தீடு விஷையரோகம் நீராமை பெருவயிறு மேகம் மகோதரம் பீனி சமென்ப. எ-று. (கூ)

தரமுதலீரளவுமுள்ளவுறுப்பதனிற்சார்ந்த
    தபனன்முதற்சனிவரைரோகத்தினர்தந்தளிப்பு
மருவுதலுங்கண்டுரைத்தலாலசியமெவரால்
    வந்ததெனிலிப்பெயரால்வந்ததுஞ்சொற்றிடலாற்
பிரிவதுவுஞ்சொற்றிடுவர்பெண்களுக்கீதன்றிப்
    பெற்றிளைப்புந்துற்கனவும்பேய்க்குறையும்ரிதுப்பேர்க்
குருதிபருகிப்புணர்பசாசுமவர்க்குளதாய்க்
    குறித்துரைப்பரிதன்மேலாழாமிடத்துக்குளதே.

(இ-ள்.) லக்கினமுதல். கஉ மிடம் வரைக்கும், பாவக நாமத்திற் சொன்னவுறுப்பரிந்தும், இதில் சூரியாதி கிரகங்கள் ரோகாதிபராக

வருவதறிந்தும், இவர்கள் தளிப்பதறிந்தும், கூடுதலறிந்தும், இன்ன ரோகமென்று கண்டுசொல்லுக-இப்பெயர்களால் ரோகம் வருங்காலமும் நிவிர்த்தியாகும் காலமும் கண்டுசொல்லுக பெண்களுக்கு இந்த ரோகம் அல்லாமலும் பெற்றிளைப்பும், துற்கனவும், பேய்க்குறையும், ரிதுவாகிய குருதியைப்பருகிப் புணர்பசாசுபயமும், இப்பெயராற் கண்டுசொல்லுக இதன்மேல் எ மிடத்துப்பலன் சொல்லுவோம். (ய)

ஆறும்பாவகப்படலம்

முற்றிற்று.

ஆகப்படலம், உ௦, க்கு கவி கசூஉ.

# ஏழாம்பாவகப் படலம்.

காமபலன்.

ஏழதனுக்கிறைதொழிலாய்லக்கினக்கோன்பார்க்கி
லிரணமனனென்றறவேட்கிறைவிழிக்கிலிவர்கள்
வாழுவதுங்கேந்திரகோணமொலொருவளவின்
மருவிலொன்றேழுபையமசிதன்சிதன்மாலணையி
லூழனனீலன்பார்க்கப்பாகவனீர்ச்சேரி
லொழியாதவெகுகாமத்துழல்வதுவுமிவனும்
வீழுவதும்வாக்குடலம்வேட்கிறைவர்புகராய்
மேதைவற்கத்துறிற்காமம்வெறுத்திடுவதிவனே.

(இ-ள்.) எ, க்குடையவன், ய்ல் இருக்க லக்கினேசன் பார்க்கிலும், சூ, க்குடையவன், கல், இருக்க எ க்குடையவன் பார்க்கிலும், இவர் கேந்திரகோணங்களிலிருக்கிலும் இவர்கள் ஒருராசியிற்கூடிலும், கல், சனி, எல் சுக்கிரன், உல் புதன் இருக்கிலும் ரவிசேய்சனிபார்க்க சல், சுக்கிரன் இருக்கிலும், வெகு காமாதிகளென்ட-க, உ, எ, க்குடையவர்களும் சுக்கிரனும் சூ, அ, கஉ ல் விழுந்துபுதவற்கமேறிற்காமத்தில் வெறுப்புள்ளவன். எ-று. (க)

களத்திரபலன்.

வதுவைமனன்புகர்பொனிவர்கேந்திரகோணேறி
மாசுளர்ப்பெறுதுதனித்திருக்கமனன்பெலக்கி

லதிகபெலமாயிவர்களரவொழியவிதுவூழ்க்
கருகினுறிலல்லவெனிலேந்ததற்குள்ளாகின்
முதியவர்தம்மிற்பெறமற்றவரபெலமாகின்
முதல்வனும்பொன்னுதையமுறின்முகமதனுக்குடையோர்
நிதிமதியுற்றிவைசேரில்வாலிபவிவாக
நிறைவேறுமிவர்களின்பநெடுநாளேக்குளதே.

(இ-ள்.) எ க்குடையவனும் சுக்கிரனும் குருவும் கேந்திரகோணங்களிற் பாவருடன் கூடாமற்றனித்திருக்க லக்கினேசன் பெலக்கிலும், இவர்கள் அதிகபலமாகி ராகுகேது ஒழிய ரவிமதிக்குமுன்பின்னிருக்கிலும், அல்லது, ௫ மிடத்துக்குள்ளாக இருக்கிலும் சுபக்கிரகங்களெல்லாம் சொட்சேததிரமிருக்கமற்றவர் துற்பெலமாகிலும், லக்கினேசனும் விழாழனும் லக்கினத்தி லிருக்கிலும் உ எ க்குடையவர்கள் குருமதியுடன்கூடி உ எ ல் இருக்கிலும் வாலிபத்தில் விவாகமுமாகி நெடுங்காலம் இன்பம் அனுபவிப்பர். எ-று. (உ)

இதுவுமது.

குளிரதற்குத்தாய்க்கிறைமுன்குயந்தைதந்தைக்கிறையுங்
குடிற்கிறைசொல்லிற்கிறைகூடற்கிறைபொன்பெலமாய்
வெளியுளர்ச்சேர்ந்தாட்சியுச்சகேந்திரகோண்மேவி
விண்ணவராங்கிசமதிகமேறிமிக்காமிறைக்குங்
களிதருதற்கொழியாமலவரவர்தம்மனைக்குங்
களங்கனுக்குமறையாமற்கசடரைவிட்டிருக்கில்
வளர்மதனும்ரதியுமெனவாயுவரைசுபமாய்
மனைவியர்களுடன்கூடிவாழுவதுமிவனே.

(இ-ள்.) சுக்கிரன் க ௫ ௬ க்குடையவர்களும் ௪ உ எ க்குடையவர்களும் வியாழனும் முன்போலும் பெலமாகி சுபக்கிரகங்களுடன் கூடி ஆட்சி உச்சகேந்திரகோணிலிருந்து தேவதாங்கிசாதிகமாகி அதிபெலமாகிய லக்கினேசனுக்கும் மதிக்கும் அவரவர் சொட்சேத்திரத்துக்கும் மறையாமல் பாவருடன்கூடாமல் அதிக சந்தோஷத்தோடுங்கூடியிருக்கில் அனேககளத்திரத்தோடுங்கூடி மன்மதனும் ரதியும் போல் நெடுங்காலம் சுபமாகவாழ்வன்.

களத்திர இயல்புமுதலானவைசொல்லும்வகை.

வணசன்முதற்கேதளவும்வாக்கணை தன்முதலின்
மருவுதனுமிதற்கிறையாய்வருவதுங்கண்டெவர்க்கு

மினமியல்புதிரமழிதலேகம்வெகுவாதல்
யாவுமனேவியர்க்குளதாயிசைத்திடுவரிவர்கள்
கனகவினமாகிலிவள்பதிவிரதைமற்றக்
கள்ளரெனின்மற்றதிவைகலப்பினுமக்கலப்பா
முனரிறைவேளிறையிவர்கடங்களுக்குள்ளதுவாய்
மொழிகுவர்நட்புளகுணமும்விகுணமுமாமுனியே.

(இ-ள்.) சூரியாதிக்கிரகங்களில் உ எ க ல் இருந்தவர்களையும் இவற்றிற்குடையவர்களையும் அறிந்துகளத்திர இனம் இன்னதென்றும், இயல்பு இன்னதென்றும் இருப்பதென்றும் அழிவதென்றும் ஒன்றென்றும் அநேகமென்றும் இவைமுதலான யாவுங்கண்டு சொல்லுக் இவர்கள் குருவற்கமேறில்களத்திரம் பதிவிரதையென்க பாவவற்கமாகில் இதற்குத்தோசஞ் சொல்லுக பாவரும்சுபரும்கலக்கில் இரண்டுங்கூட்டிச்சொல்லுக க எ க்குடையவர்கள் குணத்தையறிந்து குணமும் விகுணமுஞ்சொல்லுக. அகத்தியமாமுனியே. எ-று. (எ)

இதுவுமது.

குணத்தியல்புக்கனங்கனிதற்கிறைபுகர்கட்கோவுக்
குடனுதலெதிர்த்திடுதல்குருவிழிப்பல்லாம
னணத்தபனன்முதனேர்வன்னெஞ்சியபிமானி
நாணமிலிவெகுவிரகிநந்தனர்ப்பெற்றிளேப்பண்
மணத்தவனைப்பிரியாதவகைக்குடையமார்க்கம்
வழுத்துவள்சோரத்துடைசவம்பியவமானி
பணத்திலவாவுடையதரித்திரிரூபமற்ற
பங்கறையாங்குளிகன்வரைபகர்வதுமிப்படியே.

(இ-ள்.) எ எ க்குடையவன் சுக்கிரன் உ க்குடையவன் இவர்களுடன் கூடினபேர்கள் இவர்க்கு எ ல் இருப்பவர்கள் இவர்கள் குருவீக்ஷணம் இல்லாதிருக்கச் சூரியனாகில வன்னெஞ்சி, மதியாகில் அபிமானி சேயாகில் நாணமிலி, புதனாகில்வெகுவிரகி, வியாழனாகில் பிள்ளைகளைப் பெற்றிளைப்பள், சுக்கிரனாகில பதியை வசப்படுத்துவள், சனியாகில்களவுடையவம்பி, இராகுவாகில் அவமானி கேதுவாகில் தரித்திரி, குளிகனாகில் அழகிலி.

இதுவுமது

படிமகன்சுன்னரவிவர்பாகவன்வேள்கோவிவையிற்
பற்றிடினுமப்பதியைப்பார்க்கினுமப்பதியோ

ருடனுறினும்விடமார்க்கமுடையவளாமிதனுக்
குடையதினனேர்மலடியொத்தவயதணியின்
மிடறுடையள்விபசாரிபழகுளவெவ்வர்னி
விரகறியாவாலையல்லவெனிற்கருப்பமுடையா
ளடிபடவமானவயததனிசுராபானி
யனுசாரிரிதுகாலத்தழகிலியாட்படலே.

(இ-ள்.) சேய்சனிராகுகேது இவர்கள் சுக்கிரனுடனுவது உஎ லாவது இவற்றிற் குடையவர்களுடனுவதுகூடினும், பார்க்கிலும், விடமார்க்கம் உடையவளென்ப இதற்குஇனம் சொல்லவேண்டில்ரவிநேர் மலடி சமவயதுள்ளவிதவை விபசாரி, அழகுள்ளவிதவை விபசாரி, அழகுள்ள எவ்வர்னி வாலை அல்லவெனிற் கருப்பமுடையவள், அடிபடு அவமானமுடைய வயததிகமுடையவள் சுராபானி அனுசாரி ரிதுகாலத்தழகிலி தொழுத்தை. எ-று. (சு)

புணர்ச்சிமுதலானவை.

ஆளதனுக்கனையாயுமதற்கிறைவர்புகரோ
டடுத்தவர்பார்த்தவரவராலணைபவர்தம்மினமும்
வேளிகலுக்காற்றுமன்முறைதவறித்தோய்ந்த
விபரமுமீதிசைந்தமைந்தவீடிடமுமிவர்க
டாளளவுஞ்சிரமுதலாய்ச்சாற்றியவவ்வுறுப்பிற்
றகையுளதுமிலதுஞ்சுட்கத்தம்மூளதுமிலதுங்
கோளிறைநேர்சொற்றிடுவரிருநான்காமிடத்துக்
குளபலமுங்கேளினிக்கும்போதையவேதியனே.

(இ-ள்.) எ உ க்குடையவர்கள்சுக்கிரன் இவர்களுடன்கூடினவர் பார்த்தவர்கள் அறிந்துகூடும் இனமும் முறைதவறிக்கூடிய மார்க்கமும் இதற்குள்ள ஆகித்தலமும், நகைசிகைபரியந்தமுள்ளஉறுப்பில் அழகுள்ளதும் இல்லதும் சலசுட்கமுள்ளதும் இல்லதும் ரவிமுதல் நேர் அவரவருக்கு அமைத்த வண்ணஞ்சொல்லுக இதன்மேல் அம் இடப்பலனுங் கேட்பாயாகக் கும்போதையனுகிய அகத்தியமாமுனியே. எ-று. (எ)

ஏழாம்பாவகப்படலம்.

முற்றிற்று.

ஆகப்படலம் உக-க்கு கவி ௱சுகூ.

# எட்டாம்பாவகப்படலம்.

## அவமானபலன்.

வேதியனைக்கூடாமலிவன்விழிப்பெய்தாமங்
　　வேட்பதிக்கானனமனதன்வெகுபெலமாய்த்தோன்றி
லாதிமுதற்குங்கருமத்தண்ணனுக்கும்வலிதா
　　யசடரொடுங்கேந்திரகோணமேயிலவமான
மேதுளதால்வருதலிவையென்றுரைக்கிலிவன்போ
　　யிருந்ததும்பார்த்ததுவுமறிந்திசைத்திடுவரிதன்மேற்
போதுதையவுன்றாதைலபித்தபடிக்கிறப்பெப்
　　பொழுததற்கேதுவுமிதனுலென்பதியம்புவதே.

(இ-ள்.) எட்டுக்குடையவன் குருவைக்கூடாமல் அல்லது அவன் வீக்ஷணம்பெறுமல் அதிபெலமாக இருக்கிலும் கய் க்குடையவர்களுக்கு. அக்குடையவனே அதிபெலமாகிப் பாவருடன்கூடிக்கேந்திர கோணத்திலிருக்கிலும், அவமானதிகமென்ப இது எதனுல்வருமென்னில், இவன் இருந்ததும் பார்த்ததுங்கண்டு சொல்லுக இதன்மேல் அகத்தியமாமுனியே கமலாலயனுகிய உன்தாதைலபித்த படிக்குள்ள மாரண காலமும் அதற்கேது இன்னதென்பதுஞ் சொல்லுவோம்.

### புருடகண்டம் மரணகாலம்.

இதமுளபேர்க்கா றிரண்டீரெட்டிதன்மேலாறு
　　மிருமூன்றோர்நான்கிரண்டாறிதிலிரண்டுமிதுவு
மதன்மேனன்கெட்டொருநான்காகவருமிவையீ
　　ருறிரண்டும்புருடகண்டமனுதினங்கண்டமுமா
முதையவயதுங்காலசக்கரத்தக்கிரம
　　முடதுமட்டவற்கவயதுந்தினமுழுதிப்போன்
முதலவருக்குரைத்ததிசைவேதையுங்கோசரத்தான்
　　மொழிந்திடுந்துற்பெலமுமுறின்முகிவிவராயுவுமே.

(இ-ள்.) சுகமே யிருக்கிற பேர்களுக்குப் புருடகண்ட மறியும்படி வயசு கஉ கசு உஉ உஅ ௩உ ௩ச சய சஉ சச சஅ ருசு சுய இவை கஉ ம்புருடகண்டமென்ப இதன்மேல் நித்திய கண்டமென்ப இக்கண்டத்துடனே லக்கினேதைய வயதும், காலசக்கரத்

தப்புப்பாய்ச்சலும் அட்டவர்க்கவயசுகண்டமும் தினகண்டமும் சூரியாதி கிரகங்களுக்குச் சொன்னதிசை வேதையும் கோசரதுற்பெலமுங் கூடிச் சேகரிக்குங் காலம் மரணகாலம். எ-று. (உ)

மரணகாலம்.

ஆயுவகடிக்கிறைவர்தம்புடசேகரத்துக்
சாணதிற்சுன்னவன்மகனுமறத்துயராங்கிசத்தி
லேயதெமனுகவிவன்றன்மகன்பொன்மூவர்க்
கேற்றிபமுற்போலுளதைப்பனரேற்றியிவர்ச்சேர்த்
தோய்விலதிற்குருவரும்போதிரவிபவுத்திரக்கோ
ணுளமாதத்திவன்சனிமுற்போலுயர்தற்குளநாட்
சாயைசரங்கிரியைகனவிவைமுதலிற்றெறிந்த
தற்காலமறிதலுமுற்றிடிற்சமனித்தினமே.

(இ-ள்.) கூ-அ-கஉ-க்குடையவர்கள் புடத்தைக் கூட்டிக் கண்டராசியிற் சனி குளிகபுடத்தைக் கூட்டி, கூ-ல்-பெருகிக் கண்டராசி நவாங்கிரத்திற் சனிவருங்காலமும், சனி குளிகன் குரு இவர்கள் ௩- புடத்தையும், கூ-ல் பெருக்கி மறுபடியும், கூ-ல் பெருக்கி அந்த ௩-பேர் புடத்தையும், மறுபடியுங்கூட்டிக் கண்ட ராசியிற் குருவருங்காலமும், குளிகனிருந்த ராசித்திரிகோண மாதமும், குளிகசனி புடத்தைக் கூட்டி-கூ-ல் பெருகிக்கண்ட நாளும், சாயை சரம், கிரியை, கனவு இவை முதலானவைகளிற் கண்டகாலமறிதலுங்கூடில் அத்தினம் மரணம். எ-று. (௩)

இதுவுமது,

தினத்ததிபன்புடத்தையெட்டிற்பெருக்கியதிற்குளிகற்
சேர்க்கிலதுதேகமிலக்கினபுடமைந்தேற்றிச்
சனிக்குமகனைக்கூட்டிவாயுவுவக்கதிரிற்
றனதுபவுத்திரனேழிற்றுக்கலவமிருத்தா
மேனிற்றனுவுக்குயிர்க்குமிருத்தேறிலற்பாயுவுமற்
றிதுவுமதுபோலுரைப்பரிவைமூன்றுக்கிசைந்த
மனைக்கியமன்கோசரத்தாற்பாவருடன்கூடி
வரும்போதிலிவன்வாணாளறுங்காலமதுவே.

(இ-ள்.) சந்திரபுடத்தை அ-ல் பெருக்கிக் குளிகபுடத்தைக் கூட்டிக்கண்டது தேகமென்ப-லக்கினபுடத்தை-ரு-ல்-பெருக்கிக் குளிகபுடத்தைக் கூட்டிக்கண்டது பிராணனென்ப-குளிகபுடத்தை எ-ல பெ

ருக்கி ரவிபுடத்தைக் கூட்டிக்கண்டது மிருத்துபுடமேறில் அற்பாயு வென்ப-சமமாகில் மத்தியமாயுவென்ப-குறையிற் றீர்க்காயுவென்ப-சமமாகில் மத்திமாயுவென்ப-குறையிற்றீர்க்காயுவென்ப-இந்த ௩-புட முங்கூட்டிக் கண்ட ராசியிற் கோசாரச்சனி பாவருடன் கூடிவருங் காலம் மிரியாணகாலம். எ-று. (௪)

இதுவுமது.

மதுமலர்க்கேரன்பவுத்திரனின்மகன்புடத்தைவாங்கி
மதிப்பதுமுன்போலுளதாய்வர்ததிற்றாமாதி
யதையொருமித்திடவுளதிலேந்திறையைச்சேர்வோர்க்
கானதிசைவருசமுன்போபரித்ததைலக்கினமாய்
முதலுளதுக்கொருவாகவசிதனுறும்போதின்
முதலிரவிமாந்திபுடமூன்றினுக்குற்றதற்கப்
பதியிருந்தராசியிற்பொன்பற்றிடுமப்போதிற்
பற்றலன்போலிவனுயிரைப்பற்றுவதிபமனே.

(இ-ள்.) குளிக புடத்திற் சனிபுடத்தை வாங்கிக் கண்டராசியிற் சனிவருங்காலமும், தூமாதிபஞ் சக்கிரத்தைக் கூட்டிக் கண்டராசியிற் சனிவருங்காலமும், ௫-க்குடையவன்கூடின கிரக சைவருசங்களைக் கூட்டிக்கண்ட ராசியை லக்கினமுதல் வைத்துக் கண்டராசியிற் சனி வருங்காலமும், (முன்சொன்னவைக்கெல்லாம் மேடாதி முதலாகவைத்து நேர்நடத்துக) லக்கினம் ரவிமாந்தி இந்த மூன்று புடத்தையுங் கூட்டிக் கண்ட ராசியாதிபதி யிருந்த ராசியிற் குருவருங்காலமும்மாரணகாலம். எ-று. (௫)

இதுவுமது.

இயமனெனுங்கண்டகனைலக்கினத்தில்வாங்க
விதற்குளதிற்குளிகபுடத்தெய்தினதிற்குருவுந்
தயையிறையொன்றிறைசார்ந்ததலைவர்திசைகூட்டிச்
சாற்றும்வருசத்துளதிற்றபனனுஞ்சுன்றனையன்
முயலகனைக்கூடவவற்குளதினமுமாந்தி
முதுசேயீதொன்பத்தைமுன்போற்செய்திதனிற்
கயனுடையகாரகனைக்கூட்டியதிற்கண்ட
கல்லியமுமுறிலிவனைக்கொல்வதுமந்தகனே.

(இ-ள்.) எமகண்ட கபுடத்தை லக்கின புடத்தில் வாங்கிக் கண்ட ராசியிலும், குளிகபுடத்தில் கண்டராசியிலும் குருவருங்காலமும், ௧-௫-க்குடையவர்கள் கூடின கிரகதிசை வருஷங்களைக் கூட்டிக் கண்ட

ராசியிற் சூரியன்வருங்காலமும், மதிமாந்தி புடத்தைக் கூட்டிக் கண்ட ராசியில் மதி வருங்காலமும், மாந்தி சனிபுடத்தைக் கூட்டி, கூ-ல், பெறுக்கி மறுபடி சனிபுடத்தைக் கூட்டிக்கண்ட லக்கினமும், சேக ரிக்குங்காலம் கிரியாணகாலம். எ-று. (சு)

இதுவுமது.

தகர்நீசனட்டவற்கத்துளநாள்வருஷஞ்
சாற்றுதலச்சனிபோலந்தணன்றபனன்சசிக்கும்
பகர்வதிவர்வரும்போதிற்கோசரவேதையுமுற்
பாவகத்திலுற்றவயதுப்பகுதிக்கமைவாய்ப்
புகலுமுதையத்துமிவைசேகரமாய்க்கூடிப்
புகும்போதிலிவனுயிருந்தெற்கினிற்புக்கிடுமா
லிகம்வருவோர்க்காயுவிறப்பிப்படியாமிதன்மே
லிதற்கேதுவிதனுலென்பதுவுமிசைப்பதுவே.

(இ-ள்.) சனியட்டவற்கத்திற்கண்ட வயசு கண்டமும் நட்சேத்திர கண்டமு மறிந்து இவன் அட்டவற்கத்திற் கண்ட குரு ரவி மதிக்குள்ள கண்டமும் கோசரவேதையும் லக்கினபாவகத்திற் கண்ட வயசு கண்டமும் மற்றுள்ள கண்டமுங் கூடுங்காலம் மாரண காலமென்ப இதற்கு எது இன்னதினுலென்பதும் இதன்மேற் சொல்லுவோம். எ-று. (எ)

மரணத்துக்குஏது.

இசையிலிவையமரமதிரவிசனிசேய்கூடி
லிவர்தவமொன்றைந்துவசையெய்திலெமனுபையத்
தசமன்விழிப்பெய்தமதியாதவனென்றுறையி
லசிதன்மகனெட்டுறமற்றவர்கோணத்தாகிற்
பசியமாத்தல்லவெனிற்பருப்பதமற்றுயர்வாற்
பங்கரவிகிசிறைகூடப்பாரிமனன்பார்க்கக்
குசனிரவியன்னையுறிற்கோன்றேளாங்கிசமுங்
குளிகனெட்டுமுறிற்கலினுற்கூறுதன்மாரணமே.

(இ-ள்.) ம-ல்-அமரமதிரவியும், ச-ல்-சனி சேயுங்கூடினும், கூ-ல்-அமரமதியும், க-ல்-ரவியும், ரு-ல்-சனியும், அ-ல் சேயுமிருக்கினும், சனி உபையராசியி லிருக்கச் சேய்பார்க்க ரவி மதி கூடி -க-ல்-இருக்கினும், குளிகன்-அ-ல், இருக்க மற்றவர், ரு-கூ-ல்-இருக்கினும், மரத்திலேறி விழுந்தாவது, மலையிலேறி விழுந்தாவது மற்றுள்ள உயர்ந்ததிலேறி விழுந்தாவது மரணமாவனென்ப சனி ராகு பவனுதிபதியுடன் கூட-எ-க்குடையவன் பார்க்க ரவிசேய்-ரு-ல் இருக்கினும், ஒன்றுக்கு

டையவன் விருச்சிகாங்கிசமேறக் குளிகன்-அ-ல் - இருக்கிலும் கல்வி
னால் மரணம். எ-று. (௫)

இதுவுமது.

மாரணக்கோன்கோணிரவிமதிசேய்சுன்மருவில்
வரைப்பெயரான்மனைவேள்பத்தினன்சனிசேய்மதியைப்
போரினிலுற்றபசெயமுநீசமுமற்றுளதும்
பொருந்திடிற்கூவலினானேம்புரந்துயிலுக்கிறைவர்
தாரமதிற்புகர்ச்சேரிற்சாலினவாங்கிசக்கோன்
றரிற்களத்தாற்பதனமனர்தசவிறையைச்சார்ந்து
சோரரைச்சேர்ந்தும்மறையிற்றுற்றொழிலாலென்னச்
சொல்லுவரந்தியகாலத்துக்குளதித்தொழிலே.

(இ-ள்.) எட்டுக்குடையவனிருந்த ராசித்திரிகோணத்தில் ரவி மதி சனி சேய் நிற்கிற்பருவத வற்கத்தினால் மரணமென்ப-சு-எ-ய-ல்-ரவி-சனி சேய் மதியைக் கூடிப்போரிலுற்று அபசெயப்பட்டு நீசாத்தமனபாவசகிதமாகில், கிணற்றில் விழுந்து மரணமாவனென்ப-க-சு-அ-க்குடையவர்கள் சுக்கிரனைக்கூடி-எ-ல்-இருக்கினும், லக்கினேசன்கும்பாங்கிசமேறிலும், களத்திரத்தால் மரணமென்ப-சு-அ-கஉ-க்குடையவர்கள் லக்கினேசனைக் கூடிப் பாவசகிதமாகி மறையில் துன்மரணம். எ-று. (௬)

இதுவுமது.

தொழிற்கனைசுன்வேட்பணிபெண்சுங்கனுமாயிருக்கிற்
சுடரனலின்மாறிடமாறுற்பெலமாய்ரிணனை
விழிப்பதியுற்றிடிலனல்பங்கிவன்கனைச்சேர
விபூஷணனுறிறைபார்க்கிலாயுதத்தால்விதுவும்
பழிப்பதியானென்றிறைவர்பாகவனும்பயமாய்ப்
பவர்ச்சேரிற்சேலுதையம்பானுவிதுப்பற்றி
லழிப்பிரணமெட்டுடையமாய்மதிமால்கூட
வவமானன்பார்க்கிலறலான்மரணமாமே.

(இ-ள்.) க-ல்-சனியும் எ-ல்-ராகுவும், கன்னியிற் சுக்கிரனு மிருக்கிலும், ரவிசேய் கிரகமாறப்புதன் துற்பெலமாகி சு-க்குடையவனைக்கூடி உ-ல்-இருக்கிலும், சேய் சனி குளிகன் கூட ந-சு - க்குடையவன் பார்க்கிலும், ஆயுதத்தால் மரணமென்ப-சந்திரனும்சுக்கிரனும், க-சு - அ-க்குடையவர்களுங்கூடி செலவற்கமேறிப் பாவசகிதமாகிலும், லக்கினமீனமாகி ரவிமதியிருக்கிலும், சு- அ-கஉ-உபையராசியாகி மதிபுதன் கூட எட்டுக்குடையவன் பார்க்கிலும் செல்வத்தினால் மரணம். எ-று. (௭)

இதுவுமது.

அம்மனையெட்டசிதனில்லாயமரமகுருப்பாம்
பனையில்விதுச்சனிகேந்ரத்தசடரிடையிருக்கிற்
கம்மணியுள்ளிறைபவர்கட்படவெட்டாறிற்
கட்செவிபெற்றிடிற்கோணிற்கசடர்சுபர்கலக்கிற்
பம்மனன்பத்தனலறம்பங்கோதையமைந்திரவி
பற்றிலதிலரவனலொன்பதிற்றுயில்பங்காகிற்
சொம்மெதிருக்கிறையசிதன்வற்கமுறமறைந்த
சோமனைக்கோன்விழிக்கின்மரணங்கயிற்ருற்சொலுமே.

(இ-ள்.) ௬, அ, சனிவீடாகி அமரமதிகுருநாகுகேது கூடிலும், மதிசனிகேந்திரத்தி லிருக்கப்பாவர் நெருக்கிலும், க, ந, ரு, க்குடையவள் ராகுகேதுவுடன்கூடி, ௬, அல், இருக்கப்பாவர்பாக்கிலும், ரு, ௬ ல்; பாவர்சுபர் கலந்திருக்கிலும், ம ல், மதி ௬ ல், சேய் க ல், சனி ரு ல், ரவி யிருக்கிலும், ரு ல், ராகு ௬ ல், சேய் அ ல், சனியிருக்கிலும், அ, க்குடையவன் சனிவற்கமேறிச் சுந்திரன்மறைய லக்கினேசன் பார்க்கிலும், கயிற்றினல் மரணம் எ-று (கக)

இதுவுமது.

கயயோகிபவுமீனையுற்றுட்சியுச்சமேவக்
கடபகரமுறக்கிகந்த்ரக்கரியவனைக்கலக்க
வயலாகப்பாவரிம்மூவகைக்குமுறிற்கனலா
லகிபுதனெட்டாறணிகம்மணையிலரவான்மால்
வயமாவிலரவையுறச்சேயகமெய்யாக
மதிரவிசேரிற்றனதான்மாசுளர்வற்கமுமாய்த்
துயிலாதிபன்முதன்மாரகனிவனென்றறிந்து
சுடர்முதற்காரகவினத்தாற்சொல்லுகமாரணமே.

(இ-ள்.) மதி சேயுடன்கூடி ஆட்சி உச்சமேறப்பாவர்நெருக்கிலும், அல்லது மகரகும்பத்திலிருக்கபாவர் நெருக்கிலும், அல்லது கேந்திரச்சனியைக் கூடப்பாவர்நெருக்கிலும், நெருப்பினல் மரணமென்ப அ, ௬, ந, க, ல் ராகுபுதன்கூடிற் சற்பபீடையால் மரணமென்ப-சிங்காரகுவைப் புதன்கூட மேடவிருச்சிகம் லக்கினமாகி ரவிமதி யிருக்கில் தன்னலே தனக்கு மரணபெள்ப-இதன்மேலும் பாவவற்க மேறிய அ, க்குடையவன்முதல் மாரகாதிபன் இன்னனென்பதறிந்து சூரியாதி கிரகங்களுக்குச்சொன்ன காரகவற்கத்தைவைத்து மரணஞ் சொல்லுக.எ-று. (கஉ)

### மாதுர் பிதுர்வங்கிசநாசம்.

சொல்லறநீர்வேளிவர்கள்காரகருமெலிவாய்த்
துற்றுனத்துற்றிடிலீசுரமுகுர்த்தம்பிறக்கி
வல்லவெனிற்றிதிமுதலகொண்டாந்தத்துதிக்கி
லபுத்தமெனுமூலம்வரிலானதவசித்தாய்ப்
பல்லுதையத்துடனுகிற்பாருதையம்விடமாய்ப்
பணிகொடிமற்றுளதுடலைப்பற்றவரிற்பவரி
நெல்லுதையந்திரந்தாராயெட்டினிற்பொன்னிருக்கி
லீன்றவர்தங்குலங்களுக்குமிவனெமனெனப்பநுவே.

(இ-ள்) உ, கூ, ச, எ, க்குடையவர்களும் இவற்றிற்குடையகார காதிபரும் மெலிவாய்ப் பாவவற்கமேறிலும், ருத்திரமுகுர்த்தம் பிறக்கிலும், திதிராசி நட்சேத்திரமுதலான கெண்டாந்தத் துதிக்கிலும், அபுத்தமூலம் பிறக்கிலும், அவசித்து நட்சதேத்திரமாகப்பல்லுடன் பிறக்கிலும், லக்கினத்தில் விடகடிகையிருக்கச் சற்பமுதலான கொடி வற்கம் உடலைப்பற்றிலும், திவரகாலத்திற் பாவராசியிற்றிரலக்கின மும் பூசநட்சேத்திரமுங் கூடிப்பிறக்க, அ, ல் குருவிருக்கிலும், மா தூர்பிதுர் வங்கிசம்நாசம் எ-று (கரு)

### மாதுருவினுற் புத்திரன்மரணம்

### மாதுர்மரணம்.

என்றனலோராங்கிசமாயிந்துறும்வேட்கோணி
லெமனுறிலொன்றேழ்விதுச்சேய்க்கெதிரசுபரிருக்கிற்
பொன்றுதல்சேயாயாலம்புவிவரத்துள்ளேறப்
புவிமகன்சுன்னதற்கேழிற்புக்கிலெமன்பெலம்போய்
நின்றதனல்வீடாகக்கனலனையுற்றிடிற்கோ
ணில்லுடனுக்கனையிறைகாரகரொளிக்கினினைவா
யொன்றிரவிசேய்சனியுற்றீடிற்பவருக்கனைமா
னுள்ளாகிற்றுயுயிரையுண்பதற்குற்றவனே

(இ ள்) ரவிசேய் ஓராங்கிசஞ்செய்ய எ ல் மதியிருக்க இதன் கோ ணிற் சனியிருக்கிலும், க எ ல், சேய்மதியிருக்க இதற்கு எ ல் பாவ ரிருக்கிலும், மாதுருவினுற் புத்திரன்மரணமாவன்-டு, எ ல் மதியிருக் கச்சேய்சனி அதற்கு, எ ல், இருக்கிலும், சனிபெலகீனமாய்ச் செவ் வாய்வீட்டிலிருக்க, ச ல், சேயிருக்கிலும் லக்கினேசனுக்கும் லக்கி னத்துக்கும் நாலுக்கும் நாலுக்குடையவனும் காரகனும் மறையிலும், டு ல் ரவியும், ச ல் சேயும், க, ல சனியுமிருக்கிலும், ச ம் ச க்குடை யவனும் பாவமத்தியமாகிலும் மாதுருமரணம் எ-று (கசு)

### மாதுர்மரணம்.

அவமானத்தீலுறையைந்துறப்பிதுராதிபர்க
ளன்னைவற்கற்துறிலிதற்கூழ்மதிபதனமாகிற்
பவராயுற்றிடத்துயிற்கோன்பார்க்கிலிவனிருக்கப்
பவுமன்விழிப்பெய்தவிழிப்பங்கனைக்கோனுகிற்
றவமாதிபன்னிதற்காய்க்கிறைமறையவணியிற்
சவுரியரவெரியிருக்கிற்றுமரைமன்புடத்திற்
றிவியீருதிபன்புடத்தைவாங்கிலதங்கிசம்போற்
சேர்வதெமனுகிலன்னைசேர்வதுந்தெற்கெனுமே.

(இ-ள்) எ, க்குடையவன், ரு, ல் இருக்கப் பிதுர்த்தானுதிபதி காரகன் இவர்கள் மர்துருவற்கேறிலும், நாலாமிடவற்கத்துக்கு, சு, அ, கஉ, ல் ரவிமதியிருக்கிலும், ச ல், பாவரிருக்க எட்டுக்குடையவன் பார்க்கிலும், ச ல் எட்டுக்குடையவனிருக்கச் செவ்வாய்பார்க்க, சு, க்குடையவனும், சனியும் உ ல், இருக்கிலும், ஒன்பதுக்கும் இதற்குடையவனுக்கும் நாலுக்குடையவன் மறைய ங ல் சனிசேய் ராகு கேது இருக்கிலும், ரவி புடத்தில் மதிபுடத்தை வாங்கிக்கண்ட ராசியிலும் இதற்கு அங்கிசத்திலும் கோசரச்சனி வருங்காலம் மாதுருமரணம் எ-று (கரு)

### பிதுர்மரணம்

வதுவையினனமரமதியேயொருநான்கிருக்கின்
மாதுர்பிதிர்வற்சமிரண்டும்மாறின்மனைமான்
முதலிவனிக்காரகர்க்குத்தந்தைவற்கமறையின்
முதுசேய்சேய்தாதையிறையிம்மூவரொளிக்கிற்
பிதுர்மனர்பாவர்க்கூடியிவர்வளவிலிருக்கிற்
பின்முனிவராகில்வெகுபேர்பவம்பெற்றுயரிற்
கதிர்புடம்பொன்மகனீக்கிக்கண்டதிற்சுன்வருநாட்
காலனிற்பிதாவுயிரைக்கவரவுதிப்பதுவே.

(இ-ள்.) எ ல், ரவியிருக்க அமரமதி, ச, எ ல், இருக்கிலும் மாதுர் பிதுர்வற்கமாறியிருக்கிலும், நாலுக்குடையவன் லக்கினம் இதற்குடையவன் இவர்கள் காரகர் ஆகிய இவர்களுக்குப் பிதுர்வற்கமறையிலும், சனி சேய், கூ க்குடையவனுங் கூடிமறையிலும் பிதுர்த்தானுதிபதியும் காரகனும் பாவக்கிரகத்துடனே கூடிப்பாவராசியிலிருக்கிலும், அல்லது பாவமத்தியமாகிலும், வெகுபாவர், கக, மீடத்திற் பலத்திருக்கிலும் ரவிபுடத்தில் எமகண்டக புடத்தைவாங்கிக் கண்டராசியிற் சனிவருங்காலமும் பிதுர்மரணம் எ-று (கசு)

## பிதுர்மரணகாலம்.

பதனமினன்சனிகோணத்தவரிவர்கண்மனைக்கும்
  பாருதையத்துக்குமெனிற்பக்ஷமொன்றிற்பவுமன்
முதுமகன்பாம்பறமூளொன்றேற்சூற்பொழுதொன்பதுவூழ்
  முடவனிவர்வற்கமெலாஞ்சரமுமொளிப்பதுவு
நிதிவிழிப்புக்கெய்தாதேலன்னிததேசத்தா
  ரிசிதவிரத்தருமனிவனிற்பதவர்க்கிடையா
யுதையவினமுருமாறக்காரகனும்பெல
  முற்றிடிற்பெற்றவற்கெமனென்றுதித்தல்புத்ரோதையமே.

(இ-ள்) ரவி சனி. ௫, ௯, க்குடையவர்கள் தத்தம்பாவத்துக்கும் சென்மலக்கினத்துக்கும், ௯, அ, க௨ ல், இருக்கில் புத்திரோதைய நாள் முதல் ஒருபக்ஷத்திற் பிதுர்மரணமென்ப-க, ௫, ௯ ல், ராகு சனி சேய் நேரிருக்கிற் புத்திரோதைய காலத்துக்குமுன்னே கெற்ப காலத்தில் மரணமென்ப ௯ ம் ரவிசனிவற்கமும் சரவற்கமாகிப் பதனத்திலிருக்கக் குருபாராதிருக்கில் அன்னிததெசாந்திர மரணமென்ப-பகனுதையமும், ௯ ம், ௯ க்குடையவனும் பாவமத்தியமாக லக்கினவற்கமெல்லாம் ஸ்திரீவற்கமுமாகப் பிதுர்காரகனுந்துற்பெலமாகில் பிதாவுயிர்க்கு எமனாகவுதித்த புத்திரோதையமென்பஎ-று. ()

## சகோதரமரணகாலம்.

உதையவன்பூணிதற்கிறையைச்சேய்சரகேந்திரத்தி
  லுறிற்கேட்டையீருண்பெண்மூன்றுதிக்கிலொருக்கோன்
மூதியவன்றுற்பெலமாகிப்பவமனனுக்கொளிக்கின்
  முன்பின்னிவர்க்கவமாகின்மூத்தவர்கட்கிறப்பாஞ்
சதுரணிமன்னவரிலுறச்சனிவிழிக்கிலுதையத்
  தவன்புடத்திலணிமனவன்றன்புடத்தைவாங்கு
மிதிலனலிற்பணியேற்குமிதிற்சனிபொன்னுறுநா
  ளிளையவர்கட்கிவைமாறின்மற்றதவர்க்கெனுமே.

(இ-ள்.) ரவி ௩ ல், இருக்க இதற்குடையவனும் செவ்வாயும் கேந்திரசரத்திலிருக்கினும், கேட்டை ௨ல ஆண் அல்லது ௩ ல், பெண் பிறக்கினும், சேய் சனிதுற்பெலமாகி கக, க்குடையவனுக்குமறையினும் இவன் பாவமத்தியமாகினும், மூத்தசகோதரம் மரணமென்ப ௩, ௪, க்குடையவர்கள் கூடிப்பாவராசியாகிய ௪, மிடத்திலிருக்கச் சனிபார்க்கினும், லக்கினுதிபதிபுடத்தில் ௩ க்குடையவன் புடத்தை வாங்கிக் கண்டராசியிலாகினும், சேய்பு —த்தில் ராகுபுடத்தைவாங்

கிடு கண்டராசியிலாகிலும் சனிகுரு வருநாளிலும் இளைய சகோதரம் மரணமென்ப-இவை உ. புடமுமாறிப் பார்க்கக்கண்டத்திற் சனிகுரு வருநாள் மூத்தசகோதரம் மரணம். (கஅ)

களத்திரமரணம்.

தவத்தினுக்காருதாயமிவைக்குளர்சுக்கிரனுஞ்
சஞ்சலமுற்றென்றிறையத்தலமிவர்கட்கொளிக்கி
லவத்தரிடைக்குள்ளாகிற்பாகவன்றேன்வேளா
யணையிலச்சேல்வெயில்பார்க்கவசிதனுறிலவமாய்க்
கவித்திடப்பொன்னணைதலெனக்கன்னியிலுற்றிருக்கிற்
காமனிலெட்டிறையிருக்கக்கசடர்விழித்திடிற்கார்
செவித்தலத்துக்கைந்தாகிச்சனியசுபர்ச்சேரச்
சிதன்விழிக்கிலெமன்றிசையிற்சேர்தல்களத்திரமே.

(இ-ள்.) உ ம், இவைகளுக் குடையவர்களும் சுக்கிரனும் துற்பெலமாகி லக்கினம் லக்கினேசன் உ, எ, இவற்றிற்கு மறையிலும், அல்லதுபாவ, மத்தியமாகிலும், விருச்சிகம், எ-மிடமாகிச் சுக்கிரனிருக்கிலும், மீனம் எ மிடமாகிச் சனியிருக்கரவி பார்க்கிலும், ச மிடத்தில் வெகுபாவர்கூட எ மிடம் கன்னியாகிக் குரு இருக்கிலும், எ ல், அக்குடையவனிருக்கப் பாவர்பார்க்கிலும், கடகம் எ, மிடமாகிச் சனிபாவரைக் கூடியிருக்கச் சுக்கிரன்பார்க்கிலும், களத்திரமாரணம்.|எ-று()

புத்திரர்மரணம்-புத்திரதோஷஞ்

சொல்லும்வகை.

கடத்திரமைந்தானமின்னவர்குருதுற்பெலமாய்க்
கசடரிடையுறிற்கலக்கிற்கல்லியமுட்கொளிக்கி
லுளத்திறைமாலசிதன்வற்கத்துறமனதுக்காறெட்
டுற்றதசுபம்மாகிலுள்ளிரணறெடுஞ்சேய்
விளத்தரவின்வற்கமுறின்மாரணம்புத்திரர்க்கா
மேவலரெட்டிறைவர்நிறமேவல்விழிப்பவமாய்
வளர்த்திடிலிப்பவர்க்குடையராகப்பேரதனல்
வருந்தனையர்தோஷமலையத்துளமாமுனியே.

(இ-ள்.) எ, ரு, உ, க்குடையவர்களும் குருவும் துற்பெலமாகிப் பாவமத்தியமாகிலும், அல்லதுபாவசகிதமாகிலும், அல்லது லக்கினத்துக்கும், ரு மிடத்துக்கும் மறையிலும், ரு க்குடையவன் புதன் சனி

வற்கமுற, ரு க்கு, சு அல், பாவரிருக்கிலும் ருல், சு க்குடையவனும் சேய் கேதுவுங்கூடியிருந்து அங்கிசமுஞ் செய்யிலும், புத்திரமரண மென்ப சு அ க்குடையவர்கள் ரு, மிடத்திலிருந்தும் பார்த்தும் வெகுபாவர் சேகரிக்கில் அப்பாவாதிபர் காரகங்கொண்டுபுத்திரதோஷம் இன்னத்தினல் வருமென்று சொல்லுக அகத்தியமாமுனியே. எ-று ()

மாதுர், பிதா, சிசு, மரணம், மரணகாலம்.

மாதுலர், சகோதரபெந்துவுக்குத் தோஷம்.

மாக்கோண்டீக்கோண்டார்நீர்வத்திரமொன்றலரி
மாகாதுமூன்றரவக்கோணுன்காய்வருதல்
வீக்காந்தாய்க்கிரவிலதுவவர்க்காஞ்சேய்க்கிடையாய்
விளம்புவரிங்நாட்டோஷம்விதுக்கலையெட்டிருக்கீ
தாக்கிதாண்டிருமூன்ருென்ருென்பதெண்ணுறைந்தீ
ராறிலறையதிற்பாதிமாதமுடுவெடிநேர்
போக்காதன்மாதுலர்சகோதரபெந்துவக்காம்
புகல்வதிந்நாட்கனுபவமெவ்வளவுபொருந்திடிலே.

(இ-ள்.) அசுபதி மகம் மூலம் கார்த்திகை உத்திரம் உத்திராடம் பூசம், பூராடம், சித்திரை, முதற்பாதமும், அத்தம் பரணி ரு ம்பாதமும், ஆயிலியம் கேட்டை ரேவதி ச ம் பாதமுமாகப்பிறக்க இதுநிசியாகில் மாதுர்மரணமென்ப பகலாகில் பிதாமரணமென்ப சந்தியாகில் சிசுமரணமென்ப இவற்றிற்குத்தோஷ காலமறியும்படி அசுபதிக்கு வருஷம் கசு, மகத்துக்கு வருஷம் அ, மூலத்துக்கு வருஷம் ச, கார்த்திகைக்கு வருஷம் ச, உத்திரத்துக்கு மீ சு, உத்திராடத்துக்குமாசம் க, பூசத்துக்கு மாசம் கூ, பூராடத்துக்கு வருஷம் ச, சித்திரைக்குமாசம் ரு, அத்தத்துக்கு வருஷம் க, பரணிக்கு மாசம் சு, ஆயிலியம், கேட்டை ரேவதிக்கு மாசம் ரு, ஏன்ப இந்த நட்சத்திரங்களிற் சொன்னபாத நீக்கி மற்றுள்ள ரு பாதமும் நேர்வைத்து இதற்குராப் பகல் சந்தியும்நேர்வைத்து மாதுலர் சகோதரபெந்துவுக்குத் தோஷஞ் சொல்லுக இந்தத் தினம்சொல்லுமிடத்து இந்தத்தோஷத் துடனே இரண்டாவது ஒருதோஷமுங் கூடில் இந்தப்படக்குத் தோஷஞ் சொல்லுக. எ-று. (உக)

மாதுர் அனுமரணம், களத்திரம் அனுமரணம்

ஆத்மவதைசெய்பவன்.

எவனவனைதாதையிவராதிபரோற்வற்கத்
தெய்தியிறப்பிறைகூடவெரியிலெட்டாயிதுவும்

புவனமகன்வற்கமுமாய்ப்பொன்விழிப்பெய்தாமற்
புக்கிடிற்றுயனுமரணம்புகல்வரிதுபோனு
மவனுமனையும்மாகிலனுமரணமவர்க்கா
யறைநதிடுவரவமானத்தரசன்விழிப்பாரத்
தவனனிரசதனீசகேந்திரத்திற்பவமாய்த்
தரிக்கிலிவனான்மவதைக்காய்த்தலத்துற்றவனே.

(இ-ள்.) ச, ம், கூ ம், இவற்றிற் குடையவர்களும் ஒருவற்க மேறி எட்டுக்குடையவனைக் கூடிச்செவ்வாய்வீடு, ச, அ. ஆகச் செவ்வாய் வற்கமு மாகிக்குரு பாராதிருக்கில் மாதுருஅனுமரணமென்க இந்தப் படி லக்கினேசனும் களத்திரேசனுமாக இருக்கில் களத்திரம் அனும ரணமென்க சுட்டுக்குடையவன் பார்க்க ரவிசுக்கிரன்நீசகேந்திரத்திற் பாவசகிதமாக இருக்கில் ஆன்மவதை செய்பவனென்க. எ-று. (உஉ

ஆன்மவதை, கொலைபாதகம், அவகீர்த்தி, சதாநித்திரை.

உற்றிடுமிவ்வான்மவதைக்குளபலத்தோடெட்டி
லுறல்பொனெனிலான்மவதைரந்திரத்தையுடையோ
வனற்றலைவள்முதலெழுவரிருப்பிடமூன்றாக
விரசதநீசத்தாகிலிவன்கொலைபாதகனு
மற்றலைவன்முற்பவனமதற்கதிபனவர்க
ளவமானவற்கமுறிலவகீர்த்திக்கவனுஞ்
சொற்றலமெட்டாறுவியத்துடையர்சுகன்வற்கத்
துற்றிடிலெவ்வேளையினுந்துயில்வதிவன்றொழிலே.

(இ-ள்) ரவிசுக்கிரன் நீசகேந்திரமிருக்க அல், குருவிருக்கில்ஆன மவதைக்கு ரந்திரியென்க-ரவியாதிசனிவரை எழுவரும், ங, வீட்டி லிருக்க இதிற்சுக்கிரன் நீசமேறிற் கொலைபாதக னென்க சநதிரனும் லக்கினமும் லக்கினேசனும், அ, க்குடையவன் வற்கமேறில், அவகீர் த்தி யுடைபவனென்க-உ-சூ-அ-கஉ-க்குடையவர்கள் சனிவற்கமேறில் எவ்வேளையிலும் நித்திரைசெய்பவ னென்க. எ-று. (உங)

மத்தியபானி, அனுசாரன்.

துயிற்கிறைவனிரவிசனிசோமனையுங்கூடிச்
சொற்றானவற்கமுறிற்சொல்லணிக்காதிபர்நஞ்
செயிற்றரவுசிதன்கூடியெட்டிலிதற்கிறைசேர்ந்
திருக்கின்மத்யபானனெனவியம்புவதிப்புவியாங்

கயிற்கதிரில்லவனசிதன்வற்கமுறின்மலினக்
கலக்கிசைவனெருக்கானுஞ்சவுசமுங்கண்டறியான்
வெயிற்கிரணவேணியவீதெட்டியல்பாமிதன்மேல்
விளம்புவதொன்பானதனுக்குள்ளவியல்பெனுமே.

(இ-ள்.) எட்டுக்குடையவனும் சனிரவி சந்திரனுங்கூடி உ ல்,இரு ந்துவற்கோத்தமமேறினும், உ, ரு க்குடையவர்களும் கேது சுக்கிரனுங்கூடி அ ல், இருக்க இதற்குடையவன் கூடினும், மத்திபபானம் பண்ணுவனென்ப ச ல், ரவியிருக்க நாலுக்குடையவன் சனிவற்க மேறில் மலினவத்திரனுமாகிச் சவுசாதிமுதலான சுசியில்லாத அனுசாரவானுகவும் இருப்பனென்ப-சூரியப்பிரகாசமான சடாமகுடத்தையுடையவா இஃது எட்டாமிடப்பலன். இதன்மேல் ஒன்பதாமிடத்துப்பலஞ்சொல்லுவோம். எ-று. (உச)

எட்டாம்பாவகப் படலம்

முற்றிற்று.

ஆகப்படலம்,உஉக்கு கவி-கசுரு

---

## ஒன்பதாம்பாவகப் படலம்.

பிதா இயல்பு.

இயல்பிதையமிதற்கிறைவர்காரகனுஞ்சுபமா
யிவர்கடம்மிற்கொளியாமலக்கினகேந்திரக்கோ
ணயன்முறத்கீதவாங்கிசத்திலதிகவற்கமேறி
நவாங்கிசமுச்சாங்கிசமால்நண்ணிலிவன்றாதை
தயவுடையனனசனரெட்சகனுமாகிச்
சௌபாக்கியனெனச்சதாயுவரையிருப்பன்
வியரிணம்ரந்திரம்பிதுராய்ச்சரச்சனியுற்றிடுநாள்
வேற்றாரிலிருப்பனன்றிக்காவலின்மேவுவனே.

(இ-ள்.) ரு, கூக்குடையவர்களும் பிதுர்காரகனும் சுபமாகி இவர்கள் தங்கள் தங்கள் பாவத்துக்குமறையாமல் லக்கினகேந்திரக் கோணிற்பெலமாகித் தேவதாங்கிசவற்கத்தில் அதிகவற்கமேறி நவாங்கிசத்தினும் உச்சாங்கிசமாகில் பிதாமனேதய வுடையவனுகிச் சகலசனரெட்சகனுகவும் தீர்க்காயுஉடையவனுகவும் இருப்பன் சு, அ, கஉ, கூ, சு, இவைசரமாகச்சனியிருக்கிற் புத்திரோதைய காலத்திற் பிதாதூரதேசத்திலிருப்பன் அல்லது காராக்கிரகத்தி லுட்படுவன். எ-று. (க)

தானங்கொடுப்பவன், உபதேசிகன்

சிவார்ச்சனை, தவவிரதமுடையவன்.

மேவலர்ப்பெற்றொளியாமற்கேந்திரகோணிவர்கள்
விழிக்கிறைவிப்பிரன்புகர்மால்வெகுபெலமாய்மேவி
லீவதிரசதமொடுபொற்றுதலைமுதலதானம்
யாவையுஞ்செய்திருப்பவனீன்றவன்பொன்னிருக்கப்
பாவவற்கத்தேறுமற்பணமுகத்துக்குடையோர்
பார்க்கிலுபதேசிகனுஞ்சிவார்ச்சனைபத்திறைக்காந்
தேவவற்கத்தியல்புமறிந்துரைப்பர்தவவிரதஞ்
செய்வதினனுகிலினிச்செப்புதல்பாக்கியமே.

(இ-ள்.) சத்துருவைக்கூடாமல் சூ அ கஉ ல் விழாமல் கேந்திரகோணுக் குடையவர்களும் உ க்குடையவனும் குருசுக்கிரபுதனும் வெகு பெலமாக இருக்கில் இரசதபொற்றலை முதலான தானம்யாவையுஞ் செய்வான் கூ ல் குருவிருக்கப் பாவவற்கமேறுமல் உ ௲ க்குடையவர்கள் பார்க்கில் உபதேசிகனும் ௰ க்குடையவன்பார்க்கில் சிவார்ச்சனையுடையனும் ரவிபார்க்கில் சிவதவவிரதமுடையவனும் இவவற்கங்கொண்டு இன்னதேவதாவிரதம் பண்ணுவனென்றுஞ் சொல்லுக இதன் மேலும் பாக்கியவிவரமுஞ் சொல்லுவோம். எ-று. (உ)

பாக்கியபலன்.

பாக்கியமொன்றன்னையிவர்தங்களின்மித்திராய்ப்
பாவகன்பொன்மாலிவர்கள்பார்ப்பதுபற்றுதலாய்
வாக்கிறைமன்மதத்திறைவர்வற்கம்வரிற்களத்தான்
மற்றெனின்மற்றதுவாற்பாக்கியம்வருதற்கிசைப்பார்
நோக்கினருற்றவரில்வெகுபெலவானுக்குளதாய்
நுவலும்வயதாதிதொட்டுநூற்றினுக்குமுரைப்பார்
போக்குவதப்பவர்கூடிலவர்க்கமைத்தகதிரிற்
புகல்வரழிவுக்குமினிப்பத்தியல்புக்குளதே.

(இ-ள்.) கூ க ச க்குடையவர்கள் தங்களில் மித்திரமாகிக் குருபுதி சுக்கிரவற்கமுமேறி உ எ க்குடையவர்கள் சகிதமுமாகில் களத்திரத் தாற் பாக்கியமென்க இந்தப்படிக்கு மற்றுள்ள வற்கமுங்கண்டுபாக்கியவரவு சொல்லுக இவர்களைக்கூடினவர் பார்த்தவரறிந்து இதில்அதிபெலவானை வைத்துப் பாக்கியத்துக்குநிலைசொல்லுக இதற்குக்கூடிய

பாவக்கிரகங்களை அறிந்து அவருக்கு அமைத்தகதிரைவைத்து அத
குச் செலவுசொல்லுக இதன்மேல்பத்தாமிடத்தியல்புசொல்லு

ஒன்பதாம்பாவகப்படலம்.

முற்றிற்று.

ஆகப்படலம் ௨௩-க்கு கவி ௱௬௬

---

# பத்தாம்பாவகப்படலம்.

## கர்மபலன்.

பத்திரவிசேயிருக்கிற்சியமதிகுருவைப்
பார்க்கிலனல்பானுவின்பின்பற்றிலிவன்பதியிற்
புத்திரகாரகன்விழிக்கக்க அலுறிற்பொன்னுதையம்
புக்கிலனைப்புகர்தனிக்கிற்புதனிரண்டிற்பொருந்தி
லுத்தரத்திற்செய்தொழிலிற்கணக்கிலுபாயத்தி
லுளத்திடன்மற்றதிலுமிவன்சமர்த்துள்ளவனுஞ்
சித்தமுடற்கிறைவருகன்னிருந்தராசித்
தேவனைநோக்கிடிலிவன்மந்திரியெனுமிச்செகமே.

(இ-ள்.) ௰ ல் சேய்ரவியிருக்கிலும், சிங்கமதி, குருவைப்பார்க்
ரவிக்கு ௧௨ ல் சேயிருக்கிலும்சிங்கத்திற்சேயிருக்கக் குருபார்க்கிலும் லக்கினத்தில் வியாழனிருக்கிலும் ௪ ல் சுக்கிரன் தனித்திருக்கிலும் ௨ ல் புதனிருக்கிலும் உத்தரத்திற்செய்தொழிலில்கணக்கில் உபாயத்தில் வனேதிடத்தில் மற்றவைகளில் சமர்த்துள்ளவனும் ௧ ௫ க்குடையவர்கள் புதனிருந்தராசி நாதனைப்பார்க்கில் மந்திரியாம். எ-று. (௧)

## இராசமந்திரி.

கம்மிறைவாக்குளத்திறைவர்கட்படக்கேந்திரிக்கிற்
கல்வியமாலுறவறத்திற்கனகமுறிற்கணக்கன்
சொம்முறுநேயத்திறைபைத்தோயவிதற்குடையோன்
சுக்கிரனுக்கெதிரிருக்கிற்றாதனிரண்டுதித்தல்
பம்மிறையாதவர்க்கொடுக்கமாகிலிரசதம்பொன்
பவுமனுங்கேந்திரந்தனிக்கிற்பதுமனுக்கானனத்தி
லம்மறலாய்ப்புகரிருக்கக்கன்னிதையத்துடையோ
ரக்கமுறின்மனர்க்கமைத்தனுகவியம்புவதே.

(இ-ள்.) லக்கினேசன் உ டு க்குடையவர்பார்க்கக் கேந்திரத்திலிருக்கிலும் க ல் புதனும் கூ ல் குருவுமிருக்கிலும் புதன் டு க்குடையவனேக்கூடி உ ல் இருக்க அதற்குடையவன் சுக்கிரனுக்கு எ ல் இருக்கிலும் புதன் க உ ல் அதுரவிமதிக்கு கஉ மிடமாக இருக்கிலும், சுக்கிரன் வியாழன்செவ்வாய் இவர்கள்மூவரும்கேந்திரங்களிற்றனித்திருக்கிலும் ச மிடம் செலராசியாகிச் சுக்கிரனிருக்க அது சூரியனுக்கு உ மிடமாக உ டு க்குடையவர்கள் பார்க்கிலும் இராசமந்திரியாம். எ-று.

அபிமானி இராசவெகுமான இராசசமானன்.

அம்புலியாதவனிவர்களிருபுறமுஞ்சுபமா
யரவறவுற்றிடமுதல்வன்கேந்திரகோணணையிற்
செம்பொனிசைக்கதிபதியாய்ப்பெலத்திருக்கத்துலையாய்ச்
சிதன்சிசுவிற்றனித்திருக்கிற்றிவிக்கிறைவன்புதல்வன்
கும்பமதிலல்லவெனிற்றேண்மதிநான்காகக்
கூடிலனல்விதுவுமொன்ருய்ப்பூண்டொழிலிற்குறுகி
லிம்பரதிலபிமானன்ராசவெகுமான
னெப்பொழுதுமரசரில்வாழ்ந்திருப்பனிவனெனுமே.

(இ-ள்.) ரவுமதிக்கு முன்பின் ராகுகேதுதவிரச் சுபக்கிரகங்களிருக்க லக்கினேசன் கேந்திரகோணத்தி லிருக்கிலும் ய க்குடையவன் குருவாகிப்பெலக்க டு மிடம்துலாமாகிச் சுக்கிரன் தனித்திருக்கிலும் சனி கும்பத்திலாவது விருச்சிகத்திலாவதுசந்திரனைக்கூடி ச மிடமாக இருக்கிலும் மதிசேய்கூடி ௲ ய ல் இருக்கிலும் அபிமானியாகவும் இராசவெகுமானியாகவும் எப்போதும் இராசசமான வாழ்வுடையவனுகவும் இருப்பன். எ-று. (௲)

அரசன்.

வனசமலர்க்கிறைமுதல்யாவருமாட்சியாக
வருவதுகேந்திரகோணமாகின்மதிக்கிசையிற்
கனகமுறன்முதலாகக்கல்லியமன்பார்க்கக்
கனல்பெலக்கிலிடபவிதுலக்கினமாய்க்கதுவத்
தனமனுச்சக்கோணுகச்சடத்ததிபன்பார்க்கத்
தனுவிறையைச்சாரிரிவன்றனையுதையத்தலைவன்
றினமனுக்கைந்திறைபார்க்கத்தேவவற்கத்தேறித்
தெசத்துறப்பூமகன்பெலக்கிற்செகத்தரசனெனுமே.

(இ-ள்.) சூரியாதிக்கிரகங்கள் யாவும் தத்தம் ஆட்சி யிருக்க அதுவே கேந்திரகோணமாகிலும், மதிக்கு ய ல் குருவிருக்க அதுவே லக்

கினமாக லக்கினேசன்பார்க்கச் சேய்பெலக்கிலும், லக்கினம் இடப மாகிச் சந்திரனிருக்க, உ க்குடையவன் குருவுடன்கூடி உச்சக்கோ ணிலிருக்க லக்கினேசன்பார்க்கிலும் வியாழனும்லக்கினேசனுங்கூடித் தேவதாங்கிசத்தில் அதிவற்கமேறி ம ல் இருக்கச்சந்திரனுக்கு கூ க்கு டையவன்பார்க்கச் செவ்வாய் பெலக்கிலும் செகத்துக்கு அரசன்.

அரசன்.

செகத்துதை தயத்தவனுயரச்சேய்குருவைக்கூடிச்
சேல்விலொருவொன் றிவர்மால்சனிவிழிக்கச்சேரி
லகத்தணரின்மா றிலன்றேலனேபதின்மராக
வந்தண்ணென்பதிலிறைவனுகியுறிலருகன்
முகத்திறைப்பொன்புகரிவர்கள்கேந்திரத்திலிருக்க
முதலி னுச்சக்கிரகமுறவதற்கிறையுமுதிக்கிற்
றகர்க்கதிப னுச்சம்வரவொன்றுப்பெண்குருவுஞ்
சனிதேளுநம்ரவியொருவுஞ்சாரிலரசெனுமே.

(இ-ள்.) லக்கினேசன் உச்சமேறச்சேயுங் குருவுங்கூடி லக்கினத்தி லிருக்க அதுவே மீனம் தனுசு மேடமாகிலும் ச கக க்குடையவர்கள் கிரகமாற அல்லது ம க்குடையவர்கிரகமாற கூ ல் குரு லக்கினேசனுகி யிருக்கிலும் உ க்குடையவனும் புதகுருசுக்கிரனும் கேந்திரங்களிலிரு க்க லக்கினத்தில் உச்சக்கிரகமும் லக்கினேசனுங் கூடியிருக்கிலும் லக்கினம் மகரமாகிச்சேயிருக்கக் கன்னியிற்குருவும் விருச்சிகத்திற் சனியுப் மேடத்தில் ரவியுமிருக்கிலும் அரசன். எ-று. (ரு)

நராதிபன்.

இல்லெமனிந் துவுமாய்மற்றவர்களொன்றைப்பார்க்கி
லிரசதமெட்டாறருகனிடையுனிதியிருக்கி
லல்லவெனிற்சந்திரனுக்காகிலனல்சனிமற்
றைவரையுநடுவிருத்தியபிமுகமாயொதுங்கிற்
சொல்லிடைவிட்டாதிமுதலன்றெனிற்சொன்முதனேர்ச்
சுதன்முதனேர்மற்றவராய்த்தோன்றலுடற்கருன்றி
னல்லவர்கேந்திரநான்குமுபசெயமற்றவரு
நாயகனுமபெலக்ன்னராதிபதியிவனென்பதுவே.

(இ-ள்.) சனிமதிகூடி ச ல் இருக்க லக்கினத்தை மற்றவர்கள் பார்க்கிலும் சூ ல் புதலும் எ ல், குருவும் அ ல் சுக்கிரனுக்கிரனு

மாக விருக்கிலும், அல்லது அந்தப்படிக்குச் சந்திரனின்ற ராசிக்காகி லும் இருக்கிலும் சனியேயிருவரும் அபிமுக ராசியாகவிருக்கமற்றவர் இடையிலேயிருக்க ஒருபாரிசமாக ஒதுங்கிலும் உ, மிடமுதல் ஒன்று விட்டு நேர்கிரகங்களிருக்கிலும் அல்லது லக்கினமுதல் இருக்கிலும், அல்லது உ, மிடமுதல் நேர் இருக்கிலும், அல்லது ரு, மிடமுதல்மற் றவர் இருக்கலக்கினேசன் லக்கினத்திலிருக்கிலும், சுபர் ச, கேந்திர மும் பாவர் உபசெயமுமாக லக்கினேசன்பெலக்கிலும் நராதிபன். ()

நராதிபன்.

நரனெனும்லக்கினமாகக்குருவுதிக்கபுலனலாய்
நாளிறைசுக்கிரனிருக்கநளினமன்சேய்நாற்காற்
கிரகமெனந்தழுவவண்ணல்பெலமாகிற்
கீடமுறச்சனிகுடம்பொன் * கிரியைபுதனுகி
லிரவிறையிலனலானிலிந்துவினனரியி
லிரசதம்பொன்னெடுந்துலேயிலக்கினமாயிருக்கிற்
சிரசிறைபார்த்திடக்குருக்கோண்சேரவனல்பெலக்கத்
திவியிலுச்சத்திற்றிரத்திற்செனிக்கினராதிபனே.

(இ-ள்.) நரபுருடராசியாகிக் குருவிருக்க அதுவே லக்கினமாக ச, மிடம்செலராசியாக அதிற் சுக்கிரனுகிலும் மதியாகிலும் இருக்க ய, மிடம் நாற்கால்ராசியாக அதிற்சேயாகிலும் ரவியாகிலும் இருக்க லக் கினேசன் பெலமாக இருக்கிலும், விருச்சிகச்சனியும் கும்பகுருவும் மேடபுதனுமாக இருக்கிலும், கடகச்செவ்வாயும், இடபமதியும் சிங்க ரவியும் லக்கினம் துலாமுமாகிக் குருசுக்கிரனிருக்கிலும் ரு கூ ல் குரு இலக்க லக்கினேசன்பார்க்கச் செவ்வாய்பெலக்கத் திவாகாலத்து உச் சத்தில் திரராசி லக்கினமாய்ப் பிறக்கிலும் நராதிபன். எ-று. (எ)

மகீபதி.

அதிபதிகாரகர்சுபராதிக்கிறைமற்றவரு
மாறீறெட்டுடையவற்கத்தல்லததிபெலமா
யதையமுதற்கேந்திரகோணத்தும்வற்கோத்தமத்து
முச்சநவாங்கிசத்துமும்பராங்கிசத்துன்னதத்துங்

* கிரியை மேடம்.

கதிருளபோதிற்றிரத்துநிசிகாலச்சரத்தும்
கடுவறுவாரத்தும்வியாழக்கமனத்திடத்து
மதிபெருகிவருங்காலத்தமுதமுதலாக
வரிலிவன்பேர்யாவருமகீபதியென்பதுவே.

(இ-ள்.) ரு ய, க்குடையவர்களும் புதகுரு சுக்கிரனும் லக்கினேச னும் மற்றவரும் சு, அ, கஉ க்குடையவர்கள் வற்கத்தேருமல் லக்கின முதற் கேந்திரகோணங்களிலும் வற்கோத்தமத்திலும் உச்சாங்வாங்கி சத்திலும் தேவதாங்கி சத்துன்னதத்தும்திவாகாலத்திரத்தும் நிசிகா லச்சரத்தும் விட கடிகை யற்றவாரத்தும் வியாழநடவடி வற்கத்தும் பூறுவபக்ஷத்தும் அமுதகடிகை லக்கினமாகச்செனிக்கில் மகீபதி. ()

இராசாதிபத்தியஞ் செய்பவன்.

மகிமகன்மூன்றிறைபொனென்றுக்கதிபனதிபெலமாய்
மாதுரிசைக்கிறைபார்க்கவனசனிருமருவிற்
சிகியரவுச்சோதையம்பொன்சேர்தலன்றேலனவிற்
சிரமாகவிவர்களுறத்தெசத்திறைபூணிருக்கிற்
சுகிர்தமுடையோர்கோணகேந்திரமுற்றுயரச்
சுக்கிரனுக்காறில்விதுத்தோன்றிலிவனுலகி
லகிதமிதமிதுவெனக்கண்டவரவருக்கான
வாக்கினையன்புடைமையுஞ்செய்தரசுசெய்ததிவனே.

(இ-ள்.) செவ்வாய் ந க்குடையவன் குருலக்கினேசன் இவர்கள் அதிபெலமாக இருக்க ச ய க்குடைய்பவர்கள் பார்க்கரவி மேடத்திலி ருக்கிலும், ராகுகேது உச்சமாக அதுவே லக்கினமாகிக் குருக்கூட அல்லது மேடவிருச்சிகம் லக்கினமாகி இவர்கள் கூடியிருக்க ய, க்கு டையவன் ந ல் இருக்கிலும் சுபக்கிரகங்கள் கேந்திரகோண உச்சத் திலிருக்கச் சுக்கிரனுக்கு சுல், சந்திரன் இருக்கிலும், இதம் அகிதம் அறிந்து இதத்துக்கு அன்புடமையும் ஆகிதத்துக்கு ஆக்கினையுஞ் செய்து இராசாதிபத்தியம் பண்ணுவன். எ-று. (சு)

இன்னதொழில்புரிவாரெனல்.

திவிமனன்சேய்பொன்சிலைக்கோண்டெசத்திறைமற்கமுமாய்ச்
சிரக்கோன்கேந்திரக்கோணத்தாகவிவர்சேரிற்
புவிமனராய்த்தேட்கோணப்பொன்மதிவிப்பிரராய்ப்
புதன்றுலைக்கோண்வைசியராய்ப்புகரிடபக்கோணே,

னலவில்வது சூத்திரராய்முற்போற்பெலமாக்கூடி
னற்குலமுஞ்செய்தொழிஞேர்நடத்துதல்சொற்றிடலால்
சவுரியினமாகவரிற்சங்கரசாதியுமாய்ச்
சற்பமெனினீசசருமாய்த்தொழில்செய்குவரே.

(இ-ள்.) சூரியன் சேய் குருவும் மேடம் சிங்கம் தனுசும் டுக்கு டையவன்வற்கமாகி லக்கினே சன்கேந்திரகோணத்திலிருக்க இவர்கள் கூடில் இராசவற்கமாகி ஆதிபத்தியம் பண்ணுவார்கள் கடகவிருச்சிக மீனமும் குருமதியும் முன்போல இருக்கில்விப்பிரவற்கமுமாகித்தமக் குரியதொழிலைச் செய்வார்கள் மிதுன துலாகும்பமும் புதனும் முன் போல இருக்கில் வைசியவற்கமாய்த் தமக்குரியதொழிலைச் செய்வார் கள் இடபகன்னிமகரமும் சுக்கிரனும் முன்போல இருக்கில் சூத்திர வற்கமாய்த் தமக்குரியதொழிலைச் செய்வார்கள் சனிவற்கமாகிற் சங்க ரசாதிவற்கமாய்த் தமக்குரியதொழிலைச் செய்வாகள் ராகுகேதுவாகி ல்நீசவற்கமாகித் தமக்குரியதொழிலைச் செய்வார்கள். எ-று. (ய)

இன்னசீவனமெனல்.

செய்தொழிலாதலனுகிற்போக்குவரத்தானைச்
சேவுகமாந்திரிகம்வயித்தியமலைகாடிடத்தில்
வைகியகாய்கறிபறித்தல்புல்லறுத்தலெடுத்தன்
மன்னவராசரியமிவையாமதிக்குப்பரிசி
நெய்யொழுகுதசைமாம்ஸமச்சமிவைமுதல
நீவிநவநீதமிவைவிக்கிரையக்கிரைய
மெய்சொலல்போற்சாடிசொலல்விப்பிரர்மன்னவர்கள்
வீட்டுடையவாசரியம்வேளாண்மைவழவே.

(இ-ள்.) முன்போலும் வந்தகன்மவற்கம் சூரியனுகில் சஞ்சாரம் ஆனைச்சேவுகம் மாந்திரிகம் வைத்தியம் காடுமலையிடத்திற் காய்கறி பறித்தல் புல்லறுத்தல் சுமையெடுத்தல் அரசர் ஆசரியம் இவைமுத லாகிய தொழிற்பிர வாத்தகத்தாற் சீவனஞ் செய்வார்கள்சந்திரனுகில் உப்பு அரிசி தசைமாங்கிசம் மச்சம் சீலைபுடவை வெண்ணை இவை விக்கிரையத்தினுலும் கோட்சொல்லுவதினுலும்அந்தணர் அரசர்வீட் டுடையவர்களது ஆசரியத்தினுலும் வேளாண்மையினுலும் உழவினு லுஞ் சீவனஞ்செய்வார்கள். எ-று. (கக)

இதுவுமது.

உழவுவிளைபுனக்குளமற்றுள்ளளவும்பூமியினு
லுழைத்தலிகல்ரசவாதங்களவுயிரையொறுத்த

லழலதனுற்செய்தொழிலாயுதத்தொழினெல்த்தொழிலாட்
டுத்தொழில்போர்த்தொழில்பயிற்றலருகர்தொழிற்காதல்
பழகியமித்திரர்ப்பகைத்தல்கடன்கொடுக்கல்வாங்கல்
பவுமனுக்காங்தேர்நடத்தல்படிப்புரைத்தல்பெருமை
யெழுதலிளங்கன்றிலேவிற்றிடறாதந்தரத்தாட்
டிழைத்தல்வழக்குரைத்தலெண்ணல்வாணிபமாற்கெனுமே.

(இ ள்) கன்மவற்கஞ் செய்வாயாகில் உழவு விளை புனக்குளம் இவைமுதலாகிய பூமியிலுழைத்தல் சண்டை ரசவாதங்களவுசாகரம் அக்கினிமுகத்திற் செய்யுந்தொழில் ஆயுதத்தொழில் நெய்த்தொழில் ஆட்டுத்தொழில் போர்த்தொழில் பயிற்றல் சகோதரவற்கத்தாற்றொழிற்செய்தல் மித்திரரைப் பகைத்தல் கடன்கொடுத்துவாங்கல் கடன் படல் இவை முதலானவையினுற் சீவனம் புதனுகில் தோநடத்தல் படிப்புரைத்தல் பாடல் படித்தல் எழுதல் செங்கன்று வளர்த்துவிற்றல் இலேவாணிபஞ்செய்தல் தூதுநடத்தல் அந்தர நாட்டியமாடல் வழக்குரைத்தல் சோதிடமுதலாகிய கணக்குரைத்தல் செட்டுவியாபாரஞ்செய்தல் இவை முதலானவையினுற் சீவனம். எ-று. (கஉ)

இதுவுமது.

மாற்கொருகண்ணழித்தசிவார்ச்சனைகுருவாத்திமைதே
வற்கவுபாசனைமுதற்பொன்வாணிபஞ்சேய்மனர்முந்
நூற்குடையராசரியந்தவவிரதமுதல
நோற்பனபுண்ணியத்தொழிலாய்நுவல்வதும்வேதியற்காங்
கோற்கதிபன்முதற்சிகியீறளவிவர்காரகமுற்
கூறினபோலவரவருக்குள்ளதுங்கூறுவராற்
சாற்குறியமுனியேமற்றவர்க்குளகாரகத்துஞ்
சாற்றினதல்லாலிவர்கடந்தொழிலுக்காமே.

(இ-ள்.) கன்மவற்கங்குருவாகில்சிவார்ச்சனை குருவுபதேசம் வாத்திமை தேவவற்க உபாசனைமுதலானவை பொன்வாணிபம் புத்திரர் அரசர் அந்தணர் இவர்களது ஆசரியம் தவவிரதமுதலானவை நோற்பனவாகிய புண்ணியக்கிரியை இவைமுதலானவைகளாற் சீவனம் சுக்கிரன்முதல் கேதுவரைக்கும் அவரவருக்கு முன்சொன்னகாரகத்தை வைத்துச் சீவனம்சொல்லுக ரவிமுதல் குருவரைக்கும்முன்சொன்னவையல்லாமல் அவரவர்காரகங்கொண்டும் சொல்லுக அங்குட்டப்பிரமாணமாகிய கும்போதையமுனியே. எ-று. (கங)

சீவனஞ்சொல்லும்வகை-சஞ்சாரசீவனம்.

காமமதற்கன்னையினிலதற்கிறையங்கிசத்திற்
கதுவுதல்பார்த்திடலுடையர்க்கமைத்திடுநற்கரும
நாமமவரவர்க்குளதாய்நன்மைதின்மைவிரிவாய்
நவில்வரிவருடனுகாராகுவுநன்னளினப்
பூமனும்பெலமாகத்தாட்பதிதுற்பெலமாய்ப்
புக்கமனைமனைக்கிறையும்புரக்கோனும்புரமுஞ்
சோமனிவனிறைசரமுந்தொழில்மனினன்கூடிற்
சொல்லுவர்தேசாந்தரமற்றுபையதிரத்துளதே.

(இ-ள்.) ம ல், இதற்குடையவனங்கிசத்தில் இருந்தவன், பார்த்தவன் இதற்குடையவனும் இவர்கட்குச் சொன்னதொழிலுங் கண்டு அவரவருக்குச் சொன்னநன்மை தின்மைக்குத் தக்கதாக சீவனஞ் சொல்லுக-இவர்களுடன்ராகுவும் சூரியனும் பெலமாக, கஉ, க்குடையவன் துற்பெலமாக, க சம், இவற்றிற்குடையவர்களும், சந்திரனும் இவனிருந்தராசிநாதனும் இவர்கள் சரவற்கமாகி ம க்குடையவனும் ரவியுங்கூடில் தேசாந்திர சஞ்சாரமென்க இதற்குச்சரமாகில் வெகு தூரசஞ்சாரம் திரமாகில் இருந்தவூரிப சஞ்சாரமென்க. எ-று. (கசு)

யாகஞ்செய்பவன், எதி ஆசாரன், அநாசாரன், முத்தன்.

உபையமதற்கோன்பதெட்டுக்குடையர்சுன்சேய்வதற்கத்
துற்றிடிலெக்கியகருமத்துடையவனுமுடுக்கோன்
றபணன்மகன்வற்கமுறமுற்பலத்தோடிதுவுஞ்
சாரிலெதிகர்மியெனச்சாற்றுவரத்தசமா
னவமலதுநல்லவர்ப்பெற்றிடிலிவனுசார
மல்லவெனில்மற்றதுவாமருகனனல்கூடிச்
சுபமுளமீன்றசமாகத்தோன்றிலறக்கோனுற்
சுபரொடுங்கூடின்மோக்ஷமுடையவரிவரெனுமே.

(இ-ள்) கூ ம க்குடையவர்கள் சனிசேய்வற்கமேறில் எக்கியகருமத்தையுடையரென்க-இப்பலத்துடனே சந்திரன் சனி வற்கமேறில் எதிகருமத்தையுடையவரென்க-ம க்குடையவன் சுபனுகிசுபவற்கமேறில் ஆசாரவானென்க பாவகற்கமாகில் அனுசாரவானென்க-மீனம் சுபமாகஅது ம மிடமாகிச் சேய்புதன் கூடிலும் கூ க்குடையவன் ச சுபருடன்கூடிலும் மோக்ஷத்தையுடையவரென்க. எ-று. (கரு)

சிவலோகம் பூலோகம் பிதுருலகம் பிரமபதம்

இவற்றையடைவோர்.

வரத்தினிற்பாகவனுதையமறையவன்பெண்மதியாய்
வருடையிலாங்கிசமான தனுப்புரமாய்வரினுந்
தரத்தினியுந்தணனுறினுஞ்சிவலோகமிரவி
தழலிவர்கள்பெலக்கினரருலகிலிரசதமு
நிரத்துகலைக்குளவிதுவும்பெலத்தல்பிதிருலக
நிதிமினத்துதையமுறினிமலருடன்கூடித்
திரத்துதையகேந்திரத்திற்றிவிக்கிரவிற்சரமாய்ச்
சீவனுறிலிவன்சேர்தல்பிரமபதமெனுமே.

(இ-ள்.) எல், சுக்கிரனும், கல், குருவும்கன்னியிற் சந்திரனுமாக லக்கினம்தனுவாகி மேடாங்கிசமேறினுப், லக்கினத்தில் வியாழன் இருக்கினுப் சிவலோகம் அடைவனென்க-கிரகாதிபரில்ரவிசேய்பெலக்கில் பூலோகத்தை அடைவனென்க சுக்கிரனும், பூருவபக்ஷத்துச் சந்திரனும் பெலக்கில் பிதிருலகம் அடைவனென்க-மீனலக்கினமாகிக் குருவிருக்கிலும் திவியிற்றிரமும் நிசியிற்சரமும் லக்கினமாககேந்திரத்திற் சுபருடன் வியாழன் கூடியிருக்கிலும் பிரமபதம் அடைவனென்க. ()

தேவருலகடைபவன் நரகஞ்சேர்பவன்,

வைகுண்டஞ் சேர்பவன்.

பதப்பதியுமிதற்கிறையுமுற்றவர்யார்த்தவரும்
பார்ப்பான்றன்வற்கமுறிற்பண்ணவராகுவராற்
சிதப்பதியுமெட்டீறுஞ்சுபராசியாகித்
தீதகலச்சுபர்பார்க்கிற்றேவருலகடைவர்
ம்தப்பதிமன்பெலக்கவசையீறிவர்கணீச
மடைந்திடினுநரகமைக்கோணேர்பூமிவான
முதற்பதிமற்றவைபுரமாய்மொழிவர்குருவற்க
முதற்புதனேச்சனிபார்க்கின்மாலுலகமுறலே.

(இ-ள்.) கஉ ம், இதற்குடையவனும் இதில் இருந்தவன் பார்த்தவனும் குருவற்கமேறில் தேவனுவனென்க-ய, அ, கஉ, ம், சுபராசியாகிப் பாவரிருக்கச் சுபர் பார்க்கில் தேவருலகத்தை அடைவனென்ா-எ, க்குடையவன பெலக்க, அ, கஉ, க்குடையவர்கள் நீசவற்கம் அடையில் நரகம் அடைவ னென்க . மேடக்கோண் முதல் நாற்கோணில் லக்கின மானதுகண்டு பூலோகம் அந்தர

லோகம்சொர்க்கலோகம் நரகலோகம் நேர்வைத்துச் சொல்லுக லக்கி னம் குருவற்கமாகிப் புதனிருக்க சனிபார்க்கில் வைகுண்டம் அடை வனென்க. எ-று. (கஎ)

சிரசாக்கினைமுதலானவை பீரங்கிமுதலான
வற்கத்தினுலாக்கினை.

உறக்கமுதறம்போக்குக்குடையபவருதையத்
துற்றதனுக்கிறையொடுங்கவிவர்களுயர்வாக
நிறக்கனலெட்டுறக்காலனிற்பதுமெய்யாக
நிதிவருக்கமறிற்சிரசாக்கினைநினைவுக்கீரு
றறக்கனகவினமுமுன்போலாதல்கராக்கினைக்கா
மாதாயம்பூண்செவிக்கீறடிக்காஞ்சேயமரப்
பிறைக்கிரவிக்கிடந்துயிலாய்ப்பிணிநடையெட்டிறையாய்ப்
பெறவியையுமறைந்திடிற்பீரங்கிவற்கமெமனே.

(இ-ள்.) அ கூ ய க்குடையவர்கள் பாவராய் லக்கினத்திலிருந்து பெலக்க இதற்குடையவன்மறைய நி க்குடையவன் செவ்வாயாகில் அ ல் இருக்கலக்கினத்திற் காலனுங்கூட குருவற்கம் இல்லாதிருக்கில் சிரசாக்கினையென்க இந்தப்படி ச ம் ய ம் ஆகில்கராக்கினையென்க ரூ ம் கக ம் ஆகில்செவியாக்கினையென்க கஉ ஆகில்காலாக்கினையென்க செவ்வாயும் தேய்ந்தொழிந்த மதியும்ரவியும் கூ அ ய க்குடையவர்க ளாகி அ ல் இருக்கலக்கினேசன்மறையில் பீரங்கிமுதலான வற்கத் தினு லாக்கினையென்க. எ-று. (கஅ)

நேத்திராக்கினை தளை சிறை காவல் பாசபந்தனம்.

கம்மதனுக்கெட்டாறீறேழுபையமிவர்கள்
கதிர்மதிபாகவனெடுங்கிக்கசடருமர்யொளிக்கச்
சொம்மதனுக்கறத்திறையையச்சுசிகூடிப்பார்க்கிற்
சுறவுதையக்கனலாய்மற்றவர்துயிருள்சோரத்
தம்மறையவன்பாராதுறில்விழியாக்கினையா
மாகவுறப்பதற்குமிவையாகவுரைத்திடுவார்
பம்மனன்முன்னண்ணவிதற்காய்சிகிசுன்னுகிற்
பகர்வதுகாராக்கிரகந்தளைசிறைபந்தனமே.

(இ-ள்.) கூ அ கஉ எ உ க்குடையவர்களும் ரவிமதிசுககிரனுங் கூடிப் பாவசகிதமாய்ப் பெலகீனமாகிமறைய ய க்குடையவன் செவ் வாயுடன் கூடிப்பார்க்கிலும் லக்கினம் மகரமாகிச் செவ்வாய் இருக்க மற்றுள்ளவர் பதனமாக வியாழன் பாராதிருக்கிலும் நேத்திராக்கினை யென்க இந்தப்படிக்கு அந்தந்த உறுப்புக்குத் தக்கபடி சொல்லுக

சந்திரனின்ற ராசிக்கும் லக்கினேசனுக்கும், சல் கேதுசனிநிற்கில்தளை சிறைகாவல் பாசபந்தனம். எ-று. (கக)

பத்தாம்பாவகப்படலம்.

முற்றிற்று.

ஆகப்படலம், உச, க்கு கவி உாகரு.

---

# பதினோராம் பாவகப்படலம்.

மூத்தசகோதரம் லாபம் ஆதாயம்

இவற்றின்பலன்.

தனத்திலுக்கொன்பதற்கியலிவ்வளவுள தாமினிமேற்
சாற்றுதல்பன்னொன்றதற்காந்தழலுமிதற்கிறையு
முணர்த்திரிக்கோதினபலன்போன்மேவிடன்மூத்தவற்கா
முதற்றெழிலுக்கிசைத்ததைப்பின்மொழிந்திடிலாபமுமாந்
தினத்தரிமனவர்முதலோர்க்கமைத்திடுகாரகத்தாற்
றிரவியவற்தளைக்குடையவியல்வதுஞ்செப்புவரா
லனத்தனுக்கோர்தனேபவினியாறிரண்டாமிடத்துக்
காவதுங்கேளென்றனன்றூராயிலாயுதனே.

(இ-ள்.) ம, மிடத்துக்குள்ள பலனிவளவென்ப-இதன்மேல், கக, மிடத்துப்பலன் கேட்பாயாக கக ம், இதற்குடையவனுஞ் செவ்வாயும் முன்சொன்ன ௩, மிடத்துப்பலன்போல வைத்துப் பார்த்துமூத்தசகோதர பலமுஞ்சொல்லுக-ம, மிடத்திற்சொன்ன தொழிற்சீவன பலத்தைவைத்து லாபபலமுஞ்சொல்லுக-சந்திராதித்தர் முதலாகிய கிரகங்களுக்குச் சொன்னகாரகத்தை வைத்து ஆதாயத்துக்கு விபரஞ்சொல்லுக அன்ன வாகனனுக்குப் புத்திரனானவா இதன்மேல் கஉ, மிடத்துப் பலமுஞ்சொல்லுவோமென்று திருவாய்மலர்ந்தருளினவன் வெற்றிமாலையை யணிந்தகூர்மை தங்கியவேலாயுதக்கடவுள்.எ-று. (க)

பதினோராம்பாவகப்படலம்

முற்றிற்று.

ஆகப்படலம், உரு, க்கு கவி உாகசு.

---

# பன்னிரண்டாம்பாவகப் படலம்.

சுகசயனம். தனச்செலவு, பதனம், வாகனம், இவற்றின்பலன்.

ஆயமதற்கானனமுமதற்கிறையுஞ்சுபமா
யதிபெலமுற்றிடிலதிகசுகசயனமாகுந்
தாயிசைசொல்லாயநவமொன்றிறைவர்பதனத்
தலைவரொடுங்கூடிடவித்தலத்தினிலுற்றிருக்கத்
தீயவர்பார்த்திடிற்றேடுந்திரவியமுஞ்செலவாஞ்
செலவுமின்னதாலெனவுஞ்செப்புவர்தாட்சிதனு
மாயவரினுறிலோந்திபல்லிநரர்பதன
மாமனையீறிறைவர்பெலமாய்வரில்வாகனமே.

(இ-ள்.) ௰௨ம், இதற்குடையவனுஞ் சுபவற்கமேறி அதிபெலமாகில் அதிகசுகசயனஞ்சொல்லுக. ௫-௯, ௰௨ ௰௧ ௯ ௧, இவற்றிற்குடையவர்கள் ௮ ௰௨, க்குடையவர்களுடன் கூடினும், இத்தானங்களிலிருக்கப்பாவர் பார்க்கினும் தனச்செலவுஞ் செலவுக்கு விபரமுஞ் சொல்லுக ௰௨ல், சுக்கிரன் பாவருடன் கூடில் பல்லி ஓந்தி நரர்பதனமென்ப ௰௨க்குடையவன் ௪, க்குடையவனைக்கூடி அதிபெலமாகில் வாகனவான். எ-று. (௧)

பன்னிரண்டாம்பாவகப்படலம்.

முற்றிற்று.

ஆகப்படலம், ௨௬, க்கு கவி ௨௱௰௭.

# கிரகசேகரப் படலம்.

கனகமயமாகியசந்தனக்கிரியாய்செந்தூர்க்
காதிபலக்கினமுதலீராறளவுங்கணித்தென்
மனதிசையயாவையுங்கையாமலகம்போல
வகுத்துவகுத்தெனக்கறியும்வகைவிபரமாக
வினதினதென்றடிக்கரும்பையிழைத்திகழாய்நறுக்கி [போற்
யின்னமிழ்திற்றேப்க்கதொவ்வொன் றெடுத்தெடுத்தீவது
சொனதெதுவென்றெடுத்துரைப்பேனடிமைபடைத்ததனூர்
றூண்டுகொண்டாளக்கடனென்றின்றெனக்கோதுதலே,

(இ-ள்.) சொர்னமயமாகிய சந்தனசைலத்தையுடையவர் செந்தூருக்கு ஆதிப லக்கினபாவகமுதல் ம்உம், பாவகம்வரைக்கும் நிதானித்து அடியேன்மனது இசையும்படி சகலபலாபலமுங்கையில் நெல்லியங்கனியைவைத்துக் காண்பதுபோல யாவையும் பகுத்துப்பகுத்து அறியும்படி விபரமாக அடிக்கரும்பை நன்ருயிழைத்து இதழிகளாக நறுக்கி இனிய அமிழ்திற்றோய்த்து ஒவ்வொன்ருய் எடுத்தெடுத்துக் கொடுப்பதுபோலத் தேவரீர் திருவுளம்பற்றினதை அடியேன் எதுவென்று விண்ணப்பஞ் செய்வது. சுவாமி அடிமைபடைத்து ஆளவேண்டுங் கடனுதலாற் றிருவுளம் பற்றினது. எ-று. (க)

ஓதியபாவகப்பலன்போலடியேனுக்கினிதா
    யுதையவன்றெட்டுள்ளவர்கட்குள்ளபலத்தியல்பு
நீதயவுற்றுரைத்திடெனத்தாழ்ந்துடற்றாசொடுக்கி
    நின்றொருகைவாய்புதைத்துநேரொருகைநீவாய்ப்
பாதமலர்த்தொட்டெனதுசாமிபராக்கென்னப்
    பக்குவங்கண்டுரைத்ததனுற்றிருவுளம்பற்றினனுன்
மாதவவாதவன்முதற்சேகரத்தியல்கேளென்ருன்
    மாதரிக்கொக்கலைப்பிளைசெம்மான்பிளைமாப்பிளையே.

(இ-ள்.) ம்உ, பாவகத்துக்குந் திருவுளம்பற்றிய பலன்போல அடியேனுக்கு இனிதாக சூரியாதிகிரகங்களுக்குள்ள பலமும் தேவரீர்கிருபைவைத்துத் திருவுளம்பற்றவேண்டுமென்று தெண்டம்பண்ணி உடலையும் வஸ்திரத்தையும் ஒடுக்கிநின்று ஒருகையினுல் வாயைப் பொத்தி ஒருகையைநீட்டிப் பாதமலர்தொட்டு எனது சுவாமி பராக்கென்று சமையமறிந்து விண்ணப்பஞ்செய்ததால் திருவுளமிரங்கி மகத்தாகிய தவசினையுடையவர் கேட்பாயாகவென்று கிரகசேகரப் பலத்தியல்பு திருவுளம்பற்றி யருளினவன் பராசத்திக்கு ஒக்கலைப்பிள்ளையும் மான்பிள்ளையாகிய வள்ளிநாயகிக்கு மாப்பிள்ளையுமாகிய சுப்பிரமணியக்கடவுள். எ-று. (உ)

ரவிசேகரப்பலன்.

பிள்ளைமதிமுதனேராயிரவியுடன்கூடிற்
    பேரியல்காரியசமர்த்தன்பெண்டிவர்வசப்படுவ
னுள்ளமதிபாங்கபடமுரைதிடமாம்வித்தை
    யுருவநல்லபுத்தியுரமாமரசருறவு
கள்ளமிலான்வெகுமானிபனகமுளனுகுங்
    களவசிபன்பந்துசனன்கருதலர்ப்பெற்றவனு
மெள்ளவுளான்மந்தபுத்திரிபுவசனும்விதுநே
    ரெமனளவுமாதவனேடெய்துதற்கிப்பலமே.

(இ-ள்) ரவியுடன் பூருவமதிகூடில் பிரபலவான், இயல்புடையவன் காரியசமர்த்தன், களத்திரவசியன், அடக்கமுடையவன், ரவிசேய் கூடில் கபடன், திடவசனுதிகன்-ரவிபுதன் கூடில் வித்தை, அழகு, புத்தி சரீரபெலம், இவையுடையவன்-ரவிகுருகூடில் அரசருறவுடையவன், பரிசுத்தன், வெகுமானி, தனவான். ரவிசுக்கிரன்கூடில் களத்திரவசியன், பந்துசன சத்துரு உடையவன்-ரவிசனிகூடில் அபகீர்த்தியுடையவன், மந்தபுத்தியுடையவன், சத்துருவசன் இவைமதி முதனேர் சனிவரை ரவிசகிதப்பலம் எ-று. (௬)

இதுவுமது.

பலமில்வசனம்புகழாமிராசசமானனுமாம்
 பைம்பொனுக்குள்ளதுவாஞ்சத்துருவிடன்பொன்பவனு
நலமின்மதிதேசாந்த்ரியாம்புதல்வர்தனமா
 நல்வசனன்மந்திரிசேனுபதியாநயனஞ்
சலவிரணநோய்போகந்தனகுலமாம்பந்து
 சனப்பிரிவுரோகிதனமூர்க்கனுமாந்தனமு
நிலைமையுங்கீர்த்தியுமுடையனுங்காந்திவித்தை
 நிலவனனேர்மால்புகராயநிற்பதினன்பலமே.

(இ-ள்.) ரவிமதிசேய்கூடில் வீண்வார்த்தை சொல்பவன் கீர்த்திமான்-ரவிமதிபுதன்கூடில் ராசசமானன் - ரவிமதி குருகூடில் ராசவெகுமானன், நல்லவன், பிரபுசேவையை யுடையவன்-ரவிமதி சுக்கிரன் கூடில் விடமார்க்கன், சத்துருஉடையவன்-பொன்னுடையவன், பாவஞ்செய்பவன், ரவிமதிசனிகூடில் குணகீனன், தேசாந்திரி-ரவிசேய்புதன்கூடில் புத்திரவான், தனவான்-ரவிசேய் குருகூடில் நல்லவசனன் மந்திரி, சேனுபதி-ரவிசேய்சுக்கிரன் கூடில் நயனசலவிரண ரோகமுடையவன், போகமுடையவன், தனமுடையவன், குலவான்-ரவிசேய் சனிகூடில் பந்துசனப் பிரிவுடையவன், ரோகமுடையவன், தனமுடையவன், மூர்க்கன்-ரவிபுதன்குருகூடில் தனம் நிலைமைகீர்த்தியுடையவன்-ரவிபுதன்சுக்கிரன்கூடில் சரீரகாந்தியும் வித்தையு முடையவன். எ-று. (௭)

இதுவுமது.

நிற்குணமனுசாரிதனனுமாந்தனமு
 நேத்திரரோகமுமறிவும்வசியமுமாகிருபர்
சொற்கினியதொழிற்றிடமாங்கெருவமபிமானங்
 துற்கருமமால்சனிநேர்சுக்கிரன்சுன்னளவு

மெற்கிறையோடிருபெயர்கூடற்கிதுவாமுப்போர்க்
கிதன்மேற்பொயகபடசமர்த்தெழுதலுமாமிசைபொன்
சற்குணமித்திரபுத்ரகளத்திரனனீகன்
சசியனன்மாலொடும்பொனெடுந்தபனனேச்சாருதற்கே.

(இ-ள்.) ரவிபுதன்சனிகூடில் குணகீனன், அனுசாரன், தரித்திரன் ரவிகுரு சுக்கிரன்கூடில் தனம், நேத்திரரோகம், அறிவு, சனவசியம் இவையுடையவன்-ரவிகுருசனிகூடில் ராசப்பிரியன் ராசப்பிரவர்த்த கன், மனோதிடன்-ரவிசுக்கிரன் சனிகூடில் கெருவி அபிமானி, துற்க ருமி-இவைரவியோடு இருபேர் கூடும்பலமாம்-ரவிமதிசேய்புதன்கூடில் பொய்யன், மனோகபடி, சமர்த்தன், எழுதவல்லபி-ரவிமதி சேய்குரு கூடில் கீர்த்திமான், தனவான், சற்குணன், புத்திரமித்திர களத்திர வான், சேனபதி-எ-று. (ரு)

இதுவுமது.

சார்பில்விடன்கட்பிணியனுஞ்சனவிரோதி
தரித்திரனும்புத்திதனம்ராசசமானனுமாம்
பாரியிடத்ததிப்பிரியன்பாடகனுங்குடிலன்
பண்டிதனுந்தாரசுதபாக்கியனும்பணஞ்சேய்
நாரிவையிலானுந்தாய்பிதிர்தாரகீன
னுஞ்சமர்த்தன்சுதந்தரனுநாடகவித்தையுமாஞ்
சோரமிரணம்விரணந்துற்றொழிலாமதிசேய்
சுக்கிரனேரனன்மால்சுடரொடுந்தோன்றுதற்கே.

(இ-ள்.) ரவிமதிசேய் சுக்கிரன்கூடில் பந்துசனகீனன்விடன் நயன ரோகி-ரவிமதிசேய்சனிகூடில் இனசனவிரோதி, தரித்திரன் ரவிமதிபு தன்குருகூடில் புத்திமான், தனவான், ராசசமானன்-ரவிமதிபுதன்சுக் கிரன் கூடில் களத்திரமோகி, பாடவல்லவன்-ரவிமதி புதன்சனிகூடில் குடிலன், பெரியவன்-ரவிமதிகுருசுக்கிரன் கூடில் களத்திரபுத்திரபா க்கியவான்-ரவிமதிகுருசனிகூடில் தரித்திரன், புத்திரகீனன், பொல் லாதவன்-ரவிமதிசுக்கிரன்சனிகூடில் மாதுர்பிதிர்தாரகீனன்-ரவிசேய் புதன் குருகூடில் சமர்த்தன், சுந்தரன்-ரவிசேய்புதன் சுக்கிரன்கூடில் நாட்டியவித்தை யாதிகன்-ரவிசேய்புதன்சனிகூடில் சோரம் ரிணம், விரணம், துற்றொழில் இவையுடையவன். எ-று, (சு)

இதுவுமது.

தோன்றல்களந்தனமதிகங்கிரகமுமப்படியாஞ்,
சுததாரகீனனுமாமிவையொடுபிச்சகனு

மீன்றுவசன்சுகிபோகியரசனுமாங்கெருவி
வித்தைநிதனததானும்விடனினவிரோதி
யீன்றவர்த்துவேசியுமாமின்மையவமான
மெய்துகளத்திரனுஞ்சேய்பொன்கவிநேரீழ
மான்றலைவன்சனிவரையூழுணதலுக்காநாற்பே
ராய்க்கூடலிதன்மேற்கேளசத்தியமாமுனியே.

(இ-ள்.) ரவிசேய்குரு சுக்கிரன் கூடில்வெகு புத்திரகளத்திரவான் தனவான் கிரகவான் ரவிசேய்குரு சனிகூடில் தாராசுதகீனன் ரவிசேய்சுக்கிரன் சனிகூடில் தாரசுதகீனன் பிச்சகன் ரவிபுதன் குருசுக்கிரன கூடில்மன்மதசுகி போகவான் தாராபதி ரவிபுதன் குருசனிகூடில் கெருவி வித்தையுள்ளான் தரித்திரன் ரவிபுதன் சுக்கிரன் சனிகூடில் விடன் இனசன விரோதி மாதுர்பிதுர்த்துவேசி ரவிகுருசுக்கிரன்சனி கூடில் தரித்திரன் அவமான களத்திரவான் இவைரவியுடன் மூன்று பேர் கூடும் பலனும் இதன்மேல் நாலுபேர்கூடும் பலமுங்கேட்பாயாக அகத்தியமாமுனியே. எ-று. (எ)

இதுவுமது.

அமர்வலவன்கோட்சமர்த்தனுந்தயையுதார
மபாக்கியனுஞ்சுதசீனசையற்பாயுவுமாந்
தமர்சனவிரோதியெத்தனுந்தாரகீனன்
சலரோகநேத்திரனுந்துராசையிச்சாடனுமாஞ்
சுமதிதனம்படைக்கலனும்பாவிசுராபானி
துற்கருமனுநிதனிசோரனுமாஞ்சுகளம்
விமலமதிவித்தையுமாமதிசேய்மால்பொன்னேர்
விதுநிதிசுக்கிரன்விசிதன்வெயிலிடைமேவுதற்கே.

(இ-ள்.) ரவிமதிசேய்புதன் குருகூடில் போர்வல்லவன், கோட்சமர்த்தன் ரவிமதிசேய் புதன்சுக்கிரன் கூடில் தயவுடையவன், உதாரமுடையவன், அபாக்கியவான் ரவிமதிசேய்புதன் சனிகூடில் புத்திரகீனன் துராசையுடையவன், அற்பாயுவுடையவன் ரவிமதிசேய் குருசுக்கிரன்கூடில் இனசனவிரோதி எத்தன்ரவிமதி சேய்குருசனிகூடில் தாரகீனன் நேத்திரசலரோகி ரவிமதிசேய்சுக்கிரன் சனிகூடில் துராசையுடையவன் பிச்சகன் ரவிமதிபுதன் குருசுக்கிரன்கூடில் நல்லபுத்தியுடையவன் தனவான் சேனுபதி ரவிமதிபுதன் குருசனிகூடில்பாவி, சுராபானி, துற்கர்மி ரவிமதிபுதன்சுக்கிரன் சனிகூடில் தரித்திரன் சோரன் ரவிமதிகுருசுக்கிரன் சனிகூடில் நல்லகளத்திர முடையவன், பரிசுத்தன் வித்தையாதிகன் எ-று. (அ)

இதுவுமது.

மேவலர்செற்றவன்விடனும்பிச்சகன்வத்திரமு
மெய்யுமழுக்குள்ளவனுமேன்மைவிதனமுமாய்ப்
பாவம்வதைசெய்வதற்குப்பயமிலனுந்தேவ
பத்தியபிமானனுமாம்பார்மகனேர்நால்வர்
நாவலன்பொன்கவிசனியுநணுமிதற்காமிதனமே
னவில்வதைவர்க்காந்தீர்த்தயாத்திரையெந்நாட்கும்
போவததிற்சோரமுமாமோனமெய்ஞ்ஞானமுமாய்ப்
பொசிப்புமிலதாமறுபேர்பொருந்துதற்கிப்பலமே.

(இ-ள்.) ரவிசேய்புதன் குருசுக்கிரன்கூடில் சேனாதிபதி விடன்ரவி சேய்புதன் குருசனிகூடில்பிச்சகன் சரீரமும் ஆடையும் அழுக்குடைய ன் ரவிசேய்புதன் சுக்கிரன்சனிகூடில் பெரியவன்மனோதுக்கிபாவி கொலைபாதகன் ரவிபுதன் குருசுக்கிரன் சனிகூடில் தேவபத்தியுடையவன் அபிமானி இவைரவியோடு நாலுபேர்கூடும்பலனும் ரவியுடன் ஐவர்கூடில் எந்நாளுந்தீர்த்தயாத்திரை சஞ்சாரமும்சோரமும் உடையவன் ஆறுபேர்கூடில் மௌன மெய்ஞ்ஞானமும் உடையவனாகிப் பொசிப்பும் இல்லாமல் இருப்பன். எ-று. (சூ)

மதிசேய்கரப்பலன்.

இப்பவுமன்முதலவருமிந்துவுஞ்சேர்தலுங்கே
ளியல்புதனநல்லகுலமிதையதிடவானுந்
தப்பறைசொல்பவன்றாதன்கவிஞனுமாஞ்சாது
சனப்பிரியன்புத்திரனுஞ்சகலசனத்துவேசி
துப்புரவில்லானும்பொல்லாக்களந்தாய்தந்தை
துவேசிதரித்திரனுந்துற்றொழில்பவமாதுலனுஞ்
செப்புதல்குரூரம்விடன்ரோகியுமாந்தீநேர்
செய்பொன்னளவும்மதியைச்சேருதற்கித்திறமே.

(இ-ள்.) மதிசேய்கூடில்பாக்கியம் தனம் நல்லகுலம் மனோதிடம் இவையுடையவன் மதிபுதன்கூடில் பொய்யன் தூதன் புலவன் மதி குருகூடில் சாதுமார்க்கன் வெகுசனப்பிரியன் புத்திரவான் மதிசுக்கிரன்கூடில் சகலசனத்துவேசி அனாசாரவான் மதிசனிகூடில் பொல்லா தகளத்திரமுடையவன் மாதுர்பிதுர்த்துவேசி தரித்திரன் மதிசேய் புதன்கூடில் துற்கர்மி பாவி தரித்திரன் மதிசேய்குருகூடில் குரூரவா க்குடையவன் விடமார்க்கன்ரோகி. எ-று. (ய)

இதுவுமது.

தற்குணமனுசாரஞ்சஞ்சாரந்தாரந்
தனையரிழப்பவனுமாதரவவமானியுமாஞ்
சொற்கணழகறிவுதனவானுந்துற்கருமி
துற்சனனனும்வெகுமானிசுகிகொடைநல்லவனு
நற்குலநற்புத்தியபிமானியுமாம்விருத்தை
நாயகன்வாசலகனும்புரோகிதனல்லவனு
மற்கிறையைக்கனலிகவிநேர்க்கவிசுன்வரைக்கு
மணைதலிதாமிதன்மேற்சொல்வதுவுமுப்பேரதற்கே.

(இ ள்) மதிசேய் சுக்கிரன் கூடில் சுதந்தரன் அனுசாரன் சஞ்சாரன் தாரசுதகீனன்மதிசனிகூடில் ஆதரவு அவமானமுடையவன் மதி புதன் குருகூடில் அபிராமவசனன் அழகு நேத்திரமுடையவன் அறிவுடையவன் தனவான் மதிபுதன் சுக்கிரன்கூடில்துற்கர்மி துற்சனன் மதிபுதன்சனிகூடில் வெகுமானி சுகிவிகரணன் நல்லவன் மதிகுருசுக்கிரன் கூடில் நல்லகுலம் நல்லபுத்தி அபிமானம் இவையுடையவன் மதிகுரு சனிகூடில் விருத்தைநாயகன் வாசாலகன் மதிசுக்கிரன் சனி கூடில் புரோகிதன் நல்லவன் இதன்மேல் மூன்றுபேர்கூடும்பலம்சொல்லுவோம்.

இதுவுமது.

பேரதிகநல்லபுத்திராசவசியனுமாம்
பிரக்யாதியழகுகளமிவனதுபெற்றிலனுஞ்
சீரலதிலாசைசதாநித்திரையாஞ்சிகியுந்
திடமனதுமுளனும்பொல்லாதகளத்திரனும்
வாரமறிவிசைதனலாபஞ்செவிமந்தமுமாம்
வங்கிசபூச்சியன்றனவானும்விடமார்க்கமுமாம்
போரகிகன்சனப்பகையாம்புவிமகன்மால்பொன்னேர்
புதன்கவியேமன்மதியைப்பொருந்துதற்கித்திறமே.

(இ-ள்.) மதிசேய் புதன்குரு கூடில் பிரபலன் நல்லபுத்தியுடையவன் ராசவசியன் மதிசேய்புதன் சுக்கிரன்கூடில் கீர்த்திமான் ரூபகளத்திரன் அழகில்லாதவன் மதிசேய்புதன் சனிகூடில் துராசை சதாநித்திரை உடையவன் மதிசேய்குருசுக்கிரன் கூடில்சுகி மனோதிடன் மதிசேய் குரு சனி கூடில் பொல்லாதகளத்திரமுடையவன் மதிசேய் சுக்கிரன்சனிகூடில் அன்பு அறிவு கீர்த்தி தனலாபம் செவிமந்தம் இவை உடையவன் மதிபுதன் குருசுக்கிரன்கூடில் பந்துசனபூச்சியன்

தனவான் மதிபுதன் குருசனிகூடில் விடமார்க்கன் மதிபுதன் சுக்கி ரன்சனிகூடில் வெகுகலகம் சனப்பகையுடையவன் எ-று. (க)

இதுவுமது.

திறற்கேடன்றுக்கிபொல்லா தவனுகுமதியைச்
சீவன்முதல்மூவர்களிஞ்சேரிலிவைதீரப்
பிறைச்சேர்வனல்வரெனிக்றனங்குலநல்லவனும்
யெரியவனுதுலனும்பிச்சகனுமீதுளனுங்
குறைத்தேகனுகுமைவர்கூடிலண்டத்தளவுங்
குணிக்குமறிவுடையனழுக்குடையவனுமிதன்மேற்
பொறைப்போதற்கொருதனையமான்முதனேர்கனற்பாற்
பொருந்துதல்கேளென்றனன்சந்தனப்பொருப்புற்றவனே.

(இ-ள்.) மதிகுருசுக்கிரன் சனிகூடில் திறற்கேடன்பொல்லாதவன், துக்கி இதன்மேல் ச பேர்கூடிற்பலன் அறியும்படிமதிசேய் புதன் குருசுக்கிரன்கூடில் தனவான் குலமுடையவன் நல்லவன் மதிசேய் புதன்குருசனி கூடில்பெரியவன் தரித்திரன் மதிசேய்புதன் சுக்கிரன் சனிகூடில் பிச்சகன் மதிசேய் குருசுக்கிரன் சனிகூடில் பிச்சன் மதி புதன் குருசுக்கிரன் சனிகூடில் அங்கீனன் மதிசேய்புதன் குருசுக்கி ரன் சனிகூடில் அண்டத்தளவுங்குணிக்கும் அறிவுடையவன் அழுக் குடையவன் இதன்மேல் பிரமாவுக்குப்புத்திரனுவா செவ்வாய்சேக ரப்பலமுங் கேட்பாயாகவென்று திருவாய்மலர்ந்தருளினவன் சந்தன சைலத்தையுடைய சுப்பிரமணியக்கடவுள். எ-று. (கரு)

சேய்சேகரப்பலன்.

தனமறிவுவயித்தியமாஞ்சற்குணஞ்சோதிடத்திற்
றபவுளனுந்தாதுருவாதத்தசடுற்றவனு
மனதிதமில்பாடகனும்வாத்யகடங்கீத
மனதுளனுமங்கமதில்வடுக்குறைமற்றுளனு
மினசனமில்விலைக்குளனுமிராசரிடத்துளனு
மிபல்புடையன்றனிவிடனுமின்பமில்புத்திரனுஞ்
சினமில்சனத்துவேஷனுமாந்தரித்திரனுங்கொடிய
சேவகனுங்களனுமானேரனற்சேருதற்கே.

(இ-ள்.) சேய்புதன் கூடில் தனவான் அறிவுடையவன்வைத்தியன் சேய்குருகூடில் சற்குணன் சோதிடப்பிரியன் சேய்சுக்கிரன் கூடில் தாதுருவாதி அசடன் சேய்சனிகூடில் மசனைஞ்சலி பாடகன் சே புதன்குருகூடில் வாத்திபசங்கீத நடப்பிரியன் சேய்புதன் சுக்கிரன் கூடில் அங்ககீனன் சேய் புதசனிகூடில் பந்துசனகீனன் விலைப்படுவ

சேய்குருசுக்கிரன்கூடில் அரசரிடத்து உறவுடையவன் சேய்குருசனி கூடில் இயல்புடையவன் தனவான் விடன் சேய்சுக்கிரன் சனிகூடில் துற்புத்திரனையுடையவன் சேய்புதன் குருசுக்கிரன் கூடில்சாந்தன் சனத்துவேஷி சேய் புதன்சனிகூடில் தரித்திரன் சேய்குருசுக்கிரன் சனிகூடில் கொகுயசேவகன் சேய்புதன் சனிகூடில் சொரன். எ-று.

புதகுருசுக்கிரசேகரப்பலன்.

சேர்தல்புதப்பலனிதுபாக்கியமறிவம்முளனுஞ்
 செப்புதல்வினோதவிதம்பாடகனுஞ்செஞ்சொற்
சாரசஞ்சோதிடந்தனவான்சத்துருவற்றவனுஞ்
 சௌபாக்கியவானுஞ்சத்தியன்விடனுந்தனியாஞ்
சூரனுமாங்குருநேரோய்த்தூதனையுற்றிடற்காஞ்
 சுக்கிரனேர்பொன்னையுறிற்சொம்மழகாஞ்சுதனி
லாரெனலாஞ்சவுக்கியமாமசிதசிதற்சேரி
 லவமானகளந்தாசரழிவதுமாவதுமே.

(இ-ள்.) புதன்குருகூடில்பாக்கியம் அறிவு அழகு இவையுடைய வன் புதன்சுக்கிரன் கூடில்வினோதவசனன் பாடகன் புதன்சனிகூடில் கல்விமான் கெணிதன் தனவான் சத்துரு இல்லாதவன் புதன்குருசுக் கிரன்கூடில் சௌபாக்கியன் புதன்குருசனிகூடில் சத்தியவாக்குடை யவன் விடமார்க்கன் புதன்சுக்கிரன் சனிகூடில் தனவான் புதன்குரு சுக்கிரன்சனிகூடில் சூரன் இவைபுதசேகரம் குருசுக்கிரன்கூடில் தன வான் அழகன் குருசனிகூடில் புத்திரகீனன் குருசுக்கிரன் சனிகூடில் சௌக்கியமுடையவன் இவை குருசேகரம் சுக்கிரன்சனிகூடில் அவ மானகளத்திரமுடையவன் ஆவதும் அழிவதுமானதாசி தாசருடை யவன். எ-று. (௧௫)

கிரகசேகரவற்கத்தொகை.

மாவரசன்கூடலறுபத்திரண்டுவற்க
 மதிக்கதனிற்பாதிபதினன்கனற்குமாற்கே
மூாவதொருமூன்றேகமந்தணற்குஞ்சிதற்கு
 மசிதனுக்குப்பூச்சியமாமலரிமுதலிவர்கள்
பாவகத்திலுற்றதுங்கண்டதற்குடையபலமிப்
 பலத்துடனேசேகரமாய்ப்பகர்ந்திடுவரிதன்வம
னுவுதையவாணிமறைநந்தனயோகத்தா
 னவில்வதுங்கேளென்றனனென்னளினமனத்தவனே.

(இ-ள்.) ரவிசேகரவற்கம் சுஉ மதிரேகரவறகம் ருக சேய்சேகர வற்கம் கசு புத சேகரவற்கம் எ குருசேகரவற்கம் ரு சுக்கிரசேகரவற்கம் க ஆக கிரகசேகரவற்கம் கயஅ சனிசேகரம் பூச்சியம் இவர்கள் சேகரபலத்துடனே இவர்கள்கூடும் பாவகவற்கம் காரகவற்கமுங்கூட்டிப் பலஞ்சொல்லுக நாவுதையவாணி நாயகனுக்குப் புத்திரனுனவா இதன்மேல் யோகாதிசயப்பலமுங் கேட்பாயாகவென்று திருவாய்மலர்ந்தருளியவன் என்னுடைய இதையசெந்தாமரசபுஷ்போதயனுகிய சுப்பிரமணியக்கடவுள். எ-று. (கசு)

கிரகசேகரப்படலம் முற்றிற்று.

ஆகப்படலம் உஎ-க்கு கவி உாருரு.

---

# யோகாதிசயப்படலம்.

தவமுனியேயோகபலத்ததிசயங்கேளென்ற
சடாக்கரனையகத்தியனுந்தாழ்ந்தெவர்க்குமுதலாஞ்
சிவகுருவேயிரவிமுதற்சேகரத்துள்ளனவுஞ்
சிறிதுசிறிதாய்வகுத்துச்சிறியேனுக்கறிய
நவரசசெம்பாகமொருநாட்குமுதத்தூறி
நனையவிழ்ந்தூற்றுவபோலுநவின்றனைப்பாலிப்
புவனமதிலிவன்யோகபுருடனெனுமார்க்கம்
புகலெனுமுன்னவன்மனதன்புருகவுரைத்தனனே.

(இ-ள்.) தவசினையுடைய அகத்தியமாமுனியே யோகாதிசயப்பலமுங்கேட்பாயாகவென்று திருவாய்மலர்ந்தருளிய சடாக்ஷரரூபனுக்குச் சித்தம்வரும்பொருட்டு அகத்தியமாமுனிவனுந்தெண்டம்பண்ணியாவர்க்குந் தெய்வமாகிய சிவனுக்குங் குருவாகியவர் சூரியாதிசேகரப் பலனையுஞ் சிறிதுசிறிதாக வகுத்து அடியேனுக்குத் தெரியும்படி நவரசசெம்பாகம் ஒருநாட்குமுதமலரிடத்திலூறி முகையவிழ்ந்து ஊற்றுவதுபோலத் தேவரீர் திருவுளம்பற்றினது சரி இதன்மேல் பூமியினிடத்தில் இவன்யோகபுருடனென்றுசொல்லுந்தன்மை அறியும்படி திருவுளம்பற்றவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்யாமுன்னம் அவன் மனதுருகும்படி திருவாய்மலர்ந்தருளினவன் சுப்பிரமணியக்கடவுள்.

பிரமயோகம் விஷ்ணுயோகம் உருத்திரயோகம்

அம்பிகாயோகம் லாமண்ணியயோகம்.

மனத்தினுக்கைந்தினில்மதிபொன்பாவகனுருகூட
மாலிறைபத்துறிலறத்தில்வாக்கனையர்சேர

தனத்திசைமன்னுறவிறையாயத்துறிலொன்றுச்சமீ
றனைப்பொன்னுறவிறைபெலக்சிற்சடத்திறையந்தணனு
முனர்ப்பதியிலுறத்தாய்மன்பார்க்கிலனையறத்தோர்
முற்பதியிலுறவணிமன்னுச்சமுறின்முதலா
யனத்துவசனரிபரமனம்பிகைலாமண்ய
மைந்தளவுநேர்யோகமவ்வருஷத்ததுவே.

(இ-ள்.) கூல் மதிகுருசுக்கிரன்கூடலக்கினேசனும்புதனும் யல்இருக்கில்பிரமயோகம் இந்தயோகம் ஜெனனமான வருஷமுதல் நடக்கும் கூல் உ ச க்குடையவர்களிருக்க உல் ய க்குடையவனிருக்க லக்கினேசன் யக ல் இருக்கில் விட்டுணுயோகம் இது உம் வருஷமுதல் நடக்கும் லக்கினத்தில் உச்சக்கிரகமிருக்க வியாழன்கூட லக்கனேசன் பெலக்கில் உருத்திரயோகம் இது ஙம் வருஷமுதல் நடக்கும் லக்கினேசனுங்குருவுங்கூடி லக்கினத்திலிருக்க ச க்குடையவன்பார்ககில் அம்பிகாயோகம் இது சம் வருஷமுதல் நடக்கும் ச கூ க்குடையவர்கள் லக்கினத்தில் இருக்க ங க்குடையவனுச்சமாகில்லாமண்ணியயோகம் இது ரும் வருஷமுதல்நடக்கும். எ-று.                                        (உ)

சற்பயோகம் கெந்துருவயோகம்

தூமயோகம் சித்திரயோகம் தீபயோகம்,
வருபுரக்கோன்கேந்திரம்பூணிற்றவன்பொன்னுறிற்கோன்
மாழையுறவொருவினனென்பதின்மதியுண்மனவ
*னருகருறிலெட்டிறையங்கிசனறத்தக்கோனே
டரசுயரிலிசைத்துலைசுன்னுறவனலங்கிசக்கோன்
றருமிலிறைக்கைந்தறம்பொன்புகருறிலத்தனக்கோன்
றவத்தவனுயத்திவனுச்சத்துறிலுள்ளவன்கண்
புரமனங்கிஷமுறில்யோகமரவியக்கர்மிருகம்
புகையோகஞ்சுடராருய்ப்புகல்பதினென்றதற்கே.

(இ-ள்.) லக்கினேசன்கேந்திரத்திலிருக்க ஙல் கூ க்குடையவனுங்குருவுங்கூடில் சற்பயோகம் இது சும் வருஷமுதல் நடக்கும் லக்கினேசனுங் குருவுங்கூட மேடத்தில் ரவியிருக்க கூ ல்மதியிருக்க ரிக்குடையவன் ங யக இருக்கில் கெந்துருவயோகம் இது எ ம் வருஷமுதல் நடக்கும் அ க்குடையவனுடைய அங்கிசாதிபதி கூ ல் இருக்க இதற்குடையவனும் லக்கினேசனும் உச்சமாகில் மிருகயோகம்

---

* அருகர்-சகோதரஸ்தானங்கள்.

இது அம் வருஷமுதல்நடக்கும் துலாம் ய மிடமாகிச்சனி யிருக்க செவ்வாயுடைய அங்கிசாதிபதியிருந்தராசிநாதனுக்கு ௬ கூல் குருசுக்கிரன் இருக்கில் தூமயோகம் இது கூம் வருஷமுதல் நடக்கும் உ க்குடையவன் கூல் இருக்க கூ க்குடையவன் யகல் இருக்க யக க்குடையவன் உச்சமாகில சித்திரயோகம் இது யம் வருஷமுதல் நடக்கும் லக்கினேசன் அங்கிசாதிபதி ௬ல் இருக்க ௬ க்குடையவன்பார்க்கில் தீபயோகம் இது யகம் வருஷமுதல் நடக்கும். எ-று. (ந)

சண்டிகாயோகம் கார்முகயோகம் சடாமகுடயோகம்;

வீணையோகம் இராசயோகம்.

ஒன்றுதிரமாய்ப்பகைமன்பார்க்கவறத்திரவி
யுதரனங்சனங்கிசமிம்மூன்றுமொன்றாயிருக்கின்
முன்றலைவனுச்சம்வரப்பத்துளரின்மாரின்
மூன்றரக்கோனிற்கவுச்சன்முறனுறச்சேய்பார்க்கிற்
பொன்றனிலாயத்திறையாயெட்டிறையுச்சமுமாய்ப்
பூணுறிற்பத்திறைவனங்ஷத்தறமனுங்கட்புரத்தி
னின்றிடில்யோகங்காளிவிற்சடையாழ்நிருப
னேர்பனிரண்டாய்ப்பதினறளவுநிகழ்த்துவதே

(இ-ள்.) லக்கினம்திரமாக கூ க்குடையவன்பார்க்க கூல் ரவியும் கூ க்குடையவனுடைய அங்கிசகனும் அவன் அங்கிசமுங் கூடில்சண்டிகாயோகம் இது யஉ ம் வருஷமுதல்நடக்கும் லக்கினேசன் உச்சமாக ய ௬ க்குடையவர்கள் கிரகமாறில் கார்முகயோகம் இது கரு வருஷமுதல்நடக்கும் ருல் கூ க்குடையவளிற்க க ல் உச்சக்கிரகமிருக்க செவ்வாய்பார்க்கில் சடாமகுடயோகம் இது யச ம்வருஷமுதல் நடக்கும் உ ல் யக க்குடையவர்நிற்க அ க்குடையவன் உச்சமாகி ரு ல் நிற்கில் வீணையோகம் இது யரு ம்வருஷமுதல் நடக்கும் ய க்குடையவன் கூல் அங்கிசம்பண்ணி அதற்குடையவனைக்கூடி உ க ல் இருக்கில் ராசயோகம் இது யசு ம் வருஷமுதல் நடக்கும். எ-று. ()

அறுவகை இராசயோகம்.

வதைக்கணியிற்றழல்சொலுச்சத்தினனறம்பொன்மதியு
வருவிலிரண்டிசையாயமனரொருவரேனும்
விதுத்தனக்குக்கேந்திரமாய்ப்பவமுளிறைகுருவாய்
மேவிலிவன்வாக்கறமணுகவிவன்மேவு

நிதிப்பதியிலறக்கோனங்கிசமனுநிலகிமா
ணிலமகனுமாட்சியுச்சக்கேந்திரநின்றிலகின்
மூதற்றிரம்பாகவன்பொன்மற்றதிறைபெலக்கிலிறைப்பேர்
மொழிவதுகேர்பதினேழுக்கிவைமுழுதுமுளவே.

(இ-ள்.) ம்ல், சேயிருக்க ரவிஉச்சனுகி உ-ல், இருக்க, சூல், குருமதியிருந்தபோதிலும், உ-ம்-மக-க்குடையவர்களில் ஒருவன் மதிக்குக் கேந்திரமாக, ரு-மக-க்குடையவன் குருவாகி இருக்கிலும் உ-சூ-க்குடையவன் குருவாகி உ-ல், இருக்க இதில் சூ-க்குடையவனுடைய அங்கிசகன்கூடிலும், ராகுபவனனுயுசெவ்வாயும் ஆட்சி உச்சகேந்திரத்திலிருக்கினும், லக்கினம் திரமாகி சுக்கிரன்நிற்க லக்கினேசன் பெலக்கிலும், லக்கினம் சரஉபையமாகக் குருநிற்க லக்கினேசன் பெலக்கிலும் இராசயோகம் இது மஎ-ம், வருஷமுதல் நடக்கும். எ-று. (ரு)

நட்சேத்திரயோகம், பாசயோகம், மின்யோகம்,

ஜெலயோகம், இராசயோகம்.

ஏழதனுக்கைந்திறைவனுச்சமுமாய்ப்புசரோ
டெய்தவிறைகேந்திரிக்கிலிரசதமெட்டாறில்
வாழ்வினராய்மூன்றறக்கோன்மருவிலிறையனைமான்
வல்வுமின்மானுடன்கூடிமானமுறத்தருமா்
வீழ்வதல்லாதுநிற்கோணகேந்திரமேவிறையை
விப்பிரன்பார்த்திடவுதையமுறிற்சேல்வில்
லூழ்மதிபொன்னென்றில்மீன்பாசமின்னீராச
யோகமிவைமுழுதுமெட்டோடொனபதனுக்குளவே.

(இ-ள்.) மக-க்குடையவன் உச்சமாகிச் சுக்கிரனைக்கூட லக்கினேசன் கேந்திரிக்கில் நட்சேத்திரயோகம்-அ-ல், சுக்கிரன்-சுல்,சுபர்,ரூல், சூ-க்குடையவன் நிற்கில் பாசயோகம்-ச க்குடையவனிருந்த ராசிநாதனைலக்கினேசன்கூடி ம-ல் இருக்கச் சுபர் கேந்திரகோணி லிருக்கில் மின்யோகம்-லக்கினேவன் கேந்திரகோணிலிருக்கக் குருபார்க்க லக்கினத்தில் உ ச்சக்கிரகமிருக்கில் செலயோகம் தனுமீனம் லக்கினமாகிக் குரு மதிரவிகூடில் ராசயோகம் இவையெல்லாம், மஎ-ம்,வருஷமுதல் நடக்கும்-எ-று. (சூ)

கேதாரயோகம், பூதலயோகம், அங்குலியோகம்,

அசுரயோகம், கஜயோகம்.

ஒன்பதிலந்தணள்விதுவுக்குதையம்வற்கோத்தமமா
யொன்றிறையின்றவனையுறிற்பவமன்னுச்சமாக

மன்பதிமனிரசதமுமெய்யுறிற்மத்திறைபை
மாதிறைபங்கிசமனுச்சமாய்க்கூடில்வாக்கின்
முன்பிதிர்மன்னவர்களங்கிஷத்திறைவருஞ்சேர்ந்துறைய
முப்புரிமார்பினன்பார்க்கினன்முதற்கிறைநோக்குறவே
ளின்பதியிந்தணனுறிற்கேதாரமகிவிரற்கு
ரிபயோகமறமூன்றதேறுதனுன்கெனுமே:

(இ-ள்.) மதிக்கு, கூ-ல், குருஇருக்க லக்கினம் வற்கோத்தமமாக இதற்து, சு-ல், லக்கினேசன் இருக்கில் கேதாரயோகம்-இது, ௰அம் வருஷமுதல்நடக்கும் ௰க, க்குடையவன் உச்சமாக, ௫, க்குடையவன்சுக்கிரனைக்கூடி க-ல், இருக்கில் பூதலயோகம் இது ௰கூம் வருஷமுதல் நடக்கும் ௰-க்குடையவனை ௨ க்குடையவனுடைய அங்கிசாதிபதி இச்சமாகிக்கூடில் அங்குலியோகம் இது, உ௰ம் வருஷமுதல் நடக்கும் உ-ல், க-கூ-க்குடையவர்களும் இவர்கள் அங்கிசாதிபருங் கூடி இருக்கக் குருபார்க்கில் அசுரயோகம் இது உக-ம், வருஷமுதல் நடக்கும் எ-க்குடையவனும் மதியும், ௰க-ல், இருக்கலக்கினேசன்பார்க்கில் கஜயோகம் இது உஉ ம், வருஷமுதல் நடக்கும்-எ-று. (எ)

மாரியோகம், தெண்டயோகம், ரிஷபயோகம்,

சக்கரயோகம், கந்துகயோகம்.

நான்கினுக்கேழிறைமதியும்வேளுறமுற்சரமாய்
நண்ணுதலவ்விரவாகினண்டுதையமாக
மான்கணிமாலைச்சேரப்பொன்மதிபார்த்திடிற்பொன்
மதிக்கறங்கேந்திரத்திவன்சேய்க்கணன்புகர்வந்தணையிற்
கோன்கணுக்கெட்டுறொருபத்துறவக்கோன்முற்
குடிலுறிற்றாய்நவமுறையங்கோனிசைமான்குடும்பத்
தான்கதுவின்மழைகதையானரிகந்துகயோகத்
தாமிருபான்மூன்றதனோடாவதுமைந்தளவே.

(இ-ள்.) ௰-க்குடையவனும் மதியும்கூடி, எ-ல், இருக்க லக்கினம் சரமாகநிசிகாலத்து உதையமாகில் மாரியோகம் இது, உ௩-ம், வருஷமுதல் நடக்கும் லக்கினம் கடகமாகப் புதன் கன்னியிலிருக்கக் குரு மதிபார்க்கில் தெண்டயோகம் இது, உ௪-ம், வருஷமுதல் நடக்கும் மதிக்கு, கூ-ல், அல்லது கேந்திரத்திற் குருவிருக்கப் புதனுக்கு, ௰கல் சுக்கிரன் இருக்கில் ரிஷபயோகம் இது, உ௫-ம், வருஷமுதல் நடக்

கும் கூ-ல் லக்கினேசனிருக்க, ம-ல், ராகுவிருக்க இதற்குடையவன் லக்கினத்திலிருக்கிற சக்கரயோகம் இது உகூ-ம் வருஷமுதல் நடக்கும் சு-ல், லக்கினேசனும், கூ-ல், ம க்குடையவனும் லக்கினத்தில் உ, க்குடையவனும் இருக்கில் கந்துகயோகம் இது உஎ-ம், வருஷமுகல் நடக்கும்-எ-று. (அ)

சரயோமம், சந்திரிகாயோகம், மேகயோகம்,

வாவியோகம், பூதரயோகம்.

ஐந்தினுக்கைந்திறைபார்க்கப்பொன்மதிபாகவனு
மக்கமுறிற்சுக்கிரனேடறக்கோனிற்கரசன்
வந்துறவைந்தனற்சேரின்போக்கிறையின்மேவ
மறையவனுக்கணிபுகருக்கறமிருட்கோன்மருவி
லிந்திரவிசனிவேளேந்தணனுறவக்கவிபொன்
னெட்டுறமாலலவனுறச்சரமுறையமெய்திற்
சுந்தாருள்ளறம்வேள்பத்துறிற்கோல்சந்திரிகார்
சனேசிலேயோகந்தினப்பேர்த்தொகைமுழுதுமுளவே.

(இ-ள்.) உல், குருமதிசுக்கிரன் கூடியிருக்க, கூ-க்குடையவன் பார்க்கில் சரயோகம் கூ-க்குடையவனிருந்தராசிநாதன் சுக்கிரனைக் கூடில், சேயிருக்கில் சந்திரிகாயோகம், ம-க்குடையவன், சு-ல், இருக்கக் குருவுக்கு, ங்ல், சுக்கிரனிருக்க இவனுக்கு, கூ-ல், மதியிருக்கில் மேகயோகம்-எ-ல், மதி, ரு-ல் ரவி, மக-ல் சனி இருக்கக் குருசுக்கிரன், அல் இருக்கக் கடகத்திற் புகனிருக்க லக்கினம் சரமாகில் வாவியோகம்-ரு எ-கூ-ம-ல் சுபர் இருக்கில் பூதரயோகம் இவை எல்லாம், உஎ-ம், வருஷமுதல் நடக்கும்-எ-று. (கூ)

தந்துயோகம், சாபயோகம், படவுயோகம்,

நாபியோகம், விதண்டயோகம், புஷ்பயோகம்.

உள்ளிறையொன்பானிறையங்கிசத்துடக்கோகூடின்
லொன்றிறைபத்திறைவனங்ஷத்துறவிவனங்கிசமுங்
கள்ளரைவிட்டொன்றுறையக்குருபார்க்கிற்தருவிற்
கருக்திறையுற்றிடப்பவக்கோன்கணிற்சியைக்கதுவிற்
பிள்ளைமதிலாபனவம்பவங்குருபெற்றிடிற்பாம்
பிசையிலணனசிதன்விழிப்பெய்துபறிற்பிறையுள்
விள்ளலறனுளனுபரினூல்வில்படவுந்தி
விதண்டமலர்யோகமுடுமேலிருமூன்றெனுமே.

(இ-ள்) ற-க்குடையவன், கூ-க்குடையவனுடைய அங்கிசத்தில் மதியுடன் கூடியிருக்கில் கந்துயோகம் இது உஅ ம், வருஷ முதல் நடக்கும் லக்கினேசன், ய-க்குடையவனுடைய அங்கிசத்தி லிருக்க இவன் அங்கிசம் லக்கினத்திலிருக்கப் பாவசகிதமில்லாமற் குருபார்க்கில் சாபயோகம் இது உகூ-ம் வருஷமுதல் நடக்கும் கூ-ல் ற-க்குடையவனிருக்க, யக-க்குடையவன் மதியுடன்கூடி உ-ல், இருக்கில் படவுயோகம் இது ஙய-ம், வருஷமுதல் நடக்கும் யக-க்குடையவன் மதியுடன்கூடி கூ-ல் இருக்க, யக-ல், குருவிருக்கில் நாபியோகம் இது ஙக-ம், வருஷமுதல்நடக்கும் ய-ல் ராகுஇருக்க சனிதுலாத்திலிருந்து யக, மிடத்தைப்பார்க்கில் விதண்டயோகம் இது ஙஉ-ம் வருஷமுதல் நடக்கும் ற-ல், மதி உ-ல் கூ-க்குடையவனிருக்க, ற-க்குடையவன் உச்சனுகிற் புஷ்பயோகம் இது ஙங-ம், வருஷமுதல் நடக்கும்-எ-று.

சுபயோகம், அசுப யோகம், வேதாந்த யோகம்,

இராசயோகம், கிரீடயோகம், சுவாசயோகம்.

மூன்றினுக்கேழிறைவனகிஷனண்ணறிரேக்காண
மூறிற்பவக்கோன்றிரேக்காணமுளரிமன்சேய்ராகு
தோன்றுதல்பார்த்திடலாகிற்குருப்புகறின்மாறிற்
சொல்லிசையொன்றுயமிவைசுதன்கணவம்பவனே
சூன்றிடிற்பொன்னேங்கிலிவனறத்தசிதனிசையி
னுறின்மதிக்கைந்தினறுபத்திசைக்கேந்த்ரத்துறல்பொன்
சான்றவரேற்சுபமசுபமறைமன்முடிசரம்போ
தரல்யோகமுப்பதின்மூன்றதற்காறேற்றமுமே.

(இ-ள்.) கூ க்குடையவனுடைய அங்கிசாதிபதி லக்கினதிபதியின் திரேக்காணத்திலிருக்கில் சுபயோகம் இது, ஙச-ம், வருஷமுதல் நடக்கும் யக-க்குடையவனுடைய திரேக்காணத்தில் ரவிசேய்ராகு இருப்பது பார்ப்பதாகில் அசுபயோகம் இது, ஙரு-ம் வருஷமுதல்நடக்கும் குருசுக்கிரன் கிரகமாறில் வேதாந்தயோகம் இது ஙசு-ம், வருஷமுதல் நடக்கும் உ-ல், ற-க்குடையவன், ய-ல் உ-க்குடையவன், க-ல், கூ-க்குடையவன், யக-ல், இதற்குடையவன் இருக்கில் ராசயோகம் இது, ஙஎ-ம், வருஷமுதல் நடக்கும் ற ல், குரு இதற் குடையவன் கூ-ல், இருக்க, ய-ல் சனிஇருக்கில் கிரீடயோகம் இது ஙஅ-ம், வருஷமுதல் நடக்கும் மதிக்கு ற-ல், ரவி, யக, க்குக் கேந்திரத்திற்குக் குரு ய-க்குக் கேந்திரத்திற் சுபரிருக்கில் சுவாசயோகம் இது, ஙகூ-ம், வருஷமுதல் நடக்கும்-எ-று. (கக)

### பத்திரயோகம், நளயோகம், போகயோகம்,

### காமினியோகம், இந்திரயோகம்.

ஆறதற்கானனன்விதுவுக்கறத்தறத்திற்புகர்வந்
    தணையிலறனங்ஷனிடத்தாசனுச்சனுகிப்
பூறுவமன்னுடன்கூடிற்பொன்னுளத்தக்கோமான்
    புகுதலறன்த்ரேக்காணத்தெனிற்பிருவக்குருவு
மேறதிபன்னில்வேள்சந்திரன்பவஞ்சேயாக
    விறைபெலக்கிலாபமுளரின்மாறவிலனிந்
தூறகலக்கூடிலிலேநளன்சுகமிப்பெண்கோன்
    யோகமுநாற்பதுமுதலேந்தாகவிப்பேர்க்குளதே.

(இ-ள்.) எ க்குடையவன்மதிக்கு கூ ல், இருக்க, லக்கினத்துக்கு, கூ ல், சுக்கிரன் இருக்கில் பத்திரயோகம் இது சயி ம், வருஷமுதல் நடக்கும் கூ க்குடையவனது அங்கிசாதிபதியிருந்த ராசிநாதன் உச்சனுகி லக்கினேசனுடன்கூடில் நளயோகம், இது சக ம், வருஷமுதல் நடக்கும் ௩ ல், குருவிருக்க இதற்குடையவன், கூ க்குடையவனுடைய திரேக்காணராசியி லிருக்கில் போகயோகம் இது சஉ ம், வருஷமுதல் நடக்கும் உ ல், குரு ச ல், சுக்கிரன், எ ல் சந்திரன், ௰க ல் செவ்வாய் இருக்க லக்கினேசன் பெலக்கில் காமினியோகம் இது சங வருஷமுதல் நடக்கும் ௰க ௩ க்குடையவர்கள் கிரகமாற ச க்குடையனும் சந்திரனும் பாவசகிதமில்லாமற்கூடில் இந்திரயோகம்இது சசம் வருஷமுதல் நடக்கும். எ-று. (கஉ)

### மிருகயோகம், கருடயோகம், பசுயோகம்,

### தாமயோகம் சரஸ்வதியோகம்.

விப்பிரனென்பானுகிப்பார்க்கவெட்டீறிறைவர்
    வியத்தினிற்கூடிற்பூர்வவிதுவுறுமங்கிசகன்
வைப்புதையத்தவன்பார்க்கத்திவியுறிற்பொன்னுதைய
    வற்கோத்தமம்புகர்பார்த்திடவறக்கோன்வலுக்கி
லுப்பதிபன்கட்குருவையுறவுபையன்பவத்தி
    லுறவிவனென்பானுறிலீதுளனணனங்கிசக
னிப்பதிமிக்காய்சசேரின்மான்புள்பசுத்தார்நா
    விற்பெண்ணேந்துயோகமையொன்பதுமுதன்மேலெனுமே.

(இ-ள்.) கூ க்குடையவன் குருவாகிப்பார்க்க, அ யஉ க்குடையவர்கள்கூடி யஉ ல், இருக்கில் மிருகயோகம், இது சரு ம், வருஷ முதல் நடக்கும் பூர்வமதியின் அங்கிசாதிபன் லக்கினத்திலிருக்க லக்கினேசன் பார்க்கத்தி விசேஷனமாகிற் கருடயோகம், இது சகூ ம், வருஷ முதல் நடக்கும் குருலக்கினத்திலிருக்க லக்கினம் வற்கோத்தமமாக கூ க்குடையவன் பெலக்க சுக்கிரன் பார்க்கில்பசுயோகம் இது சஎ ம் வருஷமுதல்நடக்கும் மதிகுருகூடி உ ல், இருக்க இதற்குடையவன் யக ல், இருக்க இதற்குடையவன் கூ ல், இருக்கில் தாமயோகம்,இது சஅ ம், வருஷமுதல் நடக்கும் யக க்குடையவனது அங்கிசாதிபதி உச்சனுகி கூ க்குடையவனைக்கூடி யக ல், இருக்கில் சரசுபதியோகம், இது சகூ ம், வருஷமுதல்நடக்கும். எ-று. (கங)

சண்டயோகம், இரஸேயோகம், சேஷயோகம்,

சமுத்திரயோகம், கனயோகம், பாதாளயோகம்.

மேற்பதிமன்ராகுசனிகூடவதின்மேவில்
வேளுதையர்தம்மிலுறமெய்யிறைமிக்காகி
னூற்புரளாகவன்பவன்பாகவனறத்திற்சேர
நோக்கிறைபார்த்திடில்வேண்மனேன்பிறையின்மாறிற்
காற்பதிக்கெட்டறனுறப்பத்திறைநவமுற்றிடிற்கால்
கவியுறவிப்பதியுயரக்கைத்துறில்யோகப்போ்
சூற்பகடாதிபன்கலேபாம்புத்திவிண்பாதாளங்
தோன்றுதலேம்பான்முதனேர்சொல்வதுமாறதற்கே.

(இ-ள்.) ய க்குடையவன் ராகுசனியுடன்கூடி ய ல், இருக்கில்சண்டயோகம், இது ருய ம், வருஷமுதல் நடக்கும் உ எ க்குடையவர்கள் சொச்சேத்திரத்திலிருக்க லக்கினேசனுச்சனுகில் இரஸேயோகம் இது ருக் ம் வருஷமுதல் நடக்கும் குருவும் யக க்குடையவனும் திக்கிரனுங்உடி கூ ல், இருக்க உ க்குடையவன் பார்க்கில் சேஷ்யோகம் இது ருஉ ம், வருஷமுதல் நடக்கும், எ கூ க்குடையவர்கள் கிரகமாறில் சமுத்திரயோகம், இது ருங ம், வருஷமுதல் நடக்கும் கூ க்குடையவன் எ ல், இருக்க, ய க்குடையவன், கூ ல், இருக்கில் கனயோகம் இது ருச ம், வருஷமுதல் நடக்கும் யஉ ல் சுக்கிரனிருக்க இதற்குடையவனுச்சனுகக் குருவைக்கூடில் பாதாளயோகம் இது ருரு ம், வருஷமுதல நடக்கும். எ-று. (கச)

காத்திரயோகம், வசனயோகம், அக்ஷயோகம்,

நாசிகாயோகம், கர்னயோகம்.

ஆறினுக்கிறேனயகியங்கிசற்கினன்சேய்சேரி
லகமறஞ்சொல்லினர்மாறிலதனுவிறைபுரத்துங்

கூறலிற்சோமன்கருமக்குருவிறையைக்கூடிற்
குருக்கோன்பொன்பார்க்கமறைதற்குடையோர்க்கிடையி
லேறில்விற்கோன்கட்படக்காலாபனுறிலேழெட்
டிவைமுதலேம்பொறியோகமறுபதளவெனுமாற்
பேறிதனுக்கெவ்வளவாமெனிற்செனனமுதலாம்
பெறுவதுவுங்கேள்பதுமத்துதையவன்பெற்றவனே.

(இ-ள்.) ராகுவினுடைய அங்கிசாதிபதிக்கு ரு கூ ல், ரவிசேய் ௬, டில் காத்திரயோகம். இது ருகூ ம் வருஷமுதல் நடக்கும் உ கூ க்குடையவர்கள் கிரகமாறில் வசனயோகம் இது ருஎ ம் வருஷ முதல் நடக்கும் க ல், எ க்குடையவன் உ ல், மதி, ൰ல் குருவும் லக்கினேசனுங்கூடில் அசுஷயோகம் இது ருஅ ம் வருஷமுதல் நடககும் கூக்குடையவன் சு அ கஉ க்குடையவர்களுக்கு இடையிலிருக்கக் குருபார்க்கில் நாசிகாயோகம் இது ருகூ ம் வருஷமுதல் நடக்கும் கக க்குடையவன் கஉ ல் இருக்கக் குருபார்க்கில் கர்னயோகம், இது சு൰ ம் வருஷமுதல் நடக்கும் இந்தயோகங்கள் முன்சொன்ன வருடத்துக்குமேல் எவ்வளவுகாலம் நடக்குமென்பது அறியவேண்டில் செனனமுதல் நேர் சொல்லுவோங் கேட்பாயாக அகத்தியமாமுனியே-எ-று. ()

மேற்கூறியயோகங்கள் இவ்வளவுகாலம்நடக்குமென்றல்.

உதையமுதற்சதுர்யோகமாயுவிருமூன்றெட்
டொன்பதறம்போக்கணிபோக்குருவிலிமூன்றடிமற்
றதமுளதுவைந்தணிமாப்வல்லதிரண்டணியெட்
டதுமூன்றவ்வாய்வறமுள்ளவமறமாயுவச்சேய்
மதனிருமூன்றற்கலேயுண்மாரனறமுப்பூண்
மற்றவைரண்டெட்டிரெட்டணியுளணியறம்வம்
சுதனில்பதினுலேழொன்பதுவலெட்டீர்மூன்றெண்
சோடசமுன்னிதுவீருயாறணியுட்சொலுமே.

(இ-ள்.) முன்சொன்ன வருஷங்களுக்குமேல் யோகநிற்குங் காலமறியவேண்டில் செனனமுதல்நேர் நாலுயோகமும் ஆயுர்த்தாயம் வரைக்கும் நடக்கும். இதன்மேல் ஐந்தரம்வருஷயோகமுதல் நேர்வருஷம் ௬-௬, அ-கூ-கூ-൰-௬-൰-எ-௬-கஉ-கஉ-அ-ரு-ரு-ரு-௬-அ-ஆயுவரை-௬-௬ அ-அ-௬-ஆயுவரை-கூ-ரு-அ-கூ-ஆயுவரை-ரு-எ-௬-௬-கசு-ரு-எ-கூ-௬-௬-௬-௬-௬-௬ அ-அ-கஉ-அ-௬-ரு-௬-கூ-௬-ரு-ச-கச-எ-கூ-௬-அ-௬-௬-அ-கரு கரு-கஉ-ச-சு-௬-ரு-உ-எ-று. (கசு)

இதுவுமது.

சொல்லியயோகத்தொகையோரெழுபதுமேலேந்துஞ்
சொற்றிடினேரறுபதல்லாற்றேன்றெருபத்தைந்து
மல்லிறைவன்கலைமுனநாட்பெயர்க்கதிகத்தொகைப்பே
ரதற்கதற்காமித்தொகைசம்வச்சரமீதலது
வல்லம்மிக்குளயோகமின்னமுஞ்சற்றுளதா
மலையவனேயெனுமுனம்பினுகமெனவாங்குப்
வில்லவனுக்கொருகுருவேயென்றடிதாழ்ந்ததுவுப்
விளம்புகவென்றானயில்வேலவனும்விளம்பினனே.

(இ-ள்.) முன்சொன்ன வருஷத்தொகைவற்கம் எடு ல் செனனமுதல் கூய-வருஷம்போக நின்றதொகை கடு-களம் வருடத்திற் கண்ட அதிகயோகத் தொகைக்கும் உள-ம் வருடத்திற்கண்ட அதிகயோகத்தொகைக்கு மாகச்செனனமுதல் நேர்வைத்து நடத்தும்போது இத் தொகை சரிவர நடக்கும் இதன்மேலும் சிறிதுயோகம் பிரபலமாக இருப்பதும் உண்டு பொதியாசலனேயென்று சொல்லாமுன்னம்பினுகபாணிக்குங்குருவே அந்தயோகமகத்துவமுந் திருவுளம் பற்றவேண்டுமென்று தெண்டம்பண்ணுமுன்னம் திருவாய் மலர்ந்தருளினவன் கூர்மைதங்கியவேலாயுதன்-எ-று. (கஎ)

ருசகயோகம், அதன்பலன்.

இன்னமதியற்றமுன்முதலோர்கேந்திரகோண் சொட்சேத்
திரமுயர்தலதிபெலமாயியல்பினர்ச்சேர்ந்திசைத
லனலெனிற்பேருசகமிதற்காயுவெண்ணென்பதுமா
மழகுபுகழ்திடதேககாந்தியதிசிவப்புத்
தனம்வினையமரசுசெய்யசமத்துளமெய்யுறுப்பத்
தனையும்வனப்பபிமானந்தற்றொழில்வஞ்சனைசெய்
மனமணிகபதிதாள்கைமகத்துவரேகையதாய்
வனவரைசஞ்சாரவிருப்பதிகமனோரதமே.

(இ-ள்.) ரவிமதிநீங்கலாகக்குசாதிபஞ்சக் கிரகங்களில் செவ்வாய் ஆட்சி உச்சகேந்திரகோணமாய் அதிபெலமாகிச் சுபருடன்கூடிச் சுப வற்கம்ஏறில் பஞ்சமாயோகத்தில் ருசகயோகம் இதன்பலன் வயசு எஉ அழகு கீர்த்தி திடசரீரம் தேககாந்தி அதிசிவப்பு தனம் வினையம், ராசாங்கம் சமத்து சரீர உறுப்பெல்லாம் அழகு அபிமானம்சுய தொழில் வஞ்சனையாகியமனம் சேனபதி கரசரணங்களில் உத்தமரேகை வனவரை சஞ்சாரப்பிரியம் மனோரதம்-எ-று. (கஅ)

பத்திரயோகம், அங்கிசயோகம், மாளவியோகம்,

சசயோகம் இவற்றின்பலன்.

இரதபதிமுதனேர்யோகப்பெயர்பத்திரமங்
கிசமாளவிசசமசிதன்னீருமிவர்கட்
குரைதருகாரகப்பெயரிற்சேய்க்குரைத்தவியல்போ
லுத்தமமிக்காகவெடுத்துரைப்பாதற்குளதாய்
வரும்வயதெண்பதுவிதனுக்கதிகமிரண்டிதனில
வாங்குதலீராரொருபதிதுவுமுன்போல்வகுத்துத்
தரைமிசைக்குசாதிபஞ்சமாயோகப்பெயராய்ச்
சாற்றுவரீதன்றியுங்கேள்சாலுதையத்தவனே.

(இ-ள்.) புதன்முதல் நேர்யோகப்பெயரறியும்படி முன்செவ்வாய்க்குச்சொன்னபடி புதன் உச்ச சொட் சேத்திர கேந்திரகோணத்தில் அதிபெலமாகச்சுபவற்கம் ஏறியிருக்கில் பத்திரயோகம் குருவாகில் அங்கிசயோகம் சுக்கிரனுகில மாளவியோகம சனியாகில் சசயோகம் இந்தயோகங்களுக்குப்பலன் சொல்லவேண்டில் செவ்வாய்க்குச்சொன்னபலன்போல் அவரவர் காரகத்தைவைத்துச் சுபபலாதிகமாகப் பலன்சொல்லுக பத்திரயோகத்துக்கு வயசு அ௰ அங்கிசயோகததுக்குவயசு அஉ மாளவியோகத்துக்குவயசு எ௰ சசயோகத்துக்கு வயசு எஉ இதன்மேலும் சிறிதுயோகப்பலன் கேட்பாயாகக்கும்போதையனுகிய அகத்தியமாமுனியே. எ-று. (கசு)

கடகயோகம் அதன்பலன்.

உதையவனென்றுறத்தாதைதிரமாய்ச்சேய்மதியு
முறிற்சேயாங்கிசன்குருபார்த்திடக்கேந்த்ரத்துறையிற்
சிதன்மதிபொன்சனிநவம்வேள்சிரமனையிற்சுசமாய்ச்
சேரிலறமுளர்கூடச்செடக்கோன்கேந்திரிக்கிற்
பிதிரனையர்சேரவிறைபெலக்கிலறக்கோன்கோண்
பெற்றிடவின்மாறிடன்மெய்பெண்டிறைவராகில்
வதைமனுச்சமில்லிசைமான்மருவநவன்பெலக்கிள்
மன்யோககடகமெனவழுத்துவதிப்புவியே.

(இ-ள்.) லக்கினேசன் க ல், இருக்க கூ-மிடந்திரமாகிச் சேய்மதி கூடினும் சேயாங்கிசாதிபதி கேந்திரத்திலிருக்கக் குரு பார்க்கிலும், கூ-ல் சுக்கிரன் எ-ல் மதி க-ல் குரு-ச-ல் சனியமாகச் சுபவற்கமேறிலும் ரு-கூ-க்குடையவர்கள் கூடலக்கினேசன்கேந்திரிக்கிலும் ச-கூ-க்குடையவர்கள் கூடலக்கினேசன் பெலக்கிலும் கூ-க்குடையன்-

ரு-கூ-ல் இருக்க க-எ-க்குடையவர்கள் கிரகமாறிலும் அ-க்குடைய வன் உச்சமாக ௬-ய-ல் புதனிருக்க கூ-க்குடையவன்பெலக்கிலும் கட்கயோகமென்ப இதன்பலன் ராசயோகம்-எ-று. (உய)

மிருதங்கயோகம்.

இப்புரமனங்கிசகனிருந்தவிற்கோ னுச்சத்
தெய்துதல்கேந்திரமாகவேட்கிறைபார்த்திடின்மா
லப்பவுமனாட்சியிலுச்சாங்கிசம்பொன்விழிப்ப
தாகிலுச்சாங்கிசநீசத்தவனுறவப்பதிமான்
வைப்புதையனும்பெலக்கிலிவன்பெலமாய்நீசன்
மருவியவங்கிசமிவனுமுச்சமுறின்மனக்கோன்
றப்பிலவர்பார்க்கவவனங்கிசமனுச்சத்
தாகின்மிருதங்கமெனச்சாற்றுவதிப்பெயரே.

(இ-ள்.) லக்கினேசனுடைய அங்கிசாதிபதி யிருந்த ராசிநாதன்கேந்திர உச்சத்திலிருக்க எ-க்குடையவன் பார்க்கிலும் சேய்புதன் இவர்கள் ஆட்சியிலிருந்து உச்சாங்கிசமேறக் குருபார்க்கிலும் ஒருகிரகம் நீசமாக அதிலொருவன் உச்சாங்கிசமேற அறற்குடையவனும் லக்கினேசனும் பெலக்கிலும் ஒருகிரகம் நீசமாகி உச்சாங்கிசமேற இதற்குடையவன் உச்சமாகி லக்கினேசன்பெலக்கிலும் ரு - க்குடையவனுடைய அங்கிசாதிபதி உச்சமாகச் சுபக்கிரகம் பார்க்கிலும் மிருதங்கயோகம்-எ-று. (உக)

இதுவுமது அவற்றின்பலன்.

சாற்கிறைசேயினள்வதைநோய்தணையருறவுச்சத்
தாதல்வெயிலங்கிசகளுகிலிரசதம்போய்
நாற்கிருநான்கிறைவனுச்சமாகவிவற்சேர
நாயகன்கேந்திரிக்கின்மிருதங்கமிந்நாமமுமே
ழாற்குணமனோகரம்பாக்கியமரசர்வாழ்வு
வனேகசனரெட்கமீதாவதிரேழாண்டின்
மேற்குருவாம்வித்தைதனம்வேந்தர்வெகுமானம்
விடமார்க்கவிவைநேராய்விளம்பும்வகைக்கெனுமே.

(இ-ள்.) அ-ல் சனி கூ-ல் சேல் ரு-ல் ரவியிருக்க இவனங்கிசாதிபதி யுச்சனாகிலும் கக-க்குடையவன் உச்சனாகிச் சுக்கிரனுடனே கூட லக்கினேசன் கேந்திரிக்கிலும் மிருதங்கயோகமென்ப முற்கவிதையிற் சொன்னமிருதங்கயோகம் ரு-ம் இக்கவியிற் சொன்ன மிருதங்கயோ

கூம் உ-ம் ஆக மிருதங்கயோகம் ஏழுக்கும் பலனறியவேண்டில் முன் சொன்ன யோகம் அஞ்சுக்கும்பலன் நேர், குணதிகள், சதாசந்தோஷி, பாக்கியவான், இராசசமானன், அனேக சனரெட்சகன், என்ப. பின்சொன்ன யோகம் இரண்டுக்கும் பலன் ஆசாரிய அபிஷேக முடையவன். வித்தை, தனம், இராச வெகுமானம், விடமாலேகம் இவை யுடையனென்ப இப்பலன் கசு-வயதுக்குமேல் நடக்கும்.

### இலட்சுமியோகம்.

கைக்கிசைக்கோனாட்சியுச்சகேந்திரகோணிருக்கிற்
கர்மதர்மரிற்சேரக்கவிபெலக்கிற்கவியு
மெய்க்கறனுங்கேந்தி கோண்வேவிவிண்ணேற்வற்க
மிக்காகிலணன்றனேயரின்மாறில்வெயினு
மைக்கிறையுந்தேவவற்கத்ததிகமுறமுசையாய்
மன்பெலக்கினல்லவர்கேந்திரத்துறமற்றிடத்திற்
பொய்க்கதிபருரிற்சேய்தொட்டைவருச்சாங்கிசத்திற்
பொருந்தவதற்குளர்பெலக்கிற்பூமகட்பேர்க்குளதே.

(இ-ள்.) லக்கினேசன் ஆட்சியுச்சகேந்திரகோணிலிருக்கினும்-கூ-ம-க்குடையவர்கள் சொட்சேத்திர மிருக்கச் சுக்கிரன் பெலக்கினும் சுக்கிரனும் கூ-க்குடையவனும் கேந்திரகோணிலிருந்து தேவதாங்கிசத்தில் அதிகவற்கமேறினும் கக-ரு-க்குடையவர்கள் கிரகமாறினும் ரவி சேய் தேவதாங்கிசத்தில் அதிகவற்கமேற சு-ம-க்குடையவர்கள் பெலக்கினும் சுபர்கேந்திரமும் பாவர் உபசெயமுமாக இருக்கினும் ருசாதிசனிவரை ஐவரும் உச்சாங்கிசமேற அதற்குடையவர்கள் பெலக்கினும் இலட்சுமியோகம். எ-று. (உரு)

### இதுவுமது.

மகற்கீறிற்சிதனுதையம்மறைபவள்சேயிசையின்
மருவவிறைபெலக்கிலண்ணிமற்றொருவனுபரப்
புகர்த்தேவபுறமேறச்சுபாறத்திற்பொருங்கிற்
பொன்மதிபாகவனும்பொன்னூரங்கிசம்புக்கிடிற்பொன்
றகர்க்கதிபனைக்கூடியொருவலவன்சேலவிற்
சடத்துறையவதற்கதிபன்றுப்தனையர்ச்சாரிற்
சுகப்பதியிற்கேந்திரத்தின்மூவருறப்பதனந்
தொன்றுமனல்வருறிற்றிருப்பேற்சொற்றிடலே.

(இ-ள்.) சு-ல் சுக்கிரன் க-ல் குரு-ம-ல் சேயிருக்க லக்கினேசன்-பெலக்கினும் ரு-ல்-ஒருகிரகம் உச்சமாகச் சுக்கிரன் தேவலோகாங்கி

சமேறச்சுபர் கூ-ல் இருக்கிலும் குரு மதி சுக்கிரன் தேவலோகாங்கிச சமேறிலும் குரு சேய் கூடி மேடகடக மீனதனுசு லக்கினமாகியிருக்க இதற்குடையவன் ச-ரு-ல்-இருக்கிலும் ச-ல் அல்லது கேந்திரத்தில் உ-பேரிருக்க மற்ற ச-பேரும் பதனமில்லாமலிருக்கிலும் இலட்சுமியோகம். எ-று. (உச)

### இலட்சுமியோகப்பலன் சங்கயோகம்.

திருப்பெயாயோகப்பலமன்னவர்போலும்பாக்யஞ்
 செயம்வீரம்வித்தைதனஞ்செனங்களிடத்திதைய
விருப்பமபிமானமினபந்துசனப்பிரியம்
 வெகுதாரபுத்திராமெய்யிறைகேந்திரமாய்க்
குருப்புதனீருயமிதிற்கூடிலுள்வேண்மால்பொன்
 குருகுவையொன்றுச்சமுறிற்கோன்கடனுக்குடையோ
ரிருப்பதெதிர்கேந்திரமாயிலைபெலக்கிலுடிக்கோ
 னீழமுதற்சாசலமாயெய்திடிற்சங்கெனுமே.

(இ-ள்.) இலட்சுமியோகப்பலன் இராசசமான பாக்கியம், காரிய செயம், பராக்கிரயன், வித்தை, தனம், சனங்களிடத்தில் மேைைக வு ,அபிமானம், இனசனப்பிரியம், வெகுகளத்திர புத்திரரென்ப, லக்கிேேசன் கேந்திரிக்கக் குருபுகன் கூடி கக-கஉ-ல் இருக்கிலும் ரு-எ-ல் புதனிருக்க கூ-ல் குருவிருக்க இந்த ந-இடத்தில் தானமுச்சமேறிலும் ரு-சு-க்குடையவாகள் அன்னியோன்னிய கேந்திரமாக லக்கினேசன் பெலக்கிலும் குருமதி கூடிச் சரசல லக்கினத்திலிருக்கிலும் சங்கயோகம். எ-று. (உரு)

### சங்கயோகம் அவற்றின்பலன்.

சங்கரன்பாலக்கணைக்கூட்கோன்விழிக்கவிடக்கண்
 டனுவிறையுநேர்கேந்த்ரந்தழுவிலணிக்கோன்றாய்த்
துங்கனுமேவிடிலிசையொன்றினர்தனமாயறக்கோன்
 றற்பெலமில்லாதிருக்கில்வளர்மதிநாட்டொழிற்கோ
னங்கமுறநிசியாகவம்புலிக்கில்லாகி
 லீணவருங்கேந்திரகோணத்தாகிலுஞ்சங்கதற்கா
மங்களசுபாக்கியம்வாகனந்தனம்விவேக
 மானமனருறவுகொடைமனதுரைநல்லவரே.

(இ-ள்.) செவ்வாயை-உ-க்குடையவள் பார்க்கக் குருமதி கூடி எ-ச குு-எ-ஆக இருக்கிலும் ந-க்குடையவர் உச்சகிரகத்துடனே கூடி-ச-ல்இருக்கிலும் க-ம-க்குடையவர்கள்உ-ல்-இருக்க கூ-க்குடையவன்பெ

லக்கிலும். பூறுவபக்ஷத்துகிதிகாலத்தில் ய-க்குடையவன்க-ல் இருக்க சந்திரனிருக்கிலும் யாவரும் கேந்திரகோணத்திலிருக்கிலும் சங்க யோகமென்ப இதன்பலன் சுபசோபனபாக்கியம், வாகனம், தனம், விவேகம அபிமானம், ஆசருறவு, விதரணம், நல்மனசு, நல்வாக்கு.()

கூர்மயோகம் அதன்பலன்.

நல்லவர்மற்றவர்தனம்பூணவமிசைவர்த்தனைமெய்
நண்ணிலிவர்மற்றதெனினலந்தீதுகயக்கில்
வல்லணன்பொன்புகர்துலையின்மருவவிறைபெலக்கின்
மாசுளர்கேந்திரகோணமாய்ச்சுபர்பார்த்திடின்மன்
கல்லியமுந்திரசரமாய்க்கலந்துசுபமாகக்
கதுவிலவைகூர்மமிவைக்ரசரீல்வாழ்கருமஞ்
சொல்லியல்புவெகுமானஞ்சுகஞ்சனக்கூட்டரவு
துற்கிருழிலுள்ளமைதிகொடைசுபுத்திரசோபனமே.

(இ-ள்.) சுபாசுபர்-க-உ-ரு-கூ-ய-கக-ல் இருக்கிலும் அல்லது ச-ஞு-சா-எ-அ-கஉ-ல் இருக்கிலும் இந்ததானங்களில் நேர்கலக்கிலும்,ரு-யக ல்-குருவிருக்கத் துலாத்திற் சுக்கிரனிருக்க லக்கினேசன்பெலக்கிலும் பாவர்கேந்திரகோணி லிருக்கச்சுபர்பார்க்கிலும் லக்கினமும் லக்கினேசனும் திரசரமாய்க்கலந்து சுபவற்கமேறிலும் கூர்மயோகமென்ப இதன்பலன் இராசசமானபாக்கியம், நல்வாக்கு, வெகுமானம்,சுகம்,சனக்கூட்டரவு, துற்றொழில் அடக்கம் விதரணம் சுபுத்திரசோபனம்(உஎ)

சாரதயோகம்.

புத்தியிற்பத்திறையுறமால்கேந்திரத்தக்கமன்கண்
புல்லில்வற்கோத்தமமுதையம்பொருந்தவிறைசுபமாய்ச்
சுத்தினுக்காறிறைபார்க்கத்தோன்றிலரிவைமான்
றேன்றமதுவைந்தாகிற்சுபரனைமன்பெலக்கி
லத்தினமனிற்கோண்மாலவற்கணன்கோண்பொன்சே
யாகிலொன்றாழ்குருபார்க்கவுணருகனணையி
லித்தருமனங்கிஷகன்கேந்திரமன்பெலக்கி
லிந்துபுதன்பொன்சரமாயேறினுஞ்சாரதமே.

(இ-ள்.) ௫-ல் ௰-க்குடையவனிருக்கப் புதன்கேந்திரிக்க ௨-க்குடையவன்பார்க்கிலும் லக்கினம்வற்கோத்தமமாக லக்கினேசன் சுபவற்கமேற ௧௧-க்குடையவன்பார்க்கிலும் கன்னி ௫-மிடமாகிப் புதனிருக்கிலும் சுபக்கிரகங்களும் ௪-க்குடையவனும் அதிபெலமாகிலும் மதியிருந்தராசிக்கு திரிகோணத்திற் புதனிருக்க இவனுக்கு ௧௧-மிடத்திரிகோணத்திற் குருகேயிருக்கிலும் ௨-ல் புதனிருக்க ௧-ல் ரவியிருக்கக் குருபார்க்கிலும் புதனங்கிசாதிபதி கேந்திரிக்கலக்கினேசன் பெலக்கிலும் குருமதிபுதன்சரராசியிலிருக்கிலும் சாரதயோகம்-எ-று. (௨௮)

இதுவுமது அவற்றின்பலன்.

சாரதிகேந்திரமசுபருபசெயம்பொன்னுதையத்
 தாகிலணிமன்பெலக்கத்தனுவிடபத்ததிபர்
பாரதிநாவலன்விழிக்கமனேமாறினீசம்
 பற்றியமாலங்கிசன்பொன்வற்கமுறப்பார்ப்பான்
போரதிபன்பார்க்கவுறிற்சாரதமாமிதற்கன்
 புடைமைவிரதந்தவசுபுத்திபுரவலர்வாழ்
வேரதிக்கம்வெகுமானமினசனரெட்சகமீ
 விரக்கமபிமானநரவாகனமின்பமுமே.

(இ-ள்.) புதன்கேந்திரமாகப் பாவர்உபசெயமிருக்கக் குரு ௧-ல், இருக்கிலும் ௯-க்குடையவன்பெலக்கக் குருசுக்கிரன் கிரகமாறப்புதன்பார்க்கிலும் புதன்நீசமேற இவனங்கிசகன் குருவற்கமேறச் சேய் குருபார்க்கிலும் சாரதயோகமென்ப இதன்பலன் அன்புடைமை, தவவிரதம், நல்லபுத்தி, இராசபாக்கியம், அழகு, வெகுமானம். இனசனரெட்சகம், ஈவிரக்கம், அபிமானம், நரவாகனம், சுகம்-எ-று. (௨௯)

எக்காளயோகம்.

இன்பமிசைக்கிறையவர்கேந்திரத்தெதிர்க்கப்பார்ப்ப
 திறையெனிலொன்றனேயாசொட்சேத்திரகேந்திரத்தேறின்
மன்பெறுமங்கிசமதுச்சனுகவுச்சத்தவனே
 மனன்கூடிலொன்றுபையமாசுளரொன்பதனிற்
பொன்பருதிபத்துறிலிப்பொன்னினனங்கிசகர்
 புறத்துறக்கோன்கேந்திரகோண்பொற்பினரோடிருக்கி
லன்பர்பதனம்பெறற்கோன்கேந்திரகோணுச்சத்
 தசுபர்சொட்சேத்திரமருவிலாவதுகாளமே.

(இ-ள்.) ௬ ௰ க்குடையவர்கள் எதிர்கேந்திரமாக லக்கினேசன் பார்க்கிலும் க ௬ க்குடையவர்கள் சொட்சேத்திர கேந்திரத்திலிருக்கிலும், லக்கினேசனுடைய அங்கிசன் உச்சமாக லக்கினேசன் உச்சனுடன்கூடிலும் க ல் உ ல் பாவரிருக்க ௬ ல் குருவிருக்க ௰ ல் ரவியிருக்கிலும், குருரவி அங்கிசகாலக்கினத்திலிருக்க இதற்குடையவன் கேந்திரகோணிலிருக்கப் பாவர்சொட்சேத்திர மிருக்கிலும் எக்காளயோகம். எ-று. (௩0)

இதுவுமது அவற்றின்பலன்.

களத்தினுக்கீகழணிமனவர்கார்முகமானிருதிக்
கதிபரூச்சகேந்திரகோண்கதுவிலுங்காளமாம்
வளத்ததின்மேலெழும்பும்வெகுபாக்கியவாகனரா
மன்னவரிற்புரநகரமகிதலமற்றுளது
மளித்ததிகவெகுமானத்ததிபராயுலகி
லனேகசனரெட்சகராயபிமானத்தவரா
யுளத்தழிவில்கெற்சிதராயிருப்பரெனப்புவியோ
ருரைத்திடுவரோங்கியதெற்கோங்கலுக்காதிபனே.

(இ·ள்.) க ௬ க்குடையவர்களும் புதகுருசுக்கிரனும் உச்சசொட்சேத்திர கேந்திரகோணிலிருக்கிலும், எக்காளயோகமென்ப இதன் பலன்நாளுக்குநாள் வர்த்தனையாகிய பாக்கியம், வாகனம், புரநகரதேசாதிபத்தியம், இராசவெகுமானம், அனேகசனரட்சகம், அபிமானம் சதாசந்தோஷம் இவைமுதலாகிய ஆனந்தத்தை யனுபவிப்பரென்ப பொதியவரையினையுடையவனே. எ-று. (௩க)

இருவகைக்காகளயோகம் அவற்றின்பலன்.

அதிபெலமாயிறைகேந்த்ரத்தாகநிசிகாலத்
தங்கரசம்பொன்பார்க்கிற்காகளமப்பலமா
நிதிகுலம்பேர்தயைமோகநிருபர்வெகுமானம்
நீதியுளதாமிறைவனின்றபதிக்கிறைசேர்
பதிபனுச்சமல்லதுகேந்திரமதிக்குற்றிடின்முற்
பதிமன்விதுத்திரமாயெட்டொருவனுறப்பார்ப்பான்
மதியுடன்கேந்திரிக்கிலுங்காகளமாம்வாலிபத்தின
மத்திமநாலேழதின்மேல்வாகனயோகமுமே.

(இ-ள்.) லக்கினேசன் அதிபெலமாகிக் கேந்திரிக்க நிசிகாலத்திற் சரலக்கினலாகிக் குருபார்க்கிலும் காகளயோகமென்ப, இதன்பலன்

தனம், குலம், பேர், தயவு, மோகம், இராசவெகுமானம், நீதி இவைவ யுடையனென்ப லக்கினேசன் நின்ற ராசிக்குடையவனிருந்த ராசிநா தன் உச்சமாக அல்லது மதிக்குக்கேந்திரமாகிலும் லக்கினமும் லக்கி னேசனும் பதியும் திரவற்கமேற அ ல்சேயிருக்கக் குருமதிகூடிக்கேந் திரிக்கிலும் காகளயோகமென்ப இதன்பலன் வாலிபத்தில் மத்திமபல மும் ஹ ௨அ க்குமேல் வாகனயோகமுமுண்டாம். எ-று. (௯௨)

பேரிகையோகம்.

வாகனத்துக்கில்லறமாயங்கிரகமிருக்க
மானமனனுச்சமுறின்மன்புகரந்தணனுக்
கோகைபெறக்கேந்திரிக்கத்தாதைமனன்பார்க்கி
லொருவிறைக்குக்கேந்திரகோண்குருப்புகருற்றுறையத்
தேகமனுக்காயமனன்கேந்திரிக்கிலசிதன்
சேய்பொனினனெட்டாறுய்த்தத்தமுறிற்செடக்கோ
னேகமுறப்புகர்க்கிறிலீழமிவற்றைந்தத
மிற்புதனெய்துதல்பேரிகைப்பெயருக்கெனுமே.

(இ-ள்.) ௨ எ க௨ ல் கிரகமிருக்க ம க்குடையவனுச்சமாகிலும் லக் கினேசன் குருசுக்கிரனுக்கு கேந்திரிக்க கூ க்குடையவன்பார்க்கிலும் செவ்வாய்க்கு கேந்திரகோணிற் குருசுக்கிரனிருக்க லக்கினேசனுக்கு கக க்குடையவன் கேந்திரிக்கிலும் சனிக்கு கூ அ ல் சேய் சேய்க்கு கூ அ ல் குரு குருவுக்கு கூ அ ல் ரவியிருக்கிலும் லக்கினேசன் லக்கி னத்திலிருக்கச் சுக்கிரனுக்கு க௨ ல் குருவிருக்க குருவுக்கு ௩ எ ல் புதனிருக்கிலும் பேரிகையோகம். எ-று. (௯௩)

இதுவுமது.

அருக்கன்முதற்பாவரிரண்டறமிருக்கச்சேய்பொன்
னண்ணலிவர்மூவர்களுமணிவிழிக்கிலாயங்
குருக்கணுறப்பவனுயாப்புகர்பெலக்கிலெட்டுக்
குடையவன்கேந்திரிக்கவொன்றுள்குருப்புதன்றுள்குருவா
மிருக்கிலறத்தாதிபனுமந்தணனுமெதிர்க்கி
லிவன்கவிநேர்கேந்திரிக்கவிறைபெலக்கி
முருக்கமுளமூவர்களும்லக்கினத்தைப்பார்க்கி
லுரகவிற்கோன்மிக்குறினும்பேரிகைப்பேர்க்குளதே.

(இ-ள்.) ரவிமுதற்பாவர், உ-கூ-ல், இருக்கச்சேப் குருலக்கினேச னிவர்கள் மூவரும் ௬ மிடத்தைப் பார்க்கிலும் கக மிடத்தைக்குரு பார்க்க இதற்குடையவன் உச்சமாகச் சுக்கிரன்பெலக்கிலும் அ-க்கு டையவன் கேந்திரிக்க க-டு-கூ-ல் புதனிருக்க கஉ-ல் குருவிருக்கிலும் கூ க்குடையவனும் குருவுமெதிர்க்கிலும், வியாழதுஞ் சுக்கிரனும்நேர் கேந்திரிக்கலக்கினேசன் பெலக்கிலும் லக்கினேசனும் புதகுரு சுக்கிர னும் லக்கினத்தைப்பார்க்கிலும் ராகுபவனுதிபன் உச்சமேறிலும் பே ரிகையோகம்-எ-று. (௬ச)

பேரிகையோகப்பலன் சாமரையோகம்.

பேரிகைப்பேர்க்கிளமைதனஞ்சனப்பிரியமாயுப்
பெருமைகுலம்புகழதிகப்பெயர்தனயர்பெண்டிர்
வாரமிவையாறுரும்வயதுளதொன்றிறைவன்
மறையவன்பார்த்திடக்கேந்த்ரமருவிலிவருறவாய்ச்
சேர்தலிரசதம்பார்க்கப்பணபரப்பேராகிற்
றினமன்முதலிறையதன்முன்செலசரமொன்றுகிற்
பாரிமுதலுள்ளிருவர்சுபர்பார்க்கக்கூடப்
பார்ப்பதிறையாகிலிவைசாமரையென்பனவே.

(இ-ள்.) பேரிகையோகப்பலன், இளமை, தனம், சனப்பிரியும், தீர்க்காயு, பெருமை நல்லகுலம் கீர்த்தி அதிகப்பெயர் வெகுபுத்திரர், வெகுகளத்திரம், தேவதாகடாக்ஷம். இவைவயது ௬கூ-க்கு மேலுண் டென்ப இதன்மேற் சாமரையோக மறியும்படி லக்கினேசன் கேந்தி ரத்திலிருக்கக் குருபார்க்கிலும் இவர்கள் தங்களிலமித்திரமாகிப் பண பரத்தி லிருக்கச் சுக்கிரன்பார்க்கிலும் லக்கினம் செலசரமாகிமதியிரு க்க உ-ல் லக்னேசன் யிருக்கிலும் எ-மிடமுதல் கக-க்குள்ளாக உ கிர கம் ஒன்றுய்க்கூடச் சுபக்ரகங்களும் லக்னேசனும் பார்க்கிலும் சாம ரையோகம்-எ-று. (௬டு

சாமரையோகம்.

சாருதையங்குருபார்க்கவிவனுறையங்கிசமன்
ருயுறலொன்றிறைசுபர்கேந்திரகோணத்தணையிற்
றேரதிபன்கோணமுறவிரவிவற்கோத்தமமாய்ச்
சிரத்திறைகேந்திரிக்கிலிதிற்செம்பொனுறச்செடக்கோ
ணுருவதாபோக்கிலிபம்வளர்மதிராட்சரமா
யாதியுறிலிதுதிரமாயாயமனெனன்பதுமா
ரோரதிபன்கேந்திரிக்கிற்றிவித்திரம்பூறுவமொன்
றெருதனுறவிறையுயரிற்சாமரைப்பேர்க்குளதே.

(இ-ள்.) லக்கனத்தைக்குருபார்க்க யிந்தக் குருவாங்கிசகன் ௪ ல், இருக்கிலும் லக்கினேசன் சுபருடன்கூடிக்கேந்திரகோணத் திருக்கிலும், புதன் ௫ கூ ல், இருக்க ரவிவற்கோத்தமமாக லக்கினேசன்கேந்திரிக்கிலும் குருகேந்திரிக்க லக்கினேசன் ஆபோக்கிலிடத்திலிருக்கப் பூறுவபக்ஷத்துலக்கினம்சரமாக உதிக்கிலும்லக்கினம்திரமாக கக க்குடையவன் கூ-ல் இருக்கலக்கினேசன் கேந்திரிக்கிலும் திவாகாலத்தில் திராசியுமாகப் பூறுவபக்ஷத்தி லுதையமான லக்கினத்தில் ஒருகிரகமிருக்க லக்கினேசன் உச்சமாகிலும் சாமரையோகம்-எ-று. (௫சு)

இதுவுமது அவற்றின் பலன்.

மரைக்கதிபன்புதன்புகர்கேந்திரகோணமாக
மனன்பெலக்கிலிவனிசைமன்சரமருவமதத்தி
லுரைக்கணிமனுறிலிவன்கேந்திரத்துயரவதனி
லொருவனுறவிறைபறத்துத்துற்றிடிலிதுசாமரையாந்
தரைக்கதிபன்வெகுமானந்தனங்கீர்த்திவித்தை
தர்மம்வெகுபாக்கியமாதரவெழுபத்தைந்து
வரைக்குமிருப்பைம்பதின்மேலைந்ததின்மேலைந்து
வருடமிதனபலமாங்கும்போதையமாதவனே.

(இ-ள்.) ரவிபுதன்சுக்கிரன் கேந்திரகோணமாக லக்கினேசன்பெலக்கிலும் லக்கினேசனும் ௰-க்குடையவனும் சரராசியிலிருக்க, எ-ல் ௪, க்குடையவனிருக்கிலும், ௪-க்குடையவன் கேந்திரஉச்சமாக இவனைச்சேய் கூடலக்கினேசன் கூ-ல் இருக்கிலும் சாமரையோகமென்பஇதன்பலன் இராசவெகுமானம் தனம் கீர்த்தி வித்தை தர்மம் வெகுபாக்கியம் தயவு வயது எ௫ இந்தயோகம் வருஷம் ௫௫-க்குமேல் ௫-வருஷம் நடக்கும் கும்போதையனாகிய அகத்தியமாமுனியே-எ-று. (௫எ)

கமலாயோகம்.

மாதிறையிற்சோவுச்சமதியாகத்திவியில்
வரிற்சனிகேந்திரத்தாய்பொன்மானமிரசதமாய்
மேதைபவமுறிலிரவியிற்கிறையங்கிசத்தின்
மேவுதல்கேந்திரமாவெயில்சுபமாய்மேவி
லாதியிறையங்கிசமனுட்சியிற்பௌர்ன்னுடனே
யம்புலிதேவாங்கிசத்திலதிகமுறிலறக்கோன்
போதிறையுமுச்சமுறப்புதன்புகர்கேந்திரகோண்
பொருந்திலிப்பேர்கமலமெனப்புகல்வதுமிப்புவியே.

(இ-ள்.) சக்குடையவன் ச ல் இருக்க மதியுச்சமாகத்திவா உதிக்கினும், சனிகேந்திரிக்க ச ல் குரு ம ல், சுக்கிரன் கக ல் புதனுமாக இருக்கினும் ரவியிருந்தராசி நாதனுடைய அங்கிசாராசியேறிக் கேந்திரமாகி ரவியிருக்கச் சுபர்கூடினும், லக்கினேசனது அங்கிசாதிபதியுடைய ஆட்சியில் தேவாங்கிசத்தில் அதிவற்கமேறியமதியுங் குருவுங்கூடி யிருககினும் கூ க்குடையவனும் ரவியும் உச்சமேறப் புதன் சுக்கிரன் கேந்திரகோணமிருக்கினும், கமலாயோகம். எ-று. (ருஅ)

கமலாயோகம், அவற்றின் பலன்.

அங்கிசாவதாரயோகம், அதன்பலன்.

புகர்பெலக்கப்பத்தனையரின்மாறினுதையம்
பொருந்தியவங்கிசமணிற்பொன்புதன்கவியோதையமா
மகமலதுகேந்திரமதாகிலிதுகமல
மரசனப்பாற்சொர்க்கபுரத்தடைவனிப்பாலனற்சேம்
சுகன்மனைவியிசைபொனுறச்சுக்கிரனீருதிக்கத்
தோன்லுதலத்திவியாகிச்சரத்துறிற்பொன்றேன்றல்
பகருமிவர்தங்களிற்கேந்திரமாகின்மன்னும்
பலனிதுவாங்கிசவவதாரப்பெயரென்பதுவே.

(இ-ள்.) சுக்கிரன்பெலக்க, ச ம க்குணையவர்கள் கிரகமாறினும், லக்கினங்சாதிபதி யிருந்தராசியிற் குருவிருக்கப் புதசுக்ரன் லக்கினமல்லாத கேந்திரத்திலிருக்கினும், கமலாயோகம் இதன்பலன் அரசன் சொற்கபதமடைவனென்ப நி ல் சேய், எ ல் சனி, ம ல் குரு ச ல்சுக்கிரனிருக்கத்திவியில் சரத்திலுதிக்கினும், குருவு மலக்கினேசனும் கேந்திரத்து எதிர்க்கினும் அங்கிசாவதாரயோகம் இதன்பலன் அரசனென்ப. எ-று. (ருகூ).

திரிமூர்த்தியோகம்.

தாரவிறைக்கெட்டறமின்மால்புகர்பொன்னுதிக்கிற்
சசியரியாசனம்பாரிசாதமதந்தணனும்
வேரதிககயம்புகராய்ப்பெறிற்பாராவதத்திற்
பிருகுறப்பொன்கோபுரமாய்ப்பிறைதேவபுரமா
யாரிலிசைக்கோணிருந்தவகத்திறையங்கிசக
னங்கிசகனுச்சசொட்சேத்திரகோணத்தணையி
னீரிசையர்தாயம்ரவிபுகரனனேராக
நிற்பதிறைக்கெனின்மூவராகநிகழ்த்துவரே.

(இ-ள்.) எ க்குடையவனுக்கு அ அ ச ல், புதன்சுக்கிரன்குருநேரி ருக்கிலும் மதிசிங்காதனமும் குருபாரிசாதமும் சுக்கிரன் அயிராவ தமுமாகத் தேவதாககிசத்திலேறிலும், சுக்கிரன் பாராவதத்திலும் குரு கோபுரத்திலும், சந்திரன் தேவலோகத்திலும் இருக்கிலும், ய க்குடையவனிருந்தராசியாதிபதியிருந்த அங்கிசாதிபதியிருந்த அங் கிசகன் உச்ச சொட்சேத்திரக்கோணி லிருக்கிலும், லக்கினேசனுக் கு, ச ல் ரவி, ய ல் சுக்கிரன், யக ல் சேய், நிற்கிலும் திரிமூர்த்தியோ கம். எ-று. (சo)

### திரிமூர்த்தியோகம் அவற்றின்பலன்.

### பரமானந்தயோகம் அதன்பலன்.

நிகழ்த்துவதற்கிறைக்கிறெட்டுடையமிவைசுபரு
நிசுபருமாய்க்கலக்கிலிதுவும்மூவர்நிருபர்
சுகத்துடையரிதன்மேலககினஞ்சுறவாயெட்டிற்
சுக்கிரன்பொன்னிவர்க்கிறிற்றுெந்துவக்கோன்றேன்றி
லகத்ததனுவாபமதிலம்புலியூழ்சனிநே
ராகமுதற்றிரமாகவலவனிதியாகின்
மகத்துவனும்வெகுகாலஞ்சுபமாகவரசர்
வாழ்வுளனுகும்பரமானந்தம்வருபவரே.

(இ-ள்.) உ க்குடையவனுக்கு கஉ அ உ ல் பாவர்சுபர்கலக்கிலும் திரிமூர்த்தியோகம் இதன்பலன் அரசர் சுகம் என்ப இதன்மேல் லக் கினமகாமாக அ ல் குருசுக்கிரன் எ ல் புதன் இருக்கிலும் ச எ யகல் மதிரவிசனி நேரிருக்க லககினந்திரமாகக் குரு உச்சனுகிலும் பரமான ந்தயோகம் இதன்வலன் ராசசமானன், பெரியவன், வெகுகாலம் சுக முடையவன். எ-று. (சக)

### பருப்பதயோகம், குசுமயோகம்,

### அவற்றின்பலன்.

வருமுதையத்திறையிருந்தவிற்கிறைகேந்திரகோண்
மருவவதற்கிறைபெலக்கின்மனன்றுயின்மானிவர்க
ளிருவருங்கேந்திரமெதிர்ககசுபர்பார்க்கிலேழி
லின்பமுளரெட்டசுபரிவர்பவனேடிருக்கிற்
பருபதம நகரபுராதிபராவர்கோணிற்
பாவர்மதிகேந்திரத்திற்பாகவனென்றுதித்த
திரமதெனில்சொல்வேண்மெய்திவியல்சிகிசேரிற்
செல்வமிருபதின்மேற்செந்திருக்கெனும்போதினுக்கே.

(இ-ள்.) லக்கினேசனிருந்த ராசிநாதன் கேந்திரகோணிலிருக்கஇதற்கிடையவன் பெலக்கிலும் க-அ-க்குடையவர்கள் எதிர்கேந்திரமாகியிருக்கச் சுபர்பார்க்கிலும் கூ-ல் சுபர் அ-ல் பாவர் கக-க்குடையவனைக்கூடி யிருக்கிலும் பருப்பதயோகம், இதன்பலன்நரகபுராதிபர் இதன்மேல் ரு-கூ-ல் பாவர் கேந்திரத்தில்மதி லக்கினம் திரமாகிச்சுக்கிரன் இருக்கிலும் உ-எ-க-ல் ரவிமதிகேதுநேரிருக்கிலும், குசுமயோகம்இதன்பலன்வயசு உ௰-க்குமேல் செல்வனுவான். எ-று. (சஉ)

## மச்ச யோகம்.

தினகரன்மற்றுளபவரொன்றறமிருக்கவிறைகேந்
 திரத்திருக்கச்சிசுவசுபர்கலக்கிற்சிரமுங்
கனகமிரண்டேழினருங்கல்லியனுஞ்சரமாயக்
 கதுவுதல்கேந்திரமாகிற்கவிபொனுற்றிரமாய்
மனநவமற்றவரிருக்கமெய்துயிலிப்பதிநிர்
 மலமாகிலிறைவன்மருவங்கிசன்கோண்மருவத்
தனையரிறைபார்க்கிலற்கோனங்கிசனங்கிசகன்
 சார்வதுஞ்சுபர்பார்க்கிற்சேலெனச்சாற்றுவரே.

(இ-ள்) க-ல் ரவி கூ-ல் பாவர் லக்கினேசன் கேந்திரிக்க ரு-ல் பாவர் சுபர்கலக்கிலும் லக்கினமுங்குருவும் உ-எ-க்குடையவர்களும், லக்கினேசனும் சரவற்கமேற இவைகேந்திரங்களாக இருக்கிலும், குருசுக்கிரனதிகவற்கமேற ரு-கூ-ல் மற்றவரிருக்க க-அ-சுத்தமாகிலும் லக்கினேசனிருந்த அங்கிசாதிபதி ரு-கூ-ல் இருக்க ரு-க்குடையவன் பார்க்கிலும் மதியினுடைய அங்கிசாதிபதியிருந்த அங்கிசாதிபதியுச்சமாகச் சுபர்பார்க்கிலும் மச்சயோகம்-எ-று. (சங.)

## இதுவுமது அவற்றின்பலன்.

சாற்றறக்கோனங்கிசகன்குருப்புகர்வற்கமுமாய்ச்
 சடத்துதிக்கவதற்கிறைகேந்திரகோணத்தாகி
னூற்றிதழ்மன்னர்கிறைவன்லக்கினமிம்மூன்று
 நூற்புரண்மார்பினன்வகையாய்நோக்கிறைவன்பெலக்கி
லாற்றனுவிலான்றுவசமாமிதுவுமிதனுக்
 கரசன்வெகுமானிகலைக்கியானியதிரூப
நாற்றிசையும்புகழ்கொடையுநன்மனதன்புடைய
 னந்தனனுமலர்வேதனல்கியநந்தனே.

(இ-ள்.) ௬-க்குடையவனுடைய அங்கிசகன குருசுக்கிரன் வர்க்க மேறிலக்கினத்திலிருக்க லக்கினேசன் நேத்திரகோணிலிருக்கினும்ரவி மதிலக்கினம் இம்மூன்றும் குருவற்கமாக உ-க்குடையவன் பெலக்கி னும் மச்சயோகம்என்ப இதன்பலன் இராசன் இராசவெகு மானன் கலைக்யானி அழகன் வெகுகீர்த்திமான் விதரணன் நன்மனசு புத்திர வானென்ப அகத்தியமாமுனியே-எ-று. (சச)

கிரகமாலிகையோகம் அதன்பலன்,

தனத்தினுக்கீறுகவரத்தனவுமிருப்பதுபோற்
றுன்முதனேரளவுமரவற்றுளமற்றிவர்க
ளினத்தொருவரொருவருடனெய்தாமற்றணிக்கி
லிவைகிரகமாலிகையாமிப்பெயர்தொட்டதுவாய்
நினைத்திதனுக்கியல்புசொலவேண்டுவதிலிவர்க
ணிதற்குமுதற்கெப்பலமப்பலமுநிகழ்த்துவர்மேற்
றினத்ததிபனினனிவர்கட்ககிசிகியல்லாமற்
சேய்முதற்சுன்னளவிருபாற்சேர்வதுஞ்சொற்றிடலே.

(இ-ள்.) லக்னமுதல் எ-மிடம்வரைக்கும் ராகுகேது நீங்கலாகமற் றுள்ள எழுவரும்நேரிருக்கில் கிரகமாலிகையோகமென்ப இந்தப் படிக்கு லக்கின்நேராகநடத்துங்கால் கஉ-மிடமுதல் சு-மிடம்வரை க்கும் கஉ-பிரகாரமாக நடத்தும் இதன்பலன் லக்கினமுதலாக கஉ- மிடம்வரைக்கும் உள்ளகாரகங்கொண்டு பலன்சொல்லுக இதன்மேல் ரவிமதிக்கு முன்பின் ராகுகேதுநீங்கலாகக் குசாதிபஞ்ச கிரகங்களு மிதற்குப்பலன்சொல்லுவோம்-எ-று. (சரு)

வாசியோகம், வேசியோகம், அவற்றின்பலன்.

திடத்தரிக்கோன்முதற்கிரகர்சேர்ந்திடில்வாசிப்போர்
சேய்முதற்றுற்களத்திரவான்செலவுவரல்சரியா
மிடர்ப்படுதல்வித்தையுமாம்யாபாரந்தனைய
ரியல்புளதாமிசையோகமிறைபயந்தனமாம்
விடத்துளமார்க்கன்கபடன்வெகுசனக்கூட்டரவு
வெந்துசனமுள்ளவனுமேற்பிறமேவிடிற்பேற்
நடத்துவதும்வேசியவநலஞ்விகிர்திமுனர்க்கா
நவில்வரிதன்மேலிருபானண்ணுதல்சொல்லுதுமே.

(இ-ள்·) ரவிக்குமுன்னே க்ரகம்நிற்கில்வாசியோகம், இதன்பலன் சேய்நிற்கில் பொல்லாதகளத்திரம் புதனிற்கில் ஆதாயமுஞ் செலவு

ஞ்சரி, சஞ்சலம், வித்தை, குருநிற்கயாபாரம், புத்திரபாக்யம் சுக்ரன் நிற்க கீர்த்தி, யோகம், மநோபயம், தனம் சனிநிற்க விடமார்க்கம், கபடி வெகுசனக்கூட்டுறவு, பந்துசனமுள்ளவன் ரவிக்குப்பின்பு க்ரகங்கள்நிற்க வேசியோகமென்ப இதன்பலன் முன்சொன்ன வாசியோகப்பலத்துக்கு நேர்விகிர்தியாகச்சொல்லுக இதன்மேல் ரவிக்கு இருபுறமுங் க்ரகங்கள் நிற்பதற்குஞ் சொல்லுவோம். எ-று. (சசு)

உபசரியோகம், அனபாயோகம், சுனபையோகம்

துருதுரையோகம், இவற்றின்பலன்.

நண்ணினனெருக்கலுபசரியாமப்பலமா
நாட்கிறைமுற்சுபரனபைநல்லகுலமொழுக்கம்
வண்ணமுலையார்வசிசஞ்சகலகலாநிபுண்
மன்னர்வெகுமானமுமாமற்பதின்பேர்சுனபை
யுண்ணலன்சுயாற்சிதமுமுன்னுளதுமுளதா
முபையபுறத்தும்மாகிற்றுருதுரைப்பேர்க்குலகோர்
விண்ணவனுமென்னவதிசெயமுளவித்தையுமாய்
வெகுகாலஞ்சுகமாகவீற்றிருப்பதிவனே.

(இ-ள்.) ரவிக்குஇருபுறமுங் க்ரகஞ்கள் இருக்கில் உபசரியோகமென்ப இதன்பலன் முற்பலன் உ-ம் கூட்டிச்சொல்லுக மதிக்குமுன் சுபர்நிற்கில் அனபாயோகம். இதன்பலன் நல்லகுலம் ஒழுக்கம் ஸ்திரீவசியம் சகலகலாநிபுணம், இராசவெகுமானம். மதிக்குப் பின்சுபர்நிற்கில் சுனபையோகம் இதன்பலன் நன்மனசு, சுயாற்சிதமும் பூறுவமுள்ளதும் உளதாம். மதிக்கு இருபுறமுஞ்சுபர்நிற்கில் துருதுரையோகம் இதன்பலன் யாவரும் இவனைத்தெய்வமென்று சொல்லும்படிக்கு அதிசயமுள்ள வித்தையுடையவனுகி வெகுகாலம் சுகமாகவாழ்வான்.

கெசகேசரியோகம், நீசபங்கராசயோகம்

இவற்றின்பலன்.

இருட்கிறைசேலிடபம்விற்சாலிதிற்கலைவற்தணையா
மீல்லிசையுற்றிருப்பதுபொற்கெனிற்கெசகேசரியாம்
விருப்பமுளவாழ்வதிகன்வேந்தனுமாநீச
மேவியவிற்கிறைவனந்தவீட்டிலுச்சத்தவனி
லருட்பெறவுற்றிடவதனுக்காதிபன்கோணிருக்கி
லல்லவெனிலம்புலிக்குக்கேந்திரிக்கிலதுதான்

மருட்பெறுமங்நீசனுக்காகிலுமாகிக்குருப்பேர்
வற்கமுறினீசபங்கம்பெயரிவன்மன்னவனே.

(இ-ள்.) பூறுவபட்சத்துச்சந்திரனும் வியாழனும், ச-ம் ௰-ம் ஆக மீனம் இடபம் தனுசு கும்பம் இந்தராசிகளிலிருக்கில் கெசகேசரி யோகம் இதன்பலன் சகலசனப்பிரியன் வெகுபாக்கியவான், இராசன் என்ப இதன்மேல் நீசமிருந்தவீட்டுக்குடையவன் அந்த வீட்டுக்குச் சாதிபதிவீட்டிலிருக்க இதற்குடையவன் ௫-கூ-ல் இருக்க அல்லது மதிக்காகிலும் கேந்திரிக்க இது குருவற்கமுமேறில் நீசபங்காசயோகம் இதன்பலன். எ-று. (சஅ)

இராசயோகம், கோளகையோகம், யூபயோகம், சூலயோகம்

கேதாரயோகம், பாசயோகம், தாமன்னியயோகம்- வீணையோகம்,

இவற்றின் பலன்.

மன்னவன்பொன்னுதையதிரத்திறைபெலக்கத்திவியின்
மத்யானத்துறிலரசன்மனர்மன்முதற்சனீயி
றென்னுமிவரொன்றுமுதலேழளவுங்கூடற்
கிசைப்பதுகோளகையூபமெரிச்சிரங்கேதார
மன்னியரல்லார்பேர்தாமன்னியம்யாழிதனுக்
கரடையிலாமௌனியழுக்குடையுளமெய்ஞ்ஞானி
யின்னுயிரந்திரியுழவன்ரெட்சகன்காலியினு
லிலங்குவனுட்டியகீதத்திதையவனிப்பலமே.

(இ-ள்.) லக்கினம்திரமாகக் குருவிருக்க லக்கினேசன் பெலக்கத்தி வாகாலத்தில் நடுமத்தியானத்துதிக்கில் இராசயோகம் இதன் பலன் அரசன் இதன்மேல் ரவிமுதற்சனியீராக எழுவரும் ஒருராசியிற்கூடில் கோளகையோகம் இதன்பலன் திகாம்பரன், மௌனி உ-ராசியிலிருக்கில் யூபயோகம், இதன்பலன் சீராடைமலினுதிக மெஞ்ஞானி, ௩-ராசியிலிருக்கில் சூலயோகம் இதன்பலன் ஆற்பனரந்திரி ச-ராசியிலிருக்கில் கேதாரயோகம் இதன்பலன் உழவன் ௫-ராசியிலிருக்கில் பாசயோகம் இதன்பலன் சனரெட்சகன் ௬-ராசியிலிருக்க தாமன்னியயோகம் இந்த அ-பலன் கன்றுகாலி கரவையினுல் பாக்கியவான் எ-ராசியிலிருக்க வீணையோகம் இதன்பலன் நடனவாத்திய சங்கீதப்பிரியன். ஏ-று. (சகூ)

சிருங்காடகயோகம், கமலாயோகம், உதகயோகம், தடாகயோகம், மாரணயோகம், யச்சிரயோகம், அசுபயோகம், சுபயோகம், கிரியோகம், சமுத்திரயோகம், ஞானயோகம், இராசயோகம், முசலயோகம், சக்கரயோகம், இவற்றின்.

பலன்.

இவையமுதற்கோண்கேந்த்ரமிதன்முன்னதன்முன்ன
 ரெட்டிருறுபசெயம்பாவஞ்சுபநீரலது
முதகமுபையஞ்சரமற்றொன்றிடைவிட்டிருப்ப
 துக்குளபேர்ச்சிருங்காடகம்மலர்நீரோடை
வதைவயிரமசுபசுபம்வரையுவரிஞான
 மனன்முசலமாழிமுற்போன்மருவிடின்மன்னவர்போ
லிபிமகிதமிரண்டுமறிந்தியம்புவதிப்பலமா
 மிவ்வனவும்யோகவகைப்பெயரியல்புமிதுவே.

(இ-ள்.) ரவியாதிசனிவரை எழுவரும், க ௪ ௭ ௰ ல், இருக்கில்சிருங்காடகயோகம், க ௪ ௭ ௰ ல், இருக்கில் கமலாயோகம் உ ௫ அ கக ல், இருக்கில் உதகயோகம், ௩ ௬ ௯ கஉ ல், நிற்கில் தடாகயோகம் ௬ அ கஉ ல், இருக்கில் மாரணயோகம் ௩ ௬ ௰ கக ல், நிற்கில் வச்சிரயோகம் பாவராசியில்நிற்கில் அசுபயோகம் சுபராசியில் நிற்கில்சுபயோகம் சுட்காராசியில்நிற்கில் கிரியோகம் செலராசியில்நிற்கில் சமுத்திரயோகம் உபையராசியில் நிற்கில் ஞானயோகம் சராராசியினிற்கில் இராசயோகம் திரராசியில்நிற்கில் முசலயோகம் லக்கினமுதல் ஒன்றிடைவிட்டுநிற்கில் சக்கரயோகம் இதன்பலன் இராசசமானயோகம் வைத்துக்கொண்டுப் பாவகாரகப்பலமுங்கூட்டிச் சொல்லுக இவையோக பலத்தியல்பு எ-று. (௫௰)

யோகாதிசயப்படலம்.

முற்றிற்று.

ஆகப்படலம் உஅ க்கு, கவி உ௱அ௩.

---

## மகாதிசைப்பலப் படலம்.

இயல்புளயோகப்பெயருமிதன்பலமிவ்வளவு
 மின்னதின்னதென்னவகுத்தின்னமிழ்திற்கலந்த
பயமதுவாழைப்பழம்பலாப்பழமாம்பழமப்
 பாற்பழமிரண்டுமொன்ருய்ப்பதபாகமாகச்

சுயருசியாய்வங்காளச்சீனிகண்டக்காரத்
துடனேகமாய்த்திரட்டித்துண்டுதுண்டாயுருட்டிச்
செயலுளபாலர்க்குணவாய்ச்சிறிதுசிறிதாகச்
செலுத்துதல்போற்சொலவெனதுசெவிக்குணவாகியதே.

(இ-ள்.) இயல்புள்ள யோகப்பெயரும் இதன்பலனும் அடியேனுக்குத் தெரியும்படிக்கு இது இன்னதின்னதென்று வகுத்து இனிய தேவாமிர்தத்திற்கலந்த பாலும், தேனும், முப்பழமும், பேரீத்தம்பழமும், முந்திரிகைப்பழமும், நல்லபதபாகருசியாக ருசிக்கவேண்டி வங்காளச் சீனியும், சீனிக்கற்கண்டும், சற்கரையுமாக ஒன்றாகச் சேகரித்துத்திரட்டிச் சிறுகச்சிறுக உருட்டி பரக்கியாதிகமான சிறுகுழந்தைகளுக்குப் பொசிப்பாகும்படிக்குச் சிறிதுசிறிதாகச் செலுத்துதல்போலத்தேவரீர்திருவுளம்பற்றினது அடியேனுடைய செவிக்கு உணவாகியது. எ-று. (க)

செவிக்குணவாம்படியோகப்பலனுரைத்தபடிமா
திசைமுதன்மற்றுளபலமுந்திருவுளஞ்சற்றிரங்கிக்
கவித்திறமாய்ச்சுவைப்பொருளாய்க்கலைக்கியானக்கனியாய்க்
கற்பவர்கேட்பவர்கள்கர்ணவமிர்தமிதெக்காலம்
பலிப்பதெனப்புவிப்புலவோர்படிப்பதுமெப்படியிப்
படியிலளப்பளக்கிலுரைப்படியாற்சொற்படியாற்
குவிப்பதிதுவதிசெயமாமென்பதற்கன்பாகக்
கூறுமெனுமுனிக்குரைத்தஆறுமுகக்குருவே.

(இ-ள்.) தேவரீர் அடியேனுடைய செவிக்கு உணவாகும்படி திருவுளம்பற்றியயோகாதிசயப்பலன்போல் மகாதிசை முதலாகிய பலன்களெல்லாம் அடியேனுக்குத் தெரியும்படி திருவுளத்திலே சற்றுக்கிருபைவைத்துக் கவித்திறமாகச் சுவைப்பொருளாகக் கலைக்கியானக்கனியென்று சொல்லும்படி கற்பவர்கேட்பவர் இதுவே கர்ணமிர்தமெனவும் இதுநமக்கு எந்தக்காலம் பலிக்குமெனவும் சகலவித்துவான்களும் இதனையெப்படிப் படிப்பதென்றும் உலகில் அளப்பளக்கில்பொருளாகியபடியினாலும் சொல்லாகியபடியினாலும் அளந்து குவிப்பதற்கு அளவில்லையென்றும் மகா அதிசெய மென்றும் துத்தியம்பண்ணவேண்டித் தேவரீர்திருவுளம்பற்றவேண்டுவதென்று அகத்தியமாமுனிவிண்ணப்பஞ்செய்யாமுன்னம் திருவாய்மலர்ந்தருளினவன் ஆறுமுகத்துடனே யெழுந்தருளிய சற்குருநாதன். எ-று. (உ)

திசாபலன் சொல்லும்பகை.

குருமுதன்மாலளவுமுளகாரகமுஞ்செடமாய்க்
குறித்திடுகாரகமுமிதற்குடையபலாபலமு

மொருவனிரண்டகமனெனிலதற்கதுவாய்த்திசைநா
ளுளதுமிரண்டாகவகுத்துரைத்திடுவருாக
ரிருவரதிலரவுசுபபலஞ்சிகிதுற்பலமா
யாவருக்குமியம்புவரிப்பலமுழுதெப்பொழுது
தருவரெனிலவாருக்கிசைத்ததுங்கண்டிவர்க
டாற்காலத்துறவறிந்துந்திசைத்திறஞ்சாற்றுதலே.

(இ-ள்.) குருமுதற்புதன்ஈறாக இவர்களுடைய காரகமும், லக்கின முதலாயுள்ளகாரகமும்வைத்து இதற்குள்ள பலாபலமும் அறிந்து ஒருவனுக்குவீடு ௨, ஆகில் அந்தவீட்டுக்குள்ள பாவகமும் அறிந்து இதற்கு அவனவன் திசைநாளும் இரண்டாகப் பகுந்துவைத்தும்திசா பலன்சொல்லுக இராகுகேது இருவரில் இராகுவுக்குச் சுபபலமும் கேதுவுக்குத் துற்பலமும் சொல்லுக. இப்பலத்தை இவர்கள்கொடுப் பது எப்பொழுதென்னில்முன் இவர்களுக்குச்சொன்னபலங்கொடுக் குங்காலமறிந்தும் தற் ாலமித்திர பாவங்கண்டுஞ் சொல்லுக. எ-று.

மாரகதிசை.

திசைமூன்றுபேழளவுநீசனெமனினணைச்
சேர்ந்தவனன்றேற்பவுமன்சேற்கிறைநண்ணலர்நே
ரிசைவதுமூன்றைந்தேழாய்க்கிம்மிடைதீர்க்காயுக்
கெய்துதலும்பாகாந்தத்திருந்தவன்மாரகப்பேர்
வசையுதரத்தவர்காலப்பகைஞருபக்கிரகர்
மருவினரிற்குடைடிர்சிகிவளவுமனைக்குடையோ
ளசடர்சுபர்மதிக்கிசையிலணையிலிதற்கவர்பா
சகப்பெயர்சத்துருதிசையுமவமிருத்தாகுவதே.

(இ-ள்.) ௩ ம் திசைநீசம் அடைந்தவன்திசையும், ௪ ம், திசைசனி திசையும், ௫ ம், திசைஅத்தமனமடைந்தவன் அல்லது செவ்வாய் திசையும், ௬ ம், திசை குருதிசையும், ௭ ம், திசைசத்துரு திசையும், அற்பாயுவுக்கு ௩ ம், திசையும், மத்திமாயுவுக்கு ௫ ம், திசையும், தீர்க்காயுவுக்கு ௭ ம், திசையும், பாகாந்தத்தில் இருந்தவன் திசையும், மாரகதிசையாம், அ ௬ க்குடையவர்கள் காலப்பகைஞர், உபக்கிரக ரிருந்த ம னக்குடை யவர்கள், இவர்களுடன்கூடினவர்கள் திசையும், ௭து இ ந்தவீட்டுக்குடையவன் திசையும், மதிக்கு, ௪ ம ல், பாவர் சுப ர்கலந்திருக்கில் அப்பாவர்திசையும், பாசகவற்கச்சத்துருதிசையும், அவமிருத்தானதிசை. எ-று. (௪)

இதுவுமது, அக்ஷரதேவதாதிசை.

அவனியுதையப்புருடற்கேழுதையம்பெண்ணுக்
கவிமுகம்வைத்தத்தொகையோடதனுமுதற்பெயராய்த்
தவமளவுங்கூட்டியதைப்பகிர்தல்சரமுதற்காந்
தற்றுரைகயின்மிக்கவமொன்றேறறளலதற்கா
மிவர்களிருப்பதற்கணிமாரகதிசைமற்றுளதுக்
கிசைப்பதுகாரகமெழுத்திரொன்பதுமீரறநோ
பவுமனிரசதமால்பொன்பங்கினனிந்தகியப்
பணியகரதிசைத்திறமாய்ப்பகர்வதற்காமே.

(இ-ள்.) பூவோதையலக்கினம் புருடராசியாகில் இதற்கு எ மிடமே லக்கினமாகவைத்தும், ஸ்திரீ ராசியாகில் இதற்கபிமுகராசியேலக்கினமாக வைத்தும், இந்தலக்கினந்தொட்டு முன்சொன்ன லக்கின திசைபோல நடத்தியவருடத்தில் புருடராசிக்கமைத்த லக்கினம் சரமாகில் எ ம், திரமாகில் அ ம், உபையமாகில் கூ ம், கூடக்கூட்டிப்பகிர்ந்தவருடம்வைத்து நடத்துக. அபிமுகராசி லக்கினத்துக்கு உள்ளபடி நடத்தியவருடத்தில் உச்சத்துக்கு ஒருவருடம் கூட்டியும் நீசத்துக்கு ஒருவருடம் குறைத்தும் நடத்துக இந்தப்படி நடத்துங்கால் இந்த லக்கினதிபரிருந்த வீட்டுக்கு ௩ மிடத்திசையே மாரகதிசை. மற்றுள்ளதற்குக் காரகபலம்வைத்துச்சொல்லுக. இதன்மேல் அக்ஷரதேவதாதிசையறியும்படி, ககக முதல் னகரம்ஈறுகிய பதினெட்டு மெய்யினுள் ககரஙகரத்துக்குச் சேய்தேவதை; சகரஞகரத்துக்கு வெள்ளி, டகரணகரத்துக்குப்புதன், தகரநகரத்துக்குக் குரு, பகரமகரத்துக்குச்சனி, யகரரகரத்துக்குரவி, லகரவகரத்துக்குமதி, ழகரளகரத்துக்கு இராகு றகரனகரத்துக்குக்கேது, உயிரெழுத்து ௰உ க்கும் யகரவரிக்கற்றபடியென்க இவர்களுக்குமுன்சொன்ன திசைவருடமே வருடமென்க. இந்தப்படி அவனவன் நாமநட்சத்திர முதற்றெட்டு நடத்துவதில் மிருதாக்ஷரந்தள்ளி நடத்துக இஃது அக்ஷரதேவதாதிசை. எ-று. (ரு)

மிருத்துதிசை சுபாசுபபலதிசை.

ஆகுதலத்திவியாகில்சனிரவியற்ககிசுற்
கானபுடத்தினதிசையுமண்ணல்வெயிற்கவமா
யேகமிதையத்தசுபர்கலக்கிலகிதத்
தினர்திசையுமிருத்துபையராசியிகத்துதைய
தேகமெனவரிற்புதன்பொன்னுக்கபலஞ்சனிகட்
செவிக்குநலபலம்பவனதிசைக்குளதிற்பலமா
யோகையினர்வரிலபகார்ரப்பலமிப்பலமே
லுரைப்பதுங்கோசாரபலமென்றவனெனுளுற்றவனே.

(இ-ள்.) திவாகாலசெனனமாகில்ரனிரவிபுடத்தைக்கூட்டிக்கண்ட தினதிசையும் நிசியாகில்சனிராகு புடத்தைக்கூட்டி கண்டதினதிசையும், லக்கினேசனுக்காவது ரவிக்காவது க ச ரு அ ல், பாவர்சுபர் கலக்கில் அப்பாவர்திசையும் மிருத்துதிசையென்ப. உபையராசி லக்கினமாகில் புதகுருதிசை துற்பெலமென்ப. சனிராகுதிசைசுபபலமென்ப பாவகதிசைக்கு அந்தந்தப் பாவகத்துக்குள்ளபலமென்ப. இத்திசைப்பலம்போல அபகாரபலமுஞ்சொல்லுக இதன்மேற் இதன்மேற் கோசாரபலமுஞ் சொல்லுவோமென்று திருவாய்மலாந்தருளினவன் என்னிதயாசனத்தில் எழுந்தருளியிருப்பவனான சுப்பிரமணியக்கடவுள். எ-று. (சு)

மகாதிசைப்படலம்.

முற்றிற்று.

ஆகப்படலம் உ௰சு க்கு கவி உா௮௰சு.

---

# கோசரபலப்படலம்.

உற்றிடுபாசகப்பகையிலுபக்கிரகரிருப்பி
 லொன்றுயமூன்றளவுமட்டவற்கமுறும்பரலிற்
பற்றலரிந்தனல்சிகிபங்கிவர்கூடிலிதற்கிப்
 பாருதையத்தினிலுறல்பார்த்தவரதிபர்க்கிசையச்
சொற்றிடுகாரகப்பலந்துற்பலந்தினகண்டத்துஞ்
 சூன்யமுற்றவிடத்துமிவர்தோன்றிடின்மாரணமா
முற்றலநேர்கிரசகிதப்பலமப்பலமாய்
 மொழிவதுங்கோசரபலமுன்மதிமுதற்காகுவதே.

(இ-ள்.) பாசகாதிபர்க்குச்சொன்ன பகைத்தானத்திலும், உபகிரகங்களிருந்தவிடத்தும், அட்டவற்கத்தில் கண்டபரல் க உ ௩ ஆக இருந்தஇடத்தும் சேய்சனிகேது வருங்காலம் அந்த இடத்திற் செனனகாலமிருந்தவன் பார்த்தவன் உடையவன் அப்பாவகம் இதற்குடைய காரகங்களுக்கு துற்பலஞ்சொல்லுக. சொல்வதில் தாற்காலமுற்ற கிரககாரகமுங் கண்டுசொல்லுக, இதில் நட்சேத்திரகண்டமாகவருமிடத்தும் பரல் சூன்னியமுள்ள இடத்தும், சனிசேய்கேது நடுங்காலம் மாரணமென்ப. லக்கினமுதல் நேர்கிரகசகிதமாகில் கிரகசகிதப்பலன் சொல்லுக. கோசரபலத்துக்குச் செனனகாலசந்திரலக்கினமே லக்கினமாகவைத்துச் சொல்லுக. (க)

உவசெயத்துக்கரமீறிலுள்ளிதுவேளொன்றுங்
குறைதுயின்முன்னதுமிசையிலூழ்க்குளதுக்கீறுஞ்
டவமதெட்டேண்போக்கணனேய்தாற்குடற்சேய்துயிரு
டவமிதன்மேல்வேளுள்பவந்தனந்தவத்துக்கணியி
லவம்வியம்பத்தும்மாறேழறமிசையற்றலதுக்
காறணிபத்தறமுளணனுதிரிபுவனற்போ
லிவரினனேர்க்கிவருறலொன்றசிதன்முதற்சிகிவில்
லியர்மூரியானொருவலவனிவரரவீறவமே.

(இ-ள்.) ரவிக்கு ௩ ௯ ௰ ௧௧ சுபபலம் இதற்கு ௬ ௧௨ ௪ ௬ சுத்தமாகிற்சொல்லுக மதிக்கு ௩ ௯ ௭ ௰ ௧௧ சுபபலம் இதற்கு ௮ ௬ ௧௨ ௨ ௪ ௫ சுத்தமாகில் சேய்க்கு ௨ ௯ ௧௧ சுபபலம் இதற்கு ௧௨ ௫ ௬ சுத்தமாகில் புதனுக்கு ௮ ௨ ௰ ௧௧ ௬ சுபபலம் இதற்கு ௧ ௫ ௮ ௧௨ ௬ சுத்தமாகில் குருவுக்கு ௭ ௫ ௧௧ ௨ ௬ சுபபலம் இதற்கு ௩ ௪ ௮ ௧௨ ௰ சுத்தமாகில் சுக்கிரனுக்கு ௧ ௨ ௩ ௪ ௫ ௮ ௧௧ ௧௨ சுபபலம் இதற்கு ௯ ௩ ௰ ௬ ௫ ௧௧ ௧ ௯ சுத்தமாகில் சனிராகு கேதுவு க்குச் சேய்க்குச்சொன்னபடிசொல்லுக இதன்மேலும் ௧ ல் சனி ௨ ல் கேது ௩ ல்குரு ௪ ல் புதன் ௫ ல் ரவி ௯ ல்சுக்கிரன் ௭ ல் செவ்வாய் ௮ ல் மதி ௬ ல் இராகு இருக்கில் ஆகாது. எ-று. (௨)

அவரவருக்குரைத்ததல்லாற்பூவுதையத்ததனி
லண்ணலிற்கோண்குருவபலமதிபார்க்கப்பலமா
மிவர்களுதைப்பில்வேதைக்கிவருறிலிப்பலம்வாக்
கெட்டிதையத்தொன்றனேயில்வீழ்தலிலெய்துதனற்
பவருறின்மூன்றுதியிற்பங்குறப்பவுமன்பார்க்கிற்
பாரிசுதவாத்மபயம்பத்தினிற்பற்றியதபான்
புவனமகனேக்கூடிற்பதிவிடல்கேடொளிக்கிற்
பொற்கலசவிதன்மேலாண்டதனியல்புக்குளதே.

(இ-ள்.) அவரவருக்குச்சொன்னதல்லாமலும் சென்மலக்கினத்து ம்லக்கினேசத் திரிகோணத்திலும் குருவரில்சிற்பலம் மதிபார்க்கிற் பலமென்ப கிரகவுதைப்பில் வேதையில்வரில் அப்பெயர்ப்பகுக்கு பலன் சொல்லுக ௨ ௫ ௮ ல் ஆவது ௧ ௪ ஆவது ௯ ௮ ௧௨ ல் ஆவ து பாவர்நால்வர் சேகரிக்கிலும் ௩ மிடம் முதற்காலிற் சனி யிருக் கச் சேய்பார்க்கிலும் தாரசுத ஆத்மபயமென்ப ௰ ல் குருவும்சேயுங்

கூடில்தானசலனமென்ப சு அ கஉ ல் இருக்கில் தனநாசமென்ப இத ன்மேல் அகத்தியமாமுனியே வருடப்பலஞ்சொல்லுவோம்.

கோசரப்படலம்.

முற்றிற்று.

ஆகப்படலம் ரு௰ க்கு கவி சுாசு௰உ.

---

## வருஷப்பலப் படலம்.

ஆண்டுதையவாரமுதன்மூன்றுதினங்கனல்வைத்
    தவர்கடிகையிற்பெருக்கியாவருக்கும்பலமாய்க்
காண்டலிதற்கனுபவமுமவ்வருஷமனவன்
    கல்யமுதற்கெதற்கதிபனௌபலமக்கதியாஞ்
சேண்டபனன்மறைந்திடிலத்தினத்திசைவைத்துரைப்பார்
    திவியிரவுக்கிடையெனில்ராசிக்கிறைவன்றிசையா
மீண்டிவர்கள்சாதகத்தன்றெத்திறபத்திரமா
    யெத்திசைக்குஞ்சொல்வரிதன்மேன்மாதத்தியல்பே.

(இ-ள்.) வருஷப்பிறப்புபகலாகில் அற்றைவாராதிபன் திசைமுத லாகவைத்துவருஷம் க க்கு நாள் ரு நாழிகை ரு மாகப்பெருக்கி நேர் திசைநடத்துக இதற்கு இவர்கள் செனனகாலத்து இயல்பு அறிந்து பலமுஞ்சொலலுக இதல்லாமலும் அந்தவருஷராசன் செனனகாலத் தில் எந்தப்பாவகாதிபதியோ அந்தப்பாவகப்பலமுங்கூட்டிச் சொல் லுக வருஷம் நிசியாகில் அற்றை நட்சேத்திரத்திசைமுதல் நேர்நடத் துக சந்தியாகில் அந்தவருஷலக்கினாதிபன்முதல் நடத்துக இதுவரு டப்பலமென்ப இதன்மேல் மாதப்பலஞ்சொல்லுவோம்.

வருஷப்பலப்படலம்.

முற்றிற்று.

ஆகப்படலம் ரு௰க க்கு கவி உாசு௰உ.

---

## மாதப்பலப் படலம்.

---

மாதவுதையத்துடுமுன்மேலாறுமூன்று
    மாகவகுப்பதுசுபமத்திமநோமாதத்

தாதலளவுதைய தினமாய்தாரத்தேற்றி
 யதையிருநான்குக்கீவதாறிரண்டைந்தும்மா
மீதபலஞ்சேலைமுறமன்முடிப்பெண்ணுணவ்
 வெண்டிருதீயாழ்தைநுகம்வெயிலிவைமாதேந்த்ர
மீதயநேர்காணுள்வைத்தித்திசைமுற்பலமா
 யாவையுங்கண்டிசைப்பரிதன்மேற்றினத்துக்கியல்பே.

(இ-ள்.) மாதம்பிறந்தநட்சேத்திரத்துக்கு முன்பின்புள்ள நட்சேத்திரந்தொட்டு ௬ ம் ௩ ம் ஆகநேர்நடத்துவது சுபபலம் நிற்பலமென்க, இதல்லாமலும் சென்மநட்சேத்திரமுதல் மாதோதைய நட்சேத்திரம்வரைக் கெண்ணிக்கண்டதை யேழிற்பெருக்கி யெட்டிற்கழித்துக்கண்டதில் ௨ ௫ ௬ அதிகபலமென்க. மற்றது நிற்பலமென்க இதல்லாமலும் சித்திரைமாதமுதல் நேர்சித்திரை, விசாகம், கேட்டை, உத்திராடம், அவிட்டம், பூரட்டாதி, அசுபதி, சார்த்திகை, ஆதிரை, பூசம், மகம், உத்திரம், இவைமாதேந்திரமென்ப சித்திரைமாதமுதல் இத்தினதிசைநேர்வைத்து வருஷம் க க்கு வ நாளாகப்பெருக்கி முன்சொன்ன வருஷத்திசாபலன் சொல்லுக இவ்வகைப்படி பலஞ்சேகரித்துப் பலஞ்சொல்வதுமாதப்பலமென்ப இதன்மேற்றினபலஞ் சொல்லுவோம். எ-று. (க)

மாதப்பலப்படலம்.

முற்றிற்று.

ஆகப்படலம் ௩௰௨ க்கு கவி ௨௱௬௰௪.

---

# தினபலப்படலம்.

---

தினவேதைக்குளதறிந்துமிதற்குறைத்தபலத்தின்
 றிறமறிந்துமத்தினம்வாரந்திதிசேகரமாய்
மூனராதியத்தினமீருமதனுக்குயர்த்தி
 மும்மூன்றுக்கீயமுதற்றினத்திசைமன்முதலாக்
கினதேதத்திசைநேர்வைத்தாண்டரைநாழிகையாக்
 கெதமுளதிற்பலமாயதெட்டதனுக்கீய
வினனேரத்திக்கிறைநேரேழரைநாழிகையா
 யியப்புதலத்தினபலத்திலிதுவுமொருபலமே.

(இ-ள்.) நித்தியவேதைக்கண்டறிந்தும், இதற்குரைத்த பலாபலமறிந்தும் அற்றைத்திவார நட்சேத்திர மூன்றுங்கூட்டிச் சென்மநட்

சேத்திரமுதல் அற்றைநட்சேத்திரம் வரைக்கெண்ணிக் கண்டதொகையிற்பெருக்கி ௬-ல் கழித்துநின்ற தொகையைச்சென்ம நட்சேத்திரத்திசைநாதன் முதலாக வைத்துக்கண்ட கிரகதிசையாக வருஷம் ஒன்றுக்கு அரைநாழிகையாகப் பெருக்கிக்கெதம் நடத்திய பலன் போல இத்திசாபலமுஞ் சொல்லுக ௬-ல், கழிப்பதற்கு முன்னிருந்த தொகையை அ-ல், கழித்து ரவிமுதல் ராகுவரை திக்கதிபரிற்கண்ட கிரகமுதல் உதையாதி எ-ல் நாழிகையாக அ-சாமத்துக்குப் பலன் சொல்லுக இதுவுந்தினபலத்திலொருபலம். எ-று,　(௧)

ஒருமுதலக்கயலளவற்பகற்கிதுவென்பதினு
　லுதிக்குமவ்வாரத்துள தாயத்தையமுதற்றறிக்காற்
கிரகநடப்பதிலுள துங்கிழமையுணற்குளதுங்
　கெதபலத்திற்பலமாய்ப்புட்கிசைத்தபலத்துடனே
தரைவருசென்மாதிதினத்ததிமுதலக்கோனோர்
　சாற்றுதிசாபலமுமச்சாதகப்பலத்துத்தரமாய்த்
தெரிதரயாவர்க்குமுரைத்திடுதறினப்பலமாந்
　தெற்கிறைசக்கரப்பலமுமிதன்மேற்செப்புதலே.

(இ-ள்.) மேடாதிமீனம்வரை இராப்பகற்குப் பிரித்திருப்பதினுல் வந்த அந்த வாராதிபர்க்குள்ள ராசியை உதையமுதல் வைத்துத்தக்காற்கிரகமும் வைத்து நேர்நடத்துவதினுலும் வாரவுண் நடத்துவதினுலும், முன்போலுமிவர்களைப் பஃவகாதிபவற்கம்வைத்துப்பலன் சொல்லுக. இப்பலத்துடனே பஞ்சபட்சிபலமுங்கூட்டிச் சென்மாதி நட்சேத்திரமுதல் தினப்படிகண்ட நட்சேத்திரத்தைவைத்து அதற்குடையவன் திசைதொட்டுச் சாதகபலன்போலப் பலன் சொல்லுக இதன்மேல் காலசக்கரப்பலஞ் சொல்லுவோம். எ-று.　(௨)

தினப்பலப் படலம்

முற்றிற்று.

ஆகப்படலம்,௩௩க்கு கவி-௨௱௬௬

---

# காலசக்கர நரசக்கரப்பலப் படலம்.

சக்கரன்சேய்க்கொருதனேய்தபனன்முதலெழுவர்
　தலமுதற்பேரனுவாகச்சாற்றுதிசைநாத
ருக்கதர்மதர்மரெனிவிப்பெயர்போற்பலமா
　யுரைப்பபரபகாரமுமத்தலத்தியல்போலுளதா
மக்கிரமமாகவருமிருகரசினவலோ
　கனத்தியன்மீன்றேளாகிலனற்கருவியரச

ரொக்கலலர்சோரபயந்தளேசிறைதற்போ னு
முடற்பதனம்பவரிடையுற்றிருக்கினுரைப்பதுவே.

(இ-ள்.) சக்கிராயுதனுக்குப்பவுத்திரனான அகத்தியமா முனியே ரவியாதிசனிவரை யெழுவரும் திசைநாதராக வருமிடத்தில் அந்தந்தக் கிரகமுதலும் அதற்குடையவர்கள் பெயரடுத்தும் மேடச்செவ்வாய், இடபசுக்கிரன், மிதுனபுதன், கடகச்சந்திரன் சிங்கஆதித்தன் கன்னிப்புதன், துலாச்சுக்கிரன், விருச்சிகச்செவ்வாய், தனுர்வியாழன் மகரச்சனி, கும்பச்சனி மீனவியாழமென்பனவாகப் பன்னிரண்டுபாவகத்துக்கும் பெயர்நடத்துக. இந்தப்படி நடத்துமிடத்திற் பாவர்சுபர் அறிந்துபலமுமப்படிச்சொல்லுக அபகாரபலமும் பாவகபலம் போலச்சொல்லுக இதில் தப்புப்பாய்ச் சலாகவருமிடத்தில் மீனத்தில்நின்று விருச்சிகத்திற்றாண்டுங்காலம் இடையிற்பாவகக் கிரகங்களுமிருக்கில் கருவியாக்கினிசோரபயம், இராசவிரோதம் இனசனவிரோதம், சத்துருபயம், தளேசிறைகாவற்கட்டு ஆற்பனசமானசரீரபதனம் உண்டாம். எ-று. (௧)

உரைப்பதயஞ்சிலேயாகினுயிர்த்தவன்றன்றனேய
ருடற்பரதியல்லவெனிற்றன்னுடையவுடற்போம்
வரைக்குவருமென்பர்துரகதவவலோகனமாய்
வரின்முனரிற்சொற்பபலமண்டூகெகதியாய்
விரைக்குழல்கற்கடகமெனிற்களமரணஞ்சீயம்
வீணையெனிற்பிதுர்மரணமிதுனமரிமேவி
லரைக்கதின்மேல்விரணமிதற்கிடைபசடரிருக்கி
லரசர்பயந்தலபேதமகாலமரணமுமே.

(இ-ள்.) மேடத்தில்நின்று தனுப்பிரவேசமாகில் பிதிர்புத்திர களத்திரபயம் அல்லது தன்னுடைய சரீரபயமென்க. துரகத லோகாபனமாகில் இப்பலஞ்சொற்பமென்க. மண்டூகெகதியாகக் கன்னியில்நின்று கடகப்பிரவேசமாகில் களத்திரதோஷஞ்சொல்லுக சிங்கத்தில் நின்று மிதுனந்தாண்டில் பிதுர்தோஷஞ்சொல்லுக மிதுனத்தில்நின்று சிங்கந்தாண்டில் அரைக்குமேல் விரணஞ்சொல்லுகஇக்கெதிகளுக்குஇடையிற் பாவர்நிற்கில் இராசகோபம் தானசலனம் அகாலமரணம். எ-று.

காலனேப்பெற்றவன்முதலாகக்கசடர்திசையாகுங்
காலமபகாரமுமப்படியாகக்கதியு
மேனுயர்தல்விழலாகின்மெய்பதனமெனவும்
விளம்புவர்மற்றுளசுபமுடிக்குறின்மிக்குளதாஞ்

சாலுதையமேலுநரசக்கரத்துக்கியல்கேள்
 சனிக்கனலுக்கிடைவாய்மற்றவாக்கரைக்கம்மவமா
மோலிமனர்க்குறவகங்கைதனநடைதாளுதா
 மூணலமற்றிடமாகின்மொழிவதவமெனுமே.

(இ-ள்.) ரவியாதிபாவருடையதிசை அபகாரச்சித்திரஞ் சேகரிக்குங்காலம் தப்புப்பாய்ச்சலுங்கூடிற் சீரபதனம்சொல்லுக. சுபவற்கஞ் சேகரமாகில் சுபாதிகபலஞ்சொல்லுக. இதன்மேற்கும்போதயனே நரசக்கரத்தியல்புங் கேட்பாயாக சனிசேய்க்கு அரையிலும், வாயிலும், மற்றவர்க்கு அரையிலும் சிரசிலும் நிற்பலமென்க ஆகையால் சிரசில் அரசுருறவு கையில் தனலாபம் காலிற் சஞ்சாரம் வயிற்றிலூண் மற்ற இடங்களுக்கெல்லாம் சுபபலம் வைத்து நடத்துக இந்தத்தானங்களுக்கெல்லாம் இடப்புறமாகிற் றுற்பலஞ்சொல்லுக. எ-று. (கூ)

காலசக்கரநட்சேக்கரப்பலப்படலம்

முற்றிற்று.

ஆகப்படலம்-கூச-க்கு கவி உ௱கூகூ.

---

# அட்டவற்கப்பலப் படலம்.

---

தவமுனியேயட்டவற்கப்பலமதுவுங்கேளா
 தவன்முதலக்கினம்வரையெட்டாதலிதைத்தகர்நேர்
பவனமிராறிற்பகுத்தல்பின்னமிப்பாவகத்தைப்
 பானுமுதலெட்டுளதிற்பகுத்திடுமேப்புவனத்
திவர்களுநிற்ப்ரத்தியாரமென்பரதன்பலத்துக்
 கிதுவதிகசூட்சபலமிவையொருசேகரமா
யவர்கள்வகைப்பரல்கூடிலிவைசருவாட்டகப்பே
 ராகுமெனக்கூறினன்சந்தாசலத்தாதிபனே.

(இ-ள்.) தவசினையுடைய அகத்தியமாமுனியே அட்டவற்கப் பலமுங்கேட்பாயாக ரவிமுதல்சனிவரை, எ-ம் லக்கினம் க-ம் ஆக எட்டும் அட்டவற்கமென்ப இவைமேடாதியாகநிரத்துவது பின்னாட்டவற்கமென்ப இவ்வட்டவற்கம் அ-ம் மேடாதி யிஉ-ல் பெருக்கிக்கண்டகூரு, வீட்டிலும் நிரத்துவது பிரத்திபாராட்டவற்கமென்ப அதன்பலனுக்கு இது அதிகநுட்பமான பலனென்ப இவைசேகரமாகவைத்து ரவியாதிகிரகப்பாலும் வகைப்படி கூடில் சருவாட்டகமென்று திருவாய்மலர்ந்தருளினவன் சந்தன சயிலத்தையுடைய சுப்பிரமணியக் கடவுள். எ-று, (க)

ஆதவனேர்சனியீருயவரவர்கள்பாலுக்
கமைத்தவயதிற்றினத்திலசிதனுங்கோசரத்தாற்
பாதகரோடுடன்கூடிப்பற்றிலந்தவற்கம்
பதனமெனலாதிப்பவனமுதற்சரணீ
ரேறுதிடிலிப்பாவகத்துக்குள்ளதுமப்படியா
முதையமுதனுற்கோணுக்கொக்கலொருவன்கீ
ழீதல்கெடுத்திடன்மீனேர்யாவையுமூன்றுக்கி
லிளமைமுதற்பலமுளதாம்பரலதிகத்தெனுமே.

(இ-ள்.) ரவிமுதற்சனியீருக அவரவருக்குக்கண்ட வயசு தின கண்டத்தில் சனிபாவர்சகிதமாகக் கோசரத்தில் வருவதுகண்டு அந் தந்தவற்கங்களுக்குத் தோஷஞ்சொல்லுவதால் லக்கினமுதல் பாவகம் யஉ-க்கும் அந்தப்படி சருவாட்டக வற்கத்திற்கண்ட பரல்கொண்டு பாவகவற்கப்பலமுஞ்சொல்லுக. லக்கினமுதல் நாற்கோணும்பகுத்து க்காணில் லக்கினகோண் பரலேறில் பந்துசனத்தோடுங்கூடி சீவிப்ப னென்க. உ-ம், கோணுக்குச் சேவகாவிருத்தியென்க. ௩-ம், கோணு க்கு சஊரெட்சகனென்க ௪-ம், கோணுக்கு சனகிற்கண்டகத்தாற்சீ... னமென்க. மீனமுதல் நாலினும்பரல் அதிகமாகில் வாலவயதிற் பாக்கி யமென்க. கடகமுதல் நாலினும்பரல் அதிகமாயின் நடுவயதிற் பாக்கிய மென்க விருச்சிகமுதல் நாலினும்பரல் அதிகமாயின் அமரவயதிற் பாக்கியமென்க. எ-று. (உ)

பரலதிகங்கேந்திரமப்பாலிரண்டுக்கவன்சேய்
பயந்தவனப்படியாம்பத்தாதிவரைநான்கும்
வரலதனிலதிகம்விழன்மற்றெனில்வாழ்வுளதா
மனேமனேக்கெப்பரலோவப்பரற்படிவர்தனேயா
மிரவிமுதலுள்ளவர்களிருப்புமுதலுதைய
மீருகக்கண்டதையேழுற்பெருக்கியிதைநாட்
குரைசெயிலத்தினம்வயதுமவரவருக்குளதா
யுரைப்பரினிப்பொதுப்பலத்துக்குள்ளதுரைப்பதுவே.

(இ-ள்.) கேந்திரப்பாலதிகமாகில் சாதகன் பாக்கியவானென்க, பணபரமாகில் புத்திரன் பாக்கியவானென்க, ஆபோக்கிலிபமாகில் பிதாபாக்கியவானென்க. சருவாட்டகவற்கத்திற்கண்ட - ய மிடப்பர லில், யக-மிடப்பாலெறியும் கக-க்கு யஉ-ல், குறைந்தும் யஉ - க்கு லக்கினப்பரலேறியு மிருக்கில் அதிகவாழ்வுடையவனென்க. லக்கி னமுதல் கஉ-வரைக்கும் பரல் அதிகம் தாழ்வு அறிந்து பாவகப் பலமும் அந்தப்படி சொல்லுக. ரவிமுதலானவர் இருந்த தானம்

தொட்டு லக்கினம்வரையெண்ணிக் கண்டதொகையை எ-ல்பெருக்கி உஎ-ல் கழித்து அவரவருக்கு வயதுதினகண்டஞ்சொல்லுக இதன் மேற் பொதுப்பலஞ்சொல்லுவோம். எ-று. (௩)

அட்டவர்க்கப்படலம்

முற்றிற்று.

ஆகப்படலம், ௩௫-க்கு, கவி ௩௱உ.

---

## சமுதாயப்பலப் படலம்.

பொதுப்பலமேபலமாகயாவருக்குஞ்சமமாய்ப்
புகல்வதினாற்சிறிதுளதும்பொய்ப்பதுமற்றுளதாற்
றுதிப்பவர்போலெடுத்துரைத்தலுதாரமித்தியமாய்ச்
சோதிடத்தோன்வீண்வார்த்தைசொற்றிடச்சம்மதிபா
னுப்பதுமற்றுளதுவுமுளமுடல்வாக்கிவைகே
ரொருகுணமாய்ச்சகலருக்குமுற்றிடினுன்றாதை
விதிப்பதொரானனமாகிற்பொதுப்பலமும்பலமாம்
வேணியனேயென்றனன்றூர்வெயிலயில்வேலவனே.

(இ-ள்.) பொதுப்பலமேபலமாகயாவருக்குஞ்சொல்லுங்கால்பொய் மிகுதியும் மெற்சொற்பமுமாகக்காண்பதினால் உதாரமித்தியமாகத் துத்திபம்பண்ணுகிறது போலக்காணப்படுகிறது ஆதலாற் சோதிடவான் வீண்வார்த்தைசொல்வதற்குச் சம்மதியான் செனனமரணமும் மனம்வாக்குக்காயமும் யாவருக்கும் ஒன்றுபோல இருக்கவும் பிரம கற்பனையால் யாவருக்கும் ஒருமுகமாக இருக்கவுங்கண்டால் ஒருவனுக்குச்சொல்லும்பலன் யாவருக்குஞ்சரிகாணும் அகத்தியமாமுனி யேயென்று திருவாய்மலர்ந்தருளினவன் கூர்மைதங்கியவெற்றிபமாலை சூடிய பிரகாசம் பொருந்தியவேலாயுதன்.

வேலவுனன்பரிடத்தன்பருங்கன்புடையேன்
விளம்பியவிண்ணப்பமிது திருச்செவிக்குமேற
தாலெனினுமன்னையரின்பாலமிர்தமருந்தி
யன்புடைமைசெய்தவர்களகிருசிச்சொல்லளித்தும்
பாலகர்தம்மழலைமொழிகேட்டிதையங்களித்தப்
பானுமின்னமின்னமெனப்பகர்வதுபோலசுரர்

காலசுரானுகூலதிருவுளஞ்சற்றிரங்கிக்
　　கழறெனவன்புறுமுனிக்காய்க்கழறினன்காங்கையனே.

(இ-ள்.) வேலாயுததேவரீரிடத்தில் அன்புசெய்யும் அன்பருக்கும் அன்புசெய்யாநின்றநாயடியேன் சுவாமி திருச்செவிக்கு ஏறுதவண்ணம் விண்ணப்பஞ்செய்தேனாகிலும் தாய்மார் குழந்தைகளுக்குஇனிதானபாலும்புகட்டி அனேக உபசாரமுஞ்செய்துதங்களுடைய அதிருசியான வார்த்தையுங்கொடுத்து அவற்றின்மழலை மொழியைக்கேட்டு மிகுதியுங்களிப்புற்று இங்ஙனம் இன்னஞ் சொல்லுவாயென்று சொல்லுவதுபோலும் அசுரந்தாகதேவசகாய சற்றிரங்கித் திருவுளம் பற்ற வேண்டுமென்று அநேகவந்தனைசெய்யாநின்ற அகத்தியமாமுனிக்காகத் திருவாய்மலர்ந்தருளினவன் கங்காபுவனேசுவரிக்குப் புத்திரனான சுப்பிரமணியக்கடவுள் எ-று. (௨)

கையினுவரிக்கடலையடக்கியவாவுனது
　　கருத்தெனசொல்லெனக்கலசத்துதித்தவன்காசினியிற்
பொய்யலதிக்கலியுகத்தின்மெய்சொலல்சற்றரிதாம்
　　புகல்வதுந்தன்னுதரநிமித்தியமெனினும்புவியோர்
மெய்யலதற்புதமாகவெகுமானப்பலமாய்
　　விளம்பிலதிசெயிப்பரல்லான்மெய்யெனினும்விரும்பார்
வையகத்திலிவர்பிழைப்புக்காகமுன்னூற்பெலமாய்
　　வழுத்துதற்காய்வழுத்தெனுமுன்வழுத்தின்மையவனே

(இ-ள்.) சமுத்திரத்தை ஒருகைக்குள் அடக்கியவா உன்கருத்தென்ன சொல்லுவாயாகவென்று சுவாமி திருவுளம்பற்றுமுன்னம் கும்போதையனானவன் சொல்லுமுத்தரம், பூமியினிடத்திற் கலியுகத்திற்பொய்யல்லாமற் மெய்சொல்லல் சற்றரிதாகையால் தன்னுதரநிமித்தியம் பொய்சொல்லவேண்டுவதானாலும் உலகினர் குணம்மெய்போலும்பொய்யை வெகுமானமாகச்சொல்லில் மிகுதியும் அதிசயிப்பர் வெகுமானக்குறையாக உள்ளபடிசொன்னாலும் செவிகொடுத்துங்கேளார்கள். ஆகையால் வெகுசுனப்பிரயோசனமாகப் பொய் சொன்னாலும் முன்னூற்படியென்று சொல்லவேண்டிச் சற்றுவசனம் பெலமாக இருக்கவேண்டுவதென்று விண்ணப்பஞ்செய்யா முன்னம் திருவாய்மலர்ந்தருளினவன் கிடாய்வாமனான சுப்பிரமணியக்கடவுள். எ-று. (௩)

அவனிசமமாகமலையத்துனைதயமான
　　வகத்தியகேள்வருஷபலத்தவமானந்தாது
யுவவிசுவிரோதிகாவிகிர்திபிரமாதி
　　யுருவிலிகுரோதிகுரோதனவியமூனசனம்

நிவமதிவிகாரிரிபுக்கிருதுபிலவங்க
நிகழ்த்தியவிப்பதினேழுநிற்பலநற்பலமா
மிவையற்மற்றவைக்கெனிணுமப்பலமுங்கூட
விசைப்பர்வருடப்பலத்துக்கினியயனப்பலமே.

(இ-ள்.) தெட்சணபூமியுயர்தல்கண்டு பொதியவரையினுதயமாகிய அகத்தியனே வருஷப்பலங்கேட்பாயாக, பராபவம்-தாது-யுவம்-விசு-விரோதி-கர-விகிர்தி-பிரமாதி - மன்மத - குரோதி - குரோதன - விய இராட்சத-துன்மதி-விகாரி-விரோதகிருது-பிலவங்கஆகவருஷம் ௰எ-க்கும் நிற்பலமென்ப மற்ற ௪௩-க்கும் சுபபலமென்க, இந்தப்பலத்துக்கு அந்தந்த வருஷப்பெயர்பவிக்குள்ள பலமுங்கூட்டிச்சொல்லுக, இவைவருப்பலம் இதன்மேல் அயனமலஞ் சொல்லுவோம் எ-று. (௪)

யலமதிகம்வடக்கயனத்துக்கதனுக்காசை
பாவகர்மம்ரோகமுதற்பலத்துடனுற்றிடலாய்ச்
சொலன்முதற்பேர்ப்பனிரிதுவிற்சொற்பதனமலது
சுபபலமாம்ரிதுப்போர்க்கான்றலைசனியில்லவ
னலதுளமாதத்திபர்க்கானசுபபலமற்
றதற்கதுவாம்பக்ஷமுமப்பலமாமத்திதியி
னலனலதொன்றெட்டீரேழாறொருநான்கலது
நன்மையுளதாமதியினந்தல்களவினலே.

(இ-ள்.) உத்தராயனத்துக்குச் சுபபலமென்க, தெக்ஷணாயனத்துக்கு துராசை, பாவகற்மம், ரோகம் இவற்றோடு முன்சொன்ன சுப பலமுங்கூட்டிச்சொல்லுக, கார்சாலரிதுவக்குச் சொற் மாகயதன மென்க, முன்பனிரிதுவுக்கு தரித்திரமென்க, மற்றுள்ளரிதுவுக்குசுப பலமென்க. இதற்குமாதாதிபலாபன்கூட்டிச்சொல்லுக, பூறுவபக்ஷத்துக்கு சுபபலமும் அமரபக்ஷத்துக்கு நிற்பலமுஞ்சொல்லுக பிரதமை-சதுர்த்தி - சட்டி - அட்டமி - சதுர்த்தசி இவைக்குத் நற்பெல மென்க. அமாவாசிக்குத்தரித்திரம், சோரம், துன்பமென்க எ-று. ()

இனன்முதல்வாரப்பலத்துக்கவரவருக்கமைத்த
வியல்புளதாமுடுக்காலுக்கிசைப்பதுமப்பலமாம்

வனசனமுதல்வாரமுமத்திதினமிம்மூன்று
மருவதுசுபமசுபமற்றெனிலப்படியாந்
தினமதிலத்திதியிலுளகொண்டாந்தமாகிற்
சிசுபிதுர்மாதருதோடஞ்சேர்தலவசித்தோர்
றனமிலிபொல்லாதவனுந்தார்நீர்புள்ளாடை
தானவரிலபுத்தமிவைதாய்பிதுர்சஞ்சலமே.

(இ-ள்) ஞாயிறுமுதற் சனிவரைக்கும் வாராதிபர்க்கத்தை பலஞ் சொல்லுக. நட்சேத்திரத்துக்கு அந்தந்தப் பாதாதிபருக்குத்தக்க பலன்சொல்லுக. வாரம் நட்சேத்திரம்திதிகூட்டிச் சுபயோகத்துக் குச் சுபபலமும் அசுபயோகத்துக்கு அசுபபலமும் சித்தயோகத் துக்கு இவையிரண்டுங்கூட்டியபலமுஞ்சொல்லுக. நட்சேத்திரகெண் டாந்தம் திதிகெண்டாந்தமாகில் சிசுபிதுர்மாதரு தோஷஞ்சொல் லுக. அவசித்தாகில் தரித்திரன் பாவியென்க. பூசம்-பூராடம்-அவிட் டம்-சித்திரை அபுத்தமூலம், இவையாகில் மாதுர்பிதுர்சஞ்சல மென்க. எ-று. (௬)

சஞ்சலஞ்சூலதிகண்டபரிஷணஞ்சாத்தியம்பொய்
சனத்வேஷம்வைதிரிதிருவமவத்தமுமாம்
வஞ்சகம்பத்திரங்கீடமற்பாயுவிவையின்
மற்றுளயோகங்கரணம்யாவையுநற்பலமா
பஞ்சலெனவாதநித்தலதிகசனத்துறவெற்
கற்கெனிலஞசாரபற்பசுதரமைதி
மிஞ்சியதப்பலமுளதாகும்முதையமாகில்
வெகுமானந்தனம்பாக்யம்வெகுசனமித்திரமே.

(இ-ள்.) சூலயோகம், அதிகண்டம், அரிஷணம், சாத்தியம் இவை யாகிற்கோட்சொல்லல், சனத்துவேஷமென்க. வைதிரிதிருவமாகில் துற்பலமென்க. பத்திரவாகரணமாகில் வஞ்சமென்க. கீடமாகில் அற் பாயுவென்க. மற்றுள்ளயோககாணமாகில் சுபபலமென்க. பகலா கில் வெகுசெனரட்சகன் வெகுசனமித்திரனென்க. நிசிகாலமாகில் அஞசாரம் அற்பபுத்திரர் அடக்கம் இவற்றோடு முற்பலமுங்கூட்டிச் சொல்லுக. உதையகாலசெனனமாகில் வெகுமானம் தனம், பாக்கி யம், வெகுசனமித்திரமென்க எ-று. (எ)

மித்திரஞ்சொற்செலவரசர்வெகுமானம்ரிணமில்
வெகுதனமத்யானமெனிலபரமிதிற்சமமா

மத்தமனமனமவமானந்தரித்திரமற்பாயு
 வாமகிருத்திரனுகிலதற்குள துற்றெழிலா
நித்தியவோரைப்பலமும்வேளைவற்கம்பட்சி
 நிகழ்த்திபபேர்ப்பலம்போலுமேநுளதாஞ்சரத்திற்
சத்திசிவஞ்சுபமசுபமக்கினிமாரணமாய்ச்
 சாற்றிறலைம்பூதமெனிற்றற்பெயர்தற்பலமே,

(இ-ள்) மத்திபானகாலமாகில் வெகுசனமித்திரம், வெகுசனுக்கு காரவசனம், இராசவெகுமானம், ரிணமின்மை, வெகுதனமென்க அபரான்னமாகில் சமபாக்கியமென்க. அத்தமனசந்தியாகில் அவமானம், தரித்திரம், அற்பாயுவென்க. சற்பமுகூர்த்தமாகில் சற்பவெகுசனத்துவேஷம், அற்பாயுவென்க. ருத்திரமுகூர்த்தமாகில் வங்கிசநாசம், ஆற்பன இங்கிசை, தாரசுகதோஷம், தரித்திரம், அற்பாயுவென்க. காலவோரையாகில் அதிபதிபேர்க்குள்ள பலன்சொல்லுக. வேளைக்கு அப்பெயர் பலன்சொல்லுக. * வருக்கத்துக்கும் பட்சிக்கும் நேர்தொழிற்பெயர்வைத்துப் பலன்சொல்லுக சாத்திற்சந்திரகலைக்குச்சுபபலமும், சூரியகலைக்குத் துற்பலமும் அக்கினிகலைக்குமரணமும், பூதகலைக்கு அப்பெயர்ப்படி பலமுஞ்சொல்லுக எ-று. (அ)

தற்பெயர்மற்றுள்ளவைக்குந்தற்பெயரிற்சொல்லன்மேற்
 சாற்றுதலக்கினபலமாந்தவமுனியேதகர்ப்பேர்
முற்பவனமாகவரிலரசாவெகுமான
 மூர்க்கன்வெகுசனப்பிரியன்மோகிதயிரியவா
னற்கனனுசாரன்மனதமைதிபொறையறிவ
 னுகம்ரம்யன்மனப்பயமெய்யனற்றருவாயுதத்தாற்
கற்படன்மட்சுவர்விழுதலால்விரணுதிக்கன்
 களத்ரத்வயன்றனையறர்பங்கபங்கனிட்டர்சிரேட்டர்களே.

(இ-ள்) சொன்னவையல்லாமல் மற்றது எது உதையமோ அந்தப் பேர்ப்படிபலன்சொல்லுக. அகத்தியனே லக்கினபலங்கேடபாயாக லக்கினமேடமாகில் இராசவெகுமானம், மூர்க்கன், வெகுசனப்பிரியன், மோகி, தைரியவான், அற்பன் அனுசாரன், அடக்கமுடையவன், பொறுமை, அறிவு, அழகு, மனோபயம் இவையுடையவன். அனல், மரம், ஆயுதம், கல்சுவர்விழுதல் இந்தவற்கங்களினுலே விரணதிகமுள்ளசரீரம், உபயகளத்திரம், அற்பபுத்திரர், சகோதர சிரேஷ்டன். எ-று. (கூ)

களத்திரதோஷந்தனையர்காலாந்த்ரமுளர்தற்
 கார்யபரன் குணதோஷன்கண்டறிவன்கபடத்

* வார அவஸ்த்தை.

துளத்தவனும் விஷையசஉளனையுபையமானவி
யுரைக்குடையன்மூத்ரகிரிச்சனனுதரரோகி
வளர்த்திசொற்பதனமறவழக்கறிவன்கணக்கன்
மைதுனவபேட்சையவமானையுமகாசபடி
யளப்பிலவமானமுளஉளற்பசுதர்காமத்
தழுர்துசதாதுக்கியிவையான்கதைகண்டதற்கே.

(இ-ள்.) லக்கினம் இடபமாகில்களத்ரதோஷம், காலாந்த்ரபுத்திரர் சுயகாரியபரன், குணதோஷமறிவன், மனோபடிபெண்க மிதுனமாகில் விஷைபசஉளன், உபையமாதா, களத்திரன் சொற்கேட்பவன் * மூத்திரகிரிச்சனன், உதரரோகி, வளர்த்திடுவனுதிகன், வார்த்தை சோர்வில்லாதவன் வழக்கறிவன், கணக்கன் மைதுன அபேட்சி, ரோககளத்திரனென்க, கற்கடகமாகில் களத்திரசுகஹீனன், கபடுள்ள அவமானகளத்திரம், அற்பபுத்திரர், வெகுகாமி, சதாதுக்கியென்க எ-று. (ய)

அதர்மகர்மிநேத்ரசிரசாசனநோயின்றோர்க்
காகுலன்கெம்பீரவசனக்கவனழகு
சுதாதிகம்பின்னிக்கம்வஞ்சகந்தாசை
சுயகார்யபரன்பிறரற்றமுழிற்றனம்பெற்றுடையோ
னிதமகிதமிரண்டுமரிந்தினசனபெந்துவிறு
லெப்பொழுதும்பூச்யமுளனுமிரக்கம்பீதி
மதனசுகிபொறுமைபுகழ்மதிகுணம்வல்லமைநல்
வடிவறிவாஞ்சீயமுதற்றுலேவரைக்குமாமே.

(இ-ள்.) லக்கினம் சிங்கமாகில் பாவகர்மி, நேத்திரசிரமுகரோகி, மாதுர்பிதுர்த்துவேஷி, கெம்பீரவசனியென்க. கன்னியாகில் அழகு, வெகுபுத்திரர், பின்னிரக்கம், மனோவஞ்சகம், தாராசை, சுயகாரியபரன், பிறராற்றுமுழிற்றனம் பெற்றுடையோன், இதமகிதம் இரண்டுஞ்செய்வன், பந்துசனபூச்சியனென்க. துலாமாகில் இரக்கம், மனோபீதி, மன்மதசுகி, பொறுமை, புகழ், நல்லபுத்தி, நல்லகுணம், வல்லமை, அழகு, அறிவு, இவையுடையவன். எ-று. (கக)

வரைவில்விஷைபப்பிரியன்பெந்துசனத்வேஷி
வஞ்சகனுதுலனுபையமானிமாதிமானு
முரையில்வணங்கினவரநறவுண்மைபயிமான
முக்கோபகபானுர்வாசாலகனுபாபி

* மூத்திரகிரிச்சனம் - நீர்கடுப்பு, கல்லடைப்பு.

திரமதிதுராசையினனுகுமகடகண்ட
தெரித்திரன்மித்திரரையினல்செய்பவனுந்தெய்வம்
பெரியவர்பிரமணர்தம்மிடத்ததிகபத்தி
பெருஞ்செலவுதேண்முதற்சேலளவிவைபேசுவதே.

(இ-ள்.) லக்கினம் விருச்சிகமாகில் வரையற்ற விஷைபப்பிரியன், பெந்துசனத்துவேஷி, வஞ்சகன், தரித்திரன், வெகுமானி, அவமானி, புத்திமானென்க. தனுவாகில நல்லவசனன், மித்திரன், சத்தியவான், அபிமானி, சதா உத்தியோகபரனென்க. கும்பமாகில் அகண்டவயிறு, தரித்திரன், மித்திரரையுபாதிப்பவனென்க. மீனமாகில் தேவபிராமணர் பெரியவரிடத்திற் பத்தியுடையவன் வெகுசெலவாளி. எ-று. (கஉ)

பேசுவதவ்வோரைமுதற்சட்டியாங்ஷம்வரைக்கும்
பேரசுபசுபமதற்காய்ப்பேசுவதப்பலமாம்
வாசமலரிறையுதையம்வரிற்சிரநேத்திரநோய்
வழிப்பயணசஞ்சாரமனரனன்மாப்பீதி
கேசமசனந்தனையரற்பமதியாகிற்
கீர்த்திதயவழகுசுபகிரியைசளன்றழலேற்
பூசல்களத்திரகீனஞ்சஞ்சலம்பொருமை
பூமிசகோதரலாபம்புரவிரணங்கரவே.

(இ-ள்.) லக்கினவோரை முதற்சட்டியாங்கிசம்வரைக்குமுள்ளபேர்ப்படி அசுபசுபமறிந்து அதற்கு அதுவாய்ப் பலன்சொல்லுக. லக்கினத்தில் ரவிநிற்கில் சிரநேத்திரரோகம், வழிப்பயணசஞ்சாரம், இராசாக்கினி, மிருகபயம், அற்பகேசம், அற்பபோசனம், அற்பபுதல்வரென்க. மதியாகில் கீர்த்தி, தயவு, அழகு நல்லதொழில், காரியசளரென்க சேயாகில் பூசல், களத்திரகீனம், சஞ்சலம், பொருமை பூமியாற்சகோதரத்தால்லாபம், சரீரவிரணம், சோரம், எ-று. (கங)

புரப்புதனேல்வித்தைதனம்புகவ்வேசர்புசங்கம்
புலவன்வெகுசனபூச்யன்பொறுமைபுத்தியறிவு
குருப்பெபுரிலனேகசனரெட்சகன்விவேகி
குலேசனதிருபனுலகுடையவர்கொண்டாடும்
வரக்கவிதைதெயவவீகவசனம்வெகுமான
மதியறிவுநல்லகுணமனசுபுகராகில்
விரைக்குழலார்வசியமுகன்விசையகுசலன்
வெகுமாணியிவர்க்குடையகாசமிக்குளதே.

(இ-ள்.) லக்கினத்திற்புகனுகில், வித்தை, தனம், புகழ், வேசர், புசங்சம், புலவன், வெகுசனபூச்சியன், பொறுமை, புத்தி, அறிவென்க, குருவாகில், அநேகசனரெட்சகன், விவேகி, குலேசன், அதிரூபன், உலகுளோர் கொண்டாடும்வரகவிதை, தெய்வீகவசனம், வெகுமானம், நல்லபுத்தி, அறிவு, நல்லகுணம், நன்மனசுஎன்க. சுக்கிரனுகில் ஸ்திரீவசியன், சுமுகன், விஷயகுசலன், வெகுமானியென்க. இவர்களுடைய காரகமுங்கூட்டிச்சொல்லுக எ-று. (கச)

மிக்கபவச்சனியுதையமேவிலவமானம்
விதனம்வெகுபோசனம்விசாரநிருவித்தை
யக்கிரமம்பொய்கொலைசெயவக்யாதிசோர
மனுசாரம்வாயடித்தலடித்ததட்டிப்பறித்த
றுக்கமனமடிவுறக்கஞ்சோம்பலரவாகிற்
சோரம்வெகுசனபூச்யந்துற்றெழில்விரோத
மக்கள்வெகுபாக்யபனவஞ்சகந்தியாகம்
வர்மமகாகோபம்வெகுவார்த்தையுடையவனே.

(இ-ள்) லக்கினத்திற்சனியிருக்கில் அவமானம், தரித்திரம், வெகுபோசனம், விசாரம், நிருவித்தை, கிரமத்தப்பு, பொய்சொல்லல், கொலைசெய்தல், அவக்கியாதி, சோரம், அனுசாரம், வாயடித்தல், அடித்ததட்டிப்பறித்தல், துக்கம், மனமடிவு, சதாநித்திரை, சோம்பலென்க. ராகுவாகில் சோரம், வெகுசனபூச்சியம், துற்றெழில் விரோதம், புத்திரர், வெகுபாக்கியம், மனவஞ்சகம், தியாகம், மனோவர்மம், மகாகோபம், வெகுவார்த்தையுடையவன் .எ-று. (கரு)

அவமதிதுற்சிகியுநிக்கில்யாசகமபாய
மவமானமரசர்பயமதிகசனத்வேஷம்
பவம்வதைசெய்கூதன்முதலபாதகம்விகாதம்
பயமிலதாமாந்தியெனிற்பயங்குடிலங்கெறுவங்
கவைவிகடமந்தபுத்தியிவன்பவனன்கதுவிற்
காரியவிக்கினநிதனங்காலன்மாணஞ்செய்
குவன்மதிகந்தனன்முதல்வர்தற்பெயர்தற்பலமாய்க்
குணமகுணத்தீறளவுங்கூறுவதவ்வியல்பே.

(இ-ள்.) லக்கினத்திற்கேது இருக்கில் பாவபுத்தி, பொல்லாதவன் யாசகசீவனம், அபாயம், அவமானம், இராசபயம், வெகுசனத்துவேஷம், பாவம், வதைசெய்தல் முதலாகியபாதகம், விகாதம், மனோதிடமென்க, குளிகனுகில் மனோபயம், குடிலம், கெறுவம், சஞ்சலம் விகடம், மந்தபுத்தியென்க. குளிகபவனனுகில் காரியவிக்கி

ணம், தரித்திரமென்க காலனுகில் மாரணமென்க கலைக்கியானபாதன் முதலானவராகில் அவரவர்பேர்போலும் பலன்சொல்லுக இந்தப்படி ௧௨-மிடம் வரைக்குங் குணகுணமறிந்து பலன் சொல்லுக. எ-று.

சமுதாயபலப் படலம்.

முற்றிற்று.

ஆகப்படலம், ௩௬-க்கு, கவி ௩௱௰௮.

---

# மாதர்சாதகப்படலம்.

---

வாரரிதுப்பலன்.

இயல்புளசந்தாசலச்செந்தூரபொதுப்பலமு
மிசைத்ததங்நாரியர்சாதகப்பலமெப்படியோ
வயநடவுகந்தமயில்வாகனவென்றேத்து
மகத்தியனுக்குரைத்தனன்மின்னூர்கள்ரிதுவாமோ
தபபலமும்பூவுதையத்தற்காலக்கிரக
சாரமுஞ்சேர்த்துரைப்பரதாற்றபனன்முதன்மலடம்
புயமின்விதவைசுதரத்தம்விரகிசோரம்
புகல்வதுநேராம்வாரபலன்ரிதுப்பூப்பதற்கே.

(இ-ள்.) இயல்புள்ளசந்தாசலச்செந்தூரா, பொதுப்பலமும் அடியேனுக்குத்தெரியும்படிபுலப்படுத்தியதுசரியே. இதன்மேல் மாதர்சாதகப்பலமுந் திருவுளம் பற்றவேண்டும் கிடாய்நடவுகந்த மயில்வாகன வென்று அனேகமாகிய தோத்திரமுஞ்செய்து தெண்டம் பண்ணுநின்ற அகத்தியமாமுனிக்குத் திருவுளமிரங்கித் திருவாய் மலர்ந்தருளினன். மாதர்க்கு ரிதுவோதையப் பலமுஞ் சென்னோதையப்பலமுங் கூடச்சேகரித்துப் பலன்சொல்வார்கள். ஆதலால் நாயிறில் ரிதுவானால் மலடி, திங்களாகில்செல்வி செவ்வாயாகில் விதவை புதனுகில்புத்திரவாட்டி, வியாழனுகில் தனவாட்டி, வெள்ளியாகில் விரகி, சனியாகில் கள்ளி-எ-று. (௧)

நட்சேத்திரதிதி ரிதுப்பலன்,

ரிதுகண்டவர் முதலாகியபலன்.

பூப்பதனையாழகிதீபுனலெமனேரைந்தப்
புல்லிவைப்பால்கற்பருத்தம்புதல்வரிலொன்றவமா

மீப்பலமற்றென்பதொன்றெட்டீரேநீறவமான்
மீன்றுலேபாழ்விற்சேயிற்றீதவைமிக்குளதா
மூப்பிளமைமற்றவர்காண்டதுகாலமிடமு
முதற்குளதாயிரவிமுதன்மொழிவர்பெலம்புதிது
தீப்படுதலெழுதலெழில்பான்மவினம்பீறல்
சீர்ணமிவைக்குளவொலியற்கியல்பதுஞ்செப்புதலே.

(இ-ள்.) பூரம், திருவாதிரை, ஆயிலியம், கார்த்திகை, பூராடம், சதையம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி, அசுவதி, அனுசம், விசாகம், கேட்டை இவைரிதுதினமாகில் கற்பு அருத்தம் புதல்வர் இவை ௩-ல் க-அவமென்ப மற்றுள்ளவைசுபபலமென்ப நவமி பிரதமை அட்டமிசதுர்த்தசி அமாவாசி இவை முன்போலும் ஆகாதென்ப இடபம், மீனம் துலாம் மிதுனம் தனுசு மேடம் விருச்சிகம் இவைதீதென்ப, மற்றுள்ளவை சுபபலமென்ப மூத்தவர் இளையவர் மற்றவிர் ரிதுகண்டவர்களென்பதும் இராப்பகலென்பதும் உள்வெளி இடையென்பதும், லக்கினவற்கம் கண்டுசொல்லுப ரவிநேர் உடுப்பினம் அறியவேண்டில் பெலம் புதிது தீப்படல் எழுக்குள்ளது, அழகுள்வது வெளுப்பு அழுக்குள்ளது பீற்றல், சீரணமென்றுங்கேதுவரைக்குஞ் சொல்லுக-எ-று. (உ)

ரிதுவாகுங்காலம்.

தலச்சுதனென்றேழுதிக்கில்ரிதுப்பலலபக்குவமந்
தணனெனில்விவாகமிரசதமெனிற்சையோகம்
பெசப்பதுமற்றுளர்க்குளதாய்ப்பேசுதலப்பலமாம்
பிறந்ததினப்பலமுமிந்தப்பலமுமொன்றாய்ப்பிணைத்துப்
பலத்தியல்புக்குரைப்பதுநற்பலமாமிப்பலமும்
பகர்ந்திடக்கேண்முனியேயிப்பாருதையம்புகராய்
நலத்திதிதாய்பெண்ணயனிந்நாட்களிலக்கினமு
நன்மைபெறிலெந்நாளுநன்மையிவட்கெனுமே.

(இ-ள்.) ரிதுகாலலக்கினத்திலாவது இதற்கேழிலாவது சேய்நிற்கில் பக்குவகாலம்ரிதுவென்க. குருநிற்கில் விவாககாலரிதுவென்ப. சுக்கிரன்நிற்கில் சையோககாலரிதுவென்ப. மற்றவர்கள்நிற்கில்பெலங்கொண்டுங் காரகங்கொண்டும் ரிதுப்பலஞ்சொல்லுக, இந்தப்பலமும் செனனகாலப்பலமுங் கூட்டிச்சொல்லுவது நற்பலமென்ப. ஆதலால் அகத்தியமுனியே செனனகாலப்பலமுங் கேட்பாயாக. செனனகாலம் சுக்கிரவாரத்திற் சுபதிதியாகப் பூரம், அவிட்டம், ரோகணி, இந்த-௩-ல் ஒருநட்சத்திரமாகிலக்கினமுஞ்சுபமாகப் பெலக்கில் ஆயுர்த்தாயம் வரைக்கும் பாக்கியவதி. எ-று. (௩)

சாதகியியல்பு,

இவளுதையமொற்றையுமாயிற்துசிதனபெலத்
தெய்தினுஞ்சேயாங்ஷமுதற்சியமிருக்கினுமா
ணவளுருவமேதையிலொன்ருயிவனங்கிசமு
மாகிலலவன்னுதையமாகமதியாகிற்
றவழுநடையிவன்மகனுஞ்சத்துருவுற்றிருக்கிற்
சரத்துதையமதியாகத்தபனன்லசைசாரிற்
பலளயிதழ்த்திருவழகைந்துதையமினல்லவர்கள்
பற்றிலறிவியபுகுணம்பாக்யவதிப்பேரே.

(இ-ள்.) லக்கினம்ஒற்றையாக மதிசுக்கிரன்துற்பெலமாகிலும், சிங்கலக்கினத்திற் சேயாங்கிசமேறிலும், சாதகிக்குபுருடவடிவென்பமிதுனகன்னிலக்கினமாகப் புதனங்கிசமேறிலும், லக்கினங்கடகமாக மதியிருக்கிலும், மதிபுதன்கூடி கூ-ல் இருக்கிலும் லக்னஞ்சரமாகி மதியிருக்க ரவி, அ-ல் இருக்கிலும் மகாலட்சுமிபோலும் அழகுடையவளென்ப க-ச-ரு-ல் சுபரிருக்கில் இயல்பு, குணம், பாக்கியவதி எ-று.()

சையோககாலம்.

பதியிவளைச்சேர்வதுவும்ரிதுகாலத்தினநேர்
பதினுருநாள்வரைகெற்பம்முறுநாட்பேரா
லுதிதரல்பெண்ணுற்றைமற்றதேகதசம்பதின்மூன்
றுதித்தல்விபசாரமதாலொழித்திவைமற்றுளதி
லதிபெலமுஞ்சுபமுமுளதிதிவாரநாண்மற்
ருதலும்பார்த்தற்காலத்துதையமுங்கண்டணைத
லிதிலதிகபிரபலயோகத்துளகெற்பமுமா
மிதன்மேலுங்கெற்பவியல்கெட்பதகத்தியனே.

(இ-ள்.) சையோககாலம் அறியவேண்டில் ரிதுகாலத்தினமுதல் கசுநாளளவுங்கெற்போற்பத்திக்குக் காலமென்ப. ஆதலால் இவற்றில்ஒற்றித்தநாளிற் பெண்ணும் இரட்டித்தநாளில் ஆணுமாக உற்பவிக்கும் கக-கங-ம் நாளிற்பிறந்த பெண்விபசாரத்தை யடையுமென்ப, ஆதலால் இவையல்லாதநாட்களில் அதிபெலமுஞ்சுபமுமுள்ளநாள்வாரம்திதி, யிவைமுதலானவையெல்லாம் சுபமாக நிசிகாலத்தில் லக்கினமுஞ்சுபமாகப் பார்த்துச்செய்வது சையோகமென்ப இதிற்செனித்தகெற்பம் அதிபிரபலயோகமாகயிருக்கும். இதன்மேலுங் கெற்பஇயல் கேட்பாயாக அகத்தியமாமுனியே. எ-று. (கூ)

## கெற்ப வியல்.

பதனமில்லாதசுபருபசயமாயாதானம்
பற்றியலக்கினகோணிற்குருவுறப்பாகவன்சேய்
மதிரவிமித்திரராகமருவிடிற்கெற்பமுமாம்
வற்தனையுமாந்தரித்தமாதமுதற்புகர்சேய்
நிதிரவியிந்தசிதபுதனேரிவர்கள்பெலக்கி
னிசமானகெற்பநிராகுலமாநேரிவர்க
ளதனமுறிலவரவருக்கமைத்திடுமாதத்தி
லாகுலமாஞ்சுபர்பார்க்கிற்சஞ்சலமாமதற்கே.

(இ-ள்.) ஆதானலக்கினத்துக்குஉபசெயத்திற்பாவர்நிற்க க-டு-சூ-ல், குருநிற்க சுக்கிரன் சேய் மதி ரவி நால்வரும்மித்திரராகக் கூடில் கெற்பவற்தனையென்ப, சுக்கிரன் சேய் குரு ரவி மதிசனி புதன் இவர்கள் பெலக்கில் கெற்பந்தரித்தமாதமுதல் நேர்வர்த்தனை சொல்லுக. இவர்களில் ஒருவன் சூ-ல் இருக்கில் அவனுக்குச்சொன்னமாதங் கெற்பசலனஞ்சொல்லுக. எ-று. (சு)

## கெற்பந்தரித்திருக்கும் காலஅளவு.

மதத்தசிதனங்கிசமொன்ருய்க்குருபாராமன்
மருவிலந்தக்கெற்பம்வருஷம்மூன்றுக்குளதா
மிதற்குடுக்கோன்கூடின்முந்நான்கிரவியிடத்தணிக்கோ
ணேயதொன்றேற்பூர்ணமதற்கெய்துதலப்படியா
மதற்கியல்பாண்பெண்ணலிமற்றரவுகொடிகூட
லங்கபங்கமொற்றைரட்டையதனேர்மற்றுளது
முதற்றனையர்பலத்துரைத்தவியல்பதுபோலிதற்கு
மொழியரினிகெற்பசலனம்முறல்சொற்றிடலே.

(இ-ள்.) ஏழிலிருந்த சனிலக்கினத்திலங்கிசமேற வியாழன்பாராதிருக்கில் ங-வருஷகெற்பமென்க. இப்பலத்துடனேசந்திரன்கூடில் கஉ வருஷம்கெற்பமென்ப, ரவியிருந்தராசிக்கு ங-மிடத்திரி கோணமேலக்கினமாகில் முன்னூறுநாளைக்கெற்பமென்ப, அக்கோணுக்குக்குறையில் குறையுமென்ப. ஏறில் ஏறுமென்ப. இதற்கு ஆண் பெண், அலி, ஒற்றை, இரட்டை, கொடிச்சுற்றல், பாம்புடனுதித்தல், அங்கஈனம், இவை முதலானவையெல்லாம் முன்சொன்ன செனனுதைய ப்படி சொல்லுக இதன்மேற் கெற்பசலனஞ்சொல்லுவோம். எ-று. ()

## கெற்பசலனம்.

சொற்பர்விழித்திடக்கனலொன்றைந்தேழுற்றிருக்கத்
துற்பெலமாய்க்குருமறையிற்கெற்பமுந்துற்பெலமா
மற்பர்வியமாறணியாயைந்தேழ்சேயிருக்கி
லாயுதத்தாற்கெற்பம்விழலாலவளுவதுவா
முற்பதியிற்சனியணயில்சுபரீறிற்பவராய்
முந்நூன்மார்பினன்பாராதிருக்கின்முகமேழுள்
பொற்புகர்பொல்லாதவர்கட்கிடையிருக்கிற்சனிசேய்
புரமுளிவர்வற்கமுறிற்புகல்வதுமுற்பலமே.

(இ-ள்.) க ரு எ ல் சேயிருக்கப் பாவர்பார்க்கக் குருதுற்பெலமா கிமறையில் கெற்பசலனமென்ப. ச கூ கஉ ல்பாவரிருக்க, ரு எ ல், சேயிருக்கில் கருவியாடலால் கெற்பமரணமென்ப. அதனல் மாது ருமரணமென்ப. க ல்சனி ங ல்சுபர் கஉ ல் பாவரிருக்கக். குருபா ராதிருக்கிலும் உ ரு எ ம் குருசுக்கிரனும் பாவமத்தியமாயினும் க ரு ம் இதைற்குடையவரும் சனி சேய்வற்கமேறிலும் முன்சொன்ன பலம். எ-று (அ)

## கெற்பகாலத்திற்பற்தாமரணம், சதாதுக்கி பதிவிரதை.

புகர்வேளுக்கிறைபெலமாய்ப்பாதகரைப்பொருந்தி
புக்குதலப்பதனமெனிற்பிதுர்மரணம்புதல்வன்
செகமுதையமாகுமுனஞ்சிசுவிறைபொன்பதனத்
தெய்திடினுங்கெற்பசலனப்பெயர்சொற்றிடுவார்
சுகனுதையம்வயமாவங்கிசமுறினுமிவனிற்
சுடரனலாங்கிசமுதலாய்த்தோள்றிடிற்றுக்கியுமா
மகமுகமைந்தொன்றேழொன்பதுசுபமாயிவர்க
ளதிபெலமுற்றிடிற்பாக்யபதிவிரதையவளே.

(இ-ள்.) சுக்கிரனும் ஏழுக்குடைய எனும் பெலமாகிப்பாவருடன் கூடி சு அ கஉ ல் இருக்கிற் கெற்பகாலத்தில் பற்தாமரணமென்ப ரு க்குடையவனும் குருவும்மறையினும் கெற்பசலனமென்ப. சனி லக்கினத்திலிருந்து சிங்காங்கிசமேறிலும் மகர்கும்பலக்கினமாகி ரவி சேய்கூடி யங்கிசகேறிலும், சதாதுக்கியென்ப. ச உ ரு க எ கூ இவை சுபவற்கமாகிசு சுபக்கிரகங்களும் அதிபெலமுற்றிருக்கிற் பாக்கியபதி விரதை. எ-று. (கூ)

### பதிவிரதை, புத்திரவாட்டி, அற்பபுத்திரர்.

பதிவிரதைசேயிலொன்றாய்ப்பார்ப்பானுற்றிடிலான்
பாகனிலொன்றாய்க்குருவினங்கிசம்பற்றிடின்கோண்
மதிஙிதிமால்புகரிருக்கின்மால்விலொன்றங்கிசகம்
வவ்விலொன்றேழதற்குடையர்மாழைவற்கத்தேறி
லிதுபலமெட்டுசிதனுறமூன்றொருவரெய்தி
லிற்பாவர்சேகரிக்கிலுபசெதங்கேந்திரகோ
ணதில்சுபருற்றிடிற்சுதாராமானரிதேண்மாதொன்
றாய்மதியுள்ளாரின்மதிக்கிதாகிலற்பமகவே.

(இ-ள்.) மேடம் விருச்சிகம் லக்கினமாகிக்குருவிருக்கினும், இடபம் மிதுனம் கன்னி இவைலக்கினமாகிக் குருவாங்கிசமேறினும், க ஙு கூ ல் மதிகுருபுதன் சுக்கிரனிருக்கினும், லக்கினம்தனுவாகி புதனங்கிசமேறினும், க எ ம் இவற்றிற்குடையவர்களும் குருவற்கமேறினும் பதிவிரதையென்ப. அ ல் சுக்கிரனிருக்க ஙு ல் ஒருதனிருக்கினும் சுல் பாவர்கூடினும், பாலருபசெயமும் சுபர்கேந்திரகோணமுமாக இருக்கினும், புத்திரவாட்டியென்ப. இடபம் சிங்கம் விருச்சிகம் கன்னி லக்கினமாக, ஙு ல் மதியிருக்கினும் அல்லது இந்தலக்கினங்களிருக்கினும் அற்பபுத்திரர். எ-று. (ம)

### புத்திரி, புத்திரரியல்பு, பதிபகஙிஷேக இயல்பு சாதகியல்பு.

அற்பதிலக்கினக்கோணிலானனமுற்றிடிலீ
தரிவைவற்கத்துற்றிடினும்பெண்பெறுவளகித
னெற்பதிபத்துறிற்பாவபுத்திரர்மாலீறி
லிரவியனலாயமுறிலிதமுளநந்தனரா
ஙிற்புரனிலிரவிமுதனிற்பவர்களியல்போ
ணிகழ்த்துதலப்பதிபகஙிஷேகமிவைக்கியல்பா
முற்பதிமனுற்றவர்பார்த்தவரியல்புபோல
மொழிவதிவட்கியல்பிதுவுமுழுமுளதெனுமே.

(இ-ள்.) க ஙு கூ ச உ இவை ஸ்திரீவற்கமாகி மதிஙிற்கில், பெண் பெறுவளென்ப, ரவிசனிகூடி ம ல் இருக்கில் பாவபுத்திரரென்ப, கஉ ல் புதன் கக ல் ரவிசேய்கூடில் சுபபுத்திரரென்ப. எ ல் ரவிமுதலுள்ளவர்களிருப்பதறிந்து பதிபகஙிஷேக இயல்புசொல்லுக. லக்கினத்தைலக்கினதிபதியைக்கூடினவர் பார்த்தவர் கண்டுசாதகியியல்பு சொல்லுக. எ-று. (கக)

பெற்றிழப்பவள், மலடி, அநுசாரமுடையவள்

உளமசுபரேலிலகியொன்றுமன்மால்வீ
டுதையமெனச்சனியாங்கிஷமுறின்மதிபொன்வீட்டிற்
களர்தருமரைக்கூடிற்கடகமொன்றுங்கிசகங்
கனகமுறிற்பெற்றிழப்பள்காரியிலொன்றுகி
யிளமையதிபதியாங்கிஷமேறிலசிதன்மா
லேழணையில்விற்குருவையிரவியுறின்மலடாம்
விளவரவாறணற்சனிதாண்மேவிலழல்வீட்டில்
விதுவுறிலநுசாரமென்பதிவட்கெனுமே.

(இ-ள்.) ரு ல் பாவரிருக்கிலும் சா ல் கேதுஇல்லாமல் மிதுனகன்னி லக்கினமாகிச் சனியாங்கிஷமேறிலும், கடகதனுமீனம் பாவர்சுபர்கூடிலும், டகம் லக்கினமாகக் குரு அங்கிசமேறிலும், பெற்றிழப்பளென்ப. மகரகும்பம் லக்கினமாகச் சேயாங்கிசமேறிலும், எ ல் சனிபுதனிருக்கிலும், தனுசில் குருரவிகூடினும் மலடியென்ப. கூ ல் கேது கஉ ல் சனிசேயிருக்கிலும் மேடவிருச்சிகம் மதியிருக்கிலும், அநுசாரமுடையவன். எ-று. (கஉ)

நாயகனியல்பு, விபசாரி.

பதிபுருடலட்சணமாமணியாயத்திறைவர்
பாலருறிலேழிரவிபவர்ச்சேரில்ரிபுவா
மதியிலுதையக்கனலாங்கிழமாகவிதுவை
மாசுளர்கூடிற்புகர்சேய்மலனபவமாய்ச்சேரி
லதிகவிரகப்பிணியாற்பதியறியாவண்ண
மநேகபுகுடர்க்கூடலனல்புகராங்கிசவேள்
விதுமருவவம்மதியையாவியனற்சேர்ந்திருக்கில்
விசசாரம்பதியறியமேவுவதுமிவளே.

(இ-ள்.) ரு கக க்குடையவர்கள் ரு ல் இருக்கில் பதிக்குச்சற்புருஷலட்சணுங்கமென்ப, எ ல் ரவிபாவருடன்கூடில், பதி சத்துருவென்ப. லக்கினம்கடகமாகச் சேயாங்கிஷமேறமதி பாவருடன் கூடினும், சுக்கிரன் எ ல் இருக்கசேய் கக ல் இருக்கிலும் அதிகவிரகினியாகிரகசியமாகவிபசாசம் நடத்துவளென்ப, எ ல் சேய்சுக்கிரன் அங்கிஷமேற இதில்ரவிமதிசேய்கூடில் பதியறிய விபசாரம்பண்ணுவாள்.

தாயுமகளும்விபசாரி, தரித்திரி.

மேவலராய்ப்பலவர்பார்க்கச்சேய்சனியிலொன்றாய்
விதுப்புகர்சேர்ந்திடிற்றாயுமகளும்விபசாரம்

பூவுதையவிற்சனியாங்கிஷமாகிலீறம்
புயனிருக்கவொன்லேழிலசிதனுறிற்புரக்கோன்
பாவருடன்பதனமுறப்பல்லசுபமாகிற்
பதிதுயிலொன்றதன்மருறிற்பாதகர்நீரேறத்
தேவகுருமதியிவரிலொன்ருகிலிவளுந்
தெரித்திரியாம்பதியுமனோசஞ்சலஞ்செய்பவனே.

(இ-ள்.) சனி சேய்வீடுலக்கினமாகிமதிசுக்கிரன்கூடப் பாவர்சத்துருவற்கமேறிப்பார்க்கில், தாயுமகளும் விபசாரியென்ப, லக்கினத்திற் சனியாங்கிஷமேறிலும், ௧ ௭ ல் சனியிருக்க ௧௨ ல் ரவியிருக்கிலும், லக்கினேசன்பாவசகிதமாகிமறைய ௨ ல் பாவர் இருக்கிலும் ௧ ௭ அ ல் பாவரிருக்கிலும், மதிகுருவீடு லக்கினமாகப்பாவர் ௬ ல் இருக்கிலும் தரித்திரியென்ப, பதியுஞ்சதாமனோசஞ்சலி. ௭-று. (௧௩)

வைதவ்வியம்.

வனசன்மகனங்கிஷகக்கடகமுதலாக
மாசுளாவேளுரிற்சனியேழ்பவர்பார்க்கமருவிற்
கனலனை வேடுயிலணையக்கல்லியமால்வீடாய்க்
கரியவங்கிஷங்கதுவிற்காமவிறைமறைய
வனன்மனைமன்மதனுகிலறத்திறையந்தணனு
மபெலமுறத்துய ல்வேள்வஞ்சகரணையில்லவன்
றனுசுகயலுடலாகப்பாவர்சுபர்கலக்கச்
சற்பமிசையுற்றிடினும்வைதவியத்தவனே.

(இ-ள்.) லக்கினம் கடகமாகிச் சனியாங்கிசமேற, ௭ ல் பாவரிருக்கிலும் ௭ ல் சனியிருககப்பாவர் பார்க்கிலும், ௬ ௭ அ ல் சேயிருக்க மிதுனகன்னி லக்கினமாகிச் சனியங்கிசமேறிலும், மேடவிருச்சிகம் ஏழாமிடமாகிச் செவ்வாய் மறையிலும் ௯ க்குடையவனும் குருவுந் துற்பெலமாக, ௭ அ ல் பாவரிருக்கிலும், கடகம் தனுசு மீனம்லக்கினமாகிப்பாவர்சுபர்கூட ௰ ல் ராகுயிருக்கிலும் வைதவியமடைவள்.

தொழூத்தை, பதிக்கு அடங்காதவள், மனவைரி.

வையகத்தினதிபனிலொன்ருகவசிதன்சேர்
வதுவுமங்ஷமாவதுமாய்வக்கிரனீசமுமாய்ச்
செய்வதெனிலக்கினத்திற்கனலாங்ஷமாகச்
செம்பொனகிரீசமுறிற்றினத்திறைலக்கினத்தைப்

பொய்யினர்பார்த்திடக்கூடக்குளிகவற்கமாகில்
புகல்வதிவடொழுத்தையெனல்புரைமினர்வேட்புகுத
லையமறமூவரெனிற்பதிக்கடங்காதவளா
மனலேழுற்றிடினுமனவயிரியெனலாமே;

(இ-ள்.) மேடவிருச்சிகம் லக்கினமாகிச் சனியிருந்து வற்கோத்தம மாகச்சேய் நீசமேறினும், லக்கினத்திற்சேயங்கிஷமேறக் குரு அதிநீ சமேறினும், லக்கினத்தையுஞ்சந்திரனையும் பாவர்கூடிப்பார்க்கக் குளி கவற்கமேறினும், தொழுத்தைஎன்ப. எ-ல் ௩-ல் பாவரிருக்கில் பதி க்கு அடங்காதவளென்ப எ-ல் சேயிருக்கில் மனவயிரி. எ-று. (கசு)

சாதகியின்குணம், ரோகபர்த்தா, தூயபர்த்தா.

அனல்வீடொன்றாகவதிற்சனிபுகரைச்சேரி
லவளிதையவயிரமிவள்பதியுடனுமனன்மான்
முனர்வீடவ்வரியாகவங்கிசகமுதிக்கின்
மூர்க்கமுளாள்பதிக்கிரியைமுழுதுமுடிப்பவளாஞ்
சனியாதிதன்னில்வர்க்கோத்தமமாகிற்றுட்டை
தழலிவைபோல்வரிற்கலகிதபன்னிலொன்றாக
வனவாடேறிறைவரங்ஷமாதல்பதிரோக
மகிழ்நரசுபஞ்சுபம்வேண்மருவிலிரண்டெனுமே.

(இ-ள்.) மேடம் விருச்சிகம் லக்கினமாகிச் சனிசுக்கிரன்கூடில்.பதி க்கும் இவட்கும்வயிரமென்ப. லக்கினஞ்சிங்கமாகி சேய்புத னங்கிச மேறில் மூர்க்கமுள்ளவள். பர்த்தாசெய்யுங்கிரிகையைத்தான்செய்து முடிப்பள். லக்கினத்திற்சனிவர்க்கோத்தமமாகில், துட்டை யென்ப. சேயாகில்சதாகலகி லக்கினம்சிங்கமாகி சேய்சுக்கிரனங்கிச மேறில், ரோகபர்த்தாவுடையவள், எ-ல் பாவர் சுபர்கூடில் தூயபர்த்தாவுடை யவள். எ-று (கஎ)

தூயபர்த்தா, குறையாதவாழ்வுடையவள்,
கொங்கையிலக்கணம்.

மருமலர்க்கோன்சுதனங்ஷம்பாழிடபமாக
வருதன்முதலாகிலிருமகிழ்நரையுற்றவளாங்
குருமுதற்கோனுகமதனல்லவர்ப்பெற்றிருக்கிற்
குறையாதவாழ்வையுளகோகனகத்தவளாம்
பருதியிருட்காலமுளகடிகையைமுப்பிரிவாய்ப்
படுப்பதற்குப்புருவமெதிர்பார்வையடிப்பார்வை

பொருமூலைக்கண்ணுடையவளாம்ரிதுகாலப்பலமாய்ப்
புகல்வதுமீதொன்றும்புட்போதையன்புத்திரனே.

(இ-ள்.) இடபம் மிதுனம் லக்கினமாக சனியாங்ஷமேறிலும் தூய பர்த்தாவுடையவள். லக்கினேசன்குருவாக எ-ல், சுபரிருக்கில் குறையாதவாழ்வுடைய செல்வி. பகலிராக்காலத்தில் ரிதுவாதலரிந்து ஒரு சாமம் பத்திநாழிகையாக நேர்வைத்து இதற்குநேர்புருடப் பார்வை, நேர்பார்வை, கீழ்ப்பார்வையுள்ள முலைக்கண்களை யுடையவளென்க. இதுவும் ரிதுபலத்திலொருபலன், புட்போதையனுக்குப் புத்திரனைவர். எ-று. (கஅ)

மாதர்சாதகப் படலம்.

முற்றிற்று.

ஆகப்படலம் ௩௭க்கு, கவி ௩௱௩௬.

உ-வது சாதககாண்டம் முற்றிற்று.

---

# முகூர்த்த காண்டம்.

## திதிசுபாசுபப் படலம்.

உதையவரெண்ணிலருதிக்கிலொருகோணத்திலகு
மொளிக்கொளியற்றிண்மழுங்கவுதித்தொளிர்பேரழகென்
னிதையமுளதாகவறிவீனமுளபுழுவுக்
கிறகுயிர்ப்பத்தன்னுருவாயியற்றியவேட்டுவப்பே
ரதையுமுரைப்பதற்காய்ச்செய்வனபோனபடியேற்
கருள்சுரந்தாளக்கடனென்றுண்டுகொண்டாயதனுல்
விதையும்விதைக்கிடமுமெனமேவியவாவேறு
விண்ணப்பமொன்றுளதென்றேத்தினன்வேணியனே.

(இ-ள்.) எண்ணிறந்தகோடி சூரியருதிக்கினும் ஒருகோணத்திலிலகாநின்ற ஒளிக்கும் ஒளியற்று உள்மழுங்கும்படி அதிகப் பிரகாசமாகப் பிரகாசியாநின்ற வினதுதிருவழகு என்னிதையத்தி லுளதாகும்படி அறிவீனமுள்ள புழுவுக்கு இறகுமுயிருமுண்டாகத் தனதுவடிவமாய்ச்செய்துத் தன்னுடையபெயருங் கொடுத்த வேட்டுவக்குருவியின்தன்மைபோல தேவரீர்திருவுளமிரங்கித் தடுத்தாட் கொண்டு

அருளவேண்டுங்கடனுக்காக நாயடியேனை ஆட்கொண்டவா விதை யும்வினைதக்கிடமுமாகமேவியவா, திருச்செவிக்கு ஏறுதானும் அடி யேன் விண்ணப்பமொன்றுள்ளதென்று மிகுதியும் துத்தியம்பண்ணி னன் அகத்தியமாமுனிவன். எ-று. (ௌ)

வேணியதென்மலையாநவிலென்றனனென்றுமுன்
    வீழ்ந்தடிதாழ்ந்தெழுந்தமுதற்சாதகவிலாசங்
காணும்வரைதொகையினமுமின்னதின்னதெனநீ
    காட்டினதென்னிருசெவிக்குங்கனிகனிந்தூற்றமிர்த
வூணதுவூட்டியபோலென்னுளத்தினவாவடங்க
    வுரைத்தனையீதன்றியுள்ளமுகூர்த்தவிலாசத்தும்
பூணும்விருப்புற்றனனென்றோதுமுனிக்கன்பாற்
    புகன்றனன்முன்றினத்தியல்சந்தனப்பொருப்புற்றவனே.

(இ-ள்.) சடாமகுடத்தையுடையவா தென்மலையவா உனதுமனதி ல்விருப்புற்றதைச் சொல்லுவாயாகவென்று சுவாமிதிருவுளம்பற்று முன்னம், சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து சுவாமிசாதகவிலாசத்துள்ள வகை தொகை யினமெல்லாம் அடியேனறியும்வண்ணம் இன்னதின் னதென்று இருசெவிக்குங்கனிகனிந் தூற்றமிர்தென்ன அடியேனுள் ளத்திலவா வடங்கும்படிக்கு திருவுளம்பற்றியருளினதுபோல முகூர் த்தவிலாசமுந் திருவுளம்பற்றியருளவேண்டுமென்று அகத்தியமாமு னிவிண்ணப்பஞ்செய்யாமுன்னம் நட்சேத்திரசுபாசுப முரைத்தனன் சந்தனசயிலத்தி லெழுந்தருளிநின்ற சுப்பிரமணியக்கடவுள்.

முகூர்த்தத்துக்கு ஆகாதநட்சேத்திரம்.

தினத்தவயோகங்கிரகவேதையவசித்தாந்
    தியம்விடங்கெண்டாந்தம்வைநாசியம்வதையாபத்துக்
கனற்சிகைசூன்மாசூலேகார்க்களஞ்சாற்பூர்த்தி
    கண்ணிலுயிரிலதுசலாவேதைகளர்நெருக்கன்
மனத்தினமாசுணந்தொடலாகுலமிருத்துரோக
    மலடவிசுத்துருவுதைத்தல்வாய்வனல்மண்டலந்தீ
தினத்துளதுருருதோஷங்கலைக்யானபாத
    மிவைமுதலவிகழ்ந்துதினமுகூர்த்தமியம்புவதே.

(இ-ள்.) நட்சேத்திர அவயோகம், கிரகவேதை, அவசித்து, நட் சேத்திராந்தியம், விடகடிகை, கெண்டாந்தம், வைநாசியம், வதை ஆபத்து, அனற்சிகை, சூல், மகாசூல், ஏகார்க்களம், கும்பபூர்த்தி நட்சேத்திராந்தகம், நட்சேத்திர மாரணம். சலாவேதை, பாபமத்

தியம், பாவர்கூடல், கிரகணதினம், ஆகுலம், ரோகம், மிருத்து, மலடு, அலி, சத்துரு, உதைப்பு, வாய்வுமண்டலம், அனல்மண்டலம், தீதினத்துள்ளது, குருதோஷம், கலேக்கியானபாதம். இவை முதலாகிய தோஷம்நீக்கி இயல்புள்ளநட்சேத்திர முகூர்த்தஞ்சொல்லுக. எ-று. (௫)

முகூர்த்தத்துக்குப்பொருந்தியநட்சேத்திரம்.

இயல்புளநாட்சுபயோகந்தாற்காலத்துயிர்கண்
　　ணெப்பொழுதுஞ்சீவனுளதியல்புளதென்றுவுக்கு
முயலகற்குமுறவாகியதிகசுபமாக
　　முப்புரிநூலினன்மரபின்முயங்கியதிற்குளதிற்
கயமிவதாய்வருணன்மகாகேந்திரமண்டலம்பால்
　　கமலமரோகம்மமிர்தகடிகைதிங்கட்கதப
மயலறுமித்தினங்கடனிலவரவருக்கிணக்க
　　மானதுங்கண்டுரைப்பரிதன்மேல்வாரத்தியல்மே.

(இ-ள்.) நட்சேத்திரசுபயோகம், தற்காலிகத்து உயிர்கண்ணுளது எப்போதுஞ்சீவனுள்ளது, ரவிமதிக்கு மித்திரமாகி அதிகசுபமாக குருவற்கமேறினது, நட்சேத்திரவர்த்தனையுள்ளது, வருணமண்டலம், மகேந்திரமண்டலம், பால், செலம், அரோகம், அமிர்தகடிகை, மாதேந்திரம், இவைமுதலாகிய சுபதினங்களில் அவரவருக்குப் பொருந்துதல்கண்டு சொல்லுக. இதன்மேல்வார இயல் சொல்லுவோம். எ-று. (௬)

முகூர்த்தம்வைக்கவேண்டியவாரம்.

வாரவுணவத்தமனஞ்சூன்யம்ருத்ரமரவ
　　மாசுணமற்றவர்கடருமக்ஙளுதையஞ்சேய்
காரியபரானமிராப்பகனும்விடகடிகை
　　கதுவவமிர்தொழித்திடன்மாங்கியசுபங்கால
வோரைசரம்வேளைவற்கம்பட்சியிற்றீதுளரா
　　குக்காலந்தன்னியநாட்பஞ்சகமற்றொழிய
சேருநல்லவாரமதில்யாதொருகாரியமுஞ்
　　செய்வரிதன்மேற்றிதிதொட்டுள்ளதுஞ்செப்புதலே.

(இ-ள்.) வாரவூண், அத்தமனம், வாரசூன்னியம், உருத்திரமுகூர்த்தம் சற்பமுகூர்த்தம் அமிர்தகடிகையல்லாத உபக்ரகவுதையம்சேய்

சனிவாரம், அபரானனம், இராப்பகல்விடகடிகை யுள்ளதாகி அமிர்தகடிகை பூச்சியமானவாரம். மகாநிசிகாலம், அசுபயோகம், காலவோரை, வேளை, சரம், பட்சி, இவற்றிற்றீதுள்ளது ராகுக்காலம், தன்னியநாள், பஞ்சகதோஷம், இவைமுதலாகிய மற்றுள்ளதோஷமுநீங்கிய சுபவாரத்தில் யாதொருகாரியமுஞ்செய்க. இதன்மேல் திதிமுதலானவைக்குள்ளதுஞ் சொல்லுவோம். எ-து. (௫)

முகூர்த்தங்கட்கியன்ற திதியோககரணம்.

இராசி.

திதிக்குருடுநந்தையிருத்தையுளதும்யோகத்
திற்றோஷமற்றுளதுங்கரணமதிற்றீதும்
விதிப்பதறவிவ்வகையிலவ்வியமற்றுளதாய்
விளம்புவரெவ்வினைக்குமிதன்மேலுமிராசிப்பே
ரிதற்கொருநேர்மணத்தல்சிராத்தங்கெமனந்தருவைத்
திடல்கேள்விபுல்லலகமெடுத்தலுழவின்னீர்
மதித்தன்மரக்கலநடத்தன்மயிர்வினைகற்பனவு
மாற்றியமலத்தியல்புவழுத்துவதற்கதுவே.

(இ-ள்.) திதிக்குருடு, நந்தை, இருத்தை, இவைமுதலாகிய திதித்தீதும் யோகதோஷம் மற்றுள்ளதும் கரணதோஷமும், தீர்த்து முகூர்த்தஞ் சொல்லுக, இதன்மேலும் ராசித்தீதறியும்படி மேடநேர் கலியாணம், சிரார்த்தம், கெமனம், தருவைத்திடல், புராணகாவிய இபதேசக்கேள்வி, சையோகம் மயிரெடுத்தல், உழவு, கிணறு குளம் வெட்டல், கப்பலோட்டல், மயிர்வினை வித்தாரம்பம், இவற்றிற்காகாதென்ப. எ-று, (௬)

சூன்னிய மாசம், உத்த ராயணம், தெக்ஷணாயனம்,

கந்தாயம், இருது, விவாகத்துக்கு ஆகாதமாசம்.

வழுத்தரிவைசால்வில்லலவன்மாதஞ்சூன்ய
மற்றுளவுத்தமமய்னந்தையாடிமாதத்
தழுத்துமுதற்சத்தமிதொட்டதுவிடந்தெக்கணங்கந்
தாயமொருநான்கிரண்டேலானிமுதல்ருதுவாந்
தொழிற்படிற்பேர்கார்குளிர்முன்பின்பனிவேனிற்பேர்
தோன்றலிளவேனின்முன்பாந்துருவைசுறுமாத
மொழித்தலதிற்செய்வர்முதற்கலியாணத்துடைய
ருஷபயகளத்திரக்கரிமாதத்தவகவ்வுதுமே.

(இ-ள்.) புரட்டாசி, மாசி, மார்கழி, ஆடி, இம்மாதங்கள் சூன்னி யமென்ப மற்றுள்ளமாதங்கள் உத்தமமென்ப தைமாதம் பூறவபட் சச் சத்தமிமுதல் உத்தராயணமென்ப இந்தப்படி ஆடிமாதமுதல் தெட்சணாயனமென்ப மாதம் ச கூடில் கர்த்தாபமென்ப உ, ஆகில்இரு துவென்ப இருதுப்போறியும்படி ஆனி ஆடிகார்காலம், ஆவணிபுரட் டாசி குளிர்காலம், ஐப்பசி கார்த்திகை முன்பனிக்காலம்,மார்கழி தை பின்பனிக்காலம், மாசி பங்குனி இளவேனிற்காலம்.சித்திரை வைகாசி வேனிற்காலமாம் தை சித்திரை தலைக்கலிபாணத்துக்கு ஆகாதென்க. ஆவணிமாதம், உ ம், களத்திர முகிப்பதற்கு ஆகாது. எ-று. (எ)

திருதிசுபாசுபப்படலம்

முற்றிற்று.

ஆகப்படலம்-௩அ-க்கு கவி ௩௱௪௩.

---

# பணுதிப்பொருத்தப்படலம்.

கவ்விமகட்கதிமோகநாயகசுவாமி
நாதசுபசோபனகல்யாணமுதலாக
வவ்வியமற்றுளமுகுர்த்தம்விதிப்பதற்கெப்படிவே
லாயுதவென்றேத்துமுனிக்ககமகிழ்ந்தாதரவாய்ச்
செவ்விதருமணப்பொருத்தமுதலுரைக்கவேண்டித்
திருவளர்செவ்வாம்பலம்போதவிழ்த்தனன்செந்தூரிற்
பவ்வமெழுந்திரைபொருசந்தனசயிலத்திருந்தென்
பாலிலன்பால்வளர்ந்தருள்கிர்பாலிதன்பாலகனே.

(இ-ள்.) வள்ளியம்மணுக்கு அதிகமோகநாயக, சுவாமிநாத வேலா யுதசுபசோபன கலியாண முதலானவைக் கெல்லாம் குற்றமற்ற முகு ர்த்தம் விதிப்பதெப்படி அருளல்வேண்டுமென் றனேகமாகிய தோத் திரங்களுஞ்செய்து துத்தியம்பண்ணிநின்ற அகத்தியமா முனிக்குத் திருவுளமிரங்கி அன்புற்று மணப்பொருத்த முதலுரைக்கவேண்டி அவுகினையுடைய செவ்வாம்பல்மலரை யொத்த திருவாய்மலர்ந்தருளி னவன் திருச்செந்தூரில் கூடற்றிரைபொராநின்ற சந்தன சைலத்திலு தையமாகி என்னிடத்தில் அன்பாகவளர்ந்தருளிய கிருபாலிபாலகன். எ-று. (க)

## ஆணுக்கும் பெண்ணுக்கும் பொருத்தம்.

பாலவனுமற்றவனுமாகிலி நவோரும்
பாலாகிற்பாலர்தனமற்றெனிற்றுற்பலமா
நாலடிதொட்டதனமலடாயழிதலாண்பெண்
ணுக்கழிவுசுரர்நரரல்லாதகண நுவலொன்
றேலிவைநன்றாண்பெண்ணிதுவல்லதுபெண்ணிருவோ
ரென்னினுமாங்கிழமைதிதிராசிதினமிருகங்
கோலமறைபட்சிபெண்டீர்க்கமுமாகேந்திரமுங்
கூட்டுவதற்கேறறிருந்தால்விவாகமுங்கூட்டுவதே.

(இ-ள்.) பெண்பாலும் புருடன் வைரமுமாகிலும், அல்லது இருவர்களும் பாலாகிலும், புத்திரருந்தனமு முண்டென்ப. இருவரும் வைரமாகில் ஆகாதென்ப. அடிக்கயிறொன்றாகிற் தரித்திரமென்க. இடைக்கயிறொன்றாகில் மலடு. அகடாகிற்பெற்றழிதல் கழுத்தாகிற் புருடனுக்கு ஆகாதென்க சிரமாகிற் பெண்ணுக்கு ஆகாதெனக. தேவகணமும் மனுடகணமும் பொருந்துமென்க. இராட்சத கணமாக இரண்டுமிருக்கிற் பொருந்துமென்க. ஆண் ஆணாகவும் பெண்பெண்ணாகவும் இருக்கில் ஆமென்க. அல்லவெனில் இருவரும் பெண்ணாகிலும் ஆமென்க. இதன்மேலும அதிபதி, திதி, இராசி, நட்சேத்திரம், மிருகம் வேதக்கயிறு, பஞ்சபட்சி, ஸ்திரீதீர்க்கம், மாகேந்திரம், இவை கூட்டுவதற்கு இயல்பாக இருக்கில் விவாகமுங் கூட்டுவதற்கு உத்தமம். எ-று. (உ)

## விவாக முகுர்த்தம்.

கூட்டுதல்பொன்புகர்பெலக்கக்குருவரிவிட்டிருக்கக்
குசன்சனியிவ்வாரமதிமாதமுங்கூடாம
ஞட்டமுயிருளசுடரேரினனவுண்புன்மதிதேர்
காவாய்முக்குளமெனுமிந்நாட்களினற்றியும்
வாட்டமிலொன்றேழிறைவர்பெலமாய்ப்பொன்பார்க்க
மதமுமதற்கடுத்ததுநிர்மலமாகமறையோ
ரீட்டுகனலோமமுகத்தவர்கடெய்வமாக
வெண்ணியவர்வாக்கியங்கொண்டிசைப்பதுநன்மணமே.

(இ-ள்.) விவாகங்கூட்டுதல், குருசுக்கிரன் பெலமாக மாமங்காலமுஞ் சேய்சனிவாரமும் அதிகம் அல்லது மலமாதமுநீக்கி கண் உயி

ருளதாகிய சோதி, மகம்-அத்தம்-மூலம்-அனுடம்-மிருகசிரம் - ரோகணி-ரேவதி-உத்தரத்திரையம்-இந்தத்தினங்களில் நல்ல திதியுமாக, க-எ-க்குடையவர்கள் பெலக்கக் குருபார்க்க, எ-அ-சுத்தமாக ஓமாக்கினிசாக்ஷியாக தேவப்பிராமணர் ஆசீர்வாதத்தினாலே அவர்களைத்தெய்வமாக நினைத்து அவர்கள் சொற்படிக்குநடத்துவிப்பது நன்மணம்.

மணக்கால்நாட்டற் முகூர்த்தம், விவாககாலம்,

மணமகளிலக்கணம்.

மணம்விதித்தநாட்குமுதலொன்றையுளதான
வாரமுதற்சுபமுளதாய்மணக்காலுட்டுதலாங்
கணவரிதுத்தனம்ரோமங்கனன்மதிகேதிவாரங்
காலமிதன்முன்மணத்தல்கற்புடமைக்கழகாம்
பணவகிர்கற்றருமான்பணிலமிப்பேரிலதாய்ப்
பாதவிரற்படிதோயப்பருமுழங்காலலதாய்க்
குணமுமதிப்பொறையுடதாய்க்கூரியமூக்கிலதாய்க்
கூடுநுதல்பல்லசமம்பங்கமிற்கூடுதலே.

(இ-ள்.) கலியாணமுகூர்த்தம் விதித்தநாட்கு முன்னதாக ஒற்றித்தவாரத்தில் திதிமுதலானவை சுபமாகியதில் மணக்கால் நாட்டுகவிவாககாலமறியவேண்டில், ரிதுவாகில் அக்கினிக்குப்பாரி, தனம் அரும்பில் சந்திரனுக்குப்பாரி, ரோமோற்பத்தியாகில் கேதுவுக்கு பாரி, ஆகையால் இவற்றிற்கு முன்னதாக விவாகமுகிப்பது பதிவிரதாறன்மமென்ப. சற்பம், செலம், பருப்பதம், தருவற்கம், மிருகம், சங்கு, இப்பெயருள்ள கன்னிகையை விவாகத்துக் கூட்டுதல்மத்திமம், பாதவிரற் பூமியிற் றோய்வதாகவும் முழங்கால் பருத்திராததாகவும் குணதிகமாய் அடக்கமுடையதாகவும் பொறுமையுள்ள தாகவும்நாசிநுனை கூர்மையில்லாததாகவும் பல் அசமமில்லாததாகவும் அங்கபங்க மில்லாததாகவும் பார்த்து விவாகத்துக்கு நேமிப்பது தர்மம் எ-று. (ச)

நிஷேகமுகூர்த்தம், சீமந்தமுகூர்த்தம்.

கூடல்ரிதுப்பின்பொருநாணிசியின்மணத்தினத்தற்
கோனுகமற்றரிசதையங்கூட்டுதற்குண்டான
நாடிதிவாரங்கரணம்யோகமுநல்லதுவாய்
நண்ணியலக்கினமுமொன்றேழினர்புகருநலமாய்
வேடலகிர்மலமாகில்வியம்புதல்சீமந்தப்
வேய்ரதமுக்குளமோணம் வெயிலிவைநல்வாரத்

தோடதிகசுபதிதியோகங்காரணத்தாறெட்
டுளமாதத்துயிலுள்சுத்தமாகிலதுத்தமமே

(இ-ள்.) நிஷேகமுகூர்த்தமறியும்படிரிதுவுக்குப் பின்புள்ளநாட்களில் நிசிகாலமுமாகக் கலியாண முகிர்த்தத்துக்கு அமைத்த தினத்தில் மிருகசிரம் மகம்நீக்கித திருவோணம் சதையங்கூட்டித் திதிவார சுபயோககரணமுஞ் சுபமாகப்பொருந்தியலக்கினமும் லக்கினேசனும் ஏழுக்குடையவனும் சுக்கிரனும்பெலமாக ஏழாமிடம் நிர்மலமாகக் காட்டுவது நிஷேகமுகூர்த்தம். இதன்மேல் சீமந்தமுகூர்த்த மறியும்படி புனர்பூசம், ரோகணி, உத்திரத்திரையம், திருவோணம் அத்தம் இவற்றோடு சுபவாரதிதியோகககரணமுமாக ஆறும்மாதத்தில் எட்டாம் மாதத்தில் ரு அ சுத்தமாகச் சீமந்தஞ்செய்வது உத்தமம். எ-று. (ரு)

புத்திரோதையம், புத்திரர்முகம்பார்த்தல், ஆதித்ததெரிசினை

கோமுகதெரிசினை, சந்திரதெரிசனை, தேவப்பிராமணர்தெரிசனை

நாமகரணம்.

உத்தமம்புத்ரோதையநீராடைகுருகெண்டாந்
தும்மவுணர்புத்தமுமற்றுளதிற்
புத்திரரெட்டமமுறப்பூவுதையஞ்சுபமாய்ப்
பொன்விழிப்பெய்துதனலனும்புதல்வர்முதம்பார்க்க
வத்தமிதன்கோண்சுடர்வேயம்பிமதிகுளந்தா
ரவுண்சதையம்புட்புலிவையாதவற்கானற்கோ
வத்தினக்கோன்மூன்றொருநான்கிராறீரைந்து
மற்றவர்க்காந்தினமிதிர்பேர்பகர்வதற்குமாமே.

(இ-ள்.) பூராடம், சித்திரை, பூசம், கெண்டாந்தம், அபுத்தமூலம் இவைமுதலாகியதீதகல, ரு அ சுத்தமாகப் பூவோதைய லக்கினம சுபமாகக்குருபார்க்கில் புத்திரோதையத்துக்கு உத்தமமென்க புத்திரர்முகம்பார்க்கவேண்டில். அத்தம், ரோகணி, திருவோணம், சோதி, புனர்பூசம், ரேவதி, மிருகசிரம், உத்திரம், பூசம், மூலம், சதையம், அவிட்டம், அனுசம் இவை உத்தமம். இதற்குமூன்றுநாள் ஆதித்த தெரிசனையும், நாலாநாள்கோமுக தெரிசனையும் கஉ ம் நாள் சந்திர தெரிசனையும், பத்தாம்நாள் தேவப்பிராமணர் தெரிசனையும், பண்ணுவிப்பது உத்தமம். இவற்றிற்குச்சொன்னமுகூர்த்தமேநாமோதையத்துக்குமாம். எ-று. (சு)

காதுகுத்தல், அன்னப்பிராசனம்.

வதனம்விழிப்பதிஞமம்வழுத்துவதற்கிலதேன்
மாதமுமாமரரினர்நாள்வரிலதிலாதிரைவேய்
விதுதைரதம்பயரேடம்வெயிலரிமுக்குளம்புள்
விமலமுளதிதிவாரமற்றதுடிக்குளதாய்க்
கதையுபதேசம்பவமும்பெலமாயத்தலமுங்
களங்கமுமற்றிடல்காதுகுற்றுதற்காறெட்டே
மூதையமுதற்றிங்களுமாமூணுருறீர்த்தா
ருடுபதிக்கோண்மாவேயிரேடைநல்வாக்குளதே.

(இ-ள்.) புத்திரதெரிசனேக்கு அமைத்தநாளில் நாமகர்மத்துக்குக் கூடாதேபோனுல் ௩௰ நாள்வரைக்குமாமென்க. இதன்மேல் காது குற்றுகிறதற்கு முகுர்த்தமறியும்படி நாள் கக கஉ ல் திருவாதிரை புனர்பூசம், மிருகசிரம், பூசல், ரோகணி, சித்திரை, ரேவதி, அத்தம் திருவோணம், உத்திரத்திரையம். அவிட்டம் இந்தநாட்களில் திதி வாரயோககரணங்களுஞ் சுபமாகயிருக்க, ௩ கக ம் பெலமாகி இந் தஇடங்களுஞ் சுத்தமாக இருக்கில் காதுகுற்றுகிறதற்காமென்க. இந்நாட்கள்தப்பில் மாசம் சு எ அ லுமாமென்க. இதன்மேல் அன்னப்பிராசனத்துக்கு, மாசம் சு அல்லதுவருஷம் க ல் பூசம், மிருகசிரம், சித்திரை, அவிட்டம், அசுபதி, புனர்பூசம், ரேவதி, உத்திரம் இவற்றில் இரண்டாமிடஞ்சுத்தமாக இருக்கில் அன்னப்பிராசனம் பண்ணுவது உத்தமம். எ-று. (எ)

சவுளமுகுர்த்தம்.

குளமுதனுண்கியமுதன்மூன்றயன்மதிதார்கணீற்றிக்
குடுமிமுறத்தைந்தகற்றிக்குறைமதிநாணீக்கிக்
களமருவவ்வருடமுமக்கருப்பமுளநாளுங்
கடகரவியபனமுமாதக்கசடுங்கழிய
நளிர்கலேமால்புகரில்கயலக்கினமீர்நான்கி
னலரெனினுமுறலறநிர்மலமாய்ச்சேய்நாட்கோன்
முளரிமன்சுன்னிறைபெண்விப்க்ர்சூத்திருக்கலதா
மூன்றெரைந்தாண்டுதித்தவற்காஞ்சவுளமுகுர்த்தமுமே.

(இ-ள்) சவுளமுகுர்த்தமறியும்படி உத்திரமுதல் ௪ ம் உத்திரட்டாதிமுதல் ௩ ம், ரோகணி, மிருகசிரம், பூசம், புனர்பூசம், இந்நாட்களில் அனற்சிகை, விசாகாதிபஞ்சமி, அமரபட்சம் கலியாண

ம்பண்ணினவருஷம், கெற்பமுள்ளவருஷம், தெக்ஷணாயனம், சூனிய மாசம் இவைமுதலானவை நீக்கிக் கடகம், மகரம், மிதுனம், கன்னி, இடபம், துலாம், மீனம் இந்தலக்கினங்களில், அட்டம சுத்தியுண் டாக ஆயுட்கர்மஞ்செய்விப்பது உத்தமம். இதற்கு அரசர்க்குச்செவ் வாயும், மாதர்க்குத்திங்களும், பிராமணர்க்கு ஞாயிறும், சூத்திரர்க் குச்சனியுமாகாத வாரமென்க. பிறந்தபிள்ளைக்கு ௩-ம் வருஷம், ரு-ம் வருஷம் சவுளத்துக்காகும். எ-று. (அ)

வித்தியாரம்பத்துக்கு முகுர்த்தம்.

அத்தமயன்கோன்மால்புள்ளாதிரைவேய்தாரீ
 றனுடமுடையான்மாவைந்தாம்வருடத்தயன
முத்தரமாய்ச்சனிசேய்விட்டுளவாரந்திதிமற்
 றுஞ்சுபமாயைந்திரண்டொன்றுடையவர்மால்பெலமாய்
வித்தைசொலல்பரிதேர்மற்றுயுதமுத்தமிழ்கால்
 வேதமறஞ்சாத்திரமாவெயில்குளம்யாழ்வேய்செக்
கித்துவர்வாய்மால்சுடரீததற்கதற்குத்தம்மா
 மென்பரிதன்மேலுமுபநயனமியம்புவதே.

(இ-ள்.) வித்தையாரம்பத்துக்கு முகுர்த்தமறியும்படி அத்தம், ரோகணி, உத்திரட்டாதி, திருவோணம், அவிட்டம், திருவாதிரை, புனர்பூசம், பூசம், ரேவதி, அனுசம், சித்திரை, உத்திரம், அசுபதி இந்தநாட்களில ரு-ம் வருஷத்தில் உத்திராயனத்தில் சனிசேய் அல் லாதவாரத்தில் திதியோககரணமுஞ்சுபமாக க-உ-ரு-க்குடையவர்க ளும் புதனும் பெலமாகில் வித்தையாரம்பத்துக்காமென்க. இதற்கு அசுபதி குதிரையேற்றத்துக்கும், அத்தம் தேரேற்றத்துக்கும் உத்தி ரம் யானையேற்றத்துக்கும், திருவாதிரை ஆயுதபரிட்சைக்கும் புனர் பூசம் முத்தமிழுக்கும், சதையம் சாத்திரமுதலாகிய யோககர்மங்களு க்கும், அவிட்டம் வேதமுதலானவைக்கும், திருவோணம் தருமசாத் திரத்துக்கும், சோதி சாத்திரமுதலானவைக்கும், விசேஷித்துச் சொ ல்லுக. இதன்மேல் உபநயனஞ்சொல்லுவோம். எ-று. (கூ)

உபநயனமுகுர்த்தம், சமாவர்த்தனை.

இயம்புவதேழாம்வயதின்முக்குளந்தேர்தார்வே
 யிரலைகலைசோதிவிதுவீறிரவியனுட
நயந்தருவாரந்திதியுமற்றுள துநலமாய்
 நடையனையுள்ளமலமுமாய்நாகமுநிர்மலமாய்ப்

பயந்தினத்துபநயனமாவணிப்பூரணைமாற்
பகலிலிராப்பக்கம்வெயிற்புரட்டாதிப்பகலில்
* கயந்தைமதிமுக்குளப்புற்றேர்மாலவேயீறிற்
ககனமெட்டீதமலஞ்சமாவர்த்தனைக்காகுவதே.

(இ-ள்.) உபநயனமுகூர்த்தமறியும்படி ஏழுவயதில்உத்திரத்திரையம், ரோகணி, பூசம், புனர்பூசம், அசுபதி, சித்திரை, சோதி, மிருகசிரம், ரேவதி, அத்தம், அனுடம் இவற்றில் திதிவார மற்றுள்ளதுஞ் சுபமாக, சு-ரு-ம-சுத்தமாக ஆகாசநிர்மலமாகில் உபநயனத்துக்குமுகூர்த்தஞ்சொல்லுக. இதன்மேல் சமாவர்த்தனைக்குமுகூர்த்தமறியும்படி ஆவணிமாசம் பௌரணை திருவோணமாகப் பகற்காலத்தும், புரட்டாசிமாதம் அமாவாசி அத்தமாகப்பகற்காலத்தும், அத்தம், பூசம், மிருகசிரம், உத்திரத்திரையம், அனுசம், ரோகணி, திருவோணம், புனர்பூசம், ரேவதி இவற்றில் அட்டமசுத்தியாக ஆகாசநிர்மலமாகில் சமாவர்த்தனைக்கு முகூர்த்தஞ்சொல்லுக. எ-று. (ய)

அபிஷேகம், அரசியற்கை, செருவெதிர்க்கை,
இவற்றிற்கு முகூர்த்தம்.

வத்திரக்கோண்டேர்க்கோண்முக்குளந்தார்வேய்நாவாய்
மாவனுசஞ்சோதியுநல்வாரமுதலுளவு
மித்திரமொன்றெட்டமலமாசிலபிஷேகம்
வேந்தருரிமைக்காரன்மால்விதுக்கோண்விளக்கீ
றுத்திரமூன்றத்தமுன்னாண்மற்றதுமுத்தமமா
யொன்றிரண்டாயறந்தொழில்சுத்தம்மாகிலுரைப்பா
சித்திரைமுக்குளந்தேர்க்கோண்மாமகம்வேய்மதிபுற்
தெப்பமுமற்றுளசுபமுஞ்செருவெதிர்க்கைக்காமே.

(இ-ள்.) அபிஷேகமுகூர்த்த மறியும்படி சித்திரைக்கோண், ரோகணிக்கோண், உத்திரத்திரையம், பூசம், புனர்பூசம், ரேவதி, அசுபதி, அனுசம்-சோதி யிவற்றில் திதிவாரமுதலானவையுஞ் சுபமாய், க-அ-அ-சுத்தமாகில் அபிஷேகமுகூர்த்தத்திற்கு உத்தமம். அரசியற்கைமுகூர்த்த மறியும்படி கார்த்திகை, திருவோணம், மிருகசிரக்கோண், சோதி, ரேவதி, உத்திரத்திரையம், அத்தம், அசுபதி இவற்றில் மற்றவையுஞ்சுபமாகி க-உ-ச-கூ-ம-சுத்தமாகில் அரசியற்கை முகூர்த்தத்திற்கு உத்தமம். இதன்மேல் சித்திரை, உத்திரத்திரையம். ரோகணிக்கோண், அசுபதி, மகம், புனர்பூசம், மிருகசிரம், அனுசம், ரேவதி இவற்றில் மற்றுள்ளவையுஞ் சுபமாகில் செருஎதிர்க்கைக்கு உத்தமம். எ-று. (கக)

---

* கயம் - அத்தம்.

படைவகுப்புக்காண, கோடியுடுக்க,

பொற்பூணணிய.

* காமனரவாதிரைநீர்கனல்சுடர்பாராடை
கங்குலரியேர்தாரிற்கதிர்சனிசேய்கனக
மாமிவையோடிருத்தைவிட்டியுங்கூடில்ரிபுவோ
டமர்செயவனீகவகுப்பாவதுங்காணுதற்காங்
() கோமன்முதலாறிரலைவேய்ரதந்தையோடங்
கோவாடிமாலவிட் டங்கோடியுடுப்பதற்காம்
பூமன்விதுமாவீறுபுற்றேர்தார்கலையிற்
பொன்மதிமால்சனிபுகர்பொன்பூணுதற்குமாமே.

(இ-ள்.) கேட்டை ஆயிலியம் திருவாதிரை பூராடம் கார்த்திகை சோதி ரோகணி சித்திரை பரணி திருவோணம் மகம் பூசம் இவற்றில் ஞாயிறு சனி செவ்வாய் வியாழன் இந்த வாரங்களும் திதியில் இருத்தையும் கரணத்தில் விட்டியுங்கூடிச் சேகரிக்கில் படைவகுப்புக்காணுதற்கு உத்தமம், உத்திரமுதல் ஆறும் அசுபதி புனர்பூசம் ரோகணி பூசகம் ரேவதி உத்திரட்டாதி உத்திராடம் திருவோணம் அவிட்டம் இவைகோடியுடுப்பதற்கு உத்தமம். இதன்மேல் அத்தம் மிருகசிரம், அசுபதி, ரேவதி, அனுசம் ரோகணி பூசம் சித்திரை இவற்றில் ஞாயிறு செவ்வாய்வாரம்நீக்கி மற்றுள்ளவாரத்தில் பொன்பூணுதற்கு உத்தமம். எ-று. (கஉ)

வயல் பார்க்க, உழ, விதைக்க, கதிரறுக்க,

புதியதுகொள்ள, தானியங் களஞ்சியத்திற்சேர்க்க.

o மாமனவுணதிரைமுக்குளம்பரணியாடை
மகஞ்சுடர்தாரனுடம்வயல்பார்ப்பதுவான்றிரையம்
பூமன்ரதம்வேய்தோணிபூசமுழவிதிமேலர்
புன்முறஞ்செககவுண்சோதிபொருந்தில்விதைப்புக்காஞ்
சேமனுகமான்முறந்தேரடைப்பிரவிசாற்பூர்த்
திப்பெயரில்லாதிருக்கிற்கதிரறுத்தல்சேலே
சோமன்முறமுக்குளம்புல்லவுணுணவீமேதர்தேர்
சோதிபுள்யாழ்வேய்தைககதையுஞ்சொலனெல்லிடற்கே.

---

* காமன் இந்திரன் () கோமன் எருது o மாமன் விஷ்ணு.

(இ-ள்.) திருவோணம் மூலம் திருவாதிரை உத்திரத்திரையம் பரணி சித்திரை மகம் சோதி பூசம் அனுசம் இத்தினங்கள் வயல்பார்ப்பதற்கு உத்தமம். இதன்மேல் உத்திரத்திரையம் அத்தம் ரோகணி புனர்பூசம் ரேவதி பூசம் இத்தினங்கள் உழவுக்கு உத்தமம், இவற்ருெடு மகம், அனுசம், விசாகம் சதையம் மூலம் சோதியும், விதைப்புக்கு உத்தமம். இதன்மேல் திருவாதிரை மகம் உத்திரம் விசாகம் ரோகணி பரணி அத்தம் இவற்றிற் கும்பபூர்த்தி நீங்கில் கதிர் அறுப்பதற்கு உத்தமம், சித்திரை மிருகசிரம் விசாகம் உத்திரத்திரையம் அனுசம் மூலம் இத்தினங்கள் புதியதுகொள்ள உத்தமம். இவற்ருேடுமகம் ரோகணி சோதி அவிட்டம் திவர்திரை புநர்பூசம் பூசம் ரேவதியும் தானியங்களஞ்சியத்திற் சேர்ப்பதற்கு உத்தமம். எ-று (கங)

சாந்தியபிஷேகம், தேசசாந்தி,

அசுவசாந்தி, கெஜசாந்தி.

அற்கனெமன்முக்குளந்தோரிநுகந்தைசுடர்வே
யனுடமிரேவதியிவையிற்சாந்தியபிடேக
மெற்கிறைமாக்கலைபார்புல்லோர்சுடர்தார்கண்புள்
ளீரெமனிற்பெயறேசசாந்திகனலிரலை
கற்கடகமன்முறந்தார்கதிரரிவையீறிற்
0 கமலரவிபரியரசர்கடவளுக்காங்கரிக்கா
முற்கிழமைதேளுறத்தைபூறுவமாந்திதியின்
மும்மூன்றுக்கிருபுறமாஞ்சாந்திமுகுர்த்தமுமே.

(இ-ள்.) அத்தம் சதையம் உத்திரத்திரையம் ரோகணி திருவோணம் மகம் பூசம் சோதி புனர்பூசம் அனுசம் ரேவதி இவற்றில் சாந்தியபிஷேகஞ் செய்வதற்கு உத்தமம் அத்தம் அசுபதி சித்திரை ரோகணி அனுசம் மகம் சோதி பூசம் புனர்பூசம் அவிட்டம் ரேவதிசதையம் இவற்றில் தேசசாந்தி செய்வது உத்தமம். கார்த்திகை அசுபதி மிருகசிரம் விசாகம் பூசம் அத்தம் அவிட்டம் ரேவதி இவற்றில் சோதியில் சூரியன் நிற்குங்காலம் குதிரை மானுவிக்கும் இராசதேவசாந்திக்கும் உத்தமம். ரவிவிருச்சிகத்தில் நிற்கப் பூசத்தில்பூறுவபக்ஷத்து அட்டமிதசமிகூடில் யாணைமானுவிசெய்வதற்கு உத்தமம். எ-று. (கச)

0 கமலம்-சோதி.

பிணிகொள்ளலாகாதநாள், ரோகசாந்திசெய்ய,
ஔஷதங்கொள்ள, மரணத்துக்காகாதநாள்,
பிரதிட்டைசெய்ய.

முகிலூாதியாழகியல்சுடர்கலேமுப்பூர
முறந்தீயோர்நோய்க்கிகழ்தன்மூலமுமாவான்கோன்
புகனேய்தீர்த்திடுஞ்சாந்திக்கரிவிதுத்தாரெமன்வேய்
பொருந்துமருந்துணற்கேர்தேர்புண்முதலேந்தமா
ரசுசோதிமுக்குளஞ்சாக்காடதனுக்காகா
தரவொழியமாமதிதாரநுடமதையணையிற்
சுகிர்தாதிமுதற்றேவரிசமானற்கிசையச்
சொல்வதும்ப்ரதிட்டைதனக்ககத்திபமாமுனியே.

(இ-ள்.) கேட்டை-திருவாதிரை-ஆயிலியம்,பாணி-சோதி-சித்திரை பூரத்திரயம்-விசாகம்-கார்த்திகை-மகம்-இவற்றில் பிணிகொள்ளலாகாது. மூலம்-அசுபதி-உத்திரப்-உத்திரட்டாதி-இவைகளில் ரோகசாந்திசெம்ய உத்தமம். திருவோணம்-மிருகசிரம்-பூசம்-சதையம்-புனர்பூசம் இவற்றில் ஔஷதங்கொள்ள உத்தமம். மகம்-ரோகணி அவிட்டம்-சதையம்-பூரட்டாதி-உத்திரட்டாதி-ரேவ்தி-புனர்பூசம் - ஆயிலியம்-சோதி-உத்திரத்திரயம்-உவை மரணத்திற்காகாது இவற்றோடு ஆயிலியம் நீங்கலாக அசுபதி-மிருகசிரம்-பூசம்-அனுசம்-கூடில் தேவவர்க்கத்துக்கும் இஜமானனுக்கும் பொருந்தில் பிரதிட்டைக் காகும் அகத்தியமாமுனியே-எ-று. (கரு)

பலதானியம் நாட்செய்ய, குதிரைகொள்ள, மூளைத்தெளிக்க
கரும்புதென்னேமுதலிய மரம்வைக்க-பசானவிதைவிதை
க்க-படர்பயிர்போட-நெல்விதைக்க-கத்தரிபோட-
பொன்கொள்ள-பனங்கொட்டைபுதைக்க ஆடு
கொள்ள-மனேவிலேக்குக்கொடுக்க-வாழை
வைக்க-நெல்நாற்றுநட-நெல்விதைச்
சுருணேகட்டித்தண்ணீரிற்போட
எருத்துப்புரைகட்டப்பொ
ருந்தியதினங்கள்.

முன்னுணேர்பலதான்யநாட்செயமாக்கொள்ள
மூளைத்தெளிக்கக்கழைதாழைமுதற்றருக்களுஙன்ற
பின்னுனவிதைவிதைக்கலாம்படாலைபங்கூழ்நெற்
பேர்விதைக்கத்தரிபோடவிதைக்கநடப்பீத
மிங்நாளிற்கொளலாம்புற்புதைக்கவொருவாங்க
வில்லியவாந்தருவிலின்கனிப்போவைக்க

வங்நாண்முற்காலினென்னுற்றான்றுதற்காநெல்வித்
தயஞ்சேர்க்கவான்புரைகட்டுதற்குமதியாமே.

(இ-ள்.) அசுபதி நட்சேத்திரத்திற் பலதானிய நாட்செய்யவும், குதிரைகொள்ளவும், முளைத்தெளிக்கவும், கரும்புதென்னை முதலாகிய மரம்வைக்கவும், பசானவிதைவிதைக்கவும், உத்தமம். பரணியில்படர்ப்பயிர்போடவும், நெல்விதைக்கவும், கத்தரிநடவும், பொன் கொள்ளவும், உத்தமம். கார்த்திகையில் பனங்கொட்டை புதைக்கவும், ஆடு கொள்ளவும், மனைவிலைக்குக் கொடுக்கவும், உத்தமம். ரோகணியில் வாழைவைக்கவும், இதன்முதற்காலில் நெல்நாற்றுநடவும் உத்தமம். மிருகசிரத்தில் நெல்விதைச் சுருணைகட்டி தண்ணீரிற் போடவும், எருத்துப்புரைகட்டவும் உத்தமம். எ-று. (கசு)

உழவுமாடுவாங்க-பசுகொள்ள-கிரீடம்வைக்க, ஆனைகட்ட, குதி

ரையானைசேர்க்க, பொன்கொள்ள, எள்ளுவிதைக்கப்பொழி

ந்தியதினம்-நாற்காலி முதலானவைக்கு ஆகாததினம்

சிறுதானியம் விதைப்பதற்குப் பொருந்திய வாரம்.

ஆன்முதனுன்காலியுழவுக்குளதுவாங்கற்
காமதமத்தஞ்சுடரிலாக்கொளற்காமமரர்
கோனதிற்கிரீடம்வைக்கலாமானைகட்ட
கோக்கொளரோமுடியிற்குதிரைகரிகூட்ட
மானிதியங்கொள்ளவெள்ளுவிதைப்பதற்காமானை
மறலியிற்கட்டுதற்காமானுற்கான்மற்றெவைக்கு
மீனமுளதாங்காண்வித்திரவிமுதலுளதா
யியம்புவர்மற்றெவைக்குமுளவியற்படிசொற்றிடலே.

(இ-ள்.) திருவாதிரையில் உழவுமாடுவாங்குதற்கு உத்தமம். மகம் அத்தம்சோதியில் பசுகொள்ள உத்தமம். கேட்டையில் கிரீடம் வைக்க உத்தமம். பூராடத்தில் ஆனைகட்டவும், பசுகொள்ளவும், உத்தமம். உத்திராடத்தில் குதிரையானைசேர்ப்பதற்கு உத்தமம். திருவோணத்திற் பொன்கொள்ளவும். எள்ளுவிதைக்கவும், உத்தமம், சதையத்தில யானைகட்டுதற்கு உத்தமம். உத்திரம் நாற்காலி முதலானவைக்கு ஆகாது. நாயிறுவாரமுதல் அவரவர்களுக்கு அமைத்ததானியப்படிக்கு சிறுதானியவித்து விதைப்பதற்குச் சொல்லுக மற்றின்னவைக்கும் அந்தந்தத்தினத்துக்குள்ள இயல்புப்படி சொல்லுக. எ-று.

முகுர்த்தவிலக்கு.

இவ்வியல்புற்றிடுமுகுர்த்தமியற்றுதினத்துற்கை
யிடியுடுவாராலம்விழலெரிகருவிவிரணம்
வௌவுதறுற்குரலெழுதன்மழைபெயலம்மனையி
மனையகலரிதுவாதலசரீரவாக்கவமாய்ச்
செவ்விலதுற்றிடனீர்ச்சால்பயங்கவிழ்த்தெங்காய்
சிதறிடறெவ்விகல்புரிதரேசிகதேவர்க்கங்
கௌவையுறல்கடவுளர்விழாவயர்தல்யாவுங்
கண்டுரைத்தன்முகுர்த்தமினிக்கமனமுரைப்பனவே.

(இ-ள்.) இந்தப்படி முகுர்த்தம்வைத்ததினத்தில் குறைக்கொள்ளி இடி, நட்சேத்திரம், ஆலங்கட்டி இவைவிழுதல், கருவி அக்கினியால் விரணம்படல், துற்குரலெழுதல், மழைபெய்தல், வளவிலுள்ளவள் மாதரீதுவந்து வெளிப்படல், அசரீரவாக்கு, துர்வசனமாக எழுதல், பூரணகும்பம்கவிழ்தல், கடகாலிற்பால்கவிழ்தல், தேங்காய் சிதரல், சத்துருபோர்செய்தல், தெய்வப்பிராமணர் குருவர்க்கம் மனோசாஞ்சலியப்படல், தேவாலயத்தில் திருவிழாநடத்தல் இவை முதலாகிய துற்குறிநீக்கி மூகுர்த்தம் நிறைவேறப்பண்ணுக. இதன்மேல் யாத்திரைமுகுர்த்தஞ் சொல்வோம். எ-று. (௧அ)

மணுதிபொருத்தப் படலம்

முற்றிற்று.

ஆகப்படலம், ௯௬-க்கு, கவி ௯௬௧.

---

# யாத்திரைப் படலம்.

---

திக்குயாத்திரை, சமுத்திரயாத்திரை,

யாத்திரைக்கு ஆகாதகாலம்.

அனன்முதலேழேழாறேழாறுஞ்சுன்மதியு
மந்தணன்மாலும்மலவுமிருத்தையலாதனதேர்
முனருளகீழ்த்திசைமுதலாய்முச்சிதிரிந்தபர
முதிர்நிதிமத்யானமுனர்மொழிவதும்யாத்திரைக்காம்
இனன்மதிமால்புட்புல்சுடரிரலையிற்கோளுதையத்
தெய்துதனமுந்நீர்யாத்ரைக்கென்பதிரசதமால்
கனன்மொழிசாலலவனிம்மாதங்கள்பெண்கட்கவமாங்
கடுத்திதிபூச்சுக்கிரன்யோகினிக்கசடாகாதே.

(இ-ள்.) கார்த்திகை ரோகணி மிருகசிரம் திருவாதிரை புனர்பூசம் பூசம் ஆயிலியம் ஆகிய இந்த ஏழுநட்சேத்திரங்களில் செவ்வாய்க்கிழமையும் நத்தையுங்கூடில் மத்தியானந்திரிந்ததின்பேரில் கீழ்த்திசை யாத்திரைக்கு உத்தமம், மகம் பூரம் உத்திரம் அத்தம் சித்திரை சோதி விசாகம் ஆகிய இந்த ஏழுநட்சேத்திரங்களில் சனி திங்களும் பத்திரையுங்கூடில் அபரான்னகாலத்தில் தென்றிசையாத்திரைக்குஉத்தமம். அனுசம் கேட்டை மூலம் பூராடம் உத்திராடம் திருவோணம் இந்தஆறு நட்சேத்திரங்களில் புதன் வியாழமும் ஜயையுங்கூடில் மாலிசிகாலத்தில் மேற்றிசையாத்திரைக்கு உத்தமம் அவிட்டம் சதையம் பூரட்டாதி உத்திரட்டாதி ரேவதி அசுபதி பரணி இந்த எ-நட்சேத்திரங்களில் நாயிறுவெள்ளியும் பூரணையுங்கூடில் உதையத்துக்குமேல், வடதிசையாத்திரைக்கு உத்தமம். அத்தம் மிருகசிரம் திருவோணம் அவிட்டம் அனுசம் சோதி அசுபதி இந்த நட்சேத்திரங்களில் துலாலக்கினத்தில் சமுத்திரயாத்திரைசெய்ய உத்தமம். புதன் வெள்ளியிலும் ஆடி புரட்டாசி மாசிமாதங்களிலும் பெண்கள் பயணஞ்செய்யலாகாது திதிவிஷமும் பூமிசுக்கிரன் யோகினிவேதையும் பயணத்துக்கு ஆகாது. எ-று. (௧)

யாத்திரைக்கு ஆகாததும் ஆகியதும்.

ஆகினமூன்றற்றீயாழகிமுறமோரடை
யளிசுடரவ்விருத்தைதிராசியெற்சேயருக
னேகுவதற்கிவையறவாரச்சூன்மற்றுளது
மிகழ்ந்திதையநிர்மலமாய்ரண்டணியாதாயம்
வாகனமித்தலமெதிரிக்கட்டமமாயிருப்ப
மங்களவாத்தியமுழங்கமாங்கிஷம்பான்மலர்த்தார்
தோகையாநீர்க்குடங்கனிகளெதிர்வரநீர்ப்பெய்து
சுணங்கனிருசெவியடிப்பத்தோன்றுவதுத்தமமே.

(இ-ள்.) பூரத்திரையம் பரணி கார்த்திகை திருவாதிரை ஆயிலியம் விசாகம் மகம் சித்திரை கேட்டை சோதி இவற்றில் இருத்தையுங்கூட திரராசியில் நாயிறு செவ்வாய்புதனில் யாத்திரை போகலாகாது வாரச்சூலமுதலியதோஷம் நீக்கி ௫-மிடஞ் சுத்தமாகத் தனது ஜென்மராசிக்கு உ-௬-௯-௧௧-ம் ராசி தனது சத்துருவுக்கு அட்டமராசியாக மங்களவாத்தியம்முழங்க மாங்கிஷம், பால், பூமாலை, சுமங்கிலி சுமந்துவரும் நிறைகும்பம், மனி, மது இவைமுதலானவை எதிர்வர நாய்நீர்விட்டு இருசெவியும் அடித்துக்கொள்ளக் காணில் உடனேயாத்திரைபண்ணுவது உத்தமம். எ-று. (௨)

நற்சகுனம்.

உத்தமம்யாத்திரைதனக்கோர்சூத்திரன்பார்ப்பானே
லுபயம்வெகுதாவெனிற்கண்டெதிற்வலமுற்றேக
தத்தலமானிடரெதிராய்மலம்விடலேகாலி
யழுக்கொலியல்கொண்டுவரல்சாரையெதிராதன்
மத்தகயநாவிகொடிமான்மஙரசெம்போத்து
மயிலிகலனுரைகிள்ளைசிவல்வலமார்ச்சசரலங்
கத்தபநாய்வானரம்புள்ளரசுகரிக்குருவி
காடையிடமாய்க்காணிற்காண்பதுங்கைப்பலமே.

(இ-ள்.) யாத்திரையாகுங்காலத்தில் ஒற்றைச்சூத்திரன் இரட்டைப்பிராமணர் பசுத்திரள்கள் எதிர்காணில் எதிர்கொண்டுபோய்பிரதட்சணமாகநடப்பது உத்தமம், எதிரிலிருந்து மனுஷர் மலங்களைதல் வண்ணான் அழுக்குப்புடவை சுமந்துவரல், சாரைப்பாம்பு எதிர்வரல், யானை நாவிப்பிள்ளை காகம் மான் மிழா செம்போத்துமயில் நரி நாரை கிளி கவுதாரி இவை வலமாகவும் பூனை கழுதை நாய் குரங்கு கருடன் கரிக்குருவி காடை இவை இடமாகவும் காணில் கைமேயிற்பலன். எ-று. (௩)

துற்சகுனம்.

கைமைகுசக்கலந்தயிர்நெய்யெண்ணையுடும்பாமை
கட்செவிசெக்கான்குருடனிந்தனங்காங்காடை
லெய்மைநிறத்தாயுதக்கைக்கட்டையன்வெண்குட்டன்
விரிதலையன்மொட்டையன்கூக்குரலினன்ருள்வீழ்வோன்
செம்மயிருற்றவன்மூடவனுவிதன்மூக்கிழந்த
தேகபங்கன்றவசிதிகாம்பரன்யதிதேசிகன்றீ
தும்மறுடர்ந்தழைத்தன்முட்டலிடறனரர்சிறுநீர்
சுணங்கன்மலம்விடல்காணிற்றுற்குறியாத்திரைக்கே.

(இ-ள்.) அமங்கலி நவபாண்டம் தயிர் நெய் எண்ணை உடும்பு ஆமை நல்லபாம்பு வாணியன் குருடன் விறகுக்கட்டு காங்குச்சீலை கருத்தரூபக்கட்டையனை ஆயுதக்கையன் வெண்குட்டன் விரிதலையன் மொட்டையன் கூக்குரலிட்டு எதிர்வருவோன் தாளில்வீழ்வோன்செம்மயிருடையோன் முடவன் நாவிதன் மூக்கிழந்தவன் அங்கயீனன் தவசி நிருவாணி சன்னியாசி குரு அக்கினி தும்மல் தொடர்ந்தழைத்தல் முட்டல் இடறல் நரர்சிறுநீர்விடல் நாய்மலங்களைதல் இவைகள்காணில் யாத்திரைக்கு ஆகாது. எ-று. (௪)

## யாத்திரைக்குப்பரிகாரம்.

இரவிமுதனேரடிப்பன்னொன்றுரைத்தேகுதலோ
ரேழுரையிற்படிதலொன்பானீர்சுழற்றலெட்டா
யுரைதருசந்தனிதன்மதிபோற்பூதிபாதி
யொடித்திடலச்சுள்ளியைந்திற்கரும்பூச்சூடுதலா
மருகன்முதலெள்ளளைநெற்பயறுநெய்பால்வெல்வ
மருந்திடனெய்யெட்பால்வெல்லந்திசைக்காமுதயம்
பருகுதல்பாறயிர்திலந்தேன்மற்றுளநாட்டிதிக்கும்
பதிப்பெயர்கண்டுணவுரைத்தல்பயணமதற்காமே.

(இ-ள்) நாயிறில் அடி கக-அளந்து வார்த்தை சொல்லிப்போவதும் திங்கட்கிழமை அடி எ-ல் படுத்துக்கிடந்துபோவதும், செவ்வாய்க்கிழமை அடி கூ-ல் நீர்சுழற்றிப்போவதும், புதன்கிழமை அடி அ-ல் சந்தனமணிந்துபோவதும், வியாழக்கிழமை அடி எ-ல் விபூதியணிந்துபோவதும் வெள்ளிக்கிழமை அடி ௩-ல் சுள்ளிமுறித்துப்போவதும் சனிக்கிழமை அடி ௫-ல் கரும்பூச்சூடிப்போவதும், பிரயாணத்துக்குஉத்தமம் புதனில் எள்ளுதின்றுபோவதும் வியாழனில் தயிர் சாப்பிட்டுபோவதும், வெள்ளியில் நெல்லைத்தின்று போவதும், சனியில் பயறுதின்றுபோவதும், நாயிறில் நெய்குடித்துப்போவதும், திங்களில் பால்குடித்துப்போவதும், செவ்வாயில் வெல்லந்தின்றுபோவதும் உத்தமம். கீழ்த்திசையாத்திரைக்கு நெய்யும் தென்றிசையாத்திரைக்கு எள்ளும், மேல்திசையாத்திரைக்குப் பாலும், வடதிசையாத்திரைக்கு வெல்லமும் சாப்பிட்டுப்போவது உத்தமம். உதயமுதல் யாத்திரைக்கு கிரமமாக பால் தயிர் எள்ளு தேன் இவற்றைச்சாப்பிட்டுப்போவது உத்தமம் மற்றுள்ள திதிநட்சேத்திர முதலானவைக்கும் அதிபதிப்பெயர் கண்டு உணவுசொல்லுக. (௫)

## யாத்திரைராசியின்குணம், அடனப்பிரமணம்.

பயணமொருதேண்மிதுனமிருத்தரிவைஞட்சை
யைஞ்சிலைசான்மகரமழைபிரகரம்பந்தனங்கோல்
செயமலவனரியேறிற்றனலாபம்புரிவைச்
செயித்தல்சிலைசேய்சனிகட்செவிமதியோகயந்தீ
தியல்பலதுபஞ்சகதோஷந்தபனமுதனுட்
கிறையளவுக்கேழ்க்கிதல்பிரமணம்பூணிரண
மயமுளமெய்நலதலதுமற்றுளதிப்பமு
மறிந்தடனஞ்செய்வததிசுபலமகத்தியனே.

(இ-ள்.) யாத்திரை போவதற்குமேடம் விருச்சிகம் மிதுனம்மிருத்துரன்ப. கன்னி * ரூட்சை, மீனம்மழை கும்பம் † பிரகாரம் மகரம் பந்தனம், துலாம்விஜயம், கடகம் சிங்கம் இடபம் தனலாபம், தனுசு சத்துருக்ஷயம், சேய்-சனி-ராகு-கேது-சந்திரன் இவர்களுடைய மானலக்கினம் தீது பஞ்சகதோஷம் ஆகாதென்ப, இதன்மேல் அடனப்பிரமணம் அறியும்படி ஆதித்தன்நின்ற நாள்முதல் சந்திரன் நின்ற நாள்வரைக்கும் எண்ணி, எ-க்குக் கொடுத்துநின்ற சேடம் அடனப்பிரமணம் அப்படிக்கழித்து நின்றசேடம், ௩-௬-௪-௫-௧; ஆகில் உத்தமம், மற்றுள்ளது மற்திமமென்ப. இப்பலமுங்கூட்டி யோசனைபண்ணி யாத்திரைசெய்யில் சுபபலம் மிகவும் உண்டு அகத்தியமாமுனியே. எ-று. (௬)

யாத்திரைப்படலம்
முற்றிற்று.
ஆகப்படலம் ௪௰-க்கு கவி ௩௬எ.

# கிரகவியற்படலம்.

கிரகத்துக்குநாட்செய்ய.

அகத்தியல்புகேண்முனியேரவித்தினந்தாணீட்டி
யதற்கெதிர்வீதிப்புருடன்கிடப்பனவனெழுநாட்
டகர்த்தையரியானுடுசொல்குளிரொடுகோறேளிற்
றசமினராறெழுமூன் ‡ ரூர்தரித்தவரெட்டதனேர்
வகுத்ததெய்தியனற்சிகைமண்டலந்தினமப்பாடா
வாரியறமுக்குளந்தேர்மதிவேயூழ்நாவாய்
சுகத்துளவத்திதிமுதன்மற்றுஞ்சுபமாய்க்கூடிற்
சொன்மனைநாட்செய்யவமிர்தத்துதையஞ்சுபமே.

(இ-ள்.) அகத்தியமாமுனியே கிரகவியல் கேட்பாயாகரவிநின்ற நாளில் கால்நீட்டி அதற்கு எதிர்நாளில் தலைவைத்து வாஸ்த்து புருஷன்கிடப்பன். இவன் சித்திரைமாசம் ௰-ம் தெய்தியிலும், தைமாசம் கஉ-ம் தெய்தியிலும், ஆவணிமாசம், ௬-ம் தெய்தியிலும், வைகாசிமாசி உக-ம் தெய்தியிலும், ஆடி ஐப்பசி கக-ம் தெய்தியிலும், கார்த்திகை அ-ம் தெய்தியிலும், எழுந்திருப்பன். இத்தினங்களில் அனற்சிகை அக்கினிமண்டலம் அக்கினிதினம் பாடாவாரி இவை முதலான

* ரூட்சைகாங்கை. † பிரகாரம் அடிபடல்.
‡ ஆர்தரித்தவர் உருத்திரர்.

வைநீக்கி உத்திரத்திரையம் ரோகணி, மிருகசிரம், புனர்பூசம், அந்த ம், ரேவதி, இவை சுபமாக திதிவார யோககரணங்களுஞ் சுபமாகில் அமிர்தஉதையத்தில் கிரகத்துநாட்செய்க. எ-று. (சு)

வீடுகட்டமுகூர்த்தம் மனையலங்காரம்.

உதையமிரண்டேழிதையமனையிவர்பாகவனு
முடுபதிபொன்வர்க்கமுறசேயினன்வர்க்கொழியப்
பதமனைநிர்மலமாகிற்பகற்றிரமுத்தமமைம்
பதின்மேலீரேழறைநாப்பண்ணுன்கும்பிரமம்
வதமொருநாற்கோண்டிசையெட்டவர்க்காமாறெட்டு
மனைக்காங்கீழ்த்திசைமுதலட்டின்மாட்டின்மலின
மிதமுளநற்றருமேதியிற்குதிருணிற்சாற்
கிடஞ்சயனந்தென்மேற்காயியம்புவதுமிபல்பே.

(இ-ள்.) லக்கினமும் உ-எ-௲-சு-ம் இவற்றிற் குடையவர்களும் சுக்கிரனும் சந்திரவர்க்கம் வியாழவர்க்கம்பெற செவ்வாய் சூரியன் வர்க்கத்திலில்லாதிருக்க, கஉ-மிடம் சு-மிடம் சுத்தமாகில் பகற்காலத்திராசியில் வீடெடுக்க முகூர்த்தஞ்செய்வது உத்தமம் மனையின் விஸ்த்தீரணத்தை கூசு-பங்குசெய்க. அவற்றுள் நடு சு-அறையும் பிரம்ம தானம் சு-மூலையும் பசாசுஸ்தானம் திக்கிலுள்ள அ-பங்கும் திக்குப்பாலகருடைய கூறுநின்ற சுஅ-பங்கும் கிரகஸ்தானம் இதில் கீழ்த்திசையில் சமையற்புரை, தென்கீழ்த்திசையில் பசுவர்க்கப்புரை தெற்கில்தொழு தென்மேற்கில் தருமுதலானவை வைக்குமிடம் மேற்கில் எருமைவர்க்கப்புரை, வடமேற்கில் நெற்குதிர், வடக்கில் போசனஸ்தானம் வடகிழக்கில் தண்ணீர்ச்சால் வைக்குமிடம் இருக்கவேண்டியது. இதில் தென்மேற்காகச் சயனத்துக்கியல்பு. எ-று. (உ)

இயல்புளவின்முழத்தொகையெட்டொன்பான்மூன்றுசை
யீரிரண்டொன்பதுதினமீதேற்றலினர்தசமெட்
டெருடுமூவைந்தேழொன்பதுநூறுக்குதவி
லுளதில்குறிநாட்டிதிவாராங்கிஷமாயுளுக்காங்
கயமுயல்புள்ளிறைபூனையரிநாய்பாம்பெலிலிங்
கம்விதுப்பானேராந்தற்கரமதிரட்சகநெல்
வயமிடர்நோய்நிதனநிதியங்கிஷமீதெட்டு
வர்க்கமுமுத்தமமாகின்மனைக்கியல்வர்த்தனையே.

(இ-ள்.) கிரகத்துக்கு அமைத்த இடத்தின் முழத்தை அ-ல் பெருக்கி கஉ-க்குக்கொடுத்து நின்றமிச்சத்தொகை ஆதாயம் கூ-ல்பெரு

க்கி ௰-க்குக்கொடுத்துநின்ற மிச்சத்தொகை செலவு ௩-ல் பெருக்கி அ க்குக் கொடுத்துநின்ற மிச்சம்யோனி அ-ல் பெருக்கி உள-க்குக் கொடுத்துநின்ற மிச்சத்தொகையின் எண்ணம் நட்சேத்திரம் ச-ல் பெருக்கி கரு-க்குக் கொடுத்துநின்ற மிச்சத்தொகையின் எண்ணம் திதி கூல் பெருக்கி எ-க்குக் கொடுத்துநின்ற மிச்சத் தொகையின் எண்ணம் வாரம் உள-ல் பெருக்கி கூ-க்குக்கொடுத்து நின்றமிச்சத்தொகையின் எண்ணம் அங்கிசம் உள-ல் பெருக்கி ள-க்குக்கொடுத்துநின்ற மிச்சத் தொகை ஆயுள்என்ப திசையோனி யறியும்படி வடக்கு யானை, வடகிழக்கு முயல் கிழக்கு கெருடன் தென்கிழக்கு பூனை, தெற்கு, சிங்கம், தென்மேற்கு நாய், மேற்கு பாம்பு, வடமேற்கு எலி, இவற்றைத் தெரிந்து அந்தந்தயோனிக்குள்ள பலனைச்சொல்லுக, அங்கிஷபலன் அறியும்படி க-வது அங்கிசகத்துக்குப் பலன் * தற்கரம், உ-வதற்கு புத்தி, ௩-தற்கு இரட்சகம், ச-வதற்கு தானியம், ரு-வதற்குவெற்றி கூ-வதற்குத்துன்பம், எ-வதற்குரோகம், அ-வதற்குத்தரித்திரம், கூ-வதற்குதனம், இந்த அங்கிஷமுதலான முற்கூறியவர்க்கம், அ-ம் உத்தமவர்க்கமாகில் அந்தமனைக்கு சுபவர்த்தனையுண்டு. எ-று. (௩)

கிரகவியற்படலம்

முற்றிற்று.

ஆகப்படலம் சக-க்கு கவி ௩௭௦.

---

# குளம்கூவற்படலம்.

குளங்கிணறு வெட்ட கரைசுமக்க.

வத்திரநான்கவன் றனையகுளங்கூவற்கியல்கேள்
வாரமுதற்றிதியோககரண தினமயமா
யுத்தமமாயமிர்தவுதையத்தறலோருதிக்க
வுறவிசைவேளுரன்மழையாறிதமேனர்க்குளதிற்
சுத்தமுமாய்ச்செலமதித்தல்கவிப்புகையாருடத்
துக்குயர்தல்கீழ்நடுவாஞ்சுடர்முதற்கானீக்கி
யத்தினமாதவனுறுநாளேரிவெட்டவிவன்மா
வாந்தமடுப்பரைக்குளகரட்கரைசுமத்தற்காமே.

(இ-ள்.) நான்முகனுக்குப் புத்திரனானவர் குளம் கிணறுவெட்டும் இயல்புகேட்பாயாக வாரம் திதி யோககரண நட்சேத்திரங்களு ம

* தற்கரம்-களவு.

ஜெலவர்க்கமாய் உத்தமமாகி அமிர்தகடிகை யுதையத்தில் ஜலக்கிரகங்களுதையமாக கிணற்றுக்கு ௬-மிடம் சுத்தமும் வானுமாரிக் குளத்துக்கு ௰-மிடம் சுத்தமும் ஆற்றுவரத்துக்குளத்திற்கு எ-மிடம் சுத்தமுமாக ஜலமதித்தற்கு நாட்செய்வது உத்தமம். அந்த வேளையில்கவிப்புராசி செலமாகில் மேலூற்று உதையராசி செலமாகில் கீழ்ஊற்று ஆரூடராசி செலமாகில் நடுஊற்று, சோதி முதற்கால் நீக்கி மற்ற ௩-காலிலும் ரவிநிற்குநாள் குளம்வெட்ட உத்தமம். அசுபதி நாலாங்காலிலு பரணிமுன்னரையிலும் ரவிநிற்கும்போது கரைசுமப்பது உத்தமம். எ-று. (க)

கிணறு வெட்டுவதின் குணம்.

ஆகுமனைக்கிந்திரனேர்கூவல்விபத்துதிப்போர்க்
  கந்தகனப்பேர்களத்துக்காந்தனக்கப்போரந்
தேகசுகங்கருவிபயஞ்செல்வநல்வாழ்வாமத்
  தினத்துளபஞ்சாங்கமுநாலேழுமொன்றுய்ச்சேய்நாட்
கீருவதச்சிரசோடென்புமியோடிந்தனம்பே
  யெரிந்தவெருகரிப்பிணநெற்பொன்கலரவிற்கோல்
பூகமிலையெனிணுய்செங்கல்லிவைசாணளவா
  யுரைப்பரித்தாழ்வளவிலப்பாலூற்றுளதுத்தமமே.

(இ-ள்.) கிரகத்துக்கு கீழ்திக்கில் கிணறுவெட்டில் விபத்து, தென்கிழக்கில் புத்தியநாசம், தெற்கில் களத்திரதோஷம், தென்மேற்கில் தனக்கு ஆபத்து, மேற்கு சரீரசுகம், வடமேற்கு கருவிபயம், வடக்கு செல்வம், வடகிழக்கு நல்வாழ்வாம், கிணறுவெட்டுவதற்கு அமைத்த முகூர்த்தத்தன்று உள்ள பஞ்சாங்கமும் அதனுடன் உ௮-ம் கூட்டி ௧௯-க்குக்கொடுத்து நின்ற மிச்சத்தொகையாகிய சாண் கல்தலையோடு சாண் உ-ல் எலும்பு, சாண் ௩-ல் உமி, சாண் ௪-ல் ஓடு, சாண் ௫-ல் விறகு, சாண் ௬-ல் பசாசு, சாண் எ-ல் சாம்பல், சாண் ௮-ல் கரி, சாண் ௯-ல் பிணம், சாண் ௰-ல் நெல், சாண் ௧௧-ல் பொன், சாண் ௧உ-ல் கல்லு, சாண் ௧௩-ல் பாம்பின்வளை, சாண் ௧௪-ல் கம்பு, சாண் ௧௫-ல்குறங்கு அல்லது நாய், சாண் ௧௬-ல் செங்கல் இந்த ௧௬-சாணுக்குக்கீழ் ஊற்றுள்ளதாகில் உத்தமம். எ-று. (உ)

ஊற்றறிய.

ஊற்றறிதற்குதையமுகமேற்காயுற்றெதிரெட்
  டும்மிடையிலெக்துவரையும்மாகக்கீறிக்
காதறனற்கோணிறுத்திவலமாய்முற்மீருகக்
  கணித்ததின்மேற்கறைநான்காயதன்மேற்றெற்காயைந்

தேற்றிமற்றதிதன்கீழாயிருத்துமவசுத்தோ
டெழுநான்கிலரவுசிதனிந்திவரீருய்ப்பார்
தோற்றுதைய தினமுதல நூதனநன்குவர்நீர்
தோன்றணிசிக்கவைமாருச்சொலல்கூவற்கிடமே.

(இ-ள்.) கிணற்றுக்கு ஊற்றரியவேண்டில் உதையகாலத்தில் மேற்குமுகமாக இருந்துகொண்டு ஒத்தநிலத்தில் கீழ்மேலாக அ-வரை தென்வடல் ரு-வரையும்கீறிகண்ட உஅ அறையில் அக்கினிமூலையில் அனுசம்வைத்து அவசித்துக்கூட்டி வலமாக விசாகம்வரைக்கும் நிறுத்தி அதின்மேலறைதொட்டு வடக்குமுகமாக நேர் ஆயிலியம்வரைக்கும் நிறுத்தி அதின்மேலறைதொட்டுத் தெற்குமுகமாக நேர்சித்திரைவரைக்கும் நிறுத்தி அதின் கீழறையிற் சோதியை நிறுத்துக. இத்தினங்களில் சென்மநட்சத்திரந்தொட்டு ராகுவரையும் நடத்தில் புராதனக்கிணறு, இந்தப்படி சுக்கிரன்வரையும் நடத்தில் சுத்தசலம், மதிவரையும் நடத்தில் உவர்ச்செலம், இதற்கு நிசியாகில் வாயுமூலையில் கார்த்திகைவைத்து முன்போலும் நடத்துக. எ-று. (ரு)

---

## கூவற்சக்கரம்.

இரவு-மேற்கு

| | | | |
|---|---|---|---|
| கார்த்திகை | ரோகணி | மிருகசிரம் | திருவாதிரை |
| பரணி | அசுபதி | ரேவதி | புனர்பூசம் |
| மூலம் | பூராடம் | உத்திரட்டாதி | பூசம் |
| கேட்டை | உத்திராடம் | பூரட்டாதி | ஆயிலியம் |
| அனுஷம் | அவசித்து | சதையம் | மகம் |
| விசாகம் | திருவோணம் | அவிட்டம் | பூரம் |
| சோதி | சித்திரை | அத்தம் | உத்திரம் |

வடக்கு — தெற்கு — கிழக்கு

பகல்-மேற்கு

| | | | |
|---|---|---|---|
| அனுஷம் | கேட்டை | மூலம் | பூராடம் |
| விசாகம் | சோதி | சித்திரை | உத்திராடம் |
| மிருகசிரம் | திருவாதிரை | அத்தம் | அவசித்து |
| ரோகணி | புனர்பூசம் | உத்திரம் | திருவோணம் |
| கார்த்திகை | பூசம் | பூரம் | அவிட்டம் |
| பரணி | ஆயிலியம் | மகம் | சதையம் |
| அசுபதி | ரேவதி | உத்திரட்டாதி | பூரட்டாதி |

தெற்கு — வடக்கு — கிழக்கு

குளங்கூவற்படலம்

முற்றிற்று.

ஆகப்படலம், சஉ-க்கு கவி ௲எ௲.

---

## சதாமுகுர்த்தப் படலம்.

அம்மதின்கோண்டயகியாழாடைமுதன்மூன்றே
ரவிராழியிலவையிரணநோய்கடையாகாதப்

பம்முதையமிக்கோண்போக்கணை தல்பிணிமருந்தப்
பாகமெண்ணைசவுளமறப்படமுதற்பூணணிதல்
சம்முதலவியற்றவுணவிற்புகநெல்விதைக்க
தான்யமிடவுழவியன்றதர்மமுஞ்செய்திடற்காந்
செம்மகவவ்வொக்கலுறல்கெமனமருந்துண்ணல்
செனனமுதற்கோணேருத்தமமெனச்செப்புதலே.

(இ-ள்.) பூராடக்கோண் கார்த்திகை ஆயிலியம்திருவாதிரைசோதி சித்திரை விசாகம் மகம் கேட்டை பூரட்டாதி இவற்றிற்கடன்கொடுக்கல் வாங்கல், நோயில்விழல், யாத்திரைபோதல் ஆகாதென்ப சென்மநட்சேத்திரமும் அதன்கோணும் யாத்திரை, சையோகம், பிணி, மருந்து, பாகம், எண்ணை, சவுளம் இவைநீங்கலாக, வஸ்திராபரணம் பூண, சந்தோஷமுதலான காரியஞ்செய்ய, புதியதுண்ண, குடிபுகுத, நெல்விதைக்க, தானியமிட, உழவுசெய்ய, இயன்றமாத்திரந் தருமஞ் செய்ய உத்தமம். சென்மநட்சேத்திரம் தாரசுதபந்துசனம் சேர்ப்பதற்கு உத்தமம் சென்மநட்சேத்திரத்துக்கு ய-நாள் யாத்திரைக்கும் கசூம்-நாள்மருந்துண்பதற்கும் உத்தமம். (க)

## கெண்டாந்தநாழிகை.

செப்பியகெண்டாந்தமைமூன்றைந்தொருநாழிகைநேர்
தினந்திதிராசியிலுள்ளதீதுளதின்மிகத்தீ
தெப்படியோவெனின்முதற்போனேரொருநான்குடைய
மிருகாலாங்குளிகனுதையத்தூரேற்றிடுதல்
வைப்புமுதற்றனயமற்றுஞ்சேகரமாய்ச்சேர்த்தன்
மனையெடுத்தல்குடிபுகுதன்மணக்காலுநட்டுதற்காந்
துப்பரவாகாயமெனில்வாரசுபம்விடமில்
சுதினம்விழிப்புளதிதியுள்ளதற்குளதுத்தமமே.

(இ-ள்.) கெண்டாந்ததோஷமறியும்படி நட்சேத்திரகெண்டாந்தத்துக்குநாழிகை கரு-திதிகெண்டாந்தத்துக்கு நாழிகை ரு-ராசிகெண்டாந்தத்துக்கு நாழிகை க-இவற்றுள் நட்சேத்திரத்துக்கு நாழிகை சு-ம் திதிக்கு உ-ம் ராசிக்கு இ-ம் அதிகெண்டாந்தமென்ப குளிகனுதையத்தில் ஊரேற்றல் வைப்புமுதலாகிய தானியம் மற்றுள்ளனவுஞ் சேகரித்து சங்கிரகம்பண்ண மனையெடுக்க குடிபுகுத மணக்கால்நாட்ட உத்தமம். ஆகாசம் நிர்மலமாகில் அற்றைவாரம் சுபமென்ப. விடநாழிகை பூச்சியமாகில் அத்தினம் சுபதினமென்ப. விழிப்புள்ள திதியும் சுபமென்ப இவை உள்ளதுக்குள்ளே உத்தமம். எ-று. (உ)

சுபசேகரங்களும் நிர்ப்பலமாமெனல்.

உத்தமம்பஞ்சாங்கமுதயத்தியல்புவேளை
யோரைசரம்பட்சிவருக்கம்மவத்தையோக
மித்திரமண்டலமாதம்பட்சமயனம்பால்
விண்ணமலங்கமலம்விலோசனமுயிர்மேடாதி
சுத்தமமிர்தங்காலங்கெணமுருவமதிபஞ்
சுபர்விழிப்புற்றென்றுகவிவைசுபமுற்றிடினு
மத்தினந்தன்னியநாட்கீதபலம்விடகடிகை
யவமிருத்தங்நாட்பறவைபடிலவர்க்கப்படியே.

(இ-ள்.) திதிவாரநட்சேத்திரயோககரணம் உத்தமமாக இருக்க இதன்மேலும் உதையலக்கினம் வேளை, ஓரை, சரம், பட்சி, வர்க்கம், அவத்தை, யோகம், மித்திரமண்டலதினம், மாதம், பட்சம், அயனம் பாற்றினம் ஆகாசநிர்மலம் செலவர்க்கம் கண்ணுள்ளது சீவன் மேடாதிசுத்தம் அமிர்தவர்க்கம் காலம் கெணம் உருவம் ஆதிபம் சுபர்விழிப்பு இவைமுதலானவையெல்லாம் சுபசேகரமாகச் சேகரித்த தினமானுலும் அந்தந்தத்தினத்தில் தன்னியநாள்வரில் மேற்கூறிய சுபசேகரவர்க்கமெல்லாம் நிர்ப்பலமென்ப விடகடிகையாகில் அவமிருத்து எல் படுபட்சியாகில் மாரணமென்ப. எ-று. (கூ)

தோஷமுநிர்தோஷமாமெனல்.

படித்தலத்தெப்பொழுதினுஞ்செய்சஞ்சாரமுகூர்த்தம்
பஞ்சாங்கமோரைசரம்வேளையியல்பாகத்
தொடித்தினந்தன்னியநாணஞ்சலதமிர்தகடிகை
தோன்றுதல்புட்கரசெனினிர்த்தோஷமெத்தோஷமுமாம்
வடித்தசெழுந்தமிழ்ப்புலவமுகூர்த்தவிலாசத்தோர்
மார்க்கமிதாமென்றனன்ரேமற்சபலேவாய்ப்பத்
தடித்திடங்கொண்டிறுமாந்தண்ணுந்துசெம்மாந்தெழுந்த
தரமெனும்பொற்றனக்குறமான்றழுவுபுயாசலனே.

(இ-ள்.) பூமியினிடத்திற் சதாமுகூர்த்தம் அறியவேண்டில் பஞ்சாங்கம், ஓரை, சரம், வேளை, இவை யியல்பாகும் தினத்தில் தன்னியநாளும் விடகடிகையும் பூச்சியமாக அமிர்தகடிகை உதையகாலம் பக்ஷிக்கு அரசென்னில் அத்தினமுகூர்த்தத்திலுள்ள தோஷமெல்லாம் நிர்த்தோஷமென்ப வடித்த செந்தமிழ்ப்புலவ முகூர்த்த விலாசத்துளெல்லாம் இதுவுமொரு மார்க்கமென்று திருவாய்மலர்ந்தருளினவன் தேமலும் பசலேயும் பூத்துத்தடித்து இடங்கொண்டெழுந்துஇறுமா

ந்து அண்ணாந்து செம்மாந்து பூரித்தெழுந்து தனக்குத் தானே ஒப்பாகி சகலாபரணங்களும் அணிந்த குஜதடங்கலேயுடைய ஓர்குறமான் றழுவிய புயாசலத்தையுடைய சுப்பிரமணியக்கடவுள். எ-று. (ச)

சதாமுகுர்த்தப்படலம்

முற்றிற்று.

ஆகப்படலம் சக-க்கு கவி கூஎஎ.

## மூன்றாவது முகுர்த்தகாண்டம்

முற்றிற்று.

---

# சிந்தனைகாண்டம்.

---

## பலஞாபகப்படலம்.

சலத்தினிலக்கினியுருவாயுதித்தவசெந்தூர
சடாக்கரசடானனசந்தாசலவிசாக
மலேத்தலேவர்க்குபதேசவானவர்சகாய
மயூரவொருவாகனசெம்மான்மகண்மணாள
நலத்ததிபமுகுர்த்தவிலாசத்துளதன்பாக
நவின்றதுபோலதிதசிந்தனைகாண்டத்துடைய
பலத்தியல்சொல்லெனப்பணியுமுனிக்கவனைமலக
பலத்தினிற்காண்பதுபோலப்பலமுமுரைத்தனனே.

(இ-ள்.) செலத்தினிடத்தில் அக்கினியுருவாகிவந்ததுபோலஉதையமாகியவா, திருச்செந்தூரையுடையவா, சடாக்ஷர, சண்முக, சந்தனசல, விசாகா, கைலாசவாசனுக்குத்தேசிக, தேவசகாய, மயில்வாகன, கிடாய்வாகன, வள்ளிமணாள, சுகாதிப, முகுர்த்த விலாசத்துள்ள சகலபலமும் அடியேனுக்குத் தெரியும்வண்ணம் திருவுளம்பற்றி யருளினதுபோல அதீதமாகிய சிந்தனைகாண்டத்திலுள்ள பலமுந் திருவுளம்பற்றி யருளவேண்டுமென்று தெண்டம்பண்ணிய அகத்தியமாமுனிக்கு சுவாமி திருவுளமிரங்கி நெல்லியங்கனிறைக் கையில்வைத்துக் காண்பதுபோலுஞ் சிந்தனைபல முழுவதுந் திருவாய் மலர்ந்தருளினன். எ-று. (க)

உரைத்திடுசிந்தனைக்குடையர்விழிப்பதற்கேழாமா
ரூடமுதையாதியுள துறையமுமற்றுள தூம்

விரித்துரைக்கிலுதையநட்டம்பிடிப்பதற்குக்கவிப்பு
மிக்குளதற்காரூடம்விளம்புவரிப்பெயர்க்குஞ்
சரத்திரமற்றது தனதிலுறவுயர்தலிவைநேர்
சாற்றலுமாஞ்சிந்தனையிற்றுதுமுதலறிதற்
கொருத்தபனன்முதலாய்முன்னுரைத்ததல்லாதுதையா
ரூடசத்ரநேருளதிதன்றியுஞ்சற்றுளதே.

(இ-ள்.) சிந்தனைக்குடையவனாக வந்திருந்தவனுடைய முகப்பார்வைக்கு, எ-மிடம் ஆரூடமாகவும் உதையாதிதொட்டு தாற்காலியராசியே உதையமாகவும் வைத்து முன்சொல்லியிருக்கிற கவிப்புங்கூட்டி விதரித்துச்சொல்லுங்கால் உதையம் நட்டசிந்தனைக்கும் கவிப்புமுட்டிக்கும் ஆரூடம் சிந்தனைக்கும் ஆமென்ப இது அல்லாமலும் முன்சொன்ன நட்டமுட்டி சிந்தனை நேர்வைத்து சாதிர உபையங்கொண்டும் ஆட்சிநட்பு உச்சம்கொண்டுஞ் சொல்லுக. இதன்மேலும் தாது மூல சீவசிந்தனை யறியவேண்டில் முன்மேடமுதல் நோாகவும் ரவிமுதலாகவுஞ் சொன்னதல்லாமலும் உதையம் தாதுவுக்கும் ஆரூடம் மூலத்துக்கும் சத்திரம் சீவனுக்கும் வைத்துச்சொல்லுக. இதன்மேலுஞ் சொல்லவேண்டுவது சிறிதுண்டு. எ-று. (உ)

தாதுமூல ஜீவசிந்தனை.

சற்றிடைமாலிரவிமதிதத்தமின்பான்றவிரச்
சணிகனலுக்கெவ்விடத்துமாமியிர்ப்பேர்தருவி
லுற்றிடலம்மனைகவிக்கிலுந்தாதுபபெயரா
முரைத்ததல்லாததும்புகரெவ்விடத்துறினுமுயிர்தா
திற்றனைமூடினுமூலமெத்தலம்பொன்தரிற்று
தினமூலத்தேறுகினுஞ்சீவனிவைக்கினம்பேர்
மற்றதுமுன்னுரைத்திடலாவியாவையுங்கண்டறிவர்
மாதவகேவிதன்மேற்சோரத்தியல்பாமதற்கே.

(இ-ள்.) புதன்மதிரவி சொட்சேத்திரமிருக்கிலும் சனிமகரமல்லாதிருக்கிலும் சேய் யாதொருவீட்டிலிருக்கிலும் சீவக்கிரகங்கள்மூலராசியிலிருக்கிலும் அல்லது சீவராசி மூலராசியைக்கவிக்கிலும் தாது சிந்தனையென்ப. புதன் ரவிமதி கன்னிசிங்கம் கடகம் இதற்றில்நோல்லாமலிவர்கள் மற்றஇடங்களிலிருக்கிலும் சுக்கிரன் யாதொரு கிரகத்திலிருக்கிலும் சீவராசி தாதுராசியைக் கவிக்கிலும் மூலசிந்தனை யென்க. குருயாதொரு பாவகத்திலிருக்கிலும் மூலராசியில் தாதுராசிவர்க்கமேறிலும் ஜீவசிந்தனையென்க. இவ்வகைக்கெல்லாம் இன்ம்பேர் நடவடி முதலானவையும் முன்சொல்லியிருப்பதால் யாவையுங் கண்

டறிவா. மகத்தாகிய தவசினையுடைய அகத்தியமாமுனியே இதன் மேற் சோரவியல்பு சொல்லுவோம். எ-று. (உ)

பலஞாபகப்படலம்

முற்றிற்று.

ஆகப்படலம் ௬௬-க்கு கவி ௩அ௦.

# சோரபலப்படலம்.

சோரசிந்தனை.

சோரபலஞ்சனியனல்பாம்பறிவன்பார்த்திடுத
 ரோன்றலுதையத்துமிறைதோய்வினுஞ்சொல்லுவரா
லோரிருநானகாறுவியம்வீழ்தல்கரவசதி
 யொன்றிறைகேந்திரமேபெறப்போனதில்லையொருநேர்
சேருவதும்வெளியுளிடைதேளலவன்மனையா
 தினகரனேர்க்குளதலமான்சேலிறப்பிலசிதன்
சாருதல்பார்த்திடலெனிலந்தரமிவையல்லாதத்
 தகர்முதனேர்க்குளராசிச்சார்புநிகழ்த்துவதே.

(இ-ள்.) சோரபலன் அறியவேண்டில் சனி, சேய், ராகுவும் ௬-ம் ௬-க்குடையவனும் லக்கினத்தையும் லக்கினாதிபதியையும் பார்த்தல் அல்லது சேர்தலாகில் சோரசிந்தனையென்க, உதையலக்கினாதிபதி அ-ல் இருக்கில் கைவிட்டு விழுந்துபோனதென்க, ௬-ல் இருக்கில் சோரமிடமென்க. கஉ-ல் இருக்கில் வைத்து மறதியென்க கேந்திரத்தில் இருக்கில் போனதல்லவென்க இதற்குஇடம் அறியவேண்டில் மேடாதி நேர்வெளி உள் இடையென்றும் விருச்சிகம் கடகமாகில் கிரகத்தில் என்றும் அசுபதிமுதல் நேர்க்குள்ளவர்கள் தானத்தில் என்றும் மகரமீனமாகில் இறப்பில்என்றும் சனிபார்த்தல் அல்லது சேர்தலாகில் அந்தரத்திலென்றும் மேடாதிராசிக்குள்ள இடத்திலென்றுங் கண்டு யோசனைபண்ணிச்சொல்லுக. எ-று. (க)

போனதுவராதெனல்.

திகழ்த்தலிதற்குருவினம்பேர்நிறந்தொகைமற்றதுமுன்
 னிசைத்ததுங்கண்டுரைக்கிலிவைநிசமாமாதலினுன்

முகத்ததிகத்திறைவரோன்றேழினர்பெலக்காதாகின்
முற்றலம்பரிட்டோதையமொன்றுகமுயலகனு
மகத்தினனூடமதற்காதலிதற்கேழா
யயமுதன்முன்பின்மூன்றைந்துதையமெனிலலவன்
சுகத்துரைமாறொருவுதையமவமாகத்தோன்ற
றுயம்விழலாரூடம்வரல்போதல்வராததுக்கே.

(இ-ள்.) முன்சொன்னவகைக்கெல்லாம் உரு இனம் போ நிறம் தொகைமற்றவையும் முன்சொல்லியிருப்பதினால் அவற்றைக் கண்டறிந்து சொல்லுவாராகில் சகலபலமும் நிசமாமென்க. உ-கக-க-எ-க்குடையவர்கள் பெலகீனமாகி மறையிலும் பிரிட்டோதையமே உதையமாகி மதியிருக்கிலும் ஆரூடத்துக்கு ரு-மிடத்தில் ரவியிருக்கிலும் ஆரூடத்துக்கு எ-மிடம் உதையமாகி மேடம் இடபம் மிதுனம் தனுசு மகரம் கும்பம் மீனமாகவரிலும் அல்லது கற்கடகம் கன்னி மகரம்மேடம் இவை உதையலக்கினமாகிப் பாவருதையமாகிலும் உதையத்துக்கு உ-ரு-அ-கஉ-ஆரூடமாகவரினும் போனதுவராதென்க. எ-று. (உ)

போனதுவருமெனல்.

வரலுதையாரூடமிவைக்கணிப்பவர்மற்றவருண்
மருவிலினன்மதிபடுமெப்பதியிலுறின்மகனேன்
புருவிலிகல்லவர்களுறவுதையசிரோதயமா
யுற்றிடில்வில்லுதையமறையோன்பார்க்கிலொருமூன்
றருகுறத்தீமுதலாய்நந்நான்குளவந்நாளி
லமிர்தமுறவிடமொழிக்கிலசுபருபசெயமாய்த்
தருமர்சுபர்கேந்திரகோண்டமுவிலுதையஞ்சா
றனுவிடையாயுற்றிடிற்றப்பாதெனச்சாற்றுதலே.

(இ-ள்.) உதையாரூடத்துக்கு ரு-ல் பாவரும் ரு-ல் சுபரும் இருக்கிலும் ரவிமதிபடுகிற ராசியிலிருக்கிலும் ரு-கூ-எ-ல் சுபரிருக்கச் சிரோதயமே உதையமாகிலும் உதையம் தனுவாகிக் குருபார்க்கிலும்கார்த்திகைமுதல் ௬-ம்-௩-மாக நேர்நடத்தில் ௬-ஆகவரும் நாளில் அமிர்தகடிகை இருக்க விடகடிகை பூச்சியமாகிலும் பாவர் உபசெயமும் சுபர் கோணகேந்திரமிருக்கிலும் கும்பம் தனுசு இடபம் உதையமாகவரிலும் போனது தப்பாமல்வரும். எ.று. (௩)

நாற்காலிபோனதெனல் வலியவரு
மெனல் கட்டுண்டதெனல் காணுதெனல்.

உதையசத்ரமாரூடங்கவிப்பிவைமானிடர்மா
னூர்வனபுள்வற்கமுங்கண்டிழப்பொளிப்போதுதற்காம

விதைமுதலத்தான்யவற்கங்கலைமுதற்பட்டினமும்
விபூஷணபாத்திரபாண்டம்விருக்ஷம்வகைமுதலாய்
நிதியமுதன்மற்றவைக்குமுதலுரைத்ததறிந்து
நிகழ்த்திடுவருதைதயமுதற்பத்தினிற்சேய்நிசிதன்
கதிருறினுற்காலிகெடல்வலியவரும்படனூற்
காலகிக்குமொன்றிருகால்கட்டுணல்காணுதே.

(இ-ள்.) உதையசந்திர ஆரூடகவிப்பு இவைகொண்டு மானிடர் மிருகம் ஊர்வன பறப்பனவாகிய வற்கங்கண்டு நட்டசிந்தனைசொல்லு க. இதன்மேலும் விதைமுதலாகிய தானியவற்கம் புடவைமுதலாகிய பட்டுவற்கம் பூஷணபாத்திரபாண்டம் முதலான சொர்ணம் ரத்னம் முதலானவைஆகிய இவற்றிற்கெல்லாம் முன்சொல்லியிருப்பதால் அ வற்றையறிந்து உருவின முதலானவை சொல்லுவர். உதையத்துக்கு டு-ல் சேய்சனிரவியிருக்கில் நாற்காலிபோனதென்றும் வலிவருமெ ன்றுஞ் சொல்லுக. படுகிறராசி நாற்கால்ராசியாகி ராகுஇருக்கிலும்மு ன்சொன்ன பலமென்ப. உதையம் நாற்காலிராசியாகி ராகுஇருக்கில் நாற்காலிகட்டுண்டு நிற்கிறதென்க. இந்தப்படி இருகால்ராசியாகில்நா ற்காலிகாணுதென்க. எ-று. (ச)

இன்னதிசையிற் காணுமெனல்.

காணல்கிரகமிருந்தவிடங்கவிக்கிலிதன்பேர்க்
கானதிசையுதையமுதன்மூவர்களுக்கிடமாய்ப்
பூணுமவ்விற்றிசையிலுமுற்றிடல்புகல்வர்சோமன்
பொருந்துடுத்தொட்டுதையமுறுநாளளவிற்போத
ரேணுமெனலிவைகரவேற்சோரனடவடியுஞ்
சொரூபமுமற்றுளதுமுதல்யாவையுஞ்சொல்லுதலால்
வேணதுஞ்சொற்றிடுவரிதன்மேற்பிடிப்பேதென்ன
விளம்பும்வகைக்குடையபலத்தியல்பும்விளம்புவதே.

(இ-ள்.) கிரகமிருந்தராசியைக்கவிப்பது எந்தராசியென்றறிந்து அந்தராசித்திசையில்காணும்என்க, இது அல்லாமலும் உதையாரூட சத்திராதிபர் இருந்த ராசித்திசையிலுஞ்சொல்லுக. இதற்கு சந்திர னிருந்த நட்சேத்திரந்தொட்டு உதையராசி நட்சேத்திரம்வரைக்கும் ண்டநாளளவில் வருமென்க. இவ்வகை சோரசிந்தனையாகில் சோர

னுக்கு கடவடிமுதலாகிய உருவினஞ்சொல்லவேண்டில் முன்சொல்லி யிருப்பதுகொண்டு சகலமுஞ்சொல்லுக இதன்மேல்கையிலொன்றை வைத்துக்கொண்டு இது என்னவென்று கேட்கும் முட்டி சிந்தனையு ஞ்சொல்லுவோம். எ-று. (௫)

சோரபலப் படலம்

முற்றிற்று.

ஆகப்படலம் சரு-க்கு கவி ௩அ௫.

---

## முஷ்டிபலப்படலம்.

இன்னபொருளெனல்.

பிடிப்பதற்கொன்றுளவினனேர்வித்தினம்வேர்நார்வெற்
 பினமுரிவையுலர்ந்ததுகம்பென்புகிர்கொம்பினமு
முடுப்பனபைங்கூழடலைநூலரிசியிலைத்தண்
 டுளத்தையுமரிசனந்தீயுற்றதுமுள்ளுளதவ
வடுப்படல்செங்கல்லோடுதட்டைபடைதவிடு
 மண்ணுளமற்றுளதான்யவற்கம்வனத்துளதும்
படிப்பினம்புல்லிற்கோலைபச்சிலைபாக்கும்மேன்
 பாடுளதுநெல்லிவைபார்ப்பாளனவென்பதற்கே.

(இ-ள்.) முட்டிசிந்தனையறியும்படி ரவியோதயமாகில் வித்தின முதலானவை வேர் நார் கல்லுமுதலானவை, கோல், வைக்கோல், உலர்ந்தது கம்பு எலும்பு நகம் கொம்பினமுதலானவை யென்கமதியாகில் சீலைமுதலானவை, பயிர் சாம்பர் நூல் அரிசி இலைத்தண்டுள்ளது இறைச்சிமுதலானவையென்க. சேயாகில் மஞ்சள் தீப்பட்டது முள்ளுள்ளது வடுப்பட்டது செங்கல் ஓடு தட்டை கருவிமுதலானவை,தவிடு மண்ணுள்ளவை மற்றுள்ள தானியமுதலானவை வனவற்கமுதலானவையென்க புதனாகில் எடுத்துள்ள ஏடுமுதலானவை பசும்புல்லு இறகு ஓலை பச்சிலை பாக்கு என்க குருவாகில் மேன்பாடுள்ளவை நெல். எ-று. (க)

இதுவுமது.

பதவுனற்கினற்குரைத்ததினினிசித்தமுளதப்
 பாற்பருத்தியுமிநரம்புபட்டமரம்ரோம
மதமாந்துற்கெந்தமுளதுங்கரியுமாகு
 மதிமணவற்கம்படிகஞ்சுண்ணும்பப்படிமண்

* சிதநாகங்கொடிகயிறுபுகயிலைநீர்காணஞ்
செங்காணகஞ்சுள துசிகிக்காங்கட்செவிசேர்
புதனுகில்வெற்றிலைசேய்பொன்மதியேற்பணமம்
புவியழல்காசிவைகுருப்பொன்னிரசதமப்புகர்க்கே.

(இ-ள்.) சனியாகில் களைந்ததோல், நகம், எலும்பு, கொம்பு, பருத்தி, உமி, நரம்பு, பட்மைரம் களைந்தமயிர் துற்கந்தமுதலானவை, வரியென்க வெள்ளியாகில் அதிகவாசமுள்ளது படிகம் சுண்ணாம்புவெள்ளைமண் என்க ராகுவாகில் கொடி கயிறு புகையிலை கருங்காணமென்க. கேதுவாகில் செங்காணம் விஷவற்கமென்க புதன்ராகு கூடில் வெற்றிலையென்க. சேய்குருமதிகூடில் பணமென்க சேய்மதிகூடில்காசென்க இவை குருவற்கமாகில் பொற்காசென்கசுக்கிரவற்கமாகில்வெள்ளிக்காசென்க எ-று. (உ)

இதுவுமது.

புகர்க்குயிரேலெட்டாறப்புதற்கொருநான்கனலம்
புயற்குளகாற்செந்துவுமாம்நெடுங்காலம்புலிக்காஞ்
சுகர்குயிரற்றது தவழ்தலகிக்கவறகவ்விஷமுஞ்
சொல்வர்நிறமினம்ருசிபேர்தொகைவகைதாதி
யிகத்திடையந்தரத்துள துமிலைமுதன்மற்றதுமுன்
னிசைத்ததுங்கண்டுரைத்திடுவரிதற்குதையத்திறைவன்
மகத்துவங்கண்டதற்குள தாய்மறையிலிதுவிலதாய்
வகுப்பரிதன்மேற்சொலல்சிந்தனைப்பலமாமுனியே.

(இ-ள்.) சுக்கிரன்ஜீவவற்கமாகவரில் எண்காற்செந்துஎன்க. புதனுகில் அறுகாற்செந்து சேய்ரவியாகில் நாலுகாலுடையது மதியாகில் நெடுங்காலுடையது சனியாகில் சீவனில்லாதது ராகுவாகில் தவழ்வது இதில் விஷமுடையதுகேதுவுக்காம் இதன்மேலும் நிறம் இனம் ருசி பேர் தொகை வகைமுதலானவையும், தாதுமூல ஜீவவற்கமும், பூமியந்தரம் ஆகாயம் இவற்றிற் சஞ்சாரவற்கமும் இலை பூகாய் கனி வேர் கிழங்கு முதலானவையும ஆகிய இவ்வற்கங்களுக்கெல்லாம் முன்சொல்லியிருப்பதால் சகலமும் அறிந்துசொல்லுக இதற்கு உதையமான லக்கினதிபதியினுடைய நடவடி அறிந்து சகலமுஞ்சொல்லுக. இவன்மறைதலாகிற் பிடித்ததை சூன்யம்என்க. இதன்மேல் சிந்தனைபலஞ்சொல்லுவோம். எ-று. (ந)

முஷ்டிபலப்படலம்
முற்றிற்று.

ஆகப்படலம் சசு-க்கு கவி நஅஅ.

---

* சிதநாகம் ஞானராகு

# சிந்தனுபலப் படலம்.

## மரணமில்லையெனல் உண்டெனல்.

சிந்தனையுற்றவனுதையஞ்செடத்துதையமாயத்
தினக்கிரகர்முற்கிரகத்திரத்தினில்வைத்திதனு
லெந்தவினமெந்தவகையெப்பலமுஞ்சொல்லா
விதையமுளததற்குதையமேடாதியெதுவோ
வந்தவிடத்தும்மிறைமேவவ்விடத்துமுளகா
ரகப்பெயரிலதிபெலப்பேரறைகுவராலசியம்
வந்தவனுக்குதையமசுபத்தலமாய்விழித்தன்
மற்றவராயிறைபெலக்கின்மரணமின்மற்றதற்கே.

(இ-ள்.) சிந்தனையாக வந்தவனுக்குக்கண்ட உதையராசி லக்கின மாகவும் அன்றைத்தினத்து தாற்காலக்கிரகமே செனனகாலக்கிரகமாகவும்வைத்து அவன்முதலாகிய குடும்பத்துக்கெல்லாம் பலன்சொல்லப்படுவனவாதலால் அவன் நினைத்துவந்த சிந்தனைசொல்லவேண்டில் உதையலக்கினம் மேடாதிக் கெவ்விடமென்றறிந்தும்உதையலக்கி[illegible] சனிருந்தவிட மெவ்விடமென் றறிந்தும் இந்தஇடத்துக்குள்ள காரகங்களைவைத்து பெலமான இடத்துக்குள்ள காரகப்பெயர்கொண்டு சிந்தனைசொல்லுக பிணியாளனுக்குக் கேட்பவனுகில் உதையம்பாவராசியாகவும் இந்த உதையத்தைச் சுபர்பார்க்கவும் உதையாதிபதி கோணகேந்திரம் இருப்பனுகில் மரணமில்லையென்க. இதுவல்லாமல் சுபராசி சுபக்கிரகம் உதையமாகில் மரணமுண்டென்க. (க)

## வெற்றிதோர்வைசொலல்.

தற்கமொருவற்கொருவருற்றிடில்வெல்பவரார்
சாற்றெனுமுன்மனையோனிதங்களிற்சத்துருவாய்
நிற்குமிதற்கடனுளநாளொருபாதமுதனேர்
நெருப்பளவாயெலிமுயரேலாவிவைநேர்க்குளதாஞ்
சொற்குளவத்திசைக்குளதும்பஞ்சபட்கிக்குளதுஞ்
சொற்றிடுநாமத்துளதுஞ்சுடர்முதலெண்டிசைப்பேர்
மற்குளதுமற்றதுங்கண்டுறைத்திடுவரிதுவெவ்
வளவுளநாட்கெனிரிதிபர்க்குளதும்வகுப்பதுவே.

(இ-ள்.) ஒருவர்க்கொருவர் தர்க்கமாவதுகண்டு வெல்வது தோர்ப்பது கேட்பதாகில் கிரகயோனியாகியவைகீழ்திசைமுதல் நேர்கருடங்

பூனை-சிங்கம்-நாய்-சர்ப்பம்-எலி-யானை-முயல்என்க இத்திசையும் இப்புகையும் அறிந்து சொல்லுக இதற்கு சித்திரைமாதமுதல், ௩-மாதம், எலி பூனையைவெல்லும் மேல், ௩-மாதம் முயல்நாயை வெல்லும், மேல் ௩-மாதம், யானைசிங்கத்தைவெல்லும் மேல ௩-மாதம் சர்ப்பம் கெருடனைவெல்லும். ஆதலால் இத்திசையும் இருப்பதையும் அறிந்து சொல்லுக. பஞ்சபட்சிப்பலனும் நாமநட்சேத்திரபலமும் எண்டிசைக்கிரகபெலமும் அறிந்து இவைமுதலானவைக்குள்ள பலாபலமும் அறிந்துசொல்லுக. இதற்கெவ்வளவுநாளென்பது அறியவேண்டில்இதற்குக்கண்டபெலவானுக்குச் சொன்னசங்கை சொல்லுக. எ-று. (உ)

யாத்திரைப்பலன்.

அதனுவிறையண்ணனுதையம்மிவைநற்சரமா
 யதிபெலமுற்றிடிலாற்றுமுபையநகர்க்கணித்தா
மிதுவலதத்தலம்பெயர்தலிலையெனல்வருவோர்க்
 கீசனளவுரைத்ததினநான்குயர்த்திழுவோர்க்
குதவிலவணிவனுறலகாவற்குளனுன்னதனே
 யுளன்வழியன்வருவதிலேயென்பதிதுவும்மாஞ்
சிதவிறைவெய்யவனிறைமேற்சேர்வதுயாத்திரைக்காய்ச்
 செப்புவரித்திறம்போலமற்றதுஞ்செப்புதலே.

(இ-ள்.) எ-க்குடையவன், லக்கினேசன் லக்கினம் சரவர்க்கமாகி அதிபெலமுற்றிடில் போனவன்வழியில் வருகிறனென்க உபயமாகில் ஊருக்குச் சமீபத்தில் வருகிறன் என்க, திரமாகில் அவடம் விட்டுப் புறப்படவில்லை என்க இது அல்லாமலும் எப்போது வருவானென்று கேட்பவனை ஒருநட்சேத்திரஞ் சொல்லச்சொல்லி அத்தினந்தொட்டு திருவாதிரைவரைக்கும் எண்ணி ச-ல் பெருக்கி எ-க்குக் கொடுக்க வந்தமிச்சம், க-ஆகில் அவடத்தில் இருக்கிறன் உ-ஆகில்இடத்துக்குச் சமீபித்தான் ௩-ஆகில் காவலுக்குள்ளானன் ச - ஆகில் பயணமாக எழுந்திருந்தான் ரு-ஆகில் பிணிகொண்டான் சு-ஆகில் வழியில்வருகிறன் எ-ஆகில் வரவில்லையென்று சொல்லுக இதுவும் ஒருபலனும், யாத்திரை இல்லேயோ உண்டோவென்றுகேட்கில் ௰-க்குடையவனும் ரவியும் லக்கினேசனும் ௰-க்குடையவன்வர்க்கமேறில் யாத்திரை உண்டென்க இந்தப்படி யாதொரு சிந்தனைக்கும்அதிபதிகாரகங்கொண்டு பலன்சொல்லுக. எ-று. (௩)

சிந்தனுபலப்படலம்

முற்றிற்று.

ஆகப்படலம் சஎ-க்கு கவி ௩௯௧.

---

## உலகியற்படலம்.

மழையுயல்பு.

செப்புதலிப்படிக்கதிபங்காரகமற்றுளதுந்
 தெரிந்துரைத்தல்சிந்தனைக்காமிதன்மேற்செப்புவது
முப்புரிமார்புனன்பாலவுலகியன்முன்மழைக்கா
 மு மூன்றேழ்நவமுபையமுதற்றினனேரிவைநே
ரப்புகர்மால்கூடிலதிகம்மிலற்பந்திரட்சி
 யனுவிருட்டிவெகுமழையாமரிதுலேகொர்ச்சிதமி
னிப்பருதியிவையுறவிக்குறியெழுநாட்குளதா
 மெனனிலுண்டாமற்றெனின்மற்றில்வருஷத்தியல்பே.

(இ-ள்.) சிந்தனுபலத்துக்குக்காரகம் அதிபதிமுதலானவைகொண்டு யோசனைபண்ணிச்சொல்லுக. இதன்மேல பிரமாவுக்குப்புத்திரனவர் உலகியல்பு சொல்வதில்முதலாவது மழைக்கியல்பு சொல்லுவோம். அசுபதிபரணி கார்த்திகையிற் சுக்கிரனும் புதனும்கூடில் அதிகமழை ரோகணி மிருகசிரம் திருவாதிரையிற்கூடில் மழையில்லை புனர்பூசம் பூசம் ஆயிலியத்திற் கூடில் அற்பமழை மகம் பூரம் உத்திரம் அத்தம் சித்திரை சோதி விசாகத்திற்கூடில் சிலாமழை அனுசம் கேட்டை மூலம் பூராடம் உத்திராடம் திருவோணம் அவிட்டம் சதையம் பூரட்டாதியிற்கூடில் * அனுவிருட்டி உத்திரட்டாதி ரேவதியில்கூடில் வெகுமழையென்க. ஆவணிமாசம் கூ முதல் எஉ வரைக்கும் இடி முழங்கிலும் ஐப்பசிமாசம் இந்தப்படி மின்வெட்டிலும் அந்த வருடம் மழைமிருதியு முண்டென்க. இக்குறிதப்பில் மழையில்லை. எ-று. (க)

இதுவுமது.

அத்தமுதலேந்தரன்மாவடுப்பெமன்பெண்படியி
 லசிதன்வரிற்சால்விலொருவங்கனையான்றலையில்
வித்தம்வரிலனல்சுகன்போல்வெயின்மனைபெண்ணீக்கி
 வெள்ளியுறின்மாகேந்த்ரத்தகிகிரணமேவிற்
சித்திரைமாதம்புகர்பொன்றிங்கள்பெறிலிவையிற்
 றீபமுறிற்பஞ்சமிமுற்பக்ஷமுறிற்சிகிதீண்
டத்தினம்பெய்திடிற்சிலேகோலினன்பாவவாரத்
 தன்றனையின்மாரிபெய்வதாவசியமெனுமே.

---

* அனுவிருட்டி மழையின்மை.

(இ-ள்.) அத்தம் சித்திரை சோதி விசாகம் அனுசம் திருவாதிரை அசுபதி பரணி சதையம் அவிட்டம் பூரட்டாதியிற் சனிவரினும் கும்பம் தனுசு மேடம் கன்னி இடபம் துலாத்திற்குருவரினும், சனி போலும் செவ்வாய்வரினும் சிங்கம் கன்னி நீங்கலாக மற்றராசிகளிற்சுக்கிரன்வரினும், மாகேந்திர மண்டலத்தில் ராகுக்கிரகணம் தீண்டினும் சித்திரைமாசம் சோதிநட்சேத்திரம் பொருந்திய வெள்ளிவியாழன் திங்களிற் பிறக்கினும், பூறுவபக்ஷத்துப் பஞ்சமியிற் பிறக்கினும், கேது கிரகண காலத்தில் மழைபெய்யினும், ஐப்பசிமார்கழிமாசம் பாகவாரத்திற்பிறக்கினும், மழை அவசியம்பெய்யும். எ-று. (ரு)

இதுவுமது.

அம்பிறைகைமான்றலைபுல்லாய்குளஞ்சோதியில்வா
னவ்விலுறினுளிருநான்காடிமுடியுதையம்
பம்பிறைபாகவன்றிசைக்காற்றடிக்கினுவாசோதி
பகலுதையம்வில்லூன்றிமேகம்வரிற்பருதி
யிம்மதியம்வட்டமுறிற்றேட்கோண்பொன்மதிகக்
கிரானுமுறிற்பொன்புகருக்கெமன்பவுமன்றேற்கிற்
சொம்பிறையைமைக்கோனைச்சோமனுறிலினன்முன்
சுங்கனுறினிர்மலம்விண்டோன்றின்மழைக்கியல்பே.

(இ-ள்) பூராடம் திருவாதிரை அத்தம் மிருகசிரம் அனுசம்-பூரம்-உத்திரம்-சோதியில் இந்திரசாபம் தோன்றில் நாள் அ-ல் மழையென்க. ஆடிமாதம் உத்திராடத்தன்று உதையத்தில் வடகாற்றுமேல் காற்றடிக்கினும், ஆடிமாதம் உவாவிலாவது சோதியிலாவது உதையகாலத்தில் இந்திரசாபத்துடனே மேகம்வரினும் ரவியைமத்தியான காலத்தில பரிவேடம் சுற்றினும், சுக்கிரன் மதி குரு விருக்ஷிகக்கோணிற்கூடினும், குருவுக்குச் சனிதோற்கினும், சுக்கிரனுக்குச் செவ்வாய் தோற்கினும், குருசேய்மதி கூடினும், ரவிக்கு முன்சுக்கிரனேடினும், ஆகாயம் நிர்மலமாகினும், மழைபுண்டு. எ-று. (௬)

இதுவுமது.

மழையிலையுண்டென்பதிதுவைப்பசிநேர்மகர
மாதவுதையத்துறினீர்வாய்ப்புறவிண்வடமேற்
கழறிசையுமின்னெதிர்க்கிற்சேறலவனேற்றி
லதிகவெயர்சனங்களிடத்தாகிலினனுந்தங்
தழலுறினுமழையுளதாந்தகர்மாதத்துதையந்
தபனனெனிலாடிமுடிசசிதிசைக்காற்றடிக்க

குழமதிமிக்காநாளினவமிசுடர்கூடிற்
குறுமுனியேயற்பவருடப்பெயர்கூறுவதே.

(இ-ள்.) ஐப்பசிமாசம் கூ உதையத்தில் மழைபெய்யில் அந்த வருஷத்துக்கு மழையில்லையென்க. தைமாசம் உதையத்தில் மழை பெய்யில் மழையுண்டென்க. ஆகாசம் நீர்வாக்கோடிலும், வடமேல் மூலையும் அக்கினிமூலையும் எதிர்த்து மின்னிலும் நண்டு தன் வளைச் சேற்றை வெளியிலேற்றிலும் சனங்களுக்கெல்லாம் அதிகவெயர்வுண்டாகிலும், ரவிக்கு கஉ-ல் சேயிருக்கிலும், மழையுண்டென்க சித்திரைமாசம் நாயிறிற்பிறக்கிலும் ஆடி உத்திராடத்தன்று வடகாற்றடிக்க அம்மாதம் பூறுவபக்ஷம் சோதிநவமி கூடிலும் அற்பமழை. எ-று.

இதுவுமது கெற்பக்குறி.

கூறியவிவ்வியல்பலதுமழையிலையென்பதற்காங்
குருமாற்கும்புகர்சனிக்குந்தோற்கிலுதையங்கொண்
ரேவவ்விரவிமதியைத்தீண்டிலிடபத்
துடுவீழிற்சானுன்காய்ப்பின்னுடன்மூன்னேடன்
மாறபனனுடனுகிலவருஷமில்லாதவனீர்
வவுநாளிற்செற்பகுறிமாதமியாழ்ங்கைங்கா
லேறலொருகாற்றேண்மட்டிடபவரைமுக்கா
லிதின்மாரிக்குறிகாணின்மழையெனச்சொற்றிடலே.

(இ-ள்.) முன்சொன்ன மழைங்குறிவர்க்கத்தில் ஒன்றுமில்லாதிருக்கில் மழையிலலையென்க இதல்லாமலும் புதனுக்குக் குருதோற்கிலும் சனிக்கு சுக்கிரன்தோற்கிலும் உதையகாலம் ரவிமதியை அரவு தீண்டிலும் இடபலக்கினத்தில் நட்சேத்திரம் வீழிலும் புதனோட்டம்தப்பிலும் மழையில்லையென்க. பூராடத்திற் சூரியன் நிற்கும் வரைக்கும் கெற்பக்குறியென்க. இதற்கு ஆனிக்கு நாள் கவ-ஆடி முதல்கார்த்திகைவரைக்கும் மாசம் க க்கு நாள் க-க்குமேல் வைகாசிவரைக்கும் மாசம் க-க்கு நாள்-ஒ-என்ப இத்தினங்களில் மழைக்குறி காணில் மழையுண்டு. எ-று. (௫)

நெற்பலன் தானியவிலை.

சொல்லியவிம்மழைப்பலனெற்பலன்கவிபொன்மாலாய்த்
தோன்றுதன்மாதத்துதையமாகவுருள்சூர
லல்லிறைதைதீக்கோணிலாண்டுதிக்கச்சோம
னுடிகயற்றெற்குயரவொப்பரவான்குடமாய்ச்

செல்லுறன்மற்றிடமாகிலகமேறும்வேய்மா
    நீபமுடியவுணர்நுகந்தெப்பமுஞ்சேய்மதியும்
புல்லிடமாதம்பிறக்கிற்சமமிதுவல்லதுவாய்ப்
    புகல்வரகந்தாழ்தலெனப்பொதியவரைமுனியே.

(இ-ள்.) முன்சொன்ன மழைப்பலமெல்லாம் நெற்பலமென்க இதன்மேலும் புதன் வியாழன் வெள்ளியில் மாதம்பிறக்க ரோகணிபுனர்பூசம் மிருகசிரம் பூசம் கார்த்திகை உத்திரம் உத்திராடத்தில் வருஷம் பிறக்கிலும் பங்குனி சித்திரைமாசம் பிறை தெற்குயரமாசி வைகாசி சமமாகநிற்க மற்றமாசங்களில் வடக்குயரிறும் தானியம் உயருமென்க. புனர்பூசம் அசுபதி சோதி உத்திராடம் மூலம் மகம் ரேவதியில் திங்கள் செவ்வாய்கூட மாசம்பிறக்கில் தானியம் சமவிலையென்க. இவையல்லாததெல்லாம் தானியம் தாழ்வென்க. பொதியவரையினையுடைய அகத்தியமாமுனியே. எ-று. (சு)

தானியவிலை.

வரைக்கிறைகையல்லகிபுற்பீபமசிதன்னாழ்
    வருடமுறிற்குறையுமற்றதொப்பரவாந்தினத்தி
லுரைத்ததல்லாததுமாந்தியுவாவிருத்தைவிட்டி
    யுதையமுமப்பெயராகிலத்தமனமுதையஞ்
சுரப்பெயர்தேட்பெயர்மாதந்தோன்றிலுவாவன்று
    துற்குறியாயிடியுடுவாலாலம்விழல்சோம
னரிக்கிறையோர்பக்ஷமதிலரவிருவர்தொடல்வி
    லானிகுளிர்தேண்மாதமாகினெற்குறுமுதலே.

(இ-ள்.) திருவாதிரை அத்தம் பரணி ஆயிலியம் அனுசம் சோதியில் சனி ஞாயிறுகூட வருஷம்பிறக்கில் நெற்குறுமுமென்க முன்சொன்னதல்லாதவையாகிற் சமவிலையென்க. முன்சொன்ன நட்சேத்திரமல்லாதவையாக உவா இருத்தை விட்டிகூடகுளி உதையமாக வருஷம்பிறக்கிலும், அத்தமனகாலத்தில் தைமாசம்பிறக்கிலும் உதையகாலத்திற் கார்த்திகைமாசம் பிறக்கிலும் உவாக்காலம் இடிவிழல் ஆலங்கட்டிவிழல் உடுவிழல் இவைமுதலாகிய துற்குறியுண்டாகிலும் ரவிமதியை ஒருபக்ஷத்தில் ராகுகேதுபீடிப்பது மார்கழி ஆனி ஆடி கார்த்திகைமாதங்களாகிலும் தானியம் குறையும். எ-று. (எ)

தானியமுஞ்சனமுங்குறையுமெனல்.

தலத்தாடிமுடியுதையந்தழலருகன்றிகைக்காற்
றடிக்கிலிப்போர்மண்டலத்தாழ்சசியையகிசாரிற்
செலத்தாதிபர்குருவைவிழுங்கில்சிதன்சேய்
செயமாகவிதிதோற்கிற்சேய்சனிகட்செவியை
நலத்தாதிபன்சேர்லலதிவர்களெதிர்க்கி
ஞகமனற்பங்கணையினுவகிர்தீபறைமன்
சொலத்தீர்மூன்றுடையமொரைந்திவைநேர்தொட்டுளதிற்
சுகன்கனலுற்றிடிற்சனமுமகமுஞ்சுருங்குதலே.

(இ-ள்.) ஆடி உத்திராடத்துதையம் தென்கீழ்மூலையிலும்தென மேல்மூலையிலும் காற்றடிக்கிலும், வாயுமண்டலதினத்திற் ரவிமதியை அரவுதீண்டிலும், மதிசுக்கிரன் குருவை விழுங்கிலும், சனிசேய்க்குக் குருதோற்கிலும், சேய்சனிராகுகுருக்கூடிலும், அல்லது இவர்கள், எ-க்கு எ-ஆகவரிலும் ராகு சேய் சனி கூடிலும் ஆயிலியம் மகம் பூரம் கார்த்திகை ரோகணி மிருகசிரம் உத்திரட்டாதி ரேவதி கேட்டைமூலம் பூராடம் உத்திராடம் திருவோணத்தில் சேய்சனிகூடிலும், ச[illegible] மூந் தானியமுங்குறையும். எ-று. ([illegible])

இதுவுமது.

அளப்பனவும் நிறப்பனவுங் குறையுமெனல்.

மகவோட்டம்.

சுருங்கிடைமாவானுதிதேள்கயலாந்தியஞ்சேய்
சுகனுறிற்சால்கோலலவன்சுறவிதிற்பம்முதிரிற்
சரந்தவிரமற்றதிற்றேள்கோல்குளிர்யாழ்சனியிற்
சங்கராந்திப்பெயருறிற்றுழுதல்குருபெண்டுலையில்
வரும்பொழுதிலளப்பனவுநிறப்பனவுங்குறைதன்
மற்றதும்மற்றவர்க்காஞ்சான்மாதமதிமகத்திற்
பொருந்துதறெற்கொன்றுய்நேர்கால்காணெற்றூழ்வாய்ப்
புகல்வதென்றுனென்னிதையத்துளதுபுணர்ப்பவனே.

(இ-ள்.) சிங்கம் இடபம் ஆதியிலும் விருச்சிகம் மீனம் அந்தத்திலும் சனிசேய்கூடிலும் கும்பம் துலாம் கடகம் மகரத்தில்நட்சேத்திரம் வீழிலும் திரஉபையராசியிற் சனிவாரத்தன்று கார்த்திகை ஐப்பசி ஆடி ஆனி இந்தமாதங்கள்பிறக்கிலும் தானியம் குறையும் எ[illegible] க கன்னி துலாத்திற் குருவரும்போது அளப்பனவும் நிறப்பனவும்

குறையுமென்க. மற்றுள்ளது மற்றவர்க்குள்ள படுசொல்லுக மாசிமகத்தன்று சந்திரன் ஒருமீன் தெற்காக விட்டோடில் தானியம்கால்வாசிகுறையும், ௨-மீன்விட்டோடில் அரைவாசிகுறையும் ௩-மீன்விட்டோடில் முக்கால்வாசிகுறையும், நாலுமீன்விட்டோடில் முழுவாசிகுறையுமென்று திருவாய்மலர்ந்தருளினவன் என்னிதையத்துளயாவுந் தானாகநடத்திய சுப்பிரமணியக்கடவுள். எ-று. (௬)

அரசருக்கு அனுகூலகாலம், விபரீதகாலம்.

பவுமனைச்சுன்மதிவிழுங்கிற்பாகவன்சேய்மால்பொன்
பங்கனுமம்புலிக்கிளைக்கிற்பார்த்திபர்க்குத்தமமாம்
சவுரியனலான்கிதேடனுமீன்வக்கிரிக்கிற்
றழல்வீட்டந்தணனிருக்கிலிவனீசந்தழுவி
லவனிசுதன்மால்புகருக்கற்கோமான்றேற்கி
லத்தமனத்திரவியையூரரவுவளைத்தணையி
லிவணமதிக்காகிலப்போதிடிமழைமீனுற்கை
யினன்பொன்னன்மனையாய்வீழ்ந்திடின்மனருக்கெமனே.

(இ-ள்.) சனிமதிசேஷையை விழுங்கிலும், சுக்கிரன் சேய்புதன்குரு ச?ரி இவர்கள்மதிக்குத்தோற்கிலும், அரசர்க்கு அனுகூலகாலம் இடபம் சிங்கம் விருச்சிகம் தனுசு மீனத்திற் சேய்சனி வக்கிரிக்கிலும்,மேட விருச்சிகத்திற் குருவிருக்கிலும், அல்லது குருநீசமேறிலும், சேய்புதன் சுக்கிரனுக்கு மதிதோற்கிலும், அத்தமனசமையத்தில் ரவியைப்பரிவேடம்வளைய அரவுதீண்ட அல்லது மதியையாகிலும் இந்தப்படிதீண்ட அப்பொழுது இடிவீழ்தல் மழைபெய்தல் நட்சேத்திரம்குறைக்கொள்ளிவீழ்தல் ரவிசேல் குருவீடான ராசிகளிலாகில் அரசருக்கு ஆகாதகாலம். எ-று. (௭)

மந்திரிமரணம் குறும்புஅழிதல்.

யுத்தகாலம் சேனைமடிவு.

எமமுதிக்கவுடுவிழிற்புதற்கனறேற்கினுமந்
திரிமரணமாற்கசிதன்சேயிவர்களிளைக்கிற்
குமகனுக்குச்சனிகோற்கிற்குறும்பழிவுதேண்மான்
கோல்குளிர்யாழிதின்மாதமுறிற்சனிசேய்கூடி
மமதிபரிவேடமுறிலந்தணன்சால்கலையி
லணையிலனற்சனிவிழுங்கிலிவற்கனன்மாறேற்கிற்
சமர்குருச்சேலுறவரவுதீண்டவிடிமுதல
தழுற்குறைபெண்டுலைமாதந்தரிற்றானைமடிவே.

(இ-ள்.) மிதுனத்தில் நட்சேத்திரம்வீழிலும், புதனுக்குச்சேய் தோற்கிலும், மந்திரிமரணமென்க. புதனுக்குச் சனிசேய்தோற்கிலும் சேய்க்கு சனிதோற்கிலும் குறும்பு அழிவாமென்க. விருச்சிகம் மகரம் துலாம் கடகம் மிதுனத்தில் மாதம்பிதக்கிலும் சனிசேய்கூட பரிவேடங்கூடிலும் மகரகும்பத்திற் குருவிருக்கிலும் சேயைச்சனி விழுங்கிலும், சனிக்குச்சேய் புதன்தோற்கிலும் யுத்தகாலம் என்க. குரு மீனத்திலிருக்க கிரகணகாலமாக இடிநட்சேத்திரம் குறைக்கொள்ளி ஆலாங்கட்டி இவைவீழ்தல் புரட்டாசி ஐப்பசிமாசமாகில் சேனைகள் மடியும். எ-று. (கக)

மனுடர்மடிவு, உலகழிதல்-

மடிவுலகின்மனுவாடிமுடியுதையமாக
மறலிதிசைக்காற்றடிக்கின்மாதவுதையப்பே
ரிடபமரியாடாகக்குருமீன்சாலிருக்கி
லென்பருதையத்தினனை யூர்வளையிலெமனில்
கடகமொருமாலிறுலைகனல்சனிவக்கிரிக்கிற்
கட்செவிதிண்டம்புலியைப்பரிவேடங்கதுவின்
முடியுதையந்ததன்மேற்காற்றடிக்கிலதவுமிழ
முளரிமனை யூடறுக்கின்மொழிவதுலகழிவே.

(இ-ள்.) ஆடி உத்திராடத்திற் றென்றிசைக்காத்தடிக்கிலும், இடபம் சிங்கம் மேடத்தில் மாதம்பிறக்கக் குருமீன கும்பத்திலிருக்கிலும் மனுடர்மடிவாமென்க. உதையகாலம் ரவியைப் பரிவேடம் வளையிலும் மகரம் கும்பம் கடகம் மேடம் மிதுனம் கன்னி துலாம் இவற்றிற் சனி சேய்கூடி வக்கிரிக்கிலும், மதியை அரவுதீண்டப் பரிவேஷிக்கிலும் ஆடி உத்திராடத்திற் றென்மேற் காற்றடிக்கிலும் ரவியை அரவு ஊடறுக்கிலும் உலகழியும். எ-று. (கஉ)

உலகத்திற்கலகம், சோராக்கினிபயம்,
பெருங்காற்று, நோய்முதலியன.

உலகுசுதனில்வருஷமுறிலாடிமுடியி
லொருபகரேலர்திசைக்காற்றுறிலதிற்பூறுவமு
மலவனுறினீசனும்பஞ்சமியுமுறிற்சிதனுக்
கனற்குரிதிகவிதோற்கின்மாவனல்சுன்னடுக்கிற்
கலகமனற்பூர்வமுறிலவற்குளதாமேதை
கதுவவிவன்வருடமுறிற்காற்றசிதனுகி
நலனறுநாட்டிதிவாரவருடமுறிலுலகி
னண்ணுதலாகுலமிடன்மேனவில்வதுஞ்சொற்பனமே.

(இ-ள்.) செவ்வாய்க்கிழமையில் வருடம்பிறக்கிலும், ஆடி உத்திராடத்தில் அக்கினிமூலையிலும் தெற்கிலும் காற்றடிக்கிலும், ஆடிமாசம் பூறுவபக்ஷத்துப் பஞ்சமியும் செவ்வாய்க்கிழமையுங் கூடிலும், சுக்கிரனுக்கு குருவும் செவ்வாய்க்கு சுக்கிரனும் தோற்கிலும், அசுபதியிற்சனிசேய்கூடிலும், உலகத்திற் கலகமென்க. லக்கினத்திற் சேயிருக்க வருடம் பிறக்கிலும், சோராக்கினிபயமென்க. லக்கினத்திற் புதனிருக்க புதவாரத்தில் வருடம் பிறக்கிலும், காற்றதிகமென்க லக்கினத்தில் சனியிருக்கப் பாவவற்கமாகிய திதிவாரநட்சேத்திரமுங்கூடில் நோயும் அனர்த்தமும் * தொக்கடையுஞ்சொல்லுக இதன்மேற்சொற்பனபலமுஞ் சொல்லுவோம். எ-று. (கரு)

உலகியற்படலம்

முற்றிற்று.

ஆகப்படலம் ௬அ-க்கு கவி ௬௱௬.

# சொற்பனபலப்படலம்.

சொற்றிடல்புன்மூரல்செயலசேகரங்கையசைத்தல்
சொற்பனமாய்த்தேவிடத்திற்றோன்றல்பராட்டமதாஞ்
சற்றிடைமின்வாலைசுமங்கலிதீபநீர்ச்சால்
சற்சனர்தம்மனைபுகுதல்சௌபாக்யமாகும்
மிற்றனிற்றீப்பட்டெரிதல்சோபனம்பான்மலஞ்சோ
றின்கனிவிபூதிதனமிவைநுகர்தலதன
நற்றகைமாசுணம்பணிதியரிசனஞ்சந்தான
நரிகவிநீல்பணிநாய்நண்ணலர்பயநண்ணுதற்கே.

(இ-ள்.) சொற்பனபலமறியும்படி தேவவிம்பதெரிசனையில்தேவவிம்பம் வாய்விட்டுப்பேசல், புன்மூரல்செய்தல், சிரமும்கையும் அசைத்தல், காணில் பாராட்டசஞ்சாரத்துக்குக் காலமென்க. தன்மனையில் இலக்குமிபோலும் வாலைப்பெண்வரல், சுமங்கிலிவரல், தீபம் நிறைகும்பம் சற்சனர்கள் கொண்டுவந்து தரக்காணில் சௌபாக்கியமென்க. மனையில் அக்கினிபிரவேசமாகக்காணில் சோபனமென்க. பால்-மலம்-சோறு-இனியகனி-விபூதி இவைகாணில் தனலாபமென்க. இவைபொசிக்கக்காணில் தனநாசமென்க. அழகுடைய சற்பம், ஆபரணாதி, மஞ்சள் இவைகாணில் சந்தானமென்க. நரி-குரங்கு-கருத்திருப்பன்-துற்பாம்பு, நாய், இவைகாணில் சத்துருபயம். எ-று. (க)

* தொக்கடை தரித்திரம்.

உதகமிகுந்தாற்றில்வரல்பயிர்தழைதன்மகிழ்வீ
தூடலறல்படைகிளைக்காகுலமுதிரமோடல்
பதமழைபெய்திடற்காநீர்ப்படுகர்நதிகூவற்
பயஞ்சுதறலகமுளதப்பாலெழனிர்ப்பலமாங்
கதைகொடுதெற்கொருவன்வரல்கண்டலறறனதங்
கத்திலொருவுறுப்பதனைக்கவர்தலழைத்திடலசாம்
புதலுளதிலிவனேறவிவைகவிபெற்றெமன்பால்
போதல்கனவெனிற்றினப்பேர்க்குயிர்சமன்போக்குதற்கே.

(இ-ள்.) ஆற்றில்நிரம்பத் தண்ணீர்வரப் பயிர்தழைவாகவரக் களவுகாணில் சந்தோஷகாலமென்க. ஆறுபெருகித்தண்ணீர் ஊடெடுக்கில் படைவருமென்க. பயிர்விளைந்தறுக்கக் காணில் பந்துசனத்துக்கு ஆகுலமென்க இரத்தம் ஓடக்காணில் பதமழையென்க. வாவிருளம் நதிகூவல் இவற்றிற் பெருகிநின்றநீர் சுவறிப்போகக்காணில் தரித்திரகாலமென்க. தென்றிசையிலிருந்து ஒருவன் தடிபிடித்துக்கொண்டு வருவதுகண்டு அலறிடில் அல்லது சரீரவுறுப்பில் ஒன்றைக்கவர்ந்து கொண்டுபோதல் அல்லது அழைத்திடல் பிணத்தின்பேரில் தான் ஏறகுரங்கு சுமந்துகொண்டு தெற்கினில் போதல் இவற்றில் ஒன்[illegible] காணில் ௨௭-நாளையில் ஆற்பன சமான சரீரபதனம். எ-று.

சமன்றிசைநாய்பகடொருவேசரியெடுத்தோடுதனிற்
றுசிகுறளுருவாகித்தழுவியுடனேகல்
சுமந்தகாத்துடனெடுகத்துற்குரல்விட்டெழுப்பச்
சுதனையெடுத்தோடிலவனைத்தொடர்தல்சுராதே
ரமைந்ததெழுந்தோடுதலத்திசையாதவிலைகொம்
பற்றமரத்தெண்ணையும்பொடித்துடனேறுதலா
மீமந்தழுவவுடலினடுக்குற்றிடச்சொற்பனங்கண்
டெழுதலொருகந்தாயத்தெமபுரஞ்சேருதற்கே.

(இ-ள்.) தென்றிசையில் நாய்கிடாய்-ஆடுகதை-இவற்றுள் ஒன்றைஎடுத்தோடக் கனவுகாணிலும், கறுத்தநிறமும் குறளுருவமுமான தாசியை கைப்பிடித்துக்கொண்டு தெற்கேபோகக்காணிலும் ஒருவன் வந்து பிள்ளையை யெடுத்துக்கொண்டு தென்றிசையிலோடுகிறதைக்கண்டு இாண்டு கையையும் தலைமேல்வைத்துககொண்டு நெடுங்குரலிட்டுத் தொடர்ந்துபோகிலும் தேவவிம்பமாவது தேராவது தெற்கினிற்போதல் இலைகொம்பற்ற பட்டமரத்திற் பொடித்ததுடனே எண்ணையிட்ட உடலுமாக ஏறுதல்பனி மூனம்பொருமல் நடுக்குற்றஉடல்போல கைகால்உடல் பதறக்கனவுகண்டெழுதல ஆகிய இவைகாணிலும் ௬-மாதத்திலமரணம். எ-று.

புரம்பருத்தன்மணக்கோலம்புனைதலெண்ணெயணிதல்
புலையர்தொடல்சிரரோமம்போக்குகல்புண்படற்காம்
வரம்பறநாய்நரிகரமிற்புகுதல்சிறுதான்யம்
வரையினுறன்மோதகவற்கம்வரனோயவரற்காங்
குரமபரியவாம்புரவிசிவிகைகயமூர்தல்
கோபுரமுப்பரிகைகிரிக்குவட்டிடத்துன்னதத்துங்
கரம்புனையுஞ்சிரசினர்நிற்பதற்காய்வீற்றிருக்கக்
கனவுதிக்கின்வாழ்விதன்மேற்காலமறிவதற்கே.

(இ-ள்.) சரீரம் பருத்திருக்கக் கனவுகாணினும், கலியாணக்கோலம் அலங்கரித்தல் உடல்முழுவதும் எண்ணெயிடுதல் புலையர்தொடல் சிரசுரோமம் களைதலாகிய இவைகாணினும் மனசுபுண்படற்கென்க. நாய்-நரி-கழுதை-மனையிற்புகுதல், சிறுதானியம் மலைபோலக் குவிதல், பணிகாரவற்கம்வரல் ஆகிய இவைகாணில் ரோககாலமென்க. குதிரை-பல்லக்கு-யானை-யேறிநடத்த, கோபுரம் உப்பரிகை மலையினுச்சி இவற்றிலிருக்க அநேகம்பேர் கரங்குவித்த சிரசினராய் நிற்கக்காணில் ஐசுவரியகாலமென்க. இதன்மேற்காலமறிதல் சொல்லுவோம்.
எ-று. (௪)

சொற்பனபலப் படலம்

முற்றிற்று.

ஆகப்படலம் ௪௬-க்கு கவி ௪௱௮.

---

## காலமறிதற்படலம்.

கால்கரந்தொப்புண்ணனையாதொருதரநீர்குளிக்கிற்
கண்ணாடியிற்சிரங்காணாது நுதற்கவித்து
மேலெதிர்பார்த்திடன்மணிக்கைபருக்குமொருவிரலில்
விளக்கடங்காதொளிருநடுவிரன்மடககமிகுந்த
நால்விரலிலணிவிரன்மேலெழும்புமிதழெயிறு
நாக்கறுக்குங்கண்செவிநாசிகைகுளிர்யஞ்சணைதல்
போல்வெளிரினெய்துறும்வாய்புகையுமலங்கழியும்
போதுபுலால்வெடிநாறுந்திதித்தினம்பொன்றுதற்கே.

(இ-ள்.) ஒருதரம் நீரிற்குளித்தெழுந்திருக்கில் உள்ளங்கை கால்தொப்புள் நனையாதிருக்கிலும், கண்ணாடிபார்க்கிற் சிரசு காணாதிரு

க்கிலும், புருவமத்தியில் மணிக்கையைவைத்து மேலாகப்பார்க்கில் அடிக்கை சிறுத்து மணிக்கை பருத்திருக்கிலும், ஒருவிரலில் விளக்கடங்காது ஒளிரிலும், நடுவிரல் பூமியில்மடக்கநின்ற நாலுவிரலில் அணிவிரல் மேலெழுமபினும், இதழ்எயிறுநாக்கு இவைகருக்கிலும் கண்-செவி-நாசி-இவை குளிர்ந்து பஞ்சணைந்து மிருதுவாய் வெளிரினும், வாய்புகையினும், மலங்கழியும்போது புலால்வெடி நாறுகினும் ஒருபக்ஷத்தில் மரணம். எ-று. (க)

தற்குணம்பேதித்தல்பருத்தல்இளைத்தலிதுவ
தாதல்பெறுநாட்கடந்தப்பாற்றனையர்காண
விற்பெறுதல்வெகுகாலம்பாழடைந்தவிடத்தி
விளமையிழந்தவளைமணமேற்றன்மனமிசையாள்
கற்புடமையழித்தலுபகாரமறந்தவர்கட்
காகுலஞ்செய்திடலான்மவதைக்காதல்பெரியோர்
சொற்குரமேற்றல்புலான்மறுத்தும்வெகுநாட்பின்
றுய்த்தலவ்வாண்டலதிரண்டிற்பொன்றுதல்சொல்லுகவே.

(இ-ள்.) தன்னுடையசுயகுணம் பேதிக்கிலும் பருத்தவன் இளைக்கிலும் இளைத்தவன் பருக்கிலும், பேறுகாலம் கடந்ததின்பின்பு புதல்வரைப்பெறுதலும், வெகுநாள் பாழடைந்தஇடத்தில் மணைவெட்டிலும், இளமைதப்பின பெண்ணை மணஞ்செய்யிலும், மனதிசையாதவளைக் கற்பழிக்கிலும், ஒருவர்செய்த உபகாரத்தை மறந்து அவருக்கு அபகாரஞ்செய்யிலும், ஆன்மவதைசெய்யினும், பெரியோர்கள்மனசுநோகப்பண்ணி அவர்களுடைய குருரவசனம் ஏற்கினும், வெகுநாட்புலால்மறந்து மேன்பாடாக நடந்துகொண்டு பின்புபொசிக்கிலும், அந்தவருடத்தில் மரணமென்க. தப்பில் இரண்டாம்வருடம் மரணம் தப்பாது. எ-று. (உ)

பொன்றுதலோர்புறத்தொருநாட்காண்டயனமுபைய
போதெனின்முத்தினந்தினமாய்ப்புகல்வர்சரமாகி
னின்றவன்மெய்யசையாடனிழலசையிற்றிதியா
றீருமிழவான்வின்மறைந்தெதிரோடினிலத்தி
லொன்றியகாற்சுவட்டுருவம்பாதியுறிற்செவிக்கு
ளோசையறில்ருசிபிறழினயனவிழிப்பொளிக்கிற்
றென்றிசையுற்றிடற்குளநாட்டெசமாகுமிதன்மேற்
றிரிமலவினைதவியற்குள்ளதுஞ்செப்புதலே.

(இ-ள்.) ஒருநாள்முழுவதும் ஒருபுறமாகச்சரம்ஓடில்வருடத்தில் மரணம் உ-நாளோடில் ஒரு அயனத்தில் மரணம் ௩-நாளோடில்

நாள் உஎ-ல்மரணம் சரீரம் அசையாமல் நிழல் அசையில் நாள் கடு-ல் மரணம் வாய்நீருமிழும்போது வானவிற்போலும் பஞ்சநிறமும் வளைதலுமில்லாமல் நேரோடினும், நிலத்தில்காணினும் செவிக்குள்ஓசை அறினும், ருசிபேதிக்கினும், நயனவிழிப்பு ஒளிக்கினும் ௰-நாளையில் மரணம் இதன்மேல் திரிமலசம்பிரதாய வியல்சொல்லுவோம். எ-று.()

காலமறிதற்படலம்

முற்றிற்று.

ஆகப்படலம் ௫௰-க்கு கவி ௪௧௧.

---

# திரிமலசம்பிரதாயப்படலம்.

இந்திரியவியல்பு.

புதுமலர்வாசனை தனம்பூவிரிமணஞ்சம்போகம்
 புத்திரர்பாலுற்றவர்பொன் றுவதுசுண்ணும்புக்கா
மதமதனந்தேன்ரோகம்பானகமற்பாயு
 மலடுபுலானுவிமணந்தீர்க்காயுவனசஞ்
சுதரதிகமுவர்தொழும்புற்றிடல்கமுகின்பாளை
 சுகமதிகஞ்சுவறலிற்றுவிழல்சுடிறுக்கமுமா
மிதமில்வெறுத்திடலிறைச்சிமலமிறப்பிந்திரியத்
 தியல்புமிதாமிதன்மேற்சின்னீரதனுக்கியல்பே.

(இ-ள்.) இந்திரியம்விடும்போது புதுமலர்வாசனைவீசில் தனமுண்டாம். பூவிரிவாசம்வீசில் சம்போகம் பாக்போலும் கமழில் புத்திரப்பேறு சுண்ணும்புநாற்றமாகில் பெற்றிழப்பு. யானைமதம்போலும்வீசில் தரித்திரம் தேன்போலும் கமழில் ரோகம் பானகம்போலு மணக்கில் அற்பாயு புலால்நாற்றந்தோன்றில் மலடு கஸ்தூரிபோலுபரிமளிக்கில் தீர்க்காயு தாமரைபோலுவாசிக்கில் வெகுபுத்திரர் உவர்நாற்றந்தோன்றில் தொண்டுபடல் கமுகின்பாளைபோலு மணக்கில் அதிகசுகம் சுவறுதல் இற்றுவிழுதல் சுடுதல் இவையாகில் துக்கம் சதாஓடி சஞ்சலம் இரைச்சி மலப்போலு நாற்றம்தோன்றில் மரணகாலம் இதன்மேல் சிறுநீர் இயல்புசொல்லுவோம். எ-று. (௧)

சிறுநீரியல்பு.

நீர்சுவறலிற்றுவிழல்வெலச்சாற்றின்மணத்த
 னேர்பாயாதசைந்துவிழனிலந்துளையாதயர்தல்

சேர்தல்பிணிபணித்திடுதறுயம்பகிர்தல்சுகமாய்த்
தோன்றல்சுதற்கம்புயவாசத்துடன்பான்மணமுஞ்
சேர்தறனம்பிணநாற்றந்தெரித்திரஞ்சத்துருவை
செயித்தலரிசனங்காவிசெல்வமதிகமுமாங்
கார்நிறமுற்றழன்றெழுதல்சிதரிடன்மாரணத்துக்
காமிதன்மேன்மலத்தியல்புக்காதல்கழறுதலே.

(இ-ள்.) நீர்விடும்போது சுவறல், இற்றுவிழல் வெல்லச்சாற்றின் மணத்தல் நேர்பாயாது அசைந்துவிழுதல் நிலந்துளையாதயற்றல்சேர்தல் இவையாகில் ரோகமென்க. பக்கத்திற்பணித்தல், பகிர்ந்துவிழல் சுகமாகநேர்விழல் இவற்றிற்குப்புத்திரரென்க தாமரைவாசனையும் பால்வாசனையும் கலந்துவிழில் ஐஸ்வரியம் பிணநாற்றந்தோன்றில் தரித்திரம் பஞ்சள் வாசனையாகில் சத்துருஜெயம் நீலோற்பல வாசனையாகில் சௌபாக்கியம் நிறம்கறுத்து அழன்றெழுதல் சிதறிடல் இவையாகில்மரணமென்க இதன்மேல் மலத்தியல்புசொல்லுவாம்.எ-று.

மலத்தியல்பு.

அறலிருசாணளவதன்மேலாகுதரீர்க்காயு
வாமுதகங்காற்குமுன்பாமதற்குளதைஸ்வரிய
மிறுகலரோகங்கழிதலிற்றுவிழலகுதத்தி
லெரிவொடனன்றெழுதல்பிணியெப்பொழுதுஞ்சுகமா
யுறலதுசற்றெனினும்பானத்தலமொட்டாம
லுற்றிடல்சம்போகமதிகத்துளவாழ்வுளதா
மறிமலமுற்றுதிரம்பச்சென்றெழுகிடலூன்கழிதல்
வானவிற்போனிறங்காட்டன்மரணமலத்தியல்பே.

(இ-ள்.) மலம்விடும்போது இருசாணளவும் அறுதுவிழில் தீர்க்காயுஎன்க. வாய்வுசெலம்இரண்டும் முந்தாமல மலம்முந்தில் ஐஸ்வரியம் இறுகிவிழில் அரோகம் கழிதல் இற்றுவிழல் குதத்தில் எரிவோடுஅனன்றுஎழுதல் இவையாகில் ரோகம் எப்போதும் சுகமாகவுற்றிடல் சற்றெனினும் அபானத்தலம் ஒட்டாமல்விழில் சம்போகம் அதிகமான சௌபாக்கியமென்க. ஆட்டுப்பிழுக்கைபோலுதிரல் பட்சைநிறமாகக்கழில் ஊன்கழிதல் பஞ்சவர்னங்காட்டல் இவையாகில் மரணகாலம். எ-று. (௩)

திரிமலசம்பிரதாயப்படலம்
முற்றிற்று.

ஆகப்படலம் ௩௪-க்கு கவி ௬௪௬.

# தெரிசனுபலப்படலம்.

### சூரியவிம்பதெரிசனைப்பலன்.

மலருதித்தவன்பாலதெரிசனைவினோதம்
வகுப்பதுங்கேளமவாசிமத்யானத்தினனு
ளிலகிவளைத்தாம்ப்ரவட்டத்தினினறுநெய்பரப்பி
யிப்புவியின்மேன்மையின்வைத்துவனுருவப்பார்க்கி
னிலவசைதனிற்றல்கறுத்திடல்சிவத்தலிவைநேர்
நிதிபதிவிட்டோடலிருப்பிறப்பினனேர்குணபாற்
குலமனைநந்தனர்தாதைதுணையவன்வங்கிசந்தாய்
குடும்பமிவைக்கவ்வாண்டாகுலங்குறைவுற்றிடலே.

(இ-ள்.) பிரமாவின்புதல்வ தெரிசனைவினோதமுங்கேட்பாயாகஆதித்தவாரமும் அமாவாசியுங்கூடினநாளில் மத்தியானகாலத்தில் ஒத்தநிலத்தில் சுசிமுதலானவைசெய்து ஒருதாம்பிரவட்டத்தில் நிறையநறுநெய்விட்டு சூரியனுருவம்பார்க்கில் அதில் இரவிரூபம்மதிபோலுங்காணில் ஐஸ்வரியம் அசைமில் தானப்பிரட்டம் நிற்குமாகில் ஸ்திரகவாசம் கறுக்கில்மரணம் சிவக்கில் மனோசஞ்சலம்என்க கீழ்திசையிற் குறைந்துகாணில் களத்திரத்துக்கும். தென்திசையிற்குரைந்துகாணில் புத்திரருக்கும் நிருதியிற் குறைந்துகாணில் பிதாவுக்கும், மேல்திசையிற்குறைந்துகாணில் சகோதரத்துக்கும் வடமேல்திசையில் குறைந்துகாணில் தனக்கும் வடதிசையிற் குறைந்துகாணில் பந்துசனத்துக்கும் நிசானத்திற் குறைந்துகாணில் மாதுர்குடும்பத்துக்கும் ஆகாது. எ-று. (க)

### சந்திரதெரிசனைப்பலன்.

குறைவறுசோமனைப்பூர்ணைநிசியிவனுணடுமிக்
கொண்டமுகமுத்தரமாய்ச்சுசிகொடுநோக்குதலு
நரைமலராதிபனியல்போனண்ணிடிப்பலமா
நடுவையிருகரம்பிடித்துநாட்டிதியுங்கலப்பாங்
நிறையவிராப்பகற்பொழுதுற்றிடுங்காலம்வடக்காய்
நின்றமலவான்பார்க்கநிறைவிலுருநிறைதன்
மறைதல்வியாகுலகிதியமரணமிதன்பலமா
மலையமுனியேகாதற்கிதன்மேற்சொல்லுவதே.

(இ-ள்.) சோமவாரமும் பூரணையுங்கூடில் அந்நாள்நிசிமத்தியத்தில் விரதமாகயிருந்து பூரணசந்திரனை நடுமெத்தியத்தில் வரும்போது உத்தரமுகமாகநின்று மல்லாந்துபார்க்கில் சூரியனுக்குமுன்சொன்ன லக்ஷணம்போலக்காணில் அதற்கதற்குச்சொன்னபலன் சொல்லுக. இதன்மேலும் சித்திரை ஐப்பசி மாதத்தில் ஆதித்தவாரமும் பூரணையுமாகில் நிசியிலும் சோமவாரமும் அமாவாசியுமாகில் திவாவிலும் ஆகாசம் நிர்மலமாக இருக்கும்போது இடையை இரண்டுகரத்தாலும் பிடித்துக்கொண்டு வடக்கிநின்று தெக்ஷணமூர்த்தமாகப் பார்க்கில்கண்டரூபம் குறைந்துகாணில் மனைவியாகுலம் நிறைந்துகாணில் ஐசுவரியம் மறைந்துகாணில் மரணகாலல் இவை தெரிசனுபலல் இதன்மேல் அகத்தியமாமுனியே காதற்பலஞ்சொல்லுவோம். எ-று. (உ)

தெரிசனுபலப்படலம்

முற்றிற்று.

ஆகப்படலம் ருஉ-க்கு கவி சூகசூ.

---

# காதற்பலப்படலம்.

கெவுளிக்காதலபார்க்கு முறைமை.

சொல்லசக்கோண்டனக்கயல்கேள்பகையதற்கல்லவுதோர்
சூற்றனியரெண்டிசையர்சுடரிவர்சுற்றுதனேர்
நல்லவர்களாகிலிதுவல்லதற்குள்ளதுவாய்
நவில்வதிவர்காரகத்தினடத்துவதுநிசமா
மல்லெனிற்சுற்றவலமதாற்தானறிதற்கிவைமற்
றவருரைக்கிலவரிருந்தவாரூடமதுவாந்
வல்லபமாய்ப்பல்லிசொல்லுதையமுமற்றுளதும்
வைத்ததிற்காண்பனபலமேமனதுரம்யபலமே.

(இ-ள்.) கெவுளிக்காதலறியும்படி மேடக்கோண்தனக்கும் ரிஷபக்கோன் அயலார்க்கும் மிதுனக்கோண்பந்துவுக்கும் கடகக்கோண்சத்துருவுக்குமென்ப தனிச்சூலக்கிரகமும் எண்டிசைக்கிரகமும் அருக்கநிலையும் அறிந்து இவர்கள்தொட்டு நேர்நடத்துவதில்சுபசேகரமாகில் சுபபலமென்க, மற்றவையாகில் அசுபபலமென்க இவற்றிற்கு இவர்கள் காரகங்கொண்டு நடத்துவது நிசமானபலமாம் நிசியாகில் இடமாகநடத்துக இப்பலம் தானறிதற்கென்க மற்றவர்சொல்லில் அவர்கள் ஆரூடமே அத்திசையென்க. இதன்மேலும் புத்திவல்லமையி

னுல்பல்லிசொன்ன இடமும் லக்கினமும் மற்றத்தானமும் அற்றைக் கிரந்திலேயும் வைத்துப்பலன்சொல்லுவது மனோரம்மியபலமாம். எ-று.

கெவுளிக்காதற்பலன்.

மனையிலிடநடையில்வலமற்றெதிர்மின்பொதுவின்
மலடிலேயின்முள்ளுளகைப்புளமரமற்றிவைபோ
லெனிலினல்சொற்கொன்றிடர்பொன்னிறப்பியல்புற்றூர்நோ
யேழுமெட்டுநெல்லுயரவிற்பதற்கிப்பலமூ
மனல்புகர்பாம்புறவினுக்கன்னியர்க்குமதிருருமற்
றதுதனக்காகமகத்யில்வலம்வாசலுச்சமருத்தந்
தனைவளைத்தலூடலிற்சொன்னச்சுநச்சென்பதுபோற்
சலிப்பறற்காமுழங்கல்கெவுளிப்பலஞ்சாற்றுதற்கே.

(இ-ள்.) சுயமனையில்இடமாகவும், யாத்திரைபோகையில் வலமாகவும் அன்னியர்மனை மற்றுள்ளதி லிருக்கும்போது முள்பாகவும், அம்பலத்திலிருக்கும்போது பின்பாகவும் காய்பூமுதலானவை யில்லாத மலட்டுமரம் இலையில்லாதமரம் முள்ளுள்ளமரம் கைப்புள்ளமரம் ஆகிய இவைமுதலானவற்றிலும், இவ்வர்க்கம்போலும் மற்றுள்ள இ[illegible]லும் கெவுளி சொல்லில் மனோசஞ்சலமென்க, ஒருகூற்சொல்லில் துன்பம் உ-ஆகில்தனம் ௩-ஆகிம்மரணம் ௪-ஆகில் சவுக்கியம்-ரு ஆகில் உற்றூர்வரவு ௬-ஆகில் ரோகம் எ-அ-ஆகில் நெல்மலியவிற்கும் இப்பலம்யாருக்கென்னில் அக்கினிமூலேமேற்கு ஈசானியம் இவைமூன்றிலும் சொல்லில் உறவினருக்கு என்க தெற்கும் வடக்கும் சொல்லில் அன்னியர்க்கு என்க. மற்றஇடங்களிற்சொலலில் தனக்குஎன்க. சுயமனையில் வலத்திலும் வாசலிலும் உச்சத்திலும் சொல்லில் தனமென்க தனவளைவளைந்துசொல்வதும் புலவியிற் சொல்வதும் நச்சுநச்சென்று சொல்வதும் கலகமென்க. கெற்சிதமாகச்சொல்லில் சஞ்சலமில்லை என்க. எ-று. (உ)

இதுதுமது.

சாற்றுகெவுளிக்குருவங்குணங்குலமற்றுளதற்
றலேவரியற்போலுளதாங்காதுமுதலுளது
மாற்றுளதுந்தெரிந்துரைப்பருதையமதற்குளலாய்
வந்தினத்திசைநேராய்வகுத்துமற்றத்திசைக்கு
மேற்றபகாரம்மதுவுமிசைத்திடுவரிதனு
லிறப்பிருப்புள்ளதுவுமவர்க்கீறளவும்வெகுவாய்
வேற்றொருநூல்பாராமற்சகலபலாபலமும்
விரித்துரைப்பரிதன்மேற்றும்மற்குடையவியல்பே.

(இ-ள்) கெவுளிசொல்லில் அதற்குடைய உருகுணம் குலம்மற்றவையும் அந்த லக்கினாதிபதியைக்கொண்டு சொல்லுக. தாது முதலானவையும் மற்றுள்ளவற்கமுந் தெரிந்துசொல்லுக உதையலக்கின ராசியிற்கண்ட நட்சேத்திரத்திசை முதல் நேர்நடத்திய அபகார சித்திரமுதலானவைக்கெல்லாம் பலன்சொல்லுக ஆகையால் இறப்பு இருப்புமுதலானவையும் ஆயுர்த்தாயம் வரைக்கும் உள்ளபலாபலமும் வேறொருநூல்பாராமல் மிகுதியும் விரித்துச் சொல்லுவார்கள். இதன்மேல் தும்மல் இயல்பு சொல்லுவோம். எ-று. (௬)

துமமற்பலன்.

தும்மலொன்றேற்பலஞ்சொலன்மற்றடுத்திடினுமொருவன்
  றாண்டினுநிற்பலம் ›வற்றோர்சொரூபமெனிற்சுபமாஞ்
செம்மையில்கைமைவலக்கையாயுதனேல்விரித்த
  சிரசினனேற்றீதாஞ்சேயெடுத்துநிற்செல்வமுமா
கூமமரணந்தனமிகல்கேள்கூடல்செயஞ்சுபமா
  குலம்பிணிநேரருக்கன்முதற்கூறுதற்காங்குசனேர்
சம்மயனுற்றூர்வரலாதாயநற்போசனம்போர்
  சாம்புதறீதிதன்மேற்காகத்தியல்சாற்றுதலே.

(இ-ள்.) தும்மற்பலமறியும்படி ஒரு தும்மலாகில் பலமாம் அடுத்ததும்மலாகிலும் ஒருவன் தூண்டிக்காட்டிலும் நிர்ப்பலமாம். ஆணுக்குப் பெண்ணும் பெண்ணுக்கு ஆணுமாகில் உத்தமம் பெண்ணெனில் விதவையும் ஆணெனில் வலக்கை ஆயுதனும் அல்லது விரிதலையனும் தும்மில்தீதாம் குழந்தையை வைத்திருப்பவளாகில் மிகுதியும் செல்வமுண்டென்க அருக்கன்முதல் நேர் தும்மற்கு மரணம்தனம், கலகம், உற்றூர்வரவு, காரியஜெயம், சுபம், மனோசஞ்சலம் ரோகம் என்க திக்குபலமறியும்படி அக்கினிமூலையில் சந்தோஷம், தெற்குசஞ்சலம் கன்னிமூலையில் உற்றூர்வரவு மேற்குதனலாபம் வடமேற்குசுகபோசனம், வடக்குகலகம், வடகிழக்கு மரணம். கிழக்கு தீதுஎன்க. இவ்வளவும் யோசனைபண்ணிச்சொல்வது தும்மற்பலமாம். இதன்மேற் காகத்தியல்பு சொல்லுவோம். எ-று. (௭)

காகக்குறற்பலன்.

இயல்புரிபுச்செயப்விருந்தாதாயமழைகலக
  மிறப்புமனோபசங்கிழக்காயுதையமுதலிவைநேர்
மூயல்வதரைச்சாமமதாமேகமொடைந்திவைநேர்
  முதல்வனன்யருறவுபகைமொழிவதுநேர்குரற்கம்

புயமனர்ச்சேர்த்தளந்தவடியையெழுவர்க்குதவ
பொருளுவகைமழைகலகஞ்செபமிறப்புற்றார்பாற்
றயைபுரிதலிவைகருங்காகத்தியல்பாமிதன்மேற்
சாற்றுதலாந்தைக்கியல்பதாமலையத்தவனே.

(இ-ள்.) குரற்காகம் கூப்பிடும்போது உதையமுதல் ருஎ நாழிகை ஒருசாமமாகவைத்து கீழ்திசைமுதல்நேர் சுகம் சத்துருஜெயம் உற்றார்வரவு இலாபம் மழை கலகம் மரணம் மனோபயம் என்க. குரல் க-ரு-தனக்கும் உ-சு-அன்னியருக்கும் ரு-எ-உறவுக்கும் ச-அ-பகைககும் என்க. காக்கைககுரல் எழும்பினவுடனே அடியளந்து யஉ கூட்டி எ க்குக் கொடுக்க மிச்சம் க ஆகில் தனம் உ ஆகில் சந்தோஷம் ரு ஆகில் மழை ச ஆகில் கலகம் ரு ஆகில் சத்துருஜெபம் சு ஆகில் மரணம் எ ஆகில் உறவின்முறை சிநேகமாம் இவைகருங்காகத்துக்கென்க இதன்மேல் ஆந்தை இயல்புசொல்லுவோம். எ-று. ()

ஆந்தைக்காதல், வேசரிக்காதல்,
மூஞ்சூறுவீச்சிடும்பலன், மெய்த்துடிப்பு.

ஆந்தைகிளைகூட்டல்சுகங்குரற்கிகல்பொன்மனர்சா
வாதாயம்பஞ்சமினோரோலைபிறப்பரிவாழ்
வரந்தசமீறுங்கிழக்காய்ப்பொருள்வீதல்வரல்பொன்
மாரணஞ்சஞ்சலங்கீர்த்திமகிழ்விவைவேசரிக்காம்
பூந்துணர்சந்தனம்புழுதுபூதிசவாதாடை
புகர்முதற்கோண்கேந்த்ரமெனிற்சுந்தரிக்காம்புயலாம்
கூந்தலிடமற்றவர்க்காயுறுப்பிறைவர்க்குளதாய்க்
கூறுவர்மெய்துடிக்கிதன்மேற்பதனவியற்குளதே.

(இ-ள்.) ஆந்தைகிளைகூட்டிற்சுகம் ஒருகுரலுக்குகலகம் உ க்கு தனம் ரு க்கு மன்னர்மடிவு ச க்கு லாபம் ரு க்கு பஞ்சம் சு க்கு பெண்வரவு எ க்கு ஓலைவரவு அ க்கு மரணம் கூ க்கு சத்துருபயம் ய க்கு பாக்கியம் இவை ஆந்தைக் காதலென்க இதன்மேல் வேசரிக்காதல் அறியும்படி கீழ்திசை நேர்தனம் மரணம் வினைத்தது வரவு ஐஸ்வரியம் மரணம் மனோபயம் கீர்த்தி சந்தோஷமென்க மூஞ்சூறு வீச்சிடல் சுக்கிரனிருந்தராசி திரிகோண கேந்திரமாகில் பூங்கொத்து சந்தனம் புழுகு விபூதி சவாது புடவை வருமென்க. மெய்யிற்றுடிக்கில் பெண்களுக்கு இடமும் புருடர்க்கு வலமுஞ் சுபபலமாகவைத்துக்கொண்டு அந்தந்த உறுப்புக்குடையவனைக் கொண்டுபலஞ்சொல்லுக இதன்மேற் பதனபலஞ்சொல்லுவோம். எ-று. (சு)

காதற்பலப்படலம் முற்றிற்று.

ஆகப்படலம்-ளரு-க்கு கவி சாஉஉ.

---

# பதனபலப்படலம்.

பல்லிமுதலியபதனபதனபலன்.

பதனமுடிப்பாலுடம்பிற்பல்லிநரரோந்தி
பருந்துகொடித்தொங்குகட்டிப்படினுமவ்வாண்டிறப்பா
மிதுபுணர்ப்போடவ்வுருவப்பல்லியெனிலயன
மிடையிரண்டொன்றரைமேல்கீழதிலிரட்டிப்பிவைநேர்
முதலுளதுக்குரைப்பாழகிளமைவெளுப்பரத்த
முத்துருவப்பல்லிவலமுற்றிடிற்சஞ்சலமா
மதிகசுமங்களந்தனம்வாமத்தெனின்மற்றேறற்
காமிதுவுமாம்பூரமாகிலுமற்றதற்கே.

(இ-ள்.) பதனபலமறியும்படி உடம்பின்வடிவுபோன்றபல்லி, நரர் ஓந்தி பருந்து காகம் தொங்குகட்டி இவை சிரசில்விழில் அந்தவருஷம் மரணம் முன்சொன்னபல்லி பிணைந்து சிரசில்விழில் மாசம் கூல் மரணம் இடையில்விழில் வருஷம் கல் மரணம் கழுத்துக்குகீழ் அரைக்குமேல் விழில் மாதம் கூல் மரணம் அரைக்குக்கீழ விழில் மாதம் உகல் மரணம் இவைநேர் இரட்டிப்பாக முன்சொன்ன நர ஓந்தி முதலானவைகளுக்குஞ் சொல்லுக அழகு இளமை சிவப்பு வெளுப்பு முத்துருவமாகிய பல்லி வலப்புறம் விழில் மனோசஞ்சலம் இடப்புறம்விழில் சுபசோபனம் தனலாபம் இவைவலப்புறத்தேறில் மரணம் இப்பலம் பூரத்துக்குமாமென்க இடப்புறம் ஏறில் மத்திம பலம். எ-று. (க)

மனையிலும் உணவிலுங்காண்பனவற்றின்பலன்.

இல்லிடும்பாமைகராவருதல்பருந்தடித்த
லீக்கூடித்தேனிழைத்தல்செஞ்சிதல்புற்றெழுத
னல்லரவுபேய்தினமுமாடல்புலையாட
ஞசமுறுநாட்கணித்ததாஞ்சிவிகைநாகங்
கல்லணைவாம்பரியிலிவையேறிவிழனேர்தே
கப்பதனஞ்சிறைப்படுதல்கருதலருற்றிடற்காம்
பல்லுகிரென்புரிகரிநூல்பங்கியவமிருத்துண்
பதிலசனத்தாகிலரிசனம்சவுபாக்கியமே.

(இ-ள்.) மனையில் உடம்பு ஆமை முதலைவரில் பருந்தடிக்கில் ஈக்கூடித் தேன் வைக்கில் செஞ்சிதல் புற்றெழும்பில் நல்லபாம்பு பசாசு தினமாடில் புலையாடில் இவை நாசமாகுங் காலத்துக்கடுத்த குறியென்க. பல்லக்கிலேறி விழில் தேக பதனம் யானையி லே[illegible] விழில் சிறைப்படல் குதிரையிலேறி விழில் சத்துரு ப[illegible] என்க. பல நகம் எலும்பு தோல் கரி நூல் மயிர் இவை

பொசிக்கும்வர்க்கத்திலாவது அசனத்திலாவது கிடக்கில்அவமிருத்து என்க மஞ்சள்கிடக்கில் சௌபாக்கியம். எ-று. (உ)

பாரினுயிர்ப்பிறப்பிறப்பும்பல்குணமுந்தொழிலும்
பகருமவைக்குறுமிடரும்பல்கிரகன்னலமுந்
தேரியுலகோரொழுகுஞ்சீர்கொள்விதிவிலக்குஞ்
சேர்கதியுமற்றவையுஞ்சேர்த்துரைத்தாமிந்நூல்
ஏரியலநிகழ்கவெனவியம்பியகத்தியனுக்
கிறிலருள்சுரந்தவனையிருக்கையினுய்த்திருந்தான்
போரியலும்வேலனிறைபூரணன்விசாகன்
பூங்கடம்பனெனதுளமாம்பூங்கமலாலயனே.

(இ-ள்.) பூலோகத்தின்கண் சகலஜீவராசிகளும் பிறந்திறக்குந்தன்மையும், அவற்றின்பலவகை குணகுணங்களும், தொழில்களும், இருவினைக்கீடாய் அவற்றிற்குப்பொருந்து மின்பதுன்பங்களும், இவ்வுலகின் கண்ணுள்ளயாவருந் தெளிந்தொழுகற்குரிய விதிவிலக்குகளும், மறுகையிலவர்களடையுங்கதியும், உலகியல்நஷ்டமுட்டி சிந்தனைமுதலிய மற்றபாவையு நினக்குப் புலப்படும் வண்ணம் யாந்திரட்டிக்கூறி விந்நூலானது அழகோடுங்கூடி இப்பூலோகத்தின் கண் என்றுமழிவுறாது நிகழ்கவெனத்திருவாய் மலர்ந்தருளி அகத்திய மாமுனிக் கிறிலாத தண்ணருள்சுரந்து அவனைத்தனது இருப்பிடமாகிய பொதிபாசலத்துக்குச் செல்கெனப்பணிந்து திருச்செந்தூரினினிது வீற்றிருந்தவன் போர்த்தொழிலையுடைய வெற்றிவேலாயுதத்தைத் தரித்தவனும் சர்வேசனும் சர்வபரிபூரணனும் விசாகனெனுந் திருப்பெயருடையவனும் வாசனைகமழாநின்ற கடப்பமாலையையுடையவனும் எனது இருதயகமலமாகிய ஆலயத்தின்கணீங்காமலெழுந்தருளியிருப்பவனுமாகிய சுப்பிரமணியக்கடவுள். எ-று.

பதனபலப்படலம்
முற்றிற்று.

---

ஆகப்படலம்-௩௪-க்கு கவி-௪உ௩.

சிந்தனை காண்டம் முற்றிற்று.

ஆகக்காண்டம்-௪-க்கு

காப்புப்பாயிரமுள்படகவி - ௪௩உ.

குமாரசுவாமியம்

முற்றிற்று.

# அயக்காந்ததிராவகம்.

அனுபவமானது! பிரசித்தியடைந்தது !! சஞ்சீவிபோன்றது !!!

இரும்பைப்பார்க்கிலும் கடினமானலோகம்வேறொன்றுமில்லை. தாதுவிர்த்திக்கு இதுசிறந்தது. பொன், வெள்ளி முதலியவைகள் அர்த்தச்சமயமட்டும் அதிகருணத்தைகொடுத்து சீக்கிரத்தில் தேகத்தைக் கெடுத்துவிடும். இதனால் (இருப்பவன் இரும்பைத்தின்றால்போவவன்பொன்னைத்தின்பான்) என்பதுபோல இத்திராவகத்தை சாப்பிடுவதற்குமுன் தன்தேகம் எவ்வளவுநிறையுள்ளதென்று நிறுத்துக்கொண்டு, மேற்படி திராவகத்தை ஒருமண்டலம் 48 நாள்சாப்பிட்டுமேற்படியும்திராசில் நிறுத்துப்பார்த்தால் முன்னிருந்ததைவிட ஒருவீசை 40 பலம்அதிகநிறையிருப்பது அநுபவத்தில் விளங்கும்.

தாதுவிர்த்தியில்லாதவர், இரும்பைப் பழுக்கக்காய்ச்சி அதைஜலத்தில்தோய்த்து தினந்தோறும் குடித்துவந்தால் தாதுவிர்த்தியுண்டாகுமென்று வைத்தியசாஸ்திரம் கூறுகின்றன. இதற்கே இக்குணம் இருக்கும்போது அயத்திலுடையவும், காந்தத்திலுடையவும் சத்தைத் திராவகமாக இறக்கியிருக்கும் இதை உட்கொண்டவர்கள் தேகம் வச்சிரசரீரமாகுமென்பதற்கு தடையில்லை.

## இதனை உண்பதனால் உண்டாகும் முக்கியகுணங்கள்.

(1) நரைத்தமயிரைக்கறுப்பாக்கும் (2) புழுவெட்டினாலும், அதிசஉஷ்ணத்தினாலும் உதிர்ந்தமயிரை முளைப்பிக்கும் (3) கணைக்கால்எரிச்சலைப்போக்கும் (4) முகவசீகரமுண்டாகும் (5) தேகத்திலுள்ள உஷ்ணத்தை அகற்றி வாயுவைக்கண்டிக்கும் (6) கை கால் இடுப்புசந்திகளைப்புப்போக்கி நல்லபலத்தைக்கொடுக்கும் (7) பித்தவாயுவை அடியோடுதொலைத்துவிடும் (8) பசியையும்ஜீரணசத்தியையுமுண்டாக்கும் (9) தளர்ந்துபோனநரம்புகளைவலுப்படுத்துவதில்நிகரற்றது (10) நகக்கண்களிலும், விழிகளிலும் ரத்தமில்லாமல் வெளுத்துப்போனவர்கள் இதை ஒருமண்டலம் உட்கொண்டால் ஆச்சரியப்படும்படி தேகமுழுதும் புதிய ரத்தம்பரவும் (11) காமாலை, சோகை, குன்மம், கைகால்வீக்கம், குடல்வாதம் இதுகளை 8-நாளையில் போக்கி நல்லஸ்திதியில் கொண்டுவந்துவிடும்.

## திராவகம் உட்கொள்ளவேண்டிய முறை.

அரிக்கால் ஆழாக்கு சுத்தஜலத்தில்திராவகத்தை 5 துளி அல்லது 7 துளிவிட்டுக் கலக்கிக் குடித்துவிடவேண்டும். பத்தியமில்லை மற்றவிபரங்கள் மருந்துடன் அனுப்பப்படும்.

அரைமண்டலம் 24-நாள்மருந்து ரூ. 1-4-0 டஜன் 1-க்கு ரூ.12

ஒருமண்டலம் 48-நாள்மருந்து ரூ. 2-0-0 டஜன் 1-க்கு ரூ.21.

என்னுடையகேட்லாக்வேண்டுமானால் அரையணா ஸ்டாம்பு அனுப்பினால் அனுப்பப்படும். கடிதம் எழுதும்போதெல்லாம் விலாசத்தை விபரமாய் எழுதவும்.

பி. தா. சிதம்பரமுதலியார் பிரதர்ஸ்.

பிரம்பூர் பாரெக்ஸ் போஸ்டு, மதராஸ்.